
எழுநா
இதழ் 20
மார்ச் 2024

# எழுநா

## இதழ் 20


**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**பொறுப்பாசிரியர்கள்**
மாயழகு பவித்ரா
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்
பரமசிவம் பவதாரணி

**குரல் வடிவம்**
பாலரூபன் கிருஷிகா
பவித்ரா இரமணீகரசர்மா
சோபிகா கிருஷ்ணமூர்த்தி

**வளவாளர்கள்**
இ. பத்மநாப ஐயர் – உசாத்துணை சேவை
கனகலிங்கம் சுகுமார் – உசாத்துணை சேவை
கதிர் சயந்தன் – நூல் தயாரிப்பு
தங்கராஜா பிரபாகரன் – கட்டுரை திருத்தம்
பாலசுப்ரமணியம் சிவகுமார் – காணொலி எண்ணக்கரு
தில்லைநாதன் கோபிநாத் – நூல் வரிசை
மகேந்திரன் திருவரங்கன் – மொழிபெயர்ப்பு

**துறை சார் ஆலோசகர் குழு**
கந்தையா ரமணிதரன் – நீரியலும் சூழற்பொறியியலும்
குமாரவடிவேல் குருபரன் – சட்டமும் சட்டமுறைமையும்
பரமு புஷ்பரட்ணம் – வரலாறும் தொல்லியலும்
இ. மயூரநாதன் – கட்டடக்கலையும் வடிவமைப்பும்
தர்சன் அம்பலவாணர் – மதமும் இறையியலும்
சபா ஜெயராசா – கல்வியியலும் கற்கையும்
சேரன் உருத்திரமூர்த்தி – சமூகவியலும் மானிடவியலும்
ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன் – மொழியும் இலக்கியமும்
நடராஜா சிறீஸ்கந்தராஜா – சூழலும் உயிர்ப்பல்வகைமையும்
மரியோ அருள்தாஸ் – மெய்யியலும் அரசியலும்

**பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே

**அச்சுப்பதிப்பு – விநியோகம்**
நடராஜா முரளிதரன் – கனடா


### அட்டைப்படம்

மூலம் : pieterhugo.com

*1994 இல், ருவாண்டாவில் இனப்படுகொலை செய்யப்பட்டவர்கள் அணிந்திருந்த ஆடைகள். இவை, முராம்பி (ருவாண்டா) நினைவகத்தில் நினைவு கூர்தலின் பொருட்டும் ஆவணப்படுத்தலின் பொருட்டும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.*

**FOLLOW**

எழுநா

- https://ezhunaonline.com/
- https://youtube.com/user/Ezhuna
- https://www.facebook.com/Ezhunax/
- https://twitter.com/Ezhuna
- https://www.instagram.com/ezhunaa/
- https://www.tiktok.com/@ezhuna
- https://open.spotify.com/show/4Xn
- https://tinyurl.com/ykj8ru3f
- https://tinyurl.com/3zfkzxme
- https://tinyurl.com/2p83m8zj
- https://pca.st/swr6zomk
- https://radiopublic.com/6rX3L4
- https://tinyurl.com/bdeky92h
- https://anchor.fm/ezhuna
- https://www.clubhouse.com/club/ezhuna
- https://www.magzter.com/publishers/


தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

## உள்ளே...


ஐ.நா இனப்படுகொலை நியதிச்சட்டத்தின் 75 வருடங்கள் : நினைவுச்சின்னங்கள், அருங்காட்சியகங்கள், சுவடியகங்கள் – பாக்கியநாதன் அகிலன் 04

மக்கள் விடுதலை முன்னணியின் 1971 ஏப்ரல் கிளர்ச்சி — பகுதி 1,2,3,4 – ஆங்கில மூலம் : G.B கீரவல்ல, தமிழில் : கந்தையா சண்முகலிங்கம் 09

இலங்கையில் சூழலியல் : சில அறிமுகக் குறிப்புகள் – மீநிலங்கோ தெய்வேந்திரன் 43

சாதியத் தகர்ப்புக் கருத்தியல்கள் – நடேசன் இரவீந்திரன் 55

யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள் 9 – நடராஜா செல்வராஜா 64

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் யாழ்ப்பாணக் கட்டளையகம் — 1 – இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் 72

போருக்குப் பின் சிங்கள பௌத்தர்களின் உணர்வு நிலை - நூல் அறிமுகம் – கந்தையா சண்முகலிங்கம் 78

அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள் : இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம் — பகுதி 4 – ஆங்கில மூலம் : டெனிஸ் மெக்கில்ரே, தமிழில் : ஜிஃப்ரி ஹாசன் 84

மெய்யியல் மரபு : ஆசீவகம் – முனைவர் ஜெ. அரங்கராஜ் 88

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் : ஓர் அறிமுகம் - பகுதி 1 – என்.கே.எஸ். திருச்செல்வம் 96

சமனற்ற நீதி : கறுப்பு அன்னம் – ஆங்கில மூலம் : ராஜ் ராஜரட்ணம், தமிழில் : ஓய்வுநிலைப் பேராயர் பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன், முனைவர் சோ. பத்மநாதன் (சோ.ப) 101

'முல்லை' தயாரிப்புகள்: பாலுணவுப் பொருட்களில் முதலீடு – ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா, தமிழில் : த. சிவதாசன் 114

போர்க்காலம் கற்பித்த இயற்கை விவசாயம் அமைதிக் காலத்தில் பயன் தருகிறது – ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா, தமிழில் : த. சிவதாசன் 120

வலியில் இருந்து வாழ்வு வரை : அரசியல், பொருளாதார, சமூக அபிவிருத்திக் கண்ணோட்டம் பகுதி 1,2,3 – சந்திரகுமார் தமயந்தி 125

கீழைக்கரையின் முதல் அரசு : பத்து உடன்பிறந்தோர் குலம்! – விவேகானந்தராஜா துலாஞ்சனன் 155

அனுக் அருட்பிரகாசத்தின் 'வடக்கிற்கான ஒரு பயணம்' – இளங்கோ 162

விவசாயமும் சுற்றாடல்சார் பல் வகைமையும் — பகுதி 1,2 – சி. ஜேம்சன் அரசகேசரி 167

பனிக்கன்குளக் காட்டுப் பகுதியில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிப்பு – பரமு புஷ்பரட்ணம் 183

கறவை மாடுகளுக்கு ஏற்படும் வெப்ப அயர்ச்சி குறித்த அறிவூட்டலும் தடுப்பு நடவடிக்கைகளும் – சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் 185

வடக்குப் பிராந்தியத்தின் காலநிலையை பாதிக்கும் காரணிகள் – நாகமுத்து பிரதீபராஜா 190

புதிய வேலை உலகும் ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவும் (Generative AI) – கணபதிப்பிள்ளை ரூபன் 194

மரபுரிமைகள் பற்றிய அக்கறை நம் சமூகத்தில் அருகிக்கொண்டே சென்றுகொண்டிருக்கிறது. இந்த நிலையில், அத்தகைய அரும்பொருள்களைப் பற்றிய பிரக்ஞையையும், அறிமுகத்தையும், அவற்றைக் காப்பதற்கான அருட்டுணர்வையும் 'மரபுரிமைகளைப் பறைதல்' என்ற இந்தக் கட்டுரைத்தொடர் உண்டாக்க விழைகின்றது. வெறுமனே மரபுரிமைப் பொருட்களை அடையாளப்படுத்துவதோடு நின்றுவிடாமல், அகழ்வாய்வுகளின் தன்மைகள், மரபுரிமை பற்றிய மாற்றுச் சிந்தனைகள், புதிய நோக்குகள், மரபுரிமைச் சின்னங்களை சுற்றுலாத் தலங்களாக மாற்றுவதற்கான சாத்தியங்கள் , அவற்றின் தொடர் பேணுகையும் அதற்கான வழிமுறைகளும், சமயங்களுக்கும் மரபுரிமைகளுக்கும் இடையிலான ஊடாட்டங்கள் என்று பரந்து பட்ட நோக்கில் இந்தக் கட்டுரைத்தொடர் மரபுரிமைசார் விடயங்களை வெளிப்படுத்தும். கள ஆய்வினையே பிரதான ஆய்வுமூலமாகக் கொண்ட இந்தக் கட்டுரைத்தொடரில், நூல்களில் இடம்பெற்றுள்ள மரபுரிமைசார் விடயங்கள், செவிவழிக்கதைகள், மக்களுடனான உரையாடல்கள், நம்பிக்கைகள், ஐதீகங்கள், ஊடகச் செய்திகள் மற்றும் கட்டுரைகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு, விஞ்ஞானபூர்வமான நோக்குநிலையில் இந்தக் கட்டுரைத்தொடர் அமைகின்றது.

# ஐ.நா. இனப்படுகொலை நியதிச்சட்டத்தின் 75 வருடங்கள்:

# நினைவுச்சின்னங்கள், அருங்காட்சியகங்கள், சுவடியகங்கள்




பாக்கியநாதன் அகிலன்


பாக்கியநாதன் அகிலன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் (கலை வரலாறு), பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் (கலை விமர்சனம்) பட்டத்தினையும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரியும் அகிலன் தனது கலாநிதிப்பட்ட ஆய்வை புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுவருகின்றார்.

'பதுங்குகுழி நாட்கள்', 'சரமகவிகள்', 'அம்மை', 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' என்பன இவரது கவிதைத் தொகுப்புகளாகும்.

இவரின் ஏனைய நூல்களாகக் 'காலத்தின் விளிம்பு' என்ற மரபுரிமை சார்ந்த நூலும் 'குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகங்கள் ஐந்து' ஆகியவை அமைவதுடன் 'வெங்கட்சாமிநாதன் – வாதங்களும், விவாதங்களும்' என்ற நூலின் தொகுப்பாசிரியர்களுள் ஒருவராகவும் உள்ளார்.

**அநேக பெயர்களுள்**
**அவனது பெயரை மறந்துவிடுவோம் என அஞ்சுகிறேன்**
**அவனை மறக்க நான் அஞ்சுகிறேன்**
**மாரி மழையிலும், புயலிலும்**
**எம் இதயக் காயங்கள் ஆறக்கூடும்**
**என நான் அஞ்சுகிறேன்...**

***- மஹறவுட் தர்வீஷ் (பலஸ்தீனம்) -***

"இனப்படுகொலை என்பது பாரிய எண்ணிக்கையிலான கொலைகளை மட்டும் குறிப்பதல்ல; திட்டமிடப்பட்ட வகையில் சுவடிக்காப்பகங்கள், நூலகங்கள் மற்றும் கல்லறைகள் உட்பட ஒரு சமூகத்தின் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை அழிப்பதற்கான கட்டமைக்கப்பட்ட எந்தவொரு செயற்பாட்டுத் தொகுதியும் இனப்படுகொலைதான்.

– சேராபிம் (2016) –

அடிப்படையில், இனப்படுகொலை என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட் கூட்டத்தையும், அவர்களது பண்பாட்டினையும் திட்டமிட்டு அழிக்கும் செயற்பாடாகும். உலகம் பூராவும் இவ்விதமான இனப்படுகொலைகளது பின்னணியில் உருவாக்கப்பட்ட, அவற்றை நினைவு கூர்வதற்கான நினைவுச் சின்னங்கள், அருங்காட்சியகங்கள், சுவடிக்கூடங்கள் காணப்படுகின்றன. இவை அவற்றை நினைவு கூர்தலுக்கான - அவற்றின் தடயங்களைப் பாதுகாப்பதற்கான இடங்களாகச் செயற்படும். அவ்வகையில் இவை 'மறத்தல்' அல்லது 'மறக்கடித்தல்' என்ற செயற்பாடுகளுக்கு எதிரான 'நினைவுபடுத்தல்' மற்றும் 'நினைவுகூர்தலின்' அரசியற்

பிரநிதித்துவங்களாகும். வன்முறை - அநீதி தொடர்பான தொடர்ச்சியான உரையாடலுக்கான களங்களாக அமையும் இவ்விடங்கள் மனித குலத்திற்கான பொதுநீதியை தொடர்சியாகக் கோருகின்றன. மனிதனது வாழ்வதற்கான அனைத்து உரிமைகளையும் வற்புறுத்தும் அவை வரலாற்றில் மீளவும் ஒரு தடவை இத்தகைய படுகொலைகள் - மனித குலதிற்கு எதிரான அநீதிகள் இடம்பெறக் கூடாது என்ற கோரிக்கையை இடையறாது தமது இருப்பினூடாக வற்புறுத்துகின்றன. அவ்வகையில், சமூகங்களுக்கிடையே காணப்படும் சகிப்பின்மை, ஒடுக்குமுறை, வெளியேற்றுதல் மற்றும் சர்வாதிகாரத்தின் பேரழிவுகளை எடுத்துப் பேசும் இவை பார்வையாளர்கள் அவர்களுடன் எடுத்துச்செல்ல வேண்டிய மனித குல மாண்பைப் பேணும் நற்பெறுமானங்கள் பற்றிச் சிந்திக்க தூண்டுகின்றன. அதன் மூலம் மனித இருப்புக்கும் - அதற்கான அவர்களது உரிமைக்குமான சட்டப்பூர்வமான வெளியை உறுதிப்படுத்துவதற்கும், சமத்துவத் தன்மையுடைய சமூக மாற்றத்தை உருவாக்குவதற்குமான ஜனநாயகப் பண்புடைய சமூகத்தைக் கட்டியெழுப்ப முற்படுகின்றன. அமைதியான, வன்முறையற்ற, சமநீதியுடைய, உள்வாங்கும் தன்மையுடைய உலகம் அவற்றினது பிரதான இலக்காகும். பரந்த அர்த்தத்தில் அவை இத்தகைய மாற்றங்களுக்கான அரசியற் கருவிகளாகச் செயற்படுகின்றன. அவற்றிற்கான முன்னோடிச் செயற்பாடுகளுள் ஒன்றாக ஐக்கிய நாடுகள் சபையின் இனப்படுகொலைக்கு எதிரான நியதிச்சட்ட உருவாக்கம் காணப்படுகிறது. இத்தகைய பகைப்புலத்தில் தான் இனப்படுகொலை அருங்காட்சியகங்களும் தோற்றம் பெற்றன. பெருமளவிலான இந்த அருங்காட்சியகங்கள் ஹிட்லர் காலத்து படுகொலைகளை (ஹொலக்கோஸ்ட்டை) நினைவுகூரும் அருங்காட்சியகங்களாக காணப்படுகின்றன.

குறிப்பாக 2 ஆம் உலகமகாயுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் தொடங்கி இன்றுவரைக்கும் அவை இத்தகைய மனிதகுலத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மையமாகக்கொண்ட நினைவிடங்களை உற்பத்திசெய்தவாறே உள்ளன. இந்த செயற்பாட்டினுடைய முன்னோடி முயற்சியாக 1939 இல் அல்பிரெட் வீனர் என்பவரால் உருவாக்கப்பட்ட *Jewish Central Information Centre in London* கருதப்படுகிறது. இந்த சுவடிக் காப்பகமே பின்வந்த அருங்காட்சியகங்களுக்கான அடித்தளம் என்று கருதப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அமைந்த வாஷிங்டன் டி.சியிலுள்ள அமெரிக்க ஹொலக்கோஸ்ட் அருங்காட்சியகம் முதல் கம்போடியாவில் உருவாக்கப்பட்ட *Tuol Sleng* இனப்படுகொலை அருங்காட்சிகம் வரை நூற்றுக்கும் மேற்பட்ட அருங்காட்சியகங்களிலும் நினைவிடங்களினதும் பெயர்கள் காணப்படுகின்றன. 1961 இல் உருவாக்கப்பட்ட நினைவுகளின் கூடம் (*Hall of Remembrance*) ஹொலக்கோஸ்ட் பற்றிய பிரதானமான முன்னோடி அருங்காட்சியகமாக கருதப்படுகிறது. ஒரு முடிவடையாத நெருப்பு, அதிலிருந்து வெளிவரும் புகை இனப்படுகொலையின் நினைவாக இந்த இனப்படுகொலை அருங்காட்சியத்தில் எரிந்து கொண்டிருக்கிறது.



**ரியோல் ஸ்லன்க் இனப்படுகொலை அருங்காட்சியகம், கம்போடியா**

Image source - www.historyhit.com

அதேசமயம், 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த அதே வருடத்திற்றான் மேற்படி ஐக்கிய நாடுகள் சபை இனப்படுகொலைக்கு எதிரான மேற்படி நியதிச்சட்டத்தையும் உருவாக்கியது. அவ்வகையில், அவை இரண்டிற்கும் வயது

ஒன்றாகும்; 75 வருடங்கள். அதேநேரம், இவ் இரண்டு களங்களிலும் இனப்படுகொலை தொடர்பான நியாயங்கள் - செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன என்பது நீதி தொடர்பிலான ஆழமான வாதத்திற்கு வழி திறக்கும். அவை நீதியின் அநீதியை அல்லது நீதி விளையாட்டு (Justice game) எனும் இராஜதந்திரத்தின் அறமின்மையையும் சுட்டிக் காட்டி நிற்கின்றன என்பது மிகவும் வருத்தத்திற்குரிய முரண்நகையாகும். இவ்வகையில் இருபதாம் நூற்றாண்டு பல இலட்சம் மனிதப் பலிகளைக் கண்டது. 187 இலட்சத்திற்கு அதிகமானவர்கள் இருபதாம் நூற்றாண்டிற் பலியானதாக ஹொப்ஸ்பாம் குறிப்பிடுகிறார். இவற்றின் பின்னணியில் பலியிடப்படுகை (victimization) என்பது இன்று முக்கியமான அரசியல் அறம் மற்றும் சமூகம் சார்ந்த பேசுபொருளாக உள்ளது.

ஆனால் எது இனப்படுகொலை? எது இனப்படுகொலை இல்லை; எதை நினைவுகூர்வது? எதனை நினைவுகூர்வதில்லை என்பதில் உலகம் எல்லோருக்கும் சமனான ஒரு நீதிபரிபாலனச் சட்டகத்தைக் கொண்டிருப்பதில்லை. என்பதனால் இனப்படுகொலை என்பதை பிரகடனப்படுத்தலில் சர்வதேச அரசியலை மையமாகக்கொண்ட அசமத்துவம் காணப்படுகிறது. ஒருபக்கம் நீதியைக் கோரும் அரசுகள், இன்னொரு பக்கம் அநீதியை அங்கீகரிக்கவும் - உற்பத்தி செய்யவும் செய்கின்றன. இதன்காரணமாக பலநூற்றுக்கணக்கான இனப்படுகொலைகள் இன்றுவரைக்கும இனப்படுகொலைகளாக அங்கீகரிக்கப்படவில்லை. ஹிட்லரது இனப்படுகொலைகள் உலகத்திற்கு முன்னால் காணப்படுகின்ற மோசமான இனப்படுகொலையின் உதாரணமாக இருந்தபோதிலும் ஹொலக்கோஸ்ட் அருங்காட்சியகங்களை அமைப்பவர்கள் யாவரும் எப்போதும் கண்டிக்கத்தக்க ஹிட்லரது இனப்படுகொலைகளுக்கு அப்பால் தமது சொந்த அரசியல் நலனுக்காக ஹொலக்கோஸ்டை விநியோகம் செய்தலை அறம்சார்ந்த நீதிக்கான ஒரு பயில்வு போல் முன்னிறுத்தினாலும் அதற்குள் உள்ளடங்கிய அவர்களுக்கேயான சொந்த அரசியல் இலாபங்கள் உள்ளன.

ஒப்பீட்டளவில் அதிகமாக ஹொலக்கோஸ்ட் அருங்காட்சியகங்களைக் கொண்ட அமெரிக்கா, ஹிட்லரது யூத இனப்படுகொலையை நினைவுகூர்தல் என்ற போர்வையின் கீழ் இஸ்ரேலின் இருப்புக்கான வரலாற்றுத் தர்க்கத்தை உருவாக்கும் மறைமுக அரசியலை செய்கின்றது. அதேநேரம் அது பலஸ்தீனில் நடக்கும் படுகொலைகளை நீதியின் பாற்பட்டு பார்ப்பதில்லை. இந்த நிலவரம் நீதியின் அசமத்துவம் என்பதை மட்டுமன்றி இனப்படுகொலைகளுக்கு எதிரான அருங்காட்சியகங்கள் எல்லாப்பொழுதுகளிலும் மனிதகுல மாண்பிற்கு எதிரான இழிசெயலாக சாட்சியம் செய்தலை மட்டும் நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை என்கின்ற மோசமான யதார்த்தத்தையும் எடுத்துச் சொல்கிறது.



கம்போடியாவிலும் ருவாண்டாவிலும் உள்ள இனப்படுகொலை அருங்காட்சியகங்கள் மண்டையோடுகளினால் உருவாக்கிய நிலப்பரப்புகளையும், எலும்புகளினாலும் கொலையுண்டவர்களின் ஆடைகளினாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்களினாலும்



யாட் வாசிக்கம் - உலக ஹொலகோஸ்ட் நினைவுகூரல் மையம்
Image source - besacenter.org

உருவாக்கிய 'புதிய' வன்முறைகளின் நிலப்பரப்புகளையும் எப்போதும் பார்த்து, உலகம் நீதியின் பார்ப்படுவதோ குற்றச்செயல்களுக்கு எதிராக அணிதிரள்வதோ தேசங்கள்இனங்களது சுயாதீனத்தை ஒப்புக்கொள்வதோ கிடையாது. பதிலாக பெரும்பாலான சமயங்களில் அவை அவரவருக்கு ஏற்ற வகையில் அவரவர்களை நியாயப்படுத்தும் அரசியல் தர்க்கமாகவே நிலைநிறுத்தப்படுகிறது.

இந்தநிலையில் இவ்வகையான அருங்காட்சியகங்களின் விளைபயன் என்ன என்கின்ற கேள்வி பிரதானமானது. அதேபோலவே விளிம்புநிலைப்படுத்தப்பட்டு அரசில்லாத் தரப்புகளாக உள்ள மக்கள் கூட்டங்களின் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைகளை நிலைநிறுத்த முடியாமையின் யதார்த்தத்தை சிலவேளைகளில் இனப்படுகொலைகளை பேசும் அல்லது பேச அனுமதிக்கப்பட்ட அருங்காட்சியகங்கள் எவ்வாறு அதனை மறுத்த சமூகங்களுக்கு முன்னால் ஒரு இரண்டகத் தன்மையின் கட்டுமானமாக தோற்றம் பெற்றுள்ளது என்பது இதன்தொடர்ச்சியாக உருவாகும் இன்னொரு நிலவரமாகும். இருந்தபோதிலும் வரலாற்றுக்கு சாட்சியமாக இருத்தல் மேலாதிக்கமான வரலாற்று உரையாடல்களை குழப்பிவிடுதல் என்பனவற்றின் பின்னணியில் இவற்றினது இருப்பு முக்கியமானது.

இந்தப் பின்னணியில் ஈழத்தமிழர்களின் பண்பாட்டு வரலாற்று உருவாக்கத்தின் சமகாலத்தில் இனப்படுகொலை அருங்காட்சியகம் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒரு தேவையாக உருவாகிறது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் மீதான படுகொலைகள் சர்வதேச அரசியலின் தேவைகளின் பகைப்புலத்தில் இனப்படுகொலையாக பிரகடனப்படுத்தப்படாத ஒரு தந்திர அரசியலின் சமகால உதாரணங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. இருந்தபோதிலும். ஒரு கூட்டு நினைவாக பாதிக்கப்பட்ட மக்களின் தரப்பிலிருந்து அது படுகொலையின் நினைவாக கருதப்படுகையில் அதற்கான

அருங்காட்சியகங்களை உருவாக்குதல் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டிய அவர்களது தார்மீக உரிமையாக பார்க்கப்பட வேண்டும். ஆனால் உடன்நிகழ்கால உலக ஒழுங்கும் அரசியலும் அதற்கான வாய்ப்பை பொதுவெளியில் மிகப்பெரியளவில் அங்கீகரிக்காத ஒன்றாகவே வைத்துள்ளது.

அதேசமயம் 'அரசற்ற ஒரு தரப்பாக' ஈழத்தமிழர்கள் தமக்கான நினைவிடங்களை அமைத்தல் என்பது இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஒரு உடனடி விளைவாக இனப்படுகொலை அருங்காட்சியகம் என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே அவர்களுக்கு முன்னால் காணப்படுகின்றது.

ஆனால் தேசம் என்பது தேசங்கடந்தும் பௌதீக அர்த்தமுடைய ஒன்றாக அல்லாமல், பூச்சிய வெளியும் ஒரு தேசவெளியாக மாற்றப்படலாம் என்ற எண்ணப்பிரகாரத்தின் கீழ் இனப்படுகொலைக்கான எண்மிய அருங்காட்சியகங்களுக்கான வாய்ப்பு ஒப்பீட்டளவில் சாத்தியமுள்ளதாக காணப்படுகிறது. ஆனால் அதனை உருவாக்குவதற்கான ஒன்றிணைந்த எந்த நிகழ்ச்சிநிரலும் எப்போதும் போல ஈழத்தமிழ்த் தரப்புகளிடம் இல்லை. கம்போடியாவிலோ, ருவாண்டாவிலோ உள்ளது போல் பௌதீக எச்சங்களைக் கொண்டு அல்லது அதன் விஸ்தரிப்பாக இருக்கக்கூடிய ஆவணங்கள் முதலியவற்றையும் உள்ளடக்கிய பௌதீக அருங்காட்சியகம் ஒன்று உடனடிச் சாத்தியமற்ற ஒன்றாக இருக்கும் போது எண்மிய - பூச்சிய தொழில்நுட்பத்தின் வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொண்டும் இனப்படுகொலை அருங்காட்சியகத்தை ஈழத்தமிழர்களால் உருவாக்க முடியும்.

இது ஒருபுறம் இருக்க புலம்பெயர்ந்த நாடுகளின் அரசியல் சட்ட நியமங்களுக்கு உட்பட்ட வகையில் 'தேசம் கடந்த இனப்படுகொலை அருங்காட்சியகங்களை' பௌதீக ரீதியாக உருவாக்கும் முயற்சிகளை

**ஒப்பீட்டளவில் அதிகமாக ஹொலக்கோஸ்ட் அருங்காட்சியகங்களைக் கொண்ட அமெரிக்கா, ஹிட்லரது யூத இனப்படுகொலையை நினைவுகூர்தல் என்ற போர்வையின் கீழ் இஸ்ரேலின் இருப்புக்கான வரலாற்றுத் தர்க்கத்தை உருவாக்கும் மறைமுக அரசியலை செய்கின்றது. அதேநேரம் அது பலஸ்தீனில் நடக்கும் படுகொலைகளை நீதியின் பாற்பட்டு பார்ப்பதில்லை. இந்த நிலவரம் நீதியின் அசமத்துவம் என்பதை மட்டுமன்றி இனப்படுகொலைகளுக்கு எதிரான அருங்காட்சியகங்கள் எல்லாப்பொழுதுகளிலும் மனிதகுல மாண்பிற்கு எதிரான இழிசெயலாக சாட்சியம் செய்தலை மட்டும் நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை என்கின்ற மோசமான யதார்த்தத்தையும் எடுத்துச் சொல்கிறது.**

ஈழத்தமிழர்கள் பரிசோதித்துப் பார்ப்பதற்கான சாத்தியமான நிலவரங்கள் உலகளாவிய ரீதியில் உண்டு. ஆனால் குழுக்களாகவோ, வாய்ச்சொல்லில் வீரர்களாகவோ, செத்தபாம்படித்து மகிழும் தரப்புகளாகவோ அல்லது அரசியல் நிதி மூலங்களை வலுவான ஒரு பொறிமுறைக்கூடாக ஒரு பெரும் முதலீடாக மாற்றுவதற்கான பொறிமுறையைக் கொண்டிராத எந்தவொரு தலைமையும் அற்ற ஈழத்தமிழர்கள் அதைச் செய்ய முடியுமா என்பது நம் முன்னால் உள்ள அடுத்த கேள்வியாகும்? இத்தகைய பின்னணியில் அண்மைய கடந்த ஆண்டுகளில் கனடா பிரம்டன் நகரசபை ஈழத்தமிழ் இனவழிப்புக்கு எதிரான நினைவுச் சின்னத்தை உருவாக்கியுள்ளது. இதன் பரிணாமமாக சுவடியகங்களும், அருங்காட்சியகங்களும் கூட அவசியமானவை. .

நினைவுகளை முதலீடாகவும் கடந்த கால எச்சங்களை தடயமாகவும் பாதுகாக்காத, மறுவிநியோகம் செய்யாத எந்தவொரு மக்கள் கூட்டமும் தமது அரசியல் அபிலாசைகளையும் தேவைகளையும் அதிக தூரம் எடுத்துச்செல்ல முடிவதில்லை.

‘இலங்கையின் அரசியல் 1900 – 1981 : பன்முகநோக்கு’ என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளை கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்று கொண்டு வருதலும் உள்ளீர்த்து தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ. ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

ஆங்கில மூலம் : G.B கீரவல்ல

# மக்கள் விடுதலை முன்னணியின் 1971 ஏப்ரல் கிளர்ச்சி




● கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


**பகுதி - 1, 2, 3, 4**

வித்தியோதயாப் பல்கலைக்கழக வளாகத்தின் பிக்கு மாணவர் விடுதியில் 1971 ஏப்ரல் 2 ஆம் திகதி ‘ஜனதா விமுக்தி பெரமுன’ என்னும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் ‘பொலிட் பீரோ’வின் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் 1971 ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி பி.ப 11.30 மணிக்கு நாட்டில் உள்ள எல்லா பொலிஸ் நிலையங்கள் மீதும் ஆயுதப் படைகளின் நிலைகள் மீதும் தாக்குதல் தொடுப்பதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதே மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) இத் தீர்மானத்தின் நோக்கமாகும். இந்த முடிவின் பயனாக நாட்டில் உள்ள 93 பொலிஸ் நிலையங்களின் மீது ஏப்ரல் 5 ஆம் திகதி இரவும் அடுத்த சில நாட்களிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் 5 முக்கிய பொலிஸ் நிலையங்கள் ஜே.வி.பியின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. இதனைவிட 35 பொலிஸ் பகுதிகள் அதன் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்தன. இந்தப் பெரும் அறைகூவலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் பொலிஸ் படை, 43 பொலிஸ் நிலையங்களை கைவிட்டுவிட்டுப் பின்வாங்கியது. பெரும்பாலான இடங்களில் சிவில் நிர்வாகம் முற்றாகவே செயலிழந்தது. ஏப்பிரல் 14 ஆம் திகதியளவில் கொழும்பு நகரம் தவிர்ந்த மாகாண நகரங்களும், அந் நகரங்களை அடுத்த பகுதிகளும் ஜே.வி.பியின் கட்டுப்பாட்டில் வீழ்ந்தன. பொலிஸ் மா அதிபர் கூற்றுப்படி நிலைமை பின்வருமாறு இருந்தது.

“பொலிஸ் நிலையங்கள் கைவிடப்பட்டுப் பின்வாங்கியதும்,



**ஜே.வி.பி கலவரத்தில் சேதமாக்கப்பட்ட பேருந்து நிலையம்**

Image source - thuppahis.com

சிவில் நிர்வாகம் செயலிழந்ததும் காரணமாக இப்பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தனர். அவர்கள் கூட்டுறவுக் கடைகளில் இருந்த உணவை விநியோகித்தார்கள். தபால் கந்தோர்களில் முத்திரைகளை விற்பனை செய்தார்கள். அவர்கள் நீதிமன்றங்களில் அமர்ந்து நீதி விசாரணைகளையும் நடத்தினார்கள்."

ஜே.வி.பியின் தாக்குதலின் முறையும் வேகமும் நாட்டின் பெரும்பகுதியின் நிர்வாகத்தை உடனடியாகவே செயலிழக்கச் செய்தது. ஆயினும் ஜே.வி.பியினால் முறைசார்ந்த பாதுகாப்பு ஒழுங்கமைப்பை உருவாக்கி தமது கட்டுப்பாட்டுக்குள் வந்த பகுதிகளின் அதிகார நிறுவனங்களை தம் கைக்குள் கொண்டுவரவோ, தமது படைகளை ஒருங்கிணைத்துப் பலப்படுத்தவோ முடியவில்லை. அரசாங்க ஆயுதப் படைகள் மாவட்ட மையப்பகுதிகளில் தமது ஆட்களை ஒன்று சேர வைத்து மட்டுப்படுத்தப்பட்டளவில் நிர்வாகத்தை கொண்டியங்கியதோடு ஆயுதங்களும், ஆளணியும் கிடைக்கும் வரை சமாளித்துக்கொண்டிருந்தன. ஏப்ரல் 11 ஆம் திகதி பி.ப 7 மணியளவில் கேகாலை மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பிரதமரின் வதிவிடமான அலரி மாளிகைக்கும் இராணுவத் தலைமையகத்திற்கும் வானொலியூடான செய்தியை அனுப்பிவைத்தார். கேகாலை மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதிகள் ஜே.வி.பியின் கட்டுப்பாட்டுக்குள் வீழ்ச்சியுற்றிருந்தன. அங்கிருந்து கிடைத்த பின்வரும் செய்தி அன்றிருந்த நிலையைப் படம் பிடித்துக்காட்டுவதாக இருந்தது.

"கேகாலையின் பிரதான பொலிஸ் அலுவலகம் தவிர்ந்த பிற எல்லாப் பொலிஸ் நிலையங்களும் மூடப்பட்டுவிட்டன. இரவு நேர காவல் 'ரோந்து' நடைபெறுவதில்லை. சில இடங்களில் கிளர்ச்சியாளர்கள் இரவும் பகலும் கட்டுக்கடங்காமல் திரிகின்றனர். கிளர்ச்சியாளர்களை பின்வாங்கச் செய்யும் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். காலை விடிந்ததும்

**ஜே.வி.பியின் தாக்குதலின் முறையும் வேகமும் நாட்டின் பெரும்பகுதியின் நிர்வாகத்தை உடனடியாகவே செயலிழக்கச் செய்தது. ஆயினும் ஜே.வி.பியினால் முறைசார்ந்த பாதுகாப்பு ஒழுங்கமைப்பை உருவாக்கி தமது கட்டுப்பாட்டுக்குள் வந்த பகுதிகளின் அதிகார நிறுவனங்களை தம் கைக்குள் கொண்டுவரவோ, தமது படைகளை ஒருங்கிணைத்துப் பலப்படுத்தவோ முடியவில்லை.**

படை நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளோம். விரிவான அறிக்கை அனுப்பப்படும்."

ஜனநாயக முறைமை நன்கு வேரூன்றியிருந்த ஒரு நாடு எனக் கருதப்பட்ட இலங்கையில் இப்படியான திடீர் கிளர்ச்சி ஏற்பட்டமை ஒரு எதிர்பாராத அதிர்ச்சியாகும். இலங்கையில் தேர்தல்கள் ஒழுங்காக நடைபெற்று ஆட்சிமாற்றம் சுமுகமாக நிறைவேறிக்கொண்டு வந்தது. ஒரு கட்சி ஆட்சி முறைக்கு மாறும்போக்கு இலங்கையில் வெளிப்படவில்லை. மார்க்சியக் கட்சிகள் கூட்டரசாங்கங்களை அமைத்தன. எதிர்க்கட்சி ஆசனங்களில் திரும்ப அமர்ந்துகொண்டன. அக் கட்சிகளும் பிரித்தானியப் பாராளுமன்ற மரபுகளை விசுவாசத்தோடு ஏற்று ஒழுகின. புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணத்தை அவை கைவிட்டுவிட்டதாகவே தோன்றியது. இக் கிளர்ச்சி நடைபெறும் நாள்வரை இலங்கையை அரசியல் நிலைபேறு அல்லது உறுதிநிலைக்கு சிறந்த உதாரணமான நாடாகக் கருதும் நிலை காணப்பட்டது.

## மிதவாத அரசியல் பாரம்பரியம்

பிரித்தானியர் ஆட்சியின் கீழ் (1796-1948) இலங்கையில் இரு தடவைகள் 1818 ஆம் ஆண்டிலும் 1848 ஆம் ஆண்டிலும் இரு கலகங்கள் ஏற்பட்டன. இவ் இரண்டையும் தவிர பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் காலனிய அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகள் எவையும் இடம்பெறவில்லை. காலனிய அரசிடம் முறையீட்டு மனுக்களைச் சமர்ப்பித்தல், வெள்ளை மாளிகை அலுவலகத்திற்கு அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைகளை அனுப்புதல், சட்ட சபையில் இலங்கையர்களுக்கு கூடியளவு பிரதிநிதித்துவம் வேண்டும் என வாதாடுதல் போன்ற வழிமுறைகளில் இலங்கையின் படித்த 'உயர்குழாம்' அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தது. ஆசியாவின் தேசியவாதத்தின் இலங்கை மாதிரியை 'சீர்திருத்த இயக்கம்' (Reform movement) என்றே கூறலாம் என வரலாற்றாசிரியர் கே.எம்.டி. சில்வா குறிப்பிட்டுள்ளார். இச்சீர்திருத்தவாதிகளை 'அரசியல் யாப்புச் சீர்திருத்தம் கோருவோர்', 'மிதவாதிகள்', 'பழமைவாதிகள்' ஆகியோரைக் கொண்ட கலப்புக்குழு எனவும் குறிப்பிடும் சில்வா அவர்கள் இலங்கையின் அரசியல் தலைவர்களின் சீர்திருத்தவாத அரசியல் மனப்பாங்கை சுட்டிக்காட்டுகிறார். இலங்கை 1948 இல் சுதந்திரத்தைப் பெறும்வரை, அதன் அரசியல் முறைமை (Political system) அமைதிப் பாதையில் பரிணாம வளர்ச்சி பெற்றதையும் அது ஆசியாவின் சுதந்திர தேசங்களுள் அரசியல் உறுதிநிலையுடையதாக விளங்கியதையும் மேற்குறித்த வரலாற்றுப் பின்புலத்தில் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.



ரோஹண விஜேவீர

Image source - island.lk

## கிளர்ச்சிவாத இயக்கங்களின் தோற்றம்

அமைதிப் பாதையில் பயணித்த இலங்கையில் 1965 ஆம் ஆண்டின் பின்னர் புரட்சிவாதக் குழுக்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறான தலைமறைவு குழுக்கள் சிலவற்றை அடையாளம் காணலாம்.

1. **விஜயவீர குழு**
2. **பெரதிக சுலங்க குழு**
3. **கினிபுப்புர குழு**
4. **சுமித்தெவிநுவர**
5. **தர்மசேகர குழு**
6. **சமாஜவாத சங்கமய**

என்ற பெயர்களால் அழைக்கப்பட்ட ஆறு வெவ்வேறு குழுக்கள் இக்காலத்தில் செயற்பட்டன. இக்குழுக்கள் மரபுவழி இடதுசாரிகளோடு முரண்பாடு கொண்டனவாய் அவர்களோடு தொடர்பை முறித்துக் கொண்டிருந்தன. இறுதியில் ரோஹண விஜயவீர குழு 'ஜனதா விமுக்திப்




ஜே.வி.பி பேரணி

Image source - en.topwar.ru

பெரமுன' (மக்கள் விடுதலை முன்னணி) என்னும் இயக்கத்தை கட்டியெழுப்பி, புரட்சியொன்றின் மூலம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் செயற்படலாயிற்று. 1971 ஏப்ரல் கிளர்ச்சி மேற்குறித்த வளர்ச்சிப் போக்குகளின் தர்க்கரீதியான விளைவு எனவே கருதலாம். ஜே.வி.பி எனப்படும் இம் மக்கள் விடுதலை முன்னணியினால் நடத்தப்பட்ட 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் முக்கிய இயல்புகள் பின்வருவன.

1. இக் கிளர்ச்சி தன்னியல்பாகத் தோன்றிய ஒழுங்கமைக்கப்படாத கிளர்ச்சியன்று. இதனை ஒழுங்கமைக்கப்படாத விவசாயிகள் கிளர்ச்சி, உணவுக் களஞ்சியங்களை உடைத்துப் பங்கிடும் கிளர்ச்சிகள் (Food Riots), மாணவர்கள் கிளர்ச்சிகள் போன்றவற்றுடன் ஒப்பிடுதல் ஆகாது. இது ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு மேலாக தலைமறைவாக இயங்கிய ஒரு இயக்கத்தின் திட்டமிடப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியாகும். இக் கிளர்ச்சியாளர்கள் அரசு அதிகாரத்தை (State Power) கைப்பற்றுதல் என்ற நோக்கத்தைக் கொண்டவர்களாக இருந்தனர். 1971 இற்கு முந்திய பல ஆண்டுகளாக இளைஞர்களை அணிதிரட்டி அவர்களுக்குத் திட்டமிட்டபடி விரிவுரைகளை நிகழ்த்தியும் பயிற்சி முகாம்களை நடத்தியும் தமது கொள்கையைப் பரப்பி இளைஞர்களை வசப்படுத்தினர். இளைஞர்கள் சிறு சிறு கட்சிக் குழுக்களாக (Party Cells) ஒழுங்கமைக்கப்பட்டனர்.

2. இக் கிளர்ச்சியின் இரண்டாவது முக்கிய இயல்பு, இக் கிளர்ச்சி முழுமையாக இளைஞர்களால் நடத்தப்பட்டமையாகும். ஏப்ரல் கிளர்ச்சியை அடுத்து கைது செய்யப்பட்டவர்களில் தாமாகவே சரணடைந்தவர்கள் பற்றிய புள்ளிவிபரங்களின் படி 86.6 வீதத்தினர் 1632 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களாகக் காணப்பட்டனர்.

3. 1971 கிளர்ச்சி, அக் கிளர்ச்சிக்கு ஓராண்டு காலத்திற்கு முன்னர் 1970 இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கூட்டணி அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட கிளர்ச்சியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இக் கூட்டணி, ரொட்சிசவாத கட்சியான லங்கா சமசமாஜக்

கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ பிரிவு) ஆகிய இரு இடதுசாரிக் கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அமைந்ததாக இருந்தது. மேற்குறித்த இரண்டு இடதுசாரிக் கட்சிகளிடமும் பலமிக்க தொழிற்சங்கங்கள் இருந்தன. இத் தொழிற்சங்க ஆதரவு கூட்டணி, அரசாங்கத்திற்கு அரசியல் பலத்தை வழங்குவதாக அமைந்தது. கூட்டணி அரசாங்கத்தின் முக்கிய அமைச்சுப் பதவிகள் சில மேற்குறித்த இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. நிதி அமைச்சு அவ்வாறான அமைச்சுக்களில் ஒன்றாக இருந்தது. இடதுசாரி அமைச்சர்கள் வெளி உலகால் 'மார்க்சிஸ்டுகள்' என நன்கு அறியப்பட்டவர்களாக இருந்தனர்.

ஆட்சியிலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம், இக் கிளர்ச்சியானது அரசியல் நோக்குடன் கொள்கைகள் எதுவுமில்லாத சில பிரிவினரால் தூண்டப்பட்ட ஒன்று என அறிவித்தது. இடதுசாரி அரசியல் கட்சிகளும் மக்கள் விடுதலை முன்னணியை ஒரு பிற்போக்குவாத இயக்கம் எனவும் இடதுசாரிச் சார்புடைய ஒரு அரசாங்கத்திற்கு எதிராக இவ் இயக்கம் ஆயுதங்களைத் தூக்கியுள்ளது எனவும் குற்றம் சாட்டின. மக்கள் விடுதலை முன்னணி இடதுசாரி அரசியலுக்கு எதிரான பிற்போக்கு இயக்கம் என்ற வகையில் அரசாங்கமும் அரசாங்கத்தோடு கூட்டணியில் இணைந்திருந்த கட்சிகளும் விளக்கம் கொடுத்தன. இந்த விளக்கம் மக்கள் விடுதலை முன்னணியின் தோற்றத்திற்கான சமூக - பொருளாதார காரணிகளை கவனத்தில் கொள்ளவில்லை எனவும் அவ் இயக்கம் ஆயுதமேந்தி போராடும் வழியை தெரிவு செய்தமைக்கான காரணங்களை பிற்போக்கு இயக்கம் என்ற அடையாளப்படுத்தல் விளக்கவில்லை எனவும் பல புலமையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் தோற்றத்தை வரலாற்று நோக்கில் புரிந்து கொள்ள வேண்டும் என நாம் கருதுகின்றோம். அவ்வாறான புரிதலுக்கு பின்வரும் இரண்டு வினாக்களுக்கான விடைகளைத் தேட வேண்டும் எனவும் கருதுகின்றோம்.

1. இலங்கையின் தாராண்மைவாத அரசியல் முறைமை (Liberal system) 1956 ஆம் ஆண்டு முதல் மக்கள் வாதம் என்னும் திருப்பத்தை எடுத்திருந்த பின்புலத்தில் அம்முறைக்குள் இருந்து பாராளுமன்றப் பாதையை நிராகரித்து பலாத்கார வழிகளில் ஆயுதமேந்திய போராட்டம் மூலம் அரசு அதிகாரத்தை கைப்பற்றும் தந்திரோபாயத்தைக் கையாளும் ஒரு இயக்கம் தோன்றியது ஏன்?

2. தலைமறைவு இயக்கமாகச் செயற்பட்ட புரட்சி இயக்கத்தினரின் நடவடிக்கைகளையும், அப் புரட்சி இயக்கத்தவர்களையும், 35 ஆண்டு கால வரலாற்றையுடைய மரபுவழி இடதுசாரிக் கட்சிகள் தம் கட்சிகளுடன் இணைத்து உள்ளீர்த்துக் கொள்வதற்குத் தவறியதன் காரணங்கள் யாவை?



**ஜே.வி.பி கலவரத்தில் கைது செய்யப்பட்டவர்கள்**

Image source - colombotelegraph.com

மேற்குறித்த இரு வினாக்களுக்கான விடையைத்

தேடுவதாயின், இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்டுவந்த சமூக - பொருளாதார மாற்றங்களையும் அரசியல் வளர்ச்சிகளையும் ஆராய்தல் அவசியம் எனக் கருதுகிறோம். இவ்விதமான ஆய்வு, இலங்கைச் சமூகத்தில் வர்க்கங்களின் உருவாக்கம், அச் சமூகத்தின் சமூக - பொருளாதார அரசியல் கட்டமைப்புகளின் பரிணாம வளர்ச்சி, அங்கு தோற்றம் பெற்ற முரண்பாடுகளின் இயல்பு ஆகியவற்றை தெளிவுபடுத்துவதாக அமையும் எனலாம். இலங்கை அரசியல் சுதந்திரம் பெற்றபோது வெளித்தோற்றத்தில் அது உறுதியுடைய சமூக - பொருளாதார அரசியல் கட்டமைப்புகளை கொண்ட நாடாகக் காட்சியளித்தது. ஆயினும் அதன் உள்ளார்ந்த முரண்பாடுகள் எதிர்காலத்தில் வன்முறை மோதலாகவும், கிளர்ச்சியாகவும் வெளிப்படக்கூடிய இயல்பைக் கொண்டிருந்தன.

## இலங்கையின் பொருளாதாரம்

பிரித்தானியரால் 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்றுமதி - இறக்குமதி மாதிரியிலான (Export - Import Model) பொருளாதாரம் உருவாக்கம் பெற்றது. மத்திய மலைப்பகுதிகளில் முதலில் கோப்பித் தோட்டங்களும் பின்னர் தேயிலைத் தோட்டங்களும் பிரித்தானிய கம்பனிகளால் ஆரம்பிக்கப்பட்டன. இத் தோட்டங்களில் பிரித்தானியக் கம்பனிகளின் முதலீடு பிரதான பங்கைப் பெற்றிருந்தது. இலங்கையின் கரையோர மாகாணங்களில் இறப்பர், தென்னைத் தோட்டங்கள் இலங்கையர்களான முதலீட்டாளர்களால் ஆரம்பிக்கப்பட்டன. தேயிலை என்ற பிரதான ஏற்றுமதிக்குத் துணையான மேலதிக ஏற்றுமதிப் பண்டங்களான இறப்பர், தென்னை உற்பத்திகளில் இலங்கையர்களின் முதலீடு பிரதான இடத்தைப் பெற்றது.

மேற்குறித்த ஏற்றுமதி உற்பத்தித்துறைக்கு அருகே விவசாயக் குடியான்களின் மரபுவழி விவசாய உற்பத்தி முறை இயங்கியது. பிழைப்பூதிய உற்பத்தியாகவிருந்த விவசாயக் குடியான் உற்பத்தி சிற்றுடைமைப் பண்ட உற்பத்தியாக (Commodity Production) மாற்றம் பெற்றது. குடியான் சமூகத்தின் மேன்மிகை உற்பத்தி சந்தையில் விற்பனைக்குரிய பண்டங்களாக ஆகியதால், கிராம மட்டத்தில் பரிவர்த்தனை உறவுகள் (Exchange Relations) விருத்தியுற்றன. பண்ட உற்பத்தியின் விரிவாக்கம் பணப் பரிவர்த்தனையை அதிகரிக்கச் செய்தது. இம் மாற்றங்களின் விளைவாகக் குடியான் சமூகமும், பொருளாதாரமும் நாட்டின் முழுமையான பொருளாதாரக் கட்டமைப்பின் பகுதியாக இணைக்கப்பட்டன. கொழும்பு நகரமும் பிற நகரங்கள் சிலவும் வர்த்தக நிறுவனங்களதும் நிர்வாக நிறுவனங்களினதும் தலைமை மையங்களாக விருத்தியுற்றன. கொழும்பை மையமாகக் கொண்டு போக்குவரத்து வலையமைப்பு, நாடு முழுவதையும் ஒன்றிணைக்கும் வகையில் விருத்தியுற்றது.

பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் உருவான பொருளாதார அமைப்பை இரட்டைப் பொருளாதாரம் (Dual Economy) என அழைப்பதுண்டு. இப் பொருளாதாரம் தோட்டத்துறை, மரபுவழி விவசாயத்துறை என்ற இருவேறு பிரிவுகளைக் கொண்டதாய் இருந்தமையால் இரட்டைப் பொருளாதாரம் என்ற வருணிப்பில் பொருத்தமுடைமை உள்ளது.

அ. தோட்டத்துறை - பெருந்தோட்ட விவசாயம், கைத்தொழில் உற்பத்தி, வர்த்தகமும் சேவைத் துறைகளும் என்பன ஒருங்கிணைந்தவையாக இருந்தன. இத்துறையின் உற்பத்தி ஏற்றுமதிக்கான உற்பத்தியாகவும் விளங்கியது.

ஆ. கிராமத்து விவசாயத்துறை - பிழைப்பூதிய விவசாயம், கைவினைத் தொழில்கள், உள்நாட்டு வர்த்தகத்திற்குரிய பண்ட உற்பத்தி, மக்களின் நுகர்வுத் தேவைக்கான உற்பத்தி.

மேற்குறித்த இரட்டைத்துவம் (Dualism), அந்நிய முதலாளித்துவம் மரபுவழிப் பொருளாதார முறைமையின் மீது செலுத்திய தாக்கத்தால் ஏற்பட்ட திணிப்பு ஆகும். இலங்கையின் ஏற்றுமதித் துறை நவீனத்துவ முறையாக, மரபுத்துறையில் இருந்து வேறுபட்ட பாதையில் விரைவாக முன்னேறிச் சென்றது என்று கூறமுடியாது.

இலங்கையின் பொருளாதாரம் முதலாளித்துவ வளர்ச்சியின் பயனான குறைவிருத்தியை (Under - Development) வெளிப்படுத்தியது. அந்நிய முதலீட்டாளர்களின் நலன்களுக்கு ஏற்றவகையில் மரபுவழி விவசாயத்துறை, ஏற்றுமதி உற்பத்திக்குக் கீழ்ப்பட்டதாய் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் முதலாளித்துவ வர்க்கத்தின் தோற்றம், மேற்குறித்த பொருளாதாரக் கட்டமைப்புடன் தொடர்புடையது. புதிதாக தோற்றம்பெற்ற இம் முதலாளி வர்க்கம் 'கம்பிரடோர் முதலாளி வர்க்கம்' (Comprodore Bourgeoise) என கூறத்தக்க வர்க்கத்தின் இயல்புகளை உடையது. இலங்கையின் தேசிய உயர்குழாம் (National ELite) கம்பிரடோர் முதலாளித்துவத்தின் பண்புக்கூறுகளை கொண்டிருந்தது. இக் கட்டுரையில் நாம் இவ் வர்க்கத்தினைப் பற்றி ஆராயப் போவதில்லை. மாறாக சுதேசிய முதலாளி வர்க்கத்தின் தோற்றத்தினால் கிராமிய மட்டத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் பற்றியே நாம் கவனம் செலுத்த விரும்புகின்றோம்.

## கிராமியத்துறை மாற்றங்கள்

பிரித்தானிய காலனியம் கிராமியத் துறையில் இருவகையான தாக்கங்களை ஏற்படுத்தியது.

அ. காலனியம் கிராமங்களில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை உருவாக்கியது. ஆனால் உற்பத்தி உறவுகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய முறையில் உற்பத்திச் சக்திகள் (Forces of Production) வளர்ச்சியடையவில்லை.

ஆ. பொருளாதாரத்திலும் நிர்வாகத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் கிராமிய சமூகங்களில் புதிய வகை வேலைவாய்ப்புகளை உருவாக்கின.

இவ் விருவகையான தாக்கங்களில் முதலாவதான உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றம் முக்கியமானது. பிந்திய காலத்தில் ஏற்பட்ட சிக்கலான சமூக விருத்திக்கு இதுவே காரணமாயிற்று.

கிராமப் பகுதிகளில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் வளர்ச்சியடைந்தன எனக் கூறினோம். இதன் விளைவு யாது? கிராமங்களின் மேன்மிகை உற்பத்தி, பண்டங்கள் (Commodities) வடிவில் வெளியே சென்றது. இது மரபுவழிச் சமூகத்தில் இருந்துவந்த சமநிலையைக் குழப்பியது. புதிய நுகர்வுத் தேவைகள் உருவாகின. நுகர்வுக்கான பண்டங்கள் வெளியிலிருந்து வரவேண்டியதாயிற்று. இப் பண்டங்களின் நிரம்பலும் விலைகளும் சர்வதேச வர்த்தகப் போக்குகளால் தீர்மானிக்கப்படுவனவாய் இருந்தன. கிராமப்புற மக்கள் தமது நுகர்வுத் தேவைகளுக்காக வெளியிலிருந்து வரும் பண்டங்களில் தங்கியிருக்கும் நிலை இன்று வரை தொடர்கிறது. அரிசி, கோதுமை மா, எண்ணெய், சீனி, உடுதுணிகள் ஆகிய பொருட்கள் வெளியிலிருந்து வரவேண்டியிருந்தது. இம் மாற்றம் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிப்பட்டுத் தெரிந்தது. 1911 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு அறிக்கையில் டென்ஹாம் (Denham) பின்வருமாறு குறிப்பிட்டார்.

"கடந்த நூறாண்டு காலத்தில் சுதேச மக்களின் பழக்கவழக்கங்களும் தேவைகளும் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் பெற்றுவிட்டன. இதனால் இன்று ஐரோப்பியப் பொருட்களுக்கான கேள்வி பெருமளவில் அதிகரித்துவிட்டது."

மேற்கண்டவாறு நுகர்வுத் தேவைகள் மாறிக்கொண்டிருந்த வேளை, கிராமங்களின் நில உடமை முறையில் மாற்றம் ஏற்பட்டது. காணி, சந்தையில் விற்பனைக்குரிய பண்டம் (Commodity) ஆகியது. 19 ஆம் நூற்றாண்டில் காணிகள் அரசால் விற்பனை செய்யப்பட்டன. இதனால் கிராமங்களைச் சூழவுள்ள காணிகள் புதிய உடமையாளர்களிடம் குவிந்தது. தானிய வரி (Grain Tax) இதனை மேலும் மோசமாக்கியது. வரியைக் கட்ட முடியாத குடியான் விவசாயிகள் காணிகளை குத்தகைக்கு கொடுத்தல், அடகு வைத்தல், விற்றல் ஆகிய வழிகளில் புதிய முதலாளிகளுக்கு விற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். வரி கொடுக்காதவர்களின் காணிகளை அரசாங்கம் ஏலத்தில் விற்பனை செய்து வரியை அறவிட்டது. இதன் பயனாக கிராமங்களில் அமைப்பு மாற்றம் (Structural Change) ஏற்பட்டது. உற்பத்தி உறவுகளில் (Production Relations) ஏற்பட்ட இம் மாற்றம் கூலி உழைப்பாளர் வகுப்பு என்னும் புதிய வர்க்கத்தை உருவாக்கியது. முன்பு உழைப்பு மூன்று வடிவங்களில் பெறப்பட்டது. அவையாவன:

### 1. உழைப்பு வாடகை (Labour rent)

தான் பயிரிடும் நிலத்திற்காக கிராமத்து நிலப்பிரபுவின் காணியில், குடியான் உழைப்பை வழங்குதல் உழைப்பு வாடகை எனப்பட்டது.

#### 2. உழைப்பு பரிவர்த்தனை (Exchange Labour)

உழவு, அருவி வெட்டுதல், சூடு மிதித்தல் போன்ற வேலைகளை குடியான் விவசாயிகள் பரஸ்பரம் பரிமாறுதல். உதாரணமாக 'A' என்ற விவசாயி 'B',

பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் உருவான பொருளாதார அமைப்பை இரட்டைப் பொருளாதாரம் [Dual Economy] என அழைப்பதுண்டு. இப் பொருளாதாரம் தோட்டத்துறை, மரபுவழி விவசாயத்துறை என்ற இருவேறு பிரிவுகளைக் கொண்டதாய் இருந்தமையால் இரட்டைப் பொருளாதாரம் என்ற வருணிப்பில் பொருத்தமுடைமை உள்ளது.

'C' ஆகியவர்களின் காணியில் நடைபெறும் அருவி வெட்டுதல், சூடு மிதித்தல் என்பவனற்றில் தனது உழைப்பை வழங்குவார். பின்னர் 'B', 'C' ஆகியோரும் தமது உழைப்பை 'A' இற்கு வழங்குவர். சிங்கள மரபுவழிச் சமூகத்தில் 'அத்தம்' என அழைக்கப்படும் உழைப்பு பரிவர்த்தனை முறை இருந்து வந்தது.

**3. பங்காளி முறைப் பயிரிடுதல் (Sharecropping)**

சிங்கள மொழியில் இது 'அன்டே' (*Ande*) எனப்படும். நிலப்பிரபு, குடியான் பயிரிடும் நிலத்திற்குரிய உள்ளீடுகளான (*Inputs*) விதைநெல், பசளை, உழவுக்கான எருமைகள் போன்றவற்றை வழங்குவார். குடியான் உழைப்பை மட்டும் வழங்குவார். அறுவடையின் அரைப்பகுதிக்கு மேல் நிலப்பிரவிற்கு சேரும்.

மேற்கூறிய மூன்று வடிவங்களில் வழங்கப்பட்ட உழைப்பு பணத் தொடர்பு (*Cash Nexus*) இல்லாதது. ஆனால் புதிதாகப் புகுந்த கூலி உழைப்பு, கிராம சமூகத்தில் உழைப்பின் பரிவர்த்தனையை பணத்தைக் கொடுத்து வாங்குவதும் விற்பதுமான உறவாக மாற்றியது. பணத் தொடர்பு சமூக கட்டமைப்பைக் குலைத்து புதியவகை உறவுகளை வேலை கொள்வோர் (*Employer*) - வேலையாள் (*Employee*) உறவாக மாற்றியது. இந்த மாற்றங்களின் ஒட்டுமொத்த விளைவாகக் கிராமப்புறத்தில் ஏற்பட்ட மாற்றங்களை காலனிய முறைமையின் கீழ் ஏற்பட்ட தங்கியிருத்தல் முதலாளித்துவம் (*Dependent Capitalism*) எனலாம்.

## கிராம சமூகத்தின் மூன்று பிரதான வர்க்கங்கள்

கிராமச் சமூகத்தில் முதலாளித்துவ உறவுகள் வளர்ச்சியுற்றன எனக் குறிப்பிட்டோம். அவ்வாறாயின் அங்கு முயற்சியாளர் வகுப்பு (*Entrepreneurial Class*) தோன்றுவதற்கான நிலைமைகள் உருவாகின எனலாம். ஆயினும் அங்கு முயற்சியாளர் வகுப்பு உருவாகவில்லை. அதற்குப் பதிலாக, சிங்களக் கிராமப்புறத்தில் பின்வரும் மூன்று முக்கியமான வகுப்புகள் தோன்றின.

**1. கடை வைத்திருப்போர் (Shopkeepers)**
கிராமத்தின் நுகர்வுத் தேவைகளை பூர்த்திசெய்யக் கூடியவர்களான வர்த்தகர்கள் எல்லாக் கிராமங்களிலும் கடைகளை ஆரம்பித்தனர். புதிய வர்த்தக வாய்ப்புக்களால் இவர்கள் நன்மை பெற்றனர்.

**2. நில உடமையாளர்கள்**
கிராமப் புறங்களில் உருவான காணிச் சந்தையை (*Land Market*) பயன்படுத்தி நன்மை பெற்ற நில உடமையாளர் வகுப்பினர் இவ் வகையினராவர்.

**3. புதிய தொழில் வாய்ப்புகளால் நன்மை பெற்ற சம்பளம் பெறும் உழைப்பாளர் வகுப்பு**
கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்தி கிராமத்துக்கு வெளியே அரச - தனியார் அலுவலகங்கள், கைத்தொழில் ஆகியவற்றின் மூலம் சம்பளம் பெறும் உழைப்பாளர்கள் இப் பிரிவுகளில் அடங்குவர். இந்த மூன்று வர்க்கங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; பொருளாதாரம், சமூகம் என்ற இரு நிலைகளிலும் இவை ஒன்றாகப் பிணைக்கப்பட்டவை. புதிதாக உருவாக்கம் பெற்ற கிராமச் சமுதாயத்தின் மிக முக்கியமான இயல்புகளில் ஒன்று மேற்குறித்த வர்க்கங்களின் பிணைப்பு ஆகும். 'அரச மர நிழலில் சாதி, இரத்த உறவுமுறை, திருமணம் - இலங்கையின் உட்பகுதிக் கிராமங்கள் பற்றிய ஆய்வு (*Under The Bo Tree : Studies In Caste - Kinship and Marriage in the Interior Ceylon*) என்ற நூலின் ஆசிரியரான நூர் யல்மன் (*Nur Yalman*) கிராமங்களின் கடை 'முதலாளிகள்' பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார். "இலங்கையின் நிலவரைக் காட்சியின் (*Landscape*) குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் கிராமங்கள் தோறும் காணப்படும் கிராமத்து கடைகளாகும். இச் சிறுகடை வியாபாரிகள் தனிமைப்பட்ட ஒதுக்குப்புறமான கிராமங்களுக்குக் கூட பணப் பொருளாதாரத்தைப் புகுத்தியுள்ளனர்."

நூர் யல்மன் கண்டியின் 'தெறுத்தன்ன' (*Terutenne*) என்ற கிராமத்தின் கடை வியாபாரிகள் மற்றும் நில உடமையாளர்கள் பற்றிய புள்ளிவிபர அட்டவணையைத் தந்துள்ளார்.

**தெறுத்தன்னவின் கடைவியாபாரிகள் மற்றும் நில உடமையாளர்கள்**

| கடை வியாபாரியின் பெயர் | முதலீடு மதிப்பு (ரூபா) | வியாபாரத் தொழில் ஆண்டுகள் | காணி உடமை ஏக்கர் |
|---|---|---|---|
| றண்பண்டா | 4000 | 4 | 4 |
| வேகொல்ல (முன்னாள் கிராம தலைமைக்கார்ர் (விதாணை) | 1000 | 3 | 1.5 |
| டிக்கிறிபண்டா | 400 | 6 | 4.5 |
| கிரிபண்டா | 300 | 2 | - |
| கே.ஜி.சுதுமெனிக்கே | 600 | 10 | 4 |
| H.P.B பண்டா | 100 | 6 | - |
| உக்வத்த பண்டா | 600 | 4 | 1 |
| தர்மதாச | 400 | 3 | 10.5 |
| ஜயசேகர | 500 | 10 | 6.5 |
| வேகொல்ல (பாடசாலை ஆசிரியர்) | 100 | 2 | 5.5 |
| எல்பிட்டிய கிரிபண்டா | 100 | 1 | |

குறிப்பு - 'தெறுன்ன்ன' கற்பனைப்பெயர் — Yalman Nur 1961: P49

மேலே குறிப்பிட்ட நபர்கள் யாவரையும் ஒன்றாகச் சேர்த்து 'கிராமத்துக் குட்டி முதலாளித்து வர்க்கம்' (*Rural Petty Bourgeoisie*) எனலாம். இவ் வர்க்கத்தின் பொருளாதார அடித்தளம் பரிவர்த்தனைச் சாதனங்களின் சிற்றுடைமை (*Ownership of Small Scale Means of Exchange*) ஆகும். இக் கடை வியாபாரிகளும் நில உடமையாளர்களும் கிராமத்து காணிகளில் இருந்து கிடைக்கும் வருமானத்தைப் பெற்று கிராமத்தில் செல்வாக்குள்ள மனிதர்களாக இருந்தனர். இவர்களில் சிலருக்கு கிராமத்துக்கு வெளியே நகரப் பகுதிகளில் தொழில்கள் செய்வதன் மூலமும் மேலதிக வருமானம் கிடைத்தது.

கிராமத்து குட்டி முதலாளித்துவ வகுப்பு கிராமத்தில் தமக்குள்ள சமூக அந்தஸ்தை பயன்படுத்தி தம் பிள்ளைகளுக்கு வேலை தேடிக் கொடுக்கக் கூடியவர்களாய் இருந்தனர். இதனால் இவர்கள் சமூக - பொருளாதார நிலையில் உயர்ந்தனர். கிராமிய - சமூக நிறுவனங்களான கிராமச் சபைகள், கிராம நலன் விருத்திச் சங்கம், மது ஒழிப்புச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றில் முக்கிய பதவிகளை இவர்கள் வகித்தனர். 20 ஆம் நூற்றாண்டின் அரசியல் மாற்றங்கள் குட்டி முதலாளி வகுப்பை கிராமத்தின் மிகச் சக்தி வாய்ந்த வகுப்பாக மாற்றியது. குறிப்பாக 1931 இல் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை இந்த வகுப்பின் ஆதிக்கம் வளர வழிவகுத்தது. சிங்கள மொழிப் பாடசாலை ஆசிரியர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், கிராம சபை உறுப்பினர்கள், கடை முதலாளிகள் ஆகியோர் அரசியல் களத்தில் அதிகாரம் மிக்கவர்களாக விளங்கினர். குட்டி முதலாளித்துவக் கருத்தியல், மேலாதிக்கம் பெற்ற கிராமியக் கருத்தியலாக (*Dominant Rural Ideology*) விளங்கியது.

உற்பத்தி முறையில் (*Mode of Production*) முழுமையான மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் முதலாளித்துவ சமூக உறவுகள் கிராம சமுதாயத்தில் வளர்ச்சியடைந்திருந்தன. இந் நிலைமை, வளர்ச்சியுறாத உற்பத்தி முறையின் மீதான புதிய சமூக உறவுகளின் சுமத்துதல் (*Super Imposition*) எனலாம். இது இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் இயல்பை நிர்ணயிப்பதாக அமைந்தது. முதலாளித்துவம் வளர்ச்சியடையும் போது உழைப்பாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களை (*Means of Production*) இழந்து, உழைப்புச் சக்தியை சந்தையில் விற்பனை செய்பவர்களாக மாறுவர். ஆனால் இலங்கையின் தொழிலாளி வர்க்கம்

கிராமப்புறத்தில் வேர் கொண்டதாக இருந்தது. தமது சொத்துக்களை உடைமையாக வைத்துக்கொண்டு கிராமத்துக்கு வெளியே அயலில் உள்ள நகரப்பகுதியில் தொழில்செய்து வருமானத்தையும் பெற்றனர். நிலம், வியாபாரக் கட்டிடங்கள், வாகனங்கள் போன்ற உடைமைகள் மூலமும் இவர்களுக்கு வருமானம் கிடைத்தது. சமூகவியலாளர் நியூட்டன் குணசிங்க 'கண்டியின் கிராமம் ஒன்றில் உற்பத்தி உறவுகளும் வர்க்கங்களும்' (Production Relations and Classes in a Kandyan Village) என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பெருந்தொகையான தொழிலாளர்கள் பிரதான நகரங்களைச் சூழவுள்ள கிராமங்களில் வதிபவர்களாக உள்ளனர். கிராமத்தின் வாழ்க்கைத் தராதரத்தை கொண்டு மதிப்பிடும்போது இவர்கள் உயர் வருமானம் பெறும் குழுவினராக உள்ளனர். அவர்கள் கிராமத்து தொழிலாளர்களையும் வறிய விவசாயக் குடியான்களையும் விட உயர் வருமானத்தைப் பெறுகின்றனர். கிராமத்து மக்களுடன் நகரப் புறத் தொழிலாளர் இயக்கத்தை தொடர்புபடுத்துபவர்களாக இத் தொழிலாளர்கள் விளங்குகின்றனர். இத் தொழிலாளர்கள் கிராமத்தில் வதிபவர்களாக இருப்பதன் காரணம் அவர்களுக்கு கிராமத்தில் சொத்துக்கள் உடைமையாக இருப்பது தான். அவர்கள் கிராமப் பின்னணியில் சுரண்டப்படுவதில்லை; அவர்களின் மீதான உழைப்புச் சுரண்டல் கிராமத்திற்கு வெளியே இடம்பெறுகிறது. அவர்களின் வர்க்க உணர்வு நிலையில் (Class Consciousness) சொத்துடைமை சில மட்டுப்பாடுகளை விதிக்கிறது. எனினும் இதனை பெரிய பின்னடைவு என்றும் கூறமுடியாது (Gunasinghe. Newton **1975**)."

தொழிலாளர் வர்க்கத்தின் குட்டி முதலாளித்துவ இயல்புகள், இலங்கையின் குட்டி முதலாளித்துவ வளர்ச்சியின் தன்மையினால் தீர்மானிக்கப்படுவதைக் காணலாம்.

கிராமத்துத் தொழிலாளர்களையும் விவசாயக் குடியான்களையும் விட உயர் வருமானத்தைப் பெறும் வர்க்கமான கிராமத்துக் குட்டி முதலாளித்துவ வர்க்கம், நகரத் தொழிலாளர் வர்க்கத்தோடு கொண்டுள்ள பிணைப்புகள் கிராம, நகர உறவுகளில் முக்கியத்துவம் பெற்றன. கிராமத்தில் சொத்துக்களை வைத்துக் கொண்டு நகரத்தில் தொழில் செய்யும் தொழிலாளர்களின் வர்க்க உணர்வு நிலை மட்டுப்பாடுடையதாக




**இறப்பர் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள்**

Image source - www.ebay.com

விளங்கியது. இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பகுதியினர் குட்டி முதலாளித்துவ உணர்வு நிலையை உடையவர்களாகக் காணப்பட்டனர்.

## பெருந்தோட்ட விவசாயம்

இலங்கையின் முதலாளித்துவ வளர்ச்சியில் பெருந்தோட்ட உற்பத்தி முக்கிய இடத்தைப் பெற்றது. பெருந்தோட்டங்களுக்கான முதலீடு பிரித்தானிய முதலாளிகளால் வழங்கப்பட்டது. வங்கிகளில் அவர்கள் கடன்களைப் பெற்றார்கள். பிரித்தானியக் கம்பனிகள் தோட்டங்களை நிர்வகித்தன. இத்தோட்டங்களில் வேலை செய்வதற்கு கிராமத்து விவசாயக் குடியான்கள் விரும்பவில்லை. இதனால் வெளியில் இருந்து உழைப்பாளர்கள் கொண்டு வரப்பட்டனர். இறப்பர் தோட்டங்களிலும், தென்னைத் தோட்டங்களிலும் விவசாயக் குடியான்கள் வேலை செய்வதற்கு முன்வந்தனரேனும், பெருந்தோட்டத் துறையின் மொத்தத் தொழிலாளர் தொகையில் இந்தியத் தொழிலாளர்களே பெரும் தொகையினராக இருந்தனர். இந்நிலையில் இந்தியத் தொழிலாளர் வர்க்கம் உள்ளூர் மக்களில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்பட்டது. பெருந்தோட்டத்தின் உற்பத்தியுடன் நேரடியாக பிணைக்கப்பட்ட இந்தியத் தொழிலாளரில் இருந்து வேறுபட்டதான தொழிலாளர் வர்க்கம் நகரப்புறச் சேவைத் தொழில்களைச் சார்ந்து உருவாகியது. இச்சேவைத் துறைகளில் கொழும்புத் துறைமுகம், புகைவண்டி போக்குவரத்து என்ற இரு துறைகள் முக்கியம் பெற்றன. சேவைத் துறைகளில் வேலை செய்த உள்ளூர் தொழிலாளர்கள் தொழிற்திறன் மிக்கவர்கள் (Skilled), தொழில்திறன் அற்றவர்கள் என இரு பிரிவினராய் இருந்தனர். மேற்குறிப்பிட்ட துறைமுகம், புகைவண்டிப் போக்குவரத்து என்பவற்றில் கொழும்பிலும் பிற நகரங்களிலும் வேலை செய்த தொழிலாளர்கள், பெருந்தோட்ட உற்பத்தியின் மேன்மிகையின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களை விட உயர்ந்த வாழ்க்கைத்தரம் உடையவர்களாய் விளங்கினர். 20 ஆம் நூற்றாண்டில் அரசாங்கத்தின் சமூகநலன் சேவைகள் (WELFARE SERVICES) அதிகரித்த போது உள்ளூர் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத்தரம் ஒப்பீட்டளவில் அதிகரித்தது. அரசாங்கத்திடம் இருந்து மேலும் மேலும் அதிகரித்த நன்மைகளைப் பெறுவதோடு, தமது கிராமத்து உடைமைகளையும் விடாமல் பற்றிக் கொண்டு கிராமத்துடன் பரம்பரை உறவுகளை வளர்த்துக் கொண்டிருந்த உள்ளூர் தொழிலாளர் வர்க்கம் (INDIGENOUS WORKING CLASS) குட்டி முதலாளித்துவ கருத்தியலை உடையதாய் இருந்தது. பொருளாதார நெருக்கீடுகள் ஏற்பட்ட சமயங்களில் மேலதிக சமூகநலன் சேவைகளைத் தருமாறு அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்கும் போக்கும் இத்தொழிலாளர் வர்க்கத்திடம் காணப்பட்டது.

கிராமப் புறத்தில் உருவான குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு சிலர் மட்டுமே பெரு முதலாளிகளாக வளர முடிந்தது. நகரம் சார் பெரு முதலாளித்துவத்தின் வளர்ச்சியும், அதன் மேலாதிக்கமும் 20 ஆம் நூற்றாண்டில் கிராமத்துக் குட்டி முதலாளிகள் பெரு முதலாளிகளாக உயர்வதற்கு தடையாக அமைந்தன. அத்தோடு முதலாளித்துவ வளர்ச்சியில் ஏற்பட்ட தேக்க நிலையும் குட்டி முதலாளித்துவம் பெரு முதலாளித்துவமாக மாறுவதற்கு தடையாக அமைந்தது. இப் பின்னணியில் கிராமத்துக் குட்டி முதலாளித்துவ வர்க்கம் தனது உயர்ச்சிக்கான வேறு வழிகளைத் தேடியது. உயர் கல்வியைப் பெற்று உயர்தொழில்களில் இடம் பிடித்தல், வெண்சட்டை உத்தியோகங்களைப் பெறுதல், திருமண ஒப்பந்தங்கள் மூலம் பணக்கார வகுப்பிற்குத் தாவுதல் ஆகியன குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் இலக்குகளாக அமைந்தன. இப் போக்கினை 1911 சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கையில் டென்ஹாம் (DENHAM) மிகத் தெளிவாக விளக்கியிருந்தார்.

முதிய தலைமுறையினரான பெற்றோர், இளம் தலைமுறையினரான தமது பிள்ளைகளின் கல்வியில் முதலீடு செய்வதற்கு விரும்பினர். தமக்குக் கிடைத்த செல்வம் கல்வியைப் பெற்று உயர்ச்சி அடையும் உரிமையை அளித்துள்ளதாக அவர்கள் கருதினர். காணிகளின் சிற்றுடமையாளர்களான விவசாயிகள் பொருளாதார நிலையில் தம்மை உயர்த்திக்

கொண்ட போது தமது மகன் ஒரு நாள் எழுதுவினைஞர் ஆவான் என்றும் அல்லது அதனையும் விட உயர்ந்த கல்வித்தகைமை சார் தொழிலை (LEARNED PROFESSION) பெறுவான் என்றும் ஆசைப்பட்டனர். தந்தையை விட மகன் உயர் நிலையைப் பெறுதல், அதன் மூலம் செல்வ நிலையில் உயர்வடைதல், குறிப்பாக குடும்பத்தின் சமூக அந்தஸ்து உயர்வடைதல் என்பன இளம் சந்ததியின் இலக்குகளாயின. இளம் தலைமுறை கிராம வாழ்க்கையில் இருந்து விடுதலை பெறத் துடிக்கிறது. உடல் உழைப்பை இளம் தலைமுறை விரும்பாது ஒதுக்குகிறது. கல்வி கற்றால் பரீட்சைகளில் சித்தியடையலாம், உத்தியோகங்களைப் பெறலாம், தமது நிலையை மாற்றி வேறொரு சமூகப் பிரிவின் உறுப்பினராகலாம், தமக்கு விடுதலையைத் தேடலாம், வாழ்க்கையில் உயரலாம் என இளம் தலைமுறையினர் அவாவுகின்றனர் (DENHAM 1911: பக் 398).

மேற்குறிப்பிட்ட வகையான சமூக உயர்ச்சி உந்தல்கள், 20 ஆம் நூற்றாண்டில் குட்டி முதலாளி வர்க்க கிராமச் சமுதாயத்தில் முன்னிலையில் இருந்தது. கள ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. 1958 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் சமூக - பொருளாதார மதிப்பீட்டு ஆய்வை நடத்தியது (சர்க்கார் மற்றும் தம்பையா 1958). அவ் ஆய்வு

**கிராமத்துத் தொழிலாளர்களையும் விவசாயக் குடியான்களையும் விட உயர் வருமானத்தைப் பெறும் வர்க்கமான கிராமத்துக் குட்டி முதலாளித்துவ வர்க்கம், நகரத் தொழிலாளர் வர்க்கத்தோடு கொண்டுள்ள பிணைப்புகள் கிராம, நகர உறவுகளில் முக்கியத்துவம் பெற்றன. கிராமத்தில் சொத்துக்களை வைத்துக் கொண்டு நகரத்தில் தொழில் செய்யும் தொழிலாளர்களின் வர்க்க உணர்வு நிலை மட்டுப்பாடுடையதாக விளங்கியது.**

பெறுமதிமிக்க தகவல்களை வழங்குகிறது.

பாததும்பற கிராமப் பகுதியில் விவசாயம் அல்லாத பிற தொழில்களில் உழைப்பனவான குடும்பங்கள் பற்றிய விபரம் வருமாறு:

| | தொழில் | குடும்பங்கள் | விகிதாசாரம் | ஆண்டுக்கான சராசரி வருமானம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | பெருந்தோட்ட உடமையாளர்கள் | 14 | 6.14 | 2935 |
| 2. | வியாபாரம் | 6 | 2.63 | 1875 |
| 3. | சம்பளம் பெறும் தொழில் | 7 | 3.07 | 2668 |
| 4. | கைத்தொழில்த் துறைத் தொழிலாளர் | 6 | 2.63 | 1614 |
| 5. | பெருந்தோட்டத் தொழிலாளர் | 23 | 10.09 | 744 |
| 6. | சமயாசார தொழிலாளி | 113 | 49.56 | 901 |
| 7. | கைவினைத் தொழில் | 20 | 8.77 | 845 |
| 8. | சிறு வர்த்தகம் | 18 | 7.90 | 851 |
| 9. | மேட்டுநில விவசாயம் | 16 | 7.22 | 776 |
| 10. | தரும நிதி பெறுவோர் | 5 | 2.19 | 214 |

மேலே தரப்பட்ட பட்டியலில்;

இல 2 : வியாபாரம்,

இல 3 : சம்பளம் பெறும் தொழில்,
இல 8 : சிறு வர்த்தகம்,

ஆகிய வகைத் தொழில்களில் உயர் வருமானம் பெறுவோர் குட்டி முதலாளி வர்க்கத்தினராவர்.

இல 1 பெருந்தோட்ட உரிமையாளர்கள் என்ற வகையில் சிற்றளவு பெருந்தோட்டங்களை உடைமை கொண்டுள்ள பிரிவினரும் குட்டி முதலாளிகளாவார்.

சர்க்கார் மற்றும் தம்பையா ஆய்வுக்கு (1958) பின்னர் நியூட்டன் குணசிங்க கண்டியின் தெலும்கொட என்ற கிராமத்தில் கள ஆய்வு நிகழ்த்தினார். அவர் கிராமத்தின் குட்டி முலாளி வகுப்பின் பின்னணியையும், அதன் குண இயல்புகளையும் பின்வருமாறு விபரித்துக் கூறினார்.

“குட்டி முதலாளித்துவ வர்க்கம் என்பது

அடிப்படையில் சிற்றளவு உற்பத்தியையும் சிற்றளவு பரிவர்த்தனையையும் (PETTY PRODUC TION AND EXCHANGE) தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வர்க்கமாகும். ஒரு புறத்தில் குட்டி முதலாளிகளை மேலெழும்ப விடாமல் அரைகுறை நிலமானிய உடமை வர்க்கம் (SEMI - FEUDALS) தடுத்தபடி இருக்கிறது. இன்னொரு புறத்தில் நடுத்தர முதலாளி வர்க்கம் (MIDDLE BOURGEOIS) அதனைச் சுரண்டிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் குட்டி முதலாளிகள் ஏழைக் குடியான்களுடனும், கிராமத்துத் தொழிலாளர்களோடும் முரண்பட்டு நிற்கும் சந்தர்ப்பங்களை எதிர்கொள்கிறது. இக்காரணங்களால் அவ்வர்க்கம் ஒரு நிலையற்று ஊசலாடும் வர்க்கமாகும். விவசாய உறவுகள் தொடர்பான மாற்றங்களை நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொணர்ந்த போது குட்டி முதலாளி வர்க்கம் அதனை ஆதரித்தது. ஆயினும் அது நெற்காணிச் சட்டத்தை (Paddy Lands Act) எதிர்த்தது. குட்டி முதலாளிகளின் வேணவா தம்மை நடுத்தர முதலாளிகளாக மாற்றிக் கொண்டு சமூகப்படியில் உயர்வதாகும். ஆயினும் பொருளாதார யதார்த்தம் அவர்களின் முயற்சிகளுக்குத் தடை போடுகிறது. இந்த வர்க்கத்தை ஒரு நண்டுக்கு உவமிக்கலாம். எட்டுக் கால்களையுடைய நண்டு தனது உடலை அசைப்பது போல் குட்டி முதலாளி வர்க்கம் கிராமியப் பொருளாதார நடவடிக்கைகள் பலவற்றிலும் ஒரே சமயத்தில் கால் பதித்து நகருகிறது. அது முரண்பன்மைத்துவப் பண்புகளுடைய வர்க்கமாகும் (It is a heterogeneous class)."


நியூட்டன் குணசிங்கவின் மேற்காட்டிய மேற்காளின் துணையுடன் கிராமச் சமுதாயத்தில் குட்டி முதலாளி வர்க்கத்தின் நிலையையும் வகிபாகத்தையும் புரிந்து கொள்ளலாம். அதன் பொருளாதாரச் சமூக அந்தஸ்து அபிலாசைகள் காலனித்துவத்திற்குப் பிந்திய இலங்கையின் அரசியலில் (POST COLONIAL POLITICS) முக்கியமான செல்வாக்கைச் செலுத்தின. 1950 களில் முதலாளி வர்க்கம் ஐக்கிய தேசியக் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் என்ற இரு தரப்புகளுடன் பல முரண்பாடுகளை கொண்டிருந்தது. இலங்கையின் உயர் வர்க்கங்களின் பிரதிநிதியாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளும் அதன் பண்பாட்டு மதிப்புகளும் (CULTURAL VALUES) குட்டி முதலாளிகளுக்கு ஏற்புடையவனவாக இருக்கவில்லை. அதனால் அவ்வர்க்கம் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்தது. மறுபுறத்தில் மார்க்சிஸ்டுகள் ஏற்படுத்தக்கூடிய புரட்சிகர மாற்றங்கள், அவ்வர்க்கத்திற்கு அச்சம் தருவனவாய் அமைந்தன. இந்த வர்க்கத்தின் குண இயல்புகளுக்கும் அபிலாசைகளுக்கும் ஏற்புடையதொரு இயக்கமும், தலைவரும் அவ்வேளை தேவைப்பட்டார்.



**எஸ்.டபுள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க**

Image source - www.ft.lk

குட்டி முதலாளி வர்க்கத்தின் தேவையை நிறைவேற்றும் ஒருவராக எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க அரசியல் அரங்கில் தோன்றினார். அவர் கிராமத்துக் குட்டி முதலாளிகளை தனது 'சிங்கள மகா சபை' ஊடாக அணி திரட்டினார். அவரது அரசியல் ஆதாரமாக (POLITICAL BASE) சிங்கள மகாசபை அமைந்தது. உள்ளூராட்சி அமைச்சராக இருந்த அவர் தனது அரசியல் அதிகாரத்தை உபயோகித்து தன்னை உள்ளூர் மட்டத்தில் பலப்படுத்திக் கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியில் மேற்குமயப்பட்ட செல்வந்த வகுப்பு மேலாதிக்கம் செலுத்தியது. இவ்வுயர் வகுப்பிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் அரசியல் அதிகாரம் குவிந்திருந்தது. மரபுவழிப் பண்பாட்டு



தகநாயக்க
Image source - sundaytimes.lk



இரிய கொல்ல
Image source - wikipedia.org



பிலிப் குணவர்த்தன
Image source - wikipedia.org

மரபுடைய குட்டி முதலாளிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மேற்குமயப் பண்பாட்டுச் சார்பு ஏற்புடையதாக இருக்கவில்லை. பண்டாரநாயக்க குட்டி முதலாளிகளின் அபிலாசைகளுக்கு ஏற்ற கட்சியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியை (SLFP) கட்டமைத்தார்.

அவர் 'மகாஜன எக்சத் பெரமுன' (MEP) என்னும் கூட்டணியை உருவாக்கினார். 'மக்கள் ஐக்கிய முன்னணி' எனத் தமிழில் அழைக்கப்படும் இக்கூட்டணியில் இணைந்த தலைவர்களும் கட்சிகளும் பின்வருமாறு:

அ) பிலிப் குணவர்த்தன - அவரின் 'VLSSP' என்ற விப்பிளவக்கார லங்கா சமசமாஜக் கட்சி, LSSP யில் இருந்து பிரிந்து 'புரட்சிகர' (விப்பிளவக்கார) என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொண்ட கட்சி.

ஆ) டபிள்யு. தகநாயக்கவின் பாஷா பெரமுன - பாஷா என்றால் 'மொழி'. 'பெரமுன' என்றால் முன்னணி. அதாவது 'சிங்கள மொழி முன்னணி'.

இ) கே.எம்.பி. ராஜரட்ண - ஜாதிக விமுக்தி பெரமுன (தேசிய விடுதலை முன்னணி)

ஈ) ஐ.எம்.ஆர்.ஏ. இரிய கொல்ல - குடியரசுக் கட்சி (REPUBLICAN PARTY)

மேற்குறித்தவற்றோடு கூட்டணி அமைத்த சிறிலாங்கா சுதந்திரக்கட்சி அக்கூட்டணியின் பிரதான பங்காளியாக விளங்கியது. இலங்கையின் இடது சாரிக் கட்சிகள் யாவற்றுள்ளும் கிராமப் புறங்களில் அதிகளவு ஆதரவுத்தளத்தைக் கொண்டதாக பிலிப் குணவர்த்தனவின் கட்சியே விளங்கியது. (சிங்கள) பாஷா பெரமுன, ஜாதிக விமுக்தி பெரமுன, குடியரசுக்கட்சி ஆகிய கட்சிகள் குட்டி பூஷ்வா வர்க்கத்தின் பண்பாட்டு விழுமியங்களை மிகச்சிறப்பாகப் பிரதிபலிப்பனவாக இருந்தன.

1956 தேர்தலில் பண்டாரநாயக்கவின் கூட்டணி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றி வாகை சூடியது. இக்கூட்டணி மொழி, சமயம் என்ற இரு துறைகளிலும் மாற்றங்களைப் புகுத்தியது. பொருளாதார வர்த்தகத் துறையில் தேசியமயமாக்கலை நடைமுறைப்படுத்தி குட்டி முதலாளி வர்க்கத்தின் சில பிரிவினரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்தது. ஆயினும் புதிய அரசாங்கம் காலனியம் விட்டுச் சென்ற சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பில் அடிப்படையான மாற்றங்களைக் கொண்டு வர விரும்பவில்லை. அது மட்டுமல்லாமல் ஆங்கிலம் கற்ற உயர் குழாத்தின் மேலாதிக்கத்திற்கு முடிவு கட்ட வேண்டும் எண்ணமும் அரசாங்கத்திடம் இருக்கவில்லை. இதனால் வரலாற்றில் முதல் தடவையாக கிராமத்து அரசியலில் தனது பிரவேசத்தையும், பலத்தையும் எடுத்துக் காட்டிய குட்டி முதலாளி வகுப்பிற்கு நன்மைகள் பெரியதாகக் கிடைக்கவில்லை. அவ் வர்க்கத்தின் ஆண், பெண் பிள்ளைகளின் அபிலாசைகளை

**இலங்கையின் சமூகப் பொருளாதார முறைமையில் அடிப்படையான குறைகள் உள்ளன. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என எண்ணிய இளந் தலைமுறையினரில் ஒரு பிரிவினர் ஒன்றிணைந்து கூட்டாக அவ்வமைப்பை மாற்ற வேண்டும் எனத் துணிந்தனர். 1960 களின் பிற்பகுதியில் இலங்கையில் தோன்றிய கிளர்ச்சிவாத அமைப்புக்களின் பின்புலம் இதுவேயாகும்.**

புதிய அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியவில்லை.

நிலைமை இவ்வாறாக இருந்த போதும் குட்டி முதலாளித்துவ வர்க்கம் பண்டார நாயக்கவுடனான உறவை முறித்துக் கொள்ளவில்லை. ஏனெனில் அவ்வர்க்கம் உண்மையில் சமூகப் பொருளாதார அமைப்பினைப் புரட்டிப் போடும் மாற்றங்களை எதிர்பார்க்கவோ விரும்பவோ இல்லை. குட்டிப் பூஷ்வா வர்க்கம் மேம்போக்கான சில மாற்றங்களையே எதிர்பார்த்தது. அத்தகைய மாற்றங்களை பிலிப் குணவர்த்தனவின் கட்சியான மகாஜன எக்சத் பெரமுன முயற்சித்தது. ஆனால் அம்முயற்சி தோல்வியுற்றது. இதனால் குட்டி முதலாளி வர்க்கத்திற்கும் பண்டார நாயக்கவிற்கும் இடையிலான உறவு நூலிழையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் மேலோட்டமானவை. அவற்றுக்கு சிறந்த உதாரணம் அவ்வரசாங்கம் ‘சிங்களத்தை உத்தியோக மொழி’ என உடனடியாகவே அறிவித்தமையாகும். ஆனால் அந்த முடிவைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை.

சிங்களம் உத்தியோக மொழியென்றால் நிர்வாகத்தை, சிங்கள மொழியில் படித்த புத்திஜீவிகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அது செயற்படுத்தப்படவில்லை.

1956 தொடக்கம் குட்டி முதலாளி வர்க்கத்தின் செயற்பாடுகளில் இரு போக்குகள் வெளிப்பட்டன. பழைய தலைமுறையினரும் பழமைவாதிகளுமான குட்டி முதலாளித்துவப் பிரிவினர் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சாயத் தொடங்கினர். இளைய தலைமுறையினரான குட்டி முதலாளிகள் பிரிவு மேலும் மேலும் கிளர்ச்சி மார்க்கத்தை நோக்கி ஈர்க்கப்பட்டனர். 1956 இன் தோல்வி மூலம் ஐக்கிய தேசியக் கட்சி பாடம் ஒன்றைக் கற்றுக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சி, குட்டி முதலாளித்துவ வகுப்பின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள விரும்பியது. 1956 இன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ‘மறு சீரமைக்கப்பட்டது’. இதனை விட 1956 இன் பின்னர் பாராளுமன்ற நடைமுறைகளில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் நிகழ்ந்தன. பாராளுமன்ற உறுப்பினர் தனது தொகுதியின் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர். அவர் அரச அதிகாரத்தை (STATE POWER) தொகுதி மட்டத்திற்கு எடுத்துச் செல்பவர். அவர் ஒரு அதிகாரமிக்க முக்கியமான நபர் என்ற சிந்தனை மேற்கிளம்பியது. இதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் 1956 இற்கும் பிந்திய காலத்தில் அதிகாரம் மிக்கவர்களாக மாறினர். அவர்கள் கிராமப்புறத்துப் பழைமவாதக் குட்டி முதலாளிகளின் அபிலாசைகளை நிறைவேற்றினார்கள். அவர்களின் ஆதரவைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டனர். இதன் விளைவாக, இருந்து வரும் சமூக ஒழுங்கமைப்பை மாற்றமுறாமல் காப்பாற்றுவதில் விருப்புடைய பழமைவாதக் குட்டி முதலாளித்துவப் பிரிவு தோற்றம் பெற்றது.

மேற்குறித்தவாறு பழமைவாதிகள் வலதுசாரிகள் பக்கம் சாயத் தொடங்கிய வேளை, படித்த கிராமத்து இளைஞர்களான குட்டி முதலாளி வர்க்கம் தமது தந்தையர்களதும் பாட்டன்களதும் வழியில் செல்வதில் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் நாட்டின் சமூகப் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களால் பாதிக்கப்பட்டனர். அவர்கள் மைய நீரோட்ட அரசியலில் இருந்து தாம் அந்நியப்பட்டவர்களாய் ஆகியிருப்பதை

உணர்ந்தனர். 1960 களில் இலங்கையின் இளைஞர்களை பின்வரும் உலக நிகழ்வுகள் கவர்ந்திழுத்தன.

1. கியூபாவின் புரட்சி

2. வியட்நாம், கம்போடியா, லாவோஸ் ஆகிய இந்தோசீன நாடுகளில் எழுச்சி பெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள்

3. மேற்கு நாடுகளில் தோன்றிய மாணவர்களின் கிளர்ச்சி வாதம்

இவற்றைவிட சமகால சர்வதேச நிகழ்வுகளும் இளைஞர்கள் மீது செல்வாக்கை செலுத்தின. அவர்கள் பழைய தலைமுறையில் இருந்து மாறுபட்ட அரசியல் கருத்தியலை (POLITICAL IDEOLOGY) ஏற்றுக் கொண்டனர்.

இலங்கையின் சமூகப் பொருளாதார முறைமையில் அடிப்படையான குறைகள் உள்ளன. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என எண்ணிய இளந் தலைமுறையினரில் ஒரு பிரிவினர் ஒன்றிணைந்து கூட்டாக அவ்வமைப்பை மாற்ற வேண்டும் எனத் துணிந்தனர். 1960 களின் பிற்பகுதியில் இலங்கையில் தோன்றிய கிளர்ச்சிவாத அமைப்புக்களின் பின்புலம் இதுவேயாகும்.

## பொருளாதார, அரசியல் கருத்தியல்

கிளரச்சிவாத இளைஞர்களின் பொருளாதார, அரசியல் கருத்தியலில் பின்வரும் நான்கு கூறுகள் வெளிப்பட்டுத் தெரிந்தன.

அ) அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்ற இரு கட்சிகளும் இலங்கையின் சமூகப் பொருளாதார அமைப்பை மாற்றியமைப்பதற்குத் தயாராக இல்லை என்பதை உணர்ந்தனர். அவ்விரு கட்சிகளையும் அவர்கள் நிராகரித்தனர்.

ஆ) மரபுவழி இடதுசாரிக் கட்சிகளையும் அவற்றின் தலைமைகளையும் இளைஞர்கள் நிராகரித்தனர்.

இ) பாராளுமன்ற ஜனநாயகம் என்ற செயல்முறையில் நம்பிக்கை இழந்தவர்களாக இக்குட்டி முதலாளி வர்க்கப் பின்புலத்தையுடைய இளைஞர்கள் காணப்பட்டனர். மோசமடைந்து வரும் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு பாராளுமன்ற ஜனநாயகம் ஒரு தீர்வாக அமைய மாட்டாது எனக் கருதினர்.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீது ஏற்பட்ட அவநம்பிக்கைக்கு பலாத்காரப் புரட்சித் தீர்வு தான் வழியெனச் சிந்திக்கும் போக்கு ஏற்பட்டது. புரட்சி ஒன்று விரைவில் வெடிக்கப் போகின்றது எனவும், அதற்கான தயாரிப்பு வேலைகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும் எனவும் கிளர்ச்சிவாத இளைஞர்கள் நம்பத் தொடங்கினர். இந் நம்பிக்கை காரணமாக அவ்விளைஞர்கள் ‘பெரும் போராட்டம்’ ஒன்று உடனடியாகவே தோன்றுவதற்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபட வேண்டும் எனக் கருதினர். தொழிலாளர்களுடனும், விவசாயிகளுடனும் இணைந்து நீண்ட காலப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை.

ஈ) கிளர்ச்சி இயக்கம், இருந்து வரும் சமூகப் பொருளாதார அமைப்பை மாற்றுவதில் தொழிலாளி வர்க்கம் பிரதான வகிபாகத்தைப் பெறுகிறது என்பதையும் கவனிக்கத் தவறியது. தொழிலாளர் வர்க்கத்தின் வகிபாகத்தை அது குறைத்து மதிப்பிட்டது.

நான்காவதாக குறிப்பிட்ட விடயம் குறித்து விரிவாகக் கூறுதல் அவசியம். ‘தொழிலாளர் வர்க்கம்’ என்பதற்குப் பதிலாக கிளர்ச்சிவாத இயக்கங்கள் ‘ஒடுக்கப்படும் வர்க்கம்’ (OPPRESSED CLASS) என்ற எண்ணக் கருத்தை முன்வைத்தன. இது தொழிலாளர் வர்க்கம் என்பதை விட விரிவான வகைப்பாடு ஆகும். ‘ஒடுக்கப்பட்ட வர்க்கம்’ என்பது சொத்துக்கள் அற்றது (PROPER TYLESS) என்றும் வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டது. இவ் வரைவிலக்கணம், பாட்டாளி வர்க்கத்திற்குள் சொத்துக்கள் எதனையும் உடமையாக வைத்திருக்காத இளைஞர்களாகிய தாமும் அடங்குகிறோம் என்ற முடிவை அடைவதற்கு அவர்களைத் தூண்டியது. இச் சிந்தனைப்போக்கு இவ் இளைஞர் குழுக்களின் குட்டி முதலாளித்துவக் கருத்தியலைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ரோஹண விஜேவீரவின் பின்வரும் கூற்று இதற்குச் சான்றாகும்.

“தொழிலாளர் வர்க்கம் என்பதன் பொருள் யாது?

*அது பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதி அல்லவா? பாட்டாளிகள் நாடு முழுவதும் பரவி உள்ளனர். தமது உழைப்பை விற்பனை செய்பவர்கள், இன்று நாட்டில் தம் உழைப்பை விற்று சீவிக்க முடியாத நிலையில் எங்கும் பரவி உள்ளனர். வேலையற்றவர்களான கிராமத்து இளைஞர்கள், சேனைப் பயிர் செய்வோர், குத்தகைக்குப் பயிர் செய்வோர் என்ற வகையினரான பலர் தம் உழைப்பை விற்க முடியாதவர்களாய் வேலையற்றவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் எந்த வகைக்குள் சேர்க்கப்பட வேண்டியவர்கள்? தொழிலாளி வர்க்கத்தை, மேற்குறித்தவர்களை உள்ளடக்காத தனிப்பிரிவாக வகைப்படுத்த முடியாது. அப்படி வகைப்படுத்தினால் மாணவர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் என்று பலவகையான வர்க்கப் பிரிவுகள் இருக்கின்றன என்றல்லவா கூற வேண்டி ஏற்படும்?"*

*(1970 ஆம் ஆண்டு செப்டெம்பர் 13 ஆம் திகதி புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விஜேவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது 'ரத்துலங்கா' - சிவப்பு லங்கா - 1971 மார்ச் இதழ், பக். 4 இல் குறிப்பிட்டிருந்தது.)*

**மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கருத்தியலின் பிரதான கூறுகளை மேலே எடுத்துக் காட்டினோம். இவ் அரசியல் கருத்தியலுக்கு அமைவாகவே அக்கட்சியின் ஒழுங்கமைப்பு முறைகள் அமைந்தன. மக்கள் விடுதலை முன்னணி குட்டி முதலாளித்துவ வர்க்கம் எதிர்நோக்கிய நெருக்கடிகளின் பின்னணியில் தோன்றியது. 1971 ஏப்ரல் கிளர்ச்சி, இடதுசாரி இயக்கம் இளைய தலைமுறையினரிடமிருந்து எதிர்நோக்கிய அறைகூவல் ஆகும்.**

*மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கருத்தியலின் பிரதான கூறுகளை மேலே எடுத்துக் காட்டினோம். இவ் அரசியல் கருத்தியலுக்கு அமைவாகவே அக்கட்சியின் ஒழுங்கமைப்பு முறைகள் அமைந்தன. மக்கள் விடுதலை முன்னணி குட்டி முதலாளித்துவ வர்க்கம் எதிர்நோக்கிய நெருக்கடிகளின் பின்னணியில் தோன்றியது. 1971 ஏப்ரல் கிளர்ச்சி, இடதுசாரி இயக்கம் இளைய தலைமுறையினரிடமிருந்து எதிர்நோக்கிய அறைகூவல் ஆகும். மக்கள் விடுதலை முன்னணியை இந்த நோக்கில் ஆய்வு செய்வது பயன் தருவது.*

### இலவசக் கல்வித் திட்டமும் மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர்களும்

*இலங்கையின் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாகத் தோன்றிய கிராமப்புறத்தின் படித்த இளைஞர்களே, மக்கள் விடுதலை முன்னணியினைத் தோற்றுவித்தவர்கள் என்பதைப் பல ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இத்தொடர்பைச் சுட்டிக் காட்டியவர்கள் கல்வித் துறையில் ஏற்பட்ட இம்மாற்றங்களின் முக்கியத்துவத்தை சமூக வரலாற்று நோக்கு முறையில் விளக்குவதற்குத் தவறியுள்ளனர். இலங்கையில் கல்வி பரவலாக விரிவாக்கம் பெற்றமை ஒரு குறிப்பிட்ட வகை கல்வி முறைமையை (EDUCATION SYSTEM) நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இக் கல்வி முறைக்கும் குட்டி முதலாளித்துவ வகுப்பின் அபிலாசைகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு கல்வி முறைமைக்குள் நெருக்கடியை உருவாக்கியதை ஆய்வாளர்கள் சரியாக ஆய்வு செய்து இனங்காண்பதற்குத் தவறியுள்ளனர்.*

*இலங்கையில் இருந்துவரும் கல்விமுறை 19 ஆம் நூற்றாண்டில் காலனியத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்டது. அரசாங்கம் அப்போது கல்வித் தராதரங்கள் இவையெனத் தீர்மானித்தது. அத் தராதரங்களுக்கு அமைய பாடசாலைகளை நிறுவி கல்வியை போதிக்கும் பொறுப்பை கிறிஸ்தவ மிசனரிகளுக்கு வழங்கியது. கல்வி நிறுவனங்களை முகாமை செய்துவந்த மிசனரிகளின் பாடசாலைகளுக்கு உதவிநிதி (கல்வி மானியம்) வழங்கப்பட்டது. கிறிஸ்தவ மிசனரிகள் கல்வியின் மீது கட்டுப்பாட்டை வைத்திருந்தமைக்கு எதிரான பண்பாட்டு*



C.W.W. கன்னங்கரா
Image source - www.dailymirror.lk

எதிர்வினை பௌத்தர்களிடமிருந்தும் இந்துக்களிடமிருந்தும் கிளம்பியது. இதன் பயனாக பௌத்த இந்துப் பாடசாலைகளும் போட்டியிட்டுப் பாடசாலைகளை ஆரம்பித்தன. இவ்வாறு உருவான கல்வி முறை கல்வியோடு இணைந்த குறித்த வகையான விழுமிய முறையைக் (VALUE SYSTEM) கொண்டதாய், அரசாங்கம் விதித்த நியமங்களுக்கு ஏற்ற வகையில் இயங்கத் தொடங்கியது. நகரப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் கல்வி வசதிகள் பெருகின. கல்வியின் இப்பெருக்கம் இரு காரணிகளால் வேகமடைந்தது. முதலில் பல்வேறு சமயப் பிரிவினர்களிடையே ஏற்பட்ட போட்டி கல்வியின் பெருக்கத்திற்கு காரணமாயிற்று. அடுத்ததாக டொனமூர் அரசியல் அமைப்பின் கீழ் அமைக்கப்பட்ட மந்திரி சபைகளில் கடமையாற்றிய அமைச்சர்களிடம் கல்வித் துறைப் பொறுப்பை காலனிய அரசாங்கம் கையளித்தது. கல்வி அமைச்சரான c.w.w. கன்னங்கரா 1943 இல் இலவச கல்வித் திட்டத்தைச் செயற்படுத்தினார். இத்திட்டம் கல்வியின் விரைவான விரிவாக்கத்திற்கு காரணமாயிற்று. குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கு தேசிய மொழிக் கல்வி வழங்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் கல்வித் துறையில் இரு முக்கிய இயல்புகள் வெளிப்பட்டன.

அ) இரண்டாம் நிலைக் கல்வியிலும் (SECONDARY EDUCATION) பல்கலைக்கழகக் கல்வியிலும் விரைவான விரிவாக்கம் இடம்பெற்றது.

ஆ) இவ் விரிவாக்கம் இடம்பெற்ற போது காலனிய கல்வி முறைக் கட்டமைப்பில் மாற்றம் இருக்கவில்லை. அவ்வமைப்புத் தொடர்ந்து நீடித்தது.

இதனை விட சனத்தொகைப் பெருக்கம் விரைவாக ஏற்பட்டது. தமது பகுதிகளில் போதிய கல்வி வசதிகள் இல்லையெனக் கூறிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுத்தனர். தூரப் பகுதிகளில் எல்லாம் மத்திய மகா வித்தியாலயங்கள் திறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அவ்வாறு பாடசாலைகள் திறக்கப்பட்டு முதல் நிலைக் கல்வியும் இரண்டாம் நிலைக் கல்வியும் விரிவாக்கம் பெற்றன. இப்பாடசாலைகளில் தாய்மொழியில் (சிங்களம், தமிழ்) கல்வி கற்பிக்கப்பட்டதால் கல்வி பயிலச் சேரும் மாணவர் தொகை பல மடங்காக அதிகரித்தது. முதல் நிலை, இரண்டாம் நிலைக் கல்வியின் பெருக்கத்தின் காரணமாக பல்கலைக்கழகங்களிலும் கற்கும் மாணவர் தொகை அதிகரித்தது. 1958 ஆம் ஆண்டில் வித்தியாலங்கார, வித்தியோதய என்ற 'இரு பிரிவேனாக்களும்' பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றன. 1965 இல் கொழும்பு பல்கலைக்கழக வளாகம் ஆரம்பிக்கப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் தொகையும் அதிகரித்தது.

கல்வித் துறையின் அபிவிருத்தி இலங்கையின் குறைவிருத்தியின் ஒரு அம்சமாகும். வளர்ச்சியடையாது தேக்கமுற்ற ஒரு பொருளாதாரத்தில் படித்த இளந்தலைமுறையினர் உழைப்புச் சந்தையில் அதிகரித்துச் சென்றமை நெருக்கடிக்குக் காரணமாயிற்று.

முதல் நிலை, இரண்டாம் நிலைக் கல்வியில் மாணவர் சேர்வு ஒவ்வொரு 5 ஆண்டுக்கிடையிலும் எவ்வாறு அதிகரித்தது என்பதைப் பின்வரும் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

| ஆண்டு | மாணவர் தொகை |
|---|---|
| 1948 | 1192423 |
| 1953 | 1578349 |
| 1958 | 1886138 |
| 1963 | 2482613 |
| 1968 | 2604777 |

*இவ்வாறு அதிகரித்துச் சென்ற மாணவர் சேர்வுத் தொகை 1970 ஆம் ஆண்டில் 27 லட்சத்துப் 16 ஆயிரத்து 187 ஆக உயர்ந்திருந்தது.*

*கல்வித் துறையின் அபிவிருத்தி இலங்கையின் குறைவிருத்தியின் ஒரு அம்சமாகும். வளர்ச்சியடையாது தேக்கமுற்ற ஒரு பொருளாதாரத்தில் படித்த இளந்தலைமுறையினர் உழைப்புச் சந்தையில் அதிகரித்துச் சென்றமை நெருக்கடிக்குக் காரணமாயிற்று. அதிகரித்த ஒவ்வொரு அலகு உழைப்பையும் (UNIT OF LA BOUR) பயனுடைய வழியில் உள்ளீர்க்கும் வலுவுடையதாகப் பொருளாதாரம் இருக்கவில்லை. குட்டி முதலாளி வர்க்கத்தினர் தம் பிள்ளைகளின் கல்வியில் முதலீடு செய்தனர். தாம் செய்யும் முதலீடு உரிய பயனைத் தரக்கூடிய சிறந்த முதலீடு என நம்பினர். அவர்களுடைய பிள்ளைகள் படிப்பை முடித்ததும் 'வேலையற்றோராக' இருப்பதைக் கண்டதும் அவர்கள் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்தனர். படித்தவர்களின் வேலையின்மை ஏற்படுத்திய அதிருப்தியையும் மக்கள் விடுதலை முன்னணியின் எழுச்சிக்கான காரணங்களையும் 'தேசப்பிரேமி' (தேச பக்தன்) என்னும் மக்கள் விடுதலை முன்னணியின் பத்திரிகையில் வெளியான கட்டுரையொன்றிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் மேற்கோள் எடுத்துக் காட்டுகிறது.*

*"எண்ணற்ற பிரச்சினைகளினால் அல்லாடும் எமது பெற்றோர் வியர்வை சிந்தி உழைத்த பணத்தைக் கொண்டு உணவையும் உடுக்கத் துணியையும் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக எமது கல்விக்காகச் செலவிட்டார்கள். அவர்கள் இருப்பதற்கு ஒரு வீட்டைக் கட்டியிருக்கலாம். எதையும் செய்யாமல் எமக்கு உதவினர். நாம் கண் தூங்காது நித்திரையின்றி வருந்திப் படித்தோம். பரீட்சைகளில் சித்தி எய்தினோம். நாம் பட்டங்களைப் பெற்றோம். ஊழல் மலிந்த நவ - காலனிய பொருளாதார முறையை ஒழித்து சோஷலிச சமூகம் ஒன்றை கட்டி எழுப்புவதற்குப் பதிலாக அந்தப் பொருளாதார முறை மீதே நம்பிக்கை கொண்டு செயற்பட்டோம். இதற்குரிய தண்டனை இன்று எமக்குக் கிடைத்திருக்கிறது. நாம் இப்போது தெருக்களில் அலைகிறோம். முதலாளிகளின் ஏளனத்துக்கும் சிரிப்புக்கும் உரியவர்களாக ஆகியுள்ளோம். ('தேசப் பிரேமி' 1970 ஆகஸ்ட் 8)*

## கல்வி முறைமையில் சமத்துவமின்மை

*1967 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் கிராமப்புற மாணவர்கள் மத்திய மகா வித்தியாலயங்கள், பௌத்த பிரிவேனக்கள் ஆகியவற்றில் கல்வி கற்றவர்களாகக் காணப்பட்டனர். இக்கல்வி நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் கலைப்பிரிவுப் பாடங்களைக் கற்றோரைப் பல்கலைக்கழங்களிற்கு அனுப்பி வைத்தன. சட்டம், விஞ்ஞானம், மருத்துவம், விவசாய விஞ்ஞானமும் கால்நடை மருத்துவமும், பொறியியல் ஆகிய துறைகளுக்கு மகா வித்தியாலயங்களிலும், மத்திய மகா வித்தியாலயங்களிலும் இருந்து தெரிவானோர் மிகக் குறைந்த எண்ணிக்கையினராகவே இருந்தனர். 1970 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களிற்கு தெரிவானோர் பற்றிய புள்ளி விபரங்கள் கீழே காணப்படும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இப்புள்ளி விபரங்கள் கல்வி முறைமையில் நிலவிய சமத்துவமின்மையை எடுத்துக் காட்டுவன.*

**1967ஆம் ஆண்டில் வெவ்வேறு கல்விப் பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டோர் - பாடசாலைகளின் வகையின் அடிப்படையிலான தெரிவு செய்யப்பட்டோர் வீதாசாரம்**

| பாடசாலைகள் வகை | சமூக விஞ்ஞானம் | சட்டம் | விஞ்ஞானம் | மருத்துவம் | விவசாய விஞ்ஞானமும் கால்நடை மருத்துவமும் | பொறியியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| மகா வித்தியாலயம் | 98.1 | - | 1.2 | 0.5 | - | 0.9 | 100 |
| மத்திய மகா வித்தியாலயம் | 83.5 | 0.4 | 7.2 | 2.1 | 1.7 | 5.1 | 100 |
| ஏனைய அரசுப் பாடசாலைகள் | 51.7 | 1.8 | 16.2 | 16.1 | 1.7 | 12.4 | 100 |
| தனியார் பாடசாலைகள் | 23.9 | 4.2 | 16.0 | 0.5 | 0.5 | 17.6 | 100 |
| பிரிவேன | 99.0 | 0.5 | 0.5 | - | - | - | 100 |
| தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | 67.4 | 0.5 | 10.4 | 15.7 | 3.4 | 2.6 | 100 |
| வகைப்படுத்தப்படாதவை | 80.0 | - | - | - | - | 10.0 | 100 |

*1965* இன் பின்னர் சமூக விஞ்ஞானங்களை (கலைப் பாடங்களை) படித்த பட்டதாரிகளிற்கு வேலை கிடைக்கவில்லை. அவர்கள் வேலையற்றோர் பட்டாளத்தில் சேர்ந்தனர். கல்வி வாய்ப்புக்கள் சமத்துவமற்ற முறையில் பகிரப்பட்டிருந்தமையால் கிராமப்புற மாணவர்கள் கலைப் பாடங்களைப் பல்கலைக்கழகங்களில் கற்பதும் பின்னர் வேலையில்லாதவர்களாக இருப்பதுமான நிலை தோன்றியது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினதும், ஏனைய அரைப் பாட்டாளி வர்க்கம் மற்றும் பட்டாளி வர்க்கம் ஆகியவற்றினதும் இளைஞர்கள் வேலையின்மையால் அவதியுற்றனர்.



**சிறிமாவோ பண்டாரநாயக்க**

Image source - www.britannica.com

டட்லி சியர்ஸ் (DUDLEY SEERS) குழுவின் அறிக்கை வேலையின்மைப் பிரச்சனை அக்காலத்தில் முதன்மையும் முக்கியத்துவமுடையதாகவும் இருந்தமையைப் பின்வருமாறு விளக்கிக் கூறியது.

"வேலையின்மையால் இளைஞர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாயினர்; வேலையொன்றைப் பெறுவதில் நீண்ட காலம் வீணே கழிந்தது. தாம் பெற்ற கல்விக்கு ஏற்ற சமூக அந்தஸ்தைத் தரக்கூடியதும், பாதுகாப்பானதும், தகுந்த வருமானம் தருவதுமான தொழிலைப் பெறும் உரித்தை தாம் பெற்ற கல்வி தமக்கு வழங்கியுள்ளது என நம்பிய இளைஞர்கள் விரக்திக்குள்ளாயினர். நாம் மாதிரி மதிப்பீடு (SAMPLE SURVEY) ஒன்றை நிகழ்த்தினோம். அம்மதிப்பீட்டின் போது பட்டச்சான்றிதழ் பெற்றவர்களையும் க.பொ.த (சாதாரணம்) சான்றிதழ் பெற்றவர்களையும் நேர்காணல் செய்தோம். அப்போது கல்வியை முடித்த பின் உழைப்புச் சந்தை என்ற யதார்த்தத்தில் தாம் எதிர்கொண்ட இன்னல்களையும் வலி மிகுந்த அனுபவங்களையும் அவர்கள் எமக்கு எடுத்துக் கூறினர். மூன்று ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலான காலம் தாம் வேலை தேடி அலைந்ததையும், சமூகத்திற்கு எவ்வித பயனும் அற்றவர்களாகத் தாம் இருந்ததையும் எடுத்துக் கூறினர். அவ்விதம் தாம் அலைவுற்ற காலம் தான் தம் ஆற்றல்களின் உச்ச காலம் என்றும், அது வாழ்க்கையின் அதி உச்சமான விளைதிறன் மிக்க (THE MOST PRODUCTIVE YEARS) காலமாக இருந்திருக்க வேண்டும் என்றும் கழிவிரக்கத்தோடு குறிப்பிட்டனர். தமது பெற்றோரையும் குடும்பத்தினரையும் நண்பர்களையும் எதிர்கொண்ட போது நாணிக் கூசும் நிலையில் இருந்ததாகவும் கூறினர். அவ்



**பீட்டர் கெனமன்**

Image source - thuppahis.com

*இளைஞர்களின் மனதில் பதிந்திருந்த கசப்புணர்வும் கோபமும் இயல்பானதாகவே தோன்றியது. அவர்களுக்கு வேலையொன்று கிடைத்த பின்பும் இக் கசப்புணர்வும் கோபமும் தொடரவும் கூடும்."*

*"இளைஞர்கள் தமது அபிலாசைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் ஏற்பட்ட விரக்தி மக்கள் விடுதலை முன்னணியின் தோற்றத்திற்கான காரணங்களில் ஒன்றாகும். வேலையற்ற இளைஞர்கள் தமது பெற்றோருக்கு ஒரு சுமையாக அமைந்தனர். அவர்களது பெற்றோர்களால் அவ் இளைஞர்களைப் பராமரிக்க முடியவில்லை. இளைஞர்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ்களை தமது பிரதான சொத்தாகக் கருதினர். ஆனால் வேலையைப் பெறுவதற்கு அச்சான்றிதழ்கள் உதவாத போது ஏமாற்றமும் விரக்தியும் அடைந்தனர்."*

*"சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கிளர்ச்சியாளர்களில் 80 வீதத்தினர் மகா வித்தியாலயங்கள் என்ற வகைப் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களாய் இருந்தனர். அவர்களில் 6.4 வீதத்தினர் மத்திய மகா வித்தியாலயங்களில் கற்றவர்கள். இவையும் முதல் வகையை ஒத்த பாடசாலைகளே. இவ்விரு வகைப் பாடசாலைகளும் கிராமத்து மாணவர்களின் உயர்தரப் பாடசாலைகளாக விளங்கின. இப்பாடசாலைகளில் வழங்கப்பட்ட கல்வி கிளர்ச்சிக்கான காரணிகளில் முக்கியமானது."*

*கணநாத் ஒபய சேகர அவர்களின் மேற்படி கூற்று கிராமத்து இளைஞர்களின் கல்வியில் இவ்வகைப் பாடசாலைகள் பெற்ற முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. பிராந்தியங்களில் மத்திய மகா வித்தியாலயங்கள் மக்கள் விடுதலை முன்னணியின் நடவடிக்கைகளுக்கான முக்கிய களங்களாக அமைந்தன.*

1. அனுராதபுரம் மத்திய மகா வித்தியாலயம்
2. கேகாலை மத்திய மகா வித்தியாலயம்
3. தொலங்கம மத்திய மகா வித்தியாலயம்

*ஆகியவை மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய களங்களாக அமைந்த பாடசாலைகளுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.*

*சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட கிளர்ச்சியாளர்கள் கல்வி கற்ற பாடசாலைகளின் வகையும், பல்கலைக்கழகங்களின் பெயர்களும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அக் கல்வி நிறுவனங்களில் கற்றோர் எண்ணிக்கையும் வீதாசாரமும் அட்டவணையில் தரப்பட்டும் உள்ளன.*

| பாடசாலைகள் வகை | சமூக விஞ்ஞானம் | சட்டம் | விஞ்ஞானம் | மருத்துவம் | விவசாய விஞ்ஞானமும் கால்நடை மருத்துவமும் | பொறியியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| மகா வித்தியாலயம் | 98.1 | - | 1.2 | 0.5 | - | 0.9 | 100 |
| மத்திய மகா வித்தியாலயம் | 83.5 | 0.4 | 7.2 | 2.1 | 1.7 | 5.1 | 100 |
| ஏனைய அரசுப் பாடசாலைகள் | 51.7 | 1.8 | 16.2 | 16.1 | 1.7 | 12.4 | 100 |
| தனியார் பாடசாலைகள் | 23.9 | 4.2 | 16.0 | 0.5 | 0.5 | 17.6 | 100 |
| பிரிவேன | 99.0 | 0.5 | 0.5 | - | - | - | 100 |
| தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | 67.4 | 0.5 | 10.4 | 15.7 | 3.4 | 2.6 | 100 |
| வகைப்படுத்தப்படாதவை | 80.0 | - | - | - | - | 10.0 | 100 |

## குறைவிருத்திப் பொருளாதாரம்

*இளைஞர் வேலையின்மையும் அவர்களின் விரக்தி நிலையும் பற்றி விரிவாகக் குறிப்பிட்டோம். உண்மையில் இவை யாவும் இலங்கையின் பொருளாதாரத்தின் குறை விருத்தியின் (UNDER DEVELOPED ECONOMY OF SRI LANKA) விளைவே ஆகும்.*

*1948 இல் பிரித்தானியர் இலங்கைக்கு அரசியல் சுதந்திரத்தை வழங்கிவிட்டு நீங்கிய போது விட்டுச் சென்ற பொருளாதார முறைமை குறைவிருத்தி முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு (UNDER DEVELOPED CAPI TALIST ECONOMY) சிறந்தவோர் உதாரணமாகும். இலங்கைப் பொருளாதாரம் வெளியில் இருந்து வரும் ஆதிக்கத்தின் (EXTERNAL DOMINATION) காரணமாக வளர்ச்சி நோக்கி முன்னேற முடியாத நிலையில் இருந்தது. 1960 களில் இலங்கைப்*



என். எம். பெரேரா

Image source - www.dailymirror.lk

வீழ்ச்சி காரணமாக இலங்கை தனது நுகர்வுத் தேவைகளை ஈடு செய்யக் கூடியதாக இறக்குமதிகளைச் செய்ய முடியவில்லை.

ஏற்றுமதி வருமானத்திற்கும் இறக்குமதிச் செலவுகளுக்குமிடையிலான இடைவெளி வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையாக (BUDGET DEFICIT) வெளிப்பட்டது. 1960 - 1970 காலத்தில் சில ஆண்டுகளுக்கான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைப் புள்ளி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தின் பின்னடைவும் குறை விருத்தியும் பின்வரும் மூன்று இயல்புகள் ஊடாக வெளிப்பட்டன.

1. ஏற்றுமதி வருமானத்தின் வீழ்ச்சி
2. அந்நியக் கடன் அதிகரித்தல்
3. வேலையின்மைப் பிரச்சனை அதிகரித்தல்

இலங்கை ஏற்றுமதியால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு நுகர்வுக்கான தேவைகளை இறக்குமதி செய்து வந்தது. உலகச் சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான விலைகள் குறைந்து சென்றன. அதேவேளை இலங்கை இறக்குமதி செய்த நுகர்வுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து சென்றன. இதனால் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் (TERMS OF TRADE) பாதகமாக மாறியது.

இலங்கையின் 80 வீதமான ஏற்றுமதி வருமானத்தை உழைத்துத் தரும் தேயிலை, இறப்பர் என்ற இரண்டு ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் 1960-1970 காலத்தில் முறையே 30 வீதமாகவும், 40 வீதமாகவும் வீழ்ச்சியுற்றன. ஆயினும் விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட இழப்பைச் சரி செய்யக் கூடிய வகையில் ஏற்றுமதிகளின் அளவு உயரவில்லை.

1961-1970 காலத்தில் வர்த்தக மாற்று விகிதம் (TERMS OF TRADE) 37 வீதம் வீழ்ச்சியுற்றது. இது ஆண்டுக்கு சராசரி 4 - 5 வீத வீழ்ச்சியாகும். இவ்

| ஆண்டு | வரவு செலவு திட்டப் பற்றாக்குறை (மில்லியன் ரூபா) |
|---|---|
| 1960 – 61 | 500 மில்.ருபா |
| 1964 – 65 | 520 மில்.ருபா |
| 1965 – 66 | 652 மில்.ருபா |
| 1967 – 68 | 850 மில்.ருபா |
| 1968 – 69 | 947 மில்.ருபா |
| 1960 – 70 | 1150 மில்.ருபா |

பல மடங்காக அதிகரித்துச் சென்ற வரவுசெலவுப் பற்றாக்குறையை நிரப்புவதற்கு இரு வழிமுறைகள் இருந்தன.

1. வர்த்தக விகிதத்தை இலங்கைக்கு சாதகமாக மாற்றுதலும் அந்நிய நிதி உதவியைப் பெறுதல். இம் முதலாவது வழி சாத்தியப்படவில்லை.

2. உலக வங்கியிடமும் சர்வதேச நாணய நிதியத்திடமும் (IMF) கடன் பெறுதல். 1960 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட கால நிதி அமைச்சர்கள் இந்த இரண்டாவது வழியையே பின்பற்றினார்கள். வெளிநாடுகளிடம் இருந்தும் சர்வதேச நிறுவனங்களி டமிருந்தும் கடன்களும் நிதி உதவியும் தொடர்ந்து பெறப்பட்டது.

இதனால் இலங்கையின் பொருளாதாரம் மேற்கு

நாடுகளில் தங்கியிருக்கும் பொருளாதாரமாக ஆகியது. இதன் பொருளாதார விளைவுகளில் சில பின்வருமாறு:

1. 1968 இல் அரிசி மானியம் குறைக்கப்பட்டது.
2. அவ்வாண்டில் இலங்கை ரூபா நாணயத்தின் பெறுமதி குறைக்கப்பட்டது.
3. நாணயப் பெறுமதி இறக்கத்தின் விளைவாக நுகர்வுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தன.
4. வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் (COST OF LIVING INDEX) 1960 இல் 103.5 ஆகவிருந்து 1965 இல் 111.5 ஆகவும் 1970 இல் 130.5 ஆகவும் உயர்ந்தது.
5. வேலையின்மையும், குறைவேலையின்மையும் அதிகரித்தன.
6. தொழிலாளர் வர்க்கத்தினதும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினதும் வாழ்க்கைத் தரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் எதிர்வினையாற்றினர்.

1966 இல் தோட்டத் தொழிலாளர்கள் பல வேலை நிறுத்தங்களைச் செய்து எதிர்ப்பை வெளியிட்டனர். 1967 இல் தனியார் துறை தொழிற்சங்கங்களும் 1968 இல் அரசாங்கத் திணைக்கள தொழிற்சங்கங்களும் 1969 இல் அரசாங்க கூட்டுத்தாபனத் தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டன.

குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் இளைய தலைமுறை பொருளாதார நெருக்கடியின் அழுத்தத்தை உணர்ந்தது. தமது முன்னைய தலைமுறை அனுபவித்த வாழ்க்கை வசதிகள் தமக்கு இல்லாமல் போவதை அவர்கள் கண்கூடாகக் கண்டனர்; அனுபவத்தால் உணர்ந்தனர். புதிய முறைமை குட்டி முதலாளித்துவத்தின்



**கொல்வின் ஆர்.டி. சில்வா**

Image source - en.wikipedia.org

அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடியதாய் இருக்கவில்லை. அரசியல் எதிர்ப்பை தொழிலாளர் வர்க்கம் முன்னெடுக்க தவறிய பின்னணியில் மக்கள் விடுதலை இயக்கம் எழுச்சி பெற்றது.

குறிப்பு : கலாநிதி காமினி கீரவல்லவின் நீண்ட கட்டுரையின் 1 - 29 பக்கங்களில் கூறப்பட்ட கருத்துகள் பகுதி 1,2,3 ஆகியவற்றில் தொகுத்துக் கூறப்பட்டன. அடுத்து வரும் பகுதி 4 மரபு வழி இடதுசாரிக் கட்சிகளின் அரசியலில் இருந்து மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் எவ்விதம் வேறுபட்டதாய் இருந்தது என்பதையும் 1970 ஆம் ஆண்டில் இடதுசாரிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து உருவாக்கிய கூட்டணி அரசை, மக்கள் விடுதலை முன்னணி வன்முறைக் கிளர்ச்சி மூலம் கவிழ்ப்பதற்கும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் முயன்றதற்கான காரணங்களை விளக்குவதாகவும் அமையவுள்ளது.

> 1967 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் கிராமப்புற மாணவர்கள் மத்திய மகா வித்தியாலயங்கள், பௌத்த பிரிவேனக்கள் ஆகியவற்றில் கல்வி கற்றவர்களாகக் காணப்பட்டனர். இக்கல்வி நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் கலைப்பிரிவுப் பாடங்களைக் கற்றோரைப் பல்கலைக்கழங்களிற்கு அனுப்பி வைத்தன.



மக்கள் விடுதலை முன்னணியினர்

Image Source - thuppahis.com

சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட கிளர்ச்சியாளர்கள் குற்றவியல் நீதி விசாரணை ஆணைக்குழு (CRIMINAL JUSTICE COMMISSION - சுருக்க எழுத்து : CJC) முன்னிலையில் விசாரணைக்காக நிறுத்தப்பட்டனர். அவ்வாணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த ரோஹண விஜயவீர தமது கட்சி ஏன் புதிய இடதுசாரி இயக்கம் (NEW LEFT MOVEMENT) ஒன்றை ஆரம்பித்தது என்பதற்கான விளக்கத்தை பின்வருமாறு குறிப்பிட்டார்.

"பழைய இடதுசாரி இயக்கம் சோஷலிசப் பாதையில் (நாட்டை) எடுத்துச் செல்லும் திறன் படைத்ததாய் இருக்கவில்லை. அது வங்குரோத்து நிலையில் இருந்தது. முதலாளித்துவ வகுப்பிற்கு முட்டுக் கொடுக்கும் இயக்கமாக இருந்த அதற்கு தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளையும், தொழிலாளர் வர்க்கத்தின் தேவைகளையும் பாதுகாக்கவும், நிறைவு செய்யவும் போதிய தகைமைகள் இருக்கவில்லை. இதனால் நாம் புதிய இடதுசாரி இயக்கம் ஒன்றை தொடங்குவதன் தேவையை உணர்ந்தோம்."

*1965* இல் இடதுசாரி இயக்கத்திற்குள் நெருக்கடி ஏற்பட்டதெனக் குறிப்பிட்டோம். இந்த நெருக்கடி தான் மக்கள் விடுதலை முன்னணியினைத் தோற்றுவித்த புற நிலைமையாகும். இப் புறநிலையின் வெளிப்பாடாக அமைந்த அகநிலையைப் புரிந்து கொள்வதன் மூலமே நாம் மக்கள் விடுதலை முன்னணியின் தோற்ற மூலத்தை விளங்கிக் கொள்ளலாம். இதற்காக எமக்கு இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றைப் பற்றி விளக்கும் தேவை உள்ளது.

### இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாறு : முக்கிய போக்குகள்

இலங்கையின் இடதுசாரி இயக்கத்தைத் தோற்றுவித்தவர்கள் கிராமியக் குட்டி முதலாளி வர்க்கத்தின் வசதி படைத்த ஒரு பிரிவின் புத்திரர்களாவர். இவர்கள் மேற்கு நாட்டுக்கு சென்று கல்வி கற்ற போது மார்க்சியத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாய் நாடு திரும்பினர். அவ்வாறு நாடு திரும்பி இடதுசாரி இயக்கத்தை தொடங்கிய இவ்விளைஞர்கள் தம்மையும், தம் குடும்பத்தையும், கிராமத்தின் உயர் மத்திய வகுப்பு (UPPER MIDDLE CLASS) என்ற உயர் நிலைக்கு விரைவில் உயர்த்திக்

கொண்டனர். கொழும்பு நகரத்தின் தொழிலாளர்கள், இளைஞர் குழுக்கள் மத்தியில் தமது அரசியல் வேலைகளை ஆரம்பித்த இவ்விளைஞர்கள், ஏ.ஈ குணசிங்க என்ற தொழிற்சங்கத் தலைவரின் நடவடிக்கைகளால் விரக்தியடைந்திருந்த தொழிலாளர்களைத் தம் பக்கம் கவர்ந்தனர். 1932 ஆம் ஆண்டில் கொல்வின் ஆர்.டி. சில்வா, வெள்ளவத்தை நெசவுச் சாலையின் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார். 1934 இல் அவர் 'கம்கறுவ' (தொழிலாளி) என்ற செய்திப் பத்திரிகையை வெளியிடத் தொடங்கினார். இதனையடுத்து 'சூரியமல் இயக்கம்' , 'மலேரியா ஒழிப்பு இயக்கம்' என்பன மூலம் இளைஞர் குழுக்களை அரசியல் மயப்படுத்தி தேசிய அரசியல் நீரோட்டத்தில் பங்கேற்கச் செய்தனர்.

## 1935 சட்ட சபைத் தேர்தல்

மேற்குறித்தவாறு I. வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளர் சங்கம், II. 'கம்கறுவ' பத்திரிகை, III. சூரியமல் இயக்கம், IV. மலேரியா ஒழிப்பு இயக்கம் என்பன மூலம் அரசியலில் புகுந்து கொண்ட கொல்வின் ஆர்.டி. சில்வா போன்றவர்கள், டொனமூர் அரசியல் யாப்பின்படி 1935 இல் தேர்தல் ஒன்று நடத்தப்படவிருந்த நிலையில், அவ்வாண்டில் லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) என்ற கட்சியைத் தோற்றுவித்தனர். அக்கட்சி 'மார்க்சிஸ்ட் அரசியல் கட்சி' ஒன்றிற்கான கறாரான வரையறைகளின்படி தோற்றுவிக்கப்படவில்லை. மாறாக சமூகச் சீர்திருத்தவாத பாராளுமன்றவாதக் கட்சியாகவே (SOCIAL REFORMIST PARLIAMENTARY PARTY) தோற்றம் பெற்றது. கட்சியின் கொள்கை அறிக்கை, தேர்தல் பிரகடனத்தில் (ELECTION MANIFESTO) இருந்து அடிப்படையில் வேறுபாடு உடையதாக இருக்கவில்லை. எவரும் 25 சதத்தை உறுப்புரிமைக் கட்டணமாகச் செலுத்திக் கட்சியின் உறுப்பினராகி விடலாம் என்ற நிலை இருந்தது.

1937 இல் கட்சியின் ஒழுங்கமைப்பில் சில மாற்றங்கள் வெளிப்பட்டன. கட்சியைக் கட்டுக் கோப்புள்ள அமைப்பாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் 'லெனினிசக் கொள்கைப்படியான கட்சி' என்ற கட்டுக் கோப்பான அமைப்பை இன்று வரை மரபுவழி இடதுசாரிக் கட்சிகள் கொண்டிருக்கவில்லை.

1935 - 1965 காலத்தில் இடதுசாரிகளுக்குள் பிளவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

1. ஸ்டாலின் - ட்ரொட்ஸ்கி சர்ச்சையால் இது எழுந்தது. பெரும்பான்மையினர் ட்ரொட்ஸ்கிஸ வாதிகளாய் இருந்தனர். ஸ்டாலினிஸ வாதிகள் வெளியேற்றப்பட்டனர். கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டவர்கள் தம்மை ஐக்கிய சோஷலிசக் கட்சியினர் என அழைத்தனர். இப்பெயர் 1943 இல் கம்யூனிஸ்ட் கட்சி என மாற்றப்பட்டது.
2. 1950 இல் கொல்வின்.ஆர்.டி. சில்வா கட்சியில் இருந்து வெளியேறி போல்செவிக் லெனினிஸ்ட் கட்சி (B.L.P) என்ற பெயரில் கட்சியொன்றை ஆரம்பித்தார். இக்கட்சி 1950 இல் ல.ச.ச கட்சியுடன் மீண்டும் இணைந்தது.
3. இவ்வேளை இன்னொரு குழு பிலிப் குணவர்த்தன தலைமையில் பிரிந்து சென்று L.S.S.P(V) என்ற பெயரில் கட்சி அமைத்தது.
4. பிலிப் குணவர்த்தனவின் கட்சி 1956 இல் பண்டார நாயக்கவுடன் இணைந்து மக்கள் ஐக்கிய முன்னணி (மகாஜன எக்சத் பெரமுன - MEP) என்ற பெயருடன் இயங்கியது.
5. 1962 இல் சர்வதேச மட்டத்தில் சீன - சோவியத் முரண்பாடுகள் வலுப் பெற்றன. இதன் விளைவாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு பிரிவு கம்யூனிஸ்ட் கட்சி (பீகிங் பிரிவு) எனப் பிரிந்து சென்றது.
6. C.P, LSSP, MEP என்ற ஆங்கில எழுத்துக்களால் சுட்டப்பெற்ற மூன்று பிரதான கட்சிகளிடையே உட்கட்சிப் பிளவுகள் தோன்றியபடி இருந்தன. ஆயினும் அவை மூன்றும் இணைந்து 1963 இல் ஐக்கிய இடதுசாரி முன்னணி (U.L.F) என்ற கூட்டணியை உருவாக்கின.

> இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் சமூகத்தின் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களுக்கும் இலங்கையின் குறைவிருத்திப் பொருளாதாரத்தின் பாதிப்புக்களுக்கு ஆளான கிராமப்புறத்துப் படித்த இளைஞர்களின் வாழ்க்கை நிலைக்கும் இடையே பெரிய இடைவெளி நிலவியது. இடதுசாரிக் கட்சி தலைவர்கள் மேற்கு நாட்டுக்குச் சென்று கல்வி கற்றவர்கள்.

### 1964 கூட்டணி அரசாங்கமும் ஐக்கிய இடதுசாரி முன்னணி உடைதலும்

மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து ஐக்கிய இடதுசாரி முன்னணியை அமைத்தமை இடதுசாரிகள் ஒன்று சேர்ந்து பலம் மிக்க சக்தியாகச் செயற்படுவர் என்ற நம்பிக்கையை உருவாக்கியது. ஆயினும் திருமதி சிறிமா பண்டார நாயக்கா தலைமையில் 1964 இல் அமைக்கப்பட்ட கூட்டணி அரசில் ல.ச.ச கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து ஆட்சி அமைத்த போது இடதுசாரி ஐக்கிய முன்னணி உடைந்தது. திருமதி பண்டார நாயக்கவுடன் ல.ச.ச கட்சி சேர்ந்தமையை எதிர்த்து அக்கட்சியின் உறுப்பினர்களான எட்மன்ட் சமரக்கொடி, மெரில். பெர்ணான்டோ என்ற இருவரும் பிரிந்து சென்று புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சி என்ற கட்சியை நிறுவினர். 1965 இல் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் கூட்டணி அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது.

மேற்குறித்த விதமாக இடதுசாரிக் கட்சிகளிடையே பிரிவுகள் ஏற்பட்டதன் விளைவாக இடதுசாரிக் கட்சிகளின் இளைஞர்களிடையே விரக்தியும் ஏமாற்றமுமிருந்தது. 1965 இல் கிளர்ச்சிவாத இரகசிய குழுக்கள் தோன்றியதும் பின்னர் அக்குழுக்களில் விஜயவீர குழு மேலாதிக்கம் பெற்ற குழுவாக எழுச்சி பெற்றதும் இப்பின்னணியிலேயே நிகழ்ந்தது. நூலின் பக் 33 இல் ஜி.பி. கீரவல்ல இது பற்றி கூறியிருப்பவை வருமாறு:

“மரபுவழி இடதுசாரி இயக்கத்தினுள் வலதுசாரிப் போக்குகள் வளர்ச்சி பெற்றதன் விளைவாக கம்யூனிஸ்ட் கட்சியின் பீகிங் பிரிவு, இடதுசாரிப் போக்குடையவர்களிடையே செல்வாக்குப் பெறலாயிற்று. கம்யூனிஸ்ட் பீகிங் பிரிவு 1965 காலத்தில் விரைவாகத் தனது செல்வாக்கை விரிவாக்கியது. ஆயினும் மரபுவழி இடதுசாரிக் கட்சிகள் மீது அவற்றின் வலதுசாரிகளுடன் இணங்கிப் போகும் போக்கினால் வெறுப்படைந்திருந்த இளைஞர் பிரிவினரைக் கவரக்கூடிய செயல் திட்டம் அக்கட்சியிடம் இருக்கவில்லை.

இக்காரணத்தினால் அக்கட்சிக்குள் (கம்யூனிஸ்ட் கட்சி - பீகிங் பிரிவு) பல பிரிவினைவாத உட்குழுக்கள் தோன்றின. ‘கினிபுப்புர குழு’, ‘பெரதிக சுலங்க குழு’, ‘சுமித் தெவிநுவர குழு’, ‘நிகால் டயஸ் குழு’ ஆகிய குழுக்கள் அக்காலத்தில் செயற்பட்டன. இவை ஒன்றிணைந்து பின்னர் ஜனதா விமுக்தி பெரமுன என்ற பெருங்குழு மேற்கிளம்பியது. மேற்குறித்த ஒவ்வொரு குழுவும் மரபுவழி இடதுசாரி இயக்கத்தில் நுழைந்த சீர்கேடுகளைத் திருத்தி உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றை உருவாக்குவதே தமது நோக்கம் எனக் கூறின. முதலில் சரத் விஜயசிங்க குழுவும், தர்ம சேகர குழுவும், விஜய வீர குழுவுடன் இணைந்தன. மக்கள் விடுதலை முன்னணியினர் மிகுந்த அர்ப்பணிப்புடனும், உணர்ச்சி வேகத்தோடும் இயங்கினர். இதன் பயனாக குறுகிய காலத்திற்குள் அவ்வியக்கம் நாட்டில் மிகவும் சக்திவாய்ந்த ஒழுங்கமைப்புடைய அமைப்பாக உருவாக்கம் பெற்றது.”

மரபுவழி இடதுசாரி இயக்கத்தில் காணப்பட்ட குறைகளே மக்கள் விடுதலை முன்னணியின் தோற்றத்திற்கான மூலகாரணம் என முன்னர் குறிப்பிட்டோம். அக் கருத்தை சான்றுப்படுத்துவனவாக அமைந்த விடயங்கள் சில வருமாறு:

**1. இடதுசாரிக் கட்சித் தலைவர்களின் வாழ்க்கை முறை**

*இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் சமூகத்தின் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களுக்கும் இலங்கையின் குறைவிருத்திப் பொருளாதாரத்தின் பாதிப்புக்களுக்கு ஆளான கிராமப்புறத்துப் படித்த இளைஞர்களின் வாழ்க்கை நிலைக்கும் இடையே பெரிய இடைவெளி நிலவியது. இடதுசாரிக் கட்சி தலைவர்கள் மேற்கு நாட்டுக்குச் சென்று கல்வி கற்றவர்கள். அவர்கள் நாட்டிற்குக் திரும்பியதும் சட்டம் போன்ற உயர் தொழில்களில் (PROFES SIONS) ஈடுபட்டனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வானதாக இருந்தது. இந்தப் பண்பு காரணமாக அவர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற வலதுசாரிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையே வேறுபாடு காணப்படவில்லை. இதனால் முதலாளித்துவ வகுப்பின் மீது இளைஞர்களுக்கு ஏற்பட்ட கோபம் இடதுசாரிக் கட்சித் தலைவர்களை நோக்கியும் திரும்பியது. இது பற்றிச் சமூகவியலாளர் கணநாத் ஒபயசேகர பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.*

*"(இலங்கையின்) பிரதான அரசியல் கட்சிகளை ஆளும் உயர் குழாம் (RULING ELITE) ஒன்றின் உட்பிரிவுகளாகவே கொள்ள முடியும். ஐக்கிய தேசியக் கட்சி அதற்கடுத்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற இரண்டும் வலதுசாரிக் கட்சிகள்; லங்கா சமசமாஜக்கட்சி (ட்ரொட்ஸ்கிஸ வாதிகள்), கம்யூனிஸ்ட் கட்சி என்பன இடதுசாரிக் கட்சிகள். இவற்றின் கட்சிக் கொள்கைப் பிரகடனங்களும், அவற்றின் கருத்தியல்களும் அடிப்படையான வேறுபாடுகளைக் கொண்டனவாய் உள்ளன. ஆனால் இக்கட்சிகள் யாவற்றினதும் தலைவர்கள் எல்லோரும் ஒரே சமூக வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். அவர்கள் யாவரும் ஒரே விதமான பாடசாலைகளில் கற்றவர்கள், அவர்கள் (மாலை வேளைகளில்) ஒரே 'கிளப்' களில் கூடுவர். அவர்கள் தமக்கிடையே ஆங்கிலத்தில் உரையாடுவார்கள். அரசியல் கட்சி வேறுபாடுகளைக் கடந்து அவர்களுக்கிடையே திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். ட்ரொட்ஸ்கிஸ கட்சியினதும், கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைவர்கள் வறிய மக்கள் பிரிவினராக இருந்ததில்லை. இப்போதும் அவர்கள் அப்பிரிவில் இருந்து வந்தவர்களாக இல்லை. அவர்கள் யாவரும் பணவசதி படைத்த பின்னணியில் இருந்து தோன்றியவர்கள். அவர்கள் உயர் தரமான வாழ்க்கை முறைகளைக் கொண்டவர்களாய் இருப்பதில் கூச்சமடைவதில்லை. இவர்களின் நெருங்கிய உறவினர்களும், சகோதரர்களும், சகோதரிகளும், பிள்ளைகளும் வலதுசாரிக் கட்சிகளில் உறுப்பினர்களாக இருப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் இத் தலைவர்களின் பெற்றோர்கூட வலதுசாரி அரசியல் கட்சிகளோடு தொடர்பு உடையவர்களாக இருப்பார்கள். இவர்கள் சார்ந்திருக்கும் சமூக வலைப்பின்னல் அமைப்பு (SOCIAL NETWORK) அதிகாரத்தினதும் வசதி வாய்ப்புக்களினதும் ஆதார மூலமாக இருந்து வருகிறது. இடதுசாரித் தலைவர்களால் விவசாயக் குடியான்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்ப முடியாமல் போனது ஒரு தற்செயலான விடயமல்ல. அவர்களது வர்க்கச் சார்பு நிலையும், அவர்கள் விவசாய வர்க்கத்தில் இருந்து அந்நியப்பட்டவர்களாய் தனிமைப்பட்டு நிற்பதுமே இதற்கான மூல காரணமாகும். அவர்கள் தொழிலாளர்களின் தொழிற்சங்கங்களை அமைப்பதில் வெற்றி கண்டனர் என்பது உண்மையே. ஆயினும் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கும் தொழிலாளர்களிற்கும் இடையே உள்ள சமூக இடைவெளி மிகப்பெரிது"*

*(இம்மேற்கோள் '1971 ஏப்ரல் கிளர்ச்சியின் பின்புலம் - சில குறிப்புகள்' என்ற பொருளில் கணநாத் ஒபயசேகர எழுதிய கட்டுரையில் இருந்து பெறப்பட்டது)*

*(SOME COMMENTS ON THE SOCIAL BACKGROUND OF THE APRIL 1971 INSURGENCY IN SRI LANKA (CEYLON) GANANATH OBEYSEKEARA - JOURNAL OF ASIA STUDIES VOL 33, NO 3 MAY 1974, P.380)*

*பொருளாதார நெருக்கடியின் சுமைகளால் அழுந்திக் கொண்டிருந்த இளைஞர்கள், தமது ஒடுக்குமுறைக்கு விடிவு தேடினார்கள். உயர் கல்வியைச் சிங்கள மொழியில் கற்றவர்களான இவ் விளைஞர்களால் இடதுசாரித் தலைவர்கள் மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட இடமிருக்கவில்லை. இளைஞர்களின் இந்த நம்பிக்கையின்மையை விஜயவீர தனக்குச்*

சாதகமாகப் பயன்படுத்தினார்.

**2. இடதுசாரிக் கட்சிகளின் சீர்திருத்தவாதக் கொள்கைகள்**

மக்கள் விடுதலை முன்னணி, இடதுசாரிக் கட்சிகள் பின்பற்றிய சீர்திருத்த வாதத்திற்கு எதிர்வினையாகத் தோன்றிய இயக்கமாகும். மக்கள் விடுதலை முன்னணியின் 'விமுக்தி' (விடுதலை) என்ற பத்திரிகையின் 1970 ஜனவரி 20 இதழில் இருந்து பெறப்பட்ட மேற்கோள் வருமாறு:

"1935 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி தொடக்கப்பட்ட இடதுசாரி இயக்கத்தின் சமூக சீர்திருத்தவாதம் தற்செயலான ஒரு விடயமன்று. அதன் தொடக்கமே ஒரு சோக நாடகத்தின் தொடக்கமும் ஆகும். அன்று முதல் துரோகங்கள், உட்பகைகள் நம்பிக்கைகளைச் சிதறடித்தல் என்பனவே தொடர்கதையாயிற்று."

நாட்டின் குறை விருத்திப் பொருளாதார முறை மீது இளைஞர்களுக்கு இருந்த வெறுப்பும் கோபமும் அம்முறைமையினை சீர்திருத்தங்கள் மூலம் மேம்படுத்தலாம் என்று கருதிய கட்சிகள் மீதான வெறுப்பாகவும் கோபமாகவும் வெளிப்பட்டதைக் காணலாம்.

**3. வலதுசாரிகளுடன் கூட்டணிக்கு எதிர்ப்பு**

இடதுசாரிக் கட்சிகள் 1960 களில் தமது 30 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் இல்லாத வகையில் வலதுசாரிக் கட்சியுடன் கூட்டணியில் சேர்ந்து ஆட்சியமைக்க முன் வந்தனர். இக் கொள்கையால் இடதுசாரிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து அமைத்த ஐக்கிய இடதுசாரி முன்னணி (UNITED LEFT FRONT - U.L.F) உடைந்து சிதறியது. லங்கா சமசமாஜக் கட்சி ஐக்கிய இடதுசாரி முன்னணியில் இருந்து வெளியேறி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்தது. மக்கள் விடுதலை முன்னணியின் 'ஐந்து விரிவுரைகளில் ஒரு விரிவுரை', 'இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் வரலாறு' என்ற தலைப்பில் அமைந்தது. மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய இடதுசாரி முன்னணி உடைக்கப்பட்டதை இடதுசாரிகளின் துரோகச் செயலாக எடுத்துக் காட்டியது. அரசாங்கத்தில் சிலர் 'சோஷலிஸ்ட்' அமைச்சர்கள் என்ற பெயருடன் பதவி வகிப்பதால் அமைச்சரவையின் முதலாளித்துவப் பண்பு மாறப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரம் அமைந்தது.

**4. இடதுசாரிகளின் தொழிற் சங்கங்களில் நம்பிக்கையின்மை**

மரபுவழி இடதுசாரிகள் கட்டி வளர்த்த தொழிற்சங்கங்களும் அவர்களுடைய சீர்திருத்தவாதப் பாதையிலேயே பயணிக்கின்றன என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக் காட்டியது. இடதுசாரித் தலைவர்கள் தொழிற்சங்கங்களை தொழிலாளர் வர்க்க அரசியலுக்குள் கொண்டு செல்லவில்லை.

தொழிற்சங்கங்கள் குறைவிருத்திப் பொருளாதார அமைப்பை மாற்றியமைப்பதற்குப் பதிலாக முதலாளித்துவ வகுப்பிடம் சலுகைகளை கேட்பனவாகவே செயற்பட்டன. மக்கள் விடுதலை முன்னணி தொழிற்சங்க இயக்கத்தில் புகுந்த பொருளாதார வாதத்தை (ECONOMISM) எடுத்துக் காட்டியது. ஆயினும் அக்கட்சி தொழிற்சங்கங்களில் நம்பிக்கையற்றதால் தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டது. இடதுசாரிகள்

**இடதுசாரிக் கட்சிகள் 1960 களில் தமது 30 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் இல்லாத வகையில் வலதுசாரிக் கட்சியுடன் கூட்டணியில் சேர்ந்து ஆட்சியமைக்க முன் வந்தனர். இக் கொள்கையால் இடதுசாரிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து அமைத்த ஐக்கிய இடதுசாரி முன்னணி (UNITED LEFT FRONT - U.L.F) உடைந்து சிதறியது.**

தொழிற்சங்கங்களில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருந்தனர். இந் நிலையில் மக்கள் விடுதலை முன்னணி தொழிற்சங்கங்கள் மீது அவநம்பிக்கை கொண்டதால் அவற்றில் இருந்து தன்னை அந்நியப்படுத்தியும் தனிமைப்படுத்தியும் கொண்டது.

**5. கிராமத்து விவசாய வர்க்கம்**

மரபுவழி இடதுசாரிகள், கோட்பாட்டு நிலையில் தொழிலாளர் விவசாயக் கூட்டும் ஐக்கியமும் (WORKER PEASANT ALLIANCE) எனப் பேசிக் கொண்டிருந்தனர். ஆனால் நடைமுறையில் அவ் இடதுசாரிகளிடம்

விவசாய வர்க்கத்தை அணி திரட்டும் எந்த விதமான செயல் திட்டமும் இருக்கவில்லை. பிற நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கையின் விவசாய வகுப்பு நகரங்களோடு கூடியளவு பிணைப்புடையதாக இருந்துள்ளது. விவசாய வகுப்பு, கல்வி முன்னேற்றம் காரணமாக அரசியல் உணர்வுமிக்கதாய் வளர்ச்சியுற்றிருந்தது. ஆயினும் விவசாய வகுப்பை இடதுசாரி இயக்கத்தால் கருத்தியல் ரீதியாக வென்றெடுக்க முடியவில்லை. கிராமத்துக் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பழைய தலைமுறை மரபுவழி சமூகக் கருத்தியலை (TRADITIONAL SOCIAL IDEOLOGY) ஏற்றுக் கொண்டிருந்த காரணத்தால் கிராம சமுதாயத்தின் உறுதி நிலைக்கு எவ்வித அச்சுறுத்தலும் எழவில்லை. ஆயினும் இளைய தலைமுறையினர் சமூக ஒழுங்கமைப்பை முழுமையாக மாற்ற வேண்டும் என்ற சிந்தனை உடையவர்களாகக் காணப்பட்டனர்.

விவசாய வர்க்கம் பற்றிச் சிந்திக்கும் பொழுது 1960-70 களில் உலர் வலயத்தின் விவசாய வர்க்கத்தின் நிலை தனித்து நோக்கப்பட வேண்டியது. ஈர வலயத்தின் கிராமங்களோடு உலர் வலயக் குடியேற்றங்களை ஒப்பிடுகையில் இலங்கையின் சமனற்ற வளர்ச்சி (UNEVEN DEVELOPMENT) என்ற பண்பு வெளிப்படையாகிறது.

1. உலர் வலய விவசாயிகள் கல்வியில் பின் தங்கியவர்களாய் கல்வி வசதிகள் அற்றவர்களாய் இருந்தனர்.
2. இப்பகுதிகளில் சுகாதார வசதிகள் மிக மோசமான நிலையில் இருந்தன.
3. போக்குவரத்து தொடர்பு சாதனங்கள் வளர்ச்சியற்ற நிலையில் உலர் வலய விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர் கொண்டனர்.

உதாரணமாக அனுராதபுர மாவட்டம் முழுமைக்குமாக க.பொ.உயர்தர விஞ்ஞானப் பாடங்களைக் கற்கக் கூடிய பாடசாலைகள் மூன்று மட்டுமே இருந்தன. பொலநறுவை மாவட்டத்தில் க.பொ.த.உயர்தரம் வரை விஞ்ஞானப் பாடங்களைப் படிக்கக்கூடிய ஒரேயொரு பாடசாலை மட்டுமே இருந்தது. கல்வியில் மட்டுமல்லாமல் ஏனைய சமூக நல வசதிகளும் உலர்வலய குடியேற்றங்களின் மக்களுக்குக் கிடைக்கவில்லை. உலர் வலய கிராமவாசிகள் வரட்சியால் பாதிக்கப்பட்டனர். வரண்ட காலத்தில் நீர்ப்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்தது. மலேரியா தொற்றுநோய் உலர் வலயங்களில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படாமல் தொடர்ந்தது.

மரபுவழி இடதுசாரிக் கட்சிகள் விவசாய வர்க்கத்தை அணி திரட்டுவதில் தோல்வியடைந்தமையால் ஏற்படுத்தப்பட்ட வெற்றிடத்தை மக்கள் விடுதலை முன்னணி பயன்படுத்திக் கொண்டது. மக்கள் விடுதலை முன்னணியில் பார்வையில் இலங்கையில் மூன்று பிரிவினரிடம் புரட்சிக்கான உள்ளாற்றல் இருந்தது. அவை:

1. நகரத் தொழிலாளி வர்க்கம்
2. தோட்டத் துறையின் தொழிலாளி வர்க்கம்
3. கிராமப்புற விவசாயப் பாட்டாளிகள்

இந்த மூன்று பிரிவினரில் முதலிரு பிரிவினரும் பின்வரும் காரணங்களால் புரட்சிக்கு உதவ முடியாத பிரிவினர்களாக ஆயினர் என மக்கள் விடுதலை முன்னணி முடிவு செய்தது.

அ) நகரத் தொழிலாளர் வர்க்கம்

இவ்வர்க்கம் அரசியல் மாயைக்குள் இருந்தது. அது புரட்சிகர சக்தி என்ற தகுதியை இழந்து விட்டது.

ஆ) தோட்டத் தொழிலாளர் வர்க்கம்

தோட்டத்துறையின் (தமிழ்) தொழிலாளர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் (INDIAN EXPAN SIONISM) கையாட்கள் என்ற நிலையில் உள்ளனர்.

இக்காரணங்களால் கிராமத்து விவசாயப் பாட்டாளிகளே உண்மையான புரட்சிகர சக்தி என்று மக்கள் விடுதலை முன்னணி முடிவு செய்தது.

கிராமப்புறத்து குட்டி முதலாளித்துவ வகுப்பினரிடையே தமது பிரச்சார அணி திரட்டலை நடத்தி வந்த மக்கள் முன்னணி 1970 இல் தனது இருப்பை வெளிக் காட்டியது.



கியூபா புரட்சி

Image Source - www.theguardian.com

தலைமறைவாக அதுகாலம்வரை இயங்கிய மக்கள் விடுதலை முன்னணி 1970 - 1971 காலத்தில்,

1. தம்புத்தேகம

2. ராஜங்கனை

3. டெனியாய

ஆகிய இடங்களில் வெகுஜன செல்வாக்குடைய இயக்கமாக வெளிப்பட்டது.

### சர்வதேச நிலைமைகள்

1971 இன் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியை அக்காலப் பகுதியின் சர்வதேச அரசியல் நிகழ்வுகளில் இருந்தும், மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் போக்குகளில் இருந்தும் தனிமைப்படுத்தி நோக்க முடியாது. சர்வதேச அரசியலில் இரண்டு முக்கியமான போக்குகள் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கோட்பாட்டின் உருவாக்கத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தின. அவையாவன:

- இராணுவச் சதிப் புரட்சி என்னும் அரசியல் ஆபத்து
- கியூபாவின் புரட்சி

### அ) இராணுவச் சதிப் புரட்சி என்னும் அரசியல் ஆபத்து

வெகுஜன ஆதரவுடன் தேர்தல் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய அரசுகள் பல 1960 களில் இராணுவச் சதிப் புரட்சிகள் மூலம் கவிழ்க்கப்பட்டன. 1965 இல் இந்தோனேசியாவின் சுகர்ணோ, இராணுவச் சதிப் புரட்சி மூலம் தூக்கி வீசப்பட்டார். கானாவின் நிகுறுமாவும், இலத்தீன் அமெரிக்க நாடுகளின் அரசுகளின் தலைவர்களும் இவ்வாறே

ஆட்சி அதிகாரத்தில் இருந்து இராணுவச் சதிப் புரட்சியால் நீக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். மக்கள் விடுதலை முன்னணியின் 5 விரிவுரைகளில் ஒரு விரிவுரை 'அரசியல் ஆபத்து' (THE POLITICAL THREAT) என்ற தலைப்பில் அமைந்தது. அது இலங்கையில் இராணுவச் சதிப்புரட்சியின் ஆபத்துப் பற்றி அரசியல் வகுப்புக்களில் விளக்கம் கொடுத்தது.

1. சமாதான வழியில் சோஷலிசம் என்ற பாதையை தேர்வு செய்தால் இராணுவச் சதிப் புரட்சியை தவிர்க்க முடியாதது. மூன்றாம் உலகின் அனுபவம் இதற்குச் சாட்சியாக விளங்குகிறது.

2. 1965 - 1970 ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இதற்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்றுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி கூறியது. சுற்றுலாத் தொழில் விரிவாக்கம், டியோகோ கார்சியாவில் அமெரிக்கா அமைத்த கடற்படைத்தளம், அமெரிக்காவின் 'ஹோப்' கப்பலின் இலங்கை வருகை, போர்ட் பவுண்டேசன் முதலிய நிறுவனங்களின் செயற்பாடுகள் என நீண்ட பட்டியலைக் காட்டி தயாரிப்பு வேலைகள் பற்றி விரிவுரையின் போது இளைஞர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

3. 1970 இல் தேர்தல் நடைபெறலாம். அல்லது நடைபெறாமல் போகலாம். எவ்வாறாயினும் இராணுவப் புரட்சிக்கான சாத்தியம் உள்ளது எனவும் அப்படி நிகழும் போது மரபுவழி இடதுசாரி இயக்கம் முழுமையாக அழித்தொழிக்கப்படும் என்றும் மக்கள் விடுதலை முன்னணி குறிப்பிட்டது.

'அரசியல் ஆபத்து' பற்றிய விளக்கம் ஒரு புறம் இருக்க கியூபாவின் புரட்சி என்னும் முன்னுதாரணம், மக்கள் விடுதலை முன்னணியின் வேலைத் திட்டத்திற்கு இன்னொரு பரிணாமத்தை வழங்கியது.

**ஆ) கியூபாவின் புரட்சி**

கியூபாவின் புரட்சியை மனோரதியமானதாகச் சித்தரிக்கும் நூல்களும் பிரசுரங்களும் (ROMANTI CIZED LITERATURE) இலங்கையில் 1960 இல் புதிதாகத் தாபிக்கப்பட்ட கியூபாத் தூதரகம் ஊடாகப் பெறக்கூடியனவாய் இருந்தன. கியூபாப் புரட்சியைப் பற்றி இப்பிரசுரங்கள் மூலமாக அறிந்து கொண்டவர்கள், அப்புரட்சியின் உண்மைத் தாற்பரியத்தை புரிந்து கொள்ளாதவர்களாக, ஒரு வரலாற்று நிகழ்வை முக்கியமான ஒரு திருப்பு முனையான மூன்றாம் உலகை நிகழ்வை வைத்து மாயக் கற்பனை ஒன்றைக் கட்டமைத்தனர். தொழிலாளர் வர்க்கத்தினை அணி திரட்டாமல் வெறுமனே துப்பாக்கி ஏந்திய போராட்டம் மூலம் புரட்சியை ஏற்படுத்தலாம் என்ற வகையில் இது முன்வைக்கப்பட்டது.

1. மரபுவழி இடதுசாரிக் கட்சிகளைப் புறந்தள்ளி புரட்சிகர இளைஞர்களை ஒன்று திரட்டி ஆயுதப் போராட்டத்தை நடத்துவதன் மூலம், இருந்து வரும் முறைமையை மாற்றலாம்.

2. கியூபா புரட்சி பற்றிய மனோரதியமான சித்தரிப்பு. புரட்சிகரக் கட்சி (REVOLUTION ARY PARTY) தேவையில்லை; ஆயுதப் போராட்டத்தினை நேரடியாக ஆரம்பிக்கலாம்.

ஆகிய இரு கருத்துகள் மக்கள் விடுதலை முன்னணியால் முன்வைக்கப்பட்டன. கியூபாவின் உதாரணத்தைக் காட்டி 'போல்செவிக் கட்சி' அவசியமில்லை என்ற கருத்து முன்னிறுத்தப்பட்டது.

மார்க்சிய - லெனினிசக் கோட்பாடு, பாட்டாளி வர்க்கத்தின் கட்சி வர்க்கப் போராட்டத்தின் ஊடாகக் கட்டி வளர்க்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது. ஆனால் மக்கள் விடுதலை முன்னணி தனது கட்சி உறுப்பினர்களை சேர்த்துக் கொண்ட முறை வேறுபட்டதாக இருந்தது.

1. கட்சியில் சேர விரும்பும் இளைஞர்களுக்கு நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையை விளக்கும் உரையும் தொடக்க நிலை உரையாடலும் நடத்தப்பட்டது.

2. மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலின் அடிப்படைகளை ஏற்றுக் கொண்ட இளைஞர்களுக்கு, அடுத்து நான்கு அரசியல் வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

3. இந்த நான்கு விரிவுரைகளில் கூறப்பட்ட கருத்துக்களை ஏற்றுக் கொண்டவரும் நம்பிக்கைக்கு உரியவர் எனக் கருதப்பட்டவருமான இளைஞர் ஐந்தாவது விரிவுரைக்கு அழைக்கப்படுவார். இவ்விரிவுரையின் முடிவில் அவருக்கு

உறுப்புரிமை வழங்கப்பட்டது. புதிய உறுப்பினர், கட்சியின் கருத்துக்களைப் பரப்புரை செய்பவராகப் பணியாற்றத் தொடங்குவார்.

மேற்குறித்த படிமுறையூடாக கட்சியில் இணைக்கப்பட்டவர்களிடையே காணப்பட்ட பொதுத் தன்மைகள் முக்கியமானவை.

அ) க.பொ.த (சா), க.பொ.த (உ.த) ஆகியன வரை இரண்டாம் நிலைக் கல்வியைப் பெற்றவர்களாக அல்லது பல்கலைக்கழகப் பட்டதாரிகளாக இருந்தனர். அண்மையில் கல்வியை முடித்தவர்களாக இருந்தனர்.

ஆ) பெரும்பாலானோர் வேலையற்றவர்களாக, வேலையை தேடிக் கொண்டிருப்பவர்களாக இருந்தனர்.

இ) இவர்களின் பெற்றோர் நிரந்தர வருமானத்தைப் பெறுபவர்களாக இருந்தபடியால் இவ்விளைஞர்களிடம், தமக்குக் கிடைத்த சமூக அங்கீகாரம் காரணமாக பெருமித உணர்வு இருந்தது.

ஈ) சமூகத்தில் மேலாதிக்கம் பெற்றிருந்த மேட்டிமையான மதிப்பீடுகள் (ELITIST VALUES) தம் தேவைகளை அலட்சியம் செய்வதையும் அதிகார வர்க்கம் தமக்கு வேலை வழங்க மறுப்பதையும் கண்டு கொதிப்படைந்த இவ்விளைஞர்கள், இருந்து வரும் முறையை மாற்ற வேண்டும் என உறுதி பூண்டனர்.

உ) பெரும்பாலானவர்கள் கட்சியின் முழுநேர ஊழியராக வேலை செய்ய முன் வந்தனர்.

மேற்குறித்தவாறு மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற சில நிகழ்வுகள், மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் வேகம் பெறக் காரணமாயின.

மக்கள் விடுதலை முன்னணியை மேலோட்டமான ஒரு கருத்தியலை முன் வைத்து இளைஞர்களை அணி திரட்டிய இயக்கம் என்று முடிவு செய்தல் ஒரு தலைப்பட்சமான கருத்தாகவே இருக்க முடியும். **1966** மார்ச் - ஏப்ரல் மாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் (பீகிங் பிரிவு) மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் விஜயவீரவையும் அவரது குழுவினரையும் வெளியேற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு வெளியேற்றப்பட்ட காலம் முதல் மக்கள் முன்னணி கிராமப் புறங்களில் தன் களப் பணியைத் தீவிரப்படுத்தியது. வடமத்திய மாகாணத்திலும் (அனுராதபுரம, பொலநறுவை மாவட்டங்கள்) தெற்கு மாவட்டங்களிலும் மக்கள் விடுதலை இயக்கம் விவசாயப் பண்ணைகளை ஆரம்பித்து அப்பண்ணைகள் ஊடாக தம் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தினர். **1967** இல் களத்தாவ என்ற இடத்தில் ஓர் உரையாடல் நடைபெற்றது. இதே காலப் பகுதியில் பொலநறுவை மாவட்டத்தின் காணி அபிவிருத்தி திணைக்களத் தொழிற்சங்கத்தினை மக்கள் விடுதலை முன்னணி தம் பக்கம் வென்றெடுப்பதில் வெற்றி கண்டது. அத் தொழிற்சங்கத்தின் பத்திரிகையான ‘சங்வர்த்தன ஹண்ட’ (அபிவிருத்தியின் குரல்) பத்திரிகையைக் கட்சியின் பிரச்சார ஏடாக விடுதலை முன்னணி உபயோகிக்கத் தொடங்கியது. **1967** இல் ‘களத்தாவ உரையாடல்’ நடைபெற்ற வேளை கட்சியின் இயல்புகளில் இரண்டு கூறுகள் தெளிவாக வெளிப்பட்டன.

- ‘ஐந்து விரிவுரைகள்’ ஊடாக இளைஞர்களை கட்சிக் கொள்கைப் பற்றாளர் ஆக்குதல் (INDOCTRINATION)
- மாணவர்கள், படித்த வேலையற்ற இளைஞர்கள் ஆகியோரைக் கொண்ட இயக்கத்தை விரிவாக்குதல்.

கடுமையான உழைப்பின் மூலம் கட்டயெழுப்பப்பட்ட இயக்கமாயினும், மக்கள் முன்னர் செல்வதற்கு தெளிவான ஒரு கருத்தியலை அக்கட்சி வகுத்துக் கொள்ளவில்லை.

இலங்கையின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் பகுப்பாய்வு மேலோட்டமானதாகவே அமைந்திருந்தது.

மக்கள் விடுதலை முன்னணிப் படை வீரர்களாக கிளர்ச்சியில் பங்கு கொண்டவர்களின் தியாக உணர்வு, அர்ப்பணிப்பு, வீரம் என்பன அளப்பெரியன. ஆயினும் அதன் குட்டி முதலாளித்துவக் கருத்தியலின் பலவீனம்,

இவ்விளைஞர்களின் சக்தியைப் பயனுடைய வகையில் உபயோகிக்கத் தவறியமைக்குக் காரணமாக அமைந்தது. மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி ஒழுங்கமைப்பில் இரண்டு முக்கிய குறைபாடுகள் இருந்தன.

1. சர்வாதிகாரம் : இது கட்சியின் உறுப்பினர்கள் மீது மேலோங்கியிருந்தது. குறிப்பாகச் சொல்வதனால் ரோஹண விஜேவீர என்ற ஒரு தனிநபர் தவிர்ந்த வேறு எவரும் கட்சியின் தேசியத் தலைமை என்பதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2. உயர் மட்டக் குழுக்கள் : கட்சியின் 'பொலிட் பீரோ', மத்திய கமிட்டி என்பன ஜனநாயக முறையில் அமைக்கப்பட்டனவாக இருக்கவில்லை.

மேற்படி இரு குழுக்களும் தனியாள் உறவுகளின் படி உருவாக்கப்பட்டதால் கட்சிக்குள் குறுங்குழு வாதம் (FACTIONALISM) நிலவியது.

**மக்கள் விடுதலை முன்னணியை மேலோட்டமான ஒரு கருத்தியலை முன் வைத்து இளைஞர்களை அணி திரட்டிய இயக்கம் என்று முடிவு செய்தல் ஒரு தலைப்பட்சமான கருத்தாகவே இருக்க முடியும். 1966 மார்ச் - ஏப்ரல் மாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் (பீகிங் பிரிவு) மாநாடு நடைபெற்றது.**

'பொலிட் பீரோ' வின் உறுப்பினர்களின் இயல்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. 14 உறுப்பினர்களில் 11 பேர் முப்பது வயதுக்குக் குறைந்த இளைஞர்களாக இருந்தனர்.
2. 14 உறுப்பினர்களில் 6 உறுப்பினர்கள் உயர்கல்வியை முடித்தவர்களாகவும் பட்டதாரிகளாகவும் இருந்தனர். அவர்களில் 2 பேர் வேலையற்ற இளைஞர்களாக இருந்தனர்.
3. 13 உறுப்பினர்கள் க.பொ.த (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக அல்லது அதனை விட உயர்ந்த கல்வித் தராதரம் உடையவர்களாக இருந்தனர்.
4. 8 உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். 6 உறுப்பினர்கள் ஒரு குறிப்பட்ட நகரசபைப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். 5 உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட பாடசாலையில் படித்தவர்களாக இருந்தனர்.
5. 'பொலிட் பீரோ' உறுப்பினர்கள் ஏறக்குறைய அனைவரும் மக்கள் விடுதலை முன்னணியில் இணைவதற்கு முன்னர் கம்யூனிஸ்ட் கட்சி (பீகிங் பிரிவு) உறுப்பினர்களாக இருந்தவர்களாவர்.

## முடிவுரை

மக்கள் விடுதலை முன்னணியின் 1971 ஏப்ரல் கிளர்ச்சி பற்றிய இவ்வாய்வின் முடிவுகளாக பின்வரும் கருத்துக்களை முன் வைக்கிறோம்.

1. மக்கள் விடுதலை முன்னணியின் தோற்றத்திற்கான புற நிலைமைகளையும், இலங்கையில் உருவாக்கம் பெற்ற சமூக உருவாக்கத்தையும், காலனியப் பின்புலத்தில் உருவான உற்பத்தி முறையையும் வரலாற்று நோக்கில் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

மக்கள் விடுதலை முன்னணி ஒரு குட்டி முதலாளித்துவ இயக்கமாகும். மேற்கு நாடுகளின் வரலாற்றில் குட்டி முதலாளி வர்க்கம் ஓர் இடதுசாரிச் சக்தியாக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயற்பட்டதாகக் கூற முடியாது. அது வெவ்வேறு வரலாற்றுச் சூழமைவுகளில் வெவ்வேறு விதமாகச் செயற்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் அது தீவிர இடதுசாரிச் சக்தியாகவும், வேறு சில சந்தர்ப்பங்களில் தீவிர வலதுசாரிச் சக்தியாகவும் செயற்பட்டுள்ளது. இலங்கை போன்ற சார்பு மண்டல முதலாளித்துவ நாடுகளில் (PERIPHERAL CAPITALIST COUNTRIES) பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்ச்சியாக மோசமடைந்து பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டு வருவதால் குட்டி முதலாளித்துவ வர்க்கம் இடதுசாரிச் சக்தியாகச் செயற்படும் உள்ளாற்றல் வாய்ந்ததாக விளங்கியது. இலங்கையின் மக்கள் விடுதலை இயக்கம் ஒரு இடதுசாரி எதிர்க் கிளர்ச்சியை 1971 இல் நடத்தியது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகையால் 1971 இன்

கிளர்ச்சியை குட்டி முதலாளி இளைஞர் பிரிவினரின் இடதுசாரிக் கிளர்ச்சி என வரையறை செய்யலாம்.

2. மக்கள் விடுதலை முன்னணி போன்ற இடதுசாரி இயக்கம், மரபுவழி இடதுசாரிக் கட்சிகள் சமூக ஜனநாயக வாதமாக சீரழிவுற்ற பின்னணியில் தோன்றியது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இலங்கையின் தொழிலாளர் வர்க்க இயக்கம் மரபுவழி இடதுசாரிக் கட்சிகளின் ஏவல் படி செயற்படுபவனவாய், அவற்றிடம் எதிர்பார்க்கப்பட்ட வகிபாகத்தை ஏற்றுச் செயற்படத் தவறின. இதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் கிளர்ச்சிவாதப் பிரிவினர் நிரப்புவதற்கு முன் வந்தனர். இருந்து வரும் சமூக அரசியல் முறைமைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் கிளர்ச்சியாளர்கள் என்ற வகிபாகத்தை குட்டி முதலாளி வர்க்கம் ஏற்றுச் செயற்பட்டதை குறை விருத்தி நாடுகளின் அண்மைக்கால வரலாறு எமக்கு உணர்த்துகிறது.

**மக்கள் விடுதலை முன்னணியின் 1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி முதலாளித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு கிளர்ச்சி என்பதில் ஐயமில்லை. அம் முன்னணியினர் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதில் அர்ப்பணிப்பு உடையவர்களாய் இருந்தனரேனும் தாம் அமைக்கப்போகும் சோஷலிசம் பற்றித் தெளிவான திட்டம் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை.**

3. மக்கள் விடுதலை முன்னணியின் 1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி முதலாளித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு கிளர்ச்சி என்பதில் ஐயமில்லை. அம் முன்னணியினர் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதில் அர்ப்பணிப்பு உடையவர்களாய் இருந்தனரேனும் தாம் அமைக்கப்போகும் சோஷலிசம் பற்றித் தெளிவான திட்டம் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிக்கும் 'தெய்வீக உரிமை' தமக்கு இருப்பதாக மக்கள் விடுதலை இயக்கம் நம்பியது. ஆயினும் குட்டி முதலாளித்துவ கிளர்ச்சி வாதிகளான இவ் இயக்கத்தினரின் தியாகமும், இவர்களிடமிருந்த ஆற்றல்களும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையும் நெறிப்படுத்தலும் இல்லாமையால் வீணாக விரயம் செய்யப்பட்டன.

(தொடரும்)

### G.B. கீரவல்ல

*கலாநிதி G.B. கீரவல்ல அவர்களால் 1980 ஜனவரியில் இக் கட்டுரை எழுதப்பட்டது. அவ்வேளை, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் உதவி விரிவுரையாளராக இவர் கடமையாற்றினார். பின்னர், அதே பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றார். இவர் இலங்கையின் நவீன வரலாறு, அரசியல் சர்வதேச உறவுகள் தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார்.*



G.B. கீரவல்ல

Image Source - bcis.edu.lk/index.php

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே ‘பசுமை எனும் பேரபாயம்‘ எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.




மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.


# இலங்கையில் சூழலியல் : சில அறிமுகக் குறிப்புகள்

## தொடக்கக் குறிப்புகள்

இலங்கையின் கடந்த அரைநூற்றாண்டு கவனங்கொள்ளத் தவறிய முக்கியமான துறைகளில் ஒன்று சூழலியல். இன முரண்பாடும் பொருளாதாரச் சிக்கல்களும் சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் சமூகப் பொருளாதார அரசியலரங்குகளை ஆக்கிரமித்து நின்றன. இப்பின்புலத்தில் நமது இயற்கையும் வளங்களும் அபிவிருத்தியின் பெயரால் கொள்ளையடிக்கப்பட்டன. விவசாய மையப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டிருந்த நாடு சேவை மையப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்தது. வளமான மண்ணும் கடலும் தந்திருக்கக் கூடிய பயன்களை வினைத்திறனுடனும் பேண்தகைமையுடனும் தக்கவைக்க நாம் தவறினோம். நாட்டின் இயற்கையை சீரழித்ததன் வழி தன்னிறைவுப் பொருளாதார மாதிரிக்கு எவ்வாறு குழிபறிக்கப்பட்டது என்பது இன்று இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்துக் கவனம் குவிப்போர் பேசத் தவறுகின்ற விடயங்களில் முக்கியமானது.

இலங்கையின் சூழலியல் வரலாற்றை மூன்று பகுதிகளாப் பிரிக்கவியலும். முதலாவது, கொலனியாதிக்கத்துக்கு முந்தையது; இரண்டாவது போத்துகேய, டச்சு மற்றும் பிரித்தானியக் கொலனியாதிக்க காலம்; மூன்றாவது சுதந்திரத்துக்குப் பிந்தையது. இக்கட்டுரையில் கொலனியாதிக்கத்துக்கு முந்தைய கால சூழலியல் சார்ந்த ஆய்வுகள் சொல்கிற முக்கியமான செய்திகளையும் கொலனியாதிக்கம் எவ்வாறு பொருளாதார நோக்கங்களுக்காக இலங்கையின் காடுகளையும் உயிர்ப்பல்வகைமையையும்

அழித்தது என்பதையும் ஆராய்கிறது.

இலங்கையின் காடுகளின் அளவுகளை ஒரு உதாரணத்துக்கு எடுத்துக்கொண்டால் இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு காடுகள் அழிக்கத் தொடங்கும்வரை பல்வகைமையில் காடுகள் முக்கிய பங்காற்றின. 1881 இல் 84 வீதமான பகுதி காடுகளால் சூழப்பட்டதாக இருந்தது. 1956 இல் இது 56 வீதமாகி 1996 இல் 30 வீதமாகி இப்போதைய தரவுகளின்படி இது கிட்டத்தட்ட 16 வீதமாகவுள்ளது. இந்த மாற்றம் ஏன் நிகழ்ந்தது? இது நாட்டின் சூழலியலில் ஏற்படுத்திய மாற்றங்கள் என்ன போன்ற வினாக்கள் அடிப்படையானவை.

இலங்கைத் தீவு குறிப்பிடத்தக்க உயிரியல் பன்முகத்தன்மையைக் கொண்டிருக்கிறது. உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் மிகவும் சிறப்பான நாடாக இலங்கை கருதப்படுகிறது. நாட்டின் சுற்றுச்சூழல், தட்பவெப்பநிலை, மண் மற்றும் நிலப்பரப்பு மாறுபாடு ஆகியன பல்வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு சாதகமான நிலைமைகளை வழங்குகிறது.

தேசிய சிவப்புப் பட்டியலிலுள்ள பல அழிவுறும் ஆபத்திலுள்ள (endangered) உயிரினங்களும் தாவரங்களும் இலங்கையில் இருக்கின்றன. இதனால் இலங்கை உயிர்ப்பல்வகைமை அடிப்படையில் முக்கியமானது. குறித்த பட்டியலின் அடிப்படையில் இலங்கையில் 253 நில நத்தை இனங்கள், 245 வகையான பட்டாம்பூச்சிகள், 240 பறவைகள், 211 ஊர்வன, 748 முதுகெலும்புள்ள உயிரிகள், 1,492 முதுகெலும்பற்ற உயிரிகள், 336 வித்திலித் தாவரங்கள் மற்றும் 3,154 பூச்செடிகள் உள்ளன. இந்த உயிரியல் செழுமையானது இலங்கைக்கு மட்டுமன்றி உலகத்துக்கே முக்கியமானது. தற்போது, நாட்டில் இருக்கும் 3,000 பூக்கும் தாவரங்களில் கால்வாசி அழிவுறும் அபாயத்தில் இருக்கிறது. இதேபோலவே நாட்டில் உள்ள முதுகெலும்புள்ள உயிரினங்களில் 43 வீதமானவை அழிவுறும் ஆபத்தில் உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

சிறிய நாடாக இருந்தாலும், காடு முதல் விவசாயம், நீர்வாழ் மற்றும் கடல் சூழல்கள் வரையிலான பரந்த அளவிலான சுற்றுச்சூழல் அமைப்புகளை இலங்கை கொண்டிருக்கிறது. நாட்டில் இருக்கும் பல வெப்ப மண்டலங்கள் மழைக்காடுகள், மலை மேகக் காடுகள், உலர் மண்டல பருவக்காடுகள் மற்றும் வறண்ட முட்புதர்க்காடுகள் உள்ளிட்ட பல்வகைக் காடுகள் உயிர்ப்பல்வகைமைக்கு முக்கிய பங்களிக்கின்றன. இலங்கையின் கடல்வளமும் பல்வகைப்பட்ட அரிய கடலுயிரிகளின் வாழ்விடமாக உள்ளது.

இலங்கையின் ஈரநிலங்களும் பன்முகத்தன்மை கொண்டவை. இதில் 103 பெரிய ஆறுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சதுப்பு நிலங்கள் மற்றும் ஈரநில இனங்களை உள்ளடக்கிய சுமார் 12,000 குளங்கள் உள்ளன. பல நூற்றாண்டுகளாக நாட்டில் செழித்தோங்கியுள்ள தனித்துவமான நீர்முகாமைத்துவ அமைப்பு, விவசாயிகளின் நடைமுறைகள் ஆகியன மாறுபட்ட சூழலியல் நிலைமைகளுக்கு ஏற்றவாறு இலங்கையை வளமான விவசாய - பல்லுயிரியலைத் தக்கவைக்கும் நாடாக மாற்றியிருக்கிறது.

எவ்வாறாயினும், தற்போது, இலங்கையின் தனித்துவமான உயிரியல் பன்முகத்தன்மை பொதுவான வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட 240 பறவை இனங்களில் 27%, 66% நீர்நில வாழ் உயிரிகள், 56% பாலூட்டிகள், 49% நன்னீர் மீன் இனங்கள் மற்றும் 59% ஊர்வன ஆகியன அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக, இலங்கையின் முதன்மையான சின்னங்களில் ஒன்றான யானையின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது. பூக்கும் தாவரங்களைப் பொறுத்தவரை, அடையாளம் காணப்பட்ட 3,154 இனங்களில் 1,385 இனங்கள் அச்சுறுத்தலுக்கு உட்பட்டவை என

வகைப்படுத்தப்பட்டுள்ளன, அவற்றில் அதிகப் பெரும்பான்மையானவை (594 தாவரங்கள்) இலங்கையில் மட்டுமே உள்ளன.

நாட்டின் உயிர்ப்பல்வகைமையில் இருந்து பெறப்படும் நன்மைகள் இலங்கைப் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்குகின்றன. உண்மையில் மீன்பிடி, விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளின் ஆதார சுருதியாக இந்த உயிர்ப்பல்வகைமை விளங்குகிறது. இன்று



From L. E. Douffet, The Ceylon Coffee Album. A Collection of Sixteen Photographs, illustrating the various details of coffee planting in Ceylon (Nuwara Eliya, 1881): Plate VI. Harvest Pickers at Work in the Field

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் போதும் பொருளாதார மீட்சியில் முக்கிய பங்காற்றக்கூடிய உயிர்ப்பல்வகைமை பற்றிய கவனம் எமக்கு சிறிதளவும் இல்லை என்பது வருத்தத்துக்குரியது. வளமான சமூகத்திற்கு வளமான சூழலியல் நிலவ வேண்டும். சுத்தமான காற்று, சுகாதாரமான குடிநீர், சத்தான உணவு ஆகியவை அடிப்படையானவை. இம்மூன்றையும் தக்கவைக்க சூழலியல் பற்றிய கவனம் அடிப்படையானது.

இலங்கையில் சுமார் 1.42 மில்லியன் வீட்டுத் தோட்டங்கள் உள்ளன (மொத்தம் சுமார் 76,483 ஹெக்டேர்) அவை நாட்டின் விவசாயப் பல்லுயிர் பெருக்கத்தின் இதயமாக கருதப்படுகின்றன. அவை நாடு முழுவதும் (உலர் ஈர மண்டலங்கள் இரண்டிலும்) பரந்துள்ளன. நூற்றுக்கணக்கான பயனுள்ள தாவர இனங்கள் மற்றும் அவற்றின் மரபணு வேறுபாடுகளைப் பாதுகாப்பதில் வீட்டுத் தோட்டங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அதே நேரத்தில் இத்தோட்டங்கள் கிராமப்புற மற்றும் புறநகர்ப் பகுதிகளின் குடும்பங்களுக்கு அரிசி, கிழங்குகள், பயன்படுத்தப்படாத பழ வகைகள், நாட்டுக் காய்கறிகள், இலைக் காய்கறிகள், வாசனைத் திரவியங்கள் போன்ற சத்தான உணவுகளை சீராக வழங்குகின்றன. அத்துடன் வீட்டு வைத்தியம் மற்றும் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மருத்துவத் தாவரங்கள் இத்தோட்டங்களிலேயே வளர்க்கப்படுகின்றன. இவை ஆரம்பச் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் வணிக முயற்சிகளுக்கான வாய்ப்பை வழங்குகின்றன.

இன்று நாம் வாழும் சூழலைப் பற்றிய அக்கறை குறைவான, உயிர்ப்பல்வகைமையைத் தக்கவைப்பதில் கவனம் குவிக்காத ஒரு சமூகமாக இலங்கைச் சமூகம் எப்படி மாறியது? பன்நெடுங்காலமாகவே சூழலியல் மீது அக்கறையற்ற சமூகமாகவா இலங்கையர்கள் இருந்தார்கள்? அதன் தொடர்ச்சியைத்தான்

இப்போது காண்கிறோமா? அவ்வாறு இல்லை எனில் இம்மாற்றம் எப்போது, எப்படி, ஏன் நிகழ்ந்தது? இவற்றை ஒரு வரலாற்றுப்புல நோக்கில் விசாரிக்கலாம்.

## பண்டைய இலங்கையில் சூழலியல்

அகழ்வாராய்ச்சி ரீதியான ஆய்வுகள் பண்டைய இலங்கையின் வாழ்வியலைப் பற்றிய ஒரு சித்திரத்தைத் தருகின்றன. அவை குறிப்பாக இரண்டு விடயங்களில் கவனம் குவிக்கின்றன. முதலாவது பண்டைய கால இலங்கையின் விவசாயம், பயிர்ச்செய்கை தொடர்பானது. இரண்டாவது நீர்முகாமைத்துவம் தொடர்பானது.


இலங்கை பாரம்பரியமாக விவசாய நாடாகும். பண்டைய இலங்கையர்கள் நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள அபிவிருத்தியில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். வருடத்தில் 34 மாதங்கள் மட்டுமே மழை பெய்யும் நாட்டின் வறண்ட வலயத்தில், மழை நீரை நேரடியாகச் சேமித்து வைப்பதற்கும், வற்றாத ஆறுகளில் இருந்து திருப்பிவிடப்படும் நீரைச் சேமிப்பதற்கும் அவர்கள் நீர்த்தேக்கங்களை கட்டினார்கள். இதன் விளைவாக, நீர்வள நாகரிகம் அதன் விவசாயத்திற்கான நீர்ப்பாசன முறைகளை பெரிதும் சார்ந்திருந்தது.

பண்டைய இலங்கையில் அனைத்துக் கிராம விவசாய - சுற்றுச்சூழல் வளாகங்களும் பொதுவான குணாதிசயங்களைக் கொண்டிருந்தன. அதனால் அவை பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருந்தன. ஒவ்வொரு கிராமச் சுற்றுச்சூழல் வளாகமும் நெற்பயிர்ச்செய்கை, மாற்றுப் பயிர்ச்செய்கை, வீட்டுத்தோட்டம், கிராமத்துக்குரிய காடுகள், மீன்பிடித்தல் மற்றும் ஓரளவிற்கு கால்நடை வளர்ப்பு ஆகிய முக்கிய கூறுகளைக் கொண்டிருந்தன.

அந்தக் காலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பிரதான பயிர் நெல். நெற்பயிர்ச் செய்கைக்கு இரண்டு வெவ்வேறு நீர்ப்பாசன முறைகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு வகை பயிர்ச்செய்கையானது தொட்டிப் பாசனத்தை அடிப்படையாகக் கொண்டது. செயற்கையாக கட்டப்பட்ட தொட்டிகளில் மழை நீர் சேகரிக்கப்பட்டது. மழைக்காலம் முடிந்து தண்ணீர் தேவைக்கேற்ப வயல்களுக்கு வாய்க்கால் மூலம் விநியோகிக்கப்பட்டது. சிறிய தொட்டிகள் இடையிடையே நுண்ணிய நீர்ப்பிடிப்புகளுடன் அடுக்கடுக்காக அமைக்கப்பட்டன. அருவியின் மேல் பகுதியில் உள்ள நெல் வயல்களில் இருந்து வரும் வடிகால் கீழே உள்ள நெல் வயலில் மறுபயன்பாட்டிற்காக கீழ்நிலை தொட்டியில் பாய்ந்தது.

நீர்ப்பாசனத்தின் மற்றொரு வடிவமானது, பெரிய ஆறுகளில் இருந்து அகழ்வாய்வுகளை தொலைதூர வயல்களுக்கு அல்லது நீர்த்தேக்கங்களைக் கட்டுவதற்கு ஏற்ற இடங்களுக்கு இழுப்பது. மிகக் குறைந்த சாய்வுகளுடன் நீண்ட கால்வாய்களை அமைப்பதற்கான திறன்கள் குறிப்பிடத்தக்கவை. இன்று அதிநவீனக் கருவிகள் மட்டுமே அதே துல்லியத்துடன் வேலை செய்ய முடியும். அந்த முறையில் கட்டப்பட்ட தொட்டிகள் மற்றும் கால்வாய்கள் விவசாயிகளுக்கு நன்மையை அளித்தது மட்டுமல்லாமல் நிலப்பரப்பின் பன்முகத்தன்மையையும் கட்டமைப்பையும் வளப்படுத்தியது. மீன்கள், பறவைகள் மற்றும் பிற விலங்குகளின் பல்வேறு இனங்கள் தொட்டிகளில் வசித்து வந்தன. விளிம்புகளில் மரங்கள் வளர்க்கப்பட்டு குளிர்ச்சியான சூழல் உருவாக்கப்பட்டது.

இலங்கையர்கள் கால்நடைகளை வளர்த்து, எருதுகளைக் கொண்டு வயல்களை உழுதார்கள். எருமைகள் வயல்களை உழுவதற்கும், நெற் கதிரடிப்பதற்கு மட்டும் பயன்படவில்லை. அவை சமூக அமைப்பின் முக்கிய அங்கமாக அமைகின்றன. அறுவடை செய்த பிறகு, தங்கள் எருமைகள் மற்றும் பிற கால்நடைகளை வயலில் எஞ்சியிருக்கும் நெல் எச்சங்களை உண்ண அனுமதித்தனர். அதே நேரத்தில் அவற்றின் சாணம் ஒரு உரமாக செயல்பட்டது. அதுமட்டுமின்றி, எருமைக் கொட்டகைகளில் தேங்கியிருந்த சாணம் நெல் வயல்களில் அடித்துச் செல்லப்பட்டது. இரவு நேரங்களில் வீட்டுத்தோட்டத்தில் உள்ள மரங்களில் மாடுகளைக் கட்டி வைத்தார்கள். இதன் மூலம் அவற்றின் சாணம், சிறுநீர் ஆகியவை மரங்களின் வினைத்திறனை அதிகரிக்கப் பயன்படுத்தப்பட்டன.



*From John Ferguson, The Abbotsford Album (photographs by W. H. L. Skeen): "Forest Being Felled By Singhalese (Who excel in this operation), preparatory to a good burn in February, and holing and planting in April–August. The 'fellers' hut' hidden in dense shade on the left. Taken November, 1875."*

இயற்கையின் பல்வேறு கூறுகளை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தும் கலை, கொலனித்துவத்திற்கு முந்தைய விவசாயத்தில் மிகவும் வளர்ந்தது. வயலின் உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் சில சமயங்களில் மிகவும் எளிமையானவை. உதாரணமாக குளியல் நீர் மற்றும் பாத்திர நீர் பொதுவாக நெல் வயலுக்குச் சேகரிக்கப்படும். வயல்களின் எல்லையில் இலுப்பை மரங்கள் நடப்பட்டன. இந்த மரத்தின் பழங்களை வவ்வால்கள் உண்ணும்; அவை பழங்கள் பழுத்தவுடன் மரத்தைச் சுற்றிக் கூடுகின்றன. வவ்வால்களின் எச்சத்தில் உள்ள நைட்ரஜன் வயல்களுக்கு உரமானது.

சில நேரங்களில் பசுந்தாள் உரம், சில மரத்தாலான அல்லது மூலிகைச் செடிகளின் இலைகள் பயன்படுத்தப்பட்டன. காய்கறிகளின் இலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. மேலும் தரிசு காலங்களில் கால்நடை மேய்ச்சல், மண் உற்பத்தியை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது. கூடுதலாக உருவாக்கப்பட்ட வேளாண் சுற்றுச்சூழல் அமைப்பு பாம்புகள், சிறிய பாலூட்டிகள் மற்றும் மீன்கள் போன்ற வளமான விலங்கினங்களைப் பராமரித்தது. இது உயிரியல் நிலைத்தன்மைக்கு கணிசமாகப் பங்களித்தது.

பல விவசாயிகளுக்கு நெல் வயல்களில் இருந்து கிடைக்கும் வருமானம் அரை வருடத்திற்கு மேல் நீடிக்கவில்லை. மேலும் அரிசிப் பற்றாக்குறையை ஈடுகட்ட, சேனைப் பயிர்ச்செய்கை மூலம் உலர் தானியப் பயிர்ச்செய்கை பரவலாக மேற்கொள்ளப்பட்டது. இந்த முறையின் கீழ் காய்கறிகள், பயறு வகைத் தாவரங்கள் மற்றும் பல்வேறு வகையான தானியங்கள் பயிரிடப்பட்டன. திட்டமிடப்பட்ட சுழற்சி முறையில் சேனைப் பயிர்ச்செய்கை

*செய்யப்பட்டது. சிறிய புதர்கள் மற்றும் மரங்களை நிலத்திலிருந்து அகற்றிய பிறகு, அது எரிக்கத் தயாராக இருந்தது. இந்த நேரத்தில் மக்கள் வேட்டையாடச் சென்று பழங்களையும் தேனையும் சேகரித்தனர்.*

*விதைப்பதற்கான விதைகள் வீட்டிலேயே தயாரிக்கப்பட்டன: மக்காச்சோளம், தினை, பச்சைப்பயறு, மிளகாய், மிளகு, பாக்கு, பூசணி, மரவள்ளிக்கிழங்கு, இஞ்சி ஆகியன இவற்றில் சில. அதன் பிறகு சிறிய குடிசைகள் கட்டப்பட்டன. பகல் நேரங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பயிர்களை வன விலங்குகளிடம் இருந்து பாதுகாத்துக் கண்காணித்தனர். இரவு நேரங்களில் ஆண்கள் குடிசைகளில் தங்கினர். இந்தக் காலம் மிகவும் உழைப்பு மிகுந்ததாக இருந்தது.*

*மண்ணின் உற்பத்தித்திறன் வேகமாகக் குறைந்து, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தப் பகுதியை விட்டு, வேறு இடத்தில் புதிய காடு எரிக்கப்படுகிறது. காடு மீண்டும் வளர்ச்சியடையலாம். மேலும் நிலத்தின் இருப்பைப் பொறுத்து விவசாயி பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதே நிலத்தில் பயிரிடுவார். மனித மக்கள்தொகை பெருகவில்லை; மற்றும் வன இருப்பு போதுமானதாக இருந்தால் மட்டுமே அவர் அதைச் செய்வார். பயிர்ச்செய்கையின் மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. சூழலியல் நம்பகத்தன்மைக்கு காட்டின் அளவு மற்றும் சுழற்சிக் காலங்களும் முக்கியமானவை. பயிர்ச்செய்கை முறைகள் முற்றிலும் வேறுபட்டவை என்பதை வெவ்வேறு தரவுகள் காட்டுகின்றன. 5 முதல் 25 ஏக்கர் வரையில் சேனைப் பயிர்ச்செய்கைக்கான நிலத்தின் விரிவாக்கங்கள் மற்றும் தரிசு காலங்களை (6 முதல் 15 ஆண்டுகள் வரை சுழற்சிக் காலங்களை) விவரிக்கும் குறிப்புகள் காணக் கிடைக்கிறது.*

*பண்டைய இலங்கையர்களுக்கு நெற்பயிர்ச்செய்கை என்பது வாழ்க்கைத் தொழில்; தோட்டப் பயிர்ச்செய்கை என்பது வளமான இயற்கையின் நல்ல விஷயங்களைப் பெறுவது. குடும்பங்களுக்கு அன்றாடத் தேவைகள் பலவற்றையும் வீட்டுத்தோட்டம் வழங்குகிறது. பல நூற்றாண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட வற்றாத மரங்கள் கிராமவாசிகளின் வாழ்க்கையில் பல நன்மைகளுடன் சேர்ந்தன. தனி வீடுகள் கட்டப்பட்ட சிறிய வளாகத்தைச் சுற்றி மரங்கள் வளர்க்கப்பட்டன. பெரும்பாலான இனங்கள் காட்டு இனப்பெருக்கம் மூலம் முளைக்கின்றன; அவை விவசாயிகளால் நடப்படுவதில்லை. நெல் வயல்கள் மற்றும் சேனைப் பயிர்ச்செய்கைக்குத் தீவிர உழைப்பு தேவைப்படுவதால், வீட்டுத்தோட்டம் தானே வளர வேண்டும். இருப்பினும், அமைப்பை வடிவமைக்க ஒரு சிறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மர இனங்கள் இதற்குள் இணைக்கப்பட்ட விதம் தோட்டங்களுக்குத் தோட்டம் வேறுபட்டது.*

*தாவரங்களின் பன்முகத்தன்மை கொண்ட வெப்பமண்டலப் பகுதிகள் இந்த வீட்டுத் தோட்ட அமைப்புகளை நிறுவுவதற்கு சாதகமானதாக இருந்தது. இதை 'சோம்பேறி விவசாயம்' என்று நகைச்சுவையாக அழைத்தார்கள். நீங்கள் ஒரு விதையை துப்பினால், பெரும்பாலும் ஒரு மரம் வளரும். தோட்டத்தை பராமரிக்க அதிக உழைப்பு தேவையில்லை என்றாலும், பல்வேறு தாவரப் பயன்பாடுகள் மற்றும் தேவைகள் பற்றிய போதிய அறிவு அவசியம். இவ்வறிவு தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டது.*

*மலையுச்சிகளும் மத்திய மலைப்பகுதிகளும் அடர்ந்த காடுகளாக இருந்தன. பாசனத்தின் மீதான தாக்கம் காரணமாக, காடுகள் உற்பத்தி செய்யாத நிலமாக கருதப்படாமல் நீர் மற்றும் வளத்திற்கான ஆதாரமாக கருதப்பட்டது. இக்காடுகளில் இருந்து மருந்துகள், எரிபொருள் மற்றும் சிறு வனப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. உலர் வலயத்தின் மக்கள் செறிவான பகுதிகளில், அக்கிராமங்களுக்கு அருகிலுள்ள காடுகள் அவ்வாறே பேணப்பட்டன. பண்டைய காலத்தில் ஈர மண்டலத்தின் மழைக்காடுகள் பெரும்பாலும் தீண்டப்படாமல் இருந்தன.*

*பண்டைய நீர்வள நாகரிகத்தின் சரிவு 14 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. இந்தியப் படையெடுப்புகள், மலேரியா மற்றும் உள்நாட்டு அரசியல் சிக்கல்கள் ஆகியன இணைந்து மேம்பட்ட விவசாய அமைப்பை அழித்தது. அன்றிலிருந்து பாரம்பரிய முறையான*

**பண்டைய நீர்வள நாகரிகத்தின் சரிவு 14 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. இந்தியப் படையெடுப்புகள், மலேரியா மற்றும் உள்நாட்டு அரசியல் சிக்கல்கள் ஆகியன இணைந்து மேம்பட்ட விவசாய அமைப்பை அழித்தது. அன்றிலிருந்து பாரம்பரிய முறையான கிராமங்கள், குளங்கள் மற்றும் விவசாய நிலங்களை மீண்டும் நிறுவ முடியவில்லை.**

கிராமங்கள், குளங்கள் மற்றும் விவசாய நிலங்களை மீண்டும் நிறுவ முடியவில்லை.

கொலனித்துவத்திற்கு முந்தைய விவசாயம் மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டிருந்தது. முதலாவது முக்கிய கூறு விவசாயத்தின் பன்முகத்தன்மை. ஆண்டு முழுவதும் நிலையான உற்பத்தித்திறனை உத்தரவாதம் செய்யும் கூறுகளுக்கிடையேயான பல்வேறு தொடர்புகள் இருந்தன. இயற்கையான தாவரங்கள் பயிரிடப்பட்ட பகுதியாக மாற்றியமைக்கப்பட்டது. இது இன்னும் அதிக பன்முகத்தன்மை கொண்ட இனங்கள் மற்றும் வாழ்க்கை வடிவங்களை பராமரிக்கிறது. குடும்பத்தால் பயன்படுத்தப்படும் தாவர இனங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்தன. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பல்வேறு தொடர்புகள் பாரம்பரிய அறிவின் ஆழமான அமைப்பாக வளர்ந்தன. உற்பத்தி அமைப்புகளின் பன்முகத்தன்மை, நிலைத்தன்மை மற்றும் குறைந்தபட்ச ஆபத்தையே விளைவிப்பதை உறுதிப்படுத்துவது என்பவை முக்கியமான அம்சங்களாகின. நெல் அறுவடை தோல்வியடையும் போது மாற்றுப் பயிர்ச்செய்கை மற்றும் வீட்டுத்தோட்டம் மூலம் அது ஈடுசெய்யப்படும். பயிர்களின் பன்முகத்தன்மை அமைப்பு பூச்சிகளின் பாதிப்பையும் நோய்த்தொற்றைக் குறைக்கிறது. சுழற்சிச் செயல்முறைகள் பல பயன்பாடுகளை சாத்தியமாக்குகின்றன. பலவிதமான சூழலியல் சார்புநிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

இரண்டாவது கூறு, விவசாயத்தின் மீள்தன்மையும் நிலைத்தன்மையும். உயிரினங்களின் பன்முகத்தன்மை, கட்டமைப்பின் மாறுபாடு மற்றும் கூறுகளுக்கிடையேயான ஆற்றல்மிக்க தொடர்புகள் ஆகியவை மீள்தன்மையுடைய விவசாய - சுற்றுச்சூழல் அமைப்பில் விளைகின்றன. வறட்சி மற்றும் புயல் போன்ற வெளிப்புற அச்சுறுத்தல்களைத் தாங்கும் திறன் அதிகரிக்கிறது. வெப்பமண்டல சூழலுக்கு உணர்திறன் தழுவல், மண் வளத்தை பராமரிக்கிறது. அமைப்பின் பல்வேறு கூறுகளை பலமுறை பயன்படுத்துவதால் விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆபத்து மற்றும் நிலையான உற்பத்தி கிடைக்கும். பல்வேறு உற்பத்தி முறைகள் பூச்சிகள் மற்றும் நோய்களால் ஏற்படும் பிரச்சனைகளைக் குறைக்கின்றன.

மூன்றாவது கூறு, சமூகத்தின் சுற்றுச்சூழல் நெறிமுறைகளாகும். விவசாய நடைமுறைகள் கிராம மக்களிடையே வலுவான ஒற்றுமையைக் கோரின. அனைத்துக் குடும்பங்களின் தலைவர்களைக் கொண்ட கிராம அமைப்பு ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தது. நீர் மற்றும் நில விநியோகம், சமூகப் பணிகள் மற்றும் விவசாய நாட்காட்டி ஆகியன அவ்வமைப்பாலேயே முடிவாகின. உழைப்பு பகிர்வால் மட்டுமே நெல் பயிர்ச்செய்கை செய்ய முடியும். எனவே பயிர்ச்செய்கையை வலுவான சமூக உறவுகளிலிருந்து பிரிக்க முடியாது. கிராம சமூகத்தில் அகிம்சை அல்லது உயிரைப் பறிக்காதிருத்தல் மனிதனுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையே சுரண்டாத உறவை ஊக்குவித்தது. மனிதர்கள் மற்றும் பிற வாழ்க்கை வடிவங்களை வளர்க்கும் ஒரு விவசாய முறையை நிறுவுவது போற்றத்தக்க ஒரு பண்பாட்டுச் செயன்முறையாக இருந்தது.

இவ்விடத்தில் பண்டைய விவசாய முறைகள் குறித்து அகழாய்வுக் குறிப்புகள் என்ன சொல்கின்றன என்பதை நோக்குவது முக்கியமானது. பல சுற்றுச்சூழல் மற்றும் சமூக - கலாச்சார குணாதிசயங்களை இந்திய

தீபகற்பத்துடன் பகிர்ந்து கொண்டாலும், பல வழிகளில், இந்திய தீபகற்பத்தில் இருந்து பிரிந்து செல்லும் தொல்பொருள் மற்றும் வரலாற்றுப் பாதையை இலங்கை கொண்டுள்ளது. இந்தியத் துணைக்கண்டத்தின் பகுதியாக இலங்கையானது பல்வேறு காலகட்டங்களிலும், இந்தியப் பெருங்கடலின் பரந்த கடல்சார் வர்த்தக வலையமைப்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடனான வர்த்தகத்திற்கான நுழைவாயிலாக இலங்கை செயல்பட்டுள்ளதோடு கிழக்கு மற்றும் மத்திய தரைக்கடல் உலகங்களுடன் தொடர்பையும் கொண்டுள்ளது. தொல்பொருள் சான்றுகள் கிமு முதலாம் நூற்றாண்டில் இருந்து கடல் வர்த்தகம் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றன. இதே காலப்பகுதியில் நகர்ப்புற குடியேற்றங்கள், உள்நாட்டு வர்த்தக வலையமைப்புகள் தோன்றின. இலங்கையின் விவசாய, வாழ்வாதார, சுற்றுச்சூழல் தொடர்பில் மிகக்குறைவான அகழ்வாராய்ச்சிகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது பண்டைய இலங்கையின் சுற்றுச்சூழல் சூழல் மற்றும் வாழ்வாதார உத்திகள் ஆகியவிரண்டையும் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலாமைக்குக் காரணமாகியுள்ளன.

இப்பின்புலத்தில் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வை நோக்குவது பொருத்தம். இரண்டு ஆரம்பகால வரலாற்றுத் தளங்களான கிரிந்த மற்றும் கந்தரோடையின் சமீபத்திய அகழ்வாராய்ச்சியிலிருந்து பெறப்பட்ட தொல்பொருள் விதைகள் மற்றும் வரலாற்றுக்கு முந்தைய தாவரப் பயன்பாடும் வளர்ப்பும் (phytolith assemblages) ஆகிய இரண்டையும் சுற்றுச்சூழல் அணுகுமுறையைப் பின்பற்றி ஆய்வு செய்வதன் மூலம் சில முக்கிய விடயங்களைத் தெளிவாக்கலாம்.


இந்த ஆய்வானது, ஆரம்பகால வரலாற்றுக் காலத்தில் இலங்கையின் விவசாய மற்றும் சூழலியல் கடந்த காலத்தைப் பற்றிய புதிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. கந்தரோடை, பிற ஆரம்பகால இலங்கை நகர மையங்களுக்கு இணையான பொருளாதார மற்றும் நகரமயமாக்கப்பட்ட வளர்ச்சியைக் கொண்டுள்ளது. கந்தரோடையின் பைட்டோலித் சான்றுகள் தினை மற்றும் நெற்பயிர்கள் பதப்படுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. இங்கு இவை உற்பத்தி செய்யப்பட்டது மட்டுமன்றி பிற தேவைகளுக்காகப் பதப்படுத்தப்பட்டும் உள்ளன. இச்சான்றுகள் கந்தரோடையில் பாசன அரிசி இருந்ததாகக் கூறுகிறது. அதேசமயம், கிரிந்தவில் நெல் பதப்படுத்தியதற்கான சான்றுகள் உள்ளன. கிரிந்தவில் மானாவாரியில் பயிர்ச்செய்கை இடம்பெற்றிருக்கலாம் என்றும் இவ்வாய்வு கூறுகிறது. இலங்கையின் ஆரம்பகால வரலாற்றுக் காலத்தில், கிரிந்த மற்றும் கந்தரோடை ஆகிய இரண்டிலும் அரிசி, தினைகள் மற்றும் பலவகையிலான பருப்பு வகைகள் பயிரிடப்பட்டதைக் காணமுடிகிறது என்று இவ்வாய்வு சொல்கிறது.

## கொலனிய இலங்கையில் சூழலியல்

14 ஆம் நூற்றாண்டில் உலர் வலயத்தின் கடைசித் தலைநகரான பொலனறுவையின் சிதைவு, அதன் பின்னர் ஒருபோதும் மீளமைக்கப்படாத நீர்ப்பாசன முறையின் சிதைவாகியது.

> **கொலனித்துவத்திற்கு முந்தைய விவசாயம் மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டிருந்தது. முதலாவது முக்கிய கூறு விவசாயத்தின் பன்முகத்தன்மை. ஆண்டு முழுவதும் நிலையான உற்பத்தித்திறனை உத்தரவாதம் செய்யும் கூறுகளுக்கிடையேயான பல்வேறு தொடர்புகள் இருந்தன. இயற்கையான தாவரங்கள் பயிரிடப்பட்ட பகுதியாக மாற்றியமைக்கப்பட்டது.**

நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட பிற நாகரிகங்களும் இதே காலகட்டத்தில் சரிந்தன என்பது வியக்கத்தக்கது. கம்போடியா, வடக்கு தாய்லாந்து மற்றும் போர்னியோவில் உள்ள பாகன் ஆகியவை சில உதாரணங்களாகும். அந்த நாடுகளில் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட மலேரியாவின் பரவல் ஒரு இணையான நிகழ்வாகும். இது நீர்ப்பாசன முறைகளின் அலட்சியத்தால் மோசமாகியது. இந்த பண்டைய கலாசாரங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி ஒரு



From L. E. Douffet, The Ceylon Coffee Album. A Collection of Sixteen Photographs, illustrating the various details of coffee planting in Ceylon (Nuwara Eliya, 1881): Plate VIII. Drying and Cleaning "Parchment Coffee"

சிக்கலான செயல்முறையாகும்.

பாரம்பரிய மற்றும் மிகவும் வளர்ந்த விவசாய முறை ஏற்கனவே சிதைந்த பின்னரே கொலனியாதிக்கம் இலங்கையில் தங்கள் செல்வாக்கை செலுத்தியது என்பதை குறித்துக் கொள்வது முக்கியமானது. நாட்டின் தென்மேற்கு மற்றும் மலைப்பகுதிகளை நோக்கிய நகர்வானது அரசியல் உறுதியற்ற தன்மையையும் பொருளாதார மாற்றத்தையும் கொண்டு வந்தது. விவசாய நடவடிக்கைகளில் சரிவு ஏற்பட்டது. புதிய பொருளாதார திசைகளுக்கான வாய்ப்புகள் உருவாகின.

உதாரணமாக, சிலுவைப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில் வாசனைத் திரவியங்களுக்கான தேவை அதிகரித்ததால், தென்மேற்கு கடற்பகுதியில் உள்ள காடுகளில் செழிப்பாக வளர்ந்த கறுவா, ஏற்றுமதி வர்த்தகத்தில் ஒரு முக்கிய பொருளாக மாறியது. வர்த்தகத்தின் முக்கியத்துவத்தின் ஒரு குறிப்பிடத்தக்க விளைவு வெளிநாட்டு வர்த்தகமும் பணப் பயன்பாட்டின் அதிகரிப்புமாகும். வெளிநாட்டு வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றதால், அரேபியர்கள் கடலோரப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் குடியேறினர்.

1505 இல் போர்த்துகேயர்கள் தற்செயலாக இலங்கையின் மேற்கு கடற்கரையை அடைந்தனர். விரைவில் அவர்கள் கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இலங்கையின் திறனை உணர்ந்தனர். அவர்களின் முக்கிய ஆர்வம் பிராந்தியத்தை வெற்றி கொள்வதல்ல, மாறாக வணிகத்தின் கட்டுப்பாடும் ஏகபோகமுமே. குறிப்பாக கறுவா வர்த்தகத்தை முழுமையாகக் கைப்பற்ற முயன்றனர். இது ஏற்றுமதியை பெருமளவில் கட்டுப்படுத்திய அராபிய வர்த்தகர்களுடனான மோதலைத் தூண்டியது. ஆனால் அவர்களின் கடல்வழி ஆற்றல் மற்றும் அவர்களின் தொழில்நுட்ப மேன்மை காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் போர்த்துகீசிய தலையீடு மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகியன நிரந்தர

அம்சங்களாகின. இந்தச் செல்வாக்கு தென்னிலங்கையில் மட்டுமின்றி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் பரவியது. இதற்கு முத்துக்குளித்தல் முக்கிய காரணமாகும்.

டச்சுக்காரரின் வருகையை அடுத்து 1722 இல் தோட்டப் பயிராக கோப்பி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் உற்பத்தி, ஆரம்பத்தில் மிகவும் குறைவாகவே இருந்தது. கறுவாவின் முதல் தோட்டங்கள் 1769 இல் நிறுவப்பட்டன. 1771 வாக்கில் அவை பொருளாதார ரீதியாக வேலை செய்வதாகத் தோன்றியது. இதன் விளைவாக கரையோரத்தில் ஏனைய தோட்டங்கள் நிறுவப்பட்டன. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட கறுவாவின் உலகளாவிய விநியோகம் தொடங்கியது. கோப்பி, மிளகு மற்றும் ஏலக்காய் ஆகியவை மக்களின் முக்கிய வருமானம் தரும் பயிர்களாக மாறின. டச்சு ஆட்சியின் ஆரம்ப கட்டத்தில், இயற்கை விவசாயம் மற்றும் நெற்பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அந்த நோக்கத்திற்காக நீர்ப்பாசன முறையின் மறுசீரமைப்பு அவசியமாக இருந்தது. ஆனால் இந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இதனால் அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. ஏற்றுமதிக்கான பொருட்களை விரைவாக போக்குவரத்துச் செய்வதற்காக ஒல்லாந்தர் கால்வாய்களை அமைத்தார்கள். உண்மையில் கால்வாய் கட்டுமானத்தில் டச்சுக்காரர்களின் கணிசமான சாதனை நீர்ப்பாசனத்தில் அவர்களின் பணியை முற்றிலுமாக மறைத்தது. மேலும் இந்த கால்வாய்கள் தீவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளில் ஒன்றாகும். ஆனால் இவை ஏற்படுத்திய சூழலியல் பாதிப்பு பெரிது.

1850-1870 இற்கு இடையில் ஐரோப்பாவில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தது. இதற்காக இலங்கையில் கோப்பிப் பயிர்ச்செய்கை அதிகரித்தது. காடுகள் அழிக்கப்பட்டு, தரிசுநிலங்கள் பதப்படுத்தப்பட்டு எல்லா இடங்களிலும் கோப்பி பயிரிடப்பட்டது. இந்த 'கோப்பி வெறி' திடீரென முடிவுக்கு வந்தது. ஒரு பூஞ்சையின் காரணமாக முழு உற்பத்தியும் சரிந்தது. ஏக்கர் கணக்கில் நோயுற்ற கோப்பி மரங்கள், காடுகள் அழிக்கப்பட்ட மலைகள், பண்டைய விவசாயத்தில் இருந்து திசை திருப்பப்பட்ட விவசாயிகள் ஆகியன எஞ்சின. இவை ஏற்படுத்திய சூழலியல் தாக்கம் மிகப்பெரியது.

1881 இல் கோப்பிக்கு பதிலாக தேயிலை அறிமுகப்படுத்தபட்டது. தேயிலைக்கு அதிக உழைப்பும் மூலதனமும் தேவைப்பட்டது. தேயிலையை உயரமான பகுதிகளில் பயிரிட வேண்டி இருந்தது. மிகவிரைவில் முந்தைய சேனைப் பயிர்ச்செய்கைப் பகுதிகள் தேயிலைத் தோட்டங்களாக மாற்றப்பட்டன. தோட்டப் பகுதிகள் உயரமான பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டன. மேலும் நீண்ட காலமாக தீண்டப்படாமல் இருந்த காடுகள் தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டன. தேயிலைச் செடியின் தட்பவெப்பத் தேவைகள் காரணமாக தென்மேற்கு சமவெளி மற்றும் மத்திய மலைப்பகுதிகளில் தேயிலை பயிரிடப்பட்டது.

இக்காலப்பகுதியில் தென்னைப் பயிர்ச்செய்கையும் பரவலானது. தென்னந்தோப்புகள் சிறு உடமையாளர்களின் உள்ளூர் நிறுவனங்களாகவே இருந்தன. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இறப்பர் அறிமுகப்படுத்தப்பட்டது. இறப்பர் உற்பத்திக்கு கோப்பி அல்லது தேயிலை பயிரப்பட்ட நிலங்களை விட உயரம் குறைந்த நிலங்களே தேவைப்பட்டன. அந்நிலங்கள் தென்னை பயிர்செய்யும் நிலங்களை விட உயரமானவையாகவும் இருக்க வேண்டியிருந்தது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையின் நிலப்பரப்பின் பொதுவான அம்சங்கள் முற்றிலும் மாறிவிட்டன. கடல் மட்டத்தில் இருந்து 300 மீட்டர் வரையிலும் தென்னந்தோப்புகளும், 800 மீட்டர்

*இலங்கையின் சூழலியல் வரலாறு சில முக்கியமான செய்திகளை எமக்குச் சொல்கிறது. பண்டைய இலங்கையின் வாழ்வியலானது இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. அது விவசாயத்தை மையமாகக் கொண்டிருந்தது. மிகை உற்பத்தியோ அதீத பேராசையோ அற்றதாக இருந்தது. இயற்கையின் மீது கரிசனையுடையதாக இருந்தது.*

வரையிலான பகுதிகளில் இறப்பரும் பயிரிடப்பட்டன. தேயிலை 300 மீட்டர் முதல் 2200 மீட்டர் வரையிலான உயரத்தைக் கொண்ட பகுதிகளில் பயிரிடப்பட்டன. மலை உச்சிகளும் மலைப் பகுதிகளும் வனத் தோட்டங்களாக மாற்றப்பட்டன. இது மரம் மற்றும் எரிபொருள் தேவையை ஈடுசெய்யும் பொருட்டு 1890 இல் தொடங்கப்பட்டது. அதற்காக வேகமாக வளரும் மரங்களான யூகலிப்டஸ், பைன்ஸ் மற்றும் அகாசியாஸ் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன. மொத்தத்தில் மலைநாட்டின் சூழலியலும் உயிர்ப்பல்வகைமையும் காவுகொடுக்கப்பட்டது.

மத்திய மலைநாட்டின் இயற்கையான வனப்பரப்பு விரைவாகவும் என்றென்றைக்குமானதாகக் குறைந்தது. இது காலநிலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. மழை குறைந்து ஓடைகள் வறண்டுவிட்டன. மலைக்காடுகளில் முன்னர் காணப்பட்ட யானைகளின் பெரிய கூட்டங்கள் படுகொலை செய்யப்பட்டு காணாமல் போயின. பல காட்டுத் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் விரைவான இழப்பு தொடர்ந்தது. பாரம்பரிய விவசாயம் புறக்கணிக்கப்பட்டு, அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. மலைப்பகுதிகளில் இருந்த பெரிய நிலப்பகுதிகள், மேல் மண்ணை இழக்கத் தொடங்கின. இதனால் வளமற்றவையாகி, தீயால் நிர்வகிக்கப்படும் புல் நிலங்களாக மாறத் தொடங்கின. கொலனித்துவ காலத்தின் முடிவில் நிலச் சீரழிவுகளின் படிப்பினைகள் கற்றுக் கொள்ளப்பட்டன. மேலும் நிலப்பரப்புகள், சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மையின் சில கூறுகளையாவது தக்க வைத்துக் கொள்ள முடிந்தது. ஆனால் அழிக்கப்பட்ட உயிர்ப்பல்வகைமையைத் மீட்டெடுக்க முடியவில்லை.

குறிப்பாக தேயிலைப் பயிர்ச்செய்கையால் பாதிக்கப்பட்டது இலங்கையின் மழைக்காடுகளே. 1881 இல் இலங்கையில் தேயிலை அறிமுகப்படுத்தப்பட்ட போது 84 வீதமான பகுதி அடர் காடுகளாக இருந்தது. 20 ஆண்டுகளில் இது 70 வீதமாகக் குறைவடைந்தது. இக்காலப்பகுதியில் அழிக்கப்பட்ட காடுகளில் பெரும்பான்மையானவை மழைக்காடுகளே.

இலங்கையில் மழைக்காடுகளின் வாழ்விட இழப்பு இந்நாட்டின் பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. அதன் தனித்துவமான புவியியல் இருப்பிடம் மற்றும் வளமான பல்லுயிர்த்தன்மையுடன், இலங்கையின் மழைக்காடுகள் 3,000 இற்கும் மேற்பட்ட பூக்கும் தாவரங்களுக்கு தாயகமாக உள்ளன.

ஏராளமான உள்ளூர் மற்றும் அழிந்து வரும் உயிரினங்களின் வாழ்விடமாக இவை உள்ளன. ஆபத்தான காடழிப்பு இந்த விலைமதிப்பற்ற உயிரினங்களுக்கும் அவற்றின் நுட்பமான சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. ஆபத்தில் உள்ள உயிரினமாகக் கருதப்படும் ‘இலங்கை சிறுத்தை’, பரவலாக மழைக்காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் வாழ்விட இழப்பு காரணமாக பாதிப்புக்குள்ளாகிறது. அதேபோல ஊதா நிற முகம் கொண்ட லாங்கூர், பாதிக்கப்படக்கூடிய மற்றொரு உயிரினம். இவை இரண்டும் இலங்கையின் மழைக்காடுகளில் பிரத்தியேகமாக காணப்படுகின்றன. மழைக்காடுகளின் அழிவு பிரித்தானியக்

கொலனியாதிக்க காலத்திலேயே தொடங்கியது.

## நிறைவுக் குறிப்புகள்

இலங்கையின் சூழலியல் வரலாறு சில முக்கியமான செய்திகளை எமக்குச் சொல்கிறது. பண்டைய இலங்கையின் வாழ்வியலானது இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. அது விவசாயத்தை மையமாகக் கொண்டிருந்தது. மிகை உற்பத்தியோ அதீத பேராசையோ அற்றதாக இருந்தது. இயற்கையின் மீது கரிசனையுடையதாக இருந்தது. பேண்தகைமை விவசாயத்தினதும் வாழ்வியலியனதும் மையமாக இருந்தது. கொலனியாதிக்கத்தின் வருகை இலங்கையின் இயற்கையில் மட்டுமன்றி உற்பத்தி உறவுகளிலும் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணியது. இது இயற்கையின் மீதான கவனத்திலும் பார்க்க பொருளாதார நலன் சார் அபிவிருத்தியிலேயே கவனம் குவித்தது.

பிரித்தானியக் கொலனியாதிக்கச் செயற்பாடுகள் 'அபிவிருத்தி' என்ற சட்டகத்துக்குள் முன்னேற்றமாகக் கருதப்பட்டன. அவை சீரழித்த இயற்கை பற்றியோ அல்லது உயிர்ப்பல்வகைமையின் இழப்பு பற்றியோ எதுவித கவனமும் கொள்ளப்படவில்லை. இது ஆச்சரியமானதல்ல. ஏனெனில் கொலனியாதிக்கச் சிந்தனைகள் இவ்வாறுதான் மூன்றாமுலக நாடுகளின் வளர்ச்சியை அடையாளங் காண்கின்றன. இலங்கையும் இதற்கு விதிவிலக்காகவில்லை. துன்பம் யாதெனில் கொலனியாதிக்க காலத்தில் இழந்த இயற்கையையும் உயிர்ப்பல்வகைமையையும் மீட்கப் போதுமான நடவடிக்கைகள் கொலனியாதிக்கத்துக்குப் பிந்தைய இலங்கை எடுக்கவில்லை. இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் நாட்டின் இயற்கைக்கோ சூழலியலுக்கு கிடைத்த சுதந்திரமாக இருக்கவில்லை.

**உசாத்துணை**


1. https://news.mongabay.com/2023/01/updatedred listraisesredflagsforsrilankasbirdsespecially
2. https://www.nationalredlist.org/
3. http://www.neic.cea.lk/assets/img/The%20National%20Red%20List%202020The%20Conservation%20Status%20of%20the%20Flora%20of%20Sri%20Lanka.pdf
4. https://lk.chmcbd.net/ecosystems/inlandwetlands
5. https://news.mongabay.com/2022/06/report sumsupwealthofsrilankasbiodiversityandthethreatsit faces/
6. Palm, O. (1988) Traditional Lowland Rice Agricul ture in Sri Lanka: Nitrogen Cycling and Options for Biofertilizers. Linköping Studies in Arts and Science.
7. Ryan, B. (1958) Sinhalese Village. Florida: Universi ty of Miami Press.
8. Hausherr, K. (1971) Landscape ecological research on the island Ceylon. Germany: Wiesbaden Steiner.
9. Murphy et al. (2018) Early agriculture in Sri Lanka: New Archaeobotanical analyses and radiocarbon dates from the early historic sites of Kirinda and Kantharodai. Archaeological Research in Asia. 16: 88102.
10. Marby, H. (1972) Tea in Ceylon: An Attempt at a Regional and Temporal Differentiation of the Tea growing Areas in Ceylon. Gernamy: Wiesbaden Steiner.
11. Webb, J. L.A. (2002) Tropical Pioneers: Human Agency and Ecological Change in the Highlands of Sri Lanka. 18001900. Athens: Ohio University Press.
12. https://waronwant.org/newsanalysis/teatradetrou blesrilankascrucialrainforests
13. https://groundviews.org/2023/08/01/sav ingtheleopardfromslippingintoextinction/
14. https://neprimateconservancy.org/purplefacedlan gur/, https://www.dilmahconservation.org/aboutani mals/mammals-f9925cffabdd604dfab150bbcb 49f2a8/ purplefacedlangur-4d3d8e2f9ff0f 0b28e8715756f4da56f.html


(தொடரும்)

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக ‘தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்’ என்ற இத்தொடர் அமைகிறது.



● நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் ‘திருக்குறளின் கல்விச்சிந்தனை’ எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ‘பாரதியின் மெய்ஞ்ஞானம்’, ‘இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்’, ‘பின்நவீனத்துவமும் அழகியலும்’, ‘கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்’, ‘இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்’, ‘சாதியமும் சமூக மாற்றங்களும்’, ‘இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்’, ‘சாதி தேசம் பண்பாடு’ என்பன குறிப்பிடத்தக்கவை.

# சாதியத் தகர்ப்புக் கருத்தியல்கள்



கங்கைகொண்ட சோழபுரம்

Image source - ta.wikipedia.org


தமிழ் மக்களாக இயங்கும் எமது வாழ்வியலில் அடித்தளமாக அமைந்து தாக்கம் செலுத்தி வருகின்ற பணபாட்டுக் கோலங்களின் தொடக்கம் - மாற்றங்கள் - விருத்திகள் என்பவற்றை இந்தத் தொடரில் பார்த்து வருகின்றோம். ஏற்பட்டிருக்கும் ஒரு முடிச்சு அவிழ்க்கப்பட வேண்டுமாயின் அதன் தொடக்கம் - ஊடுபாவு - முடிவிடம் என்பவை கண்டறியப்படுதல் அவசியம். ஒன்றுக்கு மேற்பட்ட முடிச்சுகள் உள்ள நிலையில் அடிப்படையான மூலத்தை அவிழ்ப்பதனூடாக ஏனையவற்றையும் மீட்டெடுக்கும் இலகு வழியைக் கண்டடைவோம். எமக்கான சமூக இருப்பில் சாதி, வர்க்கம், இனத்தேசியம், பாலினப்பேதம், பிரதேசவாதம் எனப் பன்முகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடிக் கண்டடைய வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் ஏற்றத்தாழ்வான வாழ்வியல்

**இத்தாலி நாட்டின் மார்க்சியரான கிராம்ஷி, ஒக்ரோபர் புரட்சி வாயிலாக சோவியத் யூனியன் உருவாக இயலுமாக இருந்த வரலாற்றுப் பின்னணியை விளக்கி உள்ளார். ஜனநாயக மறுப்புடன் இயங்கிய ஜாரிஸ ருஷ்யாவின் வன்முறை ரீதியிலான ஒடுக்குமுறைக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி அங்கே ஏற்பட இயலுமாயிற்று.**

*முறைமையின் விளைவுகள். எமக்கிடையேயான பேதங்களைக் களைந்தெறிந்து சமத்துவ வாழ்வியல் எட்டப்படும்போது சாதி, மத, பாலின, பிரதேச வேறுபடுத்தல்கள் யாவும் அற்றுப்போகும் என்ற புரிதலுடனான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இன்றைய பொருளுற்பத்தி - விநியோக முறைமை என்பவற்றில் நிலவும் வர்க்க பேதம் அகற்றப்படுதலே அனைத்து ஏற்றத்தாழ்வுகளையும் தகர்க்கும் வழியெனத் தீர்மானிக்கப்பட்டு நடாத்தப்பட்ட போராட்டங்கள் சென்ற நூற்றாண்டின் எழுபதாம் ஆண்டுகள் வரை முன்னிலைக்கு உரியனவாக இருந்தன. எண்பதாம் ஆண்டுகளின் பிற்கூறில் இருந்து அந்த வரலாற்றுப் போக்குத் திசைமாறி சாதிகள், இனத்தேசியங்கள், பாலினப் பேதங்கள், பிரதேசங்கள் போன்றவற்றிடையேயான மோதல்கள் மேலோங்கிவிட்டன. வர்க்க முரண்கள் முனைமழுங்கிப் போயின. சென்ற நூற்றாண்டின் இறுதி இரண்டு தசாப்தங்களாக இயங்கத் தொடங்கிய அடையாள அரசியலின் முன்னெடுப்புகள் எத்தகைய தீர்வுகளையும் எட்டாத சூழலில் திணை அரசியலுக்கான தேடல் முனைப்புற்று வருகின்றது!*

*வர்க்கங்களாகப் பேதப்பட்டு மட்டும் தான் பொருளுற்பத்தி - விநியோக முறைமை இயங்கி வந்துள்ளதா? இனத்தேசியங்கள் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதாக உள்ள இன்றைய உலக நாடுகளுக்கான நிலவரத்தை வர்க்க அரசியல் சார்ந்த எழுச்சிகளால் தடுக்க இயலாமல் போனது ஏன்? எழுபது வருடங்களுக்கு மேலாக சோசலிச முன்னெடுப்பை மேற்கொண்ட சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் தகர்ந்ததும் அதனுள் இயங்கிய குடியரசுகள் ஒன்றுடனொன்று யுத்தம் புரிந்ததும் - அதன் உச்சமாக அவற்றுள் இயங்கிய இரு பெரும் குடியரசுகளான ருஷ்யாவும் உக்ரேனும் இன்னமும் மோதிக்கொண்டு இருப்பதும் ஏன்? பிராமண மேலாதிக்கம், வெள்ளாளியம், தலித்தியம் என வர்க்கங்களின் ஒன்றிணைவான முழுச் சமூக சக்திகளே இன்றைய பேசுபொருளாக மேற்கிளம்பி வந்திருப்பது எதனால்?*



**கிராம்ஷி**

**Image source - socialistaction.ca**

*கூர்மையான வர்க்கப் போராட்ட முனைப்பு ஐரோப்பிய நாடுகளைத் தொடர்ந்து வரலாறு படைக்க உந்திக்கொண்டு இருந்த கொதிநிலையின் உச்சக் கட்டத்தில் 1917 ஒக்ரோபர் புரட்சி சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை உருவாக்கி இருந்தது. அதன் பின்னர் ஐரோப்பாவில் சோசலிசத்தை வென்றெடுப்பதற்கான புரட்சிகள் ஏன் எழவில்லை என்பதற்கான தேடல்கள் பல தளங்களில் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் இத்தாலிய மார்க்சியரான கிராம்ஷியின் கருத்து நிலை பின்னர் உலகளவிலான கவனத்தை ஈர்ப்பதாக அமையலாயிற்று. அத்தகைய ஈடுபாட்டுடன் 1985 ஆம் ஆண்டு நியூட்டன் குணசிங்க ஆற்றிய*




“கிராமஷியின் சிந்தனைகள்” எனும் தலைப்பிலான உரை வர்க்கப் புரட்சி எதிர்நோக்கிய இடர்ப்பாடுகளுக்கான அடிப்படைகளைப் புரிந்துகொள்ள வழிசமைப்பதாக அமைந்து இருந்தது. சட்டத்தரணி சி. கனகசிங்கம் தமிழாக்கம் செய்து வழங்கியுள்ள நியூட்டன் குணசிங்கவின் வெளிப்பாட்டின் ஊடாக இவ்விடயத்தைக் கிரகிக்க வாய்ப்பு கிட்டியுள்ளது (நியூட்டன் குணசிங்க, “அந்தோனியோ கிராம்ஷி: ஒரு சுருக்க அறிமுகம்” . தமிழாக்கம்: சட்டத்தரணி சி. கனகசிங்கம் LLB, குமரன் புத்தக இல்லம், கொழும்புசென்னை. 2024).

இத்தாலி நாட்டின் மார்க்சியரான கிராம்ஷி, ஒக்ரோபர் புரட்சி வாயிலாக சோவியத் யூனியன் உருவாக இயலுமாக இருந்த வரலாற்றுப் பின்னணியை விளக்கி உள்ளார். ஜனநாயக மறுப்புடன் இயங்கிய ஜாரிஸ ருஷ்யாவின் வன்முறை ரீதியிலான ஒடுக்குமுறைக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி அங்கே ஏற்பட இயலுமாயிற்று. ருஷ்ய ஆட்சியாளரது கருத்தியலை மேவிப் பாட்டாளி வர்க்கக் கருத்தியல் மேலாண்மை பெற வாய்ப்பு இருந்தது. பலாத்கார ஒடுக்குமுறையைக் காட்டிலும் கருத்தியல் மேலாண்மை வாயிலாக (மக்களது ஒப்புதலுடன்) சுரண்டலை மேற்கொள்ள ஏற்றதான ஜனநாயக அரசுகளை ஏற்படுத்தியவாறு இயங்கிய மேற்கு ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி இலகுவானதாக இருக்கவில்லை. ஆளும் தரப்பாரது கருத்தியல் மேலாண்மை வலுவுடனுள்ள மேற்கு ஐரோப்பாவில் முன்னெடுக்கப்பட வேண்டிய மாற்று வழிகளை கிராம்ஷி முன்வைக்கிறார் என்பதனை நியூட்டன் குணசிங்க மேற்படி நூல் வாயிலாக எடுத்துரைக்கிறார். கத்தோலிக்க மதக் கருத்தியலின் குவிமையமாகத் திகழ்ந்த இத்தாலி மேலும் சிறப்புக் கூறுகள் சிலவற்றைக் கொண்டிருந்தது. கைத்தொழில் விருத்தியுடன் முன்னேறி இருந்த வடக்கு இத்தாலி பின்தங்கிய விவசாய வாழ்முறைக்கு உரிய தெற்கு இத்தாலியை ஒடுக்கிச் சுரண்டுவதாக அமைந்துள்ள தனிப் பண்பு குறித்து கிராம்ஷி வெளிப்படுத்திய கூர்நோக்கு கவனிப்புக்கு உரியது. வடக்கின் முதலாளிகளுக்கு எதிராக மட்டுமன்றி அங்குள்ள பாட்டாளி வர்க்கத்துக்கும் விரோதமாகத் தங்களால் ஒடுக்கிச் சுரண்டப்படும் விவசாயப் பெருந்திரளினரை மாற்றிப் பிரதேசவாத அடிப்படையில் ஒன்றிணைத்தவாறு தெற்கு இத்தாலியின் நிலப்பிரபுக்களால் இயங்க இயலுமாகி உள்ளது. எதிர் நிலைக்கு உரிய ‘நிலப்பிரபுக்கள் - பண்ணையடிமை விவசாயிகள்’ எனுமிரு தரப்பாரும் புறநிலைக் காரணிகள் ஏற்படுத்திய வாய்ப்புடன்

இணக்கப்பாட்டுக்கு உள்ளாகிய காரணத்தால், ஒன்றிணைய வேண்டியவர்களான தொழிலாளர் - விவசாயிகள் இடையேயான ஐக்கியம் ஏற்பட இயலாமலாகி உள்ளது என்பதனைக் கிராம்ஷி கவனத்தில் எடுத்துள்ளார்.

"விவசாயிகளையும் நில உடமையாளர்களையும் உள்ளடக்கிய பிராந்திய அடிப்படையிலான விவசாயிகள் கூட்டு இருக்கும் வரையில் கிராம்ஷி வரலாற்றுக் கூட்டு (Historical Block) என விபரித்து எதிர்பார்த்திருந்த தொழிலாளர், விவசாயிகள் கூட்டு உருவாகுவதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. தொழிலாளர், விவசாயிகள் கூட்டு இன்றிப் புரட்சியின் வெற்றியை உறுதி செய்ய முடியாது. இதன் பிரகாரம் அரசியல் ரீதியில் நோக்கும்போது புரட்சிக்கு இருந்த முக்கிய தடை இந்த விவசாயிகள் கூட்டேயாகும். இதன்படி பார்த்தால் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் வர்க்கக் குழுவான கைத்தொழில் செல்வந்த வர்க்கத்தின் தேவைகளை விவசாயிகள் கூட்டு பூர்த்தி செய்து நின்றது எனலாம். விவசாயிகள் கூட்டு என்பது தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பிரித்து அவர்களை இருவேறு அணிகளில் வைத்திருக்கும் பணியையே செய்தது. வடக்கின் செல்வச் செழிப்புப் பற்றியும் வடக்கு தெற்கைச் சுரண்டுகிறது எனவும் உரத்துக் குரல் எழுப்பும் அளவிற்குத் தெற்கின் நில உடமையாளர் விவசாய மக்கள் மீது செலுத்திய செல்வாக்கும் சுமத்திய தலைமையும் உறுதி கண்டிருந்தது. இதனால் தொழிலாளர், விவசாயிகள் கூட்டு உருவாகுவதற்குத் தடை ஏற்பட்டது" (நியூட்டன் குணசிங்க, பக். 3435) என வரலாற்று மாற்றப் போக்குக் குறித்து வெளிப்படுத்திய அவதானிப்புக் கவனிப்புக்கு உரியது!

கிராம்ஷி போன்ற அர்ப்பணிப்புமிக்க பல மார்க்சியர்கள் முன்னெடுத்த எத்தகைய மாற்று வழிகள் ஊடாகவும் பாட்டாளி வர்க்கத் தலைமையில் 'வரலாற்றுக் கூட்டு' எதுவும் மேற்கில் ஏற்படவுமில்லை; முன்னேறிய முதலாளித்துவ அமைப்பைச் சோசலிசத்துக்கு உரிய அடுத்த கட்டம் நோக்கி மாற்ற இயலவுமில்லை. புரட்சியின் கோரிக்கை ஒடுக்கப்பட்ட தேசங்களின் பால் திரும்பி இருந்தது. 'ஒடுக்கப்பட்ட தேசங்கள்' எனும் திணைகளுக்குள் இயங்கும் பல வர்க்கங்களது 'வரலாற்று கூட்டு' (கிராம்ஷி முன்னுணர்ந்திருக்க இயலாத முதலாளி வர்க்கத்தையும் ஐக்கியப்படுத்தியவாறு) முன்னெடுத்த புரட்சிகள் வாயிலாகவே சோசலிசம் வெற்றிகொள்ளப்பட்ட சீனா, வட கொரியா, கியூபா, வியட்னாம் போன்ற தேசங்களின் அனுபவம் கிராம்ஷியின் மறைவுக்குப் பின்னர் அரங்கேறி இருந்தது. முன்னேறிய முதலாளித்துவத்துக்கு உரிய மேற்கு நாடுகளே சோசலிசத்தின் தொட்டில் எனும் நம்பிக்கையை வரலாறு பொய்ப்பித்து விட்டது!

## பெருந்தெய்வமும் சமத்துவக் கடவுளர்களும்

கூர்மையடைந்த வர்க்க முரண்பாடு முழுமைப்பட்டு இருக்கவில்லை என்பதோடு அரசியந்திர ஒடுக்குமுறையை விடவும் பண்பாட்டுக் கருவி கொண்டு சுரண்டலைத் தொடரும் வாய்ப்பை அதிகம் உடையதாக இருந்த இத்தாலியில் 'பாட்டாளி வர்க்கக் கருத்தியல் மேலாண்மையை' சாத்தியப்படுத்தும் வழிமுறைகள், அதன் வாயிலாக இத்தாலியப் புரட்சியை எவ்வகையில் நிதர்சனமாக்கலாம் என்ற தேடலில் கிராம்ஷி புதிய சிந்தனை எல்லைகளைத் தொட்டிருந்தார். மார்க்சியச் சிந்தனையில் அது விருத்திக்கு உரியதேயாயினும், அந்த வட்டத்துக்குள்ளேயே சிறைப்பட்டுப் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தேடிக்கொண்டு இருப்பதை விடுத்து இன்றைய கால, தேச நிலைமைக்கான வளர்ச்சியை நோக்கி முன்னேறுவது அவசியம். கருத்தியல் ஒடுக்குமுறை பிரதான வடிவத்தைப் பெறாதிருந்த ருஷ்யாவில் புரட்சி சாத்தியப்பட்டது எனும் வேறுபட்ட குணாம்சத்தைக் கூறியிருப்பதை வைத்து சோவியத் புரட்சி மிக இலகுவாக வெற்றிகொள்ளப்பட்டதாக கிராம்ஷி கருதியதாகப் பொருள்கொள்ள வேண்டியதில்லை.

புரட்சிக் கனி முதிர்ச்சியடைந்ததும் லெனின் தலைமை சுலபமாக அதனைத் தட்டிப்பறித்து எடுத்திருக்கவில்லை. மார்க்சின் கருத்து நிலையைக் கடந்து தனியொரு நாட்டில் சோசலிசத்தை வெற்றிகொள்ள இயலும் என்ற மாற்றத்தை ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய அணியினர் ஏற்க வைக்கப்படுவதற்கு மிக உக்கிரமான கருத்தியல் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி இருந்தது. ஒக்ரோபர்

புரட்சியில் லெனினுடன் இணைத்துப் பேசப்பட்டவரான ட்ரொட்ஸ்கி இந்தக் கோட்பாட்டை இறுதி வரை நிராகரித்து, மார்க்சிடம் நிலவியது போல உலகப் புரட்சி ஒரேயடியாக ஏற்பட வகைசெய்யக் கூடியதான நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் மீதே தனது நம்பிக்கையை வெளிப்படுத்தி வந்தார். கால மாற்றத்துடன், பாட்டாளி வர்க்கம் மட்டுமன்றி ஒடுக்கப்பட்ட தேசங்களும் ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியம் உணரப்பட்டு லெனினால் முன்வைக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு மிகுந்த கவனிப்புக்கு உரியது. ரோஸா லக்ஷம்பேர்க் போன்ற உறுதிமிக்க மார்க்சியர்கள் ‘பாட்டாளி வர்க்கத்தை ஒடுக்கும் - ஒடுக்கப்படும் தேசங்களின் பேரால் பிளவுபடுத்தும் தவறான கோட்பாடு, சுயநிர்ணய உரிமை’ என வாதிட்டு நிராகரித்த போதிலும் அதன் பிரயோகம் காரணமாகவே சோவியத் புரட்சியை வெற்றிகொண்டு தொடர்ந்து முன்னெடுக்க இயலுமாக இருந்தது.

மிகச் சிறிய அமைப்பேயாயினும் சமூக மாற்றப் புரட்சிக்கான செயற்பாடுகளை முழு நேரப் பணியாகக் கொண்டு இயங்கும் கட்சியொன்று சரியான கோட்பாடு, ஸ்தாபனக் கட்டுக்கோப்பு, உறுதிமிக்க தலைமைத்துவம் என்பவற்றுடன் களமாடும் பட்சத்தில் புரட்சிகரச் சூழல் கனிந்ததும் மக்கள் விடுதலையை நோக்கியதாக அதனை வளர்த்தெடுக்க இயலும். எவ்வளவு பிரமாண்டமான புரட்சிகரக் கட்சியாக இருந்த போதிலும் காலப் பொருத்தமற்ற கோட்பாட்டுடன், ஸ்தாபனக் கூட்டுணர்வில்லாமல், உறுதிமிக்க தலைமைத்துவ வழிகாட்டலை வழங்கத்தவறியபடி வாய்வேதாந்தம் பேசுகிறவர்கள் புரட்சிகரச் சூழலைக் கைநழுவிப்போக இடமளித்து எதிரிக்கே வாய்ப்பை வழங்குவர் என்பதனை லெனின் முன்னதாகவே வலியுறுத்தி இருந்தார். அதன் காரணமாகவே மார்க்சியத்தைப் புதிய காலகட்டத்துக்கும் ருஷ்யப் புறச் சூழலுக்கும் அமைவாக விருத்தி செய்து லெனினிசமாகப் பரிணமித்த வடிவில் பிரயோகித்ததன் வாயிலாக உலகின் முதல் சோசலிச நாட்டை உருவாக்க இயலுமாயிற்று!



**லெனின்**

Image source - sco.wikipedia.org

கிராம்ஷி ‘வரலாற்று கூட்டு’ பற்றி வெளிப்படுத்திய கருத்து நிலை சீனப் புரட்சியில் இயல்பாக வந்தமைந்தது. பாட்டாளி வர்க்கத் தலைமையில், பாட்டாளி வர்க்க அரசொன்றை வென்றெடுப்பதற்காக ஏற்படும் கூட்டு பற்றி அவர் அக்கறைப்பட்டதற்கு மாறாக சீன அனுபவம் அமைந்திருந்தது. விடுதலைத் தேசியப் புரட்சி ஊடாக சமூக மாற்றத்தைச் சாதிக்கும் குறிக்கோளைக் கொண்ட ‘மக்கள் அரசு’ ஏற்படுத்தப்படுவதற்கானது சீனப் புரட்சி. விவசாய மக்கள் திரளின் போராட்ட முன்னெடுப்பில் பாட்டாளி வர்க்கச் சிந்தனையான மார்க்சிஸ - லெனினிஸம் கையேற்கப்பட்டு பிரயோகிக்கப்படும் பண்பு ரீதியிலான மாற்றத்தை மாஓ சேதுங் சிந்தனை சாதித்திருந்தது. பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டம் சீனப் புரட்சியால்

*கையேற்கப்பட்ட போதிலும் 'பாட்டாளி வர்க்கச் சிந்தனை மேலாண்மை' வென்றெடுக்கப்படுவதற்காக அல்லாமல் விவசாய நலனுக்கு முன்னுரிமை வழங்கும் 'விடுதலைத் தேசியச் சிந்தனை முறைமை' மாஓ சேதுங் சிந்தனை வாயிலாக எட்டப்பட்டது. முதலாளித்துவ மாற்றியமைத்தல் 1953 ஆம் ஆண்டுடன் நிறைவாகி விட்டதாக மக்கள் சீனம் கருதி 'பாட்டாளி வர்க்கச் சிந்தனை மேலாண்மைக்கு' இடமளிக்க முற்பட்ட போது சீனப் புரட்சி பெரும் இடர்பாட்டை (கலாசாரப் புரட்சிக் காலகட்டத்தில், 1966-1976) எதிர்நோக்க நேர்ந்தது. வரலாற்று மாற்றப்போக்கின் நிர்ப்பந்தத்தை மனங்கொண்டு வரலாற்று கூட்டுக்கு உரியதாக மீண்டும் முதலாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்திய பின்னரே சோசலிச முன்னெடுப்பை மக்கள் சீனத்தால் ஆளுமையுடன் தொடர இயலுமாயிற்று (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை 'கலாசாரப் புரட்சி' காலகட்டத்தில் மாஓ சேதுங் ஏற்றுக்கொண்ட போதிலும் 'பாட்டாளி வர்க்கச் சிந்தனை மேலாண்மைக்கு' ஆட்பட்டார் எனக் கூற இயலாது. 1953 இல் "சோவியத் சோசலிசப் பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" பற்றிய ஸ்டாலின் முன்வைத்த கருத்துகளை விமரிசித்தபோது, விவசாயி வர்க்கத்தின் மீது பாட்டாளி வர்க்கத்தின் மேலாண்மையை ஏற்க மறுத்து மாஓ கண்டித்தார் என்பது கவனிப்புக்கு உரியது).*

*பூரண வர்க்கப் பிளவடைந்த ஐரோப்பியச் சமூகச் சூழலில் ஒடுக்கப்பட்ட தேசம் ஒன்றுக்கான விடுதலையில் பங்கேற்கும் 'அனைத்து வர்க்கங்களையும் ஐக்கியப்படுத்தும்' அவசியத்தைப் புரிந்து கொள்வது சிரமமான ஒன்றுதான். தனியொரு வர்க்க மேலாண்மையை வலியுறுத்தும் வகையில் அதிகாரம் பெறும் பகுதிக்குரிய பிரதான அம்சம் ஏனையவற்றை வெற்றி கொண்டு அடக்கி ஒடுக்குவதன் ஊடாக இல்லாமலாக்கும் அவசியம் வர்க்கப் பிளவுச் சமூகத்தில் இயல்பான, அவசியமான ஒரு பணி. பண்பாட்டுத் தளத்தில் ஒரு கடவுள் மேலாண்மை ஏற்பட்டு 'சிறு தெய்வங்கள்' தம்முடன் இணங்கி வாழத்தக்க இருப்பை அனுமதிக்க இயலாமல் அழித்துவிடுவதான வாழ்வியல் வெளிப்பாடு தான் அங்கு சாத்தியம் என்பதனால் ஐரோப்பியச் சமூகம் கிறிஸ்தவத்தை தனக்கமைவாக வடிவமைத்துக் கொண்டது!*

*இனமரபுக்குழுப் பண்பாட்டுத் தொடர்ச்சியைக் கொண்டிருக்கும் சாதியச் சமூகத்தில் ஒற்றைக் கடவுளுடன் மக்களது வாழ்வியல் நீடிக்க இயலவில்லை. ஒவ்வொரு இனமரபுக் குழுவுக்குமான கடவுளர்களின் வேறுபட்ட வடிவங்களையும் தன்னுடன் இணைத்தபடியே தான் மேலாதிக்கம் பெற்ற சாதிய வர்க்கத்தின் முழுமுதல் கடவுளால் இயங்க இயலுமாக இருந்துள்ளது. நிலப்பிரபுத்துவ அமைப்புக்குரிய 'தென்னாடுடைய சிவன்' மேலாதிக்கம்பெற்ற வரலாற்று இயக்கப் போக்கின் ஊடாக அந்த விவகாரங்களைப் பார்த்து வந்திருக்கிறோம்.*

**சோழப் பேரரசில் அத்தகைய மேலாதிக்கத்தை வெற்றிகொண்ட சிவன் ஆரம்ப கட்டத்தில் அந்த மேலாண்மையை அதீதமாக வெளிப்படுத்துகிறவராக இருந்துள்ளார். சிவனே 'எந்நாட்டவர்க்கும் இறைவன்' என உணர்த்தப்படும் வகையில் லிங்கத்துடன் உள்ள கருவறைக்கான விமானம் விண்முட்டும் உயரத்தில் கட்டமைக்கப்பட்டு இருந்தது. ராஜராஜ சோழனின் தஞ்சைப் பெருங்கோயில், இராஜேந்திர சோழனின் கங்கைகொண்ட சோழபுரம் ஆகியவற்றின் விமானங்கள் ஓங்கியுயர்ந்து தமது மேலாண்மையை வலியுறுத்தி நிற்பதைக் காணலாம்.**

*சோழப் பேரரசில் அத்தகைய மேலாதிக்கத்தை வெற்றிகொண்ட சிவன் ஆரம்ப கட்டத்தில் அந்த மேலாண்மையை அதீதமாக வெளிப்படுத்துகிறவராக இருந்துள்ளார். சிவனே 'எந்நாட்டவர்க்கும் இறைவன்' என உணர்த்தப்படும் வகையில் லிங்கத்துடன் உள்ள*

கருவறைக்கான விமானம் விண்முட்டும் உயரத்தில் கட்டமைக்கப்பட்டு இருந்தது. ராஜராஜ சோழனின் தஞ்சைப் பெருங்கோயில், இராஜேந்திர சோழனின் கங்கைகொண்ட சோழபுரம் ஆகியவற்றின் விமானங்கள் ஓங்கியுயர்ந்து தமது மேலாண்மையை வலியுறுத்தி நிற்பதைக் காணலாம். மருதத் திணை மேலாதிக்கமும் அதன் வாயிலாகப் பெற்ற வளர்ச்சி ஊடாக வெள்ளாளச் சாதி பெற்றிருந்த அதியுயர் மேலாண்மையைப் பண்பாட்டு மேலாதிக்கமாக காட்டும் வகையில் விமானத்தின் ஓங்கியுயர்ந்த கம்பீரம் அமைப்பாக்கப்பட்டிருந்தது!

இருப்பினும் பிற்காலச் சோழர்களது ஆட்சியியல் ஏனைய தரப்பாரது ஒத்துழைப்புக்கான பங்கேற்பை மதிக்கும் வகையில் (சாதியத்துக்கான தூரப்படுத்தலை வலியுறுத்தியபடி ஒன்றிணைத்து இயங்கும் அவசியத்தை ஏற்றுக்கொண்டவர்களாக) விமானத்தின் மேலாதிக்கத்தை கட்டுக்குள் வைத்தவண்ணம் சுற்றுப் பிரகாரங்களில் பன்மைப் பண்பாட்டுக் கூறுகளுக்கான அம்சங்களின் இருப்பை அங்கீகரித்து வெளிப்படுத்துபவர்களாக இருந்துள்ளனர். தமிழரல்லாத விஜயநகரப் பேரரசில் தனியொரு சாதி மேலாதிக்கம் சாத்தியமற்றுப்போன சூழலுக்கு அமைவாக வடிவம்பெற்ற கோயில் பிரகாரங்களின் பன்மைத்துவமே இன்றைய இந்துக் கோயில்களின் கட்டமைப்பாகத் தொடர்வதனை அவதானிக்கலாம்.

அதேவேளை கோயில் திருவிழாக்கள் ஊடாக சாதிய மேலாதிக்கப் பண்பு வலியுறுத்தப்படும்; குறிப்பாக வேட்டைத் திருவிழா, தீர்த்தத்திருவிழா என்பன கோயில் சுற்றுச் சூழலுக்குரிய ஆதிக்க சாதியின் ஆள்புலத்துக்கான விஸ்தீரணத்தைப் பறைசாற்றுவதாக இயக்கம் பெற்றுள்ளமையைக் கவனங்கொள்ள இயலும். மேலாதிக்கம் உணர்த்தப்படுவதற்கு அப்பால் பிற சமூகங்களுக்கான படிநிலை இறக்கத் தளத்துக்கு ஏற்றதான மதிப்பு, மரியாதைகள் அங்கீகரிக்கப்பட்டு இருத்தல் இந்துச் சமூக வாழ்வியலாக அமைந்திருந்தது. ஒவ்வொரு சாதிப் பிரிவினரது குலக் கடவுளர்கள் அவ்வப் பகுதியில் பெருமெடுப்புடன் வழிபட அனுமதிக்கப்படுவதுடன் ஆதிக்க சாதியினரது கோயில் பிரகாரங்களின் வெளிவட்டாரங்களில் ‘சிறு தெய்வங்கள்’ என்ற அங்கீகாரத்துடன் (பரிவாரத் தெய்வங்களது இருப்புக்கு உரியதாக) இடமளிக்கப்பட்டு உள்ளமையைக் காணலாம்.

### சமரச சன்மார்க்கம், நாத்திக வாதம், ஆன்மீக நாத்திகம்

பலவேறு படிநிலை இருப்புக்கு உரியனவாக சாதிப் பிரிவுகள் இயங்கும் சமூக முறைமையை இந்திய நிலப்பிரபுத்துவக் காலகட்டம் முழு அளவில் ஒழுங்கமைத்துக் கொண்டது. வட இந்தியாவில் பிராமண மேலாதிக்கம் நிலவுடைமையைப் பெறும் வகையில் சத்திரிய வர்ணம் இயங்கிய ரிக் வேத இறுதிப் படிநிலையில் சாதியக் கருத்தியல் (வர்ணக் கோட்பாட்டினூடாக) ஆரம்ப வடிவமாக வெளிப்பட்டிருந்தது. கிபி. நாலாம் நூற்றாண்டின் பின்னர் நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பிற்கு உரியதாக ஸ்மிருதிகள் வாயிலாகப் பிராமணியம் வடிவப்படுத்திய சாதியக் கருத்தியல் இன்னொரு பரிணமிப்புக்கு உரியது.


தமிழகத்தில் மருதத் திணை மேலாதிக்கம் வாயிலாக நிலவுடைமைச் சாதியாக உருவாகிய வெள்ளாளர் பிராமணியத்தை உள்வாங்கிச் சாதியத்தில் ஏற்படுத்திய விருத்தி இன்னொரு வகையானது. சாதியத்தை மிக இறுக்கமுடையதாக வடிவப்படுத்தியதில் சூத்திரர்களாக வரையறுக்கப்பட்ட அதேவேளை அதியுச்ச மேலாதிக்க சாதியாகவும் மிளிர்ந்த வெள்ளாளருக்குப் பெரும் பங்கு இருந்துள்ளது. அவ்வகையில் சாதிய மேலாதிக்கத் தகுதியைத் தமக்கானதாக வருவித்துக்கொள்ளும் நோக்குடன் பிராமணர்களுக்கு அவர்கள் வழங்கிய அதீத புனிதப் பீடம் பின்னாலே வெள்ளாளர்களுக்கே நெருக்கடியை ஏற்படுத்தி இருந்தது.

சமூகத் தலைமையைத் தம்மிடம் இறுக்கமாக வைத்துக்கொண்டு ஆன்மீகப் புனிதத்தைப் பிராமணர்களுக்கு வழங்குவது இலாபகரமானது என்ற கணிப்புத் தவறு என்பதைத் தமக்குரிய அரசுரிமையை இழந்தபோது உணர்ந்து கொண்டனர்; அதன் பேறாக ஆன்மிகத் தளத்திலும் வெள்ளாள மேலாதிக்கத்தை

வலியுறுத்தும் பொருட்டு சைவசித்தாந்தத்தை வெளிப்படுத்தினர். பிராமணரை நிராகரித்து வெள்ளாளக் குரு காட்ட, கண்டடையும் பதி உடனான சங்கமிப்பே ஆன்ம ஈடேற்றம் பெறும் அதியுச்ச வீடுபேறு எனக்காட்டினர். இத்தகைய வெள்ளாள - பிராமண முரணை ஒரு எல்லைக்கு மேல் வளர்த்தெடுக்க இயலாது; முதலுக்கே சேதாரமாகிப் போய்விடுவதாக - தமக்கான சாதிய மேலாதிக்கத்தைக் கேள்விக்கு உள்ளாக்கிவிடும் அளவில் - பிராமணிய நிராகரிப்பை வெளிப்படுத்த இயலாது என்பதனை உணர்ந்து செயற்பட்டனர்!

இந்த இரண்டக நிலை காரணமாக சைவசித்தாந்த - வேதாந்த முரணை ஒரு எல்லைக்கு மேல் வளரவிடாமல் கட்டுப்படுத்தும் பொறுப்பு ஆதிக்கத் தரப்புக்கு இருந்தது. சைவசித்தாந்தம் தனிவழியில் எழுச்சி பெற்று ஆளுமையை நிலைநாட்டிய ஓரிரு நூற்றாண்டுகளில் வேதாந்தத்தினின்றும் பேதப்பட்டதல்ல சைவசித்தாந்தம் எனும் சமரச சன்மார்க்கக் கருத்து நிலைகள் வெளிப்பட்டு ஒட்டுறவை ஏற்படுத்த முனைந்தன. தாயுமான சுவாமிகள் போன்றோர் சமூக நல்லிணக்கத்துக்காக முன்வைத்த சமரச சன்மார்க்க இயக்க முன்னெடுப்புக் கால ஓட்டத்தில் பிராமண மேலாதிக்கத்துக்கு வழிகோலுவதாக அமைந்தது. மாறி வரும் ஆட்சியாளர்களுடன் ஆன்மிகத் தளம் சார்ந்து ஒட்டுறவாட இருந்த வாய்ப்பும் பொருளாதார மேலாதிக்கத்தைத் தக்கவைக்கும் உற்பத்தி உறவு முறைமையும் காரணமாக பிராமணியத்தின் வழித்தோன்றலாக (சமஷ்கிருதத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டு) உருப்பெற்றதே சைவசித்தாந்தம் என்ற இடத்துக்கு சமரச மார்க்கம் வழிகோலியிருந்தது. பதினேழாம் நூற்றாண்டில் சைவசித்தாந்திகளே கூட மெய்கண்டதேவர் தொடக்கி வைத்தது சமஸ்கிருதத்தில் இருந்து பெறப்பட்ட தத்துவ நெறியே எனக் கூறும் அவலம் ஏற்படலாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் குடியேற்ற நாடாக இந்தியா முழுமையும் ஒட்டச்



சுரண்டப்பட்ட போது சாதியத்துடன் காலனித்துவம் எனும் மற்றொரு கருத்தியல் ஒடுக்குமுறையும் கைகோர்த்தபடி உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை நாசப்படுத்தின. நவீன சிந்தனைகளை வெளிப்படுத்தும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுக்குரிய ஐரோப்பிய ஆட்சியாளர்கள் தமது நாடுகளில் நிலப்பிரபுத்துவத்தை இல்லாமல் ஆக்கியது போல இந்தியாவில் மாற்றத்தை முழுமைப்படுத்த விரும்பவில்லை. இந்திய நிலப்பிரபுத்துவத்தின் சில பிடிகள் தகர்க்கப்பட்ட போதிலும் ஒழிக்கப்பட்ட பழமையின் இடத்துக்கான புதிய அடித்தளங்கள் ஏற்படுத்தப்படவில்லை. தமது ஊடுருவலுக்கு ஏற்புடைய சாதிய எதிர்ப்பை பேசுபொருளாக்கிய போதிலும் ஏற்பட்ட இடைவெளியில் காலனித்துவக் கருத்தியல் தளையை வலுவாகப் பிணைத்து அடக்கியாளும்

*வாய்ப்பையே காலனித்துவ வாதிகள் வருவித்துக்கொண்டனர்.*

*அதுவரையான கிராமிய நிலப்பிரபுத்துவ வாழ்முறையில் நிலவுடமையாளரின் சுரண்டலுக்கு அமைவாகப் பலவேறு சாதிப் பிரிவினரும் தத்தமக்கன உரிமைகள் - கடமைகளின் பாகுபாட்டுடன் கொண்டும் கொடுத்தும் வாழும் உயிர்த்துடிப்பான ஊடாட்டம் இருந்துவந்தது. எங்கோ உள்ள காலனித்துவச் சுரண்டலாளர் முகம் தெரியாமல் இருந்தவாறு எமது விளைச்சலைத் 'துட்டுக்கு இரண்டாக விற்கும்படி' ஆணையிடுவதோடு ஆதாயம் அனைத்தையும் வறுகி எடுத்துச் செல்வதாகவும் வாழ்வின் அந்நியமாதல் உச்சம் பெறலாயிற்று. பஞ்சம், பசி, பட்டினி, கொள்ளை நோய்கள் என்பன பெருகி மரண ஓலங்கள் நாளாந்த விவகாரமாயின. அத்தகைய சூழலில் ஆன்மிகத் தேடலில் ஆர்வம் கொண்ட ஆன்மாவொன்று 'வாடிய பயிரைக் கண்டு வாடித் துடித்தது'. தாம் நாடிய மதக் கருத்தியல் தனக்கும் சமூகத்துக்கும் உரிய தீர்வைத் தராத ஏக்கத்தில் மதநீக்க ஆன்மீக எழுச்சியை முன்னிறுத்தும் இயக்கத்தைத் தொடக்கி வைத்தது. மக்களின் பட்டினிக் கொடுமையைத் தீர்க்கும் வழிமுறைக்கு முன்னுரிமை வழங்கியபடி சுத்த சமரச சன்மார்க்க நெறியைத் தொடக்கிவைத்தது!*

*இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய முதலாளித்துவம் ஏகாதிபத்தியக் கட்டத்தை எட்டியது; அதனைத் தகர்க்கும் குறிக்கோளை அதனுடன் இணைந்த அம்சமாக வளர்ந்த பாட்டாளி வர்க்கம் ஏற்கனவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெற்றிருந்த மார்க்சியச் சிந்தனை ஆயுதத்தை மேலும் கூர் தீட்டி, ஏகாதிபத்திய சகாப்தத்துக்கான விருத்தியை எட்டிய லெனினிசமாக வளர்த்தெடுத்து ருஷ்யப் புரட்சியைச் சாதித்தது. "எவரும் ஆள்வோரும் இல்லை, அடிமையென யாரும் இல்லை" என்ற சோவியத் சோசலிசச் சிந்தனை இந்தியாவிலும் எதிரொலித்தது. மக்கள் விடுதலைக்கான மார்க்கம் குறித்த தெளிவற்ற காலச் சூழலில் மத நீக்கத்துடன் வள்ளலார் கண்டடைந்த ஆன்மிகத் தேடலை வளர்த்தெடுத்து ஆன்மிக நாத்திகக் கருத்தியல் அடிப்படையிலான விடுதலைத் தேசியச் சிந்தனை முறையாக இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வெளிப்படுத்தியது!*

மேலாதிக்கம் உணர்த்தப்படுவதற்கு அப்பால் பிற சமூகங்களுக்கான படிநிலை இறக்கத் தளத்துக்கு ஏற்றதான மதிப்பு, மரியாதைகள் அங்கீகரிக்கப்பட்டு இருத்தல் இந்துச் சமூக வாழ்வியலாக அமைந்திருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் குடியேற்ற நாடாக இந்தியா முழுமையும் ஒட்டச் சுரண்டப்பட்ட போது சாதியத்துடன் காலனித்துவம் எனும் மற்றொரு கருத்தியல் ஒடுக்குமுறையும் கைகோர்த்தபடி உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை நாசப்படுத்தின.

*ஏகாதிபத்தியக் கையாளுகை காரணமாக ஆன்மிக நாத்திகக் கருத்தியல் தொடர் விருத்தியைப் பெற இயலாமலாகி வேறு தளங்களிலான தேடல்கள் ஒன்றுடனொன்று ஊடாடியபடியே சமாந்தரமாக இயங்குவனவாக இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி கடந்துபோயிற்று. தலித் அரசியல், இனத் தேசிய அரசியல், தாராளவாத அரைப் பிராமணத் தேசிய இயக்கம் என்பன சாதியக் கருத்தியல் மீது தத்தமது தளங்கள் சார்ந்த தாக்குதல்களை ஏற்படுத்தின. தலித்தியம், இனத்தேசியம், தேசியம் எனும் மூன்று முனைகளில் இயங்கியவை சாதியம் - காலனித்துவம் எனும் இரு நுகத்தடிகளையும் பூரணமாகத் தூக்கியெறியும் விடுதலைத் தேசியச் சிந்தனை வகைக்கு உரியனவல்ல என்றபோதிலும் சாதியத் தகர்வுக்கான முன்முயற்சிகளைத் தொடக்கி வைத்தன. "சாதியத் தகர்ப்புக் கருத்தியல்கள்" எனும் இந்த மூன்றாம் பகுதி அவை குறித்து ஆறு அத்தியாயங்களில் அதனது தேடலை முன்வைக்கும்!*

*(தொடரும்)*

"யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொது நூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பாணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.

# யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள் – 9



நடராஜா செல்வராஜா

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.

## கலாநிலையம் நூலகம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 1920 ஆம் ஆண்டு ஆசிரியராகச் சேர்ந்து 1958 வரை பணியாற்றியவர் கலைப்புலவர் க. நவரத்தினம். தன்னிடமிருந்த பெரும்பாலான நூல்களைக் கொண்டு 'கலாநிலையம்' என்ற பெயரில் ஒரு அறிவுத்தேடலுக்கான கழகமாக, ஒரு நூலக நிறுவனமாக உருவாக்கி, 1930 டிசம்பர் மாதம் 5ம் திகதி அதனைத் தொடக்கிவைத்தார். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையின் மேற்கில் உள்ள பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த மனையொன்றில் 'கலாநிலையம்' இயங்கத் தொடங்கியது.

இதன் தலைவராக பரமேஸ்வராக் கலாசாலைத் தலைவராக இருந்த சு. நடேசபிள்ளை அவர்களும், செயலாளராக கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்களும் சேவையாற்றியுள்ளனர். அத்துடன் கலாநிலையத்தின் சிறப்பு அங்கத்தினர்களாக சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், டாக்டர் அன்றியாஸ் நெல், முதலியார் செ. இராசநாயகம், டாக்டர் ஐசாக் ரி. தம்பையா ஆகியோர் இருந்துள்ளனர். கலாநிலைய நூலகத்தின் பொறுப்பாளராக யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய ஆசிரியரான திரு.கா. வைரமுத்து பணியாற்றியுள்ளார்.

அமரர் க.சி. குலரத்தினம் அவர்கள் எழுதிய 'பண்டிதமணி அவர்களும் கலாநிலையமும்' என்ற கட்டுரை, 1989 இல் வெளியிடப்பெற்ற 'பண்டிதமணி நினைவுமலர்' என்ற சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளது. அதில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இக்கழகத்தின் அங்கத்தினர் பொது வகையினர் எனவும் சிறப்பு வகையினர் எனவும் இரு திறத்தினராயமையப் பொதுவகையினரானோர், நாட்டின் கலையாக்கத்தில் ஊக்கமுள்ளவராயும், சிறப்பு

வகையினரானோர் கலையாக்கத்துக்கு உபகரித்த அறிஞராயுமிருந்தனர். தமிழ்க் கலைகளின் வளர்ச்சியில் கருத்துடையவர்கள் பலர் இந்நிலையத்தில் அங்கத்தவராய்ச் சேர்ந்திருந்தனர். திருவாளர் சு. நடேசபிள்ளை அவர்கள் தலைவராயும், மத்திய கல்லூரி வர்த்தக ஆசிரியர் திரு. கந்தையா நவரத்தினம் அவர்கள் செயலாளராகவும் பணியாற்றிய கலாநிலையத்தில் பண்டிதமணி அவர்கள் மதிப்புக்குரிய அங்கத்தவராயிருந்தார். இன்னும் பரமேஸ்வராக் கல்லூரியில் சமய குருவாயிருந்த சுவாமி உருத்திரகோடீஸ்வரர், முதலியார் சு. சிற்றம்பலம், வழக்கறிஞர் வி. நாகலிங்கம், வித்தியாதரிசி சிவத்திரு தி. சதாசிவ ஐயர், வட்டுக்கோட்டை ஆசிரியர் திரு. க. மதியாபரணம், இந்துக் கல்லூரி ஆசிரியர் பொ. தம்பு, வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. கா. வைரமுத்து, மத்திய கல்லூரி ஆசிரியர் வியாகரண சிரோமணி மகோபாத்தியாய வை. இராமசாமி சர்மா, தெல்லிப்பழை வழக்கறிஞர் வ. குமாரசுவாமி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.ச. சுப்பிரமணியம், நியாயவாதி எஸ்.ஆர். கனகநாயகம், பெரியார் எஸ். கந்தையா முதலானோர் அங்கம் வகித்தனர்."

"நடேசன் (சு. நடேசபிள்ளை) அவர்கள் கலாநிலையத்தின் தலைவராயிருந்து அதன் ஆக்கவேலைகளுக்குத் தமிழ்நாட்டுப் புலவர்களையும் ஈழநாட்டுப் புலவர்களையும் அன்புக்கரம் நீட்டி அழைத்த அமைவு பண்டைத் தமிழ்ப் பண்பாட்டிலமைந்த பெருந்தன்மையாகும்."

கலா நிலையம் அடிப்படையில் மூன்று நோக்குகளைக் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. அவையாவன,

1. இலக்கியம், இலக்கணம், தத்துவஞானம், பௌதிக சாத்திரம், ஓவியம், நாகரிகம், சரித்திரம் என்னும் இவற்றில் இந்தியாவும் இலங்கையும் அடைந்த பெறுபேறுகளை ஆராய்ந்தறிதல்.
2. இவற்றை இக்கால ஆராய்ச்சி அறிவின் முறையில் விளக்குதல்.
3. கலைகளின் புத்துயிர்ப்புக்காகவும், நாட்டின் நோக்கங்கள் கைகூடுவதற்கும் முயலுதல்.

1930 களில் கலா நிலையம் ஆரம்பிக்கப்பட்டபோது யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய அரசியல், சமூக, பண்பாட்டுப் பின்னணிகளுடன் ஒப்பிட்டு நோக்குகின்றபோது கலா நிலையம் மிகுந்த அவதானமாக, பலத்த முன்னேற்பாடுகளுடனும், முன்னெடுப்புகளுடனும் ஆரம்பிக்கப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

கலா நிலையம் தன்னிடத்தில் மிகப்பெரிய நூலகம் ஒன்றினைக் கொண்டிருந்தது. அத்துடன் அங்கே இலக்கியம், தத்துவம், கலை, சமயம், பொருளாதாரம் போன்ற தலைப்புகளில் தொடர்ச்சியாக விரிவுரைகளும் இடம்பெற்றிருக்கின்றன. அன்றைய காலத்தில் வாழ்ந்த முக்கியமான ஆளுமைகள் பலர் அங்கே வந்து விரிவுரையாற்றியிருக்கின்றனர். என் கைக்கெட்டிய கலாநிலையத்தின் இரண்டாவது ஆண்டு அறிக்கையின் படி, அவ்வாண்டில் மாத்திரம் தமிழில் 21 விரிவுரைகளையும், ஆங்கிலத்தில் 3 விரிவுரைகளையும் அது





Image source - noolaham.net

*ஒழுங்கமைத்துள்ளது என்று தெரிகின்றது. அத்துடன் அதன் நூல் நிலையத்தில் **1035** நூல்கள் இருந்திருக்கின்றன என்றும் அவற்றில் தமிழ் நூல்கள் **421**, ஆங்கில நூல்கள் **614**, ஏட்டுப் பிரதிகள் **41**, அச்சில் இல்லாத (Manuscripts) தமிழ் நூல்கள் **76**, அச்சில் இல்லாத ஆங்கில நூல்கள் **92** என்றும் பட்டியலிடப்பட்டுள்ளது.*

*கலாநிலையத்தின் மூன்றாம் ஆண்டின் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.*

*"**1930** ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நூல் நிலையம் கிட்டத்தட்ட **1135** நூல்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. இவற்றுள் அச்சில் இல்லாத நூல்களும் ஏட்டுப் பிரதிகளும் இருந்தன. ஒவ்வொரு ஆண்டிலும் புது நூல்கள் இங்கு சேர்க்கப்பட்டன. இன்னும் ஒழுங்கமைப்பிலும் முன்னிருந்ததும், சமகாலத்தில் காணப்பட்டவையுமான புத்தகசாலைகளை (நூல்நிலையங்களை) விட சில வேறுபட்ட விதிமுறைகள் கலாநிலைய நூல்நிலையத்தில் கடைப்பிடிக்கப்பட்டன. புத்தகங்களை விட மாத வெளியீடுகளும், வார வெளியீடுகளும் ஆங்கில மாத வெளியீடுகளும், ஆங்கில வார வெளியீடுகளும் ஆங்கிலத் தினசரி வெளியீடுகளும் இங்கு ஒழுங்காக கொள்வனவு செய்யப்பட்டு பொது மக்கள் பாவனைக்காக விடப்பட்டிருந்தன. இன்னும் நூற்கொடைகளும் இங்கு நடைபெற்றன. (தகவல்: யாழ்ப்பாணம்: கலாநிலைய வெளியீடு. **1933-1934**: ப. **46**)."*

*கலா நிலையத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்குடன் **1933** இல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இதழே 'ஞாயிறு' சஞ்சிகையாகும். கலாநிலையத்தின் இரண்டாவது ஆண்டு அறிக்கையில் 'ஞாயிறு' இதழின் அறிமுகமாகக் கொள்ளத்தக்கதாக பின்வரும் பகுதி அமைகின்றது:*

*"தமிழ்க் கலை ஆக்கத்தின் பொருட்டு முயலுதற்குச் சிறந்த தமிழ் வெளியீடு ஒன்று இன்றியமையாத கருவியாகும். ஆதலினால், ஒரு சிறந்த தமிழ் இதழ் வெளியிட வேண்டுமென்பது எங்கள் நோக்கங்களிலும் ஒன்றாய் இருந்தது. இந்நோக்கம் நிறைவேறுவதற்கேற்ற பொருத்தங்கள் சில வாய்ப்புற்றமையை நினைத்து நாம் மகிழ்ச்சியடைதல் வேண்டும். 'ஞாயிறு' என்னும் பெயருடன் இரு திங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு பெரும் பொழுதிலும் வெளிவரும் சிறந்த செந்தமிழ்க் கட்டுரை வெளியீடு ஒன்று அச்சிடப்பட்டு வருகின்றது. இளவேனிற் காலமாகிய சித்திரைத் திங்கள் முதல் வாரத்தில் முதற்கதிர் வருமென எதிர்பார்க்கின்றோம்."*

*'ஞாயிறு' சஞ்சிகை தனது ஆரம்பம் முதலே தனக்கென ஒரு உள்கட்டுமான ஒழுங்கினைச் செய்திருந்தது என்பதை அதன் நிர்வாக ஒழுங்கிற்கு நல்லதோர் சான்றெனக் கொள்ளலாம். க.சி. குலரத்தினம் அவர்கள் ஞாயிறு இதழ் பற்றி மேற்குறிப்பிட்ட கட்டுரையில் ஓரிடத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.*

*"கலாநிலையம் செய்துவந்த கலையாக்கப் பணிகளில் ஒன்று அவர்கள் இரு மாதங்களுக்கு ஒருமுறை 'ஞாயிறு' என்னும் பெயரில் வெளியிட்ட சஞ்சிகையாகும். அது புத்தக உருவில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், பாடல்கள்,*



Image source - noolaham.net

**மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அவரது பேச்சும் தன்னலமற்ற வாழ்வும் ஈழத்தில் – குறிப்பாக யாழ்ப்பாணத்தில் – பல இளம் உள்ளங்களில் நாட்டுப்பற்றை கொழுந்துவிட்டு எரியச் செய்ததோடு அவர் காட்டிய வழியினைப் பின்பற்றி அரசியல், சமூக, பொருளாதார, ஆத்மீக விடுதலைக்காக முன்னின்று உழைக்கவேண்டுமென்ற ஆர்வத்தையும் வளர்த்துவிட்டன.**

நாடகங்கள் அமைய வெளிவந்தது. இளவேனிற் கதிர், முதுவேனிற் கதிர், கார்க் கதிர், கூதிர்க் கதிர், முன்பனிக் கதிர், பின்பனிக் கதிர் என்னும் பெயர்களில் பருவகாலம் தோறும் அது மலர்ந்து தேன்பிலிற்றி வந்தது. அதன் பெருமையை நன்கறிந்த தமிழ்நாட்டாரும் அதனை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.”

‘நான் கண்ட கலைப்புலவர்’ என்ற நூலினை 1958 இல் எழுதிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நூலகர், கா. மாணிக்கவாசகர், அந்நூலின் ஓரிடத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

“அனைத்தையும் விட அழகான அலுமாரிகளில் நான் கண்ட நூல்கள் என்னை வியக்கச் செய்தன. அவை பல்லாண்டுகளுக்கு முந்தியவை. கிடைத்தற்கரிய நூல்களையெல்லாம் தேடித் திரட்டி வைத்திருக்கிறார். ஒன்பது அலுமாரிகளில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான நூல்கள் இருக்கின்றன. அவைகளில் பெரும்பாலான நூல்கள் சமயம், கலை, தத்துவஞானம், சரித்திரம் சம்பந்தமானவை. இவைகளில் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெருநோக்கத்துடன் 1930 ஆம் ஆண்டு ‘கலாநிலையம்’ என்றதோர் தாபனத்தை நிறுவினார். அந்நாளில் யாழ்ப்பாணத்தில் அறிவுக் களஞ்சியமாக விளங்கிய நிலையம் இது ஒன்றே எனின், அது மிகையாகாது.



**கலைப்புலவர் க. நவரத்தினம்**

Image source - ta.wikipedia.org

கலாநிலையத்தில் ஆயிரத்து நூறு நூல்களும், அச்சில் இல்லாத பல ஆங்கில, தமிழ் நூல்களும் ஏட்டுப் பிரதிகளும் உள்ளன. அவ்வப்போது அறிஞர்களின் விரிவுரைகள் நிகழும். அதன் கண் அமர்ந்து ‘ஞாயிறு’ என்னும் கலையாக்கம் கருதிய வெளியீடொன்றைச் செப்பமுறச் சிலகாலம் வெளியிட்டார். ‘மெய்ப்பொருள் காண்பதறிவு’ என்ற நோக்கத்துடன் வெளியான அவ்விதழில், அந்நாளில் நம் கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.தா. ஆபிரகாம் அவர்களால் எழுதப்பட்டு கலைப்புலவர் நவரத்தினம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட ‘சாள்ஸ் டார்வின்’ என்ற கட்டுரையையும், நெடுங்காலமாக தமிழ், சமஸ்கிருதத்துறைத் தலைவராகக் கடமையாற்றிய வயாகரண மகோபாத்யாய வை. இராமசாமி சர்மா அவர்கள் தொடர்ந்து எழுதிய ‘பெருங்காப்பிய ஆராய்ச்சி’ என்னும் கட்டுரையையும் இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.”

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ‘ஈழநாடு’ பத்திரிகை தனது 25 ஆவது ஆண்டு நிறைவினை சிறப்பு மலராக 11.2.1984 அன்று வெளியிட்டிருந்தது. அதில் ச. அம்பிகைபாகன் அவர்கள் ‘கலைப்புலவரும் ஈழநாடும்: இலட்சிய இளைஞர்களைக் கவர்ந்தவர்’ என்ற



மட்டு.பட்டிப்பளையிலிருந்துராணுவம் முற்றுகை வாபஸ்

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

இலிபன நினைவுதினம்
சிறப்புடன் அனுஷ்டிப்பு

★ கொடூர விமான ஷெல் தாக்குதல்களில்

# வடமராட்சியில் நாற்பதுபேர் பலி

# 160 பொதுமக்கள் படுகாயம்!

## வீடுகள், பாடசாலை, கோயில்கள் சேதம்

நாகர்கோயில் பாடசாலையில்
15க்கும் அதிகமான மாணவர்கள் பலி

அதிகாலை முதல் நண்பகல் வரை
13 அப்பாவி மக்கள் உயிரிழப்பு

ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

கற்கோவளத்தில்
தந்தையும் மகனும் பலி

ரொக்கட் தாக்குதலில்
12 பேர் படுகாயம்

நேற்று மாலையும்
புக்காரா தாக்குதல்

மன்னாரில்புலிகள்தாக்குதல்
பொலிஸாரில் ஒருவர் பலி

Image source - ta.wikipedia.org

தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் சில பகுதிகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் தமக்கு முன்னும் பின்னும் இல்லாத முறையில் யாழ்ப்பாணத்தில் கலைக்கு அரும் சேவை புரிந்தார். இலக்கியம், இசை, சிற்பம், ஓவியம், ஆபரணம், நெசவு முதலிய சகல கலைத்துறைகளிலும் ஈடுபட்டார். அவற்றில் சில அரிய பொருள்களைத் தேடித் தம் வீட்டில் வைத்திருந்தார். அவர் மனைவி இந்தியாவின் சாந்தி நிகேதனத்தில் படித்தபடியால் அதன் ஞாபகமாக அவர் வீட்டுக்கு ‘சாந்தி நிகேதனம்’ என்றும் பெயர்வைக்கப்பட்டது.

கலைப்புலவருக்குத் தாகூர் போன்றோ, அல்லது ஹொறனை வில்மற் பெரேரா போன்றோ வசதிகள் இருந்திருந்தால் யாழ்ப்பாணத்தில் ‘சாந்தி நிகேதனம்’ போன்ற ஒரு ஸ்தாபனத்தையே நிறுவியிருப்பார்.

கலைகளில் கொண்ட ஆர்வத்தினால் அவற்றை வளர்ப்பதற்குக் ‘கலா நிலையம்’ என்னும் ஸ்தாபனத்தை நிறுவினார். அவருக்கு உதவி செய்வதற்கு இளைஞர்களுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. அவரிடம் ஒரு ஆகர்ண சக்தி இருந்தது. இந்த சக்தி யாழ்ப்பாணத்தில் இலட்சியங்களில் ஆர்வமுள்ள பல இளைஞர்களை இவர்பால் ஈர்த்தது. இவர்களில் ஏ.ஈ. தம்பர், கே.சி. தங்கராஜா, து. சீனிவாசகம், மு. கதிரைவேலு, கா. வைரமுத்து, குமாரவேலு என்போர் சிலர். கலைப்புலவரால் ஈர்க்கப்பட்டவர்களில் நானும் (ச.அம்பிகைபாகன்) ஒருவன்.

இவருடைய அரிய நூல்நிலையமே என்னை அதிகம் கவர்ந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்த தனிப்பட்டவர்களின் நூல்நிலையங்களில் இது சிறந்தது.
கலாநிலையத்தைப் பற்றி மேலும் கூறுமுன் கலாநிலையத்தோடும் கலைப்புலவருடனும் சம்பந்தப்பட்டவர்களில் சிலர் பின்னர் ஈழநாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதைக் கூற விரும்புகிறேன். ஏ.ஈ. தம்பர் ஈழநாட்டில் நெடுங்காலம் ஆசிரியப் பகுதியிலும் நிர்வாகத்துறையிலும் சேவைபுரிந்தார். திரு. சீனிவாசகம், நிர்வாகத்துறைத் தலைவராக இருந்து ஈழநாட்டைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகிறார். யானும் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இருந்த காலத்தில் ஈழநாட்டுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தேன்.

கலாநிலையத்தில் பல்வேறு ஆக்கவேலைகள் நடைபெற்றன. வாரந்தோறும் பிரசங்கங்கள், வார இறுதியில் இலக்கிய, இலக்கண, சமய, சங்கீத, நடன வகுப்புகள், இவற்றை விட காலத்துக்குக் காலம் இலக்கிய இசைவிழாக்கள், இவையெல்லாம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றன.

கலாநிலையத்திலிருந்து ‘ஞாயிறு’ என்னும் உயர்தர சஞ்சிகை வெளிவந்தது.

திரு. தங்கராஜா கொழும்பிலிருந்தபோதும், கலாநிலைய வேலைகளில் அதிக அக்கறை காட்டினார். கலைப்புலவர் ‘தென் இந்திய சிற்பவடிவங்கள்’ என்னும் நூலை எழுதியபொழுதும் அதற்கு வேண்டிய படங்களைச் சேகரித்துக் கொடுத்ததோடு

அவற்றைச் செவ்வனே அச்சிட்டும் கொடுத்தார்.

மக்கள் ஆதரவு போதாமையால் கலைப்புலவர் கலாநிலையத்தை மூடவேண்டி நேரிட்டது. இது பலருக்கு, சிறப்பாக திரு.கே.சி. தங்கராஜாவுக்கு அதிக மனவருத்தத்தைக் கொடுத்தது. திரு. தங்கராஜா கலாநிலையத்தை நிலையான ஸ்தாபனமாக்க விரும்பினார். கலைப்புலவரின் நூல்கள், கலாநிலையத்தில் இருந்த நூல்கள், கலைப்புலவரின் கலைப்பொருட்கள் முதலியவற்றைக் கொண்டே அந்த நிறுவனத்தை ஸ்தாபிக்க விரும்பினார். கலைப்புலவர் வீடே இதற்குப் பொருத்தமானது எனக் கருதினார். ஏனெனில் கலைப்புலவர் வீடே அரிய கலையம்சங்கள் பொருந்தியதாய் இருந்தது.

'கலாநிலையம்' என்னும் பெயர் அழியாமல் இருக்கவும் அது செய்துவந்த தொண்டுகளை தொடர்ந்து செய்யவுமே திரு கே.சி. தங்கராஜா 'கலாநிலையம்' என்னும் அச்சகத்தை தனது மாமனார் இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் வசித்துவந்த இடத்தில் ஸ்தாபித்தார். இந்த அச்சியந்திரசாலையை ஸ்தாபிக்கும் முன், என்னை இலக்கண சுவாமிகள் பற்றி ஒரு நினைவுமலரைத் தயாரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

கலாநிலைய அச்சியந்திரசாலையில் முதன்முதல் அச்சிடப்பட்ட நூல் 'சுவாமிகள்' நினைவுமலரே. அச்சுவேலை ஒரு சுபவேளையில் ஆரம்பிக்கப்பட்டது. அச்சுக் கோர்ப்பதற்கு முதல் 'கொப்பி'யை யானே கொடுத்தேன். அன்று கலைப்புலவர், தம்பர், சீனிவாசகம், வைரமுத்து, தங்கராஜாவின் தாய், சகோதரிகள், 'இந்து சாதனம்' ஆசிரியர் திரு. சம்பந்தர் முதலியோர் பிரசன்னமாகியிருந்தனர். கலா நிலைய அச்சியந்திரசாலையிலேயே 'ஈழநாடு' வாரப் பதிப்பாக வந்தபோது அச்சிடப்பட்டது. 'ஈழநாடு' என்னும் பெயர் வைத்ததற்கு கலைப்புலவருக்கும் பெரும் பங்குண்டு. அவரை ஆலோசியாமல் திரு. தங்கராஜா ஒரு கருமமும் செய்யார்."

கே.சி. தங்கராஜா, கே.சி. சண்முகரத்தினம் ஆகிய இரு சகோதரர்களின் உள்ளத்தில்



Image source - chunnakampubliclibrary.com

முகிழ்த்த பிராந்தியப் பத்திரிகை ஒன்றின் உருவாக்கத்துக்கான சிந்தனை 1958 இல் யாழ்ப்பாணத்தில், கலாநிலையம் என்ற பதிப்பகமாக வித்தூன்றப்பட்டு, 1959 பெப்ரவரியில் முளைவிட்டு வாரம் இருமுறையாக 'ஈழநாடு' என்ற பெயரில் வெளிவரத் தொடங்கி, நாளும் பொழுதும் உரம்பெற்று வளர்ந்து, ஈற்றில் 1961 இல் முதலாவது பிராந்தியத் தமிழ்த் தினசரியாக சிலிர்த்து நிமிர்ந்தது. அன்று தொட்டு இறுதியில் யாழ் மண்ணில் தன் மூச்சை நிறுத்திக் கொள்ளும் வரை அதன் இயங்கலுக்கான போராட்டம் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் பின்னிப் பிணைந்ததாகவே நகர்ந்துவந்துள்ளது.

'ஈழநாடு' ஆரம்பமாவதற்கும் அது ஒரு தேசியப் பத்திரிகையாக நிலைபெறுவதற்கும்

பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளை ஸ்தாபனத் தலைவர் திரு.கே.சி. தங்கராஜா அவர்கள் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு மலரில் விபரமாக எழுதியிருந்தார். அதில் ஒரு முக்கியமான பகுதி வருமாறு:

"மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அவரது பேச்சும் தன்னலமற்ற வாழ்வும் ஈழத்தில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் - பல இளம் உள்ளங்களில் நாட்டுப்பற்றை கொழுந்துவிட்டு எரியச் செய்ததோடு அவர் காட்டிய வழியினைப் பின்பற்றி அரசியல், சமூக, பொருளாதார, ஆத்மீக விடுதலைக்காக முன்னின்று உழைக்கவேண்டுமென்ற ஆர்வத்தையும் வளர்த்துவிட்டன. இதே காலகட்டத்தில் கொழும்புத்துறை முனிவரும் வேறு வழிகளைப் பின்பற்றி, பொதுத் தொண்டில் ஈடுபடும்படி மக்களைத் தட்டியெழுப்பினார்.

எனவே இந்த மாபெரும் சக்திகளின் தாக்கத்துக்கு உள்ளான நானும் (கே.சீ. தங்கராஜா) எனது நண்பர்களான கலைப்புலவர் நவரத்தினம், ஏ.ஈ. தம்பர், ச. அம்பிகைபாகன், கா. வைரமுத்து, து. சீனிவாசகம், மு. கதிரவேலு, கே. குமாரவேலு ஆகியோர் கூடி இவைபற்றி வாதிப்பதுண்டு. பத்திரிகையின் மூலம் அரசியல், சமூக பொருளாதார, ஆன்மீக விடுதலைக்கான பணிகளைச் செவ்வனே செய்யமுடியும் என்ற எண்ணம் எங்கள் அனைவரின் உள்ளத்திலும் வேரூன்றி இருந்தது. அதற்கான வழியில் என்னை அறியாமலே என் உள்ளமும் வாழ்க்கையும் செல்வதாயின.

எனது தாய் மாமனோடு இளவயதிலேயே தமிழகம் சென்று துறவுபூண்டு உயர் சமயத் தொண்டும் தமிழ்ப்பணியும் செய்து வந்தவருமான புகழ்பெற்ற இலக்கண சுவாமிகள் என்னும் ஸ்ரீமத் முத்துக்குமார தம்பிரான் சுவாமிகள் அவர்களைச் சிதம்பரத்தில் கடைசியாக **1948** ஆம் ஆண்டு சந்தித்தபொழுது, அச்சகம் ஆரம்பித்துப் பல நல்ல நூல்களை வெளியிடுவது மேலான தொண்டாகும் என்ற எண்ணத்தை என் மனதில் வித்திட்டார்கள். இதே சமயம் இலங்கை அரசியல் விடுதலையடைந்து ஜனநாயக ஆட்சியிலே தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மை இனத்தவரின் நன்மைகளுக்கு ஆபத்து ஏற்படவும் நாட்டின் ஒற்றுமையும் முன்னேற்றமும் தடைப்பட்டு அமைதி குலைந்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலே ஒரு தமிழ்ப் பத்திரிகை ஆரம்பித்து சிறுபான்மை சமூகங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்திப் பலவகையாலும் நாடு முன்னேறவும் பணியாற்றவேண்டியது மிக அவசியம் என்பதை உணரலானேன்.

**கலாநிலைய பதிப்பகம் 1958 இல் தனது கால்களை ஊன்றிய சில மாதங்களில், அதன் வெளியீடாக 1959 பெப்ரவரி மாதம் பதினொராம் திகதி, ஈழநாடு வார இதழாகத் தனது பாதத்தை முழுமையாக பதித்தது.**

அச்சகம் ஒன்றை நிறுவி செய்திப் பத்திரிகையும் வெளியிடவேண்டும் என்ற எனது நீண்டகாலக் கனவு நனவாகக் கூடிய சூழ்நிலை **1956** இல் தான் உருவாகியது. முதல் நடவடிக்கையாகச் சில பழைய அச்சியந்திரங்களை வாங்க முடிந்தது. **1956** ஜூலை மாதம் எனது தங்கையரில் ஒருவருக்குரிய காணியில் காலஞ்சென்ற எனது தாயார் (ஸ்ரீமதி சிற்றம்பலம் தையல்நாயகி) அச்சகக் கட்டிடத்திற்கான அத்திபாரம் இட்டார்கள். **1958** இல் முதல் கட்டிடம் பூர்த்தியாயிற்று. கட்டிடம் முடிக்கப்பெற்று 'கலாநிலையப் பதிப்பகம்' என்ற பெயரில் அச்சகமும், பதிப்பகமும் செயல்பட ஆரம்பித்தன. ஸ்ரீமத் இலக்கண முத்துக்குமார தம்பிரான் சுவாமிகளின் நினைவுமலர் தான் இந்த அச்சகத்தில் முதன்முதலில் அச்சேற்றப்பெற்றது. 'ஈழநாடு' வார இதழ் கலாநிலையப் பதிப்பக வெளியீடாக **1959** பெப்ரவரியில் முதன்முதலில் வெளிவந்தது."

'பத்திரிகைத்துறை: சில நினைவுக் குறிப்புகள்' என்ற பெயரில் **2002** இல் தான் எழுதிய நூலில் ஊடகவியலாளர் எஸ். பெருமாள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இளைஞராகவிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிகத் துடிப்போடு செயல்பட்ட வாலிப காங்கிரஸ் (Youth Congress) என்ற அரசியல் அமைப்பும் அவ்வமைப்பின்

முக்கிய பிரமுகர்களின் நட்பும் அவரது (திரு.கே.சீ. தங்கராஜா) வாழ்க்கையில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்ததாக அறியமுடிகின்றது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரும் மதிப்போடு இயங்கிவந்த 'கலாநிலையம்' என்ற பண்பாட்டு அமைப்பில் இவருக்கு நெருங்கிய தொடர்பும் ஈடுபாடும் இருந்துள்ளது. கலைப்புலவர் க. நவரத்தினம், எஸ். அம்பிகைபாகன், ரி. சீனிவாசகம், கே. குமாரவேலு, என். பத்மநாதன், எம். கதிரவேலு, ஏ.ஈ. தம்பர், கே.ஸி. தங்கராஜா ஆகியவர்கள் அக்காலத்தில் 'கலாநிலைய நண்பர்கள்' என அழைக்கப்பட்டு வந்துள்ளார்கள் என்றும் தெரியவருகின்றது."

'ஈழநாடு' பத்திரிகையுடன் தொடர்புள்ள கே. குப்புசாமி அவர்கள் தாயகம் திரும்பித் தமிழ்நாட்டில் வாழ்பவர். 'ஈழநாடு: ஒரு ஆலமரத்தின் கதை' என்ற எனது நூலில் தனது கட்டுரையொன்றை 'ஈழநாடு பணியில் டாக்டர் கே.சி. சண்முகரத்தினம்' என்ற தலைப்பில் எழுதியிருந்தார். அதில் கலைப்புலவரின் நூலகமான 'கலாநிலையம்' 1958 இல் 'கலாநிலையப் பதிப்பகமாக' உள்வாங்கப்பட்ட செய்தியை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்:

"திரு.கே.சி. தங்கராஜா, டாக்டர்.கே.சி. சண்முகரத்தினம் ஆகியவர்களின் சகோதரி மகன் பா. சிவானந்தன் அவர்கள் இங்கிலாந்தில் தன்னுடைய அச்சு இயந்திரத்துறையில் உயர்படிப்பை முடித்துக்கொண்டு நாடுதிரும்பியதும் அவருக்காகவும், டாக்டர் குடும்பத்தாரின் மாமாவாகிய இலக்கணச் சுவாமியாரின் சமய, இலக்கிய நூல்கள் சம்பந்தமாக வெளிப்படுத்துவதற்காகவும் ஒரு பதிப்பகத்தை உருவாக்க நினைத்தார்கள். அதன் வெளிப்பாடாக அவர்களது எல்லையிலேயே ஒரு கட்டிடத்தைக் கட்டிமுடித்தார்கள். அக்காலத்தில் கலைப்புலவர் நவரத்தினம் அவர்களின் நூலகமான கலா நிலையத்தையும் ஒன்றுசேர்த்து 1958 ஆம் வருடம் கலா நிலையப் பதிப்பகம் என்னும் ஸ்தாபனத்தை உருவாக்கினார்கள். அதன் முகாமைத்துவத்தை தங்கள் மருமகன் சிவானந்தன் அவர்களிடம் ஒப்படைத்தனர்."

ஈழநாட்டில் பணியாற்றிய பின்னர் இந்தியாவுக்குச் சென்று அங்கே திருச்சியில் வாழ்ந்து மறைந்த பத்திரிகையாளர் கே.ஜீ. மகாதேவா அவர்கள், கே. குப்புசாமியின் செய்தியை உறுதிப்படுத்துவதுடன், மேலதிக ஒளியைப் பாய்ச்சுவதான ஒரு தகவலை 'ஈழநாடு: ஒரு ஆலமரத்தின் கதை' என்ற நூலில் 'ஆலமரத்தின் ஆணிவேர் - தங்கர்' என்ற தலைப்பில் எழுதியிருந்தார்.

"யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கில் கோலோச்சிக் கொண்டிருக்கும் சிவன் கோவிலுக்குப் பின்புறமாக தமது சகோதரியின் காணியில் அச்சகத் துவக்க வேலைகளை ஆரம்பித்தார். கட்டிடப் பணிகளை கே.சி.ரி. யின் நண்பரும் கட்டடக் கலைஞருமான பெங்களூரைச் சேர்ந்த மனோகர் ராவ் வடிவமைத்தார். கட்டிடம் பூர்த்தியானது. பெயரும் 'கலாநிலையம் பதிப்பகம்' என்று சூட்டப்பட்டது. தனது தாய்மாமனின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கும் முகமாக கே.சி.ரி. அவர்கள் 'ஸ்ரீமத் இலக்கண முத்துக்குமார தம்பிரான் சுவாமிகளின் நினைவுமலரை' முதலாவது பிரசுரமாக கலாநிலையம் பதிப்பகத்தில் பதிப்பித்து - அச்சேற்றித் தனது பத்திரிகைப் பணிக்கு முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்டார்.

கலாநிலைய பதிப்பகம் 1958 இல் தனது கால்களை ஊன்றிய சில மாதங்களில், அதன் வெளியீடாக 1959 பெப்ரவரி மாதம் பதினொராம் திகதி, ஈழநாடு வார இதழாகத் தனது பாதத்தை முழுமையாகப் பதித்தது. பின்னர் வாரம் இரு முறையாகி, சுன்னாகத்திலிருந்து நீண்டகாலமாக வெளிவந்த ஈழகேசரி வார இதழின் ஆசிரியர் இ. அரியரத்தினம் அவர்களை முதல் ஆசிரியராகக் கொண்டு ஈழநாடு குழந்தையானதும், வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியர் கே.பி. ஹரன் அழைக்கப்பட்டு, 'ஈழநாடு' தினசரியின் ஆசிரியராக நியமிக்கப்பட, கல்கி (தமிழ்நாடு) இலக்கிய வார இதழின் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களால் 'அரிய இராஜரத்தினம்' என்று புகழாரம் சூட்டப்பெற்ற இராஜ அரியரத்தினம் அவர்கள் ஈழநாடு வாரப் பதிப்பின் ஆசிரியரானார்."

'கலாநிலையம்", கலாநிலையப் பதிப்பகத்தினால் உள்வாங்கப்பட்ட வேளையில் கலாநிலையத்தின் அரிய சேகரங்களும் கலாநிலையப் பதிப்பகத்தினைச் சென்றடைந்ததாக பல்வேறு பிரமுகர்களின் குறிப்புகளும் உறுதிப்படுத்துகின்றன. அதன் பின்னர் 'கலாநிலைய பதிப்பகத்தினர்' அந்த அரிய நூல்களை என்ன செய்தார்கள் என்பது பற்றிய வரலாற்றுத் தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

(தொடரும்)

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் யாழ்ப்பாணக் கட்டளையகம்




இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்


இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

இந்தத் தொடரின் சென்ற இரண்டு கட்டுரைகளிலும் 1698 ஆம் ஆண்டில் கிறிஸ்டியானோ தூர்சி என்பவர் வரைந்த, யாழ்ப்பாணக் கட்டளையகத்தைக் காட்டும் நிலப்படத்தில் காணப்படும் பல்வேறு தகவல்களைப்பற்றியும் அவற்றின் வரலாற்றுத் தொடர்புகள் பற்றியும் ஆராய்ந்தோம். அடுத்த சில கட்டுரைகளில் 1719 ஆம் ஆண்டில் மார்ட்டினஸ் லெயுசிக்காம் (Martinus Leusecam) என்பவர் தொகுத்த யாழ்ப்பாணக் கட்டளையகம் தொடர்பான ஒரு தொகுப்பில் அடங்கிய நிலப்படங்கள் தரும் தகவல்கள் பற்றிப் பார்க்கலாம்.

நெதர்லாந்தின் தேசிய ஆவணக் காப்பகத்தில் உள்ள இந்த நிலப்படத் தொகுப்பைத் தயாரித்த லெயுசிகாம், யாழ்ப்பாணத்தில் சத்தியப்பிரமாண நில அளவையாளராகப் பணியாற்றியவர். 1716-1723 காலப்பகுதியில் இலங்கையின் ஒல்லாந்த ஆளுனராக இருந்த ஐசாக் ஒகஸ்தீன் ரம்ப் (Isaac Augustijn Rumpf) என்பவரின் கட்டளைக்கு அமைய இந்த தொகுப்பு உருவாக்கப்பட்டது. இத்தொகுப்பில் யாழ்ப்பாணக் கட்டளையகம் தொடர்பான 31 நிலப்படங்கள் அடங்கியுள்ளன. இத்தொகுப்பில் முதலாவதாக முழு இலங்கையையும் காட்டும் ஒரு நிலப்படமும், அடுத்து யாழ்ப்பாணக் கட்டளையகத்தை முழுமையாகக் காட்டும் ஒரு நிலப்படமும் அடங்கியுள்ளன. எஞ்சிய நிலப்படங்கள் கட்டளையகத்தின் பல்வேறு பகுதிகளைத் தனித்தனியாகக் காட்டுகின்றன.[1]

இவை 1) யாழ்ப்பாணத்தின் நான்கு பிரிவுகள், 2) வலிகாமப்

*பிரிவு, 3) வடமராட்சிப் பிரிவு, 4) பச்சிலைப்பள்ளிப் பிரிவு, 5) தென்மராட்சிப் பிரிவு, 6) வேலணைத் தீவு, 7) காரைதீவு, 8) எழுவைதீவு, 9) அனலைதீவு, 10) நயினாதீவு, 11) நெடுந்தீவு, 12) புங்குடுதீவு, 13) தென்னமரவடி, 14) பனங்காமம், 15) கரிக்கட்டுமூலை, 16) கரைச்சி, 17) மாதோட்டம், 18) கருநாவற்பற்று, 19) மேல்பற்று, 20) பெருங்கழிப்பற்று, 21) இலுப்பைக்கடவை, 22) பல்லவராயன்கட்டு, 23) பூனகரி, 24) பறங்கிச்செட்டிகுளம், 25) முள்ளியவளை, 26) புதுக்குடியிருப்பு, 27) நானாட்டான், 28) மன்னார், 29) முசலிப்பற்று ஆகியவற்றைக் காட்டும் நிலப்படங்களாகும். மேற்படி நிலப்படங்களிலிருந்து வரலாறு தொடர்பான பல புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவுவதுடன், வேறு மூலங்களினூடாகக் கிடைக்கும் தகவல்களை உறுதி செய்துகொள்வதற்கும் பயன்படக்கூடியவை.*

*ஒல்லாந்த மத அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்த நிலப்படங்களை வரைந்திருக்கக்கூடும் என்று ஆர். எல். புரோகியர் கருதுகிறார்.*[2] *நிலப்படங்களில் தேவாலயங்களுக்கும் கோவிற்பற்றுப் பிரிவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதனாலும், விளக்கக் குறிப்புகளில் தேவாலயங்கள், அவற்றின் கீழிருந்த ஊர்கள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்கள் இருப்பதாலும் இந்தக் கருத்து ஏற்பட்டிருக்கலாம். ஆனால், 1694 ஆம் ஆண்டில் பத்தேவியாவிலிருந்த ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் மேலதிகாரிகள் ஊர்கள், நாட்டுப் பிரிவுகள் ஆகியவற்றைக் காட்டும் நிலப்படங்களைக் கேட்டுக் கடிதம் அனுப்பியதாகவும், அவற்றைத் தயாரிக்கும் வேலைகள் நடைபெறுவதாகவும் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாக இருந்த சுவாடெக்குரூன் 1697 இல் எழுதிய வழிகாட்டற் குறிப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.*[3] *அத்துடன், கோவிற்பற்றுகள் சமயத் தேவைகளுக்காக மட்டுமன்றி நிர்வாகப் பிரிவுகளாகவும் செயற்பட்டன என்பதையும் கோவிற்பற்றுகள் அல்லாத வன்னிப் பிரிவுகளுக்கும் தனித்தனியான நிலப்படங்கள் தொகுப்பில் இருப்பதையும் கருத்திற் கொண்டால், மேற்படி நிலப்படங்களை நிர்வாகத் தேவைகளுக்காகவே தயாரித்திருக்கக் கூடுதல் வாய்ப்புகள் உண்டு.*

## லெயுசிக்காமின் யாழ்ப்பாணக் கட்டளையகம்

*மேலே குறிப்பிட்ட நிலப்படத் தொகுப்பிலுள்ள, யாழ்ப்பாணக் கட்டளையகத்தை முழுமையாகக் காட்டும் நிலப்படம், சென்ற இரண்டு கட்டுரைகளில் எடுத்தாளப்பட்ட தூர்சியின் நிலப்படத்தைப் போன்றது. ஆனாலும், இத்தொகுப்பிலுள்ள நிலப்படம் கூடுதல் விவரங்களைத் தருகிறது. (படம்-1)*



**படம் - 1: லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் கட்டளையகத்தை முழுவதுமாகக் காட்டும் நிலப்படம் (சில பகுதிகள் வெட்டி நீக்கப்பட்டன).**

*“யாழ்ப்பாணக் கட்டளையகம் முழுவதையும் உள்ளடக்கிய நிலப்படம்” என்ற தலைப்பிட்ட இதில் விளக்கக் குறிப்பொன்று உள்ளது. இக்குறிப்பிலிருந்து நிலப்படம், நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப்பட்டினம், மக்கள் வாழுகின்றனவும் வாழாதனவுமான தீவுகள், ஆறு வன்னிப்*

**யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சியின் கீழ் வருவதற்கு 59 ஆண்டுகளுக்கு முன்னரே மன்னார்த் தீவைத் தமது நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்துவிட்டனர். அத்துடன், மன்னார்த் தீவுக்கு எதிர்ப்பக்கம் தலைநிலத்தில் இருந்த மாதோட்டமும் சில அயல் பகுதிகளும்கூடப் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.**

பிரிவுகள், வன்னியின் எல்லைப் பகுதியிலுள்ள நான்கு கோயிற்பற்றுகள், அவற்றுக்குக் கீழ்ப்பட்ட ஊர்கள், கரைச்சி, பறங்கிச்செட்டிகுளம், புதுக்குடியிருப்பு, மன்னார், மாதோட்டம் ஆகியவற்றையும், அப்பகுதிகளிலுள்ள தேவாலயங்கள், பொது வீதிகள், குளங்கள், ஆறுகள், மன்னார்க் குடாக்கடலோர அமைப்பு ஆகியவற்றையும் காட்டுவதை நோக்கமாகக்கொண்டு வரையப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த நிலப்படத்தில் பல்வேறுபட்ட குறியீடுகள் காணப்படுகின்றன. ஆனால், இவை தொடர்பான விளக்கக் குறிப்புகள் எதுவும் இல்லை. பெரும்பாலும் இடப்பெயர்களுக்கு எதிரில் அமைவிடங்களைக் குறிக்க சிறிய வட்டம் உள்ளது. இவற்றுட் சில மண்ணிறமாகவும் வேறு சில கறுப்பாகவும் உள்ளன. இவ்வேறுபாட்டுக்கான காரணம் தெரியவில்லை. சிறிய வீடு போன்ற குறியீடுகளும் உள்ளன. இக்குறியீட்டைத் தனியாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளைச் சேர்த்தும் பயன்படுத்தியுள்ளனர். அத்துடன், இவை முன்னர் குறிப்பிட்ட வட்டங்களுக்கு உள்ளும், வேறாகவும் பயன்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்த்தோ தனியாகவோ மரத்தைக் காட்டும் குறியீடும் பரவலாகக் காணப்படுகின்றது. தனி வீடு, மடத்தை அல்லது சிறிய ஊரைக் குறிக்கக்கூடும். பல வீடுகள், பெரிய ஊரைக் குறிக்கக்கூடும். மரங்கள், நிழல் மரங்களைக் குறிப்பதாக இருக்கலாம். இவை தவிர, தேவாலயம், குருமனை, கோட்டை, யானை அடைப்பு (Elephant kraal) போன்ற சிறப்பு அமைப்புக்களைக் காட்டும் குறியீடுகளும் பயன்பட்டுள்ளன.

## பிரிவு எல்லைகள்

இந்த நிலப்படம் யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் கீழிருந்த எல்லாப் பிரிவுகளின் எல்லைகளையும் குறித்துக் காட்டுகிறது. முன்னர் விளக்கிய தூர்சியின் நிலப்படம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த நான்கு பெரும் பிரிவுகளான வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகியவற்றின் எல்லைகளை மட்டுமே காட்டியது. ஆனால், இந்த நிலப்படத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் தீவுப்பகுதியிலும் மன்னாரிலும் வன்னிப் பகுதியில் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் நேரடிக் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளிலும் இருந்த எல்லாக் கோயிற்பற்றுப் பிரிவுகளின் எல்லைகளையும் காட்டியுள்ளனர். அத்துடன், ஒல்லாந்தரின் நேரடிக் கட்டுப்பாடுக்குள் அடங்காத பகுதியை இளநீல நிறக் கோட்டினால் ஏனைய பகுதிகளிலிருந்து பிரித்துக்காட்டியுள்ளனர். இப்பகுதிக்குள் அடங்கியிருந்த ஏழு பிரிவுகளின் எல்லைகளையும் நிலப்படம் காட்டுகிறது. அதேவேளை, கண்டியரசனின் ஆளுகைக்குட்பட்ட பகுதியின் எல்லையை மஞ்சள் நிறக் கோடு காட்டுகிறது.

### யாழ்ப்பாணக் குடாநாடும் தீவுகளும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த சுண்டிக்குழி, நல்லூர், வண்ணார்பண்ணை, மானிப்பாய், உடுவில், வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, மயிலிட்டி, மல்லாகம், கோப்பாய், புத்தூர், அச்சுவேலி, உடுப்பிட்டி, கட்டைவேலி, பருத்தித்துறை, நாவற்குழி, சாவகச்சேரி, வரணி, கச்சாய், எழுதுமட்டுவாள், முகமாலை, புலோப்பளை, தம்பகமை, முள்ளிப்பற்று ஆகிய 26 கோயிற்பற்றுப் பிரிவுகளும் அவற்றின் எல்லைகளுடன் வெவ்வேறு நிறங்கள் தீட்டிக் காட்டப்பட்டுள்ளன. (படம்-2) பெரும்பாலான கோயிற்பற்றுப் பிரிவுகள் ஒரே பெரும்பிரிவுக்குள் அடங்குகின்றன. இன்றைய வடமராட்சி

கிழக்குப் பகுதியில் அடங்கிய குடத்தனை, அம்பன் - நாகர்கோயில், குடாரப்பு, செம்பியன்பற்று, ஆகிய ஊர்கள் முறையே தென்மராட்சியின் வரணி, எழுதுமட்டுவாள், பச்சிலைப்பள்ளியின்  முகமாலை, தம்பகமை ஆகிய கோவிற்பற்றுப் பிரிவுகளிலும் அடங்கியிருந்ததை நிலப்படத்திலிருந்து அறியமுடிகிறது. அதேவேளை, ஆழியவளை, உடுத்துறை என்பனவும் அயலில் உள்ள வேறு சில ஊர்களும் பச்சிலைப்பள்ளியின் முள்ளிப்பற்றுக் கோவிற்பற்றுக்குள் அடங்கியிருந்தன.




படம்-2: லையுசிக்காமின் நிலப்படத் தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் நிலப்படத்திலிருந்து பெருப்பிக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாடு

 தீவுப் பகுதியில் பெரிய தீவான வேலணைத் தீவு மட்டுமே மூன்று கோவிற்பற்றுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை அல்லைப்பிட்டி, வேலணை, ஊராத்துறை (ஊர்காவற்றுறை} என்பன. இதைத் தவிர ஏனைய மக்கள் வாழும் தீவுகளான காரைதீவு (தற்போதைய காரைநகர்), புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, இரணை தீவு என்பன தனித்தனிப் பிரிவுகள். இவற்றை நிலப்படம் தெளிவாகக் காட்டுகிறது.

## மன்னார்த்தீவும் அயற் பகுதிகளும்

யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சியின் கீழ் வருவதற்கு 59 ஆண்டுகளுக்கு முன்னரே மன்னார்த் தீவைத் தமது நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்துவிட்டனர். அத்துடன், மன்னார்த் தீவுக்கு எதிர்ப்பக்கம் தலைநிலத்தில் இருந்த மாதோட்டமும் சில அயல் பகுதிகளும்கூடப் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. ஒல்லாந்தர் மன்னாரைக் கைப்பற்றியபோது, மாதோட்டம், நானாட்டான், முசலிப்பற்று ஆகியவற்றுடன் செட்டிகுளத்தின் ஒரு பகுதியும் மன்னார்த் தளபதியின் ஆளுகைக்குள் இருந்தன. இந்தச் செட்டிகுளப் பகுதியே நிலப்படத்தில் பறங்கிச் செட்டிகுளம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒல்லாந்தரின் நேரடிக் கட்டுப்பாட்டிலிருந்த மன்னார்த் தீவிலும் மன்னார் நகரம், தோட்டவெளி, மீனவர் குடியிருப்பு, புனித பீட்டர், கரிசல், பேசாலை, தலைமன்னார் ஆகிய ஏழு கோவிற்பற்றுகளின் எல்லைகளையும் நிலப்படம் காட்டுகிறது. (படம்3) அத்துடன், ஒல்லாந்தரின் நேரடி ஆளுகைக்குள் அடங்கியதாக வன்னிப் பெருநிலப்பரப்பின் மேற்குக் கரையோரமாக அமைந்த முசலிப்பற்று, நானாட்டான், மாதோட்டம், பெருங்கழிப்பற்று, இலுப்பைக்கடவை, பல்லவராயன்கட்டு, பூனகரி, கரைச்சி ஆகிய கோவிற்பற்றுகளையும் பறங்கிச்செட்டிகுளம் பிரிவையும் நிலப்படத்தில் காட்டியுள்ளனர். எனினும், பெருங்கழிப்பற்று, இலுப்பைக்கடவை, பூனகரி ஆகிய கோவிற்பற்றுகளில் அடங்கிய சில ஊர்களை மட்டும் “A” என்னும் எழுத்தால் குறித்துள்ளனர். அக்காலத்தில் பெருங்கழிப்பற்றில் 4 துணைப்பிரிவுகளும், இலுப்பைக்கடவையிலும் பூனகரியிலும் ஒவ்வொன்றிலும் 6 துணைப்பிரிவுகளும் இருந்தபோதிலும், பெருங்கழிப்பற்றில் புதுக்குளம், கோனென்குளம், கோயில்குளம் ஆகிய மூன்று துணைப்பிரிவுகளும்; இலுப்பைக்கடவையில் திகாலி, ஆத்திமோட்டை, கல்நாட்டி ஆகிய துணைப்பிரிவுகளும்; பூனகரியில் தியாகமும் மட்டுமே இவ்வாறு குறித்துக் காட்டப்பட்டவை. நிலப்படத்திலுள்ள விளக்கக்குறிப்பிலும்




**படம்-3: லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் நிலப்படத்திலிருந்து பெருப்பிக்கப்பட்ட மன்னார்த்தீவு**

இவ்வாறு காட்டியுள்ளதுபற்றிய தகவல் உள்ளது. இந்த ஏழு துணைப்பிரிவுகளை மட்டும் இவ்வாறு சிறப்பாகக் குறித்ததற்குக் காரணம் தெரியவில்லை.

## வன்னிப் பிரிவுகள்

வன்னியில் ஒல்லாந்தரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வராத வன்னிப் பகுதி பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் குறிப்பிட்ட எண்ணிக்கையான யானைகளை வழங்கவேண்டும் என்ற நிபந்தனையின்கீழ், வெவ்வேறு வன்னியர்களின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. இதற்காகக் குறித்த வன்னியர்கள் மொத்தமாக ஆண்டுக்கு 42 ½ யானைகளை ஒல்லாந்தருக்கு வழங்கவேண்டும். யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றிய காலத்திலிருந்தே இந்த நடைமுறை மாற்றமின்றிப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.[4]

ஆனால், பிரிவுகளின் எண்ணிக்கையும் எல்லைகளும் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்ததைப் போர்த்துக்கேய ஆவணங்களும், பல்வேறு காலகட்டங்களில் பதவியிலிருந்த ஒல்லாந்த ஆளுனர்களும் கட்டளைத் தளபதிகளும் எழுதிய குறிப்புகளும் காட்டுகின்றன.

போர்த்துக்கேயர் காலத்தில் தென்னமரவடி, முள்ளியவளை, கருநாவற்பற்று, பனங்காமம் ஆகிய நான்கு பிரிவுகள் இருந்ததாக கேரோஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.[5] 1658 -1665 காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் தளபதியாகப் பதவி வகித்த அந்தனி பவிலியன் என்பார் உர்கன் (உறுகரைப்பற்று), கரிக்கட்டுமூலை, மேல்பற்று, விளாங்குளம், தென்னமரவடி, முள்ளியவளை ஆகிய ஆறு பிரிவுகளைக் குறிப்பிட்டுள்ளார்.[6] 17 ஆம் நூற்றாண்டில் 1690 க்கு முன்னர் வரையப்பட்ட பல நிலப்படங்கள் உறுகரைப்பற்று, கருநாவல்பற்று, மேல்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, தென்னைமரவடி ஆகிய ஆறு பிரிவுகளைக் காட்டுகின்றன.


1697 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி சுவார்டெக்குரூன் தனது வழிகாட்டற் குறிப்பில் பனங்காமம், பெரியவிளாங்குளம், புதுக்குடியிருப்பு, கரிக்கட்டுமூலை, மேல்பற்று, முள்ளியவளை கருநாவற்பற்று, தென்னமரவடி ஆகிய எட்டுப் பிரிவுகளைக் குறித்துள்ளார்.[7] இங்கே எடுத்துக்கொண்ட 1719 ஆம்

போர்த்துக்கேயர் காலத்தில் பனங்காமத்தின் ஒரு பகுதியாக இருந்த உறுகரைப்பற்றின் பெயர், இடைக்காலத்தில் பனங்காமத்துக்குப் பதிலாகப் பயன்பட்டதையும், 1690 இற்குப் பின்னர் உறுகரைப்பற்று என்னும் பெயர் பயன்பாடற்றுப்போய்ப் பனங்காமம் என்ற பெயர் திரும்பவும் பயன்பாட்டுக்கு வந்ததையும் நிலப்படங்கள் காட்டுகின்றன.

ஆண்டின் நிலப்படம் பெரியவிளாங்குளம் என்னும் ஊரைப் பனங்காமப் பிரிவுக்குள் காட்டுகிறது. நிலப்படத்தின்படி, இது பனங்காமப்பற்றின் வடகிழக்கு மூலையை அண்டி, கருநாவற்பற்றின் தெற்கு எல்லைக்கு அருகில் அமைந்துள்ளது. எனவே, இது பனங்காமத்தின் துணைப்பிரிவு எனக் கருதலாம். ஒல்லாந்தரின் நேரடி ஆளுகைக்குள் வராத வன்னி ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாக ஒல்லாந்த ஆளுனர் ஹென்ட்றிக் பெக்கர் 1716 இல் எழுதிய வழிகாட்டற் குறிப்பொன்றில் குறிப்பிட்டுள்ளார். பனங்காமம், கருநாவற்பற்று, மேல்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, தென்னமரவடி ஆகியவையே அவர் குறிப்பிட்ட பிரிவுகள்.[8] ஆனால், நிலப்படம் கூடுதலாகப் புதுக்குடியிருப்பையும் சேர்த்து ஏழு பிரிவுகளைக் காட்டுகிறது. (படம்4) இது சுவார்டெக்குரூன் குறிப்பிட்டுள்ள பிரிவுகளை ஒத்திருக்கிறது. கரிக்கட்டுமூலையின் பகுதிகள் தொடர்ச்சியாக அமையாமல் இரண்டு தனித்தனித் துண்டுகளாக இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. இரண்டுக்கும் இடையில் மேல்பற்று, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய பிரிவுகள் உள்ளன.

போர்த்துக்கேயர் காலத்தில் பனங்காமத்தின் ஒரு பகுதியாக இருந்த உறுகரைப்பற்றின் பெயர், இடைக்காலத்தில் பனங்காமத்துக்குப் பதிலாகப் பயன்பட்டதையும், 1690 இற்குப் பின்னர் உறுகரைப்பற்று என்னும் பெயர் பயன்பாடற்றுப்போய்ப் பனங்காமம் என்ற பெயர் திரும்பவும் பயன்பாட்டுக்கு வந்ததையும் நிலப்படங்கள் காட்டுகின்றன. அதேவேளை, 1719 இற்குப் பிற்பட்ட நிலப்படங்களே புதுக்குடியிருப்பை ஒரு தனிப் பிரிவாகக் காட்டுகின்றன. முன்னர் புதுக்குடியிருப்பு முள்ளியவளைப் பிரிவுக்குள் அடங்கியிருந்ததாகத் தெரிகிறது.

நிலப்படம் வன்னிப் பிரிவுகளின் எல்லைகளைக் குறித்துக்காட்டுவதால், அவற்றின் அளவுகளை ஒப்பிட முடிகிறது. பனங்காமம் எல்லாவற்றிலும் பெரிய பிரிவு. கருநாவற்பற்று, மேல்பற்று, கரிக்கட்டுமூலை என்பன அதற்கு அடுத்த நிலையில் காணப்படுகின்றன. புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, தென்னமரவடி ஆகிய பிரிவுகள் ஒப்பீட்டளவில் சிறியவை. நிலப்படத்தில் விளக்கக் குறிப்பில் உள்ளபடி, மேற்படி ஏழு




படம் - 4: 1719 ஆம் ஆண்டில் லையுசிக்காமின் நிலப்படத் தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் கட்டளையகத்தைக் காட்டும் நிலப்படத்தின்படி வன்னிப்பிரிவுகளைக் காட்டும் படம்.

பிரிவுகளையும் சுற்றிலும் உள்ள இளநீல நிற விளிம்பு, இவை ஒல்லாந்தரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காதவை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. அத்துடன், நிலப்படம் ஏராளமான ஊர்களைக் குறித்துக்காட்டுவதால், அக்காலத்தில், வெவேறு பிரிவுகளுக்குள் அடங்கியிருந்த ஊர்கள் எவை என்பதையும் தெளிவாக அறிய முடிகின்றது.

**குறிப்புகள்**


1. Rob van Diessen and Bert Nelemans, Comprehensive Atlas of the Dutch United East India Company – IV Ceylon (Voorburg: Asia Maior/ Atlas Maior, 2010), 240A.

2. R. L. Brohier, "Ceylon in Maps, The Journal of the Dutch Burgers Union, vol XXXII, no. 2 (October 1942), 82.

3. Memoir of Hendrick Zwaardecroon, Commandeur of Jaffnapatam 1697, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer, 1911), 18.

4. Memoir of Hendrick Zwaardecroon, 5.

5. Fernao De Queyroz, The Temporal and Spiritual Conquest of Ceylon vol I, trans. S. G. Perera (New Delhi: Asian Educational Services, 1992), 51.

6. Instructions from the GovernorGeneral and Council of India to the Governor of Ceylon 16561665, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer, 1908), 110111

7. Memoir of Hendrick Zwaardecroon, 6.

8. Memoir of Hendrick Becker, Governor and Director of Ceylon for the Successor Isaac Augustyn Rumpf 1716, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer, 1914), 15.


(தொடரும்)

‘இலங்கையில் பௌத்தம்’ என்னும் இந்தத்தொடர் பௌத்தம் பற்றி மானிடவியலாளர்களாலும் சமூகவியலாளர்களாலும், அரசியல் விஞ்ஞானிகளாலும் எழுதப்பட்ட ஆய்வுகள் பற்றி அறிமுகம் செய்வதாக அமைகின்றது. குறிப்பாக 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் பௌத்த சமய சீர்திருத்தவாதம், சமூகம், பண்பாடு, அரசியல், இன உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களில் அரசியல் பௌத்தத்தின் வகிபாகம் என்பன பற்றி ஆய்வாளர்களின் கருத்துக்கள் விரிவாக இந்தத் தொடரில் நோக்கப்படும். கணநாத் ஒபயசேகர, ஸ்டான்லி ஜே. தம்பையா, எச். எல். செனவிரத்தின, கித்சிறிமலல் கொட, சரத் அமுனுகம, ஜயதேவ உயன்கொட, குமாரி ஜயவர்த்தன, லெஸ்லி குணவர்த்தன ஆகிய இலங்கையின் சமூக விஞ்ஞானிகளின் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் , ஹவ்வார்ட் றிஜின்ஸ், உர்மிலா பட்னிஸ், றிச்சார்ட் கொம்பிரிட்ஜ், யொனதன் ஸ்பென்சர் முதலிய இலங்கையரல்லாத ஆய்வாளர்களின் ஆய்வுகள் சிலவும் இந்தக் கட்டுரைத்தொடரில் விமர்சன நோக்கில் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.



கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# போருக்குப் பின் சிங்கள பௌத்தர்களின் உணர்வு நிலை

# நூல் அறிமுகம்

போருக்குப் பின் சிங்கள பௌத்தர்களின் உணர்வு நிலை’ (*History After the War Historical Consciousness in the Collective Sinhala Buddhist Psyche in Post war Sri Lanka*) என்ற தலைப்பிலான நூலை கலாநிதி. நிர்மால் ரஞ்சித் தேவசிறி வெளியிட்டார். இந் நூலை அவர் எழுத முன்னர், ‘போருக்குப் பின் வரலாறு : நல்லிணக்கத்திற்கு எதிரான சவால்’ எனும் கட்டுரையை *ground views* (*ground views.org*) இணைய சஞ்சிகையில் 12 ஆண்டுகளுக்கு முன் (02/25/2012) வெளியிட்டார். வடக்குக் கிழக்கின் சிங்கள பௌத்த மரபுரிமை கருத்தியலின் பிரசார வலிமையை எடுத்துக்காட்டும் சிறந்த உதாரணத்தை தேவசிறி அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

வட பகுதி யாத்திரைக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ்வண்டியில் ‘இது கௌதம புத்தரின் இராச்சியம்’ (மே கௌதம புத்த ராஜ்ஜிய) என்ற வாசகம் பொறிக்கப்பட்ட ‘ஸ்ரிக்கர்’ ஒட்டப்பட்டிருந்தது. இது சிங்கள பௌத்தர் இராச்சியம் என்ற செய்தி தமிழர்களை நோக்கி சொல்லப்பட்டதா? அப்படியாயின் சிங்கள அறிவு அற்றவர்களுக்கு ஏன் சிங்கள மொழியில் இதனைச் சொல்ல வேண்டும்? சாதாரண சிங்கள மக்கள் மனதில் வடக்குக் கிழக்கு உங்களுக்கு உரியதே என்ற கருத்தை ஆழப் பதிப்பதற்காக இது செய்யப்பட்டது என்பதையும் தேவசிறி விளக்கியிருந்தார். ஆதலால் இது திட்டமிடப்பட்ட செயல் என்பது அவரது வாதமாகும்.

தேவசிறியின் கட்டுரையின் கருத்துக்களை மறுதலிக்கும் வகையில் கலாநிதி. இராஜசிங்கம் நரேந்திரன் ‘கிறவுண்ட் வியூஸ்’ இணையத்திற்கு பதிவு ஒன்றை அனுப்பினார். அப்பதிவில் ஒரு பகுதி பின்வருமாறு இருந்தது,

“பெரும்பான்மையினரான சிங்கள - பௌத்தர்களை இவ்விதமான நோயியல் கூறுடைய மனம் கொண்டவர்கள் என்று குற்றம் சுமத்துவது தவறு. பல பத்து ஆண்டுகளாக தாம் போகமுடியாது இருந்த யாழ்ப்பாணத்திற்கு, இத்தீவின் ஒரு பகுதிக்குப் போய் அங்கு யுத்த அழிவுகளைப் பார்க்கவும், விடுதலைப் புலிகளின் யுத்த யந்திரத்தினதும் ஆட்சியினதும் மிச்சங்களையும் பார்வையிடவுமே அவர்கள் செல்கிறார்கள். நாகதீபத்திலும் நல்லூரிலும் சென்று வழிபடுவதும் கருவாடு, திராட்சைரசம், பனாட்டு, பனங்கட்டி என்பனவற்றை கொள்வனவு செய்வதும் அவர்களது விருப்பமாகும். சிலர் அங்கு பனங்கள்ளுக் குடிக்கவும் விரும்புவார்கள்.”

“பலர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயாரை அவர் உயிரோடு இருந்தபோது போய்ப் பார்த்தார்கள். அவருக்கு அப்பிள், திராட்சை பழங்களை அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டைப் பார்ப்பதற்கும் பலர் ஆவல் கொண்டார்கள். அங்குபோய் கையில் ஒரு பிடி மண்ணை எடுத்தும் சென்றனர்.”

“இக்கருத்து மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது நியாயமானது போல் தோன்றலாம். தனிநபர்களின் செயல்களை, அத் தனிநபர்களின் ஆசைகள், விருப்பங்கள், உணர்வுகளின் விளைவாகப் பார்க்காமல் ‘கருத்தியல்’ (Ideology) என்று வருணிப்பதும் ‘நோய்க்கூறான (Pathological) மனம்’ என்பதும் விதண்டாவாதம் அல்லவா?” என்று இப்பதிவைச் செய்தவர் வாதிட்டார்.

இவ்வாதம் கருத்தியல் என்றால் என்ன என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் சந்தர்ப்பத்தைத் தேவசிறிக்கு வழங்கியது.

தனி நபர்களின் செயல்கள் ‘தனிப்பட்டவை’, நடைமுறை (Practical) சார்ந்தவை. ஆகையால் அவற்றுக்குக் கருத்தியல் முக்கியத்துவம் கிடையாது என்றால், மனிதரின் எந்தச் செயலையும் கருத்தியல் சார்புடையது என்று கூறவே முடியாது என்று குறிப்பிடும் தேவசிறி, பிரடரிக் யேம்சன் என்ற மார்க்சிச சிந்தனையாளரின் மேற்கோள் ஒன்றை எடுத்துக்காட்டுகிறார்.

“தனி நபருக்கும் சமூகத்திற்கும், பகுத்தறிவுக்கும் அடிமன எண்ணங்களுக்கும், தனிப்பட்டதற்கும் பொதுக்களத்திற்கு உரியதற்கும் இடையே உள்ள இடைவெளிகளை இட்டு நிரப்புவதே கருத்தியல் (Ideologies of Theory, Verso London, 2008, பக். 7)”




Image source - www.ices.lk

சில தனி நபர்களின் அடிமன எண்ணங்களாகவோ தனிப்பட்ட அபிப்பிராயங்களாகவோ இருந்த விருப்பங்கள், ஆசைகள் என்பனவற்றை சிங்கள சமூகத்தின் பொதுக் களத்தின் பகுதியாக, வடக்குக் கிழக்கின் சிங்கள பௌத்த மரபுரிமைக் கருத்தியலாகக் கட்டமைத்து வரலாற்று நியாயங்கள் முன்வைப்பதே தலயாத்திரை இயக்கத்தின் பின்புலம் என்பதைத் தேவசிறி எடுத்துக் காட்டுகிறார்.

தேவசிறி, இணையத்தளத்தில் எழுதிய கட்டுரையை விரிவாக்கி மேற்குறித்த சிறு நூலை 2013 யூலை மாதம் பிரசுரித்தார். அந்த நூல் ‘History After the War’ என்பதாகும். ஆங்கில நூல்களிற்கு தலைப்பு இடும் போது பிரதான தலைப்பு ஒன்றும் நீண்ட உப தலைப்பும் குறிப்பிடும் வழக்கத்தைப் பின்பற்றி ‘Historical consciousness in the collective Sinhala - Buddhist Psyche in post war Sri Lanka’ என உப தலைப்பும் இடப்பட்டுள்ளது. இந்நூலை கொழும்பு ICES நிறுவனம் பிரசுரித்துள்ளது. A4 தாளில் 22 பக்கங்களைக் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது.

போருக்குப் பிந்திய இலங்கை அரசியல் சூழ்நிலையில் சிங்கள - பௌத்த கருத்தியலில் வெளிப்பட்ட இரு போக்குகளை தேவசிறி ஆராய்கிறார். தேவசிறியின் கருத்துக்களை பின்வரும் தலைப்புகளின் கீழ் இக் கட்டுரையில் விளக்கலாம் எனக் கருதுகிறேன்.

1. வடக்குக் கிழக்கின் புவிவெளி (Space) பற்றிய சிங்கள பௌத்தக் கருத்தியல்.
2. 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற மனிதாயப் பேரழிவுக்கு (Humanitarian Disaster) கருத்தியல் வழியான பதிற்குறி.

## வடக்கு கிழக்கின் புவிவெளி (Space)

இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் இரு தேசியவாதங்கள் தோன்றின. ஒரு தேசியவாதம் சிங்கள பௌத்த தேசியவாதமாகும். இது அநகாரிக தர்மபால போன்ற சிங்கள பௌத்த தேசியவாதிகளால் கருத்தியலாக வடிவமைக்கப்பட்டது. இன்னொரு தேசியவாதம் தமிழ்த் தேசியவாதம் ஆகும். தமிழ்த் தேசியவாதம் காலத்தால் பிந்தியது. 1948 இன் பின்னர் தோன்றியது. சமஷ்டி முறையிலான சுயாட்சியே தம் பிரச்சினைகளுக்கு விடிவைத் தரும் என நம்பிய தமிழர்கள், தமது பிரதேசமான வடக்குக் கிழக்கு பகுதியை தமிழர் தாயகம் (Tamil Homeland) என்று கூறினர். தமிழர் தாயகம் என்ற கருத்து இலங்கையின் புவிவெளியின் (Space) ஒரு பகுதியை ஒரு தேசிய இனம் தனது இருப்புக்கு ஆதாரமான வாழ்விடமாகக் கொள்வதைக் குறிக்கும். அவ்வாழ்விடம் இன்று அம் மக்கள் வாழும் இடமாக மட்டுமன்றி நீண்ட வரலாற்றுக் கால வாழ்விடமாக, மரபுரிமையாக (Heritage) பெறப்பட்டதுமாகும். தமிழர் தாயகக் கருத்துக்கு எதிராக தோன்றிய கருத்தியல் அண்மைக்காலத்திய 'வடக்குக் கிழக்கின் சிங்கள பௌத்த மரபுரிமை' (Sinhala Buddhist Heritage of North East) என்ற வடிவத்தைப் பெற்றது.

2009 ஆம் ஆண்டு போரின் முடிவில் தமிழர் தமது தாயகம் எனக் கோரிய புவிவெளியை அரச இராணுவம் முழுமையாகக் கைப்பற்றிவிட்டது. 'வடக்குக் கிழக்கின் சிங்கள பௌத்த மரபுரிமை' என்ற கருத்தியல், வரலாற்று நியாயங்களைக் காட்டி இப் புவிவெளியின் சிங்கள - பௌத்த மரபுரிமையை நிலை நிறுத்துவதற்கான முயற்சியென்பதை தேவசிறி இந்நூலில் எடுத்துக்காட்டுகிறார். 'வடக்குக் கிழக்கின் சிங்கள பௌத்த மரபுரிமை' என்ற கருத்தியல் முன்வைக்கும் வாதம் 'வரலாறு' பற்றியதாக வெளியே தோன்றலாம். ஆனால் அரசியல் நோக்கம் கொண்டது என்பதையும் தேவசிறி சுட்டிக் காட்டுகின்றார். இதன் அரசியல் நோக்கம் யாது? பிரிவினைக் கோரிக்கையை இராணுவ வெற்றி முறியடித்துவிட்டது. ஆயினும் 'வடக்குக் கிழக்கு தமிழர்களின் தாயகம்' எனும் கோட்பாடு முழுமையாக கருத்தியல் மட்டத்தில் தோற்கடிக்கப்படாவிட்டால் வடக்குக் கிழக்கை ஒரு அலகாகக் கொண்டு அதிகாரப் பகிர்வையோ சமஷ்டி முறைத் தீர்வையோ தமிழர் கோரலாம். அதில் வெற்றி பெற்றுவிடலாம் அல்லவா? தமிழர்களின் வடக்குப் பகுதியை நோக்கிய தலயாத்திரைக்குப் புறப்பட்ட போக்குவரத்துச் சபை பஸ்ஸில் சிங்களத்தில் ஒட்டப்பட்டிருந்த வாசகம் பற்றி இக் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டோம். அது அரசியல் உள்ளடக்கம் கொண்ட வாசகம் என்பது வெளிப்படையானது.

## கந்தரோடை 'கதுறுகொட' ஆதல்

தமிழர்களால் கந்தரோடை என அழைக்கப்படும் யாழ்ப்பாணக் கிராமத்தின் பெயர் இப்போது 'கதுறுகொட' ஆகியுள்ளது. பெருங்கற்கால நாகரிகம் செழித்திருந்த வழுக்கியாறு பகுதியில் அமைந்துள்ள இக்கிராமத்தின் புதைபொருள் சின்னங்கள் உள்ள இடம் 'கதுறுகொட விகாரய' என்ற பெயரில் யாத்திரைத் தலமாக இன்று காட்சியளிக்கிறது. இங்கு உருவாக்கப்பட்டுள்ள புவிவெளியை சிங்கள - பௌத்த புவிவெளி (Sinhala Buddhist Space) என தேவசிறி குறிப்பிடுகிறார். இலங்கை இராணுவத்தின் முகாம் ஒன்று இந்த இடத்தின் அருகே இருப்பதையும் அவ்விடம் பாதுகாப்பாக உள்ளதையும் பெருந் தொகையான கிராமப்புறச் சிங்களவர்கள் இங்கு வந்து போகின்றார்கள் என்பதையும் தேவசிறி குறிப்பிடுகிறார்.

சிங்கள பௌத்த பிரபஞ்சவியலில் 'தம்பதிவ' என்ற ஒரு கற்பனையான உலகம் (Imagined Cosmos) உள்ளதாக தேவசிறி குறிப்பிடுகிறார். இந்த உலகத்தில் வட இந்தியாவிலும், நேபாளத்திலும் உள்ள பௌத்த தலங்கள் உள்ளடங்கியுள்ளன. இந்தத் தலங்களைத் தரிசிக்கச் செல்வோர் இந்தியாவிற்கான 'விசாவுடன்' விமானம் ஏறினாலும் பேச்சு வழக்கில் 'இந்தியா செல்கிறேன்' என்று கூறுவதில்லை. 'தம்பதிவ




**கந்தரோடை பெயர்ப்பலகை**

Image source - sundayobserver.lk

> **தமிழர்களால் கந்தரோடை என அழைக்கப்படும் யாழ்ப்பாணக் கிராமத்தின் பெயர் இப்போது 'கதுறுகொட' ஆகியுள்ளது. பெருங்கற்கால நாகரிகம் செழித்திருந்த வழுக்கியாறு பகுதியில் அமைந்துள்ள இக்கிராமத்தின் புதைபொருள் சின்னங்கள் உள்ள இடம் 'கதுறுகொட விகாரய' என்ற பெயரில் யாத்திரைத் தலமாக இன்று காட்சியளிக்கிறது. இங்கு உருவாக்கப்பட்டுள்ள புவிவெளியை சிங்கள - பௌத்த புவிவெளி (Sinhala Buddhist Space) என தேவசிறி குறிப்பிடுகிறார்.**

யனவா' என்றே கூறுவர். வெளிநாடொன்றுக்குச் செல்வோர் உபயோகிக்கும் 'றட்ட யனவா' (வெளிநாடு செல்கிறேன்) என்ற தொடரை 'தம்பதிவ' பயணத்தின் போது பௌத்தர்கள் உபயோகிப்பதில்லை என்றும் தேவசிறி கூறுகின்றார். 'தம்பதிவ' என்பது கற்பனையான 'Cosmos' பற்றியது என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார்.

1920களில் இந்தியாவில் உள்ள பௌத்த தலமான புத்தகயாவை மீட்க வேண்டும் என அநகாரிக தர்மபால இயக்கம் நடத்தினார். புத்தகயா புனிதப் பிரதேசம் அப்போது இந்து ஒருவரின் தனிப்பட்ட காணியாக இருந்தது. 'விழித்தெழுமின், புத்தகயாவை மீட்டெடுங்கள்' என்று தர்மபால அறைகூவல் விடுத்ததை குறிப்பிடும் தேவசிறி, புத்தகயாவை மீட்டெடுத்தல் தனிநபர் ஒருவரிடமிருந்த பௌத்த சமயத்தினரின் மரபுரிமைச் சொத்தை மீட்பதற்கான நியாயமான கோரிக்கையே எனக் கூறுகிறார். இந்த அறைகூவல் இந்திய நாட்டின் பிரதேசம் ஒன்றின் மீது அந்நாட்டிற்குள்ள நியாயாதிக்கத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் கோரிக்கை என்பதையும் தேவசிறி குறிப்பிடுகிறார். 'தம்பதிவ' என்ற சமயச்சார்புடைய புவிவெளி பற்றிய கருத்தை வடக்குக் கிழக்கின் பௌத்த புவிவெளியுடன் ஒப்பிட்டும் தேவசிறி முக்கியமான கருத்தொன்றைப் பதிவு செய்கிறார். 'தம்பதிவ'வில் உள்ளடங்கிய பௌத்த மரபுரிமை இடங்களின் நியாயாதிக்கம் இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் உரியது. அதைத் தட்டிக் கேட்கும் எண்ணம் சிங்கள பௌத்த மக்களிடம் கிடையாது. ஆனால் வடக்குக் கிழக்கில் இருக்கும் மரபுரிமை இடங்கள் என சிங்கள பௌத்தர் கருதும் இடம் கற்பனை செய்யப்படும் இடமாக (Imagined Territory) உள்ள போதும், கற்பனை என்ற எல்லைக் கோட்டையும் கடந்து அரசின் நியாயாதிக்கத்தை (Jurisdictional Authority of the State) உபயோகித்து தமதாக்கிக் கொள்ளக்கூடியவை என்பதையும் தேவசிறி குறிப்பிடுகிறார்.

### மனிதாயப் பேரழிவும் அதற்கான கருத்தியல் பதிற்குறியும்

போரினால் ஏற்பட்ட அழிவு சிங்கள பௌத்தர்களின் கூட்டு மனச்சாட்சியை (Collective Conscience) உறுத்துகிற விடயமாகும். இதன் பதிற்குறிகளையும் கருத்தியல் வெளிப்பாடுகளில் காணலாம் என்பதை தேவசிறி எடுத்துக் காட்டுகிறார்.

மனிதாயப் பேரழிவுக்கான பதிற்குறி 'நீதியான யுத்தம் (Just War)' என்ற கருத்தியலாக வெளிப்பட்டது. இந் நீதியான யுத்தம் எனும் கருத்தியலுக்கு துட்டகைமுனு என்ற பெரு வீரனுக்கும் எல்லாளனுக்கும் நடைபெற்ற போர் அதிசிறந்த உதாரணமாகும். சிங்கள பௌத்த புத்திஜீவிகளான சிலர் துட்டகைமுனு - எல்லாளன் போருக்குப் புத்துயிரும், புதுவடிவமும்

கொடுத்து விளக்கங்கள் அளிக்கலாயினர். இவர்களில் எல்லாவல மெத்தானந்த தேரரும் நளின் டி. சில்வாவும் முக்கியமானவர்கள். இவர்களின் எழுத்துக்கள் கட்டுரை வடிவில் வெளியாகின. மகாவம்சத்தில் விபரிக்கப்படும் துட்டகைமுனு என்ற சிங்கள வீரனைக் கதாநாயகனாகக் கொண்ட நாவல் ஒன்றை - ஜயந்தா சந்திரசிறி என்ற பிரபல சிங்கள எழுத்தாளர் எழுதினார். சந்திரசிறியின் நாவலின் தலைப்பு 'மகாராஜ கமுனு (பேரரசன் கைமுனு)' என்பதாகும். இந்நாவல் 2011 இல் வெளியாயிற்று, கட்டுரைகள் வடிவில் வெளிப்பட்ட 'நீதியான யுத்தம்' கருத்தியலை விட சந்திரசிறியின் நாவல் இலக்கிய நயத்துடன் சுவாரசியமாக இக்கருத்தியலைப் புகுத்தும் நோக்கம் கொண்டது என்பதை தேவசிறி இந்த நாவலின் கருப்பொருளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் விளக்குகிறார். மகாராஜ கைமுனு நாவல் துட்டகைமுனுவின் மனச்சாட்சியின் உறுத்தல்களை விசாரணை செய்வது. 1995 இல் சந்திரிகா பண்டாரநாயக்கவின் காலத்தில் முன்வைக்கப்பட்ட 'சமாதானத்திற்கான யுத்தம்' (War For Peace) என்ற கருத்திலிருந்து தோற்றம் பெற்ற இன்னொரு வடிவமே நீதியான யுத்தம் ஆகும். இது 2006 ஆம் ஆண்டில் மனிதாய நடவடிக்கை (Humanitarian Operation) என்று கூறப்பட்டதையும் தேவசிறி குறிப்பிடுகிறார். 1995 இல் சமாதானத்திற்கான யுத்தம் தொடங்கப்பட்டபோது அதற்குத் துணையாக 'வெண்தாமரை இயக்கம்' (சுதுநெளும் வியாபாரய) நடத்தப்பட்டது. வெண்தாமரை இயக்கத்தின் நோக்கங்கள் இரண்டாகும். அவை,

- போரை முன்னெடுத்துச் செல்வது.
- தமிழ்த் தேசியவாதத்தின் கோரிக்கைகளுக்கு 'அரசியல் தீர்வைக்' காண்பது.

சிங்கள பௌத்த தேசியவாதம் வெண்தாமரை இயக்கத்தின் முதலாவது நோக்கத்தை ஆதரித்தது. இரண்டாவது நோக்கமான 'அரசியல் தீர்வை' அது கடுமையாக எதிர்த்தது. 2006 ஆம் ஆண்டில் 'மனிதநேய நடவடிக்கை' தொடங்கப்பட்டபோது



**கந்தரோடை**

Image source - groundviews.org

அரசியல் தீர்வு என்ற விடயம் கைவிடப்பட்டது.

சந்திரசிறியின் நாவல் சிங்கள கலை இலக்கிய உலகில் புகுந்த காலத்திற்கு முன்பாக 2006 ஆம் ஆண்டில் கொழும்பு எல்பின்ஸ்டன் தியேட்டரில் 'ரத்னாவளி` என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. அவ்வாண்டு யூலை 26 ஆம் திகதி மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்தின் பிரதி சுனில் விஜயசிறிவர்த்தன என்ற இடதுசாரி எழுத்தாளரால் எழுதப்பட்டது. லிபரல் முற்போக்கு சிந்தனையுடையவர்களும் இடதுசாரிகளும் இணைந்து இந்த நாடகத்தை மேடையேற்றினர். தேவசிறி, 'ரத்னாவளி' நாடகத்தை சந்திரசிறியின் நாவலோடு ஒப்பீடு செய்கிறார். 'ரத்னாவளி' நாடகமும் துட்டகைமுனுவின் உறுத்தலுக்கு உள்ளாகும் மனச்சாட்சியை பிறிதொரு கோணத்தில் சிங்கள பௌத்தக் கருத்தியலுக்கு மாறுபட்ட வகையில் விசாரணை செய்வது. சந்திரசிறி, விஜயசிறிவர்த்தன என்போரின் இலக்கிய ஆக்கங்களை ஒப்பீட்டாய்வுக்கு உட்படுத்தவேண்டிய பொருத்தப்பாடு என்ன என்பதைத் தேவசிறியின் வார்த்தைகளில் பின்வருமாறு குறிப்பிடலாம்.

"மகராஜா கைமுனு, ரத்னாவளி என்ற இரண்டு இலக்கியப் பிரதிகளிலும் பிரதான கவனக்குவிப்பு துட்டகைமுனுவின் மனச்சாட்சியாகும். இதனை இப்பிரதிகள் துட்டகைமுனு - எல்லாளன் யுத்தத்தை மையப்படுத்தி பரிசீலிக்கின்றன (பக்.10)."

இவ்வாறு கூறிவிட்டு தேவசிறி துட்டகைமுனு எல்லாளன் யுத்தம் சிங்கள - பௌத்த மாயக் கற்பனை (*Fantasy*) என்று கூறுகிறார். இந்த மாயக் கற்பனை 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட கற்பனை என்றும் பின்னர் அது தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான இக்கால இனத்துவ முறுகலையும் மோதலையும் நவீனத்துக்கு முற்பட்ட காலத்து வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தித் தவறான விளக்கத்தைத் தர முற்படுகிறது என்றும் கூறுகிறார். சிறிவீர என்ற வரலாற்றாசிரியர் 2002 ஆம் ஆண்டு சிங்கள மொழியில் எழுதிய நூல் ஒன்றில் இருந்து மேற்கோள் ஒன்றை அவர் தந்துள்ளார். அவ் வரலாற்றாசிரியரின் கூற்று வருமாறு:



கலாநிதி. நிர்மால் ரஞ்சித் தேவசிறி

Image source - en.wikipedia.org

**"Dutugemunu and Elara were not partakers of a conflict between Tamil Hindus and Sinhala Buddhists, but they were those of a feudal power struggle"**

இக்கூற்றின் சாரமான கருத்தை பின்வருமாறு தமிழில் கூறலாம்.

"துட்டகைமுனு எல்லாளன் யுத்தம் தமிழ் இந்துக்களுக்கும் சிங்கள - பௌத்தர்களுக்கும் இடையிலான யுத்தம் அன்று. (இலங்கையில் அக்காலத்தில்) இரு நிலமானியக் குழுக்களிற்கிடையே ஏற்பட்ட அதிகார மோதலையே அவர்கள் இருவருக்கும் இடையிலான யுத்தம் பிரதிபலித்தது."

சிறிவீரவின் மேற்குறித்த கூற்றை ஆதாரம் காட்டும் தேவசிறி சந்திரசிறியின் நாவல் மட்டுமன்றி முற்போக்காளரான சுனில் விஜயசிறிவர்த்தனவின் நாடகமும் ஆதாரமற்ற கற்பனை ஒன்றைப் பற்றியதே என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

'ரத்னாவளி' நாடகத்தை ஒரு தடவை மட்டுமே மேடையேற்ற முடிந்தது. இடதுசாரிகளும், லிபரல் முற்போக்காளர்களும் இணைந்து மேற்கொண்ட இம்முயற்சி அவர்களிடையே ஏற்பட்ட உள் முரண்பாடுகள் காரணமாகக் கைவிடப்பட்டது என்றும் தேவசிறி குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

நிமால் ரஞ்சித் தேவசிறியின் நூல் சிங்கள பௌத்த தேசியவாதம் பற்றிய சிந்தனையை தூண்டும் ஆக்கமாகும். இது இலங்கையில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் விரும்பும் அனைவரும் படிக்க வேண்டிய நூல்.

'*Imagined Communities*' (கற்பிதம் செய்யப்பட்ட சமுதாயங்கள்) என்ற நூலின் ஆசிரியரான பெனடிக்ற் அன்டர்சன் தேசியவாத வரலாறுகளை 'உண்மையான நேர்வுகள், நாட்டார் வழக்குகள், பொய்ப்புனைவுகள் ஆகியவற்றின் வளம் மிக்க கலவை (*A rich amalgam of fact, Folklore and Fiction*) என்று குறிப்பிட்டார். இலங்கையின் பண்டைய காலம் பற்றிய தேசியவாத வரலாறுகளில் உண்மை நேர்வுகள் என்ற நெல்மணிகளை பொய்ப்புனைவுகள் என்ற குப்பை கூழங்களில் இருந்து பிரித்துப் பார்ப்பது மிகுந்த கடினமான பணி என்பதை தேவசிறியின் நூல் உணர்த்துகிறது.

வடக்குக் கிழக்கு தமிழர்களின் மரபுவழித் தாயகம் என்ற கருத்து கடந்த 80 ஆண்டு காலத்திற்கு முன்னர் தமிழர்களால் முன்வைக்கப்பட்டு, இப்போது வரலாற்று ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட கருத்தாக ஏற்புடைமை பெற்றுள்ளது. அதேவேளை, இலங்கையில் பரவிய பௌத்தம் தமிழர்களின் பௌத்தமாகவும், தமிழர்களால் போற்றப்பட்ட பௌத்தமாகவும் கூட இருந்து வந்தது என்றும், வட இலங்கையிலும் கிழக்கு இலங்கையிலும் 'தமிழ்ப் பௌத்தம்' பண்டைய நாளில் நிலைபெற்று இருந்தது என்றும் அண்மைக்கால ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. தமிழ் அறிஞர்களான கா. இந்திரபாலா, பொ. இரகுபதி, ஆ. வேலுப்பிள்ளை, சி. பத்மநாதன், பரமு. புஷ்பரட்ணம், சிவா. தியாகராஜா ஆகியோர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் 'தமிழ்ப் பௌத்தம்' பற்றிய ஆய்விற்கு வளம் சேர்த்து வருகின்றன. இப் பின்னணியில் ரஞ்சித் தேவசிறி அவர்களின் நூல் கருத்தியல்களின் பின்னால் உள்ள அரசியலை விளக்கிக் கூறுவதாக அமைகிறது.

குறிப்பு : மேற்படி நூலின் ஆசிரியர் கலாநிதி. நிர்மால் ரஞ்சித் தேவசிறி கொழும்புப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளராக இருந்தவர். தற்போது அப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார்.

*History After the War Historical Consciousness in the Collective Sinhala Buddhist Psyche in Post war Sri Lanka. Nimal Ranjith Dewasiri (ICES Colombo July 2013).*

(தொடரும்)

இலங்கை முஸ்லிம்கள் குறித்து பண்பாட்டு மானிடவியல் ரீதியான ஆய்வுகளை மானிடவியல் ஆய்வு மரபுகளைப் பின்பற்றி முறையான பரந்துபட்ட வகையில் மேற்கொண்டவர் பேராசிரியர் டெனிஸ் மெக்கில்ரே. அமெரிக்கரான டெனிஸ் மெக்கில்ரே கொலராடோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைப் பேராசிரியர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்த பரந்துபட்ட மானிடவியல் ஆய்வுகளை மேற்கொண்ட மேற்கத்தேயப் பேராசிரியர்களுள் மிக முக்கியமானவர் மெக்கில்ரே. குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பண்பாட்டு மானிடவியல் மரபுகள், தொன்மங்கள், பண்பாட்டுக் கூறுகள் குறித்த விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு அதனை உலகப் பரப்புக்குக் கொண்டு சென்றவர் என்ற வகையில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, மானிடவியல் மரபுகள், தொன்மங்கள் பற்றிய அவரது சமூகவியல் நோக்கிலான ஆய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் 'டெனிஸ் மெக்கில்ரே ஆய்வுகளில் தமிழரும் முஸ்லிம்களும் : பண்பாட்டு மானிடவியல் நோக்கு' எனும் தலைப்பில் வெவ்வேறு உப தலைப்புகளுடன் வெளிவரும்.

# அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்: இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம்

**பகுதி 4**




● ஜிஃப்ரி ஹாசன்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.


### இருபதாம் நூற்றாண்டில் சோனக இனத்துவ அரசியல்

நவீன காலத்தில், கேரளா மற்றும் தமிழக முஸ்லிம்கள் - அவர்களுக்கிடையில் கலாச்சார பன்முகத்தன்மை, உள்ளக சமூகப் பிரிவுகள் இருந்தபோதிலும் - தாங்கள் 'யார்' என்பதில் ஒரு நியாயமான பாதுகாப்பு சார்ந்த அச்சத்தை உணர்ந்தனர். இதற்கு மாறாக, இலங்கைச் சோனகரின் முன்னணி சமூகத் தலைமைகள், 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து, அவர்களின் உயிரியல் - கலாசாரத் தோற்றம் மற்றும் வளர்ந்து வரும் இனக்குழும அரசியல் அரங்கிற்குள் அவர்களின் இன அடையாளத்தை மிகவும் சாதகமாக வடிவமைத்தல் பற்றிய கேள்விகளால் அலைக்கழிந்தனர். முந்நூறு ஆண்டுகள் போர்த்துக்கேய மற்றும் டச்சு காலனிய ஆதிக்கம் நிலவிய காலப்பகுதியில் முக்கிய இந்திய முஸ்லிம் குழுக்களின் அமைப்புக்கள் துண்டிக்கப்பட்டன. ஆங்கிலேயருக்கு விசுவாசமாக இருந்ததால் சோனகர்களுக்கு சிங்களவர்கள் வாழும் பகுதியில் பிரபுத்துவம் செய்ய அனுமதிக்கப்பட்டது. இதற்கு நன்றிக் கடனாக மூர்கள் பிரித்தானிய அரசுக்கு விசுவாசமாக இருந்தனர். 1817-18 கண்டிக் கலகத்தின் போது மூர்களின் விசுவாசம் வெளிப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டின் முன் அரைப் பகுதியில், வணிகச் சுதந்திரம், நகர்ப்புறச் சொத்து உரிமைகள், அரச காணியை வாங்குதல் மற்றும் உள்ளூர் சோனகத் தலைவர்களை நியமித்தல் ஆகியவற்றை அனுமதிக்கும் பிரித்தானியரின் தாரண்மைக் கொள்கைகளை அவர்கள் படிப்படியாகப்



**இலங்கை மூர்கள்**

Image Source - www.formasup.fr

*பயன்படுத்திக் கொண்டனர். இருப்பினும், 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கைச் சோனகர்கள் எந்த அளவிற்கு சுயபிரக்ஞையையும் மற்றும் உள்ளக ரீதியாக ஒழுங்கமைந்த சிறுபான்மைச் சமூகக் கட்டமைப்பையும் கொண்டிருந்தனர் என்பதை மதிப்பிடுவது கடினம். பிரித்தானிய காலனித்துவ நிர்வாகிகள், மற்றும் சைமன் காஸிச் செட்டி (1834) போன்ற உள்ளூர் வர்த்தமானித் தொகுப்பாளர்களுக்காக சோனகர் எனப் புலப்படக்கூடிய ஒரு தனித்துவமான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வகையை உருவாக்கினர் என்பது மட்டும் தெளிவாகிறது.*

*மறுதலையாக அமீர் அலி, (அவரது வெளியிடப்படாத கலாநிதிப்பட்ட ஆய்வு; 19 ஆம் நூற்றாண்டிலும் மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கை வாழ் முஸ்லிம்களைப் பற்றிய மிக நுண்ணிய அவதானிப்பையும், விரிவான விளக்கத்தையும் அவ் ஆய்வறிக்கை வழங்குகிறது) இந்தப் புதிய காலனித்துவ வாய்ப்புகளை பூர்வீக சோனகர்கள் பயன்படுத்திக் கொண்டு தன்னளவில் ஒதுங்கி, உள்ளார்ந்த ஒரு சமூகமாக கட்டமைந்தனர் என்கிறார். அவர்கள் தங்களது வழக்கமான வாழ்வியல் பாரம்பரியத்தில் ஈடுபாட்டுடன் இருந்த அதேவேளை பள்ளிவாயல் போன்ற அமைப்புகள், சூஃபி மரபுகள் மற்றும் பாரம்பரிய ஆலிம்கள் போன்றோரின் செல்வாக்குள்ளவர்களாகவும் இருந்தனர். தவிர, காயல்பட்டினம், கீழக்கரை போன்ற இடங்களைச் சேர்ந்த பக்திமான்களான இந்திய முஸ்லிம் வர்த்தகர்கள்/மிஷனரிகள் ஆகியோரின் செல்வாக்கிற்கும் உட்பட்டிருந்தனர் என்பதையும் அவர் அவதானிக்கிறார். அப்போது கிறிஸ்தவ மிஷனரிகளால் மட்டுமே வழங்கப்பட்டு வந்த பொதுக் கல்வி, அச்சு ஊடகங்கள், ஆங்கில வழிக் கல்வி போன்றவற்றை வெறுத்து ஒதுக்கினர் (அலி 1980; சுக்ரி 1986c: 348ff).*

*1883 இல் பிரித்தானியரால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட மத வசீகரமிக்க எகிப்திய புரட்சியாளரான, அரபி பாஷா, இறுதியாக மதச்சார்பற்ற மேற்கத்தேய பாடத்திட்ட அடிப்படையிலான பாடசாலைகளை நிறுவும்*

முன்னெடுப்புக்கும், இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கான முன்னெடுப்புக்கும் ஊக்குவிப்பை வழங்கினார் (மஹ்ரூப் 1986b, 1986c). ஆனாலும் அது சிங்களவர்களை விடவும், அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் உள்ள கிறிஸ்தவ மிஷன் பள்ளிகளில் சேரத் தொடங்கிய தமிழர்களை விடவும் பின்தங்கியதாகவே இருந்தது. எப்படியிருந்தாலும் முஸ்லிம் கல்வி இயக்கம் மத நீக்கத்தையும், மேற்குக் கரையோர, நகர்ப்புற உயர் குழாத்தினரை மட்டுமே இலக்காகக் கொண்டதாகவுமே இருந்தது. கிழக்குக் கரையோர சோனக விவசாயிகளின் குழந்தைகளுக்காக ஒரு முஸ்லிம் பள்ளிக்கூடம் கூட நிறுவப்படவில்லை (சமரவீர 1978: 471).

ஆறுமுக நாவலர், அநாகரிக தர்மபால மற்றும் ஐரோப்பிய இறையியலாளர்களால் முன்னெடுக்கப்பட்ட, 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து பிற்பகுதி வரையிலான தமிழ் இந்து - சிங்கள பௌத்த கலாச்சார மறுமலர்ச்சிகள், முஸ்லிம்கள் ஒழுங்கமைக்கத் தொடங்குவதற்கு முன்பே சிறப்பாக நடந்து கொண்டிருந்தன.

இருந்தபோதும், நூற்றாண்டின் இறுதியில், மேற்கு கரையோர நகர்ப்புற முஸ்லிம் உயர் குழாத்தினர் பல்வேறு காரணங்களுக்காக 'இலங்கைச் சோனகர்' (Ceylon Moors) என்ற தனித்துவ அடையாளத்தை ஊக்குவிக்கத் தொடங்கினர். முதலாவதாக, Ceylon Moors ஆனது, பிரித்தானியரால் நிறுவப்பட்டு 100 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த முறையான இனவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையிலான சட்டசபைக்கான இடங்களுக்கான நியாயமான உரிமையை நிறுவியது (Nissan and Stirrat 1990: 2829). 1866 ஆம் ஆண்டிலேயே முஸ்லிம் பிரதிநிதிகள் (சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சிலர் நியமிக்கப்பட்டவர்கள்) உள்ளூர் மாநகராட்சி சபைகளில் பணியாற்றத் தொடங்கினர் (அசாத் 1993: 82). ஆனால் 1889 ஆம் ஆண்டு வரை மூர்கள், அகில இலங்கைக்குமான சட்ட சபையில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தமிழ் உறுப்பினரால் மௌன சம்மதமாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர். அத்தகைய கடைசித் தமிழ் உறுப்பினராக, சிங்கள மற்றும் தமிழ் தேசியவாதிகள் மத்தியில் செல்வாக்கு மிக்க நபராக (பின்னர் சேர்) பொன்னம்பலம் இராமநாதன் இருந்தார். எவ்வாறாயினும், 1880 களில், சோனகர்களும், சிங்கள பௌத்தர்களும் சிறந்த படித்த அல்லது அதிக செல்வாக்கு மிக்க இந்துக்கள் அல்லது கிறிஸ்தவர்கள் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை தடுக்கும் வகையில் தனித்தனியாக தங்களுக்கான பிரதிநிதித்துவக் கோரிக்கை விடுக்கத் தொடங்கினர் (வாக்னர் 1990: 67). 19 ஆம் நூற்றாண்டில் முக்கிய காலனித்துவ கருத்தாடல்களில், அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான அளவுகோலாக 'இனம்' கருதப்பட்டது (ரோஜர்ஸ் 1995).

1885 ஆம் ஆண்டு சட்ட சபையில் பொன். இராமநாதன் நுட்பமாக ஆற்றிய உரையில், சோனகர்களும், தமிழர்களும் மதத்தைத் தவிர மொழியியல் மற்றும் இனவியல் சார்ந்து ஒத்த கூறுகளைக் கொண்டவர்கள் என்றும், மூர்களும் தமிழர்களும் மதமாற்றம் மற்றும் கலப்புத் திருமணத்தின் விளைவாக பல நூற்றாண்டுகளாக பல கலாச்சார, மொழியியல் பண்புகளைப் பகிர்ந்து கொண்டனர் என்றும் எடுத்துக் கூறினார் (இராமநாதன், 1888). மூன்று ஆண்டுகள் கழித்து, Royal Asiatic Society இன் சிலோன் கிளையின் வெளியீடான 'The Ethnology of the Moors of Ceylon' இதழில் அதனை அவர் ஒரு கல்வியியல் கட்டுரையாக வெளியிட்ட போது, இராமநாதனின் கருத்துக்கள் பிரித்தானிய காலனித்துவ அரசின் அதிகாரத்தை தாமே பெற்றுக்கொள்வதற்கான எத்தனமாக தோன்றியிருக்கலாம்.

சோனகர்களும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களே என்ற அவரது நன்கு வாதிடப்பட்ட



அரபி பாஷா

Image Source - drshukri.lk

ஆனால் அரசியல் உள்நோக்கம் கொண்ட முடிவு, சட்டசபையில் ஒரு தனியான முஸ்லிம் பிரதிநிதிக்கான தங்களின் எதிர்பார்ப்புக்கு எதிரான 'திட்டமிடப்பட்ட நாச வேலை' யாகவே முஸ்லிம் தலைமைகள் அதனை உடனடியாகப் புரிந்துகொண்டன. தவிர, சோனகர்கள் மீது தமிழ் தலைமைகளின் ஆதிக்கத்தை தொடர்ந்தும் வைத்திருப்பதற்கான ஆய்வுசார் நியாயப்படுத்தலாகவும் புரிந்துகொண்டனர் (அலி 1980: 102n).

இத்தனைக்குமிடையில், அடித்தட்டு சாதி மக்களை தமிழர்களாக அங்கீகரிப்பதில் தயக்கத்தை வெளிப்படுத்தி வந்த, யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இருந்த பல 'உயர்சாதி' இந்துக்கள் விரும்புவதை விட, இராமநாதன் 'தமிழ்த்துவம்' (Tamilness) பற்றி ஓரளவு விரிந்த உள்ளடக்கத்துடனான வரைவிலக்கணத்தையே வெளியிட்டார்.

ஒரு வருடம் கழித்து பிரித்தானிய ஆளுநர் சட்டசபைக்கு ஒரு சோனகரை நியமித்தபோது இராமநாதனின் வியூகம் திடீரென தோல்வியடைந்தது. இருப்பினும் அவரது கட்டுரை, நாட்டின் பல கிராமப்புறங்களில் காணப்படும் தமிழ்க் கண்ணோட்டத்தை பிரதிபலிப்பதாகவே தோன்றியது. காலனித்துவ அரசியலின் குறுகிய சொல்லாட்சி வெளியில், இராமநாதனின் இனத்துவ ஆய்வறிக்கையின் தர்க்கம், சோனகர்கள் தங்களின் தமிழ்த் தன்மையை மேலும் நிராகரிக்கவும், தங்களை தமிழர்களிலிருந்து 'முற்றிலும் வேறுபட்ட அரபு இனம்' என்று கூறவும் கட்டாயப்படுத்தியது. உண்மையில், அந்த தருணத்திலிருந்து, இலங்கை முஸ்லிம் தலைமைத்துவம் 'இலங்கைச் சோனகர்' என்ற அடையாளத்தை மிகுந்த உறுதியுடன் தழுவிக்கொண்டது (அலி 1980: 102).

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, 1907 இல், சோனக எழுத்தாளர் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் இறுதியாக ஒரு நீண்ட மறுப்பை வெளியிட்டார். சோனகரின் திராவிடப் பண்புகள் மதமாற்றம், தமிழ்ப் பெண்களுடனான கலப்புத் திருமணத்தால் உருவானவை என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால் அந்தத் திராவிடர் காயல்பட்டினத்திலிருந்து வந்தவர்களுமல்ல. அவர்களை வேண்டுமானால் மிகத் தொடக்க கால இலங்கைச் சோனகரின் முன்னோர்கள் என்று சொல்லலாம். எண்ணிக்கையில் கூட அவர்கள் 100 விட அதிகமானவர்கள் இல்லை என்றும் கூறுகிறார். தொடர்ந்து எழுதும் அவர், இலங்கைச் சோனகர் தூய அரபு இரத்த வழித்தோன்றல்கள் (Azeez 1907: 22, 46) என்கிறார்.

காத்ரி இஸ்மாயில், அஸீஸின் நுட்பமாக எழுதப்பட்ட கட்டுரைக்கு ஒரு கூர்நோக்குள்ள மறுகட்டமைப்பை வழங்கினார். அதில் சோனகர்களை அமைதியான அரபு வணிகர்களாக (போர் விருப்புள்ள தமிழ் படையெடுப்பாளர்கள் போன்றல்லாத), மதரீதியாக உயர் தரத்தில் உள்ள (நபியின் சொந்த ஹாஷிம் குலத்தின் உறுப்பினர்கள்), தங்களை கிட்டத்தட்ட இந்த மண்ணின் பூர்வீகமாகக் கருதியவர்களாக (ஏனென்றால் ஆதாம் {ஆதம் நபி} சுவர்க்கத்திலிருந்து பூமிக்கு இறக்கம் செய்யப்பட்ட போது சிலோனில் விழுந்ததால்), சித்தரித்துள்ளார். பிரத்தியேகமாக தங்களின் அரேபியத் தந்தை வழி வம்சாவளியைக் கண்டறிந்து (அதன் மூலம் அவர்களின் தமிழ் மனைவிகள் மற்றும் தாய்மார்களின் வழி வரும் ஒட்டுமொத்த தாய்வழி உறவையும் புறக்கணிக்கிறார்), அவர்கள் உரையாடும் தமிழ் மொழியானது தங்கள் வணிக வசதிக்கான 'இரவல் வாங்கிய' மொழியாக மட்டுமே உள்ளது என்றார் (இஸ்மாயில் 1995: 6970).

இக் கதையில் எளிமையைப் பேணுவதற்காக, 14 ஆம் நூற்றாண்டில் இப்னு பதூதாவால் இலங்கையில் இருந்ததாக குறிப்பிடப்பட்ட பாரசீக வணிகர்கள் மற்றும் யாத்ரீகர்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் பாரசீகச் செல்வாக்கு அல்லது புத்தளத்தில் இடம்பெறும் ஷீயா முஹர்ரம் பண்டிகைகள் பற்றிய சுவடியல் சான்றுகள் மிகக் குறைவு (அலி 1981a: 7476; மெக்ரெடி 1888-89). 20 ஆம் நூற்றாண்டில் இலங்கைச் சோனகர்கள் 'முஸ்லிம் தமிழர்கள்' ஆக நடத்தப்படுவதையோ அல்லது துணையாகக் கொள்ளப்படுவதையோ மறுப்பார்கள் என்பதே அஸீஸின் வரலாற்றுக் கட்டுரையின் இன்றியமையாத உட்பொருளாகும். இவ்வாறு, சிங்கள மற்றும் தமிழ் 'இனங்களில்' இருந்து சோனகரைப் பிரிக்க அரேபிய 'மரபின' (race) வம்சாவளி ஊக்குவிக்கப்பட்டது. தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் இருவருக்குமெனப் பகிரப்பட்ட தமிழ் இன அடையாளத்தின் கோரிக்கை 20 ஆம் நூற்றாண்டு முழுவதும் சோனகத் தலைவர்களால் தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டது. "தமிழர்களுக்கு இணையாக அன்றி கீழ்நிலையில் இருப்பவர்களாக கருதி நடத்தப்பட்டமையே இதற்கான காரணமாகும்" என்று கே.எம். டி சில்வா (1994: 43) குறிப்பிடுகிறார்.

(தொடரும்)

ஈழநாடானது தமிழகத்திலிருந்து கடலால் பிரிக்கப்பட்ட நாடாக அமைகின்ற போதும், பண்டைக்காலந்தொட்டே தமிழர்களின் மரபுத் தொடர்ச்சியான பண்பாட்டுக் கூறுபாடுகளை உடைய மண்டலமாக காணப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் சுட்டும் பல இலக்கண விதிகள் இன்று தமிழகத்தில் வழக்கில் இல்லாத போதும் ஈழத்தில் அவை வழங்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டு வாழ்வியல்களின் அடிப்படையிலும் பண்டைத் தமிழரின் மரபுகள் பலவற்றை ஈழத்தில் காணவியலும். இந்நிலையின் தொடர்ச்சியாகவே பண்டைத் தமிழரின் சமயப் பண்பாட்டு மரபுகளையும் கருதலாம். அந்த வகையில், வடக்கே பருத்தித்துறைமுதல் தெற்கே தேவேந்திரமுனைவரை உள்ள தமிழ் மக்களிடமும், சிங்கள மக்களிடமும் காணப்படும் வழிபாட்டு முறைகளில் பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் வழிபாட்டு மரபுகளை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் காணப்படும் வழிபாட்டு மரபுகளில் இலங்கையில் இன்றளவும் வழங்கி வருகின்ற மரபுத் தொடர்ச்சியினை ஆராய்வதே 'இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்' எனும் இத் தொடரின் நோக்கமாகும். இத் தொடர், இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள் இன்றளவும் தொடர்கின்றன என்னும் கருதுகோளினை அடையும்.



முனைவர் ஜெ. அரங்கராஜ்

முனைவர் ஜெ. அரங்கராஜ் யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். இவர் பழந்தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மேலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம் முதலான துறைகளில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடநூற்கள் குறித்தும் பண்டைத் தமிழர்களின் அயலகத் தொடர்புகள் குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். 'செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள் அடைவு' என்னும் இவரது நூல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஈழம், தமிழகம் என இரண்டு தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆய்வாளராக இவர் திகழ்கின்றார்.

# மெய்யியல் மரபு : ஆசீவகம்

தென்காசிய மரபிற் தோன்றிய மெய்யியல் மரபுகளையும், பிறபகுதிகளிற் தோன்றி இந்தியத்துணைக் கண்டத்திற் பரவிய மெய்யியல் மரபுகளையும், தன்னகத்தே உருவான மெய்யியல் மரபுகளையும் ஆவணமாக்கி வைத்துள்ள ஒரே தெற்காசிய மொழி தமிழ் என்பதில் யாதொரு ஐயப்பாடும் எழுதலுக்கு வாய்ப்பில்லை. தமிழ்மொழி, நீண்ட வலாற்றுத் தொடர்பையும் சமயநிலைப் பயன்பாடு மற்றும் அறிவுப்புலத் தொடர்பையும் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டே பெற்றுவந்துள்ளமையால் அதுவொரு மெய்யியல்தளமாக அமைந்துள்ளது எனலாம். அவ்வாறான மெய்யியற் கருத்துக்களின் தாக்கம் இன்றளவும் தமிழ் மக்களது வாழ்வியலிலே பல்வேறு வடிவங்களில் இடம் பெற்றுள்ளமை இன்றும் காணக்கூடியதாகின்றது. அவ்வகையில் தமிழரின் வாழ்வியலோடு பெரிதும் தொடர்புடையதும் உயர்ந்த சிந்தனை மரபினை உடையதுமாகத் தோன்றிய சமயமே ஆசீவக சமயமாகும். இச்சமயம் குறித்தும் இதன் தோற்றுவாய் குறித்தும் முழுமையாக அறிய இயலாமல் உள்ளபோதும் பிறமொழிகள் யாவற்றைக் காட்டிலும் தமிழிலேயே இச்சமயக் கருத்துக்கள் குறித்தான செய்திகள் மிகுந்து காணப்படுகின்றது. ஆதலால் இவ்வாய்வினை மேற்கொள்ள வேண்டிய தேவை என்பது தமிழின் மெய்யியல் வளத்தினை அறிதலுக்கும் பெரிதும் பயனுடையதாக அமையும். அவ்வகையில் இவ் ஆசீவகச் சமயம் குறித்து காணப்படும் செய்திகளை ஆராயும்முன் அச்சமயத்தின் பரவலாக்கத்திலும் அதன் மெய்யியற் கட்டமைவிலும் பெரும்பாங்காற்றியோர் குறித்து ஆராய்தல் இன்றியமையாததாகும்.

### மற்கலி கோசாலர்

இவரது கோட்பாடு ஊழியல் எனப்படும் நியதிக் கோட்பாடாகும். இவர் உலகில் நிகழும் நன்மையும் தீமையும் முன்னமே முடிவு செய்யப்பட்டவை. அவற்றை

மாற்றுதலோ துன்பத்திலிருந்து விடுபடுதலோ இயலாத செயல். மனிதமுயற்சியால் ஒன்றுமே நிகழப்போவதில்லை. துன்பம் நிறைந்ததே உலக வாழ்வு என்னும் கொள்கையினராவார். இவர் புத்தரோடும் மகாவீரரோடும் சமகாலத்தில் வாழ்ந்தவராவர். மகாவீரருடன் ஒன்றாகவே சிலகாலம் வாழ்ந்துள்ளார். பின்னர் இவர்களுக்கு இடையேயான கொள்கை முரணால் அவரைப் பிரிந்து தனித்து நின்றார் என்பர். இவர் பாண் மரபினரென்றும் ஆதலால் இசையிலும் ஆடலிலும் அதிக ஈடுபாடுடையவர் என்றும் குறிப்பிடுவர். பௌத்தமும் சமணமும் துறவு நிலையில் இசையினையும் ஆடலினையும் கடுமையாக எதிர்க்க ஆசீவகம் அவற்றை வளர்த்து வழிபாட்டு நிலைக்குக் கொண்டு சென்றமையினை இவரது வாழ்க்கைக் குறிப்புகளாலும், மதுரைக்காஞ்சியாலும், அரச்சலூர் கல்வெட்டுக்களாலும் அறியலாம். இவர் கடுமையான துறவு நெறியினை மேற்கொண்டவராவார். அறிஞர் பலரும் இவரை மகதநாட்டினர் என்பர். க. நெடுஞ்செழியன் இவரைத் தமிழ்நாட்டினர் என்பார். இவர் ஒன்பான் கோட்பாடுகளைக் கொண்டு எழுதிய ஒன்கதிர் (நவகதிர்) எனும் ஆசீவக நூல் மற்கலிநூல் என அழைக்கப்பட்டமையை மணிமேகலையால் அறியலாம். ஆயினும் இன்று அந்நூல் கிட்டிட்டிலது. இவர் குறித்தான செய்திகள் யாவையும் ஆசீவகத்திற்கு எதிர்நிலையிலுள்ளோர் கூறிய செய்திகளாகும். இவர் தனது இறுதிக்காலத்தில் நாடு முழுதும் பயணம் மேற்கொள்ளும் ஆறு துறவிகளான சாணாதர், காலந்தர், கணியாரர், அச்சிதன், அக்கிலேசாயனா, அச்சுத கோமாய புத்தர் என்போருடன் கூடி அம்மெய்யியலைச் சமயமாக வெளிப்படுத்தினார் என்று கூறுவர். அக்காலகட்டத்தில் அவர் தனது மாணவியான ஆலகாலா என்போரது வீட்டில் தங்கியிருந்தே எட்டு உறுதிப்பொருள்கள் குறித்துக் கூறினார் என்பர்.



**ஆசீவகத்துடன் தொடர்புடைய சிற்பம்**

Image source - ta.wikipedia.org

பக்குடகச்சாயனா (பக்குடுக்கை நன்கணியர்)

புறநானூற்றின் நூற்றுத் தொன்னூற்று நான்காம் பாடலைப் பாடிய பக்குடுக்கை நன்கணியாரே பக்குடகச்சாயனார் என க. நெடுஞ்செழியன் குறிப்பிடுவார். சமண சமயத்து நூலான பகவதி சூத்திரம், மற்கலி கோசாலர் தம் காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் அறுவருடன் இணைந்து தமது மெய்யியற் கருத்துக்களை உருவாக்கியதாகக் குறிப்பிடுகின்றது. அவர்கள் சாணாதர், காலந்தர், கணியாரர், அச்சிதன், அச்சுத கோமாய புத்தர், அக்கிலேசாயனா என்போராவர். இவர்களுள் கணியாரர் என்பவரே கணியரான பக்குடுக்கை நன்கணியராவார். கணியர் என்போர் வானியல் அறிவு நிறையப்பெற்றோராவர். இவர்களில் சிறந்தோரை நன்கணியர் என்பதனால் இவர் நன்கணியரானார். சங்கப்புலவரில் மற்றொரு கணியரான கணியன் பூங்குன்றனாரும் ஆசீவக மரபினைச் சேர்ந்தவரே என்பதினை யாவரும் அறிவர். இவரே இந்திய மெய்யியல் மரபில் முதன்முதலாக அணுவியல் கோட்பாட்டினை உருவாக்கியவர் என்பர். இவரது புறப்பாடலும் கடவுள் மறுப்புக் கொள்கையும் கருமமறுப்புக் கொள்கையும் உடையதாகவும் உலகியற் பொது நோக்குடையதாகவும் காணப்படுகின்றது. இன்பம்துன்பம் என்னும் எதிர்மறைப்

பொருட்களின் செயற்பாட்டால் உலகியலில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைப் படைப்பில் மேற்கொள்வதினை மறுப்பதாக இப்பாடல் அமைகின்றது. இவரே மணிமேகலை சுட்டும் ஆசீவகர்களுக்குரியதான நிலம், நீர், தீ, காற்று, உயிர், இன்பம், துன்பம் என்னும் ஏழுவகைப் பொருள்களை அணுக்களாகக் கொண்டு தமது அணுவியல் கோட்பாட்டினை வகைமை செய்தவராகக் கூறுவர். இருள், காலம் முதலியவற்றைப் பொருட்களாகக் கொள்ளாதவிடத்தே இவரின் அணுவியற்சார் பார்வையின் உயர்வை உணரலாம்.

### பூரணகாயபர்

நீலகேசி பூரணரையே ஆசீவகத்தின் தலைவராகக் கொண்டு வாதம் செய்வதன் வழி ஆசீவகக் கோட்பாட்டில் பூரணரின் முதன்மையிணை அறியலாம். வேத எதிர்ப்பாளரான பூரணர், வைதிகத்தின் கர்மாக் கோட்பாட்டினை எதிர்த்தார் ஆதலால் இவரது கோட்பாடு ‘அக்கிரிய வாதம்’ எனப்பட்டது. அதாவது காரணம் இல்லமல் காரியம் நிகழ்வதில்லை. ஒருவரது செயலின் அடிப்படையிலேயோ பாவ, புண்ணிய அடிப்படையிலேயோ அவரது நற்பிறப்புகளும் தீயபிறப்புக்களும் அமைகின்றன என்பது கர்மக்கோட்பாடாகும். இதனை எதிர்த்து யாவும் தற்செயல் நிகழ்வாகவே நிகழ்வன என்பதான கோட்பாட்டினையுடையவர் பூரணர்.

பூரணரே அபிசாதிக் கொள்கை என்று அழைக்கப்படும் வண்ணக் கோட்பாட்டினை உருவாக்கியவராவார். இவ்வண்ணக் கோட்பாட்டின்படி:

1. கரும்பிறப்பு
2. கருநீலப்பிறப்பு
3. பசும்பிறப்பு
4. செம்பிறப்பு
5. பொன்பிறப்பு
6. வெண்பிறப்பு
7. கழிவெண்பிறப்பு

என உலகில் தோன்றும் உயிர்களைப் பகுப்பர். இப்பிறப்புக்களில் பிறந்தே உயிரானது கழிவெண்பிறப்பில் வீடடையும் என்ற கோட்பாட்டினை வகுத்தவர் பூரணர். இப் பூரணர் உறையூரில் தோன்றியவராகவே இருத்தல் வேண்டும். ஆசீவகக் கட்டமைவில் இவரது கரும எதிப்புக் கோட்பாடும் தற்செயலிக்கோட்பாடும் கலந்தே உருக்கொண்டனவெனலாம். உறையூரிலே இவர் தொடங்கிய மடம் தொடர்ந்து இவரது பெயரைக் கொண்டே இவரது மரபைப் பின்பற்றும் சீடர்களால் நிகழ்த்தப்பட்டிருக்கலாம். அதனால்தான் ஆசீவகத்தின் சார்புடையோராகப் பூரணரை நீலகேசி தேர்வு செய்கின்றார். பூரணர், அவருக்குப்பின் இளம்பூரணர் என்பதாக இம்மரபு தொடர்ந்திருக்க வேண்டும்.

“குக்குட மாநகர் நின்ரு கொடிமினிற்
றக்கதிற் றான் போய்ச் சமதண்டம் புக்காள்”

என நீலகேசி பூரணரை உறையூர் மடத்திற்குரியவராகக் காட்டுகிறார்.

புகளூர்க் கல்வெட்டிலுள்ள செங்காயபன், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையிலுள்ள மூதாஅமணன் செங்காயபன், மாறுகால் தலைக் கல்வெட்டிலுள்ள “வெண் காசியபன் கொடுப்பித்த கல்கஞ்சணம்” என்பனவான சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பூரணரைத் தமிழகத்தார் எனக்கொள்ளுவார் க. நெடுஞ்செழியன்.

### ஊழ் கொள்கை

ஏதும் மனித முயற்சியால் நிகழ்வதல்ல. எல்லாம் முன்னமே முடிவு செய்யப்பட்டன. அதன் வழிப்பட்டே அந்நிகழ்வுகள் நிகழ்கின்றன. இதனை நியதி ஊழ் முறை என்னும் பெயரால் வழங்கினர். இல்லது தோன்றா, உள்ளன மறையா என்பதன்வழி எவ்வளவுதான் முயற்சித்தாலும் இல்லாததொன்றினை உருவாக்கலும் உள்ளதை முற்றிலும் அழித்தலும் இயலாது. ஒரு உயர்ந்த இடத்தில் இருந்து கொண்டு நூல்கண்டு ஒன்றினை நீளவிட்டால் அது எவ்வளவு நீளம் உள்ளதோ அவ்வளவு நீளம் நீளமுடியும். அதுபோல் ஊழின் போக்கு எப்படியுள்ளதோ அவைபோலவே மனிதச் செயல்களும் அமையும். அனைத்து மனிதர்களும் பாகுபாடற்ற நிலையில் ஊழினுக்கும், தற்செயலுக்கும், தமக்கேயுரிய இயல்பிற்கும் கட்டுப்பட்டவர்கள். உயிர்கள் மண்டல நெறியில் எண்பத்து நான்கு இலட்சம் மகாகல்ப ஆண்டுகளுக்கு மீண்டும் மீண்டும் பிறந்து இன்பதுன்பங்களில் உழன்று அதன்பிறகே

வீடுபேற்றினை அடைய முடியும். சிலப்பதிகாரம் ஊழின் வழிச் செல்லும் மனித வாழ்வை விளக்குவதில் சிறப்புப் பெறுகின்றது. கர்மாக் கோட்பாட்டினை ஆசீவகர்கள் ஏற்கவில்லை. ஆதலால் இவர்களைக் 'காரணம் வேண்டாக் கடவுட் குழாம்' என அழைத்தனர். பழந்தமிழ் மக்களின் எண்ணங்களில் தோன்றிய கருத்தே ஊழ்க் கருத்தும் கருமக் (வினை) கருத்துமாகும். இது ஆரியரின் வருக்கைக்கு முன்பே இம்மண்ணில் தோன்றி நிலவி பரவியதெனலாம். ஏனினில், தொடக்ககால ஆரியரின் மறைகளில் ஊழ் குறித்தோ வினை குறித்தோவான கருத்தியல்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில்,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே"

என்ற நூற்பாவில் பாலதாணையின் வழி தலைவனும் தலைவியும் சந்தித்ததாகக் கூறியுள்ளமை ஊழின் செல்வாக்கினை உணர்த்துகிறது. அதுபோலவே தொல்காப்பியக் களவியலில் தோழி கூற்று இடம் பெறும் 'தலைவரு விழும' என்ற நூற்பாவில் உடன்போக்கில் சென்ற தலைவியை நினைத்துத் துயருறும் தாயின் நிலையினை மாற்ற தோழி, உழுவலன்பின் பொருட்டே தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றதாகக் கூறுவார். உழுவலன்பென்பது ஊழின்வழி ஏற்பட்ட அன்பினாலாகும். ஆசீவகம் தொடர்பான செய்திகளைக் கூறும் சங்கப்பாடல்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, சிவஞான சித்தியர் முதலான நூல்களிலும் மனிதமுயற்சியின் முதன்மை குறித்து ஆசீவகரின் சிந்தனை என்பது ஏதுமற்ற நிலையினையுடையமையினைக் குறிப்பதாகவே உள்ளது. ஆனால், 'மனிதர்கள் முயலாமல் சோம்பி இருத்தல் வேண்டும்' என்ற கருத்தினையும் ஆசீவகம் ஏற்கவில்லை. முயற்சியும் முயற்சியின்மையும் ஊழின்வழி ஏற்படுவனவே. அதன்வழி, 'முயலுவோர் முயலுவர் முயலாதார் முயலாதுவிடுவர்' என்பதாக அமையும். இவற்றில் கவனிக்க வேண்டியது யாதெனில் ஆசீவகக் கோட்பாடுகள் மனித குலம் அனைத்திற்கும் பொதுவானது; ஏற்றத்தாழ்வுகளை ஆசீவக மெய்யியல் ஏற்றதில்லை; பிற அவைதீக சமயங்களிற் பல ஏற்றுள்ளன என்பதாகும்.

**உயிர்கள் மண்டல நெறியில் எண்பத்து நான்கு இலட்சம் மகாகல்ப ஆண்டுகளுக்கு மீண்டும் மீண்டும் பிறந்து இன்பதுன்பங்களில் உழன்று அதன்பிறகே வீடுபேற்றினை அடைய முடியும். சிலப்பதிகாரம் ஊழின் வழிச் செல்லும் மனித வாழ்வை விளக்குவதில் சிறப்புப் பெறுகின்றது.**

### இயல்புக் (சுபாவம்) கோட்பாடு

தனிமனிதர் ஒவ்வொருவரும் ஒரு சுபாவத்தினைப் பெற்றுள்ளனர். அவ்வியல்பே அவர்களின் பண்புகளை அமைக்கின்றன. அப்பண்புகளின் அடிப்படையிலேயே அவரது நிகழ்வுகள் அமைகின்றன. குதிரையின் இயல்பு விரைந்து ஓடுவது. அதற்காக அது எப்பொழுதும் ஓடிக்கொண்டிருப்பதில்லை. தேவை ஏற்படும்பொழுது அதன் இயல்பு வெளிப்படும். தேவை ஏற்பட்டாலும் எருமையினால் குதிரையளவு விரைவாக ஓடுதல் இயலாது. ஏனெனில், அதனது இயல்பு அதுவல்ல. அதனதியல்பு பொறுமையும் குளத்தில் களித்தலுமாம். பொருட்கள் தங்கள் இயல்பினை வெளிப்படுத்தக் கூடியன. அவ்வியல்புகள் செயற்பாடுகளால் வெளிப்படுவன. முள் கூர்மையுடையது என்னும் அதனதியல்பு குத்தும் செயலால் வெளிப்படக் கூடியது. அதுபோலவே குதிரையும்விரைவும் அமையும். அதனை உணராமல் நீலகேசி,

"ஓட்டும் குதிரையும் ஒன்றே எனின் குதிரை
ஊட்டும் பொழுதொடு தான் புல் உண்ணும் போழ்தின் கால்
நாட்டிய வீதி அதிசயத்தை நீ எமக்குக்
காட்டி உரைப்பின் நின் காட்சியைக் கோடும்
கடவுள் குழாத்தார்தம் காழ்ப்பு எலாம் கோடும்"
(நீலகேசி. 699)

எனக்கூறுதலின் வழி விரைவின் அடையாளமாகக் குதிரை காட்டப்பட்டதன் மூலம் புல்லுண்ணும் போதும் கொட்டடியிற் கட்டப்பட்ட போதும் அதனது வேகம் எங்கே எனக் கேட்பது பொருந்தாததாகின்றது.

தேவையேற்படின் குதிரையிடம் விரைவு உண்டாகும். அழுதல் ஒருவனின் இயல்பானால் தேவைப்படும் பொழுது அழுவான். அதற்காக எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கமாட்டான். கோவலனின் இயல்பு காப்பியத்தை எவ்வகையில் நடத்தியது என்பதினைச் சிலப்பதிகாரத்திற் காணலாம். இயல்பைத்தாண்டி மனித முயற்சிகள் செயல்படுவனவாகா. இயல்பு, ஊழின் வழி இணைத்து செல்லக் கூடியதாகும். இதனை நாம் சிலப்பதிகாரத்தால் அறியலாம்.

**தற்செயல்**

தற்செயல் நிகழ்வுகள் ஆசீவகத்தில் முதன்மை பெறுவனவாகின்றன. தேவை என்பது தற்செயலுக்கான எதிர்மறைப் பண்பாகும். தேவையைச் தற்செயல் நிறைவு செய்கின்றது எனக் கருதவும் இடமுண்டு. சிலம்பை நல்விலைக்கு விற்றல் வேண்டும் என்ற பொருளீட்டற் தேவை கோவலனைத் தற்செலயாகச் சந்தித்த பொற்கொல்லனிடம் பேசச் செய்தது. தேவையற்ற நிலையிலும் தற்செயல் நிகழும். மாதவியின் மாலையை வாங்க வேண்டும் என்னும் தேவை கோவலனுக்கு இல்லை. ஆயினும் வேண்டினார். ஏனெனில், எதனையும் 'பட்டெனச்' செய்யும் அவனது இயல்பு தற்செயல் நிகழ்வால் அவனைத்தூண்டி மாலையை வாங்கச் செய்தது. தற்செயல் என்பது தேவை, தேவையற்ற என்ற இரண்டு நிலைகளிலும் வினையாற்றக் கூடியது. ஆனால், ஒருமாற்றத்தினை நோக்கி நகர்த்தக் கூடியது.

தற்செயல் நிகழ்வுகள் ஆசீவகத்தில் முதன்மை பெறுவனவாகின்றன. தேவை என்பது தற்செயலுக்கான எதிர்மறைப் பண்பாகும். தேவையைச் தற்செயல் நிறைவு செய்கின்றது எனக் கருதவும் இடமுண்டு. சிலம்பை நல்விலைக்கு விற்றல் வேண்டும் என்ற பொருளீட்டற் தேவை கோவலனைத் தற்செலயாகச் சந்தித்த பொற்கொல்லனிடம் பேசச் செய்தது.

**ஆசீவகத்தின் அணுக் கொள்கை**

இந்திய மெய்யியல் மரபில் அணுவைக் குறித்து முதன்முதலில் மிகுதியும் கவனமெடுத்த மரபாக விளங்குவது ஆசீவகமேயாகும். ஆசீவகத்தின் அளவிற்கு மற்ற மரபுகள் அணுவினைக் கருதவில்லை எனலாம். இனி ஆசீவகம் கூறும் அணுவியற் சிந்தனைகளைக் காணலாம்.

1. அணுக்கள் தேவையின் பொருட்டு ஒன்றுடனொன்று இணைந்து செயற்பட்டு பிறகு தனித்தனியாகப் பிரியும் தன்மையுடையன.

2. அணுக்கள் ஒன்றினிலொன்று இணையும். ஆனால் ஒன்றினில் ஒன்று உட்புகாது. ஒரு அணுவானது மற்றொரு அணுவாக மாறுதலடையாது. ஓரணு இரண்டாகப் பிரிவதுமில்லை.

3. அணுக்கள் தனது நிலையிலிருந்து மாறாமல் பிற அணுக்களுடன் சேர்க்கையுற்றுப் பொருட்களை உருவாக்குகின்றன.

4. அணுக்கள் சேர்க்கையுறும் பொழுது குறிப்பிட்ட விழுக்காட்டு முறையின் அடிப்படையிற் சேர்க்கை உருவாகின்றது. அவை 1, 3/4, 3/2, 1/4 என்பனவான விழுக்காட்டில் சேர்க்கை உறுவதாக மணிமேகலை குறிப்பிடுகின்றது. சில நூல்கள் 4: 3: 2: 1 என்ற அளவைக் குறிக்கின்றன. இரண்டும் விழுக்காட்டினடிப்படையால் ஒரே அளவைகள்தான்.

5. நான்கு வகையான முதன்மை அணுக்களாக நிலம், நீர், தீ, காற்று என்பனவற்றை மணிமேகலையும் மற்ற நூல்களும் குறிப்பிடுகின்றன. அவற்றுடன் உயிர், இன்பம், துன்பம் என்பனவுமாக அணுக்கள் ஏழு என மணிமேகலை குறிப்பிடுகின்றது.

6. எந்த அணு அதிக விழுக்காட்டிலுள்ளதோ அந்த அணுவின் தன்மை வெளிப்படும். சான்றாக நில அணு 1, நீர் அணு 3/4, தீ அணு 1/2 , காற்றணு 1/4 எனக் கொண்டால் நில அணுவின் தன்மையே மேலோங்கி நிற்கும்.

7. அணுக்களின் குணமும் இயல்பும் முறையே பால், சீர் என வழங்கப்பெறும். நில அணுவின் பால் திண்மையும், சீர்

பணிந்தமையும் ஆகும்.
நீர் அணுவின் பால் தணுப்பும் சுவையும், சீர் கீழ்நோக்கியதாகும்.
தீ அணுவின் பால் எரித்தலும், சீர் மேல்நோக்கியதாகும்.
காற்றணுவின் பால் அணுதலும் வீசுதலும், சீர் விலங்கு சீராகும்.

8. இன்பமும் துன்பமும் சேர்த்து அணுக்கள் ஏழு என்னும் மரபினை உருவாக்கியவர் பக்குடுக்கை நன்கணியாரேயாவார்.

என்றவாறாக ஆசீவகத்தின் அணுக்கள் குறித்த சிந்தனைகளைப் பிற சமய நூல்களின் வழி அறிய முடிகின்றது.

## அவிசலித நித்தியத்துவம் (நிலைப்பேறு)

உலகில் பொருட்கள் தோன்றுவதுமில்லை அழிவதுமில்லை; உள்ளது கெடா இல்லாதன தோன்றா என்னும் கொள்கையினையுடையது ஆசீவகம். அழிவற்றிருப்பதே பொருட்களின் இயல்பாகும். பொருட்கள் எங்கும் நிறைந்ததாகவே காணப்படக் கூடியது. காரியங்களுக்கான காரணங்கள் தேவையில்லையாம். இதனை,

"இல்லாத தோன்றா கெடா உள்ளன என்பாய்
சொல்லாயே நெய் சுடராய்ச் சுட்டிடும் ஆறு என்றேனுக்கு
அல்லாந்து அயிர்த்து ஓடி ஆழ் மிதப்புச் சொல்லுதியால்
எல்லாம் ஒன்று ஒன்றிற்கு இடங்கொடா அன்றே
இழிவு உயர்ச்சிக் காரணமும் இல்லாதாய் அன்றே
(நீலகேசி.698)

என்றமையால் அறியலாம். பொருள்கள் யாவும் மிதத்தலும் மூழ்கலும் என்னும் தன்மையினையுடையன. ஆசீவகர்களின் அவிசலித நித்தியத்துவம், காலம் என்னும் ஒரு பொருள் இல்லை என்பனவாக பொருள்களின் நிலைப்பேறு குறித்துக் கூறுதலினைக் காணலாம்.

## சதுவா நியதங்கள் (நாற் கொள்கைகள்)

ஆசீவகர்களின் ஊழ்க் கொள்கையின் செயற்பாட்டு முறையினை விளக்கக் கூடியனவாக சதுவா நியதங்கள் என்னும் இந்நூற் கோட்பாடு அமைந்துள்ளது.

1. ஊழின் வழி ஒரு நிகழ்வு நிகழ வேண்டுமென்றிருந்தால் எப்படியும் நிகழும். அதனை யாராலும் தடுத்தலியலாது.
2. எப்படி நிகழ வேண்டும் என எழுத்து முறை செய்யப்பட்டதோ அப்படியே நிகழும்.
3. எந்த அளவு நிகழவேண்டுமோ அதே அளவே நிகழும்.
4. எவ்வளவு கால அளவிற்குள் நிகழவேண்டுமோ அதே கால வரைவினுக்குள் நிகழும்.

இதனை,

1. ஆவதாம் (ஆவது ஆகும்)

   பிறந்த பெண்குழவி அரிவைப் பருவத்தினை அடையும்.

2. ஆந்துணையாம் (ஆகும் அளவு ஆகும்)

   அப்பெண்குழவி வளர்க்கக் கூடிய முறையில் நன்கு பேணி வளர்க்கப்பட்டால், அரிவைப் பருவத்தினை அடையும்.

3. ஆம் காலத் தாம் (ஆகும் பொழுது ஆகும்)

   ஒவ்வொரு பொருளும் இத்துணை அளவே வளர்ச்சியடையும் என்பது நியதி. அவ்வகையில் அரிவைப் பருவத்திற்குரிய வளர்ச்சியை அக்குழவி அடையும்.

4. ஆம் காலத் தாம் (ஆகும் பொழுது ஆகும்)



முதுமக்கள் தாழி

Image source - tamilgnanavel.blogspot.com



ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட தாழிகள்

Image source - www.maalaimalar.com

ஒரு நிகழ்வானது நிகழும் காலத்தில் மாத்திரமே நிகழும் என்பது இக்கோட்பாடாகும். பன்னிரண்டு வயதில் ஒரு பெண்மகவு அரிவைப் பருவத்தை அடையும் எனின் அப்பன்னிரண்டு வயதிலேயே அரிவைப் பருவத்தினை அடையும்.

என கால அளவுகளாக நோக்கலாம்.

இவ்வாறான எண்ணப் போக்குகள் யாவும் தமிழர் மரபினுக்கே உரியதாகும். இதனை இலக்கிய, இலக்கண வழக்கிலும் நாட்டார் வழக்கிலும் இன்றுவரை காணலாம். ‘ஆண்டு மீறிப் பிள்ளை வரம் கேட்கப்போன கதை’ என்பனவானவை, இக்கோட்பாடுகள் தமிழக மக்களிடம் செல்வாக்கு பெற்றிருந்தமையினைக் காட்டுவனவாக அமைகின்றன.

## வீடுபேறு

‘உலகில் உள்ள உயிர்களின் எண்ணிக்கை கூடுதலும் இல்லை; குறைதலும் இல்லை’ என்னும் கொள்கையினை உடையோர் ஆசீவகர். அவர்கள் வீடுபேற்றினை இருநிலைகளில் கொண்டுள்ளனர்; மண்டல நெறி என்பதுவும் செம்போக்கு நெறி என்பதுவுமே அவை. மண்டல நெறியில் வண்ணக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு உயிர் 84 இலட்சம் மகாகல்ப ஆண்டுகள் மீண்டும் மீண்டும் பிறந்து துன்பஇன்ப நிலைகளை மாறிமாறி அடைந்து 84 இலட்சம் மகாகல்ப ஆண்டுகள் நிறைவடைந்தவுடன், இயல்பாகவே வீடுபேற்றினை அடைந்துவிடும். செம்போக்கு நெறியில் கழிவெண்பிறப்பில் வீடு பேறடையும் உயிரானது மீண்டும் பிறக்காது. ஆனால் மண்டலநெறியில் வீடுபேறடையும் உயிர், உலகில் உயிர்களின் சமநிலையினைப் பேணுதற் பொருட்டு மீண்டும் பிறத்தலுக்கு வாய்ப்பு உண்டு. சமணர்கள், பெண்களுக்கு வீடுபேறில்லை என்பர். ஆனால் ஆசீவகர் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வீடுபேற்றில் வேறுபாடில்லை என்பர்.

## தாழியிற் கவிழ்த்தல்

தாழியிற் கவிழ்த்தல் என்பது இறந்தோரைத் தாழியில் அமர்ந்த நிலையில் வைத்துப் புதைத்தலாகும். மணிமேகலை எரித்தல், புதைத்தல் ஆகிய வழமைகளோடு தாழியிற் கவிழ்த்தலையும் குறிப்பிடுகின்றது. தமிழர் மரபில் துறவிகளை இக்காலத்திலும் எரித்தல் வழமையில்லை. அவர்களைப் புதைப்பதனையே மரபாகக் கொண்டிருக்கின்றனர். இன்றும் கொங்குப் பகுதியில் புதைத்தலைக் ‘குகைவைத்தல்’ என்று குறிப்பிடுகின்றனர். இக்குகை வைத்தல் என்பது வளைவான ஒரு பொருளினுக்குள் குகை போன்ற ஒன்றினுக்குள் வைத்துப் புதைத்தலைக் குறிப்பதாகக் கருதலாம்.

**தாழியிற் கவிழ்த்தல் என்பது இறந்தோரைத் தாழியில் அமர்ந்த நிலையில் வைத்துப் புதைத்தலாகும். மணிமேகலை எரித்தல், புதைத்தல் ஆகிய வழமைகளோடு தாழியிற் கவிழ்த்தலையும் குறிப்பிடுகின்றது. தமிழர் மரபில் துறவிகளை இக்காலத்திலும் எரித்தல் வழமையில்லை. அவர்களைப் புதைப்பதனையே மரபாகக் கொண்டிருக்கின்றனர். இன்றும் கொங்குப் பகுதியில் புதைத்தலைக் 'குகைவைத்தல்' என்று குறிப்பிடுகின்றனர்.**

சங்க இலக்கியத்தில் தாழியிற் கவிழ்த்தல் என்பது நடைமுறையில் இருந்துள்ளதெனலாம். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தபோது அவனுக்கான தாழியைச் செய்யும் குயவனை நோக்கிப் பாடுவதாக, 'கலஞ்செய்கோவே கலஞ்செய் கோவே' (புறம்.228) எனத் தொடங்கும் பாடல் அமைந்துள்ளதைக் காணலாம். 'வெளிமான்' என்ற மன்னன் மாண்டபோது பெருஞ்சித்திரனார் பாடிய 'கவிசெந் தாழிக்குவிபுறத் திருந்த' (புறம்.238) எனத் தொடங்கும் பாடலும் பண்டைத்தமிழரின் தாழியிற் கவிழ்க்கும் மரபினை விளக்குவதாக உள்ளதைக் காணலாம்.

இன்றும் கொடுமணல், ஆதிச்சநல்லூர் முதலான பண்டைய தொல்லியற்தளங்களில் பெரும்பாலும் கிடைக்கக் கூடியவைகளாகத் தாழிகளே உள்ளன. இத்தாழிகளில் மனித எச்சங்களே கிடைக்கின்றன. இத்தொல்பழங்கால இடுகாடுகள் யாவும் பயனற்ற இடங்களில் தேர்வு செய்யப்பட்டமையால் இன்றும் நமக்குக் காணக்கூடியதாக உள்ளன. இல்லையென்றால் அழிந்து போயிருக்கும். மணிமேகலை கூறுதலின்வழி இறந்தோரை இடுதலும் எரித்தலும் தாழியில் கவிழ்த்தலும் ஒரே இடத்தில் அமைந்தமையினை அறியலாம். பௌத்தமும் சமணமும் பெரிதும் இறந்தோரை எரித்தலையே வழமையாகக் கொண்டிருக்க ஆசீவகம் இறந்தோரைத் தாழியிற் புதைத்தலை வழமையாகக் கொண்டுள்ளமையினைக் காணலாம். ஆசீவகத்துறவிகள் தாழியிலே இருந்து தவமியற்றி தாழியிலேயே மடித்தனரெனலாம். பிறகு அத்தாழியோடே அவர்களைப் புதைத்திருப்பார்கள்.

"தாழி கவிப்பத் தவஞ்செய்வார் மண்ணாக
வாழிய நோற்றனை மால்வரை – யாழிசூழ்
மண்டல மாற்றா மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனெ னின்மாட்டோர் கல்

என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் புறத்திணையியல் 60 ஆம் நூற்பாவின் உரையில், காட்சி என்னும் துறைக்குக் காட்டிய மேற்கோளின்வழி இதனை அறியலாம். இவ்வாறே வடக்கிருந்து உயிர்துறந்த கோப்பெருஞ்சோழன் முதலானோரும் தாழியிற் கவிழ்க்கப்பட்டிருப்பர். இலங்கையில் ஆசீவகர்கள் தாழியிற் கவிழ்க்கும் வழமையினையே கொண்டிருந்தனர். பௌத்தப் பரவலுக்குப் பின்னரும் ஐயனார் வழிபாட்டில் இன்றளவும் தாழியில் விளக்கேற்றி மறைவாக வழிபடும் வழிபாட்டினை பண்டைய வழமையின் எச்சமாகவே கருதலாம்.

### அபிசாதிக்கொள்கை (நிறக்கோட்பாடு)

ஆசீவகர்கள் பிறப்பின் அடிப்படையிலானதொரு நிறக் கோட்பாட்டினைக் கொண்டிருந்தனர். அதனை அபிசாதிக் கொள்கை எனவும் அழைத்தனர். கரும் பிறப்பு, கருநீலப் பிறப்பு, பசும் பிறப்பு, செம்பிறப்பு, பொன் பிறப்பு, வெண்பிறப்பு என்னும் அறுவகைப் பிறப்பினையும் மனிதர்கள் அடைவார்கள் என்றும் கழிவெண் பிறப்பு என்னும் பிறப்பில் பிறந்தோர் வீடுபேற்றினை அடைவார்கள் என்றும் மணிமேகலை கூறுகின்றது. இந்நிறக் கோட்பாட்டினை உருவாக்கியவர் பூரணர் என்றும் கூறுவர். இவ்வண்ணப்படிநிலையில் உயிர்களின் வகைப்பாட்டினைப் இனிவரும் பகுதிகளில் காணலாம்.

*(தொடரும்)*

'இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்' எனும் இத்தொடர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தமிழ் சமூகத்தின் வரலாற்றை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஆவணமாகும். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் எனவும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் எனவும், இங்கு கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 100 பிராமிக் கல்வெட்டுக்களில் நாக மன்னர்கள், நாக தலைவர்கள், நாக பிரதானிகள், நாக சுவாமிகள், நாக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றுதயக் காலத்தில் நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் பலர் தமிழ் சமூகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்கள் பற்றிய வரலாறு மற்றும் வழிபாட்டுப் பாரம்பரியம் ஆகியவை பிராமிக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இத்தொடரில் ஆராயப்பட்டுகின்றன.

# 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் : ஓர் அறிமுகம்



● என். கே. எஸ். திருச்செல்வம்

கடந்த 25 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம், பிராமிக் கல்வெட்டுகள், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத்துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 18 நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் 'தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்', 'புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்', 'இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்', 'யார் இந்த இராவணன்', 'பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரை', 'பண்டைய தமிழ் நூல்களில் சிவன்', 'கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்', 'தமிழரின் குமரி நாடு உண்மையா? கற்பனையா?' போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில் இதுவரை 295 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இலங்கைத் தமிழருக்கும், அவர்களின் வழிபாட்டுப் பாரம்பரியத்திற்கும் குறைந்தது 2500 வருட கால வரலாறு உள்ளது. இலங்கையின் பூர்வீகக் குடிகளான நாகர் நாகத்தையும், வேடர் முருகனையும், தமிழர் சிவனையும் வழிபட்டனர். இவ்வழிபாடுகள் இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட பெருங்கற்கால மையங்களில் கிடைக்கப்பற்ற நாக, லிங்க, வேல் சின்னங்கள் ஆகியவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும் பண்டுகாபய மன்னன் காலத்தில் நாக, சிவ வழிபாடுகள் இருந்தமை பற்றிய விபரங்கள் பண்டைய பாளி நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வரலாற்றுக்கு மேலும் முக்கிய சான்றாக விளங்குவது இலங்கையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களாகும். இக்கல்வெட்டுக்கள் பொ.ஆ.மு. 300 முதல் பொ.ஆ. 300 வரையான காலப்பகுதியில் பொறிக்கப்பட்டவையாகும். இலங்கையில் மொத்தமாக சுமார் 2500 பிராமிக் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் இதுவரை 2000 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை இயற்கையாக அமைந்துள்ள மலைக் குகைகளிலும், மலைப் பாறைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சுமார் 1000 கல்வெட்டுக்கள் ஆங்கிலேயர் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டவையாகும். ஆங்கிலேயர் காலத்தின் பின்பு, இன்று வரை மேலும் 1000 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆங்கிலேயத் தொல்பொருள் ஆய்வாளர்களான H.W. கொட்ரிங்டன், Dr. எட்வேர்ட் முல்லர் மற்றும் இலங்கை அறிஞர்களான பேராசிரியர் எஸ்.



கல்யாணி இராச்சியத்தை ஆண்ட
நாக மன்னன் மணியக்கிரனின்
சிற்பம் - களனி விகாரை


பரணவித்தான, மார்டின் விக்ரமசிங்க, மாலனி டயஸ் ஆகியோர் இக்கல்வெட்டுகளைக் கண்டுபிடித்ததோடு, அவற்றை நூல்களாகவும் வெளியிட்டனர். அண்மையில் பூஜ்ய எல்லாவல மேதானந்த தேரர் பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவற்றைக் கண்டுபிடித்து அவை பற்றிய விபரங்களை நூல்களில் எழுதியுள்ளார். இருப்பினும் மேலும் சுமார் 500 பிராமிக் கல்வெட்டுகள் இதுவரை பதிவு செய்யப்படாமல் காடுகளில் காணப்படுகின்றன.

## பண்டைய இலங்கையில் நாகர்

பண்டைய இலங்கையின் பூர்வீகக் குடிகளாக இயக்கர், நாகர் மற்றும் வேடர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களில் நாகர் பற்றிய அண்மைக்கால ஆய்வுகள் மிகவும் முக்கியமானவையாகும். நாகர் பற்றி அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் இலங்கை வரலாற்றில் பல புதிய விடயங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளன.

இற்றைக்கு 3000-2000 ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய ஆதி இரும்புக் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த மக்களின் சவ அடக்க மையங்களில் காணப்படும் கல்லறைகள், ஈமத்தாழிகள் ஆகியவற்றில் தமிழ் மொழியில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. இவை நாகரோடு தொடர்புபட்டவையாகும். இலங்கை முழுவதிலும், குறிப்பாக வட மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டம் ஆகியவற்றில் பெருந்தொகையான தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இலங்கையில் இற்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழி ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது. இக்காலப் பகுதியில் ஆதி இரும்புக்கால பண்பாட்டை இலங்கை முழுவதும் பரப்பியவர்கள் நாகர் என்பதும், இவர்கள் தமிழ் மொழியைப் பேசியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது பற்றி இலங்கையின் மூத்த பேராசிரியர் எஸ். பத்மநாதன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் மூன்றில் ஒரு பாகத்திலே தமிழ் சமுதாயம் கி.மு முதலிரு நூற்றாண்டுகளிலும் உருவாகிவிட்டது என்பதையும், தொடர்ச்சியான



ஜேதவனாராம பகுதியில் உள்ள நாகினி சிற்பம்

ஒரு நிலப்பகுதியிலே தமிழ் மொழி பேசுவோர் வேளிர் ஆட்சியின் கீழமைந்த சிற்றரசுகள் பலவற்றை உருவாக்கிவிட்டனர் என்றும் சொல்லக்கூடிய காலம் வந்துள்ளது. நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதாலும், ஆதி இரும்புக்காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் என்பதாலும் கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றுள்ளமை உய்த்துணரப்படுகிறது. தமிழ் மொழியின் தொன்மை பற்றி தமிழ் நாட்டு தொல்பொருட் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்க முடியாதவற்றை இலங்கையில் கிடைக்கின்ற தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களின் அடிப்படையிலேயே சொல்ல முடிக்கின்றமை ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும்."

2500 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் இரண்டு நாக இராச்சியங்கள் இருந்தமை பற்றி இலங்கையில் எழுதப்பட்ட பாளி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, வட இலங்கையில் இருந்த நாக தீபம் எனும் இராச்சியமும், மேற்கிலங்கையில் இருந்த

கல்யாணி இராச்சியமும் ஆகும். புத்தர் இலங்கைக்கு வந்ததாக மகாவம்சம் கூறும் காலப் பகுதியில் நாகதீபத்தை மகோதரன், சூலோதரன் ஆகிய இரு மன்னர்களும், கல்யாணியை மணியக்கிரன் எனும் மன்னனும் ஆட்சி செய்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இவர்கள் மூவரும் நாக மன்னர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. களனி விகாரையில் காணப்படும் மணியக்கிரனின் சிற்பத்தில் அவனின் தலைக்கு மேல் ஐந்து தலை நாகம் காணப்படுகின்றமை அவன் நாக மன்னன் என்பதை மேலும் உறுதி செய்கிறது.



ஜேதவனாராம பகுதியில் உள்ள நாகராஜ சிற்பம்

இலங்கையில் பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட காலப் பகுதியில் நாக எனும் பெயரில் 10 இற்கும் மேற்பட்ட மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்து வந்தமை பற்றி மகாவம்சம் குறிப்பிடுகிறது. இவர்களில் காலத்தால் முற்பட்டவன் மூத்தசிவனின் மகனும், தேவநம்பிய தீசனின் தம்பியுமான மகாநாகன் என்பவன் ஆவான். அனுராதபுர இராச்சியத்தில் இருந்து தப்பிச் சென்று இலங்கையின் தென்பகுதியில் மாகமை எனும் இராச்சியத்தை தோற்றுவித்தவனும் இவனே. இவன் நாக வழிபாடு அல்லது சிவ வழிபாடு செய்தவன் என்பதும், பின்பு பௌத்த நெறியைக் கடைப்பிடித்தவன் என்பதும் பிராமிக் கல்வெட்டுகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவன் பொ.ஆ.மு. 307-267 காலப்பகுதியில் மாகமை இராச்சியத்தை ஆட்சி செய்தான்.

இக்காலகட்டத்தின் பின் அதாவது பொ.ஆ.மு 109 முதல் பொ.ஆ 246 வரையான காலப்பகுதியில் நாக எனும் பெயர் கொண்ட 10 மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்தனர். அவர்கள் கல்லாட்ட நாகன், சோர நாகன், மகாதாத்திக மகாநாகன், இள நாகன், மகால்லக நாகன், சூள நாகன், குட்ட நாகன், ஸ்ரீ நாகன், அபய நாகன், 2 ஆம் ஸ்ரீ நாகன் ஆகியோராவார்.



ஜேதவனாராம பகுதியில் காணப்படும் நாகராஜர் மற்றும் ஏழுதலை நாகத்தின் சிற்பம்

பண்டைய இலங்கையில் ஆட்சி புரிந்த நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் தமிழர்களாக இருக்க வேண்டும் என்பதனை பேராசிரியர் எஸ். பத்மநாதன் தனது நூலில் விளக்கியுள்ளார். இள நாகன், கல்லாட்ட நாகன், சோர நாகன் ஆகிய மன்னர்கள் பற்றி அவர் குறிப்பிட்டுள்ள விபரங்கள் இக்கூற்றை உறுதி செய்கின்றன.

மேலும் தென்னிலங்கையில் வாழ்ந்த நாகரின் மொழி வழக்கிலே தமிழும், பிராகிருதமும் கலந்துள்ளமைக்கான ஆதாரங்கள் இருப்பதாகவும், வட இலங்கையில் வாழ்ந்த நாகரைப் போலத் தென்னிலங்கையில் வாழ்ந்த நாகரும் தமிழ் மொழி பேசினார்கள் என்பதும், அரச உருவாக்கத்தில் அவர்களும் பங்கு கொண்டார்கள் என்பதும் உணரப்படுவதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர் மற்றும் நாக வழிபாடு பற்றிய ஓர் அறிமுகம்**

இலங்கையில் உள்ள கற்குகைகளிலும், மலைப் பாறைகளிலும் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களில் நாக எனும் பெயர் பொறிக்கப்பட்ட சுமார் 100 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டுக்கள் பற்றி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தனது

நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இலக்கியங்கள் குறிக்கும் நாக வழிபாடு பற்றிய கருத்தினை உறுதி செய்வனவாக ஈழத்தின் பழைய கல்வெட்டுக்களாகிய பிராமிக் கல்வெட்டுகள் கூறும் செய்திகள் அமைந்துள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்டவை"

பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களின் குறிப்பின்படி பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் நாக என்ற பெயரைக் கொண்டவர்கள் நாக வழிபாடு செய்தவர்கள் என்பது உறுதியாகிறது.

இக்கல்வெட்டுகள் இலங்கை முழுவதிலும் பரந்து காணப்படுவதால் நாக வழிபாடு செய்தோர் இலங்கை முழுவதிலும் இவ்வழிபாடுகளைப் போற்றி வழிபட்டுள்ளனர் எனத் தெரிகிறது. இலங்கையில் பண்டைய காலம் முதல் இன்றுவரை நாக வழிபாடுகளைக் கடைப்பிடிப்போர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முதலாவது தலைநகரான அனுராதபுர நகரில் யக்ஷ வழிபாடு அதிகளவில் காணப்பட்டது போல் நாக வழிபாடும் பரவலாக இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

பௌத்த சமயம் இலங்கையில் பரவிய காலத்தில் அனுராதபுர நகரில் பல நாகராஜர் கோயில்கள் இருந்துள்ளன. ஜேதவனாராம பகுதியில் பல நாகராஜன் மற்றும் நாகினி சிற்பங்கள் காணப்படுகின்றமை மூலம் இக்கூற்று உறுதியாகின்றது. இவற்றில் நாகராஜர் மற்றும் நாகினி ஆகிய தெய்வங்கள் ஐந்து தலை நாகத்தின் கீழ் நின்று கொண்டிருப்பது போன்ற சிற்பங்களே அதிகளவில் காணப்படுகின்றன.

அபயகிரி விகாரைப் பகுதியிலும் நாக வழிபாடு நிலவியமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இங்கும் பல நாகராஜர் சிற்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அனுராதபுரத்தின் வடக்குப் பகுதியில் நாக வழிபாடு சிறப்புடன் விளங்கியதாக நூல்கள் கூறுகின்றன. அபயகிரி விகாரை வளாகம் அனுராதபுரத்தின் வடக்குப் பகுதியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டில் மொத்தமாக **31** இடங்களில் **93** பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு கல்வெட்டிலேனும் நாக எனும் பெயர் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே வழிபாட்டுப் பாரம்பரியத்தில் காலத்தால் முற்பட்டவர்கள் இலங்கை மக்கள் எனக் கூறுவதற்கு இலங்கையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் மிக முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன. பேராசிரியர் எஸ். பத்மநாதனின் பின்வரும் குறிப்பும் இக்கூற்றை சார்ந்து நிற்கிறது.

"தமிழ் மொழியின் தொன்மை பற்றி தமிழ் நாட்டு தொல்பொருட் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்க முடியாதவற்றை இலங்கையில் கிடைக்கின்ற தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களின் அடிப்படையிலேயே சொல்ல முடிக்கின்றமை ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும்."


இனிவரும் கட்டுரையில் இலங்கையில் நாக எனும் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றிய விபரங்களையும் அவை தொடர்பான வரலாற்று விடயங்களையும் மாவட்ட அடிப்படையில் விரிவாகப் பார்க்கலாம்.

(தொடரும்)



**அபயகிரி விகாரைப் பகுதியில் உள்ள நாகராஜர், நாகினி, ஐந்துதலை நாகம் ஆகியவற்றின் சிற்பங்கள்**

ராஜ் ராஜரட்ணம், சட்டத்துக்கு முரணாக ‘உட்தகவல் வணிகம்’ (Inside Trading) செய்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், அமெரிக்கப் புலனாய்வுப் பணியகத்தால் 2009 ஒக்டோபரில் கைது செய்யப்பட்டார். அக் குற்றச்சாட்டுப் பொய்யானது என வாதாடியும், நீதிமன்றம் அவருக்கு 11 வருடங்கள் சிறைத்தண்டனையும் அமெரிக்க வரலாற்றிலே உச்சபட்சமான அபராதத் தொகையும் விதித்தது. ராஜ் ராஜரட்ணம் தான் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்தார்; தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக் கெதிராகப் பேச வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார். இந் நிலையில், சிறையிலிருந்தவாறே அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூலே ‘Uneven Justice’. இந்நூல் அமெரிக்க நீதித்துறை மீதும், நீதிபதிகள் மீதும், அமெரிக்க வழக்குரைஞர் நாயகத்தின் மீதும், எப்.பி.ஐ. மீதும் மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட இந்நூல் அண்மையில் ஓய்வுநிலைப் பேராயர் பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன், முனைவர் சோ. பத்மநாதன் (சோ.ப) ஆகியோரால் ‘சமனற்ற நீதி’ எனும் பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டு, ‘யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மன்றத்தினால்’ வெளியிடப்பட்டது. தமிழ் வாசகர்கள் அறியும் நோக்கில் இந் நூல் ‘சமனற்ற நீதி ‘ எனும் பெயரிலேயே எழுநாவில் தொடராக வெளிவருகிறது.



**ராஜ் ராஜரட்ணம்**

திரு ராஜ் ராஜரட்ணம் அவர்கள் 1957 இல் கொழும்பில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கொள்ளுப்பிட்டி புனித தோமையர் கல்லூரியில் கற்றார். பின்னர் இங்கிலாந்து சென்று பள்ளிப் படிப்பை நிறைவுசெய்து சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றார். 1983 இல் பென்சில்வேனியா உவார்ட்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் எம்.பி.ஏ பட்டம் பெற்றார். ராஜ் ராஜரட்ணம் தனது பணியை முதன்முதலில் சேஸ் மான்ஹட்டன் வங்கியில் கடன் வழங்கும் அதிகாரியாகத் தொடங்கினார். 1985 இல் நியூயோர்க்கின் நீடம் நிறுவனத்தில் சேர்ந்து பணியாற்றினார். 1987 இல் அந்நிறுவனத்தின் ஆய்வுப் பகுதியின் தலைவராகவும், மார்ச் 1991 இல் அந்நிறுவனத்தின் தலைவராகவும் ஆனார்.

1997 இல் தனது சொந்த நிறுவனமான கலியன் முதலீட்டு நிதியத்தை ஆரம்பித்தார். இந்நிதியத்தைப் பின்னர் அவர் கலியன் குழுமம் எனப் பெயர் மாற்றினார். இது உலகின் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனங்களில் ஒன்றாக மாறியது. ஒரு காலகட்டத்தில் கலியன் குழுமம் 180 பணியாளர்களுடன் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிருவகித்தது.

2009 இல் அமெரிக்கப் புலனாய்வுப் பணியகம் ராஜ் ராஜரட்ணத்தைத் திட்டமிட்டுக் கைது செய்தது. உட்தகவல்களைப் பெற்று வர்த்தகம் செய்ததாகவும் 0.01 சதவீதம் குற்றமிழைத்ததாவும் அவர் மீது பொய்க்குற்றச் சாட்டுக்களை முன்வைத்தது. குற்றத்தைப் ஒப்புக்கொள்ளுமாறு அவர்மீது பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்தது. தான் நிரபராதி என்பதில் உறுதியாக நின்ற ராஜ் ராஜரட்ணம் அமெரிக்க நீதித்துறையில் உள்ள பேராசை பிடித்த சில தனிபர்களின் சதிகளாலும் பொய்ச்சாட்சிகளாலும் வஞ்சிக்கப்பட்டார். 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற ராஜ் ராஜரட்ணம் அவர்கள் 7 ஆண்டுகளில் விடுவிக்கப்பட்டார். சிறையில் இருந்து ராஜ் எழுதிய நூல் Uneven Justice என்ற பெயரில் 2021 இல் வெளிவந்தது. இந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு 2024 இல் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனை மன்றத்தால் வெளியிடப்பட்டது. ராஜ் ராஜரட்ணம் தற்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் மீள்கட்டுமானப் பணிகளுக்கு பல்வேறு வழிகளில் உதவி வருகிறார்.

தமிழில் : ஓய்வுநிலைப் பேராயர் பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன், முனைவர் சோ. பத்மநாதன் (சோ.ப)

# சமனற்ற நீதி : கறுப்பு அன்னம்

எல்லாவற்றையும் மாற்றிய அந்த நாள் *16.10.2009* வெள்ளிக் கிழமை. அன்றைய நாளிலும் வழமை போலவே, அதிகாலை ஐந்தரை மணிக்கு நித்திரைவிட்டு எழுந்தேன். வெளியே கலையாதிருந்த இருளின்மீது மழை தூறிக் கொண்டிருந்தது. கிழக்கு நதியின் மீதாகப் படர்ந்திருந்த புகார் மூட்டத்தை ஊடுருவிக்கொண்டு மேல் நோக்கி வந்த வேகமான காற்று என்னுடைய வீட்டின் அமைதியைக் கலைக்காமல் மூடப்பட்டிருந்த சாளரங்களில் மோதித் திரும்பியது. எல்லாமே சரியாகவும் இதமாகவும் இருப்பதான உணர்வு என்னில் தொற்றிக் கொண்டது. இத்தகைய மந்தாரம் சூழ்ந்த காலைப் பொழுதில் தனிமையில் இருப்பது எப்போதுமே எனக்குப் பிடித்த விடயம்.

என்னுடைய வீடு நியூயோர்க் நகரத்தின் கிழக்கு நதிக்கரையில் அமைந்திருந்த பிரமாண்டமான அடுக்குமாடிக் குடியிருப்பின் பத்தொன்பதாவது தளத்தில் இருந்தது. படுக்கையறைகளுக்குள் எனது மனைவியும் பிள்ளைகளும் இன்னும் உறக்கத்திலிருந்தார்கள். முதியவர்களான எனது பெற்றோரும் இதே தளத்தில் எனது பக்கத்து வீட்டில் வசித்தார்கள். அவர்கள் கூப்பிட்ட குரலுக்கு நான் ஓடிச் செல்லக்கூடியதாக, அவர்கள் எனக்கு அருகிலேயே வசிப்பது எனக்குப் பெரும் நிம்மதியைக் கொடுத்தது.

நான் சூடாகக் கோப்பி தயாரித்து எடுத்துக்கொண்டு, என்னுடைய கணினியின் முன்னே அமர்ந்து கொண்டேன். நான் நடத்திவந்த கலியன் குழுமத்தின், முதலீட்டு நிதியத் தொழில் சார்ந்து பங்குச் சந்தை ஆய்வாளர்களிடமிருந்தும் தரகர்களிடமிருந்தும் வந்திருந்த மின்னஞ்சல்களைப் படித்து, என்னுடைய தீர்மானங்களையும் பதில்களையும் ஆறேகால் மணியளவில் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். என்னுடைய பரபரப்பான வேலை நாளைத் தொடங்குவதற்கு முன்னதாகச் சற்றுத் தனிமை எனக்குத் தேவைப்படும். உடற்பயிற்சி செய்யும் சைக்கிளின் மீது ஏறிக்கொண்டேன். நாற்பத்தைந்து நிமிட உடற்பயிற்சி எனது இலக்கு. சைக்கிளை மிதித்தவாறே, ஒலி அமுக்கப்பட்டிருந்த தொலைக்காட்சியின் மீது கண்களை எறிந்தேன். சென்ற வருடம் நிகழ்ந்த பங்குச் சந்தை வீழ்ச்சி, புதிய ஜனாதிபதி பராக் ஒபாமா, ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் நடக்கும் யுத்தம், குவான்டனமோ சிறை என வழமையான காட்சிகள் கடந்து கொண்டிருந்தன.

அன்றைய நாள் ஏராளமான வேலைகளால் நிறைந்திருந்தது. சென்ற வாரம் என்னுடைய மகன் பதின்ம வயதை எட்டியிருந்ததால், இன்றைய மாலைநேரத்தில் "கேக்" வெட்டிக் கொண்டாடுவதற்குத் தீர்மானித்திருந்தோம். அதன் பின்பு, மகன் தன்னுடைய நண்பர்களோடு மடிசன் ஸ்கொயார் உள்ளரங்கில் கூடைப்பந்துப் போட்டியைப் பார்க்கச் செல்லவிருக்கிறான். நானும் எனது மனைவி ஆஷா பப்லாவும் இலண்டனுக்குச் செல்லும் கடைசி விமானத்தைப் பிடிப்பதற்காக "ஜே.எப்.கே" விமான நிலையத்திற்கு விரைய வேண்டும். நாங்கள் ஐரோப்பாவில் ஒரு வார காலப் பயணத்தைத் திட்டமிட்டிருந்தோம். 17 ஆம் தேதி, சனிக்கிழமை, இலண்டனில் "ருடேஸ் ஸ்பெசல்" என்ற திரைப்படத்தின் முதல் காட்சியைப் பார்க்க எண்ணியிருந்தேன். தெற்காசியக் குடியேறி ஒருவர் நியூயோர்க் நகரத்தில், சமையல் கலைஞனாக உருவாகும் கனவுகளோடு வாழ்வதைச் சித்திரிக்கும் இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்க நான் நிதியுதவி செய்திருந்தேன்.

திங்கட்கிழமையன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வங்கியாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க மிகுந்த ஆவலுடன் காத்திருந்தேன். எனது நீண்ட காலக் கனவொன்றைப் பற்றி அங்கே உரையாடவிருந்தேன். இலங்கையில் ஒரு முதலீட்டு நிதியத்தைக் கட்டியெழுப்புவதே அந்தக் கனவாகும். முப்பது வருடங்களாக, போர்ச் சூழல் காரணமாகச் சர்வதேச முதலீட்டாளர்கள் இலங்கையின் முதலீட்டுச் சந்தைகளைப் பெருமளவு தவிர்த்தே வந்தனர். போர் முடிவுக்கு வந்திருப்பதால், சர்வதேச முதலீடுகளுக்குச் சாதகமான நிலைமைகள் இலங்கையில் உருவாகியிருந்தன.

செவ்வாய்க் கிழமையன்று நாங்கள் ஜெனீவாவுக்குச் செல்லவிருந்தோம். அங்கே என்னுடைய கலியன் முதலீட்டு நிதியத்தின் சுவிஸ் முதலீட்டாளர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடாகி விருந்தது. அன்றைய தினம் எனது மனைவியின் ஐம்பதாவது பிறந்த நாளாகவுமிருந்தது. என்னுடைய மனைவி ஜெனீவா ஏரியில், ஒரு படகில் அமைதியான இரவுணவுடன் தன்னுடைய பிறந்தநாளைக் கொண்டாட விரும்பினார். இருபத்து மூன்று வருடங்களுக்கு முன்னதாக, அந்த ஏரியின் நடுவேதான் ஆஷாவைத் திருமணம் செய்துகொள்வதற்கான விருப்பத்தை அவரிடம்



தெரிவித்திருந்தேன். அந்த அற்புதத் தருணத்தைக் குறித்த நினைவுகளில் மூழ்கியவாறே, நான் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, என்னுடைய வீட்டுக் கதவை யாரோ முரட்டுத்தனமாக இடிக்கும் சத்தம் கேட்டது. நான் சற்றுத் திடுக்கிட்டவனாக உடற்பயிற்சியை நிறுத்திக் கொண்டேன். எனது மனைவி இரவு ஆடையுடனேயே என்னை நோக்கிப் பதற்றமாக ஓடி வந்தார். நான் கதவுக்கு அருகே சென்று “யார் கதவை இடிப்பது?” என்று உரத்த குரலில் கேட்டேன்.

“எப்.பி.ஐ! கதவைத் திறவுங்கள்” என்று கடுமையான குரலில் பதில் வந்தது. நான் உடனடியாகக் கதவைத் திறந்தேன். புலன் விசாரணைக் கூட்டாட்சிப் பணியகத்தின் ஓர் அதிகாரி வீட்டுக்குள் பாய்ந்து வந்தார். அவருக்குப் பின்னே மேலும் ஐந்து அதிகாரிகள் உள்ளே நுழைந்து, வீட்டு வாசலின் குறுக்காக வரிசையாக நின்றுகொண்டார்கள். முன்னே வந்த அதிகாரி “நீர் தானே ராஜ் ராஜரட்ணம்?” என்று இறுமாப்பாக அதிகாரக் குரலில் கேட்டார். நான் நிதானமாக “ஆம்” என்றேன்.

“பி.ஜே. காங்” என்ற பெயருடைய அந்த அதிகாரி வன்மம் கொப்பளிக்கும் தொனியில் “நீர் கைது செய்யப்படுகிறீர்” என்றார். என்ன நடக்கிறது என்றே எனக்குப் புரியவில்லை.

இது ஏதும் அதிகாலைக் கனவா? “எதற்காகக் கைது?” என்று நான் கேட்டேன்.

“சொல்கிறேன்; அதற்கு முன்பாக நானொன்று கேட்கிறேன். உம்மிடம் துப்பாக்கியோ, போதைப் பொருட்களோ உள்ளனவா?” என்று எனது கண்களை உற்றுப் பார்த்தவாறே அதிகாரி காங் கேட்டார்.

“இல்லை... நீங்கள் தவறான முகவரிக்கு வந்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்.”

“எல்லாம் சரியான முகவரிதான். உம்முடைய உடைகளை மாற்றிக்கொண்டு எங்களுடன் வாரும்” என்று உரக்கக் கூச்சலிட்டார் காங்.

> ❝
>
> **எனது குழந்தைகளின் அஞ்சிய முகங்களும் ஏங்கிய கண்களும் என்னுடைய நெஞ்சில் எப்போதும் அழியாமல் ஆணியாகத் தைத்திருக்கின்றன. இதை எழுதும்போதே அந்தக் காட்சி எனது மனதில் தோன்றி, கைகள் நடுக்கமெடுக்கின்றன. அச்சமுற்றிருந்த குழந்தைகளை மேலும் கலங்கடிப்பது போன்று அதிகாரி காங் என்னைப் பார்த்து கைகளை நீட்டும் என அதிகார மமதையோடு சீறினார்.**

நான் படுக்கையறைக்குள் சென்று, எனது உடற்பயிற்சி ஆடைகளைக் களைந்துவிட்டு பொருத்தமான உடைகளை அணிந்து கொண்டே, என்னுடைய மனைவியிடம் “கலியன் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு எனக்கு ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்யுமாறு சொல்லுங்கள்” என்றேன். முக்கியமாக “எந்த விமானப் பயணங்களையும் இரத்து செய்ய வேண்டாம்” என்றும் என்னுடைய மனைவியிடம் கூறினேன். ஏனெனில், நிச்சயமாக ஏதோ ஒரு குழப்பம் நிகழ்ந்திருக்கிறது என்றே நான் மிக உறுதியாக நம்பினேன். “எப்.பி.ஐ தவறுதலாக என்னைக் கைது செய்கிறார்கள். சற்று நேரத்திலேயே நான் விடுதலையாகி, வழமை போலவே அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கிவிடுவேன்” என்று சொல்லியவறே ஆஷாவைக் கட்டியணைத்து அவருக்குத் தைரியமும் ஆறுதலும் சொன்னேன். ஆஷா புரிந்து கொண்டு ஓரளவு சமாதானமானார். ஆனால், என்னுடைய இரண்டு குழந்தைகளுக்கும் நான் எவ்வாறு தைரியம் சொல்வேன்? அவர்களது படுக்கையறையை நான் பார்த்த போது, அவர்கள் மிரட்சியுடன் தங்களுடைய போர்வைகளுக்குள் மறைந்திருந்து, கண்களில் நீர் முட்ட ஏக்கத்துடன் என்னைப் பார்த்தார்கள். எப்.பி.ஐ அதிகாரியின் உரத்த கூச்சலால் அவர்கள் அச்சமுற்றிருந்தார்கள். நான் அதிகாரிகளோடு கிளம்பும் போது, குழந்தைகள் என்னருகே வந்து ஏங்கிய கண்களோடு நின்றிருந்தார்கள். உண்மையில், அப்போது நான் எனது குழந்தைகளைக் குறித்தே கடும் துயருற்றேன்.

எனது குழந்தைகளின் அஞ்சிய முகங்களும் ஏங்கிய கண்களும் என்னுடைய நெஞ்சில் எப்போதும் அழியாமல் ஆணியாகத் தைத்திருக்கின்றன. இதை எழுதும்போதே அந்தக் காட்சி எனது மனதில் தோன்றி, கைகள் நடுக்கமெடுக்கின்றன. அச்சமுற்றிருந்த குழந்தைகளை மேலும் கலங்கடிப்பது போன்று அதிகாரி காங் என்னைப் பார்த்து “உம்முடைய

கைகளை நீட்டும்" என அதிகார மமதையோடு சீறினார். கருநீல நிறத்தில் மேலங்கிகளை அணிந்திருந்த எப்.பி.ஐ அதிகாரிகள் இருளைப் போன்று என் வீட்டுக்குள் நுழைந்திருக்கிறார்கள். எனது குழந்தைகளின் கண்களுக்கு முன்னாலேயே எனக்குக் கைவிலங்கு மாட்டப்பட்டது.

என்னை அழைத்துச் செல்லும்போது, "உம்முடைய மகனை ஒரு முறை நன்றாகப் பார்த்துக்கொள்ளும்; இனி இருபது வருடங்களுக்கு நீர் அவனைப் பார்க்கப் போவதில்லை" என்று அதிகாரி காங் சொன்னார். பின்பு, எனது மனைவியின் மீது அவர் பார்வையை ஓட்டிவிட்டு "உம்முடைய மனைவி ஒன்றும் அவ்வளவாகக் கவலைப்படுவதாகத் தெரியவில்லையே... நீர் சேர்த்து வைத்திருக்கும் பணத்தையெல்லாம் எவ்வாறு ஆடம்பரமாகச் செலவு செய்வது என்ற சிந்தனையில் அவர் ஆழ்ந்திருக்கிறார் என நினைக்கிறேன்" என்று என்னிடம் சொன்னார். அமெரிக்கப் புலனாய்வுத்துறையின் பொறுப்பு மிக்க உயரதிகாரி இப்படி "ஜேம்ஸ் பொண்ட்" திரைப்பட வில்லனைப் போலக் குரூர நகைச்சுவை செய்வதைப் பார்த்து நான் திகைத்துப் போனேன். எனக்குச் சினம் உச்சிக்கு ஏறியது. ஆனால், அதிகாரியை முறைத்துப் பார்ப்பதைத் தவிர என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. இந்த இழிசெயலுக்காக அதிகாரி காங்கை நீதிமன்றத்தில் பதில் சொல்ல வைப்பேன் என்று மனதில் உறுதியெடுத்துக் கொண்டேன். ஆனால், நீதிமன்றத்தில் என்னுடைய வழக்கு விசாரணைக்கு வந்தபோது, தான் இப்படியெல்லாம் சொல்லவில்லை என்று அதிகாரி காங் அப்பட்டமாகப் பொய் சொன்னார். நீதிமன்றமும் அந்தப் பொய்யை ஏற்றுக்கொண்டது.

காங் என்னை மட்டுமே இப்படி மிரட்டவில்லை. எனக்குக் கீழே வேலை செய்த கலியன் நிறுவன நிதி மேலாளர்களையும் பகுப்பாய்வாளர்களையும் எனது தொழிற்துறைச் சகாக்களையும் இவ்வாறே கடுமையாக மிரட்டியதாகப் பின்னால் அறிந்துகொண்டேன். இத்தகைய மிரட்டல்கள் என்னையும் எனது குடும்பத்தையும் எனது ஊழியர்களையும் அச்சுறுத்திப் பணிய வைக்கும் முயற்சியாகும். என்னுடைய வழக்கு நடைபெற்ற காலம் முழுவதுமே இப்படியான அச்சுறுத்தல்களையும் பொய்களையும் எப்.பி.ஐ உருவாக்கியவாறேவிருந்தது. பிரதிவாதிகளையும் சாட்சியங்களையும் இவ்வாறாக மிரட்டிப் பணிய வைக்கும் பாரம்பரியத்தை ஜே. எட்ஜர் ஹூவர் காலத்திலிருந்தே எப்.பி.ஐ. கடைப்பிடித்து வருகிறது.

கறுப்பு நிறத்திலான ஒரு வாகனத்திற்குள் என்னைத் திணித்து, நியூயோர்க்கின் எப்.பி.ஐ அலுவலகத்திற்குக் கொண்டு சென்றார்கள். வழியில் எந்த உரையாடல்களும் நிகழவில்லை. அந்த வாகனம் சகிக்க முடியாத அமைதியால் நிரம்பிவிருந்தது. எனது மூளை குழம்பிப் போயிருந்தது. என்னைச் சுற்றி என்ன நடக்கிறது? ஏன் இப்படியொரு அவசரக் கைது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

இதைப்பற்றியெல்லாம் எனக்குப் பின்னர்தான் மெல்ல மெல்லப் புரிந்தது. வெள்ளிக்கிழமை அதிகாலைக் கைதுகளைக் காவல்துறையினர் மேற்கொள்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. இதுவும் எப்.பி.ஐ யின் அச்சுறுத்தும் தந்திரங்களில் ஒன்று. அதிகாலையில் கைதாகும் நபர் தூக்கக் கலக்கத்துடன் செயலற்றுக் காணப்படுவார். வாரயிறுதி நாட்களில் ஒரு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்வதும் சிரமம். அந்த இடைவெளிக்குள் கைதியை உருட்டி மிரட்டிக் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பெற்றுவிடலாம்.

எப்.பி.ஐ அலுவலத்தில், சாளரங்களே இல்லாத ஆனால், ஒளி பிரகாசித்த ஓர் அறைக்குள் நான் தள்ளப்பட்டேன். அங்கே பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசமே தெரியாது. ஒரு மேசையின் முன்னே இருந்த நாற்காலியில் நான் உட்கார வைக்கப்பட்டேன். என்னை இழுத்துவந்த அதிகாரிகள் எனக்கு எதிரே முதுகுகளைச் சுவரில் சாய்த்தவாறே நின்றுகொண்டார்கள். ஏதோவொரு வலுவான மிருகத்தை வேட்டையாடிய வேட்டைக்காரர்களின் உடல்மொழி அவர்களிடமிருந்தது. அதிகாரி காங் எனக்கு முன்னேயிருந்த மேசையில் குற்றப் பத்திரிகையைத் தூக்கிப் போட்டார். நான் "உட்தகவல் வணிகம்" (Insider Trading) செய்தேன் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன். நான் சற்றுத் திகைத்துத்தான் போனேன்.

பங்குச் சந்தை வணிகத்தில் "உட்தகவல் வணிகம்" சட்ட விரோதமானது. ஒரு நிறுவனத்தினுடைய பங்குகளின் மதிப்பு ஏறவோ இறங்கவோ

இருக்கும் தகவலை, அந்த நிறுவனத்தின் அலுவலர் ஒருவரிடமிருந்து இரகசியமாக அறிந்துகொண்டு, பங்குகளின் ஏற்ற இறக்கங்கள் பகிரங்கமாகச் சந்தையில் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே அந்த நிறுவனத்தின் பங்குகளை வாங்குவது அல்லது விற்பதே உட்தகவல் வணிகம் எனப்படும். நான் ஒரு போதுமே இந்தச் சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டதில்லை. நான் சந்தையில் பங்குகளை வாங்கவும் விற்கவும் எனது கலியன் நிறுவனப் பகுப்பாய்வாளர்களின் நீண்ட, துல்லியமான ஆய்வுகளையே நம்பியிருந்தேன். இரகசியமாகத் துப்புகளைப் பெற்று, அதற்கு இலஞ்சம் கொடுக்கும் வழக்கமெல்லாம் கலியன் நிறுவனத்தில் கிடையவே கிடையாது. நான் நடத்திய அத்தனை வணிகச் செயற்பாடுகளுக்கும் முறையாகப் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இருக்கின்றன.

அதிகாரி காங் முதலில் ஆர்ப்பாட்டமாக ஒரு வேலையைச் செய்தார். பதிவு செய்யப்பட்டிருந்த சில தொலைபேசி உரையாடல்களை விசாரணை அறையில் அவர் ஒலிக்கச் செய்தார். எனது கைபேசி கடந்த சில வருடங்களாகவே எப்.பி.ஐ அதிகாரிகளால் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளது என்று புரிந்து கொண்டேன். காங் ஒலிநாடாவை நிறுத்திவிட்டு, தன்னுடைய கேள்விகளை என்மீது வீசத் தொடங்கினார்.

எனக்கான வழக்கறிஞர் இல்லாத இடத்தில், நான் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டுமென்று சட்டப்படி எந்தக் கட்டாயமுமில்லை. ஆனாலும், நான் அதிகாரி காங்குடைய கேள்விகள் அனைத்திற்கும் நேர்மையாகவும் விளக்கமாகவும் துணிச்சலாகவும் பதிலளித்தேன். ஏனெனில், என்னிடம் மறைப்பதற்கு ஏதுமில்லை. எனது வணிக நடவடிக்கைகள் அனைத்துமே வெளிப்படையானவை, சட்டபூர்வமானவை.

அந்த விசாரணை எனக்குப் பயம் காட்டி, அச்சுறுத்தும் நோக்கத்துடனேயே நடத்தப்பட்டது. என்மீது சுமத்தப்பட்டிருக்கும் உட்தகவல் வணிகக் குற்றத்தை நான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் பங்குச் சந்தை வணிகத்திலும் முதலீட்டு நிதியத்தொழிலிலும் வெற்றிகண்ட சிலருக்கு எதிராக என்னுடைய வாக்குமூலம் அமைய வேண்டுமென்றும் எப்.பி.ஐ. அதிகாரிகள் என்னை நிர்ப்பந்தித்தார்கள். நான் இரண்டையுமே செய்யவில்லை.

பங்குச் சந்தையும் முதலீட்டு நிதியங்களும் எவ்வாறு இயங்குகின்றன என்பதைக் குறித்து என்னை விசாரணை செய்த அதிகாரிகளுக்குச் சுத்தமாகத் தெரியாது என்பதை நான் சீக்கிரமே புரிந்துகொண்டேன். குறிப்பாக, முதலீடு சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் கடுமையான பகுப்பாய்வுகளைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாதிருந்தது. மிகக் கவனமாக மேற்கொள்ளப்படும் முதலீட்டு நிதியத் தொழிலின் அமைப்பு, அதிலுள்ள இடர்கள்,



ப்ரீத் பராரா

Image source - www.nytimes.com

நிர்வாகம், நிதி மேலாளர்கள் இயங்கும் முறைகள் போன்றவற்றைக் குறித்து விசாரணை அதிகாரிகளுக்கு எந்தத் தெளிவுமில்லை. நான் அவற்றை விளக்கினாலும், விளங்கிக்கொள்வதற்கு அவர்கள் அக்கறை காட்டவில்லை. அவசர அவசரமாக என்மீது உட்தகவல் வணிகம் என்ற குற்றத்தைச் சுமத்தி, என்னைச் சிறைக்கு அனுப்புவதிலேயே அந்த அதிகாரிகள் குறியாக இருந்தார்கள். நானோ என்னுடைய நேர்மையான பதில்களால் அவர்களை முறியடிக்க முடியும் என்ற அப்பாவித்தனமான நம்பிக்கையோடு, அதிகாரிகளுக்குச் சளைக்காமல் பதிலளித்தவாறு இருந்தேன். விசாரணை எந்தத் திசையிலும் நகர வழியின்றி, அந்த மூடிய அறைக்குள்ளேயே தேங்கிக் கிடந்தது.

காலை ஒன்பது மணிக்கு, எனது அலுவலகத்துடன் தொலைபேசி வழியாகத் தொடர்புகொள்ள அனுமதிக்கப்பட்டேன். அலுவலகத்தில் இருந்தவர்கள் எனக்காக ஒரு வழக்கறிஞரைத் தேடும் முயற்சியில் பரபரப்பாக ஈடுபட்டிருந்தார்கள். எனக்கென்று பிரத்தியேக வழக்கறிஞர் எவரும் இருக்கவில்லை. சில மணிநேரங்களின் பின்பாக ஒரு வழக்கறிஞர் கண்டுபிடிக்கப்பட்டார். அவர் யார்? அவரின் சட்ட நிபுணத்துவம் எத்தகையது? என்பது பற்றியெல்லாம் எனக்கு எதுவுமே தெரியாது. அதே போன்று, அந்த வழக்கறிஞரும் என்னைப் பற்றியோ, கலியன் என்ற என்னுடைய நிறுவனத்தைப் பற்றியோ எதுவுமே அறிந்திருக்கவில்லை.

ஆனாலும், அவர் உடனடியாகவே தொலைபேசி வழியாக ஒரேயொரு மிகச் சிறந்த ஆலோசனையை எனக்கு வழங்கினார்.

அதிகாரிகளின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுமாறு சொன்னார். என்னாலும் எப்.பி.ஐ அதிகாரிகளுக்கு எதையுமே புரியவைக்க முடியாததால், வழக்கறிஞரது ஆலோசனையை நான் மனதார ஏற்றுக் கொண்டேன்.

எப்.பி.ஐ அதிகாரிகள் என்னை மூடிய அறைக்குள் விசாரணை செய்துகொண்டிருந்த அதேவேளையில், நியூயோர்க் தென்மாவட்டத்தின் அரசுத் தலைமை வழக்குரைஞரான ப்ரீத் பராரா அவர்கள் தனது அலுவலகத்தில் ஓர் ஊடகச் சந்திப்பை ஏற்பாடு செய்து, உலககெங்குமுள்ள தொலைக்காட்சித் திரைகளில் நேரலையில் தோன்றிப் பேசிக்கொண்டிருந்தார். ஊடகவியலாளர்களின் கமெராக்களுக்கு முன்பு மிடுக்காக நிற்பதில் அவர் கட்டுக்கடங்காத தாகத்தைக் கொண்டிருக்கிறார் என்பது முழு அமெரிக்காவுக்குமே தெரியும்.

எப்.பி.ஐ அதிகாரிகளோடு, எஸ்.இ.ஸி. எனக் குறுக்கிச் சொல்லப்படும் "பங்கு மற்றும் பரிவர்த்தனை ஆணையம்" சார்ந்த அதிகாரிகளையும் ஊடகச் சந்திப்பில் ப்ரீத் பராரா தன்னோடு வைத்திருந்தார். என்னைக் கைது செய்ததைக் குறித்துப் பெருமிதம் பொங்கிவழிய தடல்புடலாக அவர்கள் ஒருவரையொருவர் பாராட்டித் தள்ளினார்கள். "கலியன் முதலீட்டு நிதியத்தின் நிறுவனரும், தலைமை நிறைவேற்று அதிகாரியுமான "பில்லியனர்" ராஜ் ராஜரட்ணம் மீது எஸ்.இ.ஸி உட்தகவல் வணிகக் குற்றம் சுமத்தியுள்ளது" என்ற தலைப்போடு ஓர் அறிக்கையை எஸ்.இ.ஸி ஊடகங்களுக்கு வெளியிட்டது. இந்த அறிக்கையின் பின்புதான் "பில்லியனர்" என்ற அடைமொழி என்னுடன் நிரந்தரமாக ஒட்டிக்கொண்டது.

ஊடகச் சந்திப்பில், அரசுத் தலைமை வழக்குரைஞர் பராரா பல வரைபடங்களை வெளியிட்டார். பராராவின் கற்பனையால் வரையப்பட்ட "உட்தகவல் வணிக வலையமைப்பு" வரைபடங்களின் மையத்திலிருக்கும் "தலைமைச் சதிகாரன்" பாத்திரத்தை அவர் எனக்கு வழங்கியிருந்தார். அந்த வரைபடங்களில் என்னோடு கோர்த்துவிடப்பட்டிருந்தவர்களில் ஒரு சிலரை மட்டுமே எனக்குத் தெரியும்.

"இந்த வழக்கு வால் ஸ்ட்ரீட்டுக்கும் முதலீட்டு நிதியங்களுக்கும் மாபெரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று அந்த ஊடகச் சந்திப்பில் பராரா கொக்கரித்திருந்தார். தனது உரையில் 1987 இல், வெளிவந்திருந்த "வால் ஸ்ட்ரீட்" என்ற திரைப் படத்தில் "கோர்டன்" என்ற கதாபாத்திரத்தில் நடித்திருந்த மைக்கல் டக்ளஸ் கூறும் "பேராசை எப்போதுமே நல்ல விடயமில்லை" என்று வாக்கியத்தை அவர் குறிப்பிட்டுக் காட்டினார். ஊடக வெளிச்சத்தில் தன்னைத்தானே முன்நிறுத்துவதில் பராரா மகா நிபுணர். அவருடைய விளம்பர வெறிக்கும் தொழில் உயர்வுக்கும் நானே தூண்டில் புழு.

அங்கிருந்த எஸ்.இ.ஸி பிரதிநிதியும் பராராவுக்குச் சற்றும் குறைந்தவரல்ல. அவர் "பில்லியனர் ராஜ் ராஜரட்ணம் இந்தப் பிரபஞ்சத்தின் முதல்வர் அல்ல, அவர் உட்தகவல் வணிகம் எனும் ஊழல் குகையின் முதல்வர்" என்று நாடகப் பாணியில் சொன்னார். ஊடகவியலாளர்களையும் பொதுமக்களையும் வலிந்து சிரிக்கச் செய்வதற்காக, சிரிப்பு வாயு நிரம்பிய பலூனை வெடிக்கச் செய்ததைப் போன்று அதுவிருந்தது.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், உட்தகவல் வணிகத்தின் மூலமாகப் பங்குச் சந்தையில் நான் நடத்தியிருப்பதாகச் சொல்லிக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த குறிப்பிட்ட வணிகங்களில் மொத்தமாக முப்பது மில்லியன் டொலர்கள் நட்டத்தை என்னுடைய கலியன்

நிறுவனம் சந்தித்திருக்கிறது என்ற உண்மையை பராரா மிகவும் தந்திரமாக அந்த ஊடகச் சந்திப்பில் மறைத்துவிட்டார். அந்த உண்மையைச் சொல்லியிருந்தால் ஊடகவியலாளர்களிடம் அது சந்தேகங்களைக் கிளப்பிவிடும் என்பதால் பராராவும் அரசுத் தரப்பினரும் மிகவும் கவனமாகத் தங்களது புனைகதையை எழுதினார்கள்.

பராரா ஊடகச் சந்திப்போடு நிறுத்திக்கொள்ளவில்லை. இதற்குப் பின்னர், அவமானநடை என்ற மோசமான நிகழ்வை ஏற்பாடு செய்வதில் அவர் ஆர்வமானார். இந்த நிகழ்ச்சியின் ஒரே நோக்கம், விசாரணைக் கைதியை ஊடகங்களுக்கும் பொது மக்களுக்கும் காட்சிப் பிராணியாக்கி அவமானப்படுத்துவதே.

அரசுத் தலைமை வழக்குரைஞர் ப்ரீத் பராராவிடம் வானளாவிய அதிகாரம் குவிந்து கிடந்தது. இதுவும் அமெரிக்க நீதி முறைமையின் குறைபாடுகளிலொன்று. பராரா என்னை அவமான நடையில் தள்ளுவதற்குத் தீர்மானித்துவிட்டார். இதுவரைக்கும் குற்றவாளி எனத் தீர்ப்பிடப்படாத நான் எனது முதுகுக்குப் பின்னாகக் கைகள் விலங்கிடப்பட்ட நிலையில் எப்.பி.ஐ. அலுவலகத்திலிருந்து ஐம்பது அடிகள் தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காவல்துறை வாகனம்வரை ஏராளமான ஊடகவியலாளர்களின் முன்னே, என்னைச் சுற்றி எல்லாத் திசைகளிலும் கமெராக்கள் மின்னலடிக்க ஊர்வலம் விடப்பட்டேன்.

நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிகளில் எனது அவமான நடை நேரலையில் ஒளிபரப்பாகியது. எண்ணுக்கணக்கற்ற பத்திரிகைகளின் முதல் பக்கங்களை என்னுடைய அவமான நடை அலங்கரித்துப் பத்திரிகைகளின் விற்பனையை எகிறச் செய்தது. ஆனால், என்னை அவமானப்படுத்துவதில் குறியாக இருந்த அமெரிக்க நீதித்துறை என்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்ற வலைப்பின்னலை நான் விளங்கிக் கொள்ளவோ, அவற்றை மறுதலிக்கவோ எனக்கு வாய்ப்பே கொடுக்கவில்லை. இத்தகைய செயற்பாடு கடுமையான அநீதி மற்றும் பாரபட்சம் என்று ஜனநாயக நாடுகளில் கருதப்படும். மாபெரும் ஜனநாயக நாடென்று தன்னைப் பெருமையுடன் பீற்றிக்கொள்ளும் அமெரிக்காவில், நீதித்துறை இவ்வாறு தான்தோன்றித்தனமாகவும் பாரபட்சமாகவும் நடந்துகொண்டதைக் கண்டு நான் திகைத்துத்தான் போனேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்புவரை இந்த ப்ரீத் பராரா எந்தப் பிரபலமுமற்ற சாதாரணமான ஒரு வழக்கறிஞர். செனட்டர் சக் சுமெரின் சட்ட ஆலோசகராக இருந்தவர். அரசுத் தலைமை வழக்குரைஞர் பதவியைப் பெற்றுக்கொண்டதும், ஒரே வழக்கில் பெரும் புகழடைவதற்கும் அதிகாரப் படிகளில் மேலேறிச் செல்வதற்கும் என்னுடைய வழக்கே சாலவும் சிறந்தது என்ற முடிவுக்கு பராரா வந்திருக்க வேண்டும். “பில்லியனர்” என்ற அடைமொழியை அவர் திட்டமிட்டே என் மீது திணித்துக் கொண்டிருந்தார். நாட்டில் ஏற்பட்டிருந்த மோசமான பொருளாதார நெருக்கடியால் தவித்துக்கொண்டிருந்த மக்களுக்கு என்னைத் தீனியாகப் போடுவதற்குத் திட்டமிட்டார். “வால் ஸ்ட்ரீட் ஷெரீப்” என்ற மகுடத்தைத் தனது தலையில் சூடுவதற்கு அவர் தவியாகத் தவித்துக் கொண்டிருந்தார்.

எனக்கு முன்போ அல்லது பின்போ, உட்தகவல் வணிகக் குற்றம் சுமத்தப்பட்ட எவருமே அவமான நடைக்கு உட்படுத்தப்படவில்லை. ஆனால், அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் என்மீது சுமத்தப்பட்ட குற்றங்களிலும் பல மடங்குகள் அதிகமாகவிருந்தன. ஆரம்பம் முதலே எனது வழக்கில் அரசுத் தரப்பு பாரபட்சமாக நடந்துகொண்டது என்பதை நீங்கள் இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம்.

அவமான நடை நிறைவேறியதும், நான் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கே எனது குடும்பத்தினரும் நண்பர்களும் வந்திருந்தார்கள். மதியத்திற்கு மேல் என்னுடைய வழக்கறிஞரைச் சந்தித்தேன். அவர் என்னைக் குறித்த சில அடிப்படைத் தகவல்களை என்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். நான் ஏதாவது தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகள் வழங்கியிருக்கிறேனா எனக் குறிப்பாகக் கேட்டார்.

என்னைப் பிணையில் விடுவிப்பதற்கான ஆவணங்களை வழக்கறிஞர் தயார் செய்யத் தொடங்கியவாறே, என்னுடைய சகோதரர் ரங்கனிடம் கடந்த ஐந்து வருடங்களுக்கான எனது வருமானவரி அறிக்கைகளின் நகல்களை




**வால் ஸ்ட்ரீட் - நியூயோர்க்**

Image source - wikipedia.org

கலியன் அலுவலகத்திலிருந்து எடுத்துவருமாறு சொன்னார். நான் செய்திருந்த அறப்பணிகளுக்கும் வழங்கியிருந்த நன்கொடைகளுக்குமான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவே வருமானவரி அறிக்கைகளின் நகல்களை வழக்கறிஞர் கேட்டார். ரங்கனும் துரிதமாகச் செயற்பட்டு, வழக்கறிஞர் கூறியவாறே வருமானவரி அறிக்கைகளின் நகல்களை எடுத்துவந்தார். ஆனால், அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள், “ரங்கன் அந்த நேரத்தைப் பயன்படுத்தி கலியன் அலுவலகங்களிலிருந்த இரகசியக் கோப்புகளை அழித்துவிட்டார்” என நீதிமன்றத்தில் புதியதொரு குற்றச்சாட்டைப் பின்பு புனைந்தார்கள்.

நீதிமன்றத்தில் நிகழ்ந்த பிணை மனுக்கள் மீதான விசாரணையின் போதுதான், வோற்ரன் வணிக மேலாண்மைப் பள்ளியில் என்னுடன் கல்வி பயின்றவரும் நிதித் தொழிற்துறையில் எனது சகாவுமான அனில் குமாரும் அன்று காலையில் கைதுசெய்யப்பட்டிருந்தது எனக்குத் தெரியவந்தது. அவர் நீதிபதி டக்ளஸ் ஈற்றன் முன்னால் நிறுத்தப்பட்டபோது, தான் நிரபராதி என்றே வாக்குமூலம் அளித்தார்.

கலிபோர்னியாவில் இருந்த அனில் குமாரின் வீட்டைப் பிணையமாக எடுத்துக்கொண்டு, அவரைப் பிணையில் விடுவிக்க நீதிபதி சம்மதித்தார். அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள் நீதிபதியின் முடிவை ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அனில் குமார் சீக்கிரமே எப்.பி.ஐ யின் அச்சுறுத்தலுக்குப் பணிந்து போய், தனது வாக்குமூலத்தைத் தலைகீழாக மாற்றுவாரென்றோ, பல்வேறு சரடுகளுள்ள நீண்ட கதையொன்றைப் புனைந்து எனக்கு எதிராகவே சாட்சியம் சொல்வாரென்றோ அப்போது என்னால் ஊகம் கூடச் செய்ய முடியாமலிருந்தது.

நீதிபதி டக்ளஸ் ஈற்றன் அவர்கள் அடுத்ததாக எனது பிணை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது, அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள் பரபரப்பாகச் செயற்படத்

தொடங்கினார்கள். என் மீதான விசாரணைகள் முடியும் வரை என்னைச் சிறையில் வைத்திருக்க அவர்கள் விரும்பினார்கள். உலகத்தின் பல நாடுகளில் எனக்கு ஏராளமான சொத்துகள் உண்டென்றும் இலங்கைக்கு அல்லது வேறொரு நாட்டுக்கு நான் தப்பியோட வாய்ப்புகள் உண்டென்றும் அரசுத் தரப்பு வழங்குரைஞர்கள் வாதிட்டு எனது பிணை மனுவை நிராகரிக்குமாறு நீதிபதியை வேண்டினார்கள். நீதிபதி என்னை உற்று நோக்கினார்.

நீதிபதியொருவர் பிரதிவாதியைப் பிணையில் விடுவிக்க மறுப்பதற்குப் பொதுவாக இரண்டு காரணங்கள் உள்ளன. பிரதிவாதி சமூகத்திற்கு ஆபத்தை உண்டாக்கக்கூடும் என்பது முதல் காரணம். பிரதிவாதி நாட்டைவிட்டுத் தப்பிச் செல்லக் கூடும் என்பது இரண்டாவது காரணம்.

நான் சமூகத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பேர்வழி என்று அரசுத் தரப்பு வழக்குரைஞர்களால் வாதிட முடியவில்லை. எனவே, நான் அமெரிக்காவிலிருந்து தப்பித்துச் செல்லக்கூடும் என்ற காரணத்தை வலியுறுத்தியே அவர்கள் வாதிட்டார்கள். தங்களுடைய வாதத்திற்குத் துணை சேர்க்கப் பச்சைப் பொய்களைப் பந்துகளாக நீதிமன்ற மேசையில் உருட்டினார்கள். எனது சகோதரி ஒருவர் தென்னாபிரிக்காவில் வசிக்கிறார் என்று அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள் நீதிபதியிடம் அடித்துக் கூறினார்கள்.

எனக்கு இரண்டு சகோதரிகள் மட்டுமே இருக்கிறார்கள். ஒருவர் நியூயோர்க்கிலும் மற்றவர் சிங்கப்பூரிலும் வாழ்கிறார்கள். இல்லவே இல்லாத சகோதரியைத் தென்னாபிரிக்காவில் அரசுத்தரப்பு வழக்குரைஞர்கள் உருவாக்கியதற்கு ஒரு வலுவான காரணமுண்டு. அந்த நாடு குற்றவாளிகளை நாடு கடத்தும் ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் செய்திருக்கவில்லை. எனவே, நான் இரகசியமாகத் தப்பித்துத் தென்னாபிரிக்காவுக்கு எனது சகோதரியிடம் சென்றுவிடுவேன் என்று அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள் ஒரு திகில் கதையை உருவாக்கினார்கள்.

“தென்னாபிரிக்கச் சகோதரி” என்ற பொய்யே நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்துவதற்காக அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள் இட்டுக்கட்டிய நீண்ட பொய்யுரைகளின் வரிசையில் முதலாவது பொய்யாகும். என்ன பொய் சொல்லியாவது, என்ன தந்திரம் செய்தாவது என்மீதான வழக்கில் வெற்றிபெற வேண்டும் என்பதே அரசுத் தரப்பு வழக்குரைஞர்களின் நோக்கமாக இருந்தது.

எனது வாழ்க்கையில் இதற்கு முன்பு நான் ஒருபோதுமே நீதிமன்ற வாசற்படியை மிதித்ததில்லை. அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள் செய்யக் கூடிய சூழ்ச்சிகளைக் குறித்து நான் கற்பனை கூடச் செய்ததில்லை. அமெரிக்காவில் நீதி பரிபாலனம் சட்ட பூர்வமாகவும் அறம் சார்ந்தும் நடக்கிறதென்றும், அரசுத் தரப்பு வழக்குரைஞர்களும் எப்.பி.ஐ அதிகாரிகளும் நீதிமன்றத்தில் பொய்யுரைக்க முடியாதென்றும் அமெரிக்காவின் பெரும்பாலான குடிமக்கள் நம்புவதைப் போலவே நானும் நம்பியிருந்தேன். ஆனால், அந்த நம்பிக்கை மிகப் பெரிய மூடநம்பிக்கை எனத் தெரிந்துகொள்வதற்கு நான் கொடுத்த விலை மிகவும் அதிகம். இந்தப் பொய்யர்களால் எனது முதலீட்டு நிதியத் தொழில் முழுவதுமாக அழிக்கப்பட்டது. உற்சாகமும் நிம்மதியும் நிறைந்திருந்த எனது வாழ்க்கை இந்தப் பொய்யர்களால் தடம் புரட்டப்பட்டது.

நீண்ட வாதப் பிரதிவாதங்கள் நீதிமன்றத்தில் நிகழ்ந்ததன் பின்பு, நீதிபதி டக்ளஸ் ஈற்றன் என்னை நூறு மில்லியன் டொலர்கள் பிணையத் தொகையில் விடுவித்தார். இருபது மில்லியன் டொலர்கள் சொத்துகளாகவும், மிகுதித் தொகைக்கு என்னுடைய நலன் விரும்பிகள் ஐவர் பொறுப்பேற்று உத்தரவாதம் அளித்தும் இது நிகழ்ந்தது. அமெரிக்க வரலாற்றிலேயே அதி உச்சமான பிணையத்தொகை என்னுடைய வழக்கிலேதான் பெறப்பட்டது. நாட்டின் வரலாற்றிலேயே ஆகப் பெரிய நிதி மோசடியைச் செய்த பேர்னி மேடோஃபுக்கு நீதிமன்றத்தில் நிர்ணயிக்கப்பட்ட பிணையத்தொகை பத்து மில்லியன் டொலர்களே. என்னுடைய விடயத்தில் பாரபட்சமான, சமனற்ற நீதியை வழங்குவதற்கு அமெரிக்க நீதித்துறை கங்கணம் கட்டிக் கொண்டு கடைசிவரை ஆடியது.

எனது பிணையத்தொகைக்கு உத்தரவாதம் நின்றவர்களில் ஒருவர் “ஹார்லம் குழந்தைகள் வலயம்” என்ற தொண்டு நிறுவனத்தை இயக்கிவரும் ஆஃப்ரோ அமெரிக்கரான ஜெஃப்ரி கனடா. அவருடைய தொண்டு நிறுவனம் வறுமையான சூழலில் வளரும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலைகளை நடத்துவது உட்பட பல்வேறு அறப்பணிகளைச் செய்துவருகிறது. நான் அமெரிக்காவை விட்டுத் தப்பியோடினால் ஜெஃப்ரி கனடா

எல்லாவற்றையும் இழந்துவிடுவார். அவரிடம் ஊடகங்கள் “ராஜ் ராஜரட்ணம் நாட்டை விட்டுத் தப்பியோடிவிடுவார் என்ற சந்தேகம் உங்களுக்கில்லையா?” எனக் கேட்டபோது “எனக்கு ராஜ் ராஜரட்ணம் மீது துளியளவு சந்தேகமும் கிடையாது! அவருடைய குணாதிசயங்களை நான் நன்கறிவேன்” என்று ஜெஃப்ரி கனடா கூறியது மிகவும் சரியானது. நான் அரசுத் தரப்பின் சூழ்ச்சிகளுக்கு அஞ்சி நாட்டை விட்டுத் தப்பியோடவோ, ஒளியவோ போவதில்லை. நான் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப் போராடப் போகிறேன். என் மீது வீசப்பட்டிருக்கும் சதிவலையைக் கண்ணி கண்ணியாக அறுத்தெறியும் மன உறுதியுடன் நான் இந்த வழக்கை எதிர்கொள்வேன்.

அரசுத் தரப்பு என்னைக் குறிவைத்ததற்கு வேறொரு வலுவான காரணமுள்ளது. ஒக்டோபர் 2009 இல் அமெரிக்காவில் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் பொருளாதாரக் கட்டமைப்பு அதல பாதாளத்தில் சரிந்து கிடந்தது. அமெரிக்காவின் வங்கிகளும் பெரும் நிதி நிறுவனங்களும் திவாலாகின. இதனால், அமெரிக்காவில் பல இலட்சம் மக்கள் தங்களது வீடுகளையும் வாழ்நாள் சேமிப்புகளையும் இழந்து நடுத்தெருவுக்கு வந்தார்கள். நாடு முழுவதும் கொந்தளிப்பும் கொதிப்பும் பரவியிருந்தன.

முழு அமெரிக்காவுமே வால் ஸ்ட்ரீட்டுக்கு எதிராகவிருந்தது. ஆனால், பெரும் வங்கிகள் மீது அரசாங்கத்தால் குற்றம் சுமத்த முடியவில்லை. “பெரும் வங்கிகளில் கைவைத்தால் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு முற்றுமுழுதாக நொறுங்கிவிடும். பெரும் வங்கிகளின் இயக்குனர்கள் தவறுகளுக்கு அப்பாற்பட்டவர்கள்” என்றெல்லாம் அரசாங்கம் சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டிருந்தது. ஆனால், பொதுமக்களும் ஊடகவியலாளர்களும் உணர்ச்சிகரமான எதிர்வினைகளில் இறங்கினார்கள்.

மக்களையும் ஊடகங்களையும் திருப்தி செய்வதற்காக, யாராவது ஒருவரைப் பிடித்துக் குற்றம் சுமத்தி அரங்கில் நிறுத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது. இந்த ஊழல்வாதியே அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறி, அகப்பட்டவர் மீது பழியைப் போட்டுவிட்டு அரசு தனது பொறுப்பிலிருந்து நழுவ நினைத்தது. இவ்வாறு அகப்பட்டவன் நானாக இருந்தேன்.

பங்குச் சந்தையில், எட்டு நிறுவனங்களின் பங்குகளை நான் உட்தகவல் வணிகத்தினால் கையாண்டேன் என முதலில் என் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தாலும், பின்பு அது முப்பத்து நான்கு வணிக நிறுவனங்களின் பங்குகள் சார்ந்த குற்றங்களாக அதிகரிக்கப்பட்டன. வழக்கு விசாரணையின்போது, அது மீண்டும் எட்டு நிறுவனப் பங்குகளது வணிகத்திற்கான குற்றங்களாகக் குறைக்கப்பட்டு, “கோல்ட்மன் சாக்ஸ்” பங்குகளில் உட் தகவல் வணிகம் செய்ததாகப் புதிதாக ஒரு குற்றச்சாட்டு சேர்க்கப்பட்டு, மொத்தமாக ஒன்பது குற்றங்கள் என்மீது சுமத்தப்பட்டன.

என்னுடைய கைதுக்கு மூலகாரணமாகயிருந்த அரசுத் தலைமை வழக்குரைஞர் ப்ரீத் பராரா சட்டத்தைக் கிஞ்சித்தும் மதிக்காதவராகக் காணப்பட்டார். குற்றம் சுமத்தப்பட்டவர்களை பராரா கடுமையாக மிரட்டுவார். அவமான நடை உண்டென்பார். சுமத்தப்பட்ட குற்றங்களை ஒப்புக்கொண்டால் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியலிட்டுப் பேரம் பேசுவார். பொய்ச் சாட்சியங்களை மிகுந்த கற்பனைத் திறனுடன் உருவாக்கி அச்சுறுத்துவார். குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிராகச் சாட்சியம் கூறுமாறு குற்றம் சுமத்தப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் தொழில் பங்காளிகளுக்கும் அழுத்தம் கொடுத்துப் பொய் வாக்குமூலங்களைப் பெறுவார். அந்த வாக்குமூலங்களை ஊடகங்களுக்குக் கசியவிட்டு, குற்றம் சுமத்தப்பட்டிருப்பவர் குறித்து மிக மோசமான பிம்பத்தைப் பொதுவெளியில் உருவாக்குவார். அவர் இந்தச் சூழ்ச்சித்திறனை அவரது முன்னோடி அரசுத் தலைமை வழக்குரைஞரும், பின்பு நியூயோர்க் நகரத்தின் மேயர் பதவியை வகித்தவருமான ரூடி யூலியானியிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கலாம்.

செய்தி ஊடகங்களைக் கையாள்வதில் பராரா மிகப்பெரும் தந்திரசாலியாக இருந்தார். அவர் என்னைக் குறித்து ஊடகங்களில் கசியவிட்ட செய்திகள் பொதுமக்களைக் கொந்தளிக்க வைத்தன. அவர்களுடைய கோபம் இயல்பாகவே என்னையும் எனது முதலீட்டு நிறுவனத்தை நோக்கியும் திரும்பியது. இந்தச் சூழலால் என்னுடைய நிறுவனத்தின் நிர்வாகிகளும் எனது தொழில் பங்காளிகளும் அச்சத்தில் வீழ்ந்து தளர்ந்துபோனார்கள். எனக்கு எதிராக மிகப்பெரிய ஊடகப் போரை அரசு திட்டமிட்டே நிகழ்த்தியது.

பராராவின் பொய்யுரைகளை “நம்பத் தகுந்த அரசியல் வட்டாரங்களிலிருந்தும் விசாரணைக் குழுவினரோடு நெருக்கமானவர்களிடமிருந்தும் கிடைத்த செய்திக் கசிவுகள்” எனக் குறிப்பிட்டு ஊடகங்கள் உலகம் முழுவதும் பரப்பிக் கொண்டிருந்தன. நிலைமைகளைக் கவனத்துடன் ஆராய்ந்து உண்மைகளை வெளியிடாமல், பரபரப்பை மட்டுமே செய்தியாக்கும் ஊடக அசிங்கம் அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது. “மிகப்பெரிய உட்தகவல் வணிகக் கும்பலை அரசாங்கம் கண்டுபிடித்தது” என ஊடகங்களில் நாள் தவறாமல் செய்திகள் வெளியாகின. ராஜ் ராஜ ரட்ணம் ஏன் குற்றவாளி என்பதை விளக்கும் அரசுத் தரப்பு வழக்குரைஞர்களின் உரைகளோடு தலைப்புச் செய்திகள் வெளியிடப்பட்டன. நான் சிறைக்கு அனுப்பப்பட்ட பிறகும் இந்த ஊடகப் பேரலை ஓயவில்லை. பின்னும் பல வருடங்களுக்கு நானே தலைப்புச் செய்தியாக இருந்தேன்.

ஊடகங்களின் பொறுப்பற்ற தன்மையும் பொய்களைப் பணமாக்கும் அவசரமும் அரசுத் தரப்பு வழக்குரைஞர்களின் சூழ்ச்சிகளுக்கு மூடுதிரையாகின. அவர்களைக் கேள்வி கேட்க ஆட்களற்றுக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தார்கள். தாங்கள் எண்ணியவற்றைத் தங்குதடையின்றிச் செய்துகொண்டே போனார்கள். இவர்களின் இந்த அராஜகப் போக்கு பலருடைய வாழ்க்கையை நாசமாக்கத் தொடங்கியது. கையில் கிடைத்தவர்களின் தலையிலெல்லாம் ஆதாரமற்ற வழக்குகள் சுமத்தப்பட்டன.

பராரா தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு சட்டத்தின் விதிகளை நளினமாக உடைத்தார். குற்றவியல் வழக்கின் வரையறைகளுக்குப் பொருந்திவராத வணிகத்துடன் தொடர்புடைய வழக்குகளையும் வலிந்து குற்றவியல் வழக்குகளாக்கினார். வெற்றி ஒன்றையே குறிவைத்து பராரா நீதி நியாயமின்றி வெறித்தனமாக இயங்கிக்கொண்டிருந்தார்.

என்னை வழக்குகளுக்குள் மாட்டிவிடுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னதாகத்தான், பராரா தன்னுடைய அலுவலகத்தின் பொதுசனத் தொடர்பு அதிகாரியாக எலின் டேவிஸ் என்பவரைப் புதிதாக நியமித்திருந்தார். எலின் டேவிஸ் தன்னுடைய முதல் வேலையாக பராராவின்



அனில் குமார்

Image source - www.gettyimages.com

பொதுசனத் தொடர்பு அதிகாரிகள் அணியை விரிவாக்கினார். மூன்று அதிகாரிகளுடன் இருந்த அந்த அணி பதினான்கு அதிகாரிகளைக் கொண்டதாக ஊதிப் பெருத்தது. எலின் டேவிஸ், தொலைக்காட்சி நாடகத்துறையில் தயாரிப்பாளராகப் பழுத்த அனுபவம் வாய்ந்தவர். எனவே, தன்னுடைய ஆற்றல்களையும் நாடகத் திறன்களையும் அரசுத் தரப்பின் தவறுகளுக்கு வெள்ளையடிக்க அவர் உபயோகித்தார்.

என்மீது தொடுக்கப்பட்ட வழக்கைப் பொறுத்தவரை, அரசுத் தரப்பின் நோக்கம் நீதியை நிலைநாட்டுவது அல்ல. மாறாக, பொருளாதாரக் கட்டமைப்புச் சிதைவு காரணமாகக் கடுமையான விமர்சனங்களைச் சந்தித்துத் தத்தளித்துக் கொண்டிருந்த, பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் முன்னேற முடியாத அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தை மூடிமறைப்பதே இந்த வழக்கின் அடிப்படையாகும். அரசாங்கத்தின் மீது அதிருப்தியால் கொதித்துக்கொண்டிருந்த மக்களின் கவனத்தை என்னை நோக்கித் திசை திருப்புவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

ப்ரீத் பராராவுக்கு மிகவும் பிடித்தமான பத்திரிகையாளர் “த வால் ஸ்ட்ரீட் ஜேர்னல்”

இதழின் புலனாய்வு நிருபர் சுஸான் புல்லியம். இந்த நிருபர் எனது வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே, என்னுடைய கலியன் நிறுவனம் குறித்துத் திகிலான, ஆனால், கவர்ச்சியான தலைப்புகளுடன் பல கட்டுரைகளை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரைகளை எழுதுவதற்காக என்னுடைய நண்பர்களுடனும் தொழிற்துறைச் சகாக்களுடனும் அவர் பேசியிருந்தார். ஆனால், அவர்கள் என்னைப் பற்றி நன்றாகக் கூறிய செய்திகளில் ஒன்றைக் கூடத் தன்னுடைய கட்டுரைகளில் சுஸான் புல்லியம் குறிப்பிட்டதேயில்லை. தனது கட்டுரைகளுக்கான சான்றாதாரங்கள் அரசுத் தரப்பு வழக்குரைஞர் குழாமுக்கு நெருக்கமானவர்களிடமிருந்து பெறப்பட்டவை என்றே அவர் குறிப்பிட்டார்.

என்னுடைய விடயத்தில் அநேகமான நிருபர்கள் கண்மூடித்தனமாகவே செய்திகளை வெளியிட்டார்கள். அரசுத் தரப்பு வழங்கிய மிதமிஞ்சிய தகவல்களால் அவர்கள் மூழ்கடிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அந்தத் தகவல்களின் நம்பகத் தன்மையைக் குறித்து அலசி ஆராயாமல், முற்றிலும் தவறான செய்திகளையே வெளியிட்டுக்கொண்டிருந்தார்கள். உதாரணமாக, ஹில்டன் நிறுவனத்தின் 400,000 பங்குகளை கலியன் தொழில்நுட்பத்துறை முதலீட்டு நிதியத்திலிருந்து விலைக்கு வாங்கிவிட்டேன் என்பது என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் ஒன்றாகும்.

கலியன் தொழில்நுட்பத்துறை முதலீட்டு நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த உரிமம் தொழிநுட்பத்துறையில் முதலீடு செய்வதாகும். எனவே ஹில்டன் பங்குகளை வாங்கியது சட்ட விரோதம் என்பது ஊடகங்களின் ஒற்றைப் பார்வை. ஆனால், உண்மை என்ன? கலியன் தொழில்நுட்பத்துறை முதலீட்டில் 25% நிதியைத் தொழில்நுட்பத்துறை சாராத துறைகளிலும் முதலீடு செய்யலாம் என்பதும் உரிமத்தின் ஒரு விதியாகும். அந்த விதிக்கு அமையவே நாங்கள் ஒக்டோபர் 2009 வரையிலான ஐந்து வருட காலத்தில் 20% நிதியைத் தொழிநுட்பத்துறை சாராத பங்குகளில் முதலீடு செய்திருந்தோம். அவற்றில் ஹில்டன் பங்குகள் மட்டுமல்லாமல், தொழிநுட்பத்துறை சாராத வேறு சில நிறுவனங்களின் பங்குகளும் இருந்தன. இது பற்றி எந்த வொரு நிருபரும் எழுதவேயில்லை. ஊடகங்கள் ஆராய்ந்து தெளியாமல், அரசுத் தரப்பு வழக்குரைஞர்களின் பொய்களையும் மழுப்பல்களையும் வாங்கி அப்படியே வாந்தி எடுத்தன.

அன்றைய நாள் எனக்குக் கடுமையான மனவுளைச்சலையும் உடற்சோர்வையும் ஏற்படுத்தியிருந்தது. நீதிமன்றத்தில் எனக்குப் பிணை வழங்கப்பட்ட பின்பாக, இரவு ஏழு மணியளவில் நீதிமன்றத்திலிருந்து எனது வீட்டுக்குப் புறப்பட்டேன். நீதிமன்ற வளாகத்திலோ தெருவிலோ நிருபர்கள், படப்பிடிப்பாளர்கள் எவருமே காணப்படவில்லை. என்னை எதிர்பார்த்து என்னுடைய வீட்டின் முன்னாலும் அவர்கள் காத்திருக்கவில்லை.

எனது தரப்பு நியாயத்தைக் கேட்பது அவர்களுக்குத் தேவையற்றதாகவிருந்தது. பராரா கொடுத்த பொய்ச் செய்திகளே அவர்களுக்கு அன்றைக்குப் போதுமானவையாக இருந்திருக்க வேண்டும். பரபரப்புக்கள் எல்லாம் ஓய்ந்துவிட்டன போலும் என்று நினைத்துக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தேன்.

எனது பெற்றோர், சகோதரர், சகோதரி, நண்பர்கள் ஆகியோரால் வீடு நிறைந்திருந்தது. அன்பான வார்த்தைகளும் ஆறுதல் செய்திகளும் என்னைச் சூழ்ந்தன. நான் அமைதியாக இரவு உணவை முடித்துக்கொண்டு, அவர்களிடமிருந்து விடை பெற்று என்னுடைய படுக்கையறைக்குச் சென்றேன். அன்றைய நாளின் நிகழ்வுகளை நான் தனிமையிலிருந்து சிந்திக்கவும் ஆராயவும் எனக்கு நேரம் கிடைத்தது.

எனக்கு வழங்கப்பட்டிருந்த குற்றப்பத்திரிகையை நான் கவனமாக வாசித்தேன். கலியன் நிறுவனத்தின் மிகக் கூர்மையான பகுப்பாய்வாளர்களால் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு எடுத்த வணிகத் தீர்மானங்களை அநியாயத்திற்கு உட்தகவல் வணிகத்துடன் முடிச்சுப்போட்டு குழப்பமான அர்த்தங்களைக் கொடுக்கும் மழுப்பலான, மங்கலான வாக்கியங்கள் வேண்டுமென்றே குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டிருப்பதைக் கவனித்தேன். என்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் எவை என்பதை நான் சரியாக விளங்கிக்கொள்வதற்கு முன்னதாகவே நான்

குற்றவாளி ஆக்கப்பட்டு, தண்டனையும் வழங்கப்பட்டிருப்பதாக உணர்ந்தேன். குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் எட்டுப் பங்குச் சந்தை வியாபாரங்களிலும், கலியனின் மிகக் கூர்மையான நிதிப் பகுப்பாய்வாளர்களால் பரிசீலிக்கப்பட்டு எனக்குக் கொடுக்கப்பட்ட விரிவான அறிக்கைகளின் வழியேதான் நான் ஈடுபட்டிருந்தேன். அந்த ஆய்வு அறிக்கைகள் கோப்புகளில் இடப்பட்டு கலியன் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. எமது கலியன் நிறுவனத்தின் பகுப்பாய்வு முறை துல்லியமும் கண்டிப்பும் நிறைந்ததாகும். அங்கே உட்தகவல் வணிகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசுத் தரப்புக்கோ இதெல்லாம் பொருட்டில்லாமலிருந்தது. அவர்கள் என்னுடைய கைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு, பேசப்பட்டிருந்த துண்டு துணுக்குச் சொற்களை அவர்களுக்கு ஏற்றமுறையில் திரித்து வைத்துக்கொண்டு குற்றப் பத்திரிகையைப் புனைந்திருக்கிறார்கள். உண்மைக்கு முற்றிலும் புறம்பான ஒரு வரைபடத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

உதாரணமாக, நிதி மேலாளரான டானியல் கேஸியோடு நான் நடத்திய உரையாடலை தங்கள் வசதிக்கு ஏற்றவகையில் மலினமான தந்திரத்தால் வளைத்திருந்தார்கள். அதாவது “இரகசியமாக வைத்திருங்கள்” என்ற எனது வார்த்தையைப் பிடித்துத் தொங்கினார்களே தவிர, எந்தச் சந்தர்ப்பத்தில், எது தொடர்பாக இப்படிக் கூறினேன் என்பதை மறைத்து விட்டார்கள். தொலைபேசி உரையாடலின் உள்ளடக்கம் பங்குச் சந்தை குறித்த இரகசியத் தகவல்களே என்று மொட்டையாக வாதிட்டார்கள்.

உண்மையில் என்ன நடந்ததென்றால், ஒரு மாலை வேளையில் நான் எனது குடும்பத்தினருடன் ஓய்வாக நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தபோது, டானியல் கேஸி அலைபேசியில் என்னை அழைத்தார். “அக்கமாய் நிறுவனப் பங்குகளின் மதிப்பு இறங்கப் போகிறது எனத் தெரியவருகிறது” என்றார். நான் பதிலுக்கு “நாங்கள் அதை எங்களது பகுப்பாய்வுகள் வழியாக ஏற்கனவே அறிந்திருக்கிறோம். அந்த நிறுவனத்தின் பங்குகள் இறக்கத்தைச் சந்திக்கும் என்று நாம் ஏற்கனவே பந்தயம் கட்டி, சொற்பமான பங்குகளையே வாங்கியுள்ளோம்” என்றேன்.

பங்குச் சந்தையில் ஒரு நிறுவனத்தின் பங்குகள் வீழ்ச்சியடையும் எனப் பந்தயம் கட்டுவதை மிக இரகசியமாகவே வைத்திருக்க வேண்டும். இல்லையெனில், எல்லோரும் அடித்துப்பிடித்து பங்குகள் வீழும் எனப் பந்தயம் கட்டினால், அதுவே அந்த நிறுவனப் பங்குகளின் விலை ஏற்றத்திற்கு வழி வகுத்துவிடும். இதனாலேயே நான் டானியல் கேஸியிடம் “இரகசியமாக வைத்திருங்கள்” என்றேன். இதற்கும் உட்தகவல் வணிகத்திற்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்பது வெளிப்படை. ஆனால், இந்த ஒரு சாதாரண வார்த்தையைப் பூதாகரமாக்கி என்மீது உட் தகவல் வணிகம் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது.

எனது வணிக நடவடிக்கைகள் முழுவதுமே எழுத்து மூலமாகவே நடைபெறும். எனவே, எனது அனைத்து நடவடிக்கைகளும் வெளிப்படையாகவே இருந்தன. எமது பகுப்பாய்வாளர்களின் பரிந்துரைகளும் வெளிப்படையாகவே இருந்தன. சட்டத்துறையைப் பொறுத்தவரை, ஆவணங்கள் ஒருவருக்கான நற்சான்றுப் பத்திரங்கள் அல்ல என்பதே அவர்களது நிலைப்பாடு. அரசுத் தரப்புக்கு என்னுடைய வணிக ஆவணங்கள் முழுவதையுமே பார்வையிடும் வாய்ப்பு இருந்தபோதும், அவர்கள் ஆவணங்களைச் செல்லாக்காகிதங்களாக உதாசீனம் செய்தார்கள். இமை வெட்டும் நொடிக்குள் எனது வாழ்வு பூகம்பப் பிளவுக்குள் வழுவிச் சென்றது.

நிகழச் சாத்தியமே இல்லாத ஒரு விடயம் நிகழ்ந்து, அது ஆழமான பின்விளைவுகளைக் கொண்டதாக அமையும்போது, அதைக் குறிப்பிடும் “கறுப்பு அன்னம்” என்றொரு பழமொழி இலத்தீன் மொழியில் உண்டு; ஆங்கிலத்திலும் வழக்கிலுள்ளது. அதுதான் என் வாழ்வில் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நான் கனவிலும் நினைத்திராதவாறு என்னுடைய வாழ்க்கை தலைகீழாக மாறிக்கொண்டிருக்கிறது. என்னைச் சுற்றிப் பயமுறுத்தல்கள், அவதூறுகள், அவசரத் தீர்ப்புக்கள் பின்னிக்கிடக்கின்றன. இந்த உலகம் என்னை எதை நோக்கி இழுத்துச் செல்கிறது என்பதை அறிய முடியாமல், படுக்கையில் விழுந்து கண்களை இறுக மூடிக்கொண்டேன்.

(தொடரும்.)

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே 'வளரும் வடக்கு' எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.



● ஜெகன் அருளையா

இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

தமிழில் : த. சிவதாசன்




# 'முல்லை' தயாரிப்புகள்:

## பாலுணவுப் பொருட்களில் முதலீடு

சீலன் என்ற பெயரால் அறியப்பட்ட திரு.எஸ். தவசீலன் வட மாகாணத்தின் வடக்கிலுள்ள வேலணைக்கு அடுத்துள்ள ஊர்காவற்றுறையில் பிறந்தவர். இலங்கைத் தபாற் திணைகளத்தில் தபால் விநியோகம் செய்யும் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவரது தந்தையார் இவருக்கு நான்கு வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். தந்தையாரின் மரணத்திற்குப் பின்னர் இந்த இளம் குடும்பம் புதுக்குடியிருப்பிலிருந்த தாயாரின் பெற்றோருடன் சென்று வாழ நேரிட்டது. தந்தையாரின் ஓய்வூதியத்திலும், தாயாரின் சிற்றூழியங்கள் மூலம் பெறப்பட்ட சிறிய வருமானத்திலும் தாயார் இந்த இளம் குடும்பத்தை நிர்வகித்து வந்தார். நான்கு வயதிலிருந்து பல்கலைக்கழகம் செல்லும்வரை சீலன் இங்கு தான் கல்வி கற்றார்.




1986 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப் படிப்பை முடித்துக்கொண்ட சீலன், கணித ஆசிரியராகத் தனது

உத்தியோக வாழ்வை ஆரம்பித்தார். போர்ச் சூழல் காரணமாக 1990 இல் சீலன் சாம்பியாவுக்குச் சென்று அங்கு தனது கணித ஆசிரிய உத்தியோகத்தைத் தொடர்ந்தார். போர் விரைவில் முடிந்துவிடும் என நம்பிய சீலன் இரண்டு வருடங்களில் ஊருக்குத் திரும்புவதாகவே திட்டமிட்டிருந்தார். 2001 இலும் போர் ஓய்வதாக இல்லையெனக் கண்டதும் ஐக்கிய இராச்சியத்தில் கணித ஆசிரியராக நியமனம் பெற்று வடக்கு கென்ட் கல்லூரியின் கிரேவ்செண்ட் வளாகத்தில் பணியை ஆரம்பித்தார்.

ஆசிரிய உத்தியோகத்தில் திருப்தியை இழந்த சீலன், அதைத் துறந்துவிட்டு உணவகம் (Fried Chicken Restaurant), மது விற்பனை நிலையம் (OffLicense) மற்றும் பல்பொருள் அங்காடி (Supermarket) ஆகிய வியாபார நிலையங்களை ஆரம்பித்தார். இங்கு கற்றுக்கொண்ட வியாபார உத்திகளே பின்னர் அவரது இலங்கையில் ஆரம்பித்த வியாபார முயற்சிகளுக்கும் உதவியாகவிருந்தது.

2016 இல் சீலன் தன்னை வளர்த்த பூமியான முல்லைத்தீவுக்குத் திரும்புவதென முடிவுசெய்தார். மனைவியும், நான்கு பிள்ளைகளும் பிரித்தானியாவில் தங்குவதென முடிவெடுத்தனர். நான்கு பிள்ளைகளில் மூவர், அரசியல், டிஜிட்டல் ஊடகம் மற்றும் கட்டிடக் கலை ஆகிய துறைகளில் பட்டப் படிப்புகளை முடித்துவிட்டார்கள். நான்காவது பிள்ளையான மகள் தற்போது க.பொ.த. சாதாரணம் கற்கிறாள். அவளது கல்வி, பராமரிப்பு ஆகியவற்றை மனைவியார் பார்த்துக்கொள்கிறார். தனது குடும்பத்தினரின் கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றை ஸ்திரமாக்கிக் கொண்டதும் சீலன் தான் கற்ற தொழில் திறமைகளைக் கொண்டு தனது தாய் நிலமான முல்லைத்தீவிற்குத் திரும்ப முடிவெடுத்தார்.

### பால் பண்ணையில் முதலீடு

அரசாங்கத்தால் தாயாருக்கு வழங்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலமிருந்தது. ‘பேர்மிட் நிலம்’ (permit land) எனப்படும் இந் நிலத்துக்கான உரிமையை ஒருவர் பரம்பரை பரம்பரையாக தனது குடும்பத்தினருக்கு மட்டுமே மாற்றிக் கொள்ளலாமே தவிர வேறொருவருக்கு விற்க முடியாது என்பது விதி. இக் காணியை ஈடு வைத்து எவரிடமும் கடன் பெற்றுக்கொள்ளவும் முடியாது. இப்படி ஈடுவைத்துப் பணத்தைப் பெற்ற ஒருவர் பணத்தைத் திருப்பச் செலுத்தத் தவறினால் கடன் கொடுத்தவர் இக்காணியை உரிமையாக்கிக் கொள்ள முடியாது. இப்படியான பேர்மிட் நிலங்களை வேறொருவர் உரிமைப்படுத்திக்கொள்ள (freehold) வழிவகைகள் இருந்தாலும் அதற்கு நீண்ட காலம் எடுக்கும். சீலன் தனது தாயாரின் காணியைத் தனக்கு உறுதி மாற்றிக்கொள்வதற்கான விண்ணப்பத்தை 2017 இல் செய்திருந்தார். இருப்பினும் அது இன்னும் நிறைவேறவில்லை.




**முல்லை உற்பத்திகள்**

Image source - mullaiin.wordpress.com

இலங்கைக்கு இறக்குமதி செய்யும் வர்த்தகத்தில் மிகவும் பொருட் செலவைக் கொண்டது பாலுணவுப் பொருட்களின் இறக்குமதி. எனவே சீலன் இத்தொழிலில் முதலீடு செய்ய உத்தேசித்தார். 2021 இல் வெளியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி 2020 இல் மட்டும் ரூபா 62 பில்லியன் பெறுமதியான பாலும், பாலுணவுப் பொருட்களும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலும், நியூசீலந்து, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இலங்கையில் நுகரப்படும்

மொத்த உணவுப் பொருட்களில் இது 20% ஆகும்.

பிரித்தானியாவில் பலவித தொழில் உத்திகளைக் கற்றுக்கொண்டிருந்தாலும், பால் பண்ணைத் தொழில் பற்றி சீலனுக்கு எதுவுமே தெரியாது. சுமார் இரண்டு வருடங்களாக இந்தியா, சீனா, யப்பான், மலேசியா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்து இத் தொழில் பற்றிய விபரங்களைக் கற்றுக்கொண்டார். சீலனின் நண்பர் ஒருவர் பல பால் பொருள் உற்பத்தி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் கொண்ட பால் பொருள் தயாரிப்பு பொறியியலாளராக இருந்தது உதவியாகப் போய்விட்டது. இருவருமாகச் சேர்ந்து சீலனின் முல்லைத்தீவு காணியில் ஒரு பால் பொருள் தயாரிப்பு ஆலையை நிறுவினார்கள்.

**இலங்கையின் கொழும்பு மற்றும் வடக்கு, கிழக்கு, மலையக மாகாணங்களிலுள்ள பல்பொருள் அங்காடிகளே முல்லைத் தயாரிப்புகளின் பெரும்பாலான வாடிக்கையாளர்கள். மன்னாரிலுள்ள மீனவ சமூகத்திடமும் பெரும் கிராக்கி இருக்கிறது.**

புதுக்குடியிருப்பில் சீலனது குடும்பம் பல தலைமுறைகளாக மிகவும் அறியப்பட்டதும் நம்பிக்கைக்கு உரியதுமான ஒன்றாக இருந்தது வாய்ப்பாகப் போய்விட்டது. இதனால் அங்கேயே அவர் தனது பண்ணை நிறுவ முடிவெடுத்தார். 'புதியவர்' ஒருவரின் வருகை மக்களிடையே ஏற்படுத்தும் சந்தேகம் இவரைப் பாதிக்கவில்லை. 'உள்ளூர் பொடியன்' என்ற வகையில் அப் பிரதேசத்திலுள்ள பால் பண்ணை விவசாயிகள் சிரமமேதுமில்லாது சீலனது பால் பொருள் உற்பத்தி ஆலைக்குப் பால் விநியோகித்தார்கள். இவ் விவசாயிகளின் குடும்பத்தவர்களில் 25 பேருக்குத் தொடர்ச்சியாகத் தன் ஆலையில் வேலை கொடுத்தார். ஆலையின் தேவைச் சுமை அதிகரிக்கும்போது சில வேளைகளில் இது 32 பேராகவும் மாறும். விவசாயிகளின் பிள்ளைகளுக்கு வேலைகளை வழங்கியதன் மூலம் அப் பிரதேச விவசாயிகளுடனான சீலனின் உறவு நெருக்கமுற்றது. சீலனின் பால் பொருள் ஆலையில் ஆரோக்கியமான பாலுணவுகளும், குடிநீர் வகைகளும் உற்பத்திசெய்யப்படுவது பற்றிய செய்தி இந்த இளம் தொழிலாளர்கள் மூலம் அப்பிரதேச மக்களிடையே விரைவாகப் பரவியது. 'முல்லை' என்ற ஒரு நல்ல ஆலையில் தயாரிக்கப்படும் தரமான பாலுணவுப் பொருட்களை இம் மக்கள் விரும்பி வாங்கினார்கள்.

### முல்லை தயாரிப்புகள்

முல்லையில் தயாரிக்கப்படும் பண்டங்களுக்கு இரசாயன ஊட்டிகளோ அல்லது பதனூட்டிகளோ பாவிக்கப்படுவதில்லை. அவை முற்றிலும் இயற்கைப் பண்டங்களுடன் இயற்கை முறைகளில் தயாரிக்கப்படுபவை. இதனால் அவற்றின் பாவனைக்காலம் திறக்கப்படாமல் இருக்கும்வரை 30 நாட்கள் மட்டுமே.

பண்டங்கள் தயாரிக்கப்பட்டு 5 நாட்களுள் சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகிக்கப்பட்டு விடுகிறது என்பது மட்டுமல்ல; பாவனையாளரும் அவற்றைப் பெரும்பாலும் 5 நாட்களுக்குள் நுகர்ந்துவிடுவர் என்பதால் இது தங்களுக்கு ஒருபோதும் பிரச்சினையாக இருந்ததில்லை எனக் கூறுகிறார் சீலன். விற்பனைக்கென விதிக்கப்படும் கால எல்லைக்கு 15 நாட்களுக்கு முன்னரே அவை விற்று நுகரப்பட்டுவிடுவதுண்டு. தமது பண்டங்களுக்கு மக்களிடையே அதிக கிராக்கி இருப்பதால் வியாபாரிகளிடமிருந்து தமக்கு பண்டங்கள் திரும்பி வருவது வெகு குறைவு எனக் கூறுகிறார் அவர்.

இலங்கையின் கொழும்பு மற்றும் வடக்கு, கிழக்கு, மலையக மாகாணங்களிலுள்ள பல்பொருள் அங்காடிகளே முல்லைத் தயாரிப்புகளின் பெரும்பாலான வாடிக்கையாளர்கள். மன்னாரிலுள்ள மீனவ சமூகத்திடமும் பெரும் கிராக்கி இருக்கிறது.

கடல் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் பலர் தமது பயணங்களின்போது பருகும் தயிரைக் (drinking yoghurt) கொண்டு போகிறார்கள். முல்லைத் தயாரிப்புகளுக்கு கொழும்பில் இருக்கும் கிராக்கியளவுக்கு தம்மால் பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாமல் இருக்கிறது எனவும் இத் தேவையைச் சமாளிக்க தற்போது திட்டங்களைத் தீட்டி வருவதாகவும் சீலன் தெரிவிக்கிறார்.

## எதிர்நோக்கும் சவால்கள்

**அதிகாரத்துவம் (Bureaucracy) :** ஒரு தொழிலை ஆரப்பிப்பதற்கான அனுமதியைப் பெறுவது என்பது மிகப் பெரிய சவால். வங்கிக் கணக்கு திறப்பது முதல், கடவுச் சீட்டு விண்ணப்பம், திட்டமிடல் அனுமதி பெறுதல், வியாபார முயற்சிக்கு விண்ணப்பித்தல் என எதற்கு விண்ணப்பிப்பதானாலும் இலங்கையில் அது பலருக்கும் ஒரு பாரிய பிரச்சினையாகவே இருக்கிறது. இவற்றுக்கான தகவல்களை அதிகாரத்துவத்திடமிருந்து பெறுவதானால் உறிஞ்சித்தான் எடுக்க வேண்டும். உதாரணத்துக்கு ஒரு பத்திரத்தைப் பரிசீலிக்கும்போது அவர்கள் கண்டுபிடிக்கும் முதல் தவறோடு நிறுத்திவிட்டு அதைத் திருத்திக்கொண்டு வரும்படி திருப்பிவிட்டுவிடுவார்கள். அதற்கு மேல் அப்பத்திரத்தை வாசித்து இருக்கும் தவறுகளை ஒரேயடியாகச் சுட்டிக்காட்ட மாட்டார்கள். ஒவ்வொரு தடவை செல்லும்போதும் மேலும் புதிய பத்திரங்களை நிரப்பும்படி கேட்பார்கள். எல்லாவற்றையும் அவர்கள் கூறியபடியே நிரப்பிக் கொடுத்தாலும் அவற்றில் மேலும் தவறுகளைக் கண்டுபிடித்தோ அல்லது மேலும் புதிய பத்திரங்களை நிரப்பும்படி பணித்தோ அல்லது சில பத்திரங்களை முற்றிலும் இரண்டாம் தடவையாக நிரப்பும்படி பணித்தோ விண்ணப்பதாரிகளை அலைக்கழித்து சக்தி விரயத்தையையும் வெறுப்பையுமே உண்டாக்குவார்கள்.



எஸ்.தவசீலன் – 'முல்லை' நிறுவனர்

Image source - mullaiin.wordpress.com

**பணிக் கலாச்சாரம் (Work Culture) :** முல்லை ஆரம்பிக்கப்பட்டபோது அவற்றில் பணிபுரிந்த வடமாகாணத்தைச் சேர்ந்த பணியாளர்கள் 'நாட் கூலிக்காரர்களாகவே' இருந்தார்கள். நாள் முடிய அவர்களது சம்பளம் வழங்கப்பட்டதும் தங்களது பணி முடிந்துவிட்டதாகவே அவர்கள் நினைத்தார்கள். அவர்கள் அடுத்த நாள் வேலைக்குத் திரும்பி வருவது சந்தர்ப்பவசமானது. ஒருநாள் வேலை முடிந்ததும் அடுத்தநாள் வேலை இருக்கிறது என அவர்கள் அதற்குத் தயாராக இருப்பதில்லை. தமது பணி நீண்ட நாளானது என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதில்லை. இதனால் அதிக உற்பத்தித் திறனுடன் சீரிய முறையில் பண்டங்களைத் தயாரிப்பதற்கு அவர்களைப் பயிற்றுவிப்பது மிகச் சிரமமாக இருக்கிறது. அவர்களின் அணுகுமுறை, சிந்தனை மாற்றங்களை உருவாக்கி அவர்களுடைய எதிர்பார்ப்புக்களையும் நிறுவனத்தின் எதிர்பார்ப்பையும் சமப்படுத்துவதற்கு நீண்ட காலம் எடுத்தது. தற்போது நிலைமை ஓரளவு மாற்றம் கண்டிருக்கிறது. பெரும்பாலானவர்கள் மூன்று அல்லது மேலான வருடங்களாகப் பணிகளில் இருக்கிறார்கள். எதிர்காலத்தில் தமக்கு ஒரு நிரந்தர வருவாயை ஏற்படுத்தக்கூடிய நிலையில் நிறுவனம் வளர்ந்திருக்கிறது என்ற நம்பிக்கை பணியாளர்களிடத்திலும், தமது நிறுவனத்துக்கு நம்பிக்கையானதும் உறுதியானதுமான பணியாளர்களை உருவாக்க முடியுமென்ற நம்பிக்கை நிறுவனத்துக்கும் ஏற்பட்டிருக்கிறது. இதன் மூலம், இரு தரப்பினருமே தமது எதிர்காலத்தைத்

> ஆசிரிய உத்தியோகத்தில் திருப்தியை இழந்த சீலன், அதைத் துறந்துவிட்டு உணவகம் (*Fried Chicken Restau rant*), மது விற்பனை நிலையம் (*OffLicense* ) மற்றும் பல்பொருள் அங்காடி (*Supermarket*) ஆகிய வியாபார நிலையங்களை ஆரம்பித்தார். இங்கு கற்றுக்கொண்ட வியாபார உத்திகளே பின்னர் அவரது இலங்கையில் ஆரம்பித்த வியாபார முயற்சிகளுக்கும் உதவியாகவிருந்தது.

திட்டமிடும் சூழல் உருவாகியிருக்கிறது.

**நிதி ((Finance) :** முதலீட்டுக்குரிய நிதியைத் திரட்டுவது பெரும் சவாலான ஒன்று. வங்கியில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதே பெரும்பாடு. கணித ஆசிரியராகவும், பிரித்தானியாவில் பல தொழில்களை வெற்றிகரமாக நடத்தி அனுபவம் பெற்றவருமான சீலனுக்கே இந்தக் கதி. குறைந்த வட்டியுடன் (தற்போது 4%) வழங்கப்படும் விவசாயக் கடன்கள் கிடைப்பினும் அவற்றைப் பெறுவது மிகவும் சிரமமான ஒன்று. அவரது நிலம் ஒரு ‘பேர்மிட்’ நிலமாக இருப்பதால் வங்கிகள் அதை ஈடாக வைத்து கடனைத் தர மறுக்கின்றன. கடனைத் திருப்ப முடியாத நிலை ஏற்பட்டால் வங்கி தனது முதலைப் பெற முடியாது போய்விடும் என்ற அச்சம் வங்கிகளுக்கு இருக்கிறது.




**“முல்லை” பால் பொருட்கள் உற்பத்தி நிலையம்**

Image source - mullaiin.wordpress.com

**மூலப் பொருட்கள் (Raw Materials) :** கால்நடை விவசாயிகள் நம்பிக்கைக்குரியவர்கள் எனினும் அவர்களிடம் போதுமான பாலுற்பத்தி இல்லை. தற்போதுள்ள தேவைகளைச் சமாளிக்க ‘முல்லை’க்கு நாளொன்றுக்கு 5,000 லீட்டர்கள் பால் தேவை. ஆனால் விவசாயிகளிடமிருந்து நாளொன்றுக்கு 1,500 லீட்டர்களே கிடைக்கிறது. தை, மாசி காலங்களில் இது 500 லீட்டர்களாகக் குறைந்துவிடுகிறது. பசுக்கள் இம் மாதங்களில் தான் கன்றுகளை ஈனுகின்றன என்பதால் கன்றுகளுக்குப் பாலூட்டுவதற்கு பெரும்பாலான உற்பத்தி பாவிக்கப்படுகிறது. மாரி காலத்தில் மாடுகள் சேற்றில் உழல்வதால் அவற்றைக் கழுவிப் பால் கறக்க நேரமாகிவிடுவதும் இன்னுமொரு காரணம். இதைச் சமாளிக்க சீலன் திட்டமொன்றைத் தீட்டியுள்ளதாகக் கூறுகிறார்.

### எதிர்காலத் திட்டங்கள்

தன் உற்பத்திக் கொள்ளளவை அதிகரிக்கும் நோக்கில் பால் விநியோகத்தை அதிகரிக்க சீலன் சில திட்டங்களை வைத்திருக்கிறார். சொந்தமாகத் தனது கால்நடைப் பண்ணையொன்றை ஆரம்பிப்பதே அதிலொன்று. இதற்காக அவர் முல்லைத்தீவில், நன்நீர் ஏரிக்கு அருகேயுள்ள 50 ஏக்கர் நிலமொன்றை வாங்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். நாளொன்றுக்கு 10 லீட்டர்கள் பாலை உற்பத்தி செய்யும் 75 பசுக்களை அவர் வாங்குவதற்குத் திட்டமிடுகிறார். இதற்கு சுமார் ரூ.50 மில்லியன் ரூபாய்கள் தேவைப்படும். இதை வங்கிகளில் கடனாகப் பெற முடியாது. இதற்காக அவர் தன்னோடு இணையக்கூடிய முதலீட்டுப் பங்காளி (sleeping partner) ஒருவரைத் தேடுகிறார். நிறுவன நடவடிக்கைகளில் தலையிடாது இலாபத்தை மட்டும் பங்கிடுபவராக இப் பங்காளி இருக்க வேண்டும்.

‘முல்லை’ தயாரிப்புகளாகத் தற்போது பால், தயிர், பருகும் தயிர், பால் ரொஃபீ ஆகியன இருக்கின்றன. இவற்றில் சிலவற்றுக்கு வித்தியாசமான மணம், குணம், சுவை ஆகியவற்றை ஊட்டி புதிய பண்டங்களை உற்பத்தி செய்ய சீலன் திட்டமிடுகிறார். பனம் பழச் சுவையைக் கொண்ட பால் ரொஃபீ யும் இதிலொன்று. இதற்காக அவர் யாழ் பல்கலைக்கழகத்தின் வியாபார இணைப்புடன்

(University Business Link (UBL)) பணியாற்றி வருகிறார். 'முல்லை' விரைவில், வெண்ணெய் (butter), பாலாடைக் கட்டி (cheese) ஆகியவற்றையும் தயாரிக்கவுள்ளது. நோர்வேயிலுள்ள ஒருவர் அந்நாட்டு பாலாடைக் கட்டியைத் தயாரிக்கும் முறைகள் பற்றி சீலனுக்கு அறிவுறுத்தி வருகிறார். பல வீடுகளில் இன்னும் குளிரூட்டிகள் (fridges) இல்லாதபடியால், சுண்டிய பாலைத் (condensed milk) தயாரித்து தகரங்களில் அடைத்து விற்பனை செய்வதற்கும் தயாராகி வருகிறார். இவை திறக்கப்பட்ட பிறகும் பழுதாகாமல் இருக்கும்.

'முல்லை' தயாரிப்புகள் தற்போது இலங்கைவாழ் மக்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. இதை விரிவாக்கி சர்வதேசங்களில் வாழும் மக்களுக்கும் விநியோகிக்க திட்டங்கள் தீட்டப்படுகின்றன. பால் ரொஃபீ மற்றும் நெய் போன்றவற்றை இலகுவாக ஏற்றுமதி செய்யலாம்.

### பல்கலைக்கழக வியாபார இணைப்பு (University Business Link)

யாழ் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் பீடத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி ஈஸ்வரமோஹனே எனக்கு சீலனை அறிமுகம் செய்திருந்தார். பல்கலைக்கழக வியாபார இணைப்பின் யாழ் பல்கலைக்கழகக் கிளையின் பணிப்பாளராக கலாநிதி ஈஸ்வரமோஹன் இருக்கிறார். பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பீடத்தை தனியார் நிறுவனங்களுடன் இணைத்துச் செயற்பட வைக்கும் திட்டத்தை இலங்கையின் பல்கலைக்கழக மானிய ஆணையம் 2016 இல் அறிமுகம் செய்திருந்தது. இதன் பிரகாரம், யாழ் பல்கலைக்கழகத்தின் முதலாவது தனியார் நிறுவன இணைப்பு 'முல்லை' உடன் நடைபெற்றது. இதன் விளைவாக, வில்வம் பழத்தின் (Bael fruit) சாற்றைக் கலந்து 'முல்லை' உருவாக்கிய பருகும் தயிர் மக்களிடையே மிகவும் பிரபலமான ஒன்று.

### வடக்கில் முதலீடு செய்ய விரும்பும் புலம் பெயர் தமிழர்களுக்கு சீலனின் ஆலோசனை

வடக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு புலம்பெயர் தமிழர்கள் தமது அறிவை, செயற்திறமைகளை, முதலீடுகளை, தொடர்புகளைக் கொண்டு வருவது காலத்தின் கட்டாயமாகும். பல தசாப்தங்களாக இழக்கப்பட்ட மக்களாலும், இழக்கப்பட்ட முன்னேற்றங்களாலும், இழக்கப்பட்ட சந்தர்ப்பங்களாலும் வடக்கின் மீள்வளர்ச்சி தாமதமாகி விட்டது. இதைத் துரிதப்படுத்த சீலன் பின்வரும் ஆலோசனைகளைத் தருகிறார்.

1. உங்கள் சொந்த முதலீடுகளை இலங்கையில் செய்யும்போது குறைந்தது மூன்று வருடங்களுக்காவது நீங்கள் இங்கு வந்து நின்று நேரடியாகக் கண்காணிக்க வேண்டும். அது எந்தவிதமான தொழிலாக இருந்தாலும், ஒரு தொழிலை நடத்துவதற்குத் தேவையான பணியாளர்களை இனம் கண்டு, உள்வாங்கி, அவர்களைப் பயிற்றுவித்து அவர்களாக உங்கள் தொழில் நிர்வாகத்தை முன்னெடுத்து ஸ்திரப்படுத்துவதற்கு குறைந்தது மூன்று வருடங்கள் வேண்டும். உங்கள் முதலீட்டிற்கான பலனை உங்களால் உடனடியாகப் பெற முடியாது, அதற்கு பொறுமையும் உளவுரமும் தேவை.

2. வடக்கிற்கு வந்து முதலீடுகளைச் செய்ய முடியாத புலம் பெயர் தமிழர்கள் வடக்கின் உற்பத்திப் பண்டங்களுக்கு சர்வதேச சந்தைகளுடனான தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். யாருக்கு என்ன, எப்படியான தேவைகள் இருக்கின்றன, அச்சந்தைகளுள் எப்படி உட்புகமுடியுமென்ற உத்திகளை அறிந்து பகிர்ந்து இரு தரப்பினரிடையேயும் பாலங்களைக் கட்டியெழுப்ப உதவலாம். லண்டனிலோ அல்லது ரொறோண்டோவிலோ தமிழர் அல்லது சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்கள் உங்கள் ஆரம்பச் சந்தைகளாகவும் இருக்கலாம்.

3. முதலீட்டில் மட்டும் பங்குதாரியாக ஆரம்பிப்பதே புத்திசாலித்தனமானது. தொழில் முகவரின் நிர்வாகத்தில் தலையிடுவது தவிர்க்கப்படவேண்டும். வியாபாரத்தின் இலாப நட்ட வரவு செலவு அறிக்கைகளை ஒழுங்காகப் பரிசீலனை செய்து உங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குங்கள். தொழில் முகவரின் நிர்வாகத் திறமையிலும் தொழில் நேர்த்தியிலும் நம்பிக்கை ஏற்பட்டால் உங்கள் முதலீட்டை அவரிடம் விட்டுவிட்டு இலாபத்தை அனுபவியுங்கள். உங்கள் அதீத தலையீட்டால் அவரது நிர்வாகக் கவனம் சிதறிக் குழம்பிப் போவதற்கு காரணமாகிவிடாதீர்கள்.

சீலனோடு தொடர்புகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் mullai.ig@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

# போர்க்காலம் கற்பித்த இயற்கை விவசாயம் அமைதிக் காலத்தில் பயன் தருகிறது





**செல்வின் ரவீந்திரகுமார்**
Image Source - lankabusinessonline.com

சேதனப் பாவனையை நோக்கிய இலங்கையின் பயணம் வடக்கிலுள்ளவர்களுக்கு ஆச்சரியத்தைத் தர முடியாது. போர்க்கால பொருளாதாரத் தடைகளும், கட்டுப்பாடுகளும் வடக்கு மக்களை, இறக்குமதியில் தங்கியிராது இயற்கையில் மட்டுமே நம்பியிருக்க எப்போதே பழக்கப்படுத்தி விட்டன. சில பொருட்கள் முற்றாகவே தடை செய்யப்பட்டிருந்தன. சில, கட்டுப்பாடுகளுடன் விநியோகிக்கப்பட்டன. பெண்களின் சுகாதாரப் பொருட்கள், பற்றரி, பெற்றோல், சீமந்து, அசேதனப் பசளை, களைகொல்லி உட்படப் பல பொருட்கள் வடக்கில் காணாப் பொருட்களாகிவிட்டன. ஆடு, மாடு, கோழி ஆகியன வெறும் உணவை மட்டும் தரவில்லை; நிலத்துக்கான உரத்தையும், களை கொல்லியையும், ஏன் மக்களின் போக்குவரத்தையும் அவைகளே வழங்கின. இக்காலத்தில், மாற்றி யோசித்து விவசாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய ஒரு இளைஞனை அதிர்ஷ்டவசமாகச் சந்திக்க நேர்ந்தது.

2021 இன் ஆரம்பத்தில் நான் செல்வின் ரவீந்திர குமாரைச் சந்தித்தேன். யாழ்ப்பாணத்தில் எனது வீட்டிலுள்ள அழகிய, நிழல் தரும் பாரிய மரமொன்றைப் பாதுகாக்கவேண்டிய ஒரு தேவைக்காக அவரை நான் அழைக்க வேண்டி ஏற்பட்டது. ஒரு வகை வெள்ளைப் பூஞ்சணத் தொற்றுக்குள்ளாகியிருந்த அம்மரம் ஒரு வருடமாகத் தன் செழிப்பை உதிர்த்துக்கொண்டது; ஒருகாலத்தில் என் வீட்டுக்கு வனப்பை அள்ளிச் சொரிந்த அது இப்போது பூப்பதில்லை. அது தப்பிவிடுமென்ற நம்பிக்கையில் நான் மடத்தனமாக நீண்ட காலத்தை வீணாக்கிவிட்டிருந்தேன். இரண்டாவது பருவத்தைத் தாண்டிய பின்னரும் அது துளிர்க்கவுமில்லை, பூக்கவுமில்லை. இனியும் தாமதிக்க முடியாது என்றுணர்ந்த நான் முகநூலில் உதவி கேட்டுப் பதிவொன்றை இட்டிருந்தேன். செல்வினோடு படித்த என் நண்பனொருவர் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஒருவருக்கு யாரைத் தெரியும் என்பது முக்கியமல்ல, அவருக்கு தெரிந்தவர் மூலம் நாம் இன்னொருவரின் உதவியை அடைய முடியும் என்ற வாழ்க்கைத் தத்துவத்தை அப்போதுதான் நான் புரிந்து கொண்டேன்.

எனது மரத்தைப் பார்வையிட்ட செல்வின் என்னைப் பலாலி வீதியிலுள்ள திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு அழைத்துச் சென்றார். அது எனது வீட்டிலிருந்து சில நிமிட வாகனப் பயணத்தில் இருந்தது. அங்கிருந்த அதிகாரி ஒருவர் உடனடியாகவே எனது வீட்டுக்கு




**வடக்கின் வயல்கள்**

Image Source - www.lankabusinessonline.com

வந்து எனது மரத்தைப் பரிசோதித்து அதற்கான பரிகாரத்தையும் கூறிச் சென்றார். அடுத்த சில நாட்களில் செல்வின் தானே வந்து அந்த மருந்தை மரத்திற்குப் பிரயோகித்தார். தாவரங்கள் மீதான அவரது பற்றுக் காரணமாக அதற்கான கட்டணத்தைக்கூட அவர் ஏற்க மறுத்துவிட்டார். அடுத்த சில வாரங்களில் மரம் துளிர்க்க ஆரம்பித்தது. இரண்டு வருடங்களுக்குப் பின்னர், அது முதல் தடவையாக கண்ணைப் பறிக்கும் செம்மஞ்சள் நிறத்தில் பூத்துக் குலுங்குகிறது.

செல்வின் 1992 இல் அரியாலை, யாழ்ப்பாணத்தில் பிறந்து போர்க்காலத்தில் வளர்ந்தவர். யாழ். கச்சேரியில் பணி புரிந்த தந்தைக்கும், யாழ்ப்பாணத்தின் பிரபல பெண்கள் கல்லூரி ஒன்றில் கற்பித்த ஆசிரியை ஒருவருக்கும் பிறந்த ஒற்றைக் குழந்தை அவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்விக்குத் தெரிவாகியிருந்தும், ஒற்றைக் குழந்தை என்ற காரணத்திற்காகவும், போர்க்கால இடர்களை அனுசரித்தும் செல்வினின் தாயாரை பேராதனைக்கு அனுப்ப அவரது தந்தை மறுத்துவிட்டார். அதனால் அவர் ஊரிலேயே தங்கி ஆசிரியைப் பணியை எடுத்துக்கொண்டார்.

சிறு பராயத்திலிருக்கும் போதே செல்வினுக்கு விவசாயத்தில் அலாதியான விருப்பிருந்தது. தாயாருடன் வீட்டுத் தோட்டத்தில் உதவிகளைச் செய்துவந்தார். மூலிகைகள் முதல், ஆடுகள் மாடுகள் என்று பலவும் அவரது செல்லப் பிள்ளைகளாகின. 1998 முதல் 2002 வரை, போர் உக்கிரமாக இருந்த காலத்தில் செல்வின் உடுவிலில் இருந்த அவரது அத்தையுடன் வசித்துவந்தார். பாடசாலைக்குப் போவதற்கு முன்னர் அதிகாலை 4 மணிக்கே எழுந்து நெல் வயல்களுக்குச் சென்று வந்த அவரது அனுபவம் அவருக்கும் பூமிக்குமான நெருக்கத்தை மேலும் அதிகரித்திருந்தது.

யாழ் புனித பத்திராசிரியர் கல்லூரியில் தன் உயர்தரக் கல்வியை முடித்த செல்வின், விவசாயத்தில் NVQ, நான்காம் தரத் தகமையைப் பெற்று திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் 6 மாதங்கள் பணி புரிந்தார். பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இணைந்தார். இக்

போர்க்காலத் தடைகளோடு வாழ்ந்த காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்களும் அணுகுமுறைகளும் மீண்டும் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்கிறார் செல்வின். போர்க் காலத்தில் நெல் அறுவடையாகியதும் வயல்களில் சணல் (Sun Hemp) என்னும் ஒருவகைப் புல் பயிரிடப்படும். அவை வளரும்போது மாடுகள் அங்கு மேய விடப்படும். இதனால் புற்களும் களைகளும் மாடுகளுக்குத் தீனியாக, அவை தரும் சாணம் மண்ணுக்கு உரமாக இயற்கையின் சமரசத்துடன் சமநிலையும் பேணப்பட்டது

கட்டுரையை எழுதும்போது அவர் விவசாய இளங்கலைப் பட்டக் கல்வியின் நான்காம் வருடத்தில் இருக்கிறார்.

## மீண்டும் பழங் காலத்திற்கு

போர்க்காலத் தடைகளோடு வாழ்ந்த காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்களும் அணுகுமுறைகளும் மீண்டும் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்கிறார் செல்வின். போர்க் காலத்தில் நெல் அறுவடையாகியதும் வயல்களில் சணல் (Sun Hemp) என்னும் ஒருவகைப் புல் பயிரிடப்படும். அவை வளரும்போது மாடுகள் அங்கு மேய விடப்படும். இதனால் புற்களும் களைகளும் மாடுகளுக்குத் தீனியாக, அவை தரும் சாணம் மண்ணுக்கு உரமாக இயற்கையின் சமரசத்துடன் சமநிலையும் பேணப்பட்டது. இப்படி உரமேற்றிய வயல்களில் விவசாயிகள் உழுந்து, கடலை, பாசிப் பயிறு போன்ற பயிர்களை விதைத்தார்கள். மனிதருக்கு ஊட்டச் சத்துள்ள உணவைத் தந்த பூமிக்கு இத்தாவரங்கள் மீண்டும் இரையாகி, நைதரசன் போன்ற, தாவரங்களுக்குத் தேவையான போஷாக்கை, மீண்டும் மண்ணுக்கே திருப்பித் தந்தன. அடுத்த போகத்தில் நெல் விதைக்கும்போது அவற்றுக்கு மிகவும் வளமான மண் கிடைத்திருக்கும். இச் சுழற்சி முறை விவசாயம் மண்ணை சேதம் விளைவிக்கும் அசேதனப் பொருட்களினின்றும் பாதுகாத்தது.

இதை விடவும் பஞ்ச கவ்யம் எனப்படும் இயற்கை உரப் பாவனையும் அப்போது பாவனையில் இருந்தது. மட் பாண்டங்களில் தயாரிக்கப்பட்ட தயிர், பால், கருப்பட்டி மற்றும் பசுவின் சிறுநீர் ஆகியவற்றின் கலவையில் ஒரு வகை இலைகள் ஊறவைக்கப்படும். 2130 நாட்களுக்குப் புளிக்கவைக்கப்பட்ட பின்னர் இக்கலவை மண்ணில் தெளிக்கப்படும். வேப்பம் விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணையை நீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கிருமிகள் கொல்லப்பட்டன. வேம்பு பல அற்புதமான குணாதிசயங்களைக் கொண்டது. விவசாயத்தில் மட்டுமல்ல மருந்து மற்றும் அலங்காரப் பொருட்கள் தயாரிப்பிலும் அது பயன்படுகிறது. வேப்பம் இலைகளை அரைத்துப் பசையாக்கி வெட்டுக் காயங்களில் தடவ காயங்கள் விரைவில் குணமாகிவிடும். வேப்பம் நிழல், இதர மரங்களை விட அதிகம் குளிர்மையையும், சுகந்தத்தையும் தருவது. எனது வீட்டு வளவில் பல வேப்ப மரங்கள் நிற்கின்றன. சுட்டெரிக்கும் மத்தியான வெயிலின் போதும் ஆச்சரியம் தரும் வகையில் அவற்றின் நிழல் மிகவும் குளிர்மையாக இருக்கிறது. அக்குளிர்மைக்கு வேம்புதான் காரணமா என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாதுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பரந்த விவசாய நிலத்தில் பலரும் தமக்கான சிறிய காணிகளுக்கு உரிமையானவர்கள். அவற்றில் அங்குமிங்குமாக வெவ்வேறு பயிர்களை நாட்டிப் பலன் பெறுகிறார்கள். அயலிலுள்ள விவசாயிகள் எல்லோரும் ஒரே பயிரைச் செய்யாமல் தமக்குள்ளே காணப்படும் இணக்கத்துடன் வெவ்வேறு பயிர்களை, வெவ்வேறு போகங்களில் மாற்றி மாற்றிச் செய்துகொள்கிறார்கள். இதனால் பயிர்களிடையே நோய் பரவுவது குறைக்கப்படுகிறது. உதாரணத்திற்கு மிளகாய்ச் செடியைப் பாதிக்கும் நோய் அயல் தோட்டத்திலுள்ள கத்தரிச் செடியைப் பாதிக்காது; பரவலான நோய்த் தொற்றும் தவிர்க்கப்படுகிறது. தத்தமது தோட்டங்களின் எல்லைகளில் விவசாயிகள் செவ்வந்திச் செடிகளை நாட்டுவதன் மூலம் தத்தம் காணித்துண்டுகளை வரையறை செய்துகொள்கிறார்கள். இச் செவ்வந்திச் செடிகள் சில வகையான பூச்சிகளின் பரம்பலைத் தடுக்க வல்லன. இதனால் பூச்சிகள் வரப்புகளைத் தாண்டிச் சென்று அயலவரின் பயிர்களைத் தாக்குவது தடுக்கப்படுகிறது.

பரம்பரை பரம்பரையாகப் பெற்ற அறிவினையும்,

நீண்டகால அனுபவத்தையும் கொண்டு, எந்த நிலத்தில் திராட்சைகளைப் பயிரிட வேண்டும், எந்த நிலம் புகையிலைக்கு உகந்தது, எந்த நிலத்தில் மிளகாய், ராசவள்ளி, தக்காளி, வெண்டைக்காய், கத்தரி, எள்ளு உள்ளிட்ட பலவகைப் பயிர்களையும் பயிரிடலாம் என வடக்கிலுள்ள விவசாயிகள் அறிந்து அவற்றுக்கான தெளிவான முறைகளைப் பின்பற்றுகின்றனர். செயற்கை உரங்களைப் பாவிக்காது எப்படிச் சிறந்த, ஆரோக்கியமான அறுவடைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமெனப் போர்க்காலத் தடைகளும் தட்டுப்பாடுகளும் அவர்களுக்கு, கற்றுத் தந்திருக்கிறது.

## கல்விக்கான அவசியம்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தான் சந்தித்த இலங்கையின் இதர பாகங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் தொடர்புகளைப் பேணி வரும் செல்வின், பலர் தமது பாரம்பரிய நடைமுறைகளைக் கைவிட்டுவிட்டனர் எனக் கூறுகிறார். வயல் விவசாயங்கள் கூட வேண்டாம், வீட்டுத் தோட்ட அனுபவங்கள் கூடப் பலருக்கு இல்லை. விவசாயக் குடும்பங்களிலிருந்து வரும் பலர் இரசாயன (அசேதன) உரங்களுக்கு அப்பால் வேறு எதையும் அறிந்தவர்களாக இல்லை. 1962 முதல் அரசாங்கம் இந்த அசேதன உரங்களை மலிவு விலைக்கு விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. 2019 ஜனாதிபதிக்கு பதவிக்குப் போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்களும் விவசாயிகளுக்கு உரத்தின் விலையில் 100% தள்ளுபடியைத் தருவதாக உறுதி கூறியிருந்தார்கள்; ஆனால் அது நிறைவேறவில்லை. மலிவான உரம் தமக்கு நன்மையைத் தருமெனச் சில விவசாயிகள் நினைக்கிறார்கள். ஆனால் அதில் உண்மையில்லை. விரும்பப்படாத பசளையைப் பயிர்கள் எடுத்துக்கொள்வதில்லை. அதனால் அவை அனைத்தும் மண்ணிற்குள்ளேயே விடப்பட்டு நிலக்கீழ் நீரோடு சேர்ந்து மக்களின் குடிநீரை விஷமாக்கி விடுகிறது என்கிறார் செல்வின்.

செல்வின் எதையுமே முழுமையாகப் பார்ப்பவர். நிலத்தில் தொடங்கி, சமையலறை, மனித குணாம்சம் ஆகியவற்றை ஊடறுத்துச் செல்வது உணவு வட்டமென்ற விரிந்த பார்வை அவருடையது. பண்ணை விவசாயிகள் முதல் குடும்ப பாவனையாளர்கள் வரை இவ்விடயத்தில் அறிவுறுத்தப்பட வேண்டியவர்கள் என்கிறார். தமது பாரம்பரிய விவசாய முறைகளை விவசாயிகள் சிறுவயதிலிருந்து கற்க ஆரம்பிக்க வேண்டும். பசளைகளையும், களை கொல்லிகளையும் இயற்கை முறைகளில், வீடுகளிலே செய்யக்கூடிய முறைகளை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். நைதரசனை வளியிலிருந்து பெற்று நிலத்துக்குள் புதைக்கும், மண்ணை மீள் வளப்படுத்தும் தாவரங்கள் மற்றும் சாணம், இயற்கை உரங்கள் ஆகியவற்றைக் கையாளப் பழகிக்கொள்ள வேண்டும். கடைகளில் வாங்கும்



சானென் ரக ஆடுகள்

Image Source - lankabusinessonline.com

விலங்குணவுகளைத் தவிர்த்து, அதிகப் புரதச் சத்துக்களைக் கொண்ட அசோலா (*Azolla*), டக்வீட் (*Duckweed*) போன்ற தாவரங்களை வளர்த்து பண்ணை விலங்குகளுக்கு ஊட்ட வேண்டும். செயற்கை மருந்துகளிலும், ஊட்டச் சத்துகளிலும் தங்கியிராது அதிக நோயெதிர்ப்பைக் கொண்ட, அதிக பலனைத் தரும், 'நேக்கெட் நெக்' கோழிகளையும் ( *Naked Neck chicken*), 'ஜம்னாபரி' மற்றும் 'சானென்' ஆடுகளையும் (*Jamnapari and Saanen* ) தேர்வுசெய்யப் பழகிக்கொள்ளவேண்டும்.

5 இலட்சம் ரூபாய்களுடன், 20 பரப்புக் காணியில் (எட்டில் ஒரு பங்கு ஏக்கர்) ஒரு மூலிகைத் தோட்டம், சில கோழிகள் மற்றும்

இரண்டு ஆடுகளையும் வளர்க்கக்கூடிய கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கிக் கொள்ளலாம் என்கிறார் செல்வின். உணவுக் கழிவுகளைக் கொண்டே தமது மிருகங்களுக்கும், பயிர்களுக்கும் தீனளிப்பதால் பெறக்கூடிய நன்மை பற்றி, தமது சொந்த உற்பத்தியான பால், முட்டை மற்றும் மரக்கறி வகைகளை மிகவும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கும் சிறிய பண்ணைகளின் சொந்தக்காரர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (*According to a 2021 report by the FAO - UN's Food and Agriculture Organisation*) 2021 ஆம் ஆண்டு அறிக்கைப்படி, கொழும்பு மாநகரசபையின் 706 தொன் குப்பைக் கழிவில் 50% (353 தொன்) உணவுக் கழிவாகும் எனக் கூறப்படுகிறது. குப்பைக் கிடங்குகளில் கிடந்து அழுகி துர் நாற்றத்தைப் பிறப்பிப்பதைவிட இதை மீள் சுழற்சிக்குள்ளாக்கி பெருமளவு பயனைப் பெறமுடியும்.

**போர்ப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் உணவுத் தயாரிப்பிலும், பாவனையிலும் அசாதாரண செயற் திறன்களைக் கொண்டிருந்தார்கள். சமையல் செய்யும்போதோ அல்லது உண்ணும் போதோ மிகக்குறைந்த உணவையே அவர்கள் கழிவாக்கினார்கள். இதனால் அதிகமான உணவுற்பத்திக்கான அவசியமும் இருக்கவில்லை.**

## தொழில்துறைக்கான சந்தர்ப்பம்

இவ் விடயத்தில் தொழில்துறையொன்றை உருவாக்கக்கூடிய யோசனை ஒன்றைச் சொல்லும்படி நான் செல்வினைக் கேட்டேன். அதற்கு அவர், விலங்குணவு தயாரிக்கும் தொழிலொன்றை ஆரம்பிக்கலாம் எனக்கூறினார். சுழற்சி முறைப் பயிர்களான பயிறு வகைகள், சோளம், CO2/CO3 மற்றும் 'சுப்பர் நேப்பியர் புல்' (*Super Napier Grass*) ஆகியன சில வாரங்களுக்கொரு முறை பயிரிடப்படும். இரண்டு ஏக்கர் நிலத்தில், வருடத்தில் பல தடவைகள், வித்தியாசமான காலக் கிரமங்களில், இம் மாற்றுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டால் ஆடு, மாடுகளுக்கு, வருடம் முழுவதுக்கும் தேவையான ஊட்டச்சத்துள்ள போதியளவு உணவைத் தயாரிக்க முடியும். இவ் விலங்குகளிலிருந்து பெறப்படும் சாணம் திரும்பவும் அதே நிலங்களில் விளையும் புல்லிற்குப் பசளையாகி விடுகிறது. புற்களுக்கு அதிகம் நீர் தேவைப்படுவதில்லை எனவே சொட்டு நீர்ப்பாசனத்தின் மூலம் (*drip irrigation*) வடக்கின் பல் மாதக் கொடுமையான வெயிலையும் சமாளித்து, இப்புற்களைச் செழிப்பாக வளர்த்துக்கொள்ள முடியும். இவ் விலங்குணவுக்கு நிறையத் தேவை இருக்கிறது. எனவே இத் தொழில் இலாபகரமானதாகவும், நீண்டகாலத்துக்கு பலன் தரக்கூடியதாகவும் இருக்கும்.

## போரும் சமாதானமும்

சமாதான காலத்தில் வாழ்பவர்களைப் போலல்லாது போர்க்கால நுகர்வோர் வித்தியாசமானவர்கள். போர்ப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் உணவுத் தயாரிப்பிலும், பாவனையிலும் அசாதாரண செயற் திறன்களைக் கொண்டிருந்தார்கள். சமையல் செய்யும்போதோ அல்லது உண்ணும் போதோ மிகக்குறைந்த உணவையே அவர்கள் கழிவாக்கினார்கள். இதனால் அதிகமான உணவுற்பத்திக்கான அவசியமும் இருக்கவில்லை. தேசிய ரீதியில், திட்டமிடப்படாத உணவுத் தயாரிப்பும், கவனமற்ற உணவுக் கழிவும் முக்கியமானவை. பண்ணைகளிலிருந்து கனரக வண்டிகளில் நசுக்கப்பட்டு, அடைக்கப்பட்டு, நீண்ட தூரப் பயணத்தின் பின்னர், மொத்த வியாபாரிகளையும், அவர்களிடமிருந்து சில்லறை வியாபாரிகளையும், இறுதியில் நுகர்வோரையும் அடையும்போது தயாரிப்புகளின் கணிசமான பகுதி பழுதடைந்து குப்பைக் கிடங்குகளில் வீசப்பட்டுவிடுகிறது. கிட்டங்கிகளில் சேமிக்கப்படுவது முதல், கடைகளின் காட்சித் தட்டுகள், நுகர்வோரின் குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவற்றில் அடுக்கப்படுவது வரை இவ்வுணவுப் பொருட்களின் ஆயுள் குறைக்கப்பட்டு விடுகிறது. இதனால் மக்களின் பாவனையை விட பலமடங்கு உணவுற்பத்தியை நாடு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

போர்க்காலத் தீர்வுகள் எப்போதுமே அமைதிக் காலத்திற்கான விடைகளாக இருக்கமுடியுமென எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் அதிக செயற்திறன் கொண்ட, அதிக பலன் தரும், சிரமமான போர்க்கால நடைமுறைகள் அமைதிக் காலத்தின் இலகு வாழ்வுக்கான சில வழிகாட்டல்களைத் தந்துதவ முடியும்.

**செல்வினோடு தொடர்புகொள்ள விரும்புபவர்கள் பின் வரும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ள முடியும் : selvinansteen@gmail.com**

**நன்றி : மறுமொழி, Lanka Business Online (www.lankabusinessonline.com)**

(தொடரும்)

மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து கோப்பித் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் கூலி வேலைக்காக அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' எனும் பெயரோடு ஆரம்பித்த இரு நூற்றாண்டுப் பயணம் 'மலையகத் தமிழர்' எனும் தேசிய அடையாளமாக இவர்களை முன்னிலைப்படுத்தும் அரசியற் பாதைக்கு வழி செய்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்து அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் வீழ்ச்சிகளும் உண்டு; எழுச்சிகளும் உண்டு. இதனை நினைவுபடுத்துவதாகவும் மீட்டல் செய்வதாகவும் 'மலையகம் 200' நிகழ்வுகள் உலகு தழுவியதாக நடைபெற்றன. இவை மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக – பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தன. அதற்கேற்ப, விம்பம் அமைப்பு எழுநாவின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தியது. இப் போட்டியில் வெற்றி பெற்ற வெவ்வேறு எழுத்தாளர்களின் கட்டுரைகள் 'மலையகம் 200' எனும் தலைப்பில் தொடராக எழுநாவில் வெளியாகின்றன.

சந்திரகுமார் தமயந்தி

'மலையம் 200' நிகழ்வுகளை முன்னிட்டு, விம்பம் அமைப்பினரால் எழுநாவின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் சந்திரகுமார் தமயந்தி அவர்களால் எழுதப்பட்ட 'வலியில் இருந்து வாழ்வு வரை : அரசியல், பொருளாதார, சமூக அபிவிருத்திக் கண்ணோட்டம்' எனும் இக் கட்டுரை இரண்டாம் பரிசைப் பெற்றது. இக் கட்டுரை எழுநாவில் மூன்று பகுதிகளாக வெளியாகின்றது.

# வலியில் இருந்து வாழ்வு வரை:

## அரசியல், பொருளாதார, சமூக அபிவிருத்திக் கண்ணோட்டம்



Image source - globalpressjournal.com

பகுதி 1

மலையகம் இலங்கை தீவின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. புவியின் சார்பாக சப்ரகமுவ குன்றுகளைத் தவிர்த்து கடல் மட்டத்திலிருந்து முன்னூறு மீட்டருக்கு மேல் அமைந்துள்ள பகுதி 'மலையகம்' என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் சமூகஞ்சார் வரைவிலக்கணங்கள் படி இலங்கையின் மலையகம் இவ்வெல்லைக்கு அப்பாலுள்ள பகுதிகளையும் இணைத்துக் கொள்கிறது. அதனடிப்படையில் மாத்தளை, கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களும் மலையகத்தின் சமூகஞ்சார் வரைவிலக்கணத்தில் உள்ளடங்குவதோடு சிலவேளைகளில் கொழும்பு மற்றும் காலி மாவட்டங்களும் உள்ளடக்கப்படுகின்றன. அதற்கமைய மலையகத்தில் வாழும் தமிழர்களைக் குறிக்கும் பொதுச் சொற்களாக 'மலையகத் தமிழர்', 'மலையகத் தோட்டத் தொழிலாளர்' ஆகியன அமைகின்றன. ஒரு சமுதாயம் தன்னைத்தானே சுதாகரித்துக்கொண்டு தன் நிறையையும் குறையையும் உணர்ந்து கொண்டு வாழ்க்கையிலும் அந்தஸ்திலும் உயர்வதற்கு தனது இன்றைய நிலையையும் கடந்த கால வரலாற்றையும் ஆழமாக அறிந்திருத்தல் அவசியம். நமது பூர்வீக




சரித்திரத்தை நன்கு தெரிந்து கொண்டால் தான் எதிர்காலத்தில் நாம் எப்படி திட்டமிட்டு முன்னேறுவது என்பதை நிர்ணயிக்க முடியும் என்ற நோக்கத்தில் மலையக மக்கள் இலங்கையில் குடியேறிய விதத்தையும் அவர்களின் வாழ்வியல் பிரச்சனைகளையும் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இக்கட்டுரையானது மலையகத் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் நாடற்றவர்களாக இருந்தமைக்கும் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையாது தேக்கமுற்றிருந்தமைக்கும் அடிப்படையாக அமைந்த காரணங்களை இனம் காணுவதுடன் அவர்களின் இன்றைய பின்தங்கிய நிலைக்கு பொறுப்பாக இருக்கும் ஏனைய காரணிகளையும் இனம் காணுவதையும் முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. இத் தொழிளாலர்களின் வருமானம், கல்விநிலை, வீட்டுவசதி, சுகாதார வசதிகள் என்பன அவர்களின் இன்றைய வாழ்க்கை நிலைமையினை இனம் காட்டும் குறிக்காட்டிகளாகும்.

அவற்றைக் கொண்டு அவர்களுடைய சமூகப் பொருளாதார நிலைமையினை அளவீட்டு ரீதியாக நாம் அறிந்துக்கொள்ளமுடியும். இத்தகைய குறிக்காட்டிகள் ஏன் நீண்டகாலமாக கீழ் நிலையிலே இருக்கின்றன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக விவாதிப்போம். இதற்காக குறைந்த வேதனங்கள், தாழ்ந்த கல்விநிலை, தாழ்நிலையான வீட்டு வசதி மற்றும் திருப்தியற்ற சுகாதார வசதிகள் என்பவற்றிற்கான மூலக்காரணங்களையும் அவற்றின் விளைவுகளையும் விளக்கி அவை எவ்வாறு மலையகத் தோட்ட தொழிளாலர்களின் இன்றைய சமூகப் பொருளாதார நிலைமைக்கு பொறுப்பாயிருக்கின்றன என்பதையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மலையக மக்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இருநூறு ஆண்டுகள் கடந்துவிட்டது. இருநூறு ஆண்டுகள் கடந்தும் இன்றும் எம் மக்களின் நிலை என்ன? என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது. தமது கடும் உழைப்பினாலும் உதிரத்தாலும் மலையகத்தை பசுமை கொஞ்சும், வளம் கொழிக்கும் பூமியாக்கிய எம்மக்கள் எவ்வித மனித உரிமைகளுமின்றி அடிப்படை வாழ்க்கை வசதிகளுமின்றி அரை அடிமைகளாக இன்றும் ஓர் இருண்ட காலக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது வேதனைக்குரியது. அதேவேளை எங்களைப் போன்று இந்தியாவில்

இருந்து வேறுநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டவர்களின் இன்றைய நிலைமை அந்நாடுகளில் உள்ள ஏனைய சமூகங்களுக்கு சமமானதாகவே அமைந்திருக்கிறது. அவர்களது சமூகப் பொருளாதார நிலைமைகள் உயர்வான மட்டத்தில் உள்ளது. எனினும் நாம் எங்கே இருக்கின்றோம்? தொழில் நிலையில், தொழில் முறையில் எவ்வித மாற்றமும் இல்லை. தமிழ் இன வரலாற்றில் 19ம் நூற்றாண்டினை கறைபடிந்த ஓர் காலக்கட்டமாக குறிப்பிடுதல் முடியும். தமிழ்த் தொழிலாளர்கள் பல நூற்றாண்டுகளாகத் தமது தாயகத்திலேயே தமது இனத்தவராலேயே சாதி, குலம், சமயம், சாஸ்திரம், தெய்வம் முதலியவற்றின் பெயராலே தயை தாட்சண்யமின்றி சுரண்டப்பட்டும் வஞ்சிக்கப்பட்டும் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டும் வாழ்வு பறிக்கப்பட்ட நிலையில் வேறு வழியின்றி தமது வயிற்றுத் தீயை தணித்தற் பொருட்டு இதயக் குமுறலுடன் கலங்கிய கண்களுடன் தாயகத்தை விட்டு வெளியேறினர். இவர்கள் அனுபவித்த கொடுமைகள் பல. அவர்களது வரலாறு சோகம் மிகுந்து, துயரங் கவிந்து, இருள்படிந்து, குருதி நிறைந்த வேதனைகள் மலிந்து காணப்பட்ட வரலாறு.

19ம் நூற்றாண்டில் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் பூரண அடிமைகளாகவும் அரை அடிமைகளாகவும் கூலிகளாகவும் தமிழ்த் தொழிலாளர்கள் தமிழகத்திலிருந்து பண்டங்களைப் போன்றோ மந்தைகளைப் போன்றோ கப்பல்களில் ஏற்றிச் செல்லப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். தமிழக வரலாற்றில் முன்னைய எக் காலக்கட்டங்களிலும் காணப்படாத அளவிற்கு 19ம் நூற்றாண்டில் இலட்சோபலட்சம் தமிழ்த்தொழிலாளர்கள் தமிழகத்திற்கு மிக அண்மையிலுள்ள இலங்கையில் மட்டுமின்றி நூற்றுக்கணக்கான பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள நாடுகளுக்கும் தீவுகளுக்கும் கொண்டுசென்று குடியமர்த்தப்பட்டனர். நேவிஸ், அன்ரீல்ஸ, தாஹித்த, நியூ கலிடோனியா. கிரனிடா, சென்குறேக்ஸ், பிஜி, டேமிறா, மொறீசியஸ், ரிறினிடாட், றியுனியன், தென் ஆப்பிரிக்கா, வியட்னாம், அந்தமான், சுமத்திரா, சிசெல்ஸ, ஜமெய்க்கா, கரினாம் பிரிட்டிஸ் , கயானா, பிரெஞ்சாக்கயனா, குவாட்லோப், சிங்கப்பூர், மலேசியா ஆகியன அவற்றுள் சில முக்கியமான இடங்கள் ஆகும்.

அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டு முதலில் பிரித்தானிய, பிரான்சிய ஆட்சியாளர்களாலும் பின்பு சுதேச ஆட்சியாளர்களாலும் அந்தந்த நாடுகளையும் தீவுகளையும் சேர்ந்த சுதேச இனத்தவர்களாலும் தொழிலாளர்களல்லாத ஏனைய இந்தியர்களாலும், வணிகர்கள், அதிகாரிகள், தோட்ட உத்தியோகத்தர்கள், பிற அலுவலர்களாலும் கொடூரமாக சுரண்டப்பட்டனர். இன்று இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய சில நாடுகளிலேயே தமிழத்தொழிலாளர்கள் தொடர்ந்தும் தொழிலாளர்களாகவும் அதேசமயம் தமிழர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். அத்தகைய நாடுகளுள் இலங்கையே முதன்மையாக இலட்சோப இலட்சம் தமிழ் தொழிலாளர்களை கொண்டுள்ளதாக விளங்குகின்றமை கவனத்திற் கொள்ளப்படவேண்டும். இவ்வாறு தமிழகத்திலிருந்து கடந்த நூற்றாண்டிலே இலங்கையின் மலையகப் பகுதிகளில் குடியேறிய அல்லது குடியேற்றப்பட்ட தமிழ்த்தொழிலாளர்கள் மிக அண்மைக்காலம் வரை சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் இலங்கையிற் காலம் காலமாக வாழ்ந்து வந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். ‘கூலிகள்’ என்றும் ‘கள்ளத்தோணிகள்’ என்றும் ‘வடக்கத்தையார்’, ‘தோட்டக்காட்டார்’, ‘இந்தியாக்காரர்’ என்றும் அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டனர்.

**21ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டமான இன்றும் கூட இலங்கையின் ஏனைய சமூகத்தினருடனோ, சமூகப் பிரிவினருடனோ, ஒப்பிடுகையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகள், கல்வி வசதி, வாழ்க்கைத் தரம் முதலியன மிகவும் இரங்கத்தக்க நிலையில் காணப்படுகின்றன. மிதமிஞ்சிய உழைப்பும் மிகக்குறைந்த வருவாயும் அறியாமையும் வறுமையும் சொல்லொணாத் துயரங்களும் அவலங்களும் அவர்களது சொத்துக்களாக விளங்குகின்றன.**

மலையக மக்களின் துயரங்களும் இன்னல்களும் சுரண்டல் கொடுமைகளும் தொடர் கதையாகிக் கொண்டிருக்கின்றன. மலையகப் பகுதியில் குடியேறிய தொழிலாளர்கள் கடந்த ஒன்றரை நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக தமக்கே பிரத்தியேகமாகவுரிய பல பிரச்சனைகளையும் இலங்கையில் வாழும்பல்வேறு சமூகத்தினருக்கும் பொதுவாகவுரிய பல பிரச்சனைகளையும் கொண்டவர்களாக இன்றுவரை வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இன்றும்கூட கோடிக்கணக்கான உடலுழைப்பாளிகள் நாள் முழுவதும் மாடாக உழைத்தாலும் வறுமையாலும் பட்டினியாலும் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றனர்.

**மலையகச் சமூகத்தின் பெரும்பகுதியினர் 'உடலுழைப்பாளிகள்' என முத்திரை குத்தப்பட்டு உடலுழைப்புக்கு மட்டும் தகுதியாக்கப்பட்டனர். சமூகத்தின் தாழ்ந்த படித்தரங்களில் நசுக்குண்டு வாழ்க்கைப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கும் உழைக்கும் வர்க்கம் என்று தலைநிமிரா வண்ணம் அவர்களின் அகமும் புறமும் கட்டுப்படுத்தப்பட்டிருக்க இன்றும் முதலாளி வர்க்கத்தினர் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, சமயம் முதலிய துறைகளைப் பயன்படுத்திக் கொள்வதை காணலாம்.**

அதேசமயம் சமூகத்தின் மேல்மட்டத்தில் உள்ளோர் செல்வச்செழிப்புடன் ஆடம்பர வாழ்வில் திளைப்பதை அவதானிக்கலாம். 21ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டமான இன்றும் கூட இலங்கையின் ஏனைய சமூகத்தினருடனோ, சமூகப் பிரிவினருடனோ, ஒப்பிடுகையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகள், கல்வி வசதி, வாழ்க்கைத் தரம் முதலியன மிகவும் இரங்கத்தக்க நிலையில் காணப்படுகின்றன. மிதமிஞ்சிய உழைப்பும் மிகக்குறைந்த வருவாயும் அறியாமையும் வறுமையும் சொல்லொணாத் துயரங்களும் அவலங்களும் அவர்களது சொத்துக்களாக விளங்குகின்றன. ஆரம்பத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தாலும் பின்னர் இலங்கைச் சுதேசிகளான சிங்கள, முஸ்லிம், தமிழ்ச் சமூகத்தினராலும் பல்வேறு துறைகளிலும் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகின்றார்கள். இலங்கை மலையகத் தமிழர்கள் மட்டுமன்றி தமிழகத்திலும் இன்றும் தமிழர்கள் நிலைமை முடிவற்ற சோகநாடகமாகவும் தொடர்கதையாகவும் விளங்கிவருகிறது. இலங்கை இந்திய அரசுகளினால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் நிமித்தம் தோட்டத் தொழிலாளர்களில் கணிசமான தொகையினர் தாயகம் திரும்ப வேண்டியேற்பட்டது. அவ்வாறு தாயகம் திரும்பியோரின் நிலைமையும் “நரியூருக்குப் பயந்து புலியூருக்குப்போன” கதையாகிப்போனது.

மலையகச் சமூகத்தின் பெரும்பகுதியினர் 'உடலுழைப்பாளிகள்' என முத்திரை குத்தப்பட்டு உடலுழைப்புக்கு மட்டும் தகுதியாக்கப்பட்டனர். சமூகத்தின் தாழ்ந்த படித்தரங்களில் நசுக்குண்டு வாழ்க்கைப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கும் உழைக்கும் வர்க்கம் என்று தலைநிமிரா வண்ணம் அவர்களின் அகமும் புறமும் கட்டுப்படுத்தப்பட்டிருக்க இன்றும் முதலாளி வர்க்கத்தினர் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, சமயம் முதலிய துறைகளைப் பயன்படுத்திக் கொள்வதை காணலாம். அரசியல், பொருளாதார பலத்தினால் அவர்களை இலகுவாக அடக்கி ஆள முடிகிறது. மக்களின் பொருளாதார நிலை சீர்கேடடைவதை நாம் கண்கூடாக காணமுடிகிறது. இத்தகைய நிலைமை காரணமாக சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் 'அன்றாடம் காய்ச்சிகளான' உழைக்கும் வர்க்கத்தினர் படுபயங்கரமாக பாதிக்கப்படுகின்றனர். அவலங்களில் அதல பாதாளத்திற்கு தள்ளப்படுகின்றனர். அடிக்கடி ஏற்படும்

பஞ்சங்கள் சமூகத்தின் மேல் மட்டத்தினரைப் பாதிப்பதில்லை. சமூகத்தின் அடிமட்ட மக்களையே வெகுவாகப் பாதித்து அவர்களது உயிர்களைக் குடித்து ஏப்பம் விடுகின்றன. மிகப் பாரதூரமான முறையில் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கும் சுரண்டல் முறைகளுக்கும் ஆளாகி கொண்டிருப்பது உழைக்கும் வர்க்கத்தினரே.

நாம் ஏலவே கூறியது போல தாழ்த்தப்பட்ட மக்கள் உடலுழைப்பாளிகள் முதலியோரின் சந்ததியினரே இன்றைய மலையகத் தோட்டத் தொழிலாளர்களுள் பெரும்பாலானோராவர். கடந்த இரண்டாயிரமாண்டுக் காலத் தமிழகச் சமூக வரலாற்றை மனிதாபிமானத்துடன் மிக உன்னிப்பாக அவதானிக்கும் போது பஞ்சப்பட்ட அந்த அப்பாவி மக்களின் இன்னல்களும் பரிதாபகரமான நிலையும் காலத்திற்கு காலம் அதிகரித்து வருவதால், மலையக மக்களின் அவலக்குரல் ஈனஸ்வரமாகவும் உள்ளத்தை உருக்கும் சோக கீதமாகவும் ஆழமான கிணற்றின் அடி ஆழத்திலிருந்து கேட்பது போல் ஒலிப்பதையும் உணரமுடிகிறது. இந்த அப்பாவி மக்கள் அங்கு தமிழகப் பண்ணைகளில் தமிழர்களாலேயே அடிமையாக்கப்பட்டிருந்தனர்.

பண்ணைகளில் அடிமைகளாக வேலை செய்த உடலுழைப்பாளிகளின் நிலை கண்டு மனம் வெதும்பிய பட்டாளி சீத்தாராமையா என்பவர் 1940ம் ஆண்டிலே "சேற்றிலும் சகதியிலும் உழன்று பயிரிடும் பண்ணையடிமை அரைவயிற்றுக் கஞ்சியுடனோ பட்டினியாகவோ வேலை செய்கின்றான். அவனுக்குப் புயல்மழை வெயில் எதுவும் ஓய்வு தருவதாக இல்லை. மரணம் ஒன்றே ஓய்வு தருகிறது. நமக்காக நெல் விளைவித்து அவன் வறுமையில் வாடுகின்றான். நம் பசுவை வளர்த்து நமக்கு பால் தருகின்றான். ஆனால் அவனோ கஞ்சியையும் தண்ணீரையும் தவிர வேரறியான். அவன் நமக்காகக் கிணறு தோண்டுகின்றான். ஆனால் அதில் நீர் ஊறும்போது அவனை அதிலிருந்து விலக்கி விடுகின்றோம். அவன் பரிதாப நிலை நம் நெஞ்சை தொடுவதாக உள்ளது." என கூறியுள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. சிற்சில வேறுபாடுகளை தவிர தமிழகத்துப் பண்ணை அடிமைகளின் நிலைமையும் அவர்களது பரம்பரையைச் சேர்ந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களினது நிலையும் எத்துணை ஒற்றுமையுடையன என்பதை இங்கு விளக்கிக்கூற தேவையில்லை. தமிழகத்தில் விவசாயக் கூலிகளை 2 வகைகளாக பிரித்து வைத்திருந்தனர்.

1. **கட்டுண்ட விவசாயக்கூலிகள்**
   **(Attached agricultural labourer)**

2. **தற்செயல் விவசாயக்கூலிகள்**
   **(Casual agricultural labourer)**

காலம்காலமாக விவசாயக்கூலிகள் என பிரிக்கப்பட்ட இவர்கள் நிலைமையில் வேறுபாடோ வளர்ச்சியோ காணப்படவில்லை. சமூகப் பொருளாதார ரீதியாக பிற்படுத்தப்பட்ட உடலுழைப்பாளிகள் சாதி வெறியர்களாலும் நிலவுடைமையாளர்களாலும் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பதற்கு இந்த இரு சாராரும் நல்லதொரு உதாரணமாகும். நாட்டின் பொருளாதாரத் துறையின் சுமை தாங்கிகளான மலையகத்தோட்ட தொழிலாளருக்கும் இவர்களது வாழ்வின் அவலங்கள் ஏறத்தாழ ஒரே அச்சில் வார்த்தது போல பொருந்துவதைக் காணலாம். அன்றும் இன்றும் தமிழகத்திலும் மலையகத்திலும் பழைய ஒடுக்குமுறைச் சாதனங்களுக்கும் நவீன ஒடுக்குமுறை சாதனங்களுக்குமிடையே வேறுபாடுகள் உண்டானதே தவிர, அவர்களது இரங்கத்தக்க நிலையில் அதிகம் வேறுபாடுகள் காணப்படவில்லை.

பிரித்தானியர் இலங்கைக்கு வந்த காலப்பகுதியோடு இங்கு அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்ட வரலாற்றுடன் இணைந்ததாக மலையக தமிழ் மக்களின் வரலாறும் காணப்படுகின்றது. 1948ம் ஆண்டுவரை பாட்டாளி மக்களாக இன்னலுற்று சமூகப் பொருளாதார வளர்ச்சி நிலைமைகளில் பின்தங்கியவர்களாக காணப்பட்ட மலையகத் தமிழர்களுடைய நிலை சுதந்திரத்தின் பின் குடியுரிமை நிராகரிக்கப்பட்டமையால் மேலும் மோசமாக்கப்பட்டது. இலங்கையில் இவ்வாறு துன்புற்ற இம்மக்களில் பெரும்பான்மையோர் இன்னும் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் பின் தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். இத்தகைய பின்தங்கிய நிலைமைகளின் உண்மைத் தாற்பரியங்களை அரசாங்கமும் மக்களும் அறிஞர்களும் புரிந்துக்கொள்ள வேண்டும். பாதிப்பிற்குள்ளானவர்கள் தமது நிலையினை நன்கு உணரும்போதுதான் அவர்களிடையே விழிப்புணர்வும் அதனால்

அந்நிலையிலிருந்து விடுபடும் உணர்வும் ஏற்பட முடியும். அரசாங்கத்தினர் இப்பிரச்சினைகளை நன்கு விளங்கி கொண்டால் மட்டுமே அதற்கான தீர்வுகளை வழங்குவது பற்றிச் சிந்திக்கத் தலைப்படுவார்கள். ஏனையோர் இவற்றை பற்றி நன்கு விளங்கி கொள்வதன் மூலமே பாதிக்கப்பட்ட சமுதாயத்திற்கு சார்பான பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க முடியும். நீண்ட காலமாக தேசிய நீரோட்டத்திலிருத்து ஒதுக்கப்பட்டிருந்த காரணத்தினால் மலையக மக்களுக்கு அரசின் மூலம் கிடைக்கக்கூடிய சேவைகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் இன்னும் வந்தபாடில்லை. அரசின் மூலம் கிடைக்கும் சேவைகளை அமுல் படுத்துவதிலுள்ள பலவீனத்தாலும் போதியளவு நிர்வாக கட்டமைப்பு இல்லாததினாலும் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைக்கு வராத அவலநிலை உள்ளது. ஓர் சமூதாயம் முன்னேற வேண்டுமானால் அங்கே அனைவருக்கும் குறைந்தபட்ச வாழ்க்கைத்தரம் பேணப்படல் வேண்டும். அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறையுள், போக்குவரத்து வசதி, கல்வி என்பனவும் இவற்றை பெற்றுக் கொள்வதற்கான தொழிலும் மிக அவசியம்.

**இலங்கை அரசு இலவசக் கல்வியுடன் செயற்படுத்தப்பட்ட கட்டாயக் கல்வி, பாடசாலைக் கல்வி, விஞ்ஞானக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி என பல கல்வி முறைகளை அறிமுகப்படுத்தினாலும் ஏனைய சமூக மாணவர்களுடன் ஒப்பிடும்போது மலையகச் சமூக மாணவர்கள் கல்விக்குரிய முக்கியத்துவத்தை கொடுக்காமல் அதனைப் புறக்கணித்து பாடசாலையை விட்டு அதிகமாக இடைவிலகுகின்ற நிலை காணப்படுகிறது.**



Image source - www.dailymirror.lk

விருத்தியுறும் நாடுகளும் சமூகமும் தமது மக்களுடைய கல்வியறிவு, தொழில்நுட்ப அறிவு என்பனவற்றின் வளர்ச்சியிலே பெரிதும் தங்கியுள்ளது. உதாரணமாக பின் தங்கியவர்களாக வாழ்ந்த ஐரோப்பிய இனத்தவரே இன்று பெரிதும் கல்வி, தொழில்நுட்பம், பொருளாதாரம் நாகரீகம், வாழ்க்கைத்தரம், அரசியல் அதிகாரம் என்பவற்றில் முன்னேறிக் காணப்படுகின்றனர். தொழிநுட்ப வளர்ச்சியும் அறிவியல் வளர்ச்சியும் அவற்றிற்கு அடிப்படையாகிய கல்வி வளர்ச்சியுமே இதற்கு காரணம் என்பதில் மாறுப்பட்ட கருத்து இருக்க முடியாது. இதனாலேயே 21ம் நூற்றாண்டினை 'அறிவுமைய தகவல் மைய நூற்றாண்டு' எனவும் அந்நூற்றாண்டின் சமூகம் அறிவுசார் சமூகம் என்றும் கணிக்கப்படுகின்றது. மனித வாழ்வில் சகல அம்சங்களின் மேம்பாடும் முன்னேற்றமும் இறுதியில் கல்வியினாலேயே தீர்மானிக்கப்படும் என்ற சிந்தனை 20ம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. 1920ம் ஆண்டளவில்

மேலைநாட்டு பொருளியல் சிந்தனையாளரான 'அல்பிரட் மார்சல்' உற்பத்திக்கான சக்தி வாய்ந்த சாதனம் அறிவு என்றும் அதனை கொண்டே இயற்கையை பயன்படுத்தி மனிதனின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனும் கருத்தை தெரிவித்தார்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கல்வியினால்தான் ஓர் சமூகத்தின் தலையெழுத்ததையே மாற்றமுடியும். இலங்கையின் எழுத்தறிவு வீதம் 97.3 என்று புள்ளி விபரம் கூறுகிறது. அந்த புள்ளி விபரக் கணக்கறிக்கையை வைத்துக்கொண்டு நம்மை நாமே நீண்ட காலமாக ஏமாற்றிக் கொள்ளும் ஓர் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசியல் சிக்கல்களும் முரண்பாடுகளும் நிறைந்த இக்காலக் கட்டத்தில் கல்வி என்பது சமூகத்தின் அனைத்து அங்கத்தினரையும் சென்றடையாத பட்சத்தில் சமூகம் வளர்ச்சியடையும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இலங்கை அரசு இலவசக் கல்வியுடன் செயற்படுத்தப்பட்ட கட்டாயக் கல்வி, பாடசாலைக் கல்வி, விஞ்ஞானக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி என பல கல்வி முறைகளை அறிமுகப்படுத்தினாலும் ஏனைய சமூக மாணவர்களுடன் ஒப்பிடும்போது மலையகச் சமூக மாணவர்கள் கல்விக்குரிய முக்கியத்துவத்தை கொடுக்காமல் அதனைப் புறக்கணித்து பாடசாலையை விட்டு அதிகமாக இடைவிலகுகின்ற நிலை காணப்படுகிறது. ஏன் இவ்வாறு மலையகப் பாடசாலை மாணவர்கள் அதிகமாக பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர் என்பதை பகுப்பாய்வு செய்து பார்த்து, பொருளாதார - சமூக - குடும்பச் சூழல் - பாதுகாப்பு போன்றவைகளே மாணவர்களின் இடைவிலகல்களுக்கு காரணமாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. எனவே இலவச கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் நடத்துவதன் மூலம் ஓரளவேனும் மாணவர் இடைவிலகலை தடுக்கலாம். இலங்கையின் எழுத்தறிவு 97.3 வீதமாக உயர்ந்து காணப்பட்டாலும் மலையகத்தை பொறுத்த வரை கல்வி ரீதியான முன்னேற்றம் மிக குறைந்தளவிலேயே காணப்படுகிறது. சமூக நீதி, கல்வியில் சம வாய்ப்புகள் மலையகத் தமிழர்களை சரியாக எட்டவில்லை. மலையகப் பாடசாலைகளிடையே வளப் பங்கீடுகளில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனால் மலையக எழுத்தறிவு 58.5 வீதமாக உள்ளதுடன் மாணவச் சேர்ப்பு, பல்கலைக்கழக அனுமதி போன்றவற்றில் பின்தங்கி உள்ளனர். அத்துடன் மலையகப் பெருந்தோட்டப்பகுதிகளில் 13.1 வீத மாணவர்கள் பாடசாலை செல்லாதவர்களாகவும், தரம் ஐந்து வரை பாடசாலை செல்வோர் 43 வீதமாகவும், தரம் ஆறிலிருந்து பத்துவரை பாடசாலை செல்வோர் 37.7 வீதமாகவும், சாதாரண தரம் சித்தியடைவோர் 3.8 வீதமாகவும், உயர்தரம் சித்தியடைவோர் 2.3 வீதமாகவும் காணப்படுகின்றனர். மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் அவர்களே இலங்கையில் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியவர்களாக காணப்படுகின்றனர்.

மலையகக் கல்வி வளர்ச்சி குறைவுக்கு வெவ்வேறு காரணங்கள் காணப்பட்டாலும் மிகப் பிரதான காரணங்களில் ஒன்றாக மாணவர் இடைவிலகலே காணப்படுகிறது. இவ்வாறு கல்வியைப் புறக்கணித்து மாணவர்கள் ஏன் இடைவிலகுகின்றனர் என ஆராய்ந்து பார்த்தால், அதற்கு பின்வரும் காரணங்கள் செல்வாக்கு செலுத்துவதை பார்க்கலாம்.

**வறுமை :** மாணவர்களின் இடைவிலகலுக்கான பிரதான காரணம் வறுமையாகும். அந்த வகையில் வறுமை ஏற்படுவதற்கு பிரதான காரணமாக காணப்படுவது அதிகரித்து வரும் விலையேற்றத்திற்கு ஏற்ப தோட்ட தொழிலாளிகள் சம்பளம் அதிகரிக்கப்படாமை ஆகும். இதனால் தங்கள் பிள்ளைகளுக்குரிய கல்வி நடவடிக்கைக்குரிய செலவீனங்களை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதால் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர்.

**பெற்றோர்களின் அக்கறையின்மை :** மலையகப் பெற்றோர்களில் பெரும்பாலோர் போதியளவு கல்வியறிவு அற்றவர்கள் ஆகையால் தங்களுடைய பிள்ளையின் கல்வி அறிவு பற்றிய விடயங்களில் அசமந்தப் போக்குடன் இருப்பதுடன் மாணவர்கள் மத்தியிலும் இதே மனநிலை காணப்படுவதால் மாணவர்கள் கல்விக்குரிய முக்கியத்துவத்தை வழங்காமல்

பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர்.

**போக்குவரத்து வசதியின்மை :** மலையக மக்களை பொறுத்த வரை அவர்களுடைய குடியிருப்புகள் மலைப்பாங்கான பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருப்பதால் அங்கு சென்று வருவதற்குரிய பாதை வசதிகள் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகிறமையால் மாணவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் சமூகம் தராமையாலும், பாதுகாப்பு சார்ந்த விடயங்களில் பெரும் சிரமத்தை எதிர் கொள்வதனாலும் பாடசாலையை இடை நிறுத்தும் தீர்மானத்தை மேற்கொள்கின்றனர். உதாரணமாக இன்றும் பல மாணவர்கள் உயிர் அச்சுறுத்தல் நிறைந்த காட்டுவழிப் பாதையூடாகவும், மிகவும் அபாயகரமான பாலங்கள், நீர்வழிப் பாதைகளூடாகவும் பாடசாலை செல்வதை நாம் அன்றாடம் காணலாம்.

**சிறுவயதுக் காதல்** : அதிகமாக இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் சிறுவயதுக் காதல் அதிகரித்து வருவதுடன் இதனால் மாணவர்கள் கல்வியில் அக்கறைகாட்ட முடியாத நிலை உருவாகி, மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர்.

**தாய் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லல் :** மலையகப் பகுதிகளில் தாய்மார்கள் அதிகமாக வீட்டு பணிப் பெண்ணாக வெளிநாடு செல்வதனால் வீட்டில் மூத்த பிள்ளைகளே இளைய சகோதரர்களுக்குரிய சேவைகளைச் செய்யவேண்டிய நிலை உருவாகின்றமையால் அவர்களால் தங்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்படுகின்றது.

**குடும்பத் தலைவனின் குடிப்பழக்கம் :** குடும்ப தலைவனின் குடிப்பழக்கம் காரணமாக வருமானம் குடிப்பழக்கத்திற்கே செலவாகின்றமையால் பிள்ளைகளுக்குரிய கல்விச் செலவிற்குரிய பணம் கிடைப்பதில்லை. மேலும் தந்தையின் குடிப் பழக்கத்தால் ஏற்படும் விபரீதங்கள் மாணவர்களுடைய அந்தஸ்தை குறைப்பதால் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர். குடும்பத் தலைவர் மட்டுமின்றி சில குடும்பங்களில் பெண்களும் மதுப்பாவனைக்கு அடிமையாக இருப்பதனையும் குறிப்பிட வேண்டும்.

**காட்டு விலங்குகளின் தொல்லை :** மலையகப் பிரதேசங்களில் காட்டு விலங்குகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் பாதைகளில் இடையூறு ஏற்படுவதாலும் மாணவர்கள் பாதுகாப்புக் கருதி கல்வியை கைவிடுகின்றனர்.

ஆசிரியர்களின் அசமந்தப்போக்கு : பாடசாலையின் தரத்தை உயர்த்தி காட்டும் பொருட்டு வகுப்பில் திறமையாக கல்வி பயிலும் மாணவர்களுக்கே முக்கியத்துவம் கொடுப்பதுடன் திறமையாக இயங்காத மாணவர்களை இரண்டு அல்லது மூன்று வருடங்கள் வகுப்பேற்றாமல் வைத்திருப்பதால் கல்வி மீது மாணவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர்.



Image source - www.123rf.com

**நண்பர்களின் வேண்டுகோள்** : ஏற்கனவே பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகள் காரணமாகவும் அவர்கள் பாடசாலை தொடர்பாக கூறும் தவறான கருத்துகள் காரணமாகவும் அவர்களுடன் இடைவினை புரிவதாலும்

மாணவர்களுக்கு இடைவிலகுகின்ற எண்ணம் தோன்றுகின்றது. அத்துடன் சிறுவர்களுக்கான தொழில் வாய்ப்புகள் கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் அதிகரித்து வருவதால் சிறுவர் தொழிலாளர்களாகச் செல்ல பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர். மேற்கண்ட பிரச்சினைகளே மலையகக் கல்வி வளர்ச்சிக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் மாணவர்களும் பகிடிவதை, காதல், தற்கொலை போன்ற இன்னோரன்ன காரணங்களால் தமது கல்வியை மட்டுமன்றி வாழ்வினையும் இழக்கின்றனர்.

**ஆசிரியர்களின் நடத்தை :** கண்ணியமிக்க ஆசிரியத்தொழிலை சில ஆசிரியர்கள் தவறான வழியில் பயன்படுத்துவதாலும் முறை தவறி மாணவர்களிடையே, குறிப்பாகப் பெண் பிள்ளைகளிடையே, அத்துமீறி நடந்து கொள்வதாலும் பெண்பிள்ளைகளின் பாதுகாப்புக் கருதியும் மாணவர்கள் இடைவிலகுகின்றனர்.

உலக நாடுகள் துறைசார் ரீதியில் பெரிய அளவில் அபிவிருத்தி அடைந்து வருகின்றன. எனினும் அபிவிருத்தி அடைந்து வரும் ஆசிய நாடுகள் தொடர்ந் தேர்ச்சியாக பல்வேறு சமூக விரோதப் பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து அபிவிருத்தியில் பின்னடைவைக் கண்டுவருகின்றன. உள்நாட்டு யுத்தம், போதைப்பொருள் கடத்தல், பாலியல் துஷ்பிரயோகம், இயற்கை வளங்கள் சட்டவிரோதமாக சூறையாடப்படல் என்பன அவற்றுள் சிலவாகும். பத்தாயிர அபிவிருத்தி இலக்கு (Millenium Development Goals) ஒன்றை நிர்ணயித்து 2020 ஆம் ஆண்டிற்குள் ஒவ்வொரு நாடும் சில இலக்குகளை அடையவேண்டும் என்று ஐ.நா சபை அபிவிருத்தி அமைப்பு திட்டம் வகுத்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் இத்தகைய இலக்கை அடைய தடையாக இருப்பது மலையக பகுதிகளில் அபிவிருத்தி மிகவும் பின்தங்கியிருப்பதே. இதை நிவர்த்தி செய்வதற்காக ஐ.நா அபிவிருத்தி அமைப்பு (U.N.D.P) பெருந்தோட்ட மக்கள் அபிவிருத்திற்காக ஓர் தேசிய நடைமுறைச் சட்டத்தை (National action plan) தயாரிக்க உதவியது. இத்திட்டம் தயாரிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் அதை முன்னெடுத்துச் செல்ல உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது வேதனையான விடயம்.

மலையகம் கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுக்காத போதும் பொருளாதார யுத்தத்திற்கு முகம் கொடுத்துள்ள ஓர் சமூகமாகும். ஏற்கனவே மலையக மக்களின் பொருளாதார நிலைமை அதள பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் நிலைமையில் போதை அரக்கனின் கால்களில் சிக்கி மலையக மக்கள் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறார்கள். மலையக மக்களின் தொழில்முறையும் வாழ்க்கை முறையும் அவர்களை இயல்பாகவே போதைப் பொருள் பாவனைக்கு பழக்கப்படுத்தியுள்ளன. இந் நிலையில் மலையகத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் சாராயம், கள்ளு, பியர் என்பவை தாராளமாக விற்றுத் தீர்க்கப்படுகின்றன. மலையக மக்கள் அதிகமாக வாழும் நுவரெலியா மாவட்டம் அகில இலங்கை ரீதியாக மதுப் பாவனையில் இரண்டாமிடத்தில் உள்ளதென்பது எமது சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிப் பாதைக்கு இடப்பட்டுள்ள கடிவாளம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். மதுபான விற்பனை மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானப் புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்ட தரவுகளின் படி தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் மாவட்டங்களில் மதுபான நுகர்வு மிக அதிகமாக உள்ளதென்பதை தெளிவாக அறியமுடியும். தவிர மதுபானங்களின் விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளதால் சில மாவட்டங்களில் காய்ச்சி வடிகட்டிய சாராயத்தை மலையக மக்கள் அதிகளவில் அருந்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மலையகத்தில் காய்ச்சி வடிக்கப்படும் சட்டவிரோத சாராயமான 'கசிப்பு' விற்பனை மத்திய மாகாணத்திலும் சப்ரகமுவ மாகாணத்திலும் ஊவா மாகாணத்திலும் அதிகமாக உள்ளது. சட்டவிரோத மதுப் பாவனையில் சிறுநீரகநோய், மாரடைப்பு, புற்றுநோய் போன்ற கொடிய நோய்களால் மலையகத்தில் அதிக உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. எனினும் இவ்வாறு உயிரிழப்புக்கள் ஏற்பட்டாலும் அவற்றை நுகர்வோரின் எண்ணிக்கை குறைவாக தெரியவில்லை. மதுப் பாவனைக்கு வயது வித்தியாசமின்றி இளைய தலைமுறைகளும் அடிமையாகி வருவது

வேதனைக்குரிய விடயமாகப் பார்க்கப்பட வேண்டும். தோட்டப்புறங்களை இலக்குவைத்து சந்திக்கு சந்தி திறக்கப்பட்டுள்ள அரச அங்கீகாரம் பெற்ற மதுப் பாவனை விற்பனை நிலையங்கள் மலையக மக்களை தொடர்ந்தும் மதுவிற்கு அடிமையாக்கி கட்டிப்போட்டுள்ளன. பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் மாணவர்களும் மதுப் பாவனையிலும் புகைத்தலிலும் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலைப் பருவத்தில் மதுவுக்கு அடிமையாகும் மாணவர்கள் குறித்த சில நாட்களில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவதுடன் சமூகச் சீரழிவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இவர்கள் காலப்போக்கில் சமூக விரோதிகளாக மாறி குற்றச் செயல்களில் ஈடுபடுவது மலையகத்தில் அதிகரித்து வருகிறது. நவ நாகரீக மோகம் காரணமாக இளைஞர்கள் அதிக விலைகொடுத்து டின்களில் அடைக்கப்பட்ட பியரை அருந்துகின்றனர்.

ஆண், பெண் இளைய தலைமுறையினர் என அனைவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வருவது எமது சமூகத்தின் குடும்பக் கட்டமைப்பை சீரழித்து சமூக வளர்ச்சியை வீழ்ச்சியடையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. மலையகப் பெண்கள் அதிகமாக வெற்றிலையோடு சேர்த்து புகையிலை உண்ணும் பழக்கத்தை வழக்கமாக்கி கொண்டுள்ளனர். மலையகத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களில் அதிகமானோர் வாய்ப்புற்று நோய்க்கே இலக்காகி வருகின்றனர்.

புற்றுநோயால் தாக்கப்பட்டு மரணமடையும் பெண்களின் எண்ணிக்கை தோட்டப்பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக குறுகிய கால இடைவெளிக்குள் அதிகரித்து வருகின்றது. கடந்த 20 வருட காலப்பகுதியில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை இலக்கு வைத்து அதிகளவு மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டதன் பின்னணியில் யார் இருக்கின்றார்கள், இது தமிழ் பேசும் மக்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்த நீண்டகால நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ள சதி முயற்சியா என்பவை குறித்து தெளிவான ஆய்வுகள் மலையகத் தன்னார்வ அமைப்புகளால் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

மதுவிற்கு புறம்பாக கஞ்சா, ஹெரோயின் உட்பட பல புதிய போதைப் பொருட்களும் புழக்கத்தில் உள்ளன. தமது தோட்டங்களுக்கு அண்மையில் மதுபானச் சாலைகளை மூடிவிடுமாறு தோட்ட மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்கள் அதிகளவில் வெற்றி பெறவில்லை. இப்போராட்டங்களில் சிலவேளை இனமுறுகல் ஏற்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் ஜீன் மாதம் 26ம் திகதியை சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினமாக உலக நாடுகள் அனுஷ்டித்து வருகின்றன. இக் காலப்பகுதியில் போதைப்பொருள் பாவனையின் தீமை குறித்து அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு



விழிப்புணர்வு செயற்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்தாலும் இது போதைப்பொருள் பாவனையாளர்களின் மன நிலையில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது கேள்விக் குறியே. மலையகத்தில், குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், ஒரு நகருக்கு பல மதுபானச் சாலைகள் இருக்கின்றன. தெருவிற்கு தெரு மதுபானச் சாலைகள் உள்ளன. காலை நேரம் இரவு நேரம் என பாராமல் மக்கள் குவியல் குவியலாக எந் நேரமும் மதுபானச் சாலைகளில் குவிந்து கிடப்பதையும் காண்கின்றோம். காலையிலிருந்து கடுமையாக உழைத்தவர்கள் உடல் வலிக்காகவும் குளிருக்கு இதமாகவும் மதுபானம் அருந்துவர் என்று சிலர் இதனை நியாயப்படுத்துவதைக் காண்கின்றோம்.

போதைப்பொருள் விற்பனையில் சில அரசியல் பின்னணிகள் இருப்பதாகக் கூறப்பட்டாலும் அதனை தடுக்கும் முயற்சிகள் கைகூடவில்லை என்றே கூறவேண்டும். அதிலும் மலையகப் பாடசாலை மாணவர்களை குறிவைத்து இந்த போதைப்பொருட்கள் வியாபாரம் அதிகளவில் நடைபெற்று வருகின்றன. இன்று பாடசாலைக்கு அருகில் போதைப்பொருளை விற்பனை செய்யும் நாசகார வேலைகளில் பல சமூக விரோதிகள் ஈடுபட்டு வருகின்றனர். கஞ்சா, குடு, ஹெரோயினை தாண்டி ஐஸ் எனப்படுகின்ற போதைப்பொருட்களின் பாவனை சமீப காலமாக அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையால் புற்றுநோய்க்கு ஆளாகி உயிரை இழக்கும் அபாயம் ஏற்பட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.



போதைப்பொருட்களின் பாவனையால் இன்று இளம் வயது திருமணங்களும் அதிகரித்து வருகின்றன. சில மாணவர்களை ஆசிரியர்கள் கட்டுப்படுத்தும் போது பெற்றோர்களும் உண்மை நிலையறியாது எதிர்ப்பை வெளியிடுகின்றனர். அதே போல சில ஆசிரியர்களும் இந்த போதைப் பழக்கத்திற்கு அடிமையானதாகத் தெரிகின்றது. இதற்கான முகவர்களும் தனியானதொரு வலையமைப்பும் இயங்குவதாக அறிய முடிகிறது. சில இடங்களில் இதனை தடுக்க வேண்டிய பாதுகாப்பு அதிகாரிகள் கூட இலஞ்சம் பெற்றுக்கொண்டு கண்காணிப்பதில்லை; மாறாக போதை வியாபாரத்திற்கு உதவுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன. எது எப்படியோ போதைப்பொருள் பாவனையால் உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பல பிரச்சினைகள் வருகின்றன. இதனால் மாணவச் சமூகம் அழிவதோடு திறமையான எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

மலையகத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக பல பிரச்சனைகள் உள்ள நிலையில் தற்போது போதைப்பொருள் மிகப் பெரிய பிரச்சனையாக சமூகத்தில் உருவாகி உள்ளமை வேதனையளிப்பதாக உள்ளது. இவை எல்லாம் மிகப்பெரிய வலையமைப்புகளுடனும் முகவர்களுடனும் தொடர்புபட்டிருப்பதால் அதனை உடனடியாக தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாதுகாக்க முடியும். ஆசிரியர்களினால் தங்கள் பிள்ளைகளை பாதுகாக்க முடியும். அவர்களது நட்பு வட்டாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி போதை உலகிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுத்தால் மட்டுமே நாளைய சமூகத்தை காப்பாற்ற முடியும். மலையகப் பகுதிகளில் அதிகரித்துள்ள மதுபானச் சாலைகளை குறைக்கவும், புதிய மதுபானச் சாலைகளை திறக்காமல் தடுக்கவும் சட்டவிரோத மது உற்பத்தியை தடுக்கவும் கீழ் மட்டத்திலிருந்து பல வேலைத் திட்டங்கள மலையகத்தில் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும்.

அதற்கான பொறுப்பு மலையக மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமன்றி சமூகத்தின் மீது அக்கறை கொண்ட அனைவருக்கும் உண்டு. அப்போதுதான் மாணவர்களை மட்டுமன்றி மலையகத்தின் சகல தரப்பினரையும் காப்பாற்றி மதுப்பாவனையை இல்லாதொழித்து மதுவற்ற சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

பகுதி 2

மலையகப் பகுதிகளில் வாழ்க்கைக்காக பல போராட்டங்கள் இடம்பெறுகின்றன. ஆனால் அதற்கும் அப்பாற்பட்டு, மலையகப் பெண்களின் நாளாந்த வாழ்க்கைப் போராட்டம் சவால்கள் நிறைந்தவையாக உள்ளது. தேசிய, சர்வதேச ரீதியில் அரசியல் அரங்கில் பெண்களின் அங்கத்துவம் பற்றி பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் வாழும் மலையகப் பெண்களைப் பற்றி பேச வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகின்றது. மலையகப் பெண்களுக்கான சவால்கள் அவர்களின் சிறுவயது முதலே தொடங்கிவிடுகிறது.

பெண் பிள்ளைகளுக்கு இளமையில் ஏற்படும் போசணைக் குறைபாடானது அவர்களின் வாழ்நாள் முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. பெரும்பாலும் கோதுமை ரொட்டியும் அரிசிச் சோறுமே மலையக மக்களின் பிரதான உணவாகும். நிறையுணவில் காணப்படும் சத்துக்கள் இவ் உணவுகளில் மட்டும் கிடைத்துவிடுவதில்லை. பூப்பெய்தும் காலத்தில் கிடைக்க வேண்டிய முறையான போசணையும் பெண் பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, திரிபோசா தவிர்ந்த, நாளொன்றுக்கு உட்கொள்ளும் வேளை உணவுகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. தற்காலத்தில் திரிபோசா விநியோகமும் கிரமமாக நடைபெறுவதில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. நாளொன்றிற்கு கிடைக்கும் போசணையின் அளவு குறைவடைகிறது. போசணை மட்டம் தொடர்பான தெளிவு மலையகத்தில் இல்லை. கர்ப்பக்கால போசணைக் குறைபாடானது குறை நிறையுடைய குழந்தைகள் பிறக்கக் காரணமாகின்றன. போக்குவரத்து மற்றும் வைத்திய சேவைக் குறைபாடுகள் தாய் - சேய் மரண வீதத்திலும் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றன.

கர்ப்பிணித் தாய்மார்கள் மகப்பேற்று காலத்திலும் பிரசவத்தின் பின்னரும் தேவையான மருத்துவ வசதிகளைப் பெறுவதில் சிக்கல்களை எதிர் கொள்கின்றனர். தூரப் பிரதேச வைத்திய சாலையை நாடிச்செல்ல வேண்டிய நிலை உள்ளதாலும் அதிக பிரதேசங்களில் 'நோயாளர் காவு வண்டிகளை' பெற்றுக் கொள்வது கடினமாக உள்ளதாலும் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தோட்டத்திலுள்ள லொறிகளில் பிரசவத்தின் போதும் அவசர தேவைகளின் போதும் நோயாளிகள் கொண்டு செல்லப்படுவது இன்றளவும் மாறாமலேயே இருக்கின்றது. இக்காரணிகள் தாய் - சேய் நலன்களிலும் பாரிய ஆபத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

தோட்டப் பகுதிகளில் வேலை செய்யும் பெண்களுக்கு வேலை நேரங்களில் பயன்படுத்தக் கூடிய மலசலகூட வசதிகள் இல்லை. மேலும் மாதவிடாய் காலத்தில் பெரிதும் உடல், உள ரீதியான சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை உள்ளது. ஒப்பீட்டளவில் மாதவிடாய் தொடர்பான விழிப்புணர்வு மலையக பெண்களிடம் குறைவாகவே உள்ளது. மாதவிடாய் காலத்தில் பயன்படுத்தக்கூடிய 'துவாய்கள்' அங்கு ஓர் ஆடம்பரப் பொருளேயாகும். அவர்கள் பெரும்பாலும் பழைய துணிகளையே பயன்படுத்துகின்றனர். தனிநபர் சுகாதாரம் தொடர்பாக சற்றும் சிந்திக்காது அநாவசியமானதொரு செலவாகவே அதை அவர்கள் கருதுகிறார்கள். ஏனென்றால் மலையகப் பெண்கள் தமது வருமானத்தில் 3.5 வீதம் மாதமொன்றிற்கு 'துவாய்'க்காக செலவிட வேண்டியுள்ளது. அவர்களின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் இது ஓர் ஆடம்பரச் செலவாகும். பெண்கள் மாதவிடாய் மற்றும் மகப்பேற்று காலங்களில் சுகாதாரப் பழக்க வழக்கங்களை முறையாகப் பின்பற்றாததால் இலங்கையில் இரண்டாவதாக பெண்களை அதிகம் பாதிக்கும் கர்ப்பவாய் புற்றுநோய்க்கும் ஆளாக வேண்டியுள்ளது. அதோடு சராசரியாக ஒரு பெண் தோட்ட தொழிலாளி மாதத்தில் ஒரு முறையாவது நோயால் பீடிக்கப்படுகின்றார்.

வருமானமின்மை காரணமாக மலையகப் பெண்கள் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. குடும்பத்தைப் பிரிந்து பணத் தேவைக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் அவர்கள் அடையும் வேதனைகளோ ஏராளம். பாலியல் மற்றும் உடல், உள ரீதியாக அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் என்றுமே மாறாத வலிகள். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது அவர்கள் மீது அதிகாரத்தை கட்டவிழ்த்து விட்டு அவர்களது துன்பத்தில்

ஒருவித பெருமிதம் அடையும் கொடூர மனோபாவம் உள்ளவர்களும் இவ்வுலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆசியாவிற்கான தந்திரோபாய பகுப்பாய்வு அமைப்பான ‘வெரைட் ரிசேர்’ ஆல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி பணிப்பெண்கள் அபாயகரமான மோசமான சூழ்நிலையில் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்படல், கல்வி கற்பதற்கானதும், சுகாதார வசதிகளை பெறுவதற்குமான உரிமைகள் நிராகரிக்கப்படல், வன்முறைகளுக்குள்ளாகுதல் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் தங்கவைக்கப்படல், சமூக சேவைகள் பெறுவது வரையறுக்கப்படல், சுதந்திரமான நடமாட்டத்திற்கான தடை, ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட ஊதியம் வழங்கப்படாமை, தொழில் உடன்படிக்கை தொடர்பான மீறல், சொந்த நாட்டிலுள்ளவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான உரிமை மறுக்கப்படல், பாரபட்சம், தொழில் உடன்படிக்கை முடிவுறும் முன்பே தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படல், ஆட்கடத்தல், பாலியல் துஷ்பிரயோகம், விபசாரத்தில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றமை போன்ற மனித உரிமை மீறல்களை மலையகப் பெண்கள் எதிர்கொள்கின்றனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுகளின் பிரகாரம் 2021ம் ஆண்டில் வெளிநாடுகளில் பணியாற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் தெடர்பான தொழில் உடன்படிக்கை மீறல்கள் குறித்து 175 முறைப்பாடுகளும் தொழிலாளர்கள் காணாமல் போனமை குறித்து 51 முறைப்பாடுகளும் தாக்குதல் குறித்து 170 முறைப்பாடுகளும் தொடர்பாடல் வசதிக் குறைவு குறித்து 170 முறைப்பாடுகளும் இணக்கம் காணப்பட்ட ஊதியத்தை வழங்கத் தவறியமை குறித்து 11 முறைப்பாடுகளும் ஊதியம் வழங்கப்படாமை குறித்து 149 முறைப்பாடுகளும் உடன்படிக்கை பூர்த்தியடைந்த பின்னரும் தாய்நாட்டிற்கு திருப்பி அனுப்பாமை குறித்து 1044 முறைப்பாடுகளும் அளவுக்கு அதிகமான வேலைகள் குறித்து 32 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அதோடு 150 இற்கும் மேற்பட்டவர்கள் இயற்கையாகவோ அன்றி



Image source - www.namathumalayagam.com

வேறு எதாவது ஒரு காரணத்திற்காகவோ உயிரிழந்துள்ளனர். பிறிதொருவரின் ஆதிக்கத்திற்கும் அடக்குமுறைக்கும் தனது சொல், செயல் மற்றும் சிந்தனை என்பன கட்டுப்படாது சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே உலகில் மனிதனாக பிறந்த ஒவ்வொருவரதும் அடிமனதின் ஆழத்தில் நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கும் இலட்சிய கனவாக உள்ளது. எனவே அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதில் முக்கிய பங்கு வகிக்கும் மலையகப் பணிப் பெண்களது தனிப்பட்ட மற்றும் பொருளாதார நலன்களையும் பாதுகாப்பையும் சட்ட ரீதியில் உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும். பெண் பிள்ளைகளும் கல்வியை இடைவிட்டு நகர்ப்பகுதிகளுக்கு வேலைக்காகச் செல்வதும் பின்னர் தமது சுய பாதுகாப்பைக்கூட உறுதி செய்ய முடியாமல் முடிவு எடுப்பதில் பக்குவம் இல்லாமல் இறுதியில் தற்கொலை செய்து கொள்ளும் நிலை இன்னும் தொடருகின்றது. மிகச்சிறிய அமைப்பான குடும்பத்திற்குள்ளும் பெண்கள் நிம்மதியாக வாழ்வது கேள்விக் குறியாகவே உள்ளது.

மலையக ஆண்களின் மதுப் பாவனையானது இறுதியில் வீட்டு வன்முறையில் வந்து முடிகிறது. அதில் பாதிக்கப்படுவது பெண்கள்தான். வறுமைக்கு மத்தியில் குடும்பத்தைக் கொண்டு செல்ல வேண்டிய தேவையால் பெண்கள் வீட்டு வன்முறைக்கு எதிராக வாய் திறப்பதே இல்லை. மீறி பெண்கள் வாய் திறந்தாலும் பாதிக்கப்பட்டவரை நோக்கியே விரல்கள்

நீளுகின்றன.

பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதாரம், மருத்துவம் போன்ற அத்தியாவசியமான காரணிகளில் ஏற்படும் குறைபாடானது பெண்களின் வாழ்க்கையில் பாரிய விளைவுகளை ஏற்படுத்திவிடுகிறது. உளவியல் ரீதியான மற்றும் கலாசார ரீதியான மாற்றத்தை குடும்ப வன்முறை ஏற்படுத்திவிடுகின்றது. இவ்விளைவுகள் ஒரு பூரணமான சமூகத்தின் போக்கில் தாக்கத்தைச் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. வெறுமனே உழைக்கும் இயந்திரங்கள் அல்ல; பெண்கள் உணர்வுகளாலும் உரிமைகளாலும் என்றுமே பூரணத்துவத்தை அடைய வேண்டியவர்கள். கல்வியிலும் அரசியலிலும் பெண்கள் பிரகாசிக்க வேண்டியது எவ்வளவு முக்கியமோ அதுபோன்றே அடிப்படை உடல், உடை, சுகாதாரத் தேவைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டியதும் முக்கியமானதாகும். குடும்பம் என்ற ரீதியில் ஆணும் அவனது சமூகமும் பொருளாதார ரீதியில் நிர்வாகமும் தன்னை சுற்றியுள்ள சகல பெண்களினதும் தேவைகள் பற்றி அக்கறை காட்ட வேண்டியது அவசியம். சமூகமும் பிரதேசமும் அமைவிடமும் மாறுபடலாம். ஆனால் சகல பெண்களுக்கும் தேவை என்பது சமமானதே. எங்கு அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றதோ அங்குதான் எதிர்க்காலம் பற்றிய சிந்தனையும் மற்றைய சமூகங்களோடு போட்டி போடக் கூடிய வல்லமையும் பிறக்கிறது.

மலையக மக்களுக்கு அடிப்படைச் சுகாதார வசதிகள் கூட முறையாக வழங்கப்படவில்லை. நாட்டில் பிற சமூகங்கள் அனுபவிக்கும் அடிப்படை சுகாதார வசதிகள், பொதுச் சுகாதார வாய்ப்புக்கள் கூட தோட்ட மக்களுக்கு கிடைப்பதில்லை. பல்வேறு சிக்கல்கள் தடைகளே இதற்குக் காரணம். மலையக மக்கள் தமது சகல தேவைகளுக்கும் தோட்ட நிர்வாகங்களை நம்பி இருக்கின்றார்கள். தோட்ட முகாமைத்துவத்தின் கீழிருந்து முற்றாக விடுபட்டு தேசிய நீரோட்டத்தில் கலக்கும் சந்தர்ப்பம் இன்னும் வந்தபாடில்லை. பெருந்தோட்டத் துறையைச் சார்ந்த 50 மருத்துவமனைகள் காணப்படுகின்றன. இவற்றுள் 27 மருத்துவமனைகள் அரசுப் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. மொத்தமாக 179 பிரசவ விடுதிகளும் 266 மருந்தகங்களும் இங்கு உள்ளன. ஆனால் தேவையான அளவு மருத்துவர்கள் இல்லை.

இன்று மலையகத்தில் இரத்தச்சோகை, மூளைக்காய்ச்சல், கர்ப்பிணி மரணம், சிசு மரணம் போன்றன அதிகரித்துச் செல்லும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. நாட்டில் ஏனைய பகுதிகளை விட மந்தபோஷணயில் அதிக பாதிப்பினை அடையும் மாவட்டமாக நுவரெலியாவே காணப்படுகின்றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையின்படி நுவரெலியா மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட ஒட்டுமொத்த குழந்தைகளில் 40 வீதமானவை வளர்ச்சியின்மை பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளன. 25.3 வீத குழந்தைகள் எடைகுறையுடனும் 10.5 வீத குழந்தைகள் உயரத்திற்கேற்ப நிறையின்றியும் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நுவரெலியா மாவட்டத்தில் மட்டுமின்றி முழு மலையகத்தையும் சத்துக் குறைபாடு ஆக்கிரமித்துள்ளதை அறியமுடிகின்றது. குறைந்த ஆயுட்காலம் கொண்ட ஒரு சமூகமாக மலையகச் சமூகம் மாறி வருகின்றது.

இங்கு சத்தான உணவுக்கான அவசியம் பற்றிய விழிப்புணர்வு கிடையாது. தோட்ட மக்களுக்கான சுகாதார சேவை வழங்கும் நிகழ்ச்சி நிரல் தேசிய சுகாதார நெறிமுறைகளோடு இணைந்ததாக இல்லை. பாதுகாப்பு, சுத்தமான குடிநீர் வசதிகள், தனித்தனி வீட்டு வசதிகள் இங்கு அவசியத் தேவைகளாகவுள்ளன. தேர்ச்சி பெற்ற மருத்துவர் சேவை வழங்கப்படுவது அவசியம். இத்துடன் கடின உழைப்பின் காரணமாக தடிமன், இருமல் தோள்பட்டை வலி, முதுகெலும்பு பாதிப்பு, இரத்த அழுத்தம், இரும்புச் சத்து குறைபாடு, இளைப்பு போன்ற பாதிப்புகளுக்கும் தாய்மார் ஆளாகின்றனர். இதனால் தாய்ப்பாலூட்டல் இங்கு முழுமையாக நடைபெறுவதில்லை.

இன்றும்கூட தோட்டங்களில் பலர் கழிவறை வசதிகள் இன்றிக் கஷ்டப்படுகின்றனர். வீட்டு முற்றத்தில் இருக்கும் வடிகான்கள் உடைந்து காணப்படுகின்றன. போதாக்குறைக்கு லயங்களைச் சுற்றி தேயிலை மலைகள்

காடுகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. சுத்தமான காற்றோ குடிநீரோ கிடையாது. நெருக்கமான லயக் காம்பிராக்களையொட்டி முன்பக்கமாகவோ பின்பக்கமாகவோ அதனைப் பெருப்பித்து கட்டுவதும் சமையல் போன்ற தேவைகளுக்காக குடிசைக் காம்பிராக்களை அமைப்பதும் நடைபெறுவதால் மேலும் நெருக்கடி அதிகரிக்கின்றது. சுகாதாரத்திற்கு பங்கம் ஏற்படுகின்றது.

ஆய்வொன்றின்படி பெருந்தோட்ட மக்கள் வாழும் லயன்கள் மனித வாழ்வுக்கு ஏற்புடையதல்ல என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. மனிதர்களோடு ஆடு, மாடு, நாய், கோழி, பூனை போன்ற விலங்கினங்களும் வாழும் சூழலில் சுகாதார நலன்கள் கேள்விக் குறியாகின்றன. இம்மக்களின் சுகாதார நலனைக் கவனிக்க தகுதி வாய்ந்த சுகாதார அதிகாரிகளில்லை. தோட்ட நலன்புரி உத்தியோகத்தர் எனும் பதவியிலிருக்கும் ஆட்களும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட அனுபவசாலிகள் அல்ல. எனவே இவர்களால் முறையான சுகாதார சேவைகளை வழங்க முடியாது. பாதுகாப்பற்ற குடிநீர், கழிவுநீர்த்தேக்கம், இரசாயனப் பாவனை, முறையாக அகற்றப்படாத குப்பைக் கூழங்கள், ஒழுகி வழியும் கூரைகள் என்பன இங்கு சுகாதார நலன்களுக்கு சவால் விடுக்கும் சங்கதிகளாகும்.

இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணமாக இருப்பது பெருந்தோட்ட மக்கள் இன்றும் பிறரில் தங்கி வாழும் மனோபாவமாகும். அதனை நீட்சி செய்வது தோட்டக் கட்டமைப்பு முறைமையாகும். ஏனெனில் எதற்கெடுத்தாலும் அதை தோட்ட நிர்வாகம் செய்யட்டும் என்று வாழ்ந்து பழகிவிட்டனர். நகரத்தில் வாழ்வோரது சுகாதார சேவைகள் கிரமமாக நடைபெற பிரதேச சபைகள் பொறுப்பேற்கின்றன. வாழ்விட சூழல் இங்கு விரிவாக அமைவதால் சனநெருக்கடி ஏற்படுவதில்லை. இங்கு வாழும் மக்களது சுகாதார சேவைகள் யாவும் தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்படுகிறது. எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைக்கூடான வரப்பிரசாதங்களை தோட்ட மக்களும் பெறும் வாய்ப்பு ஏற்படவேண்டும். அதனைப் பெற இம் மக்கள் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. பல்வேறு காரணிகளால் பெருந்தோட்டங்கள் காடுகளாகி வருகின்றது. சிறுத்தைகளும் விஷ ஜந்துகளும் குளவிகளும் தொழிலாளர்களை அச்சுறுத்துவதோடு மரணத்தையும் ஏற்படுத்துகின்றன. இவைகளின் தொல்லைகளிலிருந்து மக்களை பாதுகாக்க தோட்ட நிர்வாகங்கள் அக்கறை காட்டுவதில்லை. தற்போதைய நிலையில் தோட்ட மக்களின் குடிநீர் வசதி, மலசலகூடம், குப்பை கூழங்கள் அகற்றல், பாதையமைத்தல், பாதை செப்பனிடல் போன்ற தேவைகளை தோட்ட நிர்வாகங்கள் செய்யப்போவதில்லை எனவே தமது தேவைகளை தாமே நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதொரு கட்டாயம் ஏற்பட்டு வருகின்றது. இதற்காக பிரதேச சபைகளின் சேவைகளைப் பெறவேண்டிய நிலை தோன்றியுள்ளது. உண்மையில் தோட்ட மக்களின் சுகாதார மேம்பாடு ஒரு நீண்ட கால வேலைத்திட்டமாகவே இருக்கப் போகின்றது.

**பெண் பிள்ளைகளுக்கு இளமையில் ஏற்படும் போசணைக் குறைபாடானது அவர்களின் வாழ்நாள் முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. பெரும்பாலும் கோதுமை ரொட்டியும் அரிசிச் சோறுமே மலையக மக்களின் பிரதான உணவாகும். நிறையுணவில் காணப்படும் சத்துக்கள் இவ் உணவுகளில் மட்டும் கிடைத்து விடுவதில்லை.**

குடியிருப்பு திட்டங்கள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன. அதுவரை மக்களினது சுகாதார சேவைகள் கவனிக்கப்பட வேண்டுமாயின் தேசிய ரீதியிலான சுகாதாரக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படுவது அவசியமானதொன்று. இதே நேரம் பிரதேச சபைகளுக்கூடான பயன்பாடுகள் பாரபட்சமின்றி பெருந்தோட்டப் பகுதிகளுக்கும் கிடைக்கும் வகையில் சகல தடைகளையும் தகர்த்தெறிய வேண்டிய அவசியம் உள்ளது.



Image source - www.tamilmirror.lk

இலங்கை அரசியலில் இனப் பாரபட்சமும் இன ஒடுக்கு முறைகளும் சுதந்தித்திற்கு முன்பிருந்து தோன்றி வளர்ந்தன என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளும் ஆவணங்களும் அதிகமாக உள்ளன. இன்றைய இனவாதத்தின் அடி ஆணிவேரைக் கண்டுபிடிப்பதென்பது சிக்கலான ஒன்றாகும். மலையக மக்களின் வரலாறு சுவடு தெரியாமல் தேய்ந்து போய்க் கொண்டிருப்பதன் காரணத்தைக் கூட சரியாக அடையாளம் காட்ட முடியாதுள்ளது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் அடர் காடுகளாக இருந்த இப்பிரதேசத்திற்கு கொண்டுவரப்பட்டு அடிமைக் கூட்டமாக குடியேற்றப்பட்டவர்கள் இன்று வரை சோற்றுக் கூலிகளாகவே ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தமது சமூக பலத்தையும் அரசியல் வாய்ப்பையும் இழந்து இந்நாட்டின் அரசியல் இயந்திரத்திலிருந்து அந்நியமாக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களின் அரசியல் பிரதிநிதித்துவமும் எதிர்காலப் பாதுகாப்பும் கேள்விக் குறியாக்கப்பட்டு வருகின்றன. தேசியக் கட்சிகளினால் கிடைக்கும் பாராளுமன்ற அமைச்சரவை அந்தஸ்தும் இந்தச் சமூகத்தை ஒருபோதும் பாதுகாக்கப் போவதில்லை. பல இன மக்களைக் கொண்ட தேசமான இலங்கை அனைவருக்கும் சமத்துவத்தையும் சமமான வாய்ப்பையும் உறுதிப்படுத்தி இனங்களின் தனித்துவங்களைப் பேணும் ஆட்சிமுறைமையை கொண்டிருக்கவில்லை என்பது கண்கூடு.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் கொண்டுவரப்படும் வரை இது இந்தியா - இலங்கை அரசினது பிரச்சினையாகப் பார்க்கப்பட்டது. அதாவது தோட்ட தொழிளாளர்கள் தொடர்பான அரசியல் பிரச்சனை அறுபதுகள் வரை இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இராச்சிய உறவுகள் தொடர்பான பிரச்சனையின் உப பிரச்சனையாகவே கருதபட்டது. அல்லது வெறுமனே கூலிக்காக கொண்டுவரப்பட்ட ஒரு சமூகத்தினது பிரச்சனையாகவே பார்க்கப்பட்டது. அதனால்தான் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சனையை பிரித்தானியக் குடியேற்றவாதம் இலங்கையில் தோற்றுவித்த இனப்பிரச்சனையாக வரலாற்றாய்வாளர்களும் சமூக விஞ்ஞானிகளும் நோக்குகின்றனர்.

குடியேற்றவாதத்தின் ஓர் விளைவாக இம்மக்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டாலும் 1900 ஆண்டுகளின் பின் படிப்படியாக இம் மக்களின் வாழ்க்கையில் ஒரு சில மாற்றங்கள் ஏற்ப்பட்டன. 1947ம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு இந்தியத் தமிழர்கள் சார்பாக பிரதிநிதிகள் தெரிவாகக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. இருப்பினும் அதற்குப் பிறகு இலங்கையின் முதலாவது பாராளுமன்றம்

கொண்டு வந்த இரண்டு பிரதான சட்டங்கள் இம் மக்களின் வாழ்க்கையை அடியோடு மாற்றியதோடல்லாமல் இம் மக்களை 30 வருடங்கள் இந்நாட்டின் அரசியலில் இருந்து அந்நியமாக்கின.

- **• 1948ம் ஆண்டு பிரஜாவுரிமை சட்டம்**
- **• 1949ம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தல் சட்டம்**

ஆகிய இரண்டுமே அச் சட்டங்கள்.

இந்தச் சட்டங்களின் பாரதூரம் அன்று அவ்வளவாகத் தெரியவில்லை. மலையக தமிழ் மக்கள் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேல் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டு அனுபவித்த மிக மோசமான அடக்கமுறைகளுக்கு இந்த சட்டங்களின் கொடூரத்தன்மை சான்று பகர்வதாக உள்ளது.

1948ம் ஆண்டு பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதன் விளைவாக 1977ம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 3 தசாப்தங்கள், 30 ஆண்டுகள், எமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாதொழிக்கப்பட்டது. அதன் பிறகு எமது மக்களினதும் தலைவர்களினதும் முழுச் சக்தியுமே பிரஜாவுரிமையை மீளப்பெறுவதிலேயே கழிந்தது. போராட்டங்கள் நடத்தப்பட்டாலும் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சனை - 2003ம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரஜா உரிமை சட்டத்தின் வரைக்கும் - பிரஜா உரிமை மட்டுமே சம்மந்தப்பட்ட பிரச்சனை என்றே பார்க்கப்பட்டதே ஒழிய, அம் மக்களின் தேசிய இன அடையாளத்தையும் தேசிய இன உரிமையையும் நிலைநாட்டுவதன் மூலம் இந்த நாட்டின் ஏனைய இனங்களுக்கு உள்ளது போல தேசிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில் பார்க்கப்படவில்லை. தேசியக் கட்சிகள், இந்த மக்களின் வாக்கு வங்கியை தமது ஆட்சியதிகாரத்திற்கும் இருப்பிற்கும் பயன்படுத்திக் கொள்ளவே பார்த்தது. இன்று குடியுரிமைப் பிரச்சனை சட்ட ரீதியாக தீர்க்கப்பட்ட போதும் இலங்கையின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகளுக்கு உரித்தற்றவர்களாகவே மலையக மக்கள் காணப்படுகின்றனர். பிரதேச சபைக்கும் மாகாண சபைக்கும் வாக்களித்தாலும் அதிலிருந்து அபிவிருத்திகளை பெறுவதில் சட்ட ரீதியான தடை என உரிமை மறுப்புக்கு உட்பட்டே மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தேசிய அரச நிருவாகத்தில் முழுமையாக இணைய முடியாத நிலையே உள்ளது. இலங்கையில் உள்ள ஏனைய இனக் குழுக்களையும் விட தனித்துவமான அரசியல் வரலாற்றைக் கொண்ட இனக்குழுவாக மலையக மக்கள் காணப்படுகின்றனர். இன்று அரசியல் ரீதியாக வஞ்சிக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டவர்களாகவும் மலையக மக்களே உள்ளனர். 19ம் நூற்றாண்டின் ஏகாதிபத்திய வடிவமான காலனித்துவத்தினால் இலங்கைக்கு தொழிலாளர்களாக குடியேறி தோட்ட இராச்சியத்திற்குள் தீவிர உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகி காலனித்துவவாதிகள் வழங்கிய சொற்ப அரசியல் உரிமையைப் பெற்று வாழ ஆரம்பித்த நிலையில், சிவில் அரசியல் உரிமைகள் இனத்துவ நோக்குடன் சுதேச ஆட்சியாளர்களினால் பறிக்கப்பட்டது. குடியுரிமை மீட்பு போராட்டம், தொழிலாளர் வர்க்க ஒடுக்குதலுடன் பேரினவாத ஒடுக்குமுறைகளின் தொடர்ச்சி, இலங்கைத் தமிழரின் இன விடுதலை போராட்ட முன்னெடுப்புகள் ஆகியவற்றின் விளைவாகவும் மலையக மரபுரீதியான தொழிற்சங்க அரசியலின் புறநடையாகவும் மலையகத் 'தேசியம்' என்ற கருத்துருவாக்கத்தின் செயல் வடிவம் முனைப்புப் பெற்றது. இதனை கருத்திற்கொண்டு அவற்றில் இழையோடும் அகக்காரணியான மலையக மைய நீரோட்ட (தொழிற்சங்கவாதம், பாராளுமன்றவாதம்) அரசியல் பயணமும் அதன் பங்களிப்பும் தோல்வியும் பற்றி உரையாடி மலையக அரசியலை அணுகுவதே அதன் முழுமையான பிம்பத்தை தரும். ஏனெனில் இதுவரை பேசப்பட்டுள்ள மலையக மக்களின் அரசியல் செல்செறி முழுமை பெற்ற ஒன்று அல்ல. இலங்கைச் சமூகம் பல்லின, பல் மத, பல் கலாச்சாரப் பண்புகளைக் கொண்ட ஒரு சமூகமாக இருக்கின்றமையால் ஆட்சியில் சகலரும் பங்குபற்ற வேண்டிய தேவை உள்ளது. சகல கருத்துகளும் உள்வாங்கப்பட்டு பன்முகத்தன்மை, ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமைகளை நிலைநாட்டல் என்பவற்று முக்கியத்துவம் கொடுக்கப்படல் அவசியம். இந்நிலை மலையகத்திற்கும் பொருந்தும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின் இலங்கையிலிருந்து அனைத்து சமூகத் தலைவர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும்

**மலையக மக்கள் எனும் சொற்பதம் வரலாற்றின் ஓர் உருவாக்கம். இந்த நாட்டின் முதலாளித்துவ பொருளாதாரத்தின் தோற்றத்துடன் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதாரத்தின் விளைவு. இன்று இந்தியத் தமிழன் என்பதை விட மலையகத் தமிழன் என்றழைப்பது சர்வ சாதாரணமான வழக்காகி விட்டது.**

இலங்கை நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணம் எழுந்த பிறகு இந்த நாட்டை கட்டியெழுப்பும் பணியில் மலையகத் தமிழ் மக்களும் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முதல் பாராளுமன்றத்திலேயே கிட்டத்தட்ட 6 இலட்சம் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை 20ம் நூற்றாண்டில் நடந்த மாபெரும் உரிமை மீறலாகும்.

1948ம் ஆண்டு டிசம்பர் 16ம் திகதி சர்வதேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமை சாசனத்தின் 15 ஆவது உறுப்புரை :

- தேசிய இனத்தவராக இருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
- எவரேனும் ஒருவரின் தேசிய இனத்துவம் மனப்போக்கனான வகையில் பறிக்கப்படவோ தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுவதோ ஆகாது

என வலியுறுத்துகின்றது. சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் பிரகடனப்படுத்தப்பட்ட அதே ஆண்டில் எமது பிரஜா உரிமையும் பறிக்கப்பட்டது. இதனைவிட உரிமை மீறல் இருக்க முடியுமோ?

மலையக தமிழர்களின் பிரஜா உரிமை பறிப்பு சமகால அரசியலில் மலையக் தமிழ் மக்கள் மிகப் பின்தங்கிய நிலைக்கு ஓர் காரணமாக உள்ளது. சுதந்திர இலங்கையின் அரசக் கொள்கைகளில் தோட்டத் தொழிலாளர்கள் அல்லது மலையக தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எந்த விடயங்களிலும் மலையக தமிழ் மக்களுக்கு உரிய பங்களிப்பு வழங்கப்படுவதில்லை. காணி வழங்குவதில் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். வரவு - செலவு திட்டங்கள், நிதி ஒதுக்கல், அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல், அரச நிர்வாக அமைப்புக்களை உருவாக்கல், மாவட்டச் செயலகங்கள் - பிரதேச செயலகங்கள் - கிராம சேவகர் பிரிவு என்பவற்றை உருவாக்கல், கல்விக் கொள்கை போன்ற இவ்விதம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை வகுக்கும் விடயங்களில், எக்கட்சி ஆட்சியிலிருந்தாலும் அதில் மலையக தமிழ் மக்கள் இனவாதக் கண்ணோட்டத்தில் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். மலையகத் தமிழ் மக்களில் 80 வீதமானோர் தொழிலாளர்களாக இருந்தபடியால், இம் மக்களின் பிரச்சனைகளை தொழிலாளர்களின் பிரச்சனையாக, தொழிற்சங்கப் போராட்டத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தி விட்டனர். அவர்கள் ஓர் தேசிய இனம் என்ற அடிப்படையில் ஏனைய சமூகங்களை விட மோசமான அடக்குமுறைக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதைப் பார்க்க மறந்து விட்டனர். அதன் பிரதிபலன் சமகால அரசியலில் சிறுபான்மைச் சமூகங்களில், இன்றுமொரு சிறுபான்மைச் சமூகமாகவே இருக்க வேண்டிய சூழல் மலையக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் ஓர் தேசியம் என்பதில் அங்கு செயற்பட்ட அரசியல் தலைமைகளிடையே கருத்து வேறுபாடு இல்லை. அதே போல தென்கிழக்கு மாகாணத்தின் கோரிக்கை முஸ்லிம் மக்களால் முன்னெடுக்கப்படுகிறது. 1950 களில் ஏற்பட்ட இந்தக் கோரிக்கை படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றைய வடிவத்தைப் பெற்று மற்ற சமூகங்களுள் ஓரளவேனும் சமகால அரசியலில் அவர்கள் தகுதி பெற்றுள்ளனர். ஆனால் மலையகத் தமீழ் மக்களையும் மலையகத் தலைவர்களையும் பொறுத்தவரையீல் சிறு சிறு விவகாரங்களில் கூட கருத்தொற்றுமை கிடையாது. பெற்றுக் கொள்வதாகக் கூறும் அற்ப சொற்ப விடயங்களுக்குக் கூட போட்டி போட்டுக் கொண்டு உரிமை கோருகின்றனர். 2000 அடிக்கு மேற்பட்ட உயரத்திலுள்ள மத்திய



ஒப்பந்தம், ஐ.நா வர்த்தக ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் பின்பற்றப்படுகிறதா என்பது கேள்விகுறியே.

உலகில் செயற்பட்டுவரும் ஏறக்குறைய அனைத்து விவசாயத் துறைகளுமே தமது ஊழியர்களுக்கு நாளாந்த வேதனங்களை செலுத்தும் முறைகளை பின்பற்றிவருகின்றன. பெருந்தோட்ட விவசாயத்ததில் ஈடுபட்டுவரும் பெருந்தோட்டக் கம்பனிகளும் இதற்கு விதிவிலக்கன்று. இந்தக் கம்பனிகள் எங்கெங்கு உருவாக்கப்பட்டனவோ அங்கெல்லாம் ஊழியருக்கு அவை நாளாந்த வேதனங்களையே செலுத்தி வருவதோடு மலிவான ஊதியம் அவற்றின் விசேட பண்பாக உள்ளது. அதாவது தொழிலாளர்களுக்கு செலுத்தப்படும் வேதனங்கள் குறைந்த மட்டத்திலேயே பராமரிக்கப்படுவதோடு நெடுங்காலத்திற்கு அவை தேக்க நிலையிலும் வைக்கப்பட்டன. இலங்கையின் தேயிலைத் தோட்டத்திற்கும் இந்த நிலைமை பொருந்தும். 1980ம் ஆண்டு வரையிலும் வேதனங்கள் ஏனைய துறைகளின் தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்ட வேதனங்களிலும் பார்க்க குறைவாகவே இருந்தன. வேதனங்கள் இவ்வாறு குறைந்த மட்டத்திலும் நீண்ட கால தேக்க நிலையிலும் காணப்பட்டபோதும் பெருந்தோட்ட வேதனங்களும் தொழில் நிலைமைகளும் பெரிதும் ஒழுங்குபடுத்தப்பட்டவையாக இருந்து வந்துள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய அம்சமாகும்.

1. மலையகத் தோட்டங்கள் பெருமளவிலான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியமை
2. மலையக தோட்டங்களின் ஊழியச் சந்தைகள், தொழிலாளர் வேலை செய்யுமிடங்கள், ஊழியப்படைகள் என்பன பெரிதும் ஒழுங்குபடுத்தப்பட்டவையாக இருந்தமை

போன்றன காரணமாக பெருந்தோட்டத் துறையில் வேதனங்கள், தொழில் நிலைமைகள், தொழில் நிபந்தனைகள் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக காலத்திற்கு காலம் இலங்கையில் பல்வேறு சட்டங்கள்

மலைப்பகுதிகளில் காடாயிருந்த பூமியை வளம் கொழிக்கும் தேயிலை, இறப்பர் பயிரிடும் பெருந்தோட்டங்களாக மாற்றி இன்று வரையிலும் அந்நியச் செலாவணியில் பெரும் பகுதியை பெற்றுத் தரும் இம் மக்கள் இந்நாட்டின் முழுமையான பிரஜையாகளாகக் கணிக்கப்பட்டு தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படாமல் ஓரம் கட்டப்படுவது மனித நாகரீகத்திற்கே அவக்கேடான விடயமாகும். மலையக மக்கள் எனும் சொற்பதம் வரலாற்றின் ஓர் உருவாக்கம். இந்த நாட்டின் முதலாளித்துவ பொருளாதாரத்தின் தோற்றத்துடன் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதாரத்தின் விளைவு. இன்று இந்தியத் தமிழன் என்பதை விட மலையகத் தமிழன் என்றழைப்பது சர்வ சாதாரணமான வழக்காகி விட்டது. தோட்டத் தொழிலுக்காக இங்கு வந்து மலையகப் பகுதிகளில் 2 நூற்றாண்டுகளுக்கு மேல் ஒன்றாக வாழ்வதன் பயனாக ஏற்பட்ட உணர்வே மலையகத் தமிழர் என்ற உணர்வாகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் ஆகக் குறைந்தமட்ட ஊழியத்தை பெறுவது தோட்டத் தொழிலாளர்களே. ஒப்பீட்டு ரீதியில் ஏனைய துறைகளை விட முறைசாரா தொழிலாளர் பெறும் வேதனத்தைவிட குறைந்த நாளாந்த ஊழியத்தைப் பெறுகின்றனர். இதனால் அவர்களின் வாழ்வாதார உரிமை கேள்விக் குறியாகின்றது. மலையகத் தோட்ட தொழிலாளர்களுக்கு கூட்டு ஒப்பந்த அடிப்படையில் நாட் சம்பளம் நிர்ணயிக்கப்படுகின்றது. இந்தச் சம்பள



Image source - tamil.adaderana.lk

இயற்றப்பட்டன. அவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களுள் பல இன்றும் எமது சட்ட நூல்களில் இடம் பிடித்துள்ளன. ஆனாலுங்கூட தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மை பயப்பதற்கென உருவாக்கப்பட்ட இச்சட்டங்கள் அண்மைக் காலம் வரை, அந்நியராகவும் வந்தேறு குடிகளாகவும் கருதப்பட்டு வந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்த சேவைகளையேனும் வழங்கவேண்டிய பொறுப்பிலிருந்து அரசாங்கத்திற்கு விலக்கு அளித்தன என்பதை இங்கு குறிப்பிடாதிருக்க முடியாது. அரசாங்கச் சேவைகளினூடாக தோட்டத் தொழிலாளர்கள் அரசாங்கத்திடமிருந்து ஆகக்குறைந்த நன்மைகளையாவது பெற்றுக் கொள்வதற்கு இச்சட்டங்கள் தடையாக இருந்தன எனக் கூறின் அது மிகையானது. 70ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் தோட்டங்கள் தேசியமயமாக்கப்படும் வரை அவை தனியார் கம்பனிகளுக்கே உரித்தானவையாக இருந்த நிலையில், 1941ம் ஆண்டு வேதனங்கள் சட்டத்தின் கீழ் வேதனசபைகள் உருவாக்கப்பட்டன. இந்த வேதனச் சபைகளில் அரசாங்கம், தொழில் வழங்குநர், தொழிற்சங்கங்கள் ஆகிய மூன்று பிரிவினர் பிரதிநிதித்துவம் வகித்தனர். இருப்பினும் தோட்டத் தொழிலாளரின் வேதனங்கள் வேதன சபைச் தீர்மானங்களுக்கு உட்பட்டதாக மாறியதால் பெருந்தோட்ட கம்பனிகள் தமது தொழிலாளர்களுக்கு வாழ்க்கை செலவுப்படியை செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின. ஏனைய துறைகளைச் சார்ந்த தொழிலாளரைப் போன்று தோட்டத் தொழிலாளருக்கும் செலவுப்படியை செலுத்துவது தொடர்பாக தோட்டத் தொழிற்சங்கங்களுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக 1996ம் ஆண்டு வேதன சபைக் கூட்டத்தில் வாழ்க்கை செலவுப்படியை செலுத்துவதனின்று தோட்ட கம்பனிகள் தம்மை முற்றாக விடுவித்துக் கொண்டன. இந்தப் படியை செலுத்துவது முற்றாக கைவிடப்பட்ட பின்னர் வாழ்க்கை செலவு அதிகரிப்பினின்றும் தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கான எவ்வித ஏற்பாடுகளும் இல்லாதொரு நிலைக்கு மலையக மக்கள் தள்ளப்பட்டனர். மேலும் தேயிலையின் விலையானது பூகோள மட்டத்தில் தங்கியிருக்கும் ஒன்றாகும். காலந்தோறும் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் காரணமாக தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் வேதனங்களை நிர்ணயிப்பதில் வேதன சபை செயலிழந்தது. அதேவேளை 1990ம் ஆண்டுகளின் பிற்பகுதி முதல் கம்பனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே காலத்திற்கு காலம் கைச்சாத்திடப்பட்டு வந்த கூட்டு ஒப்பந்தங்கள் வேதனங்களை நிர்ணயிப்பதற்கான பிரதான வழியாக மாறின. இருப்பினும் 2004ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட புதிய கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் ஆதாரத்தின்படி, வேலை வழங்கப்படும் நாட்களில், 90 இற்கு மேலான நாட்களில் வேலைக்குச் சமூகமளிப்போருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டன. இவ்வாறு காலத்திற்கு காலம் கூட்டு ஒப்பந்தங்களும் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றாலும் கூட, அதனை பற்றி மேலும் விரிவாக ஆராய்வதை விடுத்து மலையக மக்களின் வேதன நிலையினைப் பற்றி சற்று ஆராய்வது உசிதமானதாகும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் என்பது ஒவ்வொரு தனி மனிதருக்கும் உள்ள உரிமையாகும். ஆனால் துரதிஷ்டவசமாக அந்த உரிமை எல்லா மக்களையும் சென்றடைவதில்லை.

பகுதி 3

ஆளும் வர்க்கத்தினரால் அல்லது வசதியுள்ள வர்க்கத்தினரால் சாதாரண மக்கள் காலங்காலமாக சுரண்டப்படுவதும் அதற்கு எதிராக போராட்டங்கள் வெடிப்பதும் இயல்பே. உலகில் இதைப் போன்ற சுரண்டல்களுக்கு எதிராக பல போராட்டங்கள் மற்றும் புரட்சிகள் வெடித்திருக்கின்றன என்பது வரலாறு. இலங்கையில் பல்லின மக்கள் வாழ்ந்தாலும் இன்னும் அந்நியர்கள் போலவே நடத்தப்படுகின்ற ஒரு சமூகம் மலையகச் சமூகம். அவர்கள் இந்த நாட்டின் குடிகள் இல்லை என்று முன்னைய அரசுகளினால் நாடு கடத்தப்பட்ட துயர்மிகு வரலாறுகளை மறக்கமுடியாது.

உறவுகள் தாய்நாட்டிற்கு நாடு கடத்தப்பட்ட பின்னர் எஞ்சிய மக்கள் இந்த நாட்டில் வேர்பிடித்து துயரத்துடனே வாழத்தொடங்கினர். அரச நிர்வாகத்திற்கு பதிலாக தோட்டக் கம்பனிகளின் நிர்வாகத்திற்கு கீழேயே இன்றும் வாழ்கின்றனர். அங்கு தோட்ட நிர்வாகம்தான் அனைத்தும்; அரசாங்கம் கண்டுகொள்வதில்லை. அவர்களது வாக்குகளால் சுகபோகங்களை அனுபவிப்பவர்களும் இவர்களை கண்டுகொள்வதில்லை. அதனால்தான் மலையகம் தொடர்பான தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பான குரல்கள் தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இந்த நாட்டிற்கு வெள்ளைக்காரர்களின் அடிமைகளாக கூலி வேலைக்கு வந்த பரம்பரையினர் என்றாலும் இந்த நாட்டின் பொருளாதார முதுகெலும்பே இந்த மக்கள்தான். உலகளவில் தேயிலைக்கு என்று தனிக் கேள்வி உள்ளது. சீனா, இந்தியா தொட்டுப் பல நாடுகளிலும் நாட்டின் பொருளாதாரத் தூணாகத் தேயிலை உண்டு. இலங்கைக்கும் அப்படிதான். இந்த நாட்டின் பொருளாதாரத்தை தூக்கிச் சுமப்பதாக தேயிலைத்துறை இருக்கின்றது. சுதந்திரத்திற்கு பின்பு இருந்து இன்றுவரை இலங்கைக்கு வருமானம் ஈட்டித்தருகின்ற முக்கிய துறையிது. ஆனால் அந்தத் துறையின் வளர்ச்சிக்கு காரணமான மலையகத் தோட்ட தொழிலாளர்களுக்கு அரசோ அல்லது அதனை நிர்வகிக்கின்ற கம்பனிகளோ உரிய நடைமுறைகளைச் செய்வதில்லை.

இதனால்தான் இன்று பல தேயிலை தோட்டங்கள் காடுகளாக்கப்பட்டுள்ளன. குளவிகள் தொட்டு சிறுத்தைகள் வரை பல வனவிலங்குகளின் தாக்குதல்களுக்கு தோட்டத் தொழிலாளர்கள் இலக்காகிக் கொண்டிருக்கிறார்கள். 'கொரோனா' என்ற ஆட்கொல்லி உலகளவில் பரவி உயிர்களை காவிக்கொண்டிருந்த வேளையில் வேறு தொழில் செய்பவர்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். சில தளர்வுகளின் போது மட்டும் வேலைக்குச் சென்றனர். ஆனால் கொரோனாவையும் பொருட்படுத்தாது




Image source - www.wsws.org

தொடர்ந்து வேலைக்குச் சென்று நாட்டின் வருமானத்திற்காக உழைத்துக்கொண்டிருந்தது மலையகத் தோட்ட தொழிலாளர்கள் மட்டுமே. அவர்களை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை.

வாக்குகளை வாங்கும் அரசியல்வாதிகள் திடீர் பணக்காரர்களாகி உலகம் சுற்றி வருவதைக் காணலாம். ஆனால் மக்கள் அதே நிலையில்தான் மாற்றமின்றி இருக்கின்றனர். இவர்களின் நாட்சம்பளம் இவர்களது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு போதாமல் உள்ளது. உழைப்பதற்கு மிகக் குறுகிய அளவிலேயே ஊதியம் கிடைக்கின்றது என்ற குரல் காலங்காலமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னர் இந்தக் குரல் சற்றுப் பலமாக ஒலித்தது. விலைவாசி ஏற்றத்திற்கு இவர்களின் வருமானம் போதாது என்பதால் சம்பள உயர்வுகளை வேண்டி போராட்டம் நடைபெற்றது. ஆனால் அந்தப் போராட்டத்திற்கு தீர்வு கிடைக்க ஆறு வருடங்கள் போராட வேண்டியிருந்தது. அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலத்தில் 1000 ரூபாய் பெற்றுக்கொடுக்க எடுத்த முயற்சிகள் இறுதிவரை முற்றுப் பெறாமல் இருந்தது. அவர் எத்தனை முயற்சித்தும் இறுதியில் அவரது எதிர்பாராத மரணத்தோடு ஆயிரமும் மடிந்ததாகவே பலரும் நினைத்தனர். ஆனால் அவருக்குப் பிறகு அவரது மகன் ஜீவன் ஆயிரம் ரூபாவை தனது வாக்குறுதியாக அளித்தார். பல கட்ட போராட்டங்களின் பின்னர் அது கிடைத்ததில் மகிழ்ச்சி என்றாலும் அது காலம் தாழ்த்திக் கிடைத்தது என்பதே உண்மை. இந்நிலையில் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்பட்ட நாள் முதல் மேலதிகமாக கொழுந்து பறிக்குமாறு தோட்ட நிர்வாகம் நிபந்தனைகளை விதிப்பதாக மலையகம் முழுவதுமே மக்கள் வேதனை தெரிவித்து வருகின்றனர். மலையகத் தோட்ட தொழிளாலர்களுக்கு நியாயமான சம்பளம் பெற்றுத்தர வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்ட 'கூட்டு ஒப்பந்தம்' தொழிற்சங்கத்தினரதும் முதலாளிமார் சம்மேளத்தினதும் நலன்களை மாத்திரமே நிறைவேற்றியுள்ளது. இதற்காக அப்பாவி மக்களின் கடுமையான உழைப்பு தொடர்ந்து பொய்யான வாக்குறுதிகளால் சுரண்டப்பட்டுள்ளது. இன்றும் சுரண்டப்படுகிறது. தேசிய அரசாங்கம் தோற்றம் பெற மலையக மக்கள் பிரதான பங்கு வகித்தனர். ஆனால் இன்று அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் பின்வாங்குகிறது. மலையக மக்களுக்கு நன்மை விளைவிப்பதாக காட்டிக்கொண்டு அவர்களின் பொருளாதாரத்தைச் சிதைக்கும் வேலைகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நடைபெற்று வருகின்றன. அரசியல் தலைவர்களை நம்பி மக்கள் வாக்களித்தனர். ஆனால் மலையகத் தலைவர்கள் அரசுகளுடன் சமரசங்களை உருவாக்கிவிட்டு மக்களை கைவிட்டு விடுகின்றனர்.

மறுபுறம் பல தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு நாளும் வேலை கிடைப்பதில்லை. இரண்டு, மூன்று, நான்கு நாட்கள் என வேலைகளை வழங்குவதால் வேறு தொழில்களுக்கும் போக முடியாத நிலை. முன்னெல்லாம் 18 கிலோவுக்கு ஒரு நாள் சம்பளம் கொடுக்கப்பட்டது. இன்று ஒரு நாளைக்கு 26 கிலோ எடுத்தால்தான் சம்பளம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. காலை, பகல், மதியம் என மூன்று நேரமும் 2 கிலோ வீதம் கொமிசனும் எடுத்துக்கொள்கின்றனர். ஒருவர் எத்தனை கிலோ கொழுந்து எடுத்தாலும் அதில் 6 கிலோ கழிக்கப்படும். ஒரு நாளைக்கு 20 கிலோ எடுத்தாலும் அதில் 6 கிலோ கழிப்பட்டு 14 கிலோவாக மாறும். இது அவருக்கு அரைச் சம்பளத்தையே பெற்றுக்கொடுக்கும். 16 கிலோ எடுத்தால், அதிகமாக வரும் 2 கிலோவிற்கு 40 ரூபாய் 50 ரூபாய் எனக் கொடுப்பார்கள். முழுச் சம்பளத்தை அவர் பெற வேண்டுமாயின் மேலும் 6 கிலோ அதிகம் எடுக்க வேண்டும். ஆக குறைந்தது 20 கிலோவிற்கு ஒருநாள் சம்பளம் கொடுத்தால் அதனுடன் மேலதிகமாக கொமிசன் 6 கிலோ எடுக்க வேண்டி உள்ளது. இது எவ்வளவு பெரிய சுரண்டல். இதற்கு பல தோட்டங்களில் முன்களப் பணிப்புரியும் தோட்ட அதிகாரிகளும் உடந்தையாக இருக்கின்றனர் என்பது வேதனை. மலையக மக்கள் என்பவர்கள் ஆடு, மாடுகளாகவோ பொதி சுமக்கும் கழுதைகளாகவோ இருக்க முடியாது. அவர்கள் உணர்வுகளைக் கொண்ட உயிரென்று யாரும் உணர்வதில்லை. ஆயிரம் ரூபா கொடுத்துவிட்டு அதன் மூலம் எவ்வளவு உறிஞ்ச முடியுமோ அவ்வளவு உழைப்பை உறிஞ்சுவது எத்தனை பெரிய கொடுமை. அதுவும் கொழுந்து இருக்கும் காலத்தில் 20

கிலோ 30 கிலோவாக மாறலாம். அவ்வளவு பறிப்பவர்களும் உள்ளனர். ஆனால் மழையின்றி வெயில் மற்றும் பனிப் பொழிவுகள் நிறைந்த காலப்பகுதியிலும் அதே 30 கிலோ எடுக்க வேண்டும் என்று வலுக்கட்டாயமாகத் துன்புறுத்துவது எத்தனை கொடுமை. இதற்கு எதிராக சரியான குரல் கொடுக்கவும் யாருமில்லை. அப்படியே குரல் கொடுத்தால் அது ஒடுக்குமுறைகளால் அடக்கப்படுகிறது என்பதே உண்மை. தங்களது அரசியல் இலாபத்திற்காக சில அரசியல்வாதிகள் இதனை எதிர்த்து அறிக்கை விடவும் செய்கின்றனர். ஆனால் அவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் இதே நிலைதான் தொடர்கிறது. அட்டைக் கடியில் இரத்தம் கொடுத்து உழைப்பவர்களை அட்டையை விட அதிகமாக இன்று தோட்ட நிர்வாகங்கள் உறிஞ்சி எடுக்கின்றன என்பதே உண்மை. இந்நிலைக்கு காரணம் மலையக மக்கள் இன்னும் தங்கள் உரிமைகளைப் பற்றி அறியாமையே. உலகத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. பூகோளமயமாக்கம் (Globalizations) முற்றிலும் புதிய நிலையை உலகத்தில் தோற்றுவித்துள்ளது. எனவே வளர்ந்து வரும் தொடர்புகளையும் சிந்தனை மாற்றங்களையும் உணர்ந்து அதை மலையகத் தமிழ் சமுதாயம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மனிதன் ஓர் சமூகப்பிறவி என்கிறார் சிந்தனையாளர் அரிஸ்ரோட்டில். இதன் அர்த்தம் சமூகத்துடன் இணைந்து கூட்டமாகவும் தனியாகவும் வாழ்வதே ஆகும். மனிதன் சமூகமாக வாழும் போது தன் கூட்டடையாளத்தையும் கூட்டிருப்பையும் பேணிக் கொள்ள முடியும். அதன் வழி கூட்டுரிமைக்காக போராட முடியும். ஓர் சமூகம் அதன் அடையாளத்தின் பேரால் ஒடுக்கப்படுகின்ற போது அதற்கெதிரான கூட்டுச் செயற்பாடுகள் மூலம் தன் தனிப்பட்ட நலன்களையும் கூட்டு நலன்களையும் பேணிக்கொள்ள முடியும். கூட்டுரிமைகளை போராடிப் பெற்றுக் கொள்ள முடியும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட பொறுப்புக்கள் இருகின்ற அதேவேளை கூட்டுப்பொறுப்பும் இருக்க வேண்டும். இங்கு கூட்டுப் பொறுப்பென்பது சமூக நலனுக்கான பொறுப்பேயாகும். தன் சமூகத்தின் பொது நலனுக்காக உழைக்க வேண்டியது ஒவ்வொருவருக்கும் உள்ள தார்மீகக் கடமையாகும். இதை மலையக வாழ் சமூகத்தினர் நன்கு விளங்கிக் கொண்டால் ஒழிய அவர்களுக்கான விமோசனம் ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை. இலங்கையின் பொருளாதாரத்தில் நீண்ட காலமாக பெருந்தோட்டத்துறை முக்கிய பங்கினை அளித்து வருகின்றது. இலங்கையின் விவசாய நிலத்தில் 50 சதவீதத்திற்கும் மேலானவற்றில் பெருந்தோட்ட விவசாய நடவடிக்கைகளே செய்யப்படுகின்றன.

> **வாக்குகளை வாங்கும் அரசியல்வாதிகள் திடீர் பணக்காரர்களாகி உலகம் சுற்றி வருவதைக் காணலாம். ஆனால் மக்கள் அதே நிலையில்தான் மாற்றமின்றி இருக்கின்றனர். இவர்களின் நாட்சம்பளம் இவர்களது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு போதாமல் உள்ளது.**

பொருளாதாரத்தை பன்முகப்படுத்த எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள், பெருந்தோட்ட உற்பத்திகளின் விலை வீழ்ச்சி என்பனவற்றின் மத்தியிலும் கூட இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாயின் கணிசமான வீதத்தினை பெருந்தோட்டத்துறையே அளித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களினது வீட்டு வசதியானது நூற்றாண்டு காலமாக கவனிப்பாரற்றும் தரங்குறைந்தும் காணப்படுகின்றது. பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் தொழிலாளர் தங்குவதற்காக தற்காலிக குடிசைகளே அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் தேயிலைத் தோட்டம் சுபீட்சம் பெற்றதையடுத்து 1927ம் ஆண்டு முதல் 1945ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கட்டப்பட்ட 'லைன்' வீடுகளே இன்றும் காணப்படுகின்றன. 65 வருடங்களுக்கும் மேலாக லயன் அமைப்பு முறை காணப்படுகிறது. மலையகப் பகுதிகளில் பெரும்பாலான வீடுகள் ஏறத்தாழ 150 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டவையாகும். அத்துடன் மலையகப் பகுதிகளில் 50% ஓர் அறையினைக் கொண்ட வீடுகளாகும். 83.4% இருண்ட அறைகளைக் கொண்ட வீடுகள். இதனை விட மொத்த வீடுகளில் 89% லயன் வகையான வீடுகளாகும். தொழிலாளர்களின் வசிப்பிடங்கள் பெரும்பாலும் 180 சதுர அடி இடப்பரப்பிலேயே கட்டப்பட்டுள்ளன. எனவே மிகவும் பழைமையான சிறிய வசிப்பிடங்களில் ஓர் சராசரிக் குடும்பத்தில் 5 பேர் வாழக்கூடிய

துரதிஸ்ட நிலையே காணப்படுகிறது. தேசிய ரீதியில் சராசரியாக தனியொருவருக்கு சுமார் 100 சதுர அடி வாழ்விட வசதி காணப்படுகின்றது. ஆனால் தோட்டங்களில் வாழ்வோருக்கு 46 சதுர அடி வாழ்விட வசதியே காணப்படுகின்றது. மிகச்சிறிய வாழ்விடங்களே காணப்படுவதுடன் அவற்றில் ஏனைய வசதிகளும் மிகக்குறைவாகவே உள்ளன.

'வீடு' என்பது தனியே வெயிலிற்கும் மழைக்குமான ஓர் ஒதுக்கிடம் அல்ல. அது சமூக நிறுவனமும் கூட. அங்கேதான் சமூக நாகரீகத்தின் அஸ்திவாரம் இடப்படுகிறது. வீடு என்பது குறைந்தபட்ச தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். காற்றோட்டம், குடிநீர் வசதி, கழிவகற்றும் வசதிகள், சுகாதாரமான சமையல் வசதி என்பனவுடன் மின்சார வசதியும் தேவை. அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்போது பெரும்பாலான தோட்டப்புற லயன் வீடுகளின் கூரை தகரத்தினாலானது என்பதும் அவை 150 வருடங்களுக்கு மேல் பழைமையானது என்பதும் தெரியவந்துள்ளது. 150 வருடங்களுக்கு முன்பு வீடுகள் கட்டப்பட்ட பின்னர் கூரை மாற்றப்படாததால் மழைக்காலங்களில் முழு வீட்டிலும் மழைநீர் ஒழுகுவதால் குடியிருப்பாளர் பெரிதும் துன்புறுவதும் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய அடிப்படை வசதிகள் ஆடம்பரமானவையல்ல. சுகாதாரமான ஆரோக்கிய வாழ்விற்கு இவ் வசதிகள் அத்தியாவசியமானவை. குடிநீர் வசதிகள் திருப்திகரமானதாக இல்லை. 60 லயன்களுக்கு குழாய் நீர்வசதி இருப்பதாக கூறப்பட்டாலும், குழாய் மூலம் வரும் நீர் சுத்திகரிக்கப்பட்ட நீரல்ல என்பதும், கிரமமாக இதில் நீர் வருவதில்லை என்பதும் முக்கிய குறைபாடாகும். சில மலையகப் பிரதேசங்களில் கால்நடைகளின் பாவனைக்கு கூட உதவாத நீரினை மக்கள் பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

மலசலகூட வசதிகள் சில இடங்களில் காணப்பட்டாலும் கூட அவை பாதுகாப்பான முறையில் அமைக்கப்படாது பல குறைபாடுகளோடு உள்ளன. அத்துடன் ஏறத்தாழ 40% தோட்ட வசிப்பிடங்களுக்கு எவ்வித மலசலகூட வசதிகளும் இல்லை. சிறார்கள் கல்வியிற் பெரிதும் பின்தங்குவதற்கு பல காரணங்கள் பொறுப்பாக இருந்தாலும் மிகவும் தாழ்நிலையில் உள்ள வீட்டு வசதியும் முக்கியமானதொரு காரணி என்பதையும் நாம் மறக்கலாகாது. 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று ஒரே அறையில் வசிக்கும்போது பாடசாலை செல்லும் மாணவர் எவ்வாறு வீட்டில் தனது பாடங்களைத் தயார் செய்யமுடியும்? மின்சார வசதியோ, ஒரு சில தோட்டங்களைத் தவிர்த்து ஏனையவற்றில் கிடையாது. அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாது மாணவர்கள் சிரமப்படுகின்றனர். 2015 - 2019 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் முன்னாள் மலைநாட்டு புதிய கிராமங்கள் அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களும் தற்போது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இந்திய அரசின் உதவியுடன் முன்னெடுக்கப்படவிருந்த 10000 வீட்டுத்திட்டமும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மலையக மக்களைப் பொறுத்தவரையில் மற்றொரு பாரிய பிரச்சினை அடிக்கடி லயன் வீடுகள் தீ அனர்த்தத்திற்கு உட்படுவது. ஊடக அறிக்கையிடல் மூலம் திரட்டப்பட்ட தகவல்களின் மூலம் நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களில் தலா 36,619 லயன் குடியிருப்புகள் தீ விபத்தை எதிர் கொண்டுள்ளன. இந்த வருடத்தில் (2023 ஜீலை) ஏழு மாதங்களில் மலையகத்தில் 53 லயன் வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. தீ விபத்திற்கான காரணம் வெளிப்படையாக அறிவிக்கப்படாவிட்டாலும் கூட மின்கசிவு ஓர் காரணமாகச் சொல்லப்படுகிறது. லயன் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை 1990 ஆம் ஆண்டுக்கு பின்பே ஆரம்பிக்கப்பட்டது. அப்போது வழங்கப்பட்ட மின் இணைப்புகளுக்கான மின் கட்டமைப்புகளே தற்போதும் பாவனையில் இருக்கின்றன. சுமார் 30 வருடங்களுக்கும் மேலான மின் கட்டமைப்புக்களில் மாற்றமின்மையே தீ பரவலுக்கு காரணமாகும். லயன் வீடுகளில் காணப்படும் 'அட்டல்' (வீட்டு கூரைக்கு கீழான பகுதி) எனும் விறகு சேகரித்து வைக்கும் பகுதியும் விரைவான தீ பரவலுக்கு காரணமாகிறது. பெருந்தோட்ட லயன்கள் அதிகம் தீ விபத்திற்கு உள்ளாவதற்கு நெருக்கமே பிரதான காரணமாகும். ஒரு தொடர் லயன் குடியிருப்பில் 16-20 வரையான வீடுகள் நெருக்கமாக அமைந்துள்ளமையே இலகுவில் தீ பரவலுக்கு காரணமாக அமைந்துள்ளது. அவ்வாறு தீ விபத்திற்கு உட்படும் வீடுகள்

5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று ஒரே அறையில் வசிக்கும்போது பாடசாலை செல்லும் மாணவர் எவ்வாறு வீட்டில் தனது பாடங்களைத் தயார் செய்யமுடியும்?

மின்சார வசதியோ, ஒரு சில தோட்டங்களைத் தவிர்த்து ஏனையவற்றில் கிடையாது. அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாது.

மலையகப் பகுதிகளில் 50% ஓர் அறையினைக் கொண்ட வீடுகளாகும். 83.4% இருண்ட அறைகளைக் கொண்ட வீடுகள்.

65 வருடங்களுக்கும் மேலாக லயன் அமைப்பு முறை காணப்படுகிறது. மலையகப் பகுதிகளில் பெரும்பாலான வீடுகள் ஏறத்தாழ 150 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டவை.

மட்டுமன்றி அங்கு வாழும் மக்களின் பெறுமதிமிக்க ஆவணங்களும தீயின் நாக்கிற்கு இரையாவாதால் மக்களின் எதிர்கால வாழ்க்கையே கேள்விக்குறியாகுகின்றது.

வசதிகளற்றதும் சுகாதாரக்கேட்டை ஏற்படுத்தக் கூடியதுமான தோட்டப்புற வீடுகள் விருத்தி செய்யப்படுவது உடனடித் தேவைகளில் ஒன்றாகும் மலையக மக்களின் வாழ்விடப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். பெருந்தோட்டங்களின் உற்பத்திகளுக்கு விலை குறைந்துள்ளது. பெருமளவு தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. இந்நிலையில் எவ்வாறு தொழிலாளர்களது நலன்களை கவனிக்கமுடியும்? தோட்ட நிர்வாகங்கள், தொழிலாளர் நலச்சேவைகள் என மாத்திரம் இவற்றைக் கருதி வீட்டு வசதிக்கான செலவீனங்களை ஒரு செலவீனமாகக் கருதாது, வீடுகளைப் பராமரிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். தோட்டத்தின் உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்கும் முதலீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தொழிலாளர்களை சுயவீடமைக்கும் முயற்சியில் ஈடுபடுத்த வேண்டும். ஒவ்வொரு தோட்டமும் தனது தோட்டத்தில் உள்ள 50 வீதமான குடும்பங்களுக்கு சுய முயற்சியில் வீடு கட்டிக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பு வழங்க முடியும். இதற்காக இலவசமாகச் சிறிதளவு நிலத்தை வழங்க முடியும். இதற்கு தேவைப்படக்கூடிய நிலம் மிகக் குறைவாகும். எஞ்சிய 50 வீதமான வசதியற்ற தொழிளாலர்களுக்கு இப்போது வாழும் இரண்டு லைன் வீடுகளை ஒன்றாக்கி பழுதுபார்த்துக் கொடுக்கலாம். இவ்வாறு அவர்களுக்குச் சொந்தமான வீடுகளைக் கட்டிக்கொள்ளவும் உரிமை கொள்ளவும் செய்யும் நடவடிக்கைகளின் விளைவுகளை மிக விரைவில் காணமுடியும். வீடு அவர்களுக்குச் சொந்தமாகும் பட்சத்தில் தமது செலவீனங்களில் வீட்டு அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்து முதலிடுவார்கள். இது சராசரி மனிதரது இயல்பாகும். தனக்கெனச் சொத்திருந்தால் அதனைப் பலப்படுத்துவதில் ஏற்படும் அக்கறை பற்றிச் சந்தேகப்படத் தேவையில்லை. எனவே வீடுகளைத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்க உடனடியான நடவடிக்கை தேவை என்பது விளங்குகிறது. உணவு சமைப்பதற்கான வசதிகள் போதியதல்ல. வீட்டு வாசலில் ஒரு மூலையிலேயே அவர்கள் சமைப்பது வழக்கமாகும். சமைக்கப்பட்ட உணவு சுகாதாரமாகப் பாதுகாக்கப்படாமையால் பலவகையான நோய்கள் பரவக் காரணமாகிறது.

இலங்கையில் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் தேசிய விவசாயக் கொள்கை ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கங்களாவன:

*1. நாட்டின் உணவுத்தேவையில் தன்னிறைவு காண்பது.*

*2. குடியடர்த்தி கூடிய பகுதிகளில் உள்ள மக்களை அடர்த்தி குறைந்த வரண்ட வலயப்பகுதிகளில் மீளக்குடியமர்த்தல்.*

*3. நிலமற்ற விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுத்து*



Image source - www.nimirvu.org

*நிலச்சொந்தக்காரர்களாக்கி சமூக அந்தஸ்து, தன்னம்பிக்கை என்பவற்றை அவர்கள் மத்தியில் ஏற்படச்செய்து அதன்மூலம் அவர்களை பொறுப்புள்ள பிரஜையாக நாட்டின் அபிவிருத்தியிற் பங்கேற்க செய்வது.*

ஆனால் இத்தகைய உயர்ந்ததும் பரந்ததுமான நோக்கங்களின் நன்மைகள் மலையகத் தமிழ் மக்களை சென்றடைவதில்லை. மலையக மக்களுக்கு எந்த ஒரு திட்டத்தின் கீழும் நிலம் வழங்கப்படவில்லை. உதாரணமாக 105 ஆற்று வடிநில அபிவிருத்தி திட்டம், மகாவலி அபிவிருத்தி திட்டம் போன்றவற்றின் மூலம் நான்கு இலட்சம் ஏக்கர் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால் மலையக தமிழ் மக்களுக்கு எந்தவொரு திட்டத்தின் கீழும் நிலம் வழங்கப்படவில்லை. மலையக மக்களுக்கு வேதன அதிகரிப்பு மட்டும் விமோசனம் தந்துவிடாது. வேதனம் அதிகரித்தால், உணவுப் பொருட்களும் அத்தியாவசியப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படும் நாட்டில் அவற்றின் விலைகளும் அதிகரிக்கும். இதனால் பணத்தின் கொள்வனவுத் திறன் வீழ்ச்சியடைகிறது. இந்நிலையில் தொழிலாளரது சுபீட்சத்திற்கு நிலவுரிமை அல்லது உணவினை உற்பத்தி செய்து கொள்ளத் தேவையான விவசாயம் செய்யும் உரிமை அவர்களுக்கு அத்தியாவசியமாகும். ஏற்றுமதிக்கான பொருளை உற்பத்தி செய்யும் மலையக மக்களுக்கு தமது அன்றாட உணவுத் தேவையில் ஒரு பங்கினை தாமே உற்பத்தி செய்து கொள்ள வாய்ப்பினை அளிக்கவேண்டும். குறைந்த பட்சம் தாம் வாழும் வீட்டிற்காவது அவர்கள் உரிமையாளர்களாக இருக்கவேண்டும். அத்தகைய உரிமைகள் அவர்களை பொறுப்புள்ள பிரஜையாக்குவதுடன் இந்நாட்டு மக்கள் என்ற அந்தஸ்தினை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாகவும் அது அமையும்.

அபிவிருத்தி என்பது குறிப்பிடப்பட்ட ஒரு நிலையிலுள்ள ஒன்றை சிறந்த ஒரு நிலை நோக்கி மாற்றத்திற்கு உட்படுத்தும் ஒரு செயன்முறையாகும். இத்தகைய சமூக,

பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் மலையகத்தை சார்ந்த இளைஞர்கள் எத்தகைய பங்கினை வகிக்கின்றனர் என்பதை பற்றி இக்காலக் கட்டத்தில் ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது. ஓர் சமூகத்தில் உள்ள மக்களின் எண்ணிக்கையோ அல்லது இயற்கை மூலவளமோ மாத்திரம் மக்களின் முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் அக்கறை செலுத்தாது. மக்கள் கல்வியிற் சிறந்து தொழிற்பயிற்ச்சி மிக்கவர்களாக மாறும்போதே அச்சமூகம் அபிவிருத்தி எனும் இலக்கை அடைய முடியும். நமது மலையக சமுதாயம் அபிவிருத்தி எனும் இலக்கை அடைய வேண்டுமானால் எமது நாட்டிலுள்ள இயற்கை வளங்களை சிறந்த வகையில் பயன்படுத்தும் முறையை இன்றைய இளைஞர்கள் அறிந்திருக்க வேண்டும். தொண்டர்களும் பொது நல ஊழியர்களும் ஆற்றும் பணிகளினால் மட்டும் ஓர் சமூகம் வளர்ந்திட முடியாது. அச் சமூகத்தில் மனித வளம் திறமையாகப் பயன்படுத்தப்பட்டால் மட்டுமே சமூகம் சுபீட்சத்தை அடைய முடியும். பால்ய வயது முதல் 18 வயது வரையுள்ள இளம் பிராயத்தில் உடல் ஆரோக்கியம், மனவளர்ச்சி, கல்விப்பயிற்சி, தொழில்பயிற்சி என்பனவற்றை சிறந்த முறையிற் பெற்றுக்கொள்ள வழி செய்யவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். அதன் பிறகு வளர்ச்சியடைந்த ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் 55 வயது வரை தொழில்புரிய தகுதியுடையவராகின்றனர். இந்நிலையில் முதலில் தொழிலில் தகுதிபெறுகின்றனர். சில வருடங்களில் தான் புரியும் தொழிலில் நிபுணத்துவம் அடைகின்றார்கள். இக்காலத்தில் சமூகப் பொறுப்புகளையும் ஏற்கவேண்டிய நிலைக்கு இளைஞர்கள் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியது கட்டாயமாகும். முதியோர்களை விட நாட்டின் அபிவிருத்திக்கு ஆற்றக்கூடிய பணிகள் இளைஞர்களுக்கே அதிகம் உண்டு. முதலில் தம்மை தாமே விருத்தி செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு இளைஞரும் தன்னைக் கல்வியில், பொது அறிவில், உடல் ஆரோக்கியத்தில் தொழிற்பயிற்சியில் விருத்தி செய்து கொள்வாராயின் சமூகத்தின் வளர்ச்சியும் விரைவில் ஏற்பட்டுவிடும். படித்த இளைஞர்கள் கட்டாயம் எதாவதொரு தொழிற்பயிற்சியை கற்றுக்கொள்ள வேண்டும். மலையகச் சமூகத்தின் இளைஞர்கள் முழுமையாக தமது சமூகத்தின் பிரச்சனைகளை இனம்கண்டு முழு மூச்சுடன் சீரிய முறையில் தம்மை வளர்த்துக் கொள்வதன் மூலம் சமூகத்தின் அபிவிருத்திற்கும் வழிகோல முடியும். தன்னை சீரிய முறையில் வளர்த்துக்கொண்ட ஒருவனால்தான் தனது சமூகத்தில் உள்ள மற்றோருக்கும் வழிகாட்ட தகுதிபெற



Image source - www.nimirvu.org

முடியும். அதுமட்டுமின்றி மலையகப் பகுதிகளில் ஏற்படும் அரச - தனியார் வேலை வாய்ப்புகளுக்கும் தம்மை தகுதியானவராக மாற்றிக்கொள்ள வேண்டும். மலையக தமிழ்ச் சமூகத்தினரது சமூக, கலை, கலாச்சார பாரம்பரியங்களின் செல்வாக்கினைப் புரிந்து, மருவி வரும் மலையகத்திற்குரிய கலைகளை புத்துணர்வூட்டி வளரச்செய்ய இளைய தலைமுறையினர் முன்வர வேண்டும். மலையக மக்களின் கலாச்சாரப் பின்னணி பற்றியும் அவற்றின் அடிப்படையில் கலாச்சாரம் சுபீட்சம் பெறச்சாதகமான ஏனைய சூழ்நிலைகள் பற்றியும் இளைஞர்கள் அவதானிக்க வேண்டியுள்ளது. அதன் மூலமே மலையகத் தமிழ் மக்களது கலாச்சார மேம்பாட்டிற்கான பொருத்தமான

அனுமானங்களை நாம் வளர்த்துக் கொள்ள முடியும். வேறொரு வகையாக கூறுவதனால் நம் கலாச்சாரத்தின் சாராம்சம் கெடாமல் அதன் இயல்பினைப் பேணும் அதே நேரத்தில் கலாச்சாரத்தின் சிறப்பினைச் சிதைக்கும் குறைபாடுகளை அகற்றவேண்டும். மலையகத்தின் தமிழ் மக்களில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களே பெருமளவு வாழ்கின்றமையால் சமூகத்தின் உயர்மட்டம் நோக்கி இச் சமூகம் அசைய முடியாதுள்ளது. இவ்வாறான சமூகம் முன்னேற வேண்டுமானால், படிமுறை வளர்ச்சியில் இச்சமூக மக்கள் மத்திய தர வகுப்பினராக வளரவேண்டும். விவசாய தொழிலாளராக உள்ள நிலை மாறி ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், பொறியாளர்கள் உருவாக வேண்டும். இன்று நாம் நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவுக்கு நவீன அறிவியல் துறை வளர்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக செயற்கை நுண்ணறிவு, ரொபோடிக் தொழிநுட்ப நுண்ணறிவு, ஆற்றல் சேமிப்பு, எரி சக்தி சேமிப்பு உள்ளிட்ட துறைகளில் உலகம் முன்னேறிச் செல்கிறது. தொழில்நுட்ப மாற்றங்களால் எமது பொருளாதாரமும் வாழ்க்கை முறையும் மாற்றமடையும். அதற்கு நாம் இப்போதே தயாராக வேண்டும். அந்த இலக்கை அடைய ஆங்கில மொழியில் தேர்ச்சியை அதிகரித்து கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். இயற்கை வளமும் மனித வளமும் நிறைந்த மலையகத்திலிருந்து பல்வேறு தொழில் வல்லுநர்களும் புத்திஜீவிகளும் வெளியேறியுள்ளனர். கடந்த ஆண்டு திறைசேரி எதிர் கொண்ட அந்நிய செலாவணித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக அரச உத்தியோகத்தர்களுக்கு வெளிநாடுகளில் சென்று தொழில்புரிவதற்காக சம்பளமற்ற 5 ஆண்டு விடுமுறையை வழங்க அரசாங்கம் தீர்மானித்தது. அதன் பின்னர் மலையகத்திலிருந்து சகல அரச துறைகளிலுமுள்ள உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லும் வீதம் அதிகரித்து உள்ளது.

நகர்ப்புறங்களில் அளவுக்கதிகமாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். ஆனால் மலையகத்தில் இருக்கும் தோட்டங்களில் ஆசிரியர் பற்றாக்குறை கடுமையாக நிலவுகிறது. இதனால்

**மலையக தமிழ்ச் சமூகத்தினரது சமூக, கலை, கலாச்சார பாரம்பரியங்களின் செல்வாக்கினைப் புரிந்து, மருவி வரும் மலையகத்திற்குரிய கலைகளை புத்துணர்வூட்டி வளரச்செய்ய இளைய தலைமுறையினர் முன்வர வேண்டும்.**

மலையகம் இன்று கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு உள்ளது. மலையகத்திலிருந்து திறமைசாலிகள் வெளியேறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக நாட்டின் ஆட்சி முறையில் நம்பிக்கை இழப்பு, பொருளாதார முறையில் நம்பிக்கை இழப்பு, தங்களது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப தொழில் வாய்ப்புகளை பெறுவதில் நம்பிக்கை இழப்பு, தொழிலுக்குரிய ஊதியமும் வசதி வாய்ப்புகளும் கிடைக்குமா என்பதில் நம்பிக்கையின்மை, ஆட்சியாளர்கள் செய்த தவறுகளால் நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள நியாயமற்ற வரிச் சுமைகள் என்பன காணப்படுகின்றன. இவ்வாறு மனித மூலதனம் மலையகத்திலிருந்து வெளியேறுவது மேலும் மலையக மக்களின் வாழ்க்கை தளத்தில் வீழ்ச்சியினை ஏற்படுத்துகின்றது. மலையகம் வளமான ஓர் பிரதேசம். பெருந்தோட்டத்துறை பொருளாதாரம் என்பது அவர்கள் உருவாக்கிய பொருளாதாரம். அதனை விட இரத்தினக்கல் தொழிற்துறை, சுற்றுலாத்துறை என்பவையும் காணப்படுகின்றன. உப உணவுப் பயிர்ச்செய்கைகளும் உள்ளன. ஓர் வளமான பொருளாதாரத்தைக் கொண்ட மக்கள் எவரிலும் தங்கி நிற்கத் தேவையில்லை. மலையக மக்கள் குடியேறி 200 வருடங்களாகிவிட்டன. எங்களுக்கு உரிமை இல்லை என ஒப்பாரி வைப்பதை விடுத்து எங்களையும் ஒரு தனித் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள அறவழியில் போராடவேண்டும். வரலாறு சவால்களை மட்டும் வழங்குவதில்லை. மாறாக வெற்றி கொள்வதற்கான மார்க்கங்களையும் வழங்குகிறது.

மக்களின் அடிப்படை உரிமைகளையும் அபிலாசைகளையும் துண்டாடும் கைங்கரியங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அவை மலையகச் சமூகங்களுக்கு எதிராக திரும்புகின்றன. மலையக மக்களின் எந்தவொரு அடிப்படை உரிமையையும் விட்டுக்கொடுக்காமல் தீர்வுக்காக தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவேண்டும். ஆனாலும் பெரும்பாலும் ஆதிக்க முறைமைகளே

நடைமுறையில் இருப்பதால் மலையகச் சமூகம் பின்தங்கிய நிலையில் இருப்பதுடன் நீடித்த நிலையான வாழ்க்கைக்கான சாத்தியப்பாடுகளும் அருகியே காணப்படுகின்றன. 'பிளவுபட்டு நிற்றல்' என்ற கொடிய தொற்றுநோய், அரசியல் கட்சிகளை ஆட்கொண்டுள்ளதுடன் அது நிச்சயமற்ற தன்மையையும் உணர்ச்சிகரமான நிலையையும் ஏற்படுத்துகிறது. குறிப்பாக மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் துண்டு துண்டாகச் சிதறிக்கிடக்கின்றன. அதிகரித்து வரும் உணவு நெருக்கடி, பட்டினி, பணவீக்கம் ஆகியவற்றால் மலைய மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகிறது. மலையக மக்களின் வாழ்வு மாற்றமின்றி இருப்பதை உள்ளூர் முறைமை மூலம் அனுபவரீதியாக உணர்ந்து கொள்ளமுடியும். மலையக மக்களின் அறவழிக் கோரிக்கை புறக்கணிக்கப்படுகிறது. அதனால் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் எமது பிரச்சனையை பேசுபொருளாக்க வேண்டும். ஒரு தரப்பின் அரசியலை மற்றையத் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும். இதில் எந்த வகையிலும் திணிப்புகள் இருக்கக் கூடாது. ஒரு தரப்புக்கு மற்றைய தரப்பு துணையாக இருந்தால் மட்டுமே ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க முடியும். அரசியல், பொருளாதாம், சமூகம் என இந்த ஒருங்கிணைவுகள் பரிணமிக்க வேண்டும்.

கணித விஞ்ஞான துறைகள் மலையகத்தில் பலவீனமாக உள்ளன. இது விடயத்தில் பொது நிதியம் ஒன்றை உருவாக்கி, கற்றலை மேற்கொள்ள நிதி வளமின்றி மிகவும் சிரமப்படும் மாணவர்களை இணங்கண்டு அவர்களின் பொருளாதார நெருக்கடிகளை தீர்க்க உதவலாம். மலையக அரசியல் மட்டத்தில் இளைஞர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டும். அதற்காக மலையக அரசியல் சக்திகள், துணைச் சக்திகள் செயலாற்றுவதற்கான சூழலை உருவாக்கி கொடுக்க வேண்டும். மலையக மக்கள் தங்களுக்கான அரசியல் இலக்கையும் அதனை அடைவதற்கான வழி வரைபடத்தையும் தெளிவாக முன்வைக்க வேண்டும். அரசியல் இலக்கிற்கான நியாயப்பாடுகளை தர்க்க நிலையிலும் புலமை நிலையிலும் தொகுத்து மலையகத்தை இலங்கை தொடக்கம் சர்வதேச மட்டத்தில் பேசு பொருளாக்கல், மலையக அரசியல் கட்சிகள் - தொழிற்சங்கங்கள் - பொது அமைப்புகள் என்பவற்றை இணைத்து மலையகத் தேசிய அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புதல், அடிப்படைச் சக்திகளையும் துணைச் சக்திகளையும் நட்புச் சக்திகளையும் ஒருங்கிணைத்தல், புவிசார் அரசியலை புரிந்து கொண்டு பங்காளிகளாதல், சமூகமாற்ற அரசியலோடு இணைந்த மலையகத் தேசிய அரசியலை கட்டியெழுப்புதல், மலையக ஆக்கிரமிப்புக்களை தடுக்க சர்வதேச மட்டத்திலான பொறிமுறையை உருவாக்குதல், நிலப்பிரச்சனை - வீட்டுப் பிரச்சனை - கல்விப் பிரச்சனை - பொருளாதாரப் பிரச்சனை போன்ற உடனடிப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல், மலையகத்திற்கான உத்தியோகபூர்வமற்ற அதிகாரக் கட்டமைப்பை கட்டியெழுப்புதல் போன்றன வழிவரைபடத்தில் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

மலையகத்தமிழ் மக்கள் முன்னர் இழந்து இப்போது பெற்றுள்ள குடியுரிமையினால் ஏற்படக்கூடிய நன்மைகள் யாதென சற்று விபரமாக அவதானித்தல் பொருத்தமானதாகும். இவர்களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் வாக்களிக்கத் தகுதியுடையவராக ஆகியுள்ளமை முதலாவது நன்மை ஆகும். நாட்டில் நடைபெறும் தேர்தல்களில் வாக்களிப்பது ஒவ்வொரு பொறுப்புள்ள நாட்டுப்பற்றுடைய பிரஜையினதும் தலையாய கடமையாகும். அவ்வாறு வாக்களிப்பது ஜனநாயக ஆட்சியினை நிலைபெறச் செய்வதற்கான ஒரு வழிமுறை என்ற ஒரு பொதுவான நோக்கத்தின் பின்னணியில் வேறுபல நோக்கங்களும் உள்ளடங்கி உள்ளன. அதிலும் குறிப்பாக மலையக மக்கள் தேர்தல்களில் பங்கெடுப்பதன் மூலமே தனது அபிலாஷைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்துக்கொள்ள முடிவதுடன் தமது பலத்தினையும் ஏனைய குழுக்களுக்கு எடுத்துக்காட்ட முடிகிறது. இத்தகைய நோக்கங்களை மனதில் கொண்டு மலையக தமிழ் மக்கள் தேர்தல்களில் ஆர்வம் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதல் ஜூன் மாதத்திற்குள் வாக்காளராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் அவ்வப்பகுதிகளுக்குரிய கிராம சேவகரால் வழங்கப்படும் போது அதனை அவதானமாக விழிப்புடன் பூர்த்தி செய்து வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மலையக மக்கள் தமது வாக்குகளை முதலீடு செய்து



Image source - www.namathumalayagam.com

பிரதான அரசியல் கட்சிகளிடம் செல்வாக்கு பெறுவதென்பது முக்கியமானதாகும். தேர்தலின்போது வாக்கு வேட்டையில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளை உதாசீனம் செய்யமுடியாது. ஏனெனில் கிட்டதட்ட 7 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் மலையக மக்களின் வாக்குகள். இவ்வாக்குகள் மலையகத் தமிழ் மக்களை இலங்கையின் அரசியலில் செல்வாக்கிற்கு உட்படுத்தும் ஒரு சக்தி. மலையகத் தமிழ் மக்களின் பிரதான பிரச்சனைகளை தீர்க்க முன்வரும் கட்சி ஒன்றினை ஆதரிக்க, பேரம் பேசும் வகையில் இவர்கள் அரசியல் ரீதியாக ஒன்றுபட்டிருக்க வேண்டும். அவ்வாறு ஒன்றுபட்டிருந்தால் மலையகத் தமிழ் மக்கள் இந்நாட்டின் அரசியலில் பெறக்கூடிய அரசியல் அதிகாரங்களும் செல்வாக்குகளும் அதிகமாவதுடன் அது இச்சமூகத்தின் அரசியல் ரீதியான முன்னேற்றத்திற்கு பெரும் பயனுடையதாக அமையும்.

மலையக மக்கள் தமது பிறப்பு, விவாகம், இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை, பாடசாலைச் சான்றிதழ்கள், தொழில் தொடர்பான ஆவணங்கள் என்பவற்றை பேணிப்பாதுகாப்பதில் கூடிய அக்கறையும் கவனமும் செலுத்தவேண்டி உள்ளது. இந்த ஆவணங்களுடன் எமக்கு வழங்கப்பட்ட குடியுரிமையானது மலையக மக்கள் அரசியலில் பிரவேசிப்பதற்கான அனுமதிப் பத்திரமாக பயன்படும். அதே வேளையில் பல பொருளாதாரத் தேவைகளுக்குமான அரச அனுமதியாகவும் இவை அமையும். நிலங்களைக் கொள்வனவு செய்வதற்கும், அரசு நிலம் வழங்கும்போது விண்ணப்பிப்பதற்கும், இலங்கையருக்கு மாத்திரம் என ஒதுக்கப்படும் தொழில்களில் ஈடுபடவும், பிற நாடுகளுக்குச் சென்று வருவதற்கான கடவுச்சீட்டுக்களைப் பெறவும் இக் குடியுரிமையை தொடர்பான ஆவணங்கள் அவசியமாகின்றன.

அரசியலில் ஒற்றுமைப்படும் சமகாலத்தில் மலையகத் தமிழ் மக்கள் தம்மை மத்திய தர வகுப்பினராக உயர்த்திக்கொள்ள கல்வி துறையில் முழு ஆர்வத்தினைச் செலுத்துவதே எதிர்கால சுபீட்சத்திற்கான ஒரே வழியாகும். 'மலையகம் 200' என்ற தொனிப்பொருளை அடிப்படையாக கொண்டு 'மலையகத்தை உலகிற்கு கொண்டு செல்ல வேண்டும்.

உலகத்தை மலையகத்திற்குள் கொண்டுவர வேண்டும்' என்று திட சங்கற்பம் கொள்வதோடு அதற்கான செயற்திட்டங்களை உடனடியாக அமுல்படுத்த தயாராகுவோம். (தொடரும்)

இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார்வையில் எழுதும் முயற்சியே 'ஈழத்துக் கீழைக்கரை: ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடராகும். இதன்படி, இலங்கையின் கிழக்கு மாகாணம் எனும் அரசியல் நிர்வாக அலகின் பெரும்பகுதியையும் அப்பகுதியைத் தாயகமாகக் கொண்ட மக்களின் பண்பாட்டையும் வரலாற்று ரீதியில் இது ஆராய்கிறது. கிழக்கிலங்கையின் புவியியல் ரீதியான பண்பாட்டு வளர்ச்சியையும், அங்கு தோன்றி நிலைத்திருக்கும் தமிழர், சோனகர், சிங்களவர், ஏனைய குடிகள் போன்றோரின் வரலாற்றையும், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துத் தொகுத்துக் கூறும் தொடராக இது அமைகிறது.

# கீழைக்கரையின் முதல் அரசு : பத்து உடன்பிறந்தோர் குலம்!



விவேகானந்தராஜா துலாஞ்சனன்

விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் பட்டக்கற்கைகள் பீடத்தில் பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் துறையில் முதுமாணிக் கற்கையைத் தொடர்கிறார்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் தற்போது மட்டக்களப்பு போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணி புரிகிறார்.

இலங்கை சைவநெறிக்கழக வெளியீடான 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' எனும் சைவ வரலாற்று நூலையும் (2018), தனது திருமண சிறப்புமலராக 'மட்டக்களப்பு எட்டுப் பகுதி' நூலையும் (2021) வெளியிட்டுள்ளார்.

ஒரு சமூகத்தில் உற்பத்தியும் செல்வமும் உபரியாகின்ற போது அந்த சமூகத்தில் அதிக செல்வத்தை வைத்திருக்கின்ற தனிநபர்கள் செல்வாக்குப் பெற்று ஆதிக்க வர்க்கமாக உருவெடுக்கிறார்கள். அப்படி ஆதிகாலத்தில் தோன்றிய முதல் செல்வாக்கான நபர்களிலிருந்தே நிலக்கிழார்களும் பின் அரசர்களும் தோன்றினார்கள் என்பதை போன அத்தியாயத்தில் பார்த்தோம். அப்படி இலங்கையின் வடபாதியில் தோன்றிய தொல்லரசு அனுராதபுரியைத் தலைநகராகக் கொண்டிருந்தது என்பதையும் அந்த முதல் அரசை உருவாக்கிய மூதாதையராக விசயன் என்ற இலாட நாட்டினன், சிங்களன் என்ற தென்னகத்தவன், தென்னாட்டு வணிகர் என்று பலவிதமானவர்கள் நினைவுகூறப்பட்டார்கள் என்பதையும் கூடவே கண்டோம்.

இந்தப் பின்னணியில் இலங்கை எங்ஙணும் வாழ்ந்த நாகரின் "வேள்" குறுநில அரசுகள் கீழைக்கரையில் மாத்திரமன்றி, இலங்கையின் மாப்பார்க்கால நாகரிகம் நிலவிய சகல இடங்களிலுமே நாகரின் 'வேள்புல அரசுகள் இருந்தன என்பதையும் பேரா.சி. பத்மநாதன் நிறுவ முயல்கிறார் (பத்மநாதன் 2016:443-480). அவர் கூறுவது உண்மை எனின், அருவியாற்றின் கரையில் அமைந்திருந்த வேள்புல நாக அரசொன்றே பின்னாளில் வளர்ச்சியடைந்து அனுரை நகராக பரிணமித்தது எனக் கொள்ளலாம். புத்தநெறி இலங்கைக்கு அறிமுகமான போது, அங்கு ஆண்டு வந்ததாக மகாவம்சம் சொல்லும் "தேவானாம்பிரிய திசையன்" என்ற மன்னன் உண்மையான வரலாற்றுப் பாத்திரமே என்பதைக் கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டும் உறுதி செய்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இனி, வடபாதியில் அனுரை அரசு உருவாகி வளர்ச்சி கண்டுகொண்டிருந்த அதே காலத்தில் ஈழத்தீவின் தென்பாதியிலும் ஒரு அரசு தோன்றி வளர்ந்துகொண்டிருந்தது என்பதற்கு மகாவம்சத்திலேயே அங்கொன்றும் இங்கொன்றுமாக சான்றுகள்


கிடைக்கின்றன.

தேவானாம்பிரிய திசையன் இறந்தபோது துணையரசனாக முடி சூடப்பப்பட்டிருந்தவன் அவன் தம்பி மகாநாகன் (ஆம், திசையனின் தம்பி பெயரும் மகா'நாகன்' தான்! ). ஆனால் மகாநாகனைக் கொன்று, அவனுக்கு வரவேண்டிய ஆட்சியைத் தன் மகனுக்குக் கொடுக்க எண்ணினாள் திசையனின் அரசி. அவள் திட்டம் எப்படியோ வெளிப்பட தன் மனைவி, குழந்தைகளோடு தெற்கே தப்பி ஓடுகிறான் மகாநாகன். அங்கு கிரிந்தி ஆற்றின் கரையில் "மகாகாமம்" எனும் ஊரை அமைத்து அரசு புரிகின்றான் மகாநாகன் (மகாவம்சம் 22:29). அந்த இடத்தின் பெயராக மகாவம்சம் அறிமுகப்படுத்தும் பெயர் தான் "உரோகணம்".

ஆனால், உரோகணத்தின் முதல் அரசன் மகாநாகன் அல்லன். அவன் காலத்தில் உரோகணத்தில் இன்னொரு அரச வம்சம் ஆண்டு வந்துகொண்டிருந்தது. உரோகண அரசின் அந்தத் தலைசிறந்த அரசனின் பெயர் காமணி. அவனது பத்து மைந்தர்களால் வெல்லப்பட்ட அல்லது நிறுவப்பட்ட அந்த அரசுக்கு "பத்து உடன்பிறந்தாரின் அரசு" என்று பெயர். பிராமிக் கல்வெட்டுகளில் அவ்வரசர்கள் தங்களை ।த`ச ।பதிகன (*dasa batikana*) என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள் (*The State, Kingship and Buddhism in Ancient Sri Lanka*, n.d:241-244).

பத்து உடன்பிறந்தாரை மகாவம்ச நூல் கதிர்காம ( க।சர।காம *Kajaragma*) சந்தனகாம சத்திரியர்கள் (।।கத்திய, *Khattiya*) என்று குறிப்பிடுகிறது (மகாவம்சம் 19:54, 63). அவர்களது தந்தையான காமணி கதிர்காமத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்க வேண்டும். காமணி என்பது இயற்பெயரல்ல. அது கிராமத்தின் தலைவன், அல்லது கூட்டத்தின் தலைவன் என்ற பொருள் கொண்ட பாகத மொழிச்சொல். அப்பதவிப் பெயருடன் கதிர்காமத்திலிருந்து ஆண்ட ஒரு சிற்றரசனின் மைந்தர்களே இவர்கள். இன்று அமைவிடம் இனங்காணப்படாத சந்தனகாமமும் கதிர்காமத்தின் அருகே உரோகணத்தில் அமைந்திருந்த ஓர் நகர் என்று நம்பப்படுகின்றது.

பேரா.சி. பத்மநாதனின் நாக வேள்புலக் கருதுகோளின் படி, இவர்களும் நாகர் வம்சத்திலேயே வந்திருக்கவேண்டும். ஆனால் பத்து உடன்பிறந்தாரின் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட போவத்தகல், கொத்ததாமூக்கல், கெனன்னேகல் ஆகிய




gamini tisaha pitaha ca majhi marajhaha ca niyata gamani sa paribogani sagasa
giritisagame karajhini tisagame vilagame kasabanagare malugame nokapike

காமணி திசையனின் தந்தையாலும் மச்ச மகாராசனாலும் சங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட ஊர்களும் ஏனையவையும் :
கிரிதிசையனூர். கரா|சினி திசையனூர். வில்காமம். காசியப்ப நகரம்.மல்லகாமம். நொகபிகை.

**கொத்ததாமூக்கல். போவத்தகல். கெனன்னேகல் கல்வெட்டு வாசகங்களும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள மீன் சின்னங்களும். கல்வெட்டு மைப்படிகள் Inscriptions of Ceylon, Vol. I நூலிலிருந்து மீள்விக்கப்பட்டவை. Paranavitana, 1970.**


இடங்களில் மீன் சின்னம் வரையப்பட்டுள்ளது (உரு.01). மீன் சின்னம் தெற்காசியாவிலேயே சிறப்பாக பாண்டியருக்குரிய குலச்சின்னம். மகாவம்சமே மதுரையிலிருந்து வரவழைக்கப்பட்ட பாண்டிய இளவரசியை விசயன் மணந்ததையும் அவளுடன் பல இளவரசியர், கைவினைஞர்கள், பதினெண் குலங்களைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்கள் இலங்கை வந்ததையும் சொல்வதாலும் (மகாவம்சம் 7:49,60), விசயன் தொன்மம் தவிர்ந்த ஏனைய அனுரை அரசின் தோற்றத் தொன்மங்கள், தென்னக அரசர் மற்றும் வணிகர்

வருகையை உறுதியாகச் சொல்வதாலும், பத்து உடன்பிறந்தார் குலத்தின் மூதாதை காமணிக்கு பாண்டியத் தொடர்பு இருந்திருப்பது உறுதியாகின்றது. கெனன்னேகல்லில் வரும் பத்து உடன்பிறந்தார் குல மன்னனாகக் கருதப்படும் மச்ச மகாராசனின் பெயரும் (மச்சம் - மீன்) அவர்களது பாண்டியத் தொடர்புக்கான இன்னொரு சான்றாகக் கருதத்தக்கது.

தேவானாம்பிரிய திசையனின் தம்பியான மகாநாகன் மகாகாமத்தில் அரசமைத்தபோது, அதற்கு மிக அருகிலேயே கதிர்காமத்தில் காமணியின் அரசு நீடித்துக்கொண்டிருந்தது. காமணி ஆண்டு வந்த மாணிக்க கங்கையின் கரையிலிருந்த கதிர்காமமும், அதற்கு மிக அருகிலேயே வெறும் 30 கிமீ தொலைவில் கிரிந்த ஆற்றின் கரையில் குடியேறிய மகாநாகனால் உருவாக்கப்பட்ட புதிய நகரான மகாகாமமும் உரோமர், தமிழகத்தவர், காம்போசர் முதலிய கடல்வணிகரோடு வணிகத்திலீடுபட்டு வளர்ச்சி கண்டிருக்கலாம். இவற்றின் அமைவிடமும், மகாநாகனின் அனுரைப் பின்புலமும், காமணியின் பாண்டியப் பின்புலமும் கதிர்காமத்துக்கும் மாகாமத்துக்கும் அத்தனை நல்லுறவு நீடித்திருக்காது என்றே சிந்திக்க வைக்கிறது. அந்தச் சிந்தனை சரி என்பதை உறுதிப்படுத்துகிறது லலாட தாதுவம்சம்.

மகாநாகனின் பேரனான கோட்டு அபயன் காலத்தில் காமணி மறைந்து அவனது பத்து மைந்தர்களே மாணிக்க கங்கைப்படுகையையும் அதற்கு அப்பால் கிழக்குப் புறமும் ஆண்டுவந்தனர். கிரிந்த ஆற்றுப்படுகையை அண்டிய மேற்குப் புறம் கோட்டபயன் வசமிருந்தது. கோட்டபயனுக்கும் பத்து உடன்பிறந்தாருக்கும் கடும் பகை நிலவியது. அவர்களில் பெரும்பாலானோர் மீது போர் தொடுத்து கோட்டபயன் கொன்றொழித்தான் என்கின்றது லலாட தாதுவம்சம் (*Vijitha Kumara*, *2016:37*).

கோட்டபயனால் எத்தனை உடன்பிறந்தார் கொல்லப்பட்டனர் என்ற விபரம் தாதுவம்சத்தில் இல்லை. ஆனால் பத்துப்பேரில் ஏழு பேர் அதிக காலம் வாழவில்லை என்பதை இன்று நமக்குக் கிடைக்கும் எஞ்சிய மூன்று உடன்பிறந்தாரின் பிராமிக் கல்வெட்டுகள் சொல்கின்றன. அவர்கள் பதின்மரில் மூத்தவன் சர்வன் ( ||செத `சவ, *Jetha sava*, சிரேட்டன் சர்வன், மூத்தவன் சர்வன்), கடைக்குட்டி நாகன் (கனய நாக, கனிட்டன் நாகன், இளவல் நாகன்), இடைப்பட்டவன் உதியன். இந்த மூவரதும் கல்வெட்டுகள் அம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கிடைத்துள்ளன (*Ranawalla*, *2011:5160*) (உரு 02).




**கல்வெட்டுகளில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் பத்து உடன்பிறந்தார் குலத்தில் உதித்த அரசரும் அரசியரும். அடைப்புக்குள் கல்வெட்டு கிடைத்த இடங்கள் காட்டப்படுகின்றன. போ – போவத்தகல, கொ-கொத்ததாமூக்கல, கு-குசலான்மலை, மொ-மொட்டையாகல் மலை, க-கல்லூடுபொத்தானை, கெ-கெனன்னேகல.**

கோட்டபயனின் வெற்றிக்குப் பின்னர், எஞ்சிய இந்த மூன்று உடன்பிறந்தாரும் கதிர்காமத்திலிருந்து கிழக்காக பின்வாங்கியிருக்கிறார்கள் போல் தெரிகிறது. அல்லது அவர்களின் தந்தையின் காலத்திலேயே இவர்கள் கிழக்கு உரோகணத்தை ஆண்டு வந்திருக்கலாம். எவ்வாறெனினும் மூத்தவனான சர்வனும் அடுத்தவனான உதியனும் மாணிக்க கங்கைக்கும் குமுக்கன் கங்கைக்கும்

கோட்டபயனால் எத்தனை உடன்பிறந்தார் கொல்லப்பட்டனர் என்ற விபரம் தாதுவம்சத்தில் இல்லை. ஆனால் பத்துப்பேரில் ஏழு பேர் அதிக காலம் வாழவில்லை என்பதை இன்று நமக்குக் கிடைக்கும் எஞ்சிய மூன்று உடன்பிறந்தாரின் பிராமிக் கல்வெட்டுகள் சொல்கின்றன.

இடைப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலேயே ஆதிக்கம் செலுத்தியிருக்கிறார்கள் (*The State, Kingship and Buddhism in Ancient Sri Lanka, n.d*: **243 244**). கடைக்குட்டியான நாகனே பத்து உடன்பிறந்தாரில் பலம் வாய்ந்தவனாகத் தென்படுகிறான். அவனது ஆட்சி ஆதிக்கம் தெற்கே அக்கரைப்பற்று மொட்டையாகல் மலையிலிருந்து வடக்கே ஏறாவூர்ப்பற்று குசலான்மலை வரை பரந்திருந்தது. மேற்கே விந்தனைப்பற்று (உகணை) கெனன்னேகல் வரை அவனுக்குப் பின்னர் ஆண்ட அவனது இரு தலைமுறையினர் பற்றிய கல்வெட்டுத் தகவல்கள் கிடைக்கின்றன. இப்படிப் பார்த்தால், இன்றைய கீழைக்கரையின் தனித்துவமான பண்பாட்டுக்குத் தந்தை பத்து உடன்பிறந்தாரில் இளையவனான நாகனே!

அனுரையை ஆண்ட தேவானாம்பிரிய திசையன் காலத்தில் அறிமுகமான புத்த சமயம், அவனுக்கு இரண்டு தலைமுறைகள் பிந்திய பத்து உடன்பிறந்தார் காலத்தில் உரோகணத்திலும் செல்வாக்குடன் திகழ்ந்தது. பத்து உடன்பிறந்தாரில் எஞ்சிய மூவரும் புத்தத்தைத் தழுவியிருக்கவேண்டும், குறைந்தபட்சம் புத்த சமயத்துக்கு ஆதரவேனும் அளித்திருக்கவேண்டும் என்பதை அவர்களது கொடிவழியில் வந்த அரசர்களது கல்வெட்டுகள் சொல்கின்றன (அட்டவணை **01**). போதிமரக் கிளை இலங்கை வந்தடைந்தபோது கதிர்காம - சந்தனகாம சத்திரியர்கள் அதற்குக் கொடுத்த மரியாதை மூலம் அவர்கள் புத்த சமயத்துக்கு வழங்கிய ஆதரவை உய்த்துணர முடிகின்றது (மகாவம்சம், **19:53,64**).

மூத்தவனான சர்வன் பற்றிய கல்வெட்டுகள் குமுக்கனாற்றின் மேற்குக்கரையில் உள்ள கொத்ததாமூக்கல் (கொ|ட்|ட|த_மூஃகல, *koadæmhela*) எனும் மலையில் கிடைக்கின்றன. மகாகாம அரசின் வளர்ச்சியில் வலிகுன்றிய இவன் குமுக்கனாற்றின் மேற்குப்புறம் அதிகாரம் செலுத்தி வந்திருக்கிறான். இவனுக்கு தர்மராசன் எனும் மகனும், தர்மராசனுக்கு ஆய் மகாதிசையன் எனும் மகனும் இருந்தார்கள் (உரு.**01**). ஆய் மகாதிசையனின் மகளான இளவரசி "அவ்வை சர்வரி" (அ|பி ^சவேர, *Abi Savera*) புத்த துறவிகளுக்கு பெருமளவு குகைகளைச் செய்து தானமாக வழங்கியுள்ளாள். அவள் தனி ஒருத்தியால் பொறிக்கப்பட்ட இருபது பிராமிக் கல்வெட்டுகள் கொத்ததாமூக்கல்லில் வாசிக்கப்பட்டுள்ளன. பண்டைய இலங்கையில் அதிக எண்ணிக்கையான கல்வெட்டுகளைப் பொறித்தவள் ஒரு பெண்ணரசி என்பதும், அவள் மகாவம்சத்தில் விதந்துகூறப்படாத ஒரு அரச வம்சத்தில் வந்தவள் என்பதும் வரலாற்றின் விநோதமே.

சர்வனதும் அவனது இளவல் உதியனதும் பெயர் குறிப்பிடப்படும் இன்னும் சில கல்வெட்டுகள் குமுக்கனாற்றின் கிழக்குக் கரையில் பாணமைப்பற்று போவத்தகல் (|போவத்தே|கல, *bvattgala*) எனும் மலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு சர்வனின் மகன் தர்மராசன், பேரன் ஆய் மகாதிசையன் ஆகியோரின் பெயர்களும் காணப்படுகின்றன. எனவே குமுக்கனாற்றின் கிழக்குக்கரைப் படுகையில் சர்வனது சந்ததியினரும், உதியனது கொடிவழியினரும் ஆண்டிருக்கிறார்கள் என்பது தெரிகின்றது.

உதியனது மகன் ஆய் அபயன். ஆய் அபயனுக்கு ஆய் திசையன் (அய தி^ச்^ச, *aya tissa*) எனும் மைந்தனும் அவ்வை அனுராதை (அ|பி அனுர|தி, *abi anuradi*) எனும் மகளும் இருந்தனர். கொத்ததாமூக்கல்லில் சர்வரி அளித்த கொடைகள் போலவே, போவத்தகல்லில் உள்ள குறிப்பிடத்தக்க கொடைகள், அவளது அத்தை அனுராதையால் வழங்கப்பட்டவை. கொத்ததாமூக்கல், போவத்தகல் ஆகிய இரு இடங்களிலும் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகள், அக்காலத்து இளவரசியர் பெற்றிருந்த சமூக முக்கியத்துவத்தைப் படிப்பதற்கான முக்கியமான ஆதாரங்களாகும். இவை இரண்டும் அண்ணளவாக பொமு. **2** ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. கொத்ததாமூக்கல் கல்வெட்டுகளில் வரும் அவ்வை சர்வரி, ஆய் திசையனின் மனைவி என்று சொல்லப்படுவதால், மூத்தவனான சர்வனின் மகன்வழிப் பேத்தி சர்வரியும், உதியனின் பேரன் திசையனும் கணவன் - மனைவி என்று கருதுகிறார்கள்.

| | அமைவிடம் | கல்வெட்டு இல. | பொறிப்பு இடம் | பொறித்தவர் | விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | அம்பாந்தோட்டை மாகம்பற்று | 556 - 569 | கொட்டதாமூக்கல் | அவ்வை சர்வரி | - தருமராசனின் பேத்தி<br>- ஆய் மகாதிசையன் மகள்<br>- ஆய் திசையன் மனைவி<br>- ஆய் அபயனின் மருமகள் |
| 2 | அம்பாறை பாணமைப்பற்று | 549 | போவத்தகல் | ஆய் மகாதிசையன் | - காமணியின் மூத்த மகன்வழிக் கொள்ளுப் பேரன்<br>- சர்வனின் பேரன்<br>- தருமராசனின் மகன் |
| 3 | அம்பாறை பாணமைப்பற்று | 551 | போவத்தகல் | ஆய் மகாதிசையன் | - தருமராசனின் மகன் |
| 4 | அம்பாறை பாணமைப்பற்று | 550 | போவத்தகல் | அவ்வை அனுராதை | - காமணியின் மகன்வழிக் கொள்ளுப் பேத்தி<br>- இராசா உதியனின் பேத்தி<br>- ஆய் அபயனின் மகள் |
| 5 | அம்பாறை அக்கரைப்பற்று | 487 | மொட்டையாகல் மலை | காமணி திசையன் | - உபராசன் நாகனின் மருமகனின் மகன்<br>- மகாப்பிரசாதிக அபயன் மகன் |
| 6 | அம்பாறை விந்தனைப்பற்று வடக்கு | 406 | கெனன்னேகல் | மச்ச மகாராசனும் காமணி திசையனின் தந்தையும் | - |
| 7 | மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று | 390 | குசலான்மலை | காமணி திசையன் | - உபராசன் நாகனின் பேரன்<br>- இராசா அபயனின் மகன் |
| 8 | மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று | 396 | கல்லூடு பொத்தானை | பெருமகன் சாத்தன் (பருமக சடன) | - ஆய் அபயனின் மகன் இராசாவாக இருந்தபோது பொறிக்கப்பட்டது |

**பத்து உடன்பிறந்தார் அரசகுலத்தின் புத்த சமயக் கல்வெட்டுகள் கிடைத்த இடங்களும் அக்கல்வெட்டுகளின் வழியே சேகரிக்கப்பட்ட தகவல்களும். கல்வெட்டு இலக்கம், Inscriptions of Ceylon நூலில் கண்டபடி. (Paranavitana, 1970)**

பத்து உடன்பிறந்தாரில் கடைக்குட்டியான நாகன் நாகன் தொடர்பான கல்வெட்டுகள், அக்கரைப்பற்று மொட்டையாகல், ஏறாவூர்ப்பற்று குசலான்மலை, ஆகிய இரண்டு மலைகளில் கிடைத்துள்ளன (Paranavitana 1970:3031,37). கொத்ததாமூக்கல்லில் இடம்பெற்றுள்ள அதே "பத்து உடன்பிறந்தார்" (தச பதிகன) என்ற சொல், இவ்விரு இடங்களிலும் கிடைத்த கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. நாகன் தன்னைத் துணையரசனாகக் கருதியமை அவனது "உபராசன் நாகன்" எனும் பட்டத்தின் மூலம் தெரிகின்றது.

மொட்டையாகல் பிராமிக் கல்வெட்டு (உரு.03) உபராசன் நாகனின் பேரன் காமணி திசையனால் புத்த சங்கத்துக்குக் கொடுத்த தானம் பற்றிக் கூறுகிறது. அது, காமணி திசையன், உபராசன் நாகனின் மருமகனான மகாபிரசாதிக அபயனுக்குப் பிறந்தவன் என்பதைச் சொல்கின்றது. இன்னொரு விதத்தில் சொன்னால், உபராசன் நாகனின் பெயர் தெரியாத மகளுக்குப் பிறந்தவன் மொட்டையாகல்லின் காமணி திசையன்.

குசலான்மலையில் கிடைத்த கல்வெட்டில் நாகனின் மைந்தன் அபயனுக்குப் பிறந்த காமணி திசையனால் புத்த துறவிகளுக்குச் செய்யப்பட்ட தானம் பற்றிச் சொல்லப்படுகின்றது. ஏறாவூர்ப்பற்று கல்லூடுபொத்தானை மலையில் கிடைக்கும் பொமு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு பிராமிக் கல்வெட்டில் வரும் ஆய் அபயன் என்பவன், குசலான்மலைக் கல்வெட்டில் வரும் அதே அபயன் தான் எனவும் கருதப்படுகிறான்.

விந்தனைப்பற்று வடக்கு (உகணை) கெனன்னேகல்லில் (ஃகெனன்னே|கல, henannga la) பொறிக்கப்பட்ட இன்னொரு பிராமிக் கல்வெட்டு, மச்ச மகாராசனாலும் காமணி திசையனின் தந்தையாலும் கொடுக்கப்பட்ட புத்த சமய அறக்கொடைகளை விவரிக்கின்றது. இங்கு சொல்லப்படும் "காமணி திசையனின் தந்தை" குசலான்மலையில் இடம்பெற்ற அதே ஆய் அபயன் ஆகலாம். குசலான்மலையிலும்

மொட்டையாகல்லிலும் கிடைக்கும் நேரடி "பத்து உடன்பிறந்தார் குலத்துச்" சான்று கெனன்னேகல்லில் கிடைக்காத போதும் கொத்ததாமூக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள அதே மீன் சின்னம் கெனன்னேகல்லில் பொறிக்கப்பட்டுள்ளதாலும், காமணி திசையனின் தந்தை அங்கு சொல்லப்படுவதாலும் கெனன்னேகல்லில் குறிப்பிடப்படுவோரும் பத்து உடன்பிறந்தார் கொடிவழியினரே என்பதை உறுதிப்படுத்தலாம்.

ஆக, உபராசன் நாகனுக்கு மகாப்பிரசாதிக அபயன், ஆய் அபயன், மச்ச மகாராசன் எனும் மூன்று மைந்தர்கள் இருந்திருக்கிறார்கள். மகாப்பிரசாதிக அபயன் ஆட்சியின் கீழ் அக்கரைப்பற்றுப் பகுதி நீடித்திருக்கிறது. அடுத்த மகனான அபயன் ஆட்சியின் கீழ் குசலான் மலையைச் சூழ்ந்த ஏறாவூர்ப்பற்றுப் பகுதி நிலவியிருக்கிறது.

உபராசன் நாகனின் மூன்றாவது மகனாக ஊகிக்கக்கூடிய மச்ச மகாராசன் கெனன்னேகல் பகுதியில் விந்தனைப்பற்றுப் பகுதியில் ஆட்சி செலுத்தியிருக்கக்கூடும். அக்கரைப்பற்று பகுதியில் மகாப்பிரசாதிக அபயன் வழி வந்த நாகனின் மூன்றாம் தலைமுறையான முதலாம் காமணி திசையன் ஆட்சி புரிந்த அதேவேளை, குசலான் மலைப்பகுதியும் நாகனின் ஆய் அபயன் வழி மூன்றாம் தலைமுறையான இரண்டாம் காமணி திசையன் ஆட்சியின் கீழ் நீடித்திருக்கிறது. இவர்கள் வடக்கே எழுந்து வந்த அனுரை அரசுக்குக் கட்டுப்படாமல் உரோகணத்தில் தன்னாட்சி செலுத்தி வந்திருக்கிறார்கள் என்பது புறக்காரணங்களாலும் தெளிவாகின்றது.

1.*Inscription of Ceylon, Vol. I, No. 2* (*Paranavitana, 1970:1*). தேவனம்பிய என்பது பாலிச்சொல். "தேவானாம்பிரிய" என்பது அப்பெயரின் வடமொழி வடிவம். தேவர்களுக்குப் பிரியமான என்பது பொருள். திச, திசை என்பது தமிழில் திசையன் என்றாகும். அது திசியம் அல்லது பூசம் எனும் விண்மீன் வழி சூட்டப்பட்ட பெயர்.

2.மகாகாமம் இன்று கிரிந்த என்று அழைக்கப்படுகிறது.

3.வடமொழியிலும் பாலிமொழியிலும் உரோகணம் என்றால் "வளர்வது, பெருகுவது" என்று பொருள் (*Wisdom Library, n.d*). அனுரை அரசின் காலத்தில் அது தெற்கே வளர்ச்சியடைந்து வந்த அரசாக இருந்திருக்கலாம். அனுராதபுரம் அனுசம் விண்மீனாலும் (வடமொழி: அனுராதா) உரோகணம், உரோகிணி விண்மீன்களாலும் பெயர்பெற்ற நகரங்கள். காலக்கணிப்பில் பயன்பட்ட விண்மீன்கள் ஆட்பெயர்களிலும் இடப்பெயரிலும் ஏராளமாக இடம்பெறுவது, அவை அக்காலத்தில் பெற்றிருந்த முதன்மைக்கான சான்றுகளாம்.

4.காமணி வடமொழியில் |க்ராமணீ, (*Grma*) என்றாகும். அச்சொல் வேதஞ்சார் இலக்கியங்ளிலும் வடமொழி, பாகத, தென்னக பிராமிக் கல்வெட்டுகளிலும் இடம்பெற்றிருக்கிறது. தமிழகத்து வேளிரும் அரசரும் புலவரால் பாடப்படும் போது, இதையொத்த "ஊரன்" அல்லது "நாடன்" என்ற சொல்லால் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் வசித்து வரும் நாடார் சமூகத்தில் ஒரு பிரிவினர் தங்களை "கிராமணி" என்று அழைத்துக்கொள்கின்றனர். இவர்களும் கேரளத்தில் வசிக்கும் ஈழவர் அல்லது தியர் எனும் சமூகத்தவரும் ஒருவரே என்றும் விவாதம் உள்ளது. காமணியின் இன்னொரு வடிவமான கிராமணி, அதன் மறுவடிவமான நாடார், ஈழவர், தியர் என்ற வேறு சமூகப்பெயர்கள் என்பவற்றை ஈழத்தோடு இணைத்து நோக்கும் பார்வை ஆர்வமூட்டக்கூடிய ஒன்றாகும்.

5.பாலி: கோட்||டா||பய, *Gotthbhaya*. இவன் துட்டகாமணியின் பாட்டன். கோட்டாபயன் என்றால் குள்ளமான அபயன் என்று பொருள். தமிழில் குட்டன் அபயன் என்று சொல்லலாம். கோட்ட, குட்டன் என்ற சொற்களை நெருங்கி கீழைக்கரை வட்டார வழக்கில் இன்றும் "கொட்டான்" என்ற சொல் குள்ளத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

6.பிராமிக் கல்வெட்டுகளில் அரசகுடியினரின் பட்டங்களாக பருமக, அய, ர|ச முதலிய ஆண்பாற் சொற்களும், அ|பி, பருமகள் முதலிய பெண்பாற் சொற்களும் இடம்பெற்றுள்ளன. செனரத் பரணவிதான இச்சொற்களை பிரமுக, ஆர்ய, ரா|ச, அம்பிகா/அம்பா ஆகிய வடமொழிச் சொற்களின் ஈழப்பாகத வடிவங்களாக வாசிக்கிறார் (*Paranavitana, 1970:lxv - lxviii*). இலங்கையைப் பொறுத்தவரை ஈழப்பாகத மொழிக் காலத்தில் பாகதம் அல்லது பாலிமொழியின் ஆதிக்கத்தை ஆராயவேண்டுமேயன்றி, சங்கதத்திற்குச் சென்று திரும்புதல் சொற்பிறப்பு ஆய்வுகளின் படி திருத்தமானதல்ல. (இக்கட்டுரைத் தொடரின் சில

இடங்களில் ஆட்பெயர்/இடப்பெயர்களை ஈழப்பாகத/பாலி வடிவங்களிலன்றி சங்கத வடிவங்களிலேயே கட்டுரையாசிரியன் எடுத்தாள்வது, சமகாலப் பரிச்சயம் கருதியே).

அய என்ற சொல், பாலியில் ஐய என்றாகும். அது தமிழ் ஐயனுக்கு நெருக்கமானது. மேலும் பருமகள் என்பது பருமகன் என்ற ஆண்பால் னகரமெய் ஈறு பெண்பாலுக்கு ளகரமெய்யாக மாறும் தமிழியமொழிக் குடும்பங்களுக்கே உரிய அப்பட்டமான தமிழியப் பெண்பால் சொல்லாகும். "வேள்" என்ற அரசகுடிச் சொல் இடம்பெற்றுள்ள கல்வெட்டுகளை செனரத் "வேலு" என்று வாசித்திருப்பதையும் தற்செயல் என்று கொள்ளமுடியவில்லை. அத்துடன், பிராமிக் கல்வெட்டுகளின் சமகாலத்தில் தற்போது கண்டறியப்பட்டுள்ளதாக உரிமைகோரப்படும் தமிழிக் கல்வெட்டுகள், நாணயங்களும், பேரா. பரமு பு^ச்பரட்ணம், இந்திரபாலா போன்றோரின் ஆய்வுகளும் பிராமிக் கல்வெட்டுகளில் பழந்தமிழின் தாக்கம் இருந்ததை விரிவாக விளக்குகின்றன. பரணவிதானவின் அய, அபி ஆகிய சொற்களை தமிழில் ஐயன், அவ்வை என்று வாசிக்கமுடியும். ஐயன் என்பதற்குச் சமனான "ஆய்" எனும் அரசகுடிச் சொல், சங்க இலக்கிய காலத்தில் தென் தமிழகத்திலும் வேளிர் குடிகள் மத்தியிலும் வழக்கில் இருந்தது அறியப்படுவதால், இக்கட்டுரைத்தொடரில் அய என்ற சொல், "ஆய்" என்று மொழியாக்கப்படுகின்றது. அவ்வை என்ற சொல் சங்க இலக்கியத்தில் அரிதாகவே ஆளப்படும் போதும், அன்னை, அரசி எனப் பொருளூறும் அம்பை எனும் வடமொழிச் சொல்லுக்கு அதுவே நெருக்கமானது. தமிழ், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் அது தாய், மூதாட்டி, முதிர்பெண் ஆகியோரைக் குறிக்கப் பயன்பட்டதுடன், அரசகுல மகளிரின் பெயர் விகுதியாகவும் காணப்பட்டது. ஒப்பிடுக, கொற்றவை - கொற்ற+அவ்வை - அரசரின் அன்னை; அங்கவைசங்கவை (அங்க+அவ்வை, சங்க+அவ்வை) குந்தவை - (குந்து+அவ்வை = வேல் கொண்ட அன்னை/வேலம்மை).

7.மொட்டையாகல், குசலான்மலை ஆகிய இரு இடங்களிலும் கூறப்பட்ட அபயன், காமணி திசையன் ஆகிய பெயர்கள் ஒரே தந்தை - தனயனையே குறிக்கும் என்பது ஆய்வுலகக் கருத்து. ஆனால் அப்படிக் கொள்வதற்கு மொட்டையாகல் மலையில் வரும் "மருமகன்" என்ற சொல் தடையாக இருக்கிறது. குசலான்மலையில் ஈழப்பாகத மொழியில் "நாகனின் மகன் அபயன்" (நா|கஃக புத அ|பயச) என்று இடம்பெற, மொட்டையாகல்லில் தமிழ் - ஈழப்பாகதக் கலப்பில் "நாகனின் மருமகன் மகாப்பிரசாதிக அபயன்" என்றே வருகின்றது. ஆனால் செனரத் பரணவிதான மருமகன் என்ற சொல்லை தமிழ்ச்சொல்லாகப் பொருள் கொள்ளாமல் "பேரன்" என்று பொருள்கொண்டு அதை "நாகனின் பேரனான மகாப்பிரசாதிக அபயனின் மகன் காமணி திசையன்" என்று வாசித்துள்ளார். மொட்டையாகல்லில் அபயன் பெயர் "மகாப்பிரசாதிக" என்ற பெயரெச்சத்தோடு வருவதால், அவனும் குசலான்மலையில் குறிப்பிடப்படுபவனும் வேறுவேறு என்று கொள்வதே பொருத்தம் போல் படுகின்றது. "மகாப்பிரசாதிக" என்ற முன்னொட்டு, சங்க இலக்கியங்களில் வரும் "பெருஞ்சோற்று" [உதியஞ்சேரலாதன்] என்ற முன்னொட்டோடு ஒப்பிடக்கூடியவாறு அமைவது தற்செயலா தெரியவில்லை.

பேரா. ரணவல்ல, மொட்டையாகல் கல்வெட்டில் பரணவிதான "காமணி திசையன்" என்று வாசித்த சொல்லை "காமணி சேனன்" என்று வாசித்துள்ளார் (Ranawalla, 2011:56). அது சரியெனின், குசலான்மலையின் காமணி திசையனும் மொட்டையாகல்லின் காமணி சேனனும் வேறு வேறு தந்தையர்க்குப் பிறந்த இரு தனித்தனி இளவரசரே என்பது உறுதியாகிவிடுகின்றது.

**உசாத்துணை**


1. பத்மநாதன், சி. (2016). இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும் (கிமு 250 - கிபி 300). கொழும்பு: இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.
2. *Paranavitana, S.* (1970). *Inscriptions of Ceylon, Volume I, Ceylon: Department of Archaeology.*
3. *Ranawella, G.S.* (2018). *History of the Kingdom of Rohana: From the Earliest Times to* 1500 *AC. Colombo: Ministry of Higher Education and Department of Archaeol ogy.*
4. *The State, Kingship and Buddhism in Ancient Sri Lanka. (n.d). retrieved from https://docplayer.net*
5. *Vijitha Kumara, S.* (2016). *A Critical Edition of the Nala Dhtuvasa: Chapter III. WWJMRD* 2016; 2(2), pp.3243. *Wisdom Library, (n.d). Rohana, Rohan, Rohaa:* 16 *definitions, retrieved from: https://www.wisdomlib.org.*


(தொடரும்)

ஈழத்தில் போர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உக்கிரமாக நடந்திருக்கின்றது. அது அங்கிருந்த அனைத்து மக்களையும் ஏதோ ஒருவகையில் பாதித்திருக்கின்றது. இப்போது யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. போர் ஒரு கொடுங்கனவாய் மக்களின் மனதில் இருந்து மறக்கடிக்கப்பட்டிருந்தாலும், அதன் நிமித்தம் ஏற்பட்ட உடல்/உள வடுக்கள் இன்னும் இல்லாமல் போகவில்லை. இனங்களிடையே நல்லிணக்கம் மட்டுமில்லை, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்கள், உதவிகள் கூட போரால் வெற்றி கொள்ளப்பட்ட அதிகாரத் தரப்பால் நிகழ்த்தப்படவில்லை. இன்னுமின்னும் இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு இனங்களும் துவிதங்களாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஈழத்துப் போர்ச்சூழலின் பின்னணியில் எழுதப்பட்ட பனுவல்களை முன்வைத்து வாசிப்புச் செய்யப்படுகின்ற ஒரு தொடராக ‘இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள்’ அமைகின்றது.

# அனுக் அருட்பிரகாசத்தின் ‘வடக்கிற்கான ஒரு பயணம்’




இளங்கோ


யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். ஈழத்திலிருந்து போரின் நிமித்தம் தனது பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது ரொறொண்டோவில் வசித்து வருகிறார். கவிதைகள், சிறுகதைகள், நாவல் தவிர, ‘டிசே தமிழன்’ என்னும் பெயரில் கட்டுரைகளும், விமர்சனங்களும், பத்திகளும் பல்வேறு இதழ்களிலும், இணையத்தளங்களிலும் எழுதி வருகின்றார். நாடற்றவனின் குறிப்புகள் (கவிதைகள் 2007), சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் (சிறுகதைகள் 2012), பேயாய் உழலும் சிறுமனமே (கட்டுரைகள் 2016), மெக்ஸிக்கோ (நாவல் 2019), உதிரும் நினைவின் வர்ணங்கள் (திரைப்படக்கட்டுரைகள் 2020), ப்யூகோவ்ஸ்கி கவிதைகள் (மொழிபெயர்ப்பு 2021), தாய்லாந்து (குறுநாவல் 2023) ஆகியவை இதுவரையில் இவர் எழுதிய பனுவல்கள் ஆகும்.


எல்லாக் கதைகளும் எழுதப்பட்டுவிட்டது எனின், எந்தக் கதையைப் புதிதாகச் சொல்வது என்பது எழுதுபவர்க்கு எப்போதும் குழப்பமாக இருக்கும் ஓர் விடயமாகும். பரவலாகத் தெரிந்த கதையை, அதிலும் சமகாலத்தில் நிகழ்ந்ததை யாரேனும் எழுதப் போகின்றார்களென்றால் அது இன்னும் கடினமாகிவிடும். ஆனால் தெரிந்த கதையாக இருந்தாலும், புதிதாய்ச் சொல்லமுடியும் என்று நம்பியதன் விளைவாகவே அனுக் அருட்பிரகாசத்தின் ‘வடக்கிற்கான பயணம்’ (A Passage North) நமக்குக் கிடைத்திருக்கின்றது. அது இதுவரை இலங்கையில் இருக்கும் எந்தத் தமிழ் எழுத்தாளருக்கும் வாய்க்காத ‘மான் புக்கர்’ பரிசின் குறும்பட்டியல் வரை (short list) அவரைக் கொண்டு சென்றிருக்கின்றது.


அனுக் அருட்பிரகாசம்

Image source - en.wikipedia.org

‘A Passage North’ நாவலின் கதை எளிமையாகச் சொல்லப்படக்கூடியது போன்று தோற்றமளித்தாலும், அது சிக்கலான உள்மடிப்புக்களைக் கொண்டது என்பதை நிதானமாக வாசிக்கும்போது நாம் கண்டடைய முடியும். கிளிநொச்சியில் நிகழ்ந்துவிட்ட மரணத்தைக் கேள்விப்பட்டு, கொழும்பில் வாழும் கதைசொல்லி ரயிலில் வடக்கிற்குப் போகின்ற பயணந்தான் இந்த நாவலின்




மையக்கதை. பயணத்தைப் பற்றி எழுதினால், உடனேயே அது பயணக்கதையாக இருக்கவேண்டும் என்று 'கற்பிதம் செய்யப்பட்ட' ஒரு தமிழ் மனோநிலை பலருக்கு இருக்கும். ஹெமிங்வேயின் பெரும்பாலான நாவல்களில் 'பயணம்' என்ற விடயத்தை எடுத்துவிட்டால் அங்கே நாவலென்ற ஒன்றே மிச்சமிருக்காது. போருக்குள் இருந்த நாமெல்லோரும் போரைப் பற்றி எங்கும்/ எப்போதும் காவிக்கொண்டு திரியவேண்டும் என்கின்ற ஓர் மனோநிலையும் பலருக்கு இருக்கிறது. 'எனக்குத் தெரியாத ஒன்றையும் நான் எழுதுவதில்லை' என சார்ள்ஸ் ப்யூகோவ்ஸ்கி ஓரிடத்தில் சொல்லியிருப்பார். ஆனால் நம்மில் பலருக்கு அரசியலை, போரை விட வாழ்வில் வேறு எதுவும் கொண்டாட்டமாக இருந்துவிடக் கூடாதென்கின்ற குறுகிய பார்வையும் இருக்கிறது.

இந்நாவல், கொழும்பில் கதைசொல்லியின் வீட்டில் வேலை செய்வதற்கென கிளிநொச்சியில் இருந்து வந்த ராணி என்கின்ற பெண், அவரது சொந்த ஊர்க் கிணற்றுக்குள் விழுந்து இறந்துவிட்டாரென்ற செய்தியோடு தொடங்குகின்றது. கதைசொல்லியான கிரிஷான் அந்த மரண நிகழ்வுக்குப் போகின்றபோது அவரது ஞாபகங்களில், இந்த ராணியின் நினைவுகளும், அவரின் அப்பம்மாவின் நினைவுகளும், இந்தியாவில் இருக்கும் (முன்னாள்) காதலியின் நினைவுகளும் மாறி மாறி வெட்டி இடைவெட்டிச் செல்வதாகக் கதை சொல்லப்படுகின்றது.

**இந்நாவல், கொழும்பில் கதைசொல்லியின் வீட்டில் வேலை செய்வதற்கென கிளிநொச்சியில் இருந்து வந்த ராணி என்கின்ற பெண், அவரது சொந்த ஊர்க் கிணற்றுக்குள் விழுந்து இறந்துவிட்டாரென்ற செய்தியோடு தொடங்குகின்றது.**

எவ்வித திடீர் திருப்பங்களோ, நெஞ்சைப் பிழியும் சோகச் சித்தரிப்புக்களோ இல்லாது அனுக், போரை போருக்கு வெளியில் நின்று எவ்வாறு அதைப் பார்க்க முடியும் என்பதை இங்கே எழுதிச் செல்கின்றார். நாவலுக்குள் உடனே அவ்வளவு எளிதில் நுழையவோ அல்லது விரைவாக வாசித்து முடிக்கவோ முடியாத ஓர் எழுத்து நடையை அனுக் விரும்பியே தேர்ந்தெடுத்திருக்கின்றார். அந்த நடையும், அதன் நிமித்தம் வரும் விபரிப்புக்களுமே எத்தனையோ நாவல்களில் இருந்து, இதை வித்தியாசப்படுத்தி புக்கர் விருதின் இறுதிச் சுற்றுவரை கொண்டு சென்றிருக்கின்றது.

இந்த நாவலில் எந்த உரையாடலும் இல்லை என்பது முதற் சிறப்பு. அதாவது கதாபாத்திரங்கள் தங்களுக்குள் பேசுவதைப் போன்ற எந்த சம்பாஷணையும் இல்லாது கிட்டத்தட்ட 300 பக்கங்கள் நீளத்திற்கு எழுதமுடியுமா என்று சற்று யோசித்துப் பாருங்கள். அதேபோன்று நீள நீளமான வசனங்கள். சிலவேளைகளில் ஒரு பக்கம் முழுதுமே முற்றுப் புள்ளியில்லாது வாக்கியங்கள்

இருக்கும். இவ்வாறான நிறையப் பரீட்சார்த்த முயற்சி எடுக்கப்பட்டபோதும் அதைச் சோர்வில்லாது, புதிய வகையில் அனுக் எழுதிக்கொண்டே போயிருப்பதால்தான் நாவலோடு இயைந்து போகமுடிகின்றது.

அனுக், இந்த நாவலில் நிறையச் சம்பவங்களைச் சொல்லாது, குறிப்பிட்ட சில நிகழ்வுகளை மட்டும் எடுத்து, அதை இன்னும் இன்னும் உடைத்துப் பார்த்து நுணுக்கி நுணுக்கி எழுதுகின்றார். கதைசொல்லி தன் இந்தியக் காதலியுடன் பெங்களூரில் இருந்து டெல்லிக்கு போகும் ரயில் பயணத்தில், இருவரும் எதிரெதிர் இருக்கைகளில் அமர்ந்திருக்க, இருவருக்கும் நடுவே எந்தச் சம்பாசணைகளையும் உண்டாக்காமல், என்னென்ன எண்ணங்கள் அவர்களுக்குள் ஊடாடிக்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியே மூன்று பக்கங்களுக்கு ஒருவித 'உறைநிலை'யில் எழுகிறார் அனுக்.

வழமையான வாசக மனதென்றால், அதுவும் தமிழ் மனது என்றால் இதெல்லாம் ஒரு நாவலா என்று மூடிவைத்துவிட்டு 'சுடச்சுட அதிரவைக்கும்' நிகழ்ச்சியைக் கொண்டு வா என்று துடித்திருக்கும். இல்லாவிட்டால் அண்மையில் எழுதப்பட்ட ஒரு தமிழ் நாவலில் வருவது போல, இயக்கத்தில் இருக்கின்றாள் என்ற சந்தேகத்தில் ஒருத்தியை சிங்கள இராணுவம் பிடித்துக்கொண்டு போக, ஜேம்ஸ்பாண்டைப் போல ஒரு சிறுவன் அவர்களுக்கெதிரில் தோன்றி 'சடசடவென்று' துப்பாக்கியால் சுட்டுப்போட்டுவிட்டு அந்தப் பெண்ணைக் காப்பாற்றிக்கொண்டு போவதாய், போர் குறித்து தெரியாத வாசகருக்கு பாவனை செய்யும் சாகசக் கதைகளுக்கு ஏங்கியிருக்கும்.

அனுக், தான் மட்டுமல்ல, இந்த நாவலில் வரும் கதைசொல்லியும் இறுதியில் நிகழ்ந்த போர்ச்சூழலுக்குள் இருந்ததேயில்லையென முற்கூட்டியே அறிவிப்பதுடன், அடிக்கடி அதை நாவலுக்குள் ஞாபகப்படுத்தவும் செய்கின்றார். நாம் அறியாத ஒரு கலாசாரத்தின், ஒரு நிலத்தின் - முக்கியமாக போர் நடந்த பகுதியின் மக்களில் ஒருவராக - தம்மை காட்டிக்கொள்வது முதல், தமது படைப்பில் எழுதிய ஒரு பாத்திரம் 'உண்மையில் இருந்தது போல காட்சிப்படுத்துவதற்காக இப்போது உயிரோடு





Image source - ashutoshsrivastava.com

இருக்கும் யாரோ ஒருவரின் 'புகைப்படத்தை' சிலர் தம் நாவல்களின் பின்பக்கங்களில் பிரசுரிப்பது வரை அனைத்துமே வாசகர்களினால் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியவையாகும். இந்த நாவலில் அப்படிச் செய்வதற்கு எல்லாச் சந்தர்ப்பங்களும் இருந்தபோதும் அனுக் அதைச் செய்யாது தவிர்த்திருப்பதுதான் கவனத்தில் கொள்ளவேண்டியது.

ராணி என்கின்ற கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட பெண்மணிக்கு ஒரு கடந்தகாலம் இருக்கின்றது. அவருக்கு இரு மகன்களும், ஒரு மகளும் இருக்கின்றார்கள். இயக்கத்தில் சேர்ந்த ஒரு மகன் இறுதி யுத்தத்தில் காணாமற் போகின்றார். இன்னொரு மகன் இறுதி யுத்தத்தின்போது இயக்க - இராணுவ எல்லையைக் கடக்கின்றபோது ஷெல்துண்டு பட்டு ராணியின் மடியிலேயே இறந்து

போகின்றார். இவ்வாறான நிலைமைகளைப் பார்த்து மனம் பிறழ்ந்து வைத்தியசாலைக்கு அடிக்கடி சென்று சிகிச்சை எடுக்கின்ற ராணியை, கதைசொல்லியான கிரிஷான் தற்செயலாகச் சந்திக்கின்றார். இதற்கு முன்னர் போர் குறித்து எதுவுமே தெரியாது, கொழும்பில் கொஞ்சம் வசதியான வாழ்வு வாழ்ந்து மேற்படிப்புக்காக இந்தியா செல்லும் கிரிஷான், தன் காதலி இந்தியாவில் இருந்தபோதும் ஏன் மேற்கொண்டு அங்கேயே இருக்க விரும்பவில்லை என்பதை வாசகர் அறிய அனுக், கிரிஷானின் அகவுலகிற்குள் எம்மை அழைத்துச் செல்லும் இடங்களும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியவை.

போருக்குப் பின் வடக்கு/ கிழக்கில் அரசுசாரா நிறுவனமொன்றில் பணிசெய்வதற்குச் செல்லும் கிரிஷான் அதிலும் நம்பிக்கையிழந்து, கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் தனது அம்மாவோடும், அப்பம்மாவோடும் தனக்கான 'தனிமையில்' வாழ்ந்துகொண்டிருந்த நாட்களில், அப்பம்மாவின் உதவிக்கென அழைத்து வரப்படுபவரே ராணி.

ராணியின் கதையைச் சொல்ல பூசலார் நாயனாரின் கதையும், காதலியின் பிரிவைச் சொல்ல காளிதாசரின் மேகதூதத்தையும், இயக்கத்தின் உளவியலைச் சொல்ல 'எனது மகள் தீவிரவாதி' என்கின்ற பெண் கரும்புலி பற்றிய ஆவணப்படத்தையும் அனுக் துணைக்கு எடுத்துக் கொள்கின்றார்.

அது மட்டுமல்லாமல், இலங்கையில் யுத்தம் தொடங்கிய வரலாற்றைச் சொல்ல, குட்டிமணியின் கதையை, ஜூலை 83 இனப்படுகொலையில் அவரது கண்களுக்கு செய்யப்பட்ட அநியாயத்தை மிக நிதானமாகச் சொல்லிச் செல்கின்றார். மேலும் வடக்கிற்கான பயணத்தில் ஆஸ்திரேலியாவுக்கு படகுப்பயணத்தைச் செய்யாதீர்களென்று எச்சரிக்கை செய்யப்படும் விளம்பரத் தட்டிகளிலிருந்தும் கூட, ஏன் இப்படி மக்கள் உயிரைக் கொடுத்து கடலினூடு போகவிரும்புகின்றார்கள் என்பதையும் வேறொரு திசையில் நின்று விபரிக்கின்றார்.

போராளிகளின் நடுகல்கள் ஏன் வன்னி நிலப்பரப்புகளில் இருந்து புல்டோசர்கள் கொண்டு அழிக்கப்பட்டது என்ற கேள்வியிலிருந்து நினைவுகள், வடுக்கள், அழிவுகள், அவமானப்படுத்தல்கள் பற்றியும் பேசுகின்றார். இத்தனை பேசிய பிறகும் இந்த நாவலின் கதைசொல்லியான கிரிஷானின் தந்தையார் எவ்வாறு கொல்லப்பட்டார் என்கின்ற ஒரு கதையையும் சொல்கின்றார். அது எதிர்பார்க்கப்படாத ஒன்று. ஆனால் அவ்வாறு ஆகுதலும் இயல்பென எழுதிச் செல்வதுதான்

**ராணியின் கதையைச் சொல்ல பூசலார் நாயனாரின் கதையும், காதலியின் பிரிவைச் சொல்ல காளிதாசரின் மேகதூதத்தையும், இயக்கத்தின் உளவியலைச் சொல்ல 'எனது மகள் தீவிரவாதி' என்கின்ற பெண் கரும்புலி பற்றிய ஆவணப்படத்தையும் அனுக் துணைக்கு எடுத்துக் கொள்கின்றார்.**





Image source - www.amazon.co.uk

இந்த நாவலை தனித்துக் காட்டுகிறது.

நாவலின் பிற்பகுதி மிக நிதானமாக ஒரு தமிழ் மரணச்சடங்கை விபரிக்கின்றது. நம் மரணச்சடங்கில் நிகழும் ஒவ்வொரு சிறுவிடயமும் சொல்லப்படும்போது, இதையெல்லாம் அறிந்த நமக்கு ஒரு அலுப்பு ஏற்பட்டாலும், அந்த நிகழ்வின் மூலம் நாவலை முடிக்கும்போது நாம் வேறொரு உலகினுள் நுழைகின்றோம். வேறு ஒருவரின் துயரம் நமதாகின்றது. கடந்தகாலத்தில் இருந்த நாம் யார் என்பது மட்டுமின்றி, நம் சமகாலத்து அலைச்சலின் இருப்புக் குறித்த கேள்விகளையும் இந்த நாவல் எழுப்புகின்றது. ஆகவேதான் தனிமனிதத் துயரம்/தேடல் நம் எல்லோர்க்கும் பொதுவான துயராக/தேடலாக விரிகின்றது.

**ராணியின் மரணங்கூட, இயல்பாக நடந்திருக்குமா அல்லது அவர் போரின் வடுக்களால் தற்கொலையை நாடியிருப்பாரா என்ற கேள்வி, தொடக்கத்தில் இருந்து எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தாலும், இறுதிவரை தெளிவாகச் சொல்லாது ஓர் இடைவெளியாகவே இந்நாவலில் விடப்பட்டிருக்கும்.**

'எனது மகள் தீவிரவாதி' ஆவணப்படத்தில் அந்தப்பெண்கள் இருந்து பேசும் குளத்தை தாண்டிச் செல்லும் கதைசொல்லி சிலவருடங்களுக்கு முன் இதேயிடத்தில் இருந்துதானே அந்த இரு பெண்களும் கதைத்திருப்பார்கள் என்கின்றபோது நாம் வேறு 'காலவெளிக்குள்' நுழைகின்றோம். அதுமட்டுமின்றி சாவை நிச்சயித்த அவர்கள், அந்த ஆவணப்படம் வந்த சில காலத்திற்குள் எப்படியேனும் இறந்திருப்பார்கள்; அவர்களுக்கு இந்த 'வரலாற்றில்' என்ன இடம் இருக்கப்போகின்றது என்பதும், எப்படி அவர்கள் தங்கள் இலட்சியத்தில் உறுதியாக இருந்தார்கள் என்பதும் விபரிக்கப்படுகிறது. ஓர் இராட்சத அலையென போர் வந்து அவர்களைச் சுற்றிச் சுழற்றியடித்து இழுத்துச் செல்லாதிருந்திருந்தால் அந்தப் பெண்களின் வாழ்வு இப்போது எப்படியாக இருந்திருக்குமென்று நம்மையும் கிரிஷானூடாக, அனுக் அலைக்கழிக்க வைக்கின்றார்.

ராணியின் மரணங்கூட, இயல்பாக நடந்திருக்குமா அல்லது அவர் போரின் வடுக்களால் தற்கொலையை நாடியிருப்பாரா என்ற கேள்வி, தொடக்கத்தில் இருந்து எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தாலும், இறுதிவரை தெளிவாகச் சொல்லாது ஓர் இடைவெளியாகவே இந்நாவலில் விடப்பட்டிருக்கும். அதை ஒருவகையில் போரில் பாதிக்கப்பட்ட, வலிந்து காணாமற் செய்யப்பட்ட உறவினர் எல்லோரினதும் வேதனையாகவும், ஒரு முடிவு காண முடியாக் கேள்வியாகவும் நாம் பார்க்கமுடியும்.

ராணி போருக்குள் இருந்து வந்தவுடன் ஓர் உடலாக மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவருடைய நினைவுகள் எல்லாம் போரோடு மனதிற்குள் உறைந்துபோய்விட்டன என்பதைப் பற்றிப் பேச, தன் மனதிற்குள் பெருங்கோயில் கட்டி அங்கேயே கும்பாபிஷேகம் செய்ய சிவனை அழைத்த பூசலார் நாயனார் அனுக்கிற்கு உதவிக்கு வருகின்றார். இவ்வாறு சமகாலத்தை அவர் கடந்தகாலத்தின் கலாசாரம்/பண்பாடு/வரலாற்றுப் புள்ளிகளினூடாகவும் கண்டடைய முயல்கின்றார். அதுவே இந்த நாவலுக்கு இன்னும் செழுமை கொடுப்பதாக இருக்கின்றது. அதுபோலவே கிரிஷானின் காதலியாக வரும் அஞ்ஜம் வருகின்ற பகுதிகளுங்கூட. அதனூடாக அனுக் செய்வது தனிமனித உறவுகள் பற்றிய மிக நுட்பமான ஒரு அறுவைச் சிகிச்சையாகும்.

கொழும்பின் மரீன் டிரைவ் எனப்படும் கடலோரமாக நடந்தபடி, சிகரெட் பிடித்தபடி, விஸா பிள்ளையாருக்கெல்லாம் கதை சொல்லியபடி தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டிருக்கும் ஒருவனை நீங்கள் எளிதில் உங்களுக்குரிய ஒருவராக அடையாளங் கண்டுகொள்ளத் தவறினால் இந்த நாவலுக்குள் நீங்கள் நுழைய மிகவும் சிரமப்படுவீர்கள். அந்த அலைச்சலை, தனி மனித இருத்தலின் அவதியை, வாழ்வின் அர்த்தம்/அர்த்தமின்மைகளின் கேள்விகளின் மீது ஒருசேர விருப்பும்/சலிப்பும் கொண்ட ஒரு வாசக மனதைத் தன்னகத்தே ஒருவர் கொள்ளாதிருப்பின் மிக எளிதாக, சோர்வூட்டக்கூடிய நாவலாக மாறிவிடக்கூடிய ஆபத்தும் இந்த நாவலுக்கு இருக்கின்றது. ஆனால் அதுவே என்னை ஈர்ப்பதால், அண்மையில் வெளிவந்த புனைவுகளில் இதை என் நெருக்கத்திற்குரிய ஒரு நாவலாக அடையாளப்படுத்த முடிகின்றது.

(தொடரும்)

எமது சுற்றாடல் உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளால் ஆக்கப்பட்டுள்ளது. இக் கூறுகளின் ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கமைந்த செயற்பாடுகளே சுற்றாடலின் நிலைபேறான அபிவிருத்தியில் பங்காற்றும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றும் சுற்றாடல் பற்றி சரிவர அறிந்துகொள்ளப்படுதலும் சிறப்பான வழிமுறைகளில் பயன்படுத்தலும் இக்கூறுகளை பேணிப்பாதுகாத்தலும் முக்கியமானவைகள். அந்த வகையில் வடக்குகிழக்கு அபிவிருத்தியில் உயிர்ப்பல்வகைமையின் பங்களிப்பு பற்றிய பயனுள்ள கருத்துகளை 'வடக்கு–கிழக்கு பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்' எனும் இக் கட்டுரைத் தொடர் தாங்கிவருகின்றது.



● சி. ஜேம்சன் அரசகேசரி

விவசாய விஞ்ஞானியும் சூழலியலாளருமான கலாநிதி.சி. ஜேம்சன் அரசகேசரி அவர்கள் விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் முன்னைநாள் மேலதிக பணிப்பாளர் ஆவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் விவசாயத்துறையில் மூன்று தசாப்தங்களாக பயனுள்ள பங்காற்றி வருவதுடன் மிளகாய், வெங்காயம், நிலக்கடலை, குரக்கன் மற்றும் மா போன்ற பயிர்களில் புதிய வகைகளைக் கண்டுபிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. விவசாயம் சம்பந்தப்பட்ட அநேக பிரச்சினைகளின் தீர்வுகளுக்கு வழிவகுத்துள்ள அரசகேசரி அவர்கள், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் விவசாய மற்றும் சுற்றாடல் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களுக்கு ஆலோசகராகவுள்ளதுடன் சமூக சேவையாளராகவும் திகழ்கிறார்.

பகுதி 1



பதைட்டுப் பயிர்ச்செய்கை

Image source - geopard.tech

# விவசாயமும் சுற்றாடல்சார் பல்வகைமையும்

இந்தப் பகுதி உணவளிக்கும் விவசாயம், உற்பத்தி பற்றியும் சுற்றாடலின் பல்வகைமை பற்றியும் ஆராய்கிறது. உலகின் சகல பகுதியிலிருந்தும் உணவு உற்பத்தியாக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இயற்கையாக கிடைக்கும் உணவுப் பொருள்கள் இயற்கை எமக்குத் தந்த அருங்கொடையாகும். அறுசுவை கொண்ட இவ் உணவுகளே உலகத்தை நிலைபெறச் செய்கிறது. தாவரங்களானாலும் சரி, விலங்குகளானாலும் சரி, உணவின்றி இயங்கமுடியாது. இவ் உலகில் உணவுற்பத்தி இன்றியமையாத ஒன்றாகும். உணவு உற்பத்தியில் பிரதான காரணகர்த்தா சூரியனே. சூரிய ஒளி கிடைக்கும் பட்சத்திலே உற்பத்தியாக்கிகளின் (தானாக உணவைத் தயாரிக்க வல்லன) செயற்பாடு உலகிற்கு பயனளிக்கும். ஆனால் உலகின் எல்லாப் பாகத்திலும் சூரிய ஒளி கிடைக்கப்பெறும் தன்மை ஒரே சீரானதாக இல்லை. பல்வேறு வகைப்பட்ட அளவில் சூரிய ஒளி கிடைப்பதால் வேறுபட்ட பருவ காலங்கள் உருவாகின்றன. பருவகாலங்களின் அடிப்படையில் உற்பத்தியாக்கிகளின் பரம்பல், செயற்பாடு, உற்பத்தித் திறன்,

உற்பத்தியாக்கப்படும் உணவுகளின் தன்மை, அவற்றின் பயன்பாடு என்பன வேறுபடுகிறது. இவ் வேறுபாட்டுக்கு அமைவாகவே உணவு உற்பத்தியின் அளவு, பயன்படுத்தும் வழிமுறைகள் போன்றன வேறுபடுகின்றன. உற்பத்தியாக்கிகளோடு தொடர்புபட்ட சுற்றாடல்  வெவ்வேறு வகை அங்கிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அங்கிகள் கூட்டமும் அவற்றின் வாழ்விடங்களில் ஏற்படும் சமநிலையும் மிக நிலைபேறான ஒன்றாக இருத்தல் அவசியம். அத்துடன் உயிர் வாழ் அங்கிகளும் அவற்றைச் சூழவுள்ள பௌதீக, இரசாயன, உயிரற்ற சடப் பொருள்களுடனான தொடர்பும் முக்கியமானவை. சாகியச் சமநிலையில் பங்குபற்றும் ஒவ்வொரு பகுதிகளும் தனிப்பட்ட ரீதியில் முக்கியமானவை. சாகியத் தொகுதியின் அங்கத்தவர்கள் ஒரே வகையாய் இருந்தால் சமநிலை பேணப்படமாட்டாது.

சாகியத் தொகுதிகளில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு உயிருள்ள, உயிரற்றவைகளுக்கும் வலையமைப்புடனான தொடர்பு ஒன்று நிலவுகின்றது. இவ் வகைத் தொடர்பாடலுக்கு பல்வகைத் தன்மை பேணப்படுதல் அவசியம். இதனாலேயே எமது கட்டுரைத் தொகுதியின் இப் பகுதி உணவு சம்பந்தமான மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பன்முகத்தன்மையை ஆராய முனைகிறது. இயற்கையாகவே கிடைக்கும் உணவுப் பொருள்களின் பயன்பாடு பெரும்பாலும் காட்டுச் சூழலில் வாழும் உயிர்ச் சூழலில் காணப்படும்.

இயற்கையாக கிடைக்கும் உணவு எம் முன்னோர்களின் காலத்தில் போதுமானதாக இருந்தது. அக்காலத்திலிருந்த உயிரங்கிகளின் சுற்றாடலுடனான பரிணாம மாற்றம் மற்றும் குடித்தொகையின் அளவு என்பன இப் பல்வகைமைத் தன்மையில் செல்வாக்குச் செலுத்தி, தக்கண பிழைத்தலும்  தகாதன அழிதலும் ஏற்பட்டு, தற்போதுள்ள பல்வகைமைத் தன்மை உண்டாகியிருக்கிறது. இப் பல்வகைமை உருவாக்கச் செயன்முறையில் ஈடுபட்டிருந்த, ஈடுபடவுள்ள உயிருள்ளவைகளின் எண்ணிக்கையைக் குறித்துக்காட்ட முடியாதுள்ளது. ஏனெனில் முன்னைய காலத்திலிருந்த டைனோசர்கள் அழிந்துவிட்டன. புதிகாகத் தோன்றும் வைரசுகளின் வகையும் அதிகம். ஆகவே இப் பல்வகைமைத் தன்மை நிலைபேறான ஒன்றாக கருத முடியாது. ஆனாலும் நிலைபேறான சாகியத்திற்கு இப் பல்வகைமை அவசியமானது. சாகியத்தின் பல்வகைமைத் தன்மையின் வலையமைப்பின் பிரதான கூறு உணவுச் சங்கிலியாகும்.

இயற்கையின் உணவுப் பங்களிப்பு போதுமானதாக இராத சந்தர்ப்பத்தில் மனிதன் இயற்கையின் செல்வாக்கைப் பயன்படுத்தி தனக்குத் தேவையானவற்றை தானே தேட வேண்டியதாயிற்று. இம் முயற்சியில் வேறு இடங்களுக்கு படையெடுத்த மனிதன் உணவு உற்பத்தியில் ஈடுபட்டான். தானாக தனக்குத் தேவையான உணவைத் தயாரிக்கும் உற்பத்தியாக்கிகள் மனித குலத்திற்கு கைகொடுத்தன. விவசாயம் என்பது அங்குதான் ஆரம்பித்தது. சுற்றாடலில் கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி தாவரங்களிலிருந்து உணவு தயாரிக்கும் பொறிமுறையே விவசாயம் என வரையறுக்கப்படும். ஆதிகால விவசாயத்திலிருந்து தற்கால விவசாயம் வரை அநேக பரிணாம மாற்றங்களை வரலாறு பதிவாக்கியுள்ளது. இப் பதிவாக்கலின் சிறுபகுதியே எம் அறிவுக்கு எட்டியுள்ளது.

மண்ணிலே மட்டும் விவசாயம் செய்த மனிதன் தற்போது மண்ணில்லாத விவசாயத்தில் ஈடுபட்டுள்ளான். ஆற்றோரம் குளக்கரையில் மட்டுமே பயிரிட்டுவந்த மனிதன் நகர்ப்புற மாடிகளில் விவசாயம் செய்கிறான். ஒட்டுமொத்த மனித சமுதாயமும் விவசாயத்தில் மட்டுமே தங்கி வாழ்கிறது. ‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்’ என்ற வள்ளுவரின் கூற்றுக்கமைய விவசாயத்தின் முக்கியத்துவம் இன்றியமையாததே. மழையை நம்பி மட்டுமே செய்யப்படும் பயிர்ச் செய்கையுடன் ஆறு குளங்களிலிருந்து பெறப்பட்ட நீரோடு விவசாயத்தின் உற்பத்தி பூர்த்தியான காலம் ஒன்று இருந்தது. இக் காலகட்டத்தில் ஆரம்பித்ததே ஆற்றோர நாகரிகம். இவற்றின் பரம்பல் மேம்பட,

**மண்ணிலே மட்டும் விவசாயம் செய்த மனிதன் தற்போது மண்ணில்லாத விவசாயத்தில் ஈடுபட்டுள்ளான். ஆற்றோரம் குளக்கரையில் மட்டுமே பயிரிட்டுவந்த மனிதன் நகர்ப்புற மாடிகளில் விவசாயம் செய்கிறான். ஒட்டுமொத்த மனித சமுதாயமும் விவசாயத்தில் மட்டுமே தங்கி வாழ்கிறது.**

சற்றுத் தூரம் அப்பாலே சென்று பயிரிட வேண்டிய கட்டாயத்துக்கு மனிதன் தள்ளப்பட்டான். இந்த நேரத்திலேயே ஆறுகள், குளங்களிலிருந்து ஏதோவொரு வகையில் விவசாயி நீரைக் கொண்டு செல்லவேண்டியிருந்தது. சிறு சிறு மரங்களிலிருந்து உருவாக்கப்பட்ட வாய்க்கால் போன்ற அமைப்புகளைப் பயன்படுத்தி ஓரளவு அண்மித்துள்ள நிலங்களுக்கு நீர் பெறப்பட்டது. அப்படியே நீர்ப்பாசனம் உருவாகிற்று. தாழ்ந்த பகுதிகளிலேயே பூமியின் புவியீர்ப்பு விசையின் அடிப்படையில் ஆரம்பகாலத்தில் நீரைப் பெற்றனர். பூமியிலிருந்து பொன்னை உருவாக்கும் விவசாயத்திற்கு நீர் போதுமானதாக இராத பட்சத்தில் மனிதன் பள்ளங்கள், பொக்கணைகள் போன்ற நீர்த் தேக்கங்களிலிருந்து நீரைப் பெற்றான். இந் நீர் வரையறுக்கப்படவே, நிலத்தை தோண்டி நீர் எடுக்க வேண்டிய கட்டாயம் மனிதனுக்கு ஏற்பட்டது. தோண்டப்பட்ட பகுதிகள் துரவுகளாக உருவெடுத்து சிறு கிணறுகளாக மாறி விவசாயக் கிணறுகளாகின. விவசாயக் கிணறுகளிலிருந்து கிடைக்கப்பெறும் நீர் போதுமானதாக இராத பட்சத்தில் அநேக தந்திரோபாயங்கள் விவசாயத்தில் புகுந்தது. விவசாய நடைமுறைகளின் பல்வகைமை நீரைச் சிக்கனமாக பயன்படுத்தும் முறைகளிலும் தேவைப்பட்டது. இதனடிப்படையில் சொட்டு நீர்ப்பாசனம், தூறல் நீர்ப்பாசனம் என்பன தற்போதைய விவசாயிகளால் மேற்கொள்ளபப்பட்டு வருகிறது.

எல்லா வகை மண்ணிலும் ஒருவகைப் பயிர் வளர்ந்துவிட முடியாது. அதேபோல ஒரு பயிர் எல்லா மண்ணிலும் பிரியப்பட்டு வளர்வதும் இல்லை. இதனை அறிந்து கொண்ட மனிதன் வேறுபட்ட பயிர்களை வேறுபட்ட இடங்களில் நட ஆரம்பித்தான். நடுகையின் போது இயற்கைத் தெரிவு சம்பந்தப்பட்டு புதிய புதிய வகைகளை மனிதன் தெரிந்துகொண்டு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டான். பல்லாண்டுத் தாவரங்களை அவதானித்த மனிதன் அவற்றையும் பயன்படுத்த முயற்சித்தான். தான் செல்லுகின்ற இடங்களிலெல்லாம் அவற்றின் விதைகளையோ அவற்றின் கன்றுகளையோ தன்னுடன் எடுத்துச்சென்று பழப்பயிர்களின் பல்வகைமைக்கு வழிவகுத்தான். ஏலவே கூறப்பட்டதற்கு அமைவாக காலநிலையின் மாற்றம் பூமியின் பல்வேறு இடங்களில் பல்வேறு வகைப்பட்ட விவசாயச் செய்கைக்கு மனித குலத்தை உள்வாங்கியது. இப் பல்வகைமை பண்டமாற்றுக்கு வழிகோலியது. இதனால் உணவுப் பழக்கங்களின் பல்வகைமை உருவெடுத்தது. மழையை நம்பி, வாய்க்காலில் நீரெடுத்து என பல்வகை வழிகளில் நீரைப் பெற்றுக்கொண்ட மனிதன் தேங்கி நிற்கும் நீரில் வளரக்கூடிய, செய்கை பண்ணப்பட்டு பயன்தரக்கூடிய நெல்லை கண்டுபிடித்தான். ஆறுமாத காலம் வரை நீர் தேங்கி நிற்கும் இடங்களில் கூட நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது ஆச்சரியத்தை தருகிறது. நெற்செய்கை அறுவடையின் போது தோணிகளும் வள்ளங்களும் பயன்படுத்தும் முறை பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலவுகிறது. இவ்வாறு நெற்செய்கையில் பல்வகைமை உருவெடுத்தது. மனிதனோடு இசைந்து வாழும் மிருகங்கள் பழக்கப்பட்டு அவற்றின் பயன்பாடு விவசாயத்தில் நுழைந்தது.

### பயிர்ச்செய்கையும் பல்வகைமையும்

அறுசுவை உணவுக்காகவும் அதனுள் அடங்கியிருக்கும் பிரதான மற்றும் நுண் மூலகங்களுக்காகவும் உணவு தேவைப்படுகிறது. தாவரங்களிலிருந்து பெறப்படும் உணவு வகைகளுடன் விலங்குணவுகளும் சேர்க்கப்படும்போது எல்லா வகைப் போசணைகளும் கிடைக்கும் வழி பிறக்கிறது. தாவரங்களின் செய்கை உணவுத் தேவையை



கலப்புப் பயிர்ச்செய்கை

Image source - harvesttotable.com

இடைவெளிகள் சரியாக பேணப்படாவிட்டாலும், போட்டியில்லாத வகையில் தங்களுக்குள்ளே இசைந்து இப் பயிர்கள் வளர்வது பயனுள்ள பொறிமுறையாகும். உதாரணமாக, மானாவாரி நெல் அறுவடையின் பின் மீந்திருக்கும் ஈரப்பற்றை பயன்படுத்தும் முகமாக சணல் பாசிப்பயறுடன் சேர்த்து விதைக்கப்படும். பயறை, சேதப்படுத்தவரும் கிளி போன்ற பறவைகளிடருந்து உயர்ந்து வளரும் சணல் பாதுகாக்கும். அத்துடன் இரண்டு அவரை இனப்பயிர்கள் சேர்ந்து வளர்வதால் மண் வளம் பெரிதும் பாதுகாக்கப்படும். நிலப்பயன்பாடு தனிப்பயிர்ச்செய்கையை விட சற்று அதிகரிக்கலாம்.

மட்டுமல்ல மனித குலத்தின் ஏனைய தேவவைகளுக்கும் பயனுடையது. மருத்துவ குணமுள்ள மரம், செடிகளும் காணப்படுவதால் உணவே மருந்தாகும் வழிகளும் உண்டு. இவ் வகைப் பழக்கம் பல்வேறுபட்ட பயிர்ச்செய்கை வகைகளுக்கு வழி வகுத்துள்ளது.

## பயிர்ச்செய்கை வகைகள்

### அ. தனிப்பயிர்ச்செய்கை (Sole cropping) :

ஓரிடத்தில் ஒருவகைப் பயிரை பயிரிட்டு அப் பயிரின் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வது தனிப்பயிர்ச்செய்கை ஆகும். மானாவாரியில் விளையும் நெல், உழுந்து மற்றும் பாசிப்பயிர் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றினுள் களைகள் கூட பிற பயிராக கருதப்பட்டு அகற்றப்படும். இவ்வகைப் பயிர்ச் செய்கையில் காலநிலைகள் சரிவர இருந்தால் பூரண விளைவைப் பெற முடியும். ஆனால் பொய்த்துப்போன காலநிலைகளால் முற்றாகச் சேதமடைதல் மிகப்பெரிய சவாலாகும்.

### ஆ. கலப்புப் பயிர்ச்செய்கை (Mixed cropping) :

ஒரே காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்துப்போகக்கூடிய போட்டியை தருவிக்காத பயிர்வகைகளின் விதைகள் ஒருகலவையாக விதைக்கப்பட்டு பயன்தரும் வழிமுறையே கலப்பு பயிர்ச்செய்கை ஆகும். இங்கு ஒரு பயிரின் வளர்ச்சி மற்றும் மற்றப் பயிரோடு இசைந்துபோதல் என்பன பிரதானமாகும். பயிர்

### இ. ஊடு பயிர்ச்செய்கை (Inter cropping) :

காலநிலை மாற்றத்தாலோ அல்லது நோய் பீடைத் தாக்கத்தாலோ ஒரு குறிக்கப்பட்ட பயிர் சேதமாக்கப்படுகையில், மறுபயிரின் பயன்பாடு பாதுகாப்பான பயிர்ச்செய்கை வருமானத்துக்கு வழிவகுக்கும். இரு பயிர்கள் குறித்த இடைவெளிகளில் வரிசைக்கிரமமாக நடப்பட்டுள்ளதால் ஒரு பயிரின் இடைவளியில் மறுபயிர் நடப்படுவதால் இவ்வகைப் பயிர்ச்செய்கை ஊடு பயிர்ச்செய்கை எனப்படும். ஊடு பயிர்ச் செய்கையாலும் நிலத்தின் பயன்பாடு மற்றும் நீரின் பயன்பாட்டு வீதம் அதிகரிக்கும். குறைந்த செலவுடன், குறைந்த வளங்களுடன் சவால்களை எதிர்கொண்டு விளைவை தட்டிச் செல்லும் வழிமுறை இதுவாகும். உதாரணமாக சோளத்துடன சோயா அவரை, கொய்யா மரங்களுக்கிடையில் ஏதாவது அவரை இனப்பயிர், தென்னை மரங்களுக்கிடையில் மாதுளை மற்றும் கொய்யா போன்றன.

இரண்டு பயிர்கள் தனித்தனியாக செய்யப்படும் வேளையில் குறித்த இடைவெளிகளில் நடப்படும் பயிர்களின் எண்ணிக்கையில் சிறிதளவேனும் மாற்றம் ஏற்படாதவகையில் பயிர் வரிகளை சரிசெய்து இரு பயிர்களை வெற்றிகரமாக செய்துமுடிக்கும் பொறிமுறை ஊடுபயிர்ச்செய்கையில் தற்போது புகுத்தப்பட்டுள்ளது.

**ஈ. பலதட்டுப் பயிர்ச்செய்கை (Multi layer cropping) :** ஓரிடத்தில் பெறப்படும் சூரிய ஒளியை முற்றுமுழுதாக பயன்படுத்தும் பொறிமுறை பலதட்டுப் பயிர்ச்செய்கை ஆகும். அதாவது வெவ்வேறு தட்டுகளில் அல்லது மட்டங்களில் வளரும் பயிர்வகைகளை ஒரே இடத்தில் வளர்த்தெடுத்தல் ஆகும். இவ்வகை பயிர்ச்செய்கை பல்லாண்டுப் பயிர்களுக்கு மிகவும் பொருத்தமானது. உதாரணமாக தென்னை, கமுகு மற்றும் வெற்றிலைக்கொடி அல்லது மிளகுச்செடி என்பன ஒரே இடத்தில் வளர்க்கப்படுவதால் சூரிய ஒளிக் கீற்றுகளின் சக்தி விரயமாகாமல் பயன்படுத்தப்படும்.

**உ. ஒருங்கிணைந்த பயிர்ச்செய்கை அல்லது பண்ணை :** பிரதான பயிர்ச்செய்கையோடு விலங்கு வகைகளும் சேர்த்து வளர்க்கப்படுதல் ஒருங்கிணைந்த பண்ணையாகும். சுற்றாடலிலுள்ள நிலம் அல்லது பயிர்ச்செய்கையுடன் சிறு நீர்நிலைகளை உருவாக்கி அவற்றுள் மீன்கள் வளர்க்கப்படும். நீர்நிலைகளின் மூலைகளில் குடில்கள் அமைத்து புறா, கோழி மற்றும் முயல் இனங்கள் வளர்க்கப்படும். இவற்றுக்கு வழங்கப்படும் உணவுகளும் எச்சங்களும் மீன்களுக்கு உணவாகும். மீன்கள் வளர்க்கப்படாத சந்தர்ப்பத்தில் வாத்துகள் வளர்க்கப்படலாம். நீர்நிலைகளின் மேற்பரப்பில் அசோலா வளர்க்கப்படும். மீன்கள் உணவாக்கிய அசோலாவின் மீதியை அவ்விடத்தில் வளர்க்கப்படும் மாடு, ஆடுகள் போன்றனவற்றுக்கும் கோழிகளுக்கும் உணவாக்கலாம். மாடு, ஆடுகளின் எச்சங்கள் தாவரங்களுக்கு எருவாகும். இவ்வகையில், பயிர்களுக்கு நீர் இறைப்பதற்காக சூரிய ஒளிக் கலங்களில் பிறப்பிக்கப்படும் மின்சக்தி பயன்படும். கிடைக்கப்பெறும் வளங்களை பூரண பயன்பாட்டுக்கு உட்படுத்தி சேதங்களை, சுற்றாடலின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு அதிகரித்த இலாபம் பெறும் வழிமுறையே ஒருங்கிணைந்த பண்ணை முறையாகும்.

## விசேடித்த பயிர்ச்செய்கை வழிமுறைகள்

சேதனப் பயிர்ச்யெ்கை : பசுமைப் புரட்சியின்போது அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறுவகையான அசேதன இடுபொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து சேதன வழிமுறைகளில் மட்டுமே பயிர்செய்கைகளுக்கு போசணையளிப்பதும் பூச்சித் தாக்கங்களிலிருந்து பாதுகாத்தலும் சேதனப் பயிர்ச்செய்கைகளின் பிரதான அம்சங்களாகும். இதற்கு முன்னைய காலங்களில் பயன்பட்டு வந்த பயிரினங்களிலிருந்தே கலப்புப் பிறப்பாக்கம் செய்யப்பட்டு புதிய இனங்கள் உருவாக்கப்பட்டன. இப் புதிய இனங்களின்



**ஊடு பயிர்ச்செய்கை**

Image source - www.e-education.psu.edu

வருகையால் பழைய பயனுள்ள பயிர்களின் பயன்பாடு அழிந்து போயிற்று. இதனால் மிக முக்கிய கருவூலங்களும் அழிந்து போயிற்று. தற்காலத்தில் சேதனப் பயிர்ச்செய்கை மீள அறிமுகப்படுத்தப்படும் பட்சத்தில், இப் பயனுள்ள கருவூலங்களை தேடுதல் பிரதான சவாலாக அமையும். தற்கால புதிய இனங்கள் சேதனப் பயிர்ச்செய்கையின் போது எதிர்பார்க்கப்படும் விளைச்சலை தராமல் இருப்பது அடுத்த சவாலாகும். ஆகவே

சேதனைப் பயிர்ச்செய்கையின் பயன்பாடு, அதிகரித்த சனத்தொகைக்கு உணவளிப்பது போதுமானதாக இராது. எவ்வாறாயினும் இச் செய்கை முறை மனிதச் சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதுடன் பயனுள்ள போசணை மிக்க நஞ்சூட்டலற்ற உணவு பெற வழிவகுக்கும்.

**மண்ணின்றிய பயிர்ச்செய்கை (Soilless Agriculture) :** தாவர வளர்ச்சிக்கு ஏதாவது ஒரு ஊடகம் அவசியமாகிறது. அங்குரப் பகுதியை தாங்கி நிற்கும் வேர்த் தொகுதியானது ஏதாவது ஒரு ஊடகத்தில் ஊன்றப்பட வேண்டும். நிலையான ஒரு ஊடகம் கிடைக்கப் பெற்றால் வேர்த் தொகுதிக்கு உறிஞ்சப்படும் மூலகங்களுக்கு உரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு, வளரும் அங்குரத்தை தாங்கி நிற்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு மண்ணின்றிய பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும். இக் கருத்தானது தற்போது பிரயோகப்படுத்தப்படுகிறது. ரெஜிபோர்ம் போன்ற தட்டுகளில் தாவரத்தை நிலை நிறுத்தி தாவரங்களின் வேர்ப்பகுதிகளுக்கு நீரும் தேவையான போசணைச் சத்துகளும் சீராக கிடைக்கப்பெறும் வழிமுறை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ் வழிமுறைகளில் ஒன்றே நீர்க்குழாய் பயிர்ச்செய்கை முறை ஆகும்.

**பாதுகாப்புப் பயிர்ச்செய்கை (Protected Agriculture) :** காலநிலையின் வேறுபாட்டுக்கு அமைவாக பூச்சிகள் மற்றும் நுண்ணுயிர்களின் பல்வகைமைத் தன்மை பெரிதளவில் உருவாகும். உதாரணமாக கோடை காலத்தில் பூச்சிகளின் பெருக்கமும் மாரிகாலத்தில் பங்கசு மற்றும் பக்டீரியா போன்றவற்றால் உருவாகும் நோயும் அதிகரித்து காணப்படும். இச் சூழலின் வேறுபாட்டுக்கு இவைகள் தங்களை தற்காத்துக்கொள்ள சுற்றாடலில் உள்ள தாவரத் தொகுதிகளின் பல்வகைமையை வெற்றிகரமாகப் பயன்படுத்துகின்றன. அத்துடன் இவற்றின் தாக்கங்களிலிருந்து விடுதலையாகி எல்லாக் காலத்திலும் உட்சூழலை சாதகமாக்கும் பொறிமுறையோடு உருவாக்கப்பட்ட பயிர்ச்செய்கையின் பல்வகைமையில் ஒன்றாக பாதுகாப்பு பயிர்ச்செய்கை நிலவுகிறது.

இழைய வளர்ப்பு : குறிக்கப்பட்ட காலத்தில் ஏதாவது ஒரு பகுதியிலிருந்து, புதிய தாவரத் தொகுதிகள், குணாம்சங்கள் மாற்றமில்லாமல் உருவாக்கப்படும் பொறிமுறை தற்போதுள்ளது. ஆய்வுகூடங்களில் பாதுகாப்பான குழாய்களுள் தாவர இழையங்களை வளர்த்து பல்லாயிரக்கணக்கில் தாவரங்களை உருவாக்கும் பொறிமுறை இழைய வளர்ப்பு ஆகும்.

மேற்கூறிய வழிகளில் பல்வகைமையுடனான பயிர்ச்செய்கை முறைகளுக்கு ஈடுகொடுக்கும் முகமாக கிடைக்கப்பெறும் தாவரங்களின் பல்வகைமை கீழ்வரும் பகுதிகளில் ஆராயப்படுகிறது.




**ஒருங்கிணைந்த பண்ணை (மாதிரி அமைப்பு)**

Image source - tamil.asianetnews.com

## நெல்லிலுள்ள பல்வகைமை

நெற்பயிரில் *Oryza Sativa*, *Omnivora* போன்ற ஓர் ஆண்டு மற்றும் பல்லாண்டு நெல் வகைகள் காணப்படுகின்றன. ஆனால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் *Oryza Sativa* எனும் ஆண்டு நெல்வகைகளே பயன்பாட்டிலுள்ளன. மரபு ரீதியான வெவ்வேறு வயதுடைய நெல்லினங்கள் பல உள்ளன. H4, பினிலொட், BG 1111, BG 941 போன்ற பழைய இனங்கள் பசுமைப் புரட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் மொட்டைக் கருப்பன், பச்சைப் பெருமாள், சீனட்டி, அணில் வரியன், பெரிய வெள்ளை,



**மண்ணின்றிய பயிர்ச்செய்கை**

Image source - www.omana.cn

சின்ன வெள்ளை, குருவை மற்றும் சுகந்தல் போன்ற இன்னோரன்ன நெல் வகைகள் காணப்படுகின்றன. இவற்றை விட அநேக புதிய நெல்வகைகளும் தற்காலத்தில் பயிரிடப்பட்டு வருகின்றன. ஆட்டக்காரி எனும் நெல்லினத்தை இதுபோன்ற நெல்லினங்களில் ஒன்றாகக் குறிப்பிட முடியும். தாழ்வுப் பகுதிகளில் அல்லது நீண்ட நாள்கள் நீர்தேங்கும் பகுதிகளில் கூடிய வயதுடையவையும், மேட்டு நிலங்களில் குறைந்த வயதுடையதுமாக இரண்டு மாதத்திலிருந்து ஐந்து மாதத்திற்கிடையில் முற்றக்கூடிய நெல்லினத்தின் பல்வகைமைகள் வடக்கு கிழக்கில் காணப்படுகின்றன.

வயது மட்டுமல்லாமல் சாய்ந்து விழுவது (*Lodg ing*), கதிர் உதிர்வது (*Shattering*) நோய் பீடைத் தாக்கத்தில் எதிர்ப்புத் தன்மையுடையது என்பனவோடு நெல்மணிகளின் பருமன், நிறம், போசணைச் சத்து, ருசி என்பனவற்றின் பல்வகைமைகளும் இந் நெல்லினங்களில் காணப்படுகிறது.

## சிறுதானியங்கள்

கால மாற்றத்தினால் தற்போது தானிய வகைகளின் பயன்பாடு சற்றுக் குறைவடைந்து வருகின்றது. வெற்றிகரமாக வளர்த்தெடுக்க்கூடிய சாமை (*Panicum sumatrense*), தினை (*Setaria italica*), கேழ்வரகு (*Eleusine coracana*), வரகு (*Panicum miliaceum*), இறுங்கு (*genus*) மற்றும் கம்பு (*Pennisetum glaucum*) போன்ற பயனுள்ள தானிய வகைகள் எம் பிரதேசத்தில் காணப்படுகின்றன. குதிரைவாலி எனப்படும் புல்லினத்தில் உருவாகும் தானியங்களும் வெற்றிகரமாக பயிரிப்படக்கூடியன. இவற்றின் பல்வகைமை உணவுப் பாதுகாப்பிற்கு மிகவும் வேண்டப்படுகிறது. இவ்வகைத் தானியங்கள் தமக்கிடையே நிறம், பருமன், சுவையில் வேறுபாடுகளைக் காட்டும் பல்வகைமையுடன் காணப்படுவது எம்மரின் உணவுப் பழக்கத்துக்கு பொருத்தமானதாக அமைந்து வருகிறது. உலக உணவு ஸ்தாபனம் கடந்த ஆண்டை சிறுதானியங்களின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

## அவரை இனப் பயிர்கள் அல்லது பருப்பு வகைகள்

பாசிப்பயறு (*Phaseolus aureus Roxb*), உழுந்து (*Urad bean, Vigna mungo*), பயற்றை, போஞ்சி (*Phaseolus vulgaris L.*) போன்ற பயிர்கள் இப்பிரிவுக்குள் அடங்கும். பாசிப்பயற்றில் சிறிய விதையிலிருந்து பெரும் பயறு வரையிலும், உழுந்தில் வளர்ச்சியை முடிக்கும் இனங்களிலிருந்து

வளரும் இனங்கள் வரையிலும், பயிற்றையில் குறுகிய நீளமுடையதிலிருந்து நீண்ட காய்களையுடையது வரையிலும், போஞ்சியில் பச்சை மற்றும் மஞ்சள் நிறமுடையதுமாக அவரையினத்தின் பல்வகைமை நீண்டு செல்கிறது. இவற்றில் வெவ்வேறு இனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாசிப்பயற்றில் MI5, MI6 என்பனவும் - உழுந்தில் அனுராதா, Type 9, MIVG 1 போன்றனவும் - பயிற்றையில் குரங்குவாலன், ஏ9 போன்றனவும் - போஞ்சியில் கப்ரி போன்ற வகைகளுமாக அவரை இனப்பயிர்கள் காணப்படுகின்றன. கௌபி எனும் பயிரும் இவ்வுணவுப் பாதுகாப்பின் பிரதான பயிராகும். பொம்பே கௌபி, விஜய், வருணி, தவல, MICP 1, ANK CP 1 போன்ற வேறுபட்ட நிறங்களையுடையதும் தரம், பருமன், சுவையில் வேறுபாடுகளைக் கொண்டதுமான கௌபி இனங்களும் உண்டு. பொதுவாக மானாவாரி எனும் தற்போது சிறுபோகத்திலும் மேற்கூறிய பயிர்கள் செய்கை பண்ணப்படுகிறது. சணல் எனும் அவரை இனப் பயிர் உணவாகப் பயன்படாவிடினும் விலங்குணவாக பயன்படுவதுடன் மண் வளத்தைப் பாதுகாக்கும் பயிர்வகையாகவும் காணப்படுகிறது.



குதிரைவாலி
Image source - ta.wikipedia.org

## மரக்கறிப் பயிர்ச்செய்கையின் பல்வகைமை

வடக்கு கிழக்கு பகுதிகளில் அநேக மரக்கறிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றன. மரக்கறிகள், இலை வகைகள், காய் கனிகள், கிழங்குகள் மற்றும் வாசனைப் பயிர்கள் போன்றன அவற்றுள் சில.

இலை வகைகளுள் கீரை (*Amaranthus*), பொன்னாங்காணி (*Alternanthera sessilis*), வல்லாரை (*Centella asiatica (L) Urban.*), பசளி (*Spinach; Spinacia oleracea*), பயளி, அகத்தி (*Sesbania grandiflora*), கருவேப்பிலை (*Murraya koenigii*) போன்ற இலை வகைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. மருத்துவ குணங்கள் உள்ள முருங்கையிலை, முள்முருங்கு, வாதனாராணி, பூவரசு, சண்டி, கோவா போன்றனவும் எம் பிரதேசத்தில் வளர்கின்றன. அண்மைக் காலத்தில் சித்தரத்தை வகையில் ஒன்றான இன்சுலின் தாவர இலையின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. இயல்பாகவே களைகளாக கருதப்படும் சாரணை, குப்பைக்கீரை, புளிக்கீரை, அரைக்கீரை, தயிர்வளை, தொய்யில், சாரணை போன்றனவும் இக்கீரை வகைகளில் அடங்கும். இவற்றின் பல்வகைத் தன்மை அழிந்து போகாமல் பாதுகாப்பதில் எமக்கு பெரும் பொறுப்பு உண்டு என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

## கிழங்கு வகைகள்

எம் பிரதேசத்தில் சாதாரணமாக வளரக்கூடிய கருணைக்கிழங்கு, மோதகவள்ளி, வற்றாளை, மரவள்ளி (*Manihot esculenta*), இராசவள்ளி (*dioscorea alata*) போன்றனவற்றுடன் மலையகப் பிரதேசங்களில் வளரக்கூடிய இங்கு பரவலாகப் பயிரிடக்கூடிய உருளைக் கிழங்கும் இக் கிழங்கு வகைகளுக்குள் அடங்கும். இவை பல்வேறு வகைப்பட்ட வயதுடையவையாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக மரவள்ளியில் மூன்று மாதத்திலிருந்து ஒரு வயது வரை வயதுடையனவும், தோல் மற்றும் சதையில் வேறுபாடு உடையனவும், நீளம் மற்றும் பருமன் என்பனவற்றில் வேறுபாடுள்ளதுமான பல்வகைகள் உண்டு. இவற்றின் பயன்பாடும் பிரதேசங்களுக்கு அமைவாக வேறுபடுகிறது. விசுவமடுப் பிரதேசத்தில் மூன்றிலிருந்து ஆறுமாத வயதுடையதும் மஞ்சள் நிற தசைப்பிடிப்பானதுமான ஓரினம் உண்டு. யாழ்ப்பாணத்தில் பொதுவாக செம்பாட்டுப் பகுதிகளில் ஆறிலிருந்து ஒன்பது மாதம் வரையான முதிர்வைக் கொண்டுள்ள பயன்தரு மரவள்ளி இனங்கள் உண்டு. முத்தையன்கட்டு, முழங்காவில் போன்ற பகுதிகளில் ஒரு வருட வயதுடைய கிழங்கு வகை உண்டு. சம்பூரில் ஆறு மாத வயதுடைய வெள்ளை நிற இலைக் காம்மை கொண்ட இன்னோர் வகையும் உண்டு. இவ்வகையான கிழங்கு வகைகள் வரட்சிக் காலங்கிலும் கூட வளர்ந்து கனமான மாப்பொருளின் விளைவை உருவாக்குவதால் கிழங்கு வகைகளின் பல்வகைமை வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் பேணப்பட வேண்டிய ஒன்றாக இருக்கின்றன.

மரக்கறி வகைகளின் பல்வகைமை ஒரு நீண்ட நிரலாகும். ஆனாலும் இக் கட்டுரையின் வரையறைக்குட்பட்ட வகையில் சிறிதளவையே இங்கு நிரற்படுத்த இயலும். இங்கு வளரும்

பயிர்களுக்கு காலநிலையின் சாதகத் தன்மை கை கொடுப்பதோடு மத மற்றும் கலாசார வழக்கங்களும் இப் பல்வகைமைத் தன்மையில் செல்வாக்குச் செலுத்துகிறது எனலாம். கத்தரி (*Solanum melongena*), கறிமிளகாய் (*Capsicum annuum*), வெண்டி (*Abelmoschus esculentus*), சர்க்கரைப் பூசணி, நீத்துப்பூசணி, பயிற்றை, அவரை (*Lablab purpureus*) போன்றவை மரபு ரீதியாக பயிர் செய்யப்பட்டு வருபவை. இருப்பினும் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் சீதோசண நிலை கோவா (*Brassica oleracea var. capitata*), போஞ்சி, கரட் (*Daucus carota subsp. sativus*), பீற்றூட் (*Beta vulgaris subsp. vulgaris 'Conditiva Group'*), லீக்ஸ் (*Allium ampeloprasum*) மற்றும் உருளைக்கிழங்கு (*Solanum tuberosum*) போன்ற பயிர்வகைகளை அறிமுகப்படுத்தி உற்பத்திசெய்ய வழிவகுக்கின்றது. தற்போது மேலும் பல பயிர்களும் அறிமுகமாகியுள்ளன.

மண்டூர் கத்தரி, இறால் குழி மற்றும் பழுகாமம் போன்ற கத்தரிவகைகள் கிழக்கு மாகாணத்தில் பிரபல்யமானவை. திருநெல்வேலி சிவப்பு, மலப்பே, மட்டுவில் முட்டி, ஈக்குவெள்ளை, கத்திப்பிடியன் போன்ற வெள்ளை நிறத் தோலுடைய கத்தரி இனங்களும் தற்போது பயிரிடப்படும் வீரிய இனக் கத்தரிவகைகளும் காணப்படுகின்றன. நிறம், பருமன், தோற்றம், தாவரச் செடியின் அமைப்பு என்பவற்றில் மட்டுமல்லாது சுவையிலும் பல்வகைமைத் தன்மையை இக் கத்தரி இனங்கள் கொண்டுள்ளன. இவை மட்டுமல்லாது தானாக வளரும் சுண்டங்கத்தரி மற்றும் கண்டங்கத்தரி போன்றனவும் உண்டு. பாகற்காய் (*Momordica charantia*), புடலங்காய் (*Trichosanthes cucumerina*), பீர்க்கங்காய் (*Luffa*), சுரக்காய் (*Lagenaria siceraria*) எனும் ஏறிகளும் உண்டு.

பால்வெண்டி, முள்ளுவெண்டி, சிவப்பு வெண்டி, ஹரித்த போன்ற பல்வேறுவகை வெண்டியினங்கள் குறுகிய காலத்தில் விளைவுகளைத் தரும் வேறுபட்ட வகைகளாகும். இவற்றை விட பல்லாண்டு வெண்டி வகைகளும் பல்வகைமைக்குள் சேர்க்கின்றன.

குரங்குவாலன், கட்டைப் பயற்றை, ஏ9 மற்றும் புசிட்டாவோ போன்ற பயிற்றை இனங்களும் கத்தி அவரை, சிறகவரை, பனி அவரை, கராம்பவரை போன்ற இன்னோரன்ன அவரை இனங்களும் பயனுள்ள பல்வகைமைகளாக அமைகின்றன. பாம்பே கௌபி, வருணி, விஜே, தவல மற்றும் அங்குணு கொல, பலச ஆகிய புதிய இனங்களும் பயனுள்ள கௌபி வகைகளாகும். பாசிப்பயறு, உழுந்து என்பனவும் தம்முள் வேறுபட்ட வகைகளை கொண்டுள்ளன.

பெரும் பருமனுள்ள சர்க்கரைப்பூசணி வகைகள் அருகிவருவது துரதிஷ்டமே. அறிமுகமாக்கப்பட்டுள்ள பூசணி வகைகளும் பலவுண்டு. நீத்துப் பூசணியிலும் வேறுபட்ட வகைகள் இருப்பதால் இப்பூசணி வகைகளைப் பாதுகாப்பது பெரும் சவாலாக உள்ளது.

மிளகாய், வெங்காய இனங்கள் (*Allium cepa*) எம் பிரதேசத்தில் தாராளமாக வளர்கின்றன. MI1, MI2, KA2, அருணலு, MI green, வன்னி மிளகாய், நிழல் மிளகாய், கொச்சி மிளகாய் மற்றும் தற்போது அறிமுகமாகியுள்ள வீரிய மிளகாய் இனங்கள் என நீண்டு செல்லும் இவ் வரிசையில் கறி மிளகாயும் அடங்கும். வேறுபட்ட காலங்களில் சந்தையில் கிடைக்கக்கூடிய வகையில் பல்வேறு வகையான மிளகாய் இனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உள்ளூரில் வளர்க்கும் வெங்காய இனங்கள் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளன. அதாவது குறுகிய வயதுடைய சின்ன வெங்காயமும், நீண்ட வயதுடைய - 60 நாட்களுக்கு மேலாக முதிர் வயதைக் கொண்ட வெங்காயமும் இரு பெரும் பிரிவுகளாகும். சின்ன வெங்காயத்தில் யாழ்ப்பாண உள்ளூர் இனமும் புதிய தெரிவாக வெளியிடப்பட்ட தின்னவேலி சிவப்பு வெங்காயமும் அடங்கும். தமிழ் நாட்டின் வேதாரணியப் பகுதியிலிருந்து வடக்குப் பகுதிக்கு அறிமுகமாக்கப்பட்டு மருவிய பெயரான வேதாளம் என அழைக்கப்படும் இனங்களில் பல வெங்காய இனங்கள் உண்டு. வடலி வேதாளம், கல் வேதாளம், முறி வேதாளம் (முறியன்), குண்டு வேதாளம், குண்டு வல்லாரை, பீரங்கி வேதாளம் மற்றும் பூ வேதாளம் என நீளமான இவ்வரிசையில் நோய் எதிர்ப்பு தன்மையுள்ள TVM - 6 எனும் புதிய இனமும் (கட்டுரை ஆசிரியரால் உருவாக்கப்பட்டது) தற்போது பயிரிடப்பட்டு வருகிறது. சிறுபோகம் மற்றும் பெரும்போகம் என வேறுபட்ட காலங்களில் வளர்த்துப் பயன்தரக்கூடிய வகையில் இப் பல்வகைமை காணப்படுகிறது. எம் பிரதேசத்தில் மிகவும் பயனுள்ள வகையில் செய்கை பண்ணப்பட்டு வரும் ஓராண்டு பயிர்வகைகளாக இவை அமைகின்றன.

# பகுதி 2

> பனம்பழம் அரிய சொத்தாகும். வேறுபட்ட போகங்களில் பழங்களைத் தரும் பனை மரங்கள் எம் பிரதேசத்தில் பரந்து காணப்படுகின்றன. அவற்றின் கிழங்குகளின் தன்மையிலும், கள் மற்றும் கருப்பனி என்பனவற்றின் பிரிகை அளவுகளிலும் மாறுபாடு உண்டு.

பனம்பழம் அரிய சொத்தாகும். வேறுபட்ட போகங்களில் பழங்களைத் தரும் பனை மரங்கள் எம் பிரதேசத்தில் பரந்து காணப்படுகின்றன. அவற்றின் கிழங்குகளின் தன்மையிலும், கள் மற்றும் கருப்பனி என்பனவற்றின் பிரிகை அளவுகளிலும் மாறுபாடு உண்டு. கற்பகத் தருவான பனைமரத்தின் பயன்பாடுகள் அநேகம். முக் கனிகளான மா, பலா, வாழை என்பனவற்றின் பயன்பாடும் எம் பிரதேசத்தில் கணிசமாக உண்டு. மா மரத்தில் ஒட்டுதல் மூலம் உருவாக்கப்படும் கன்றுகள் தாய் தாவரத்தின் இயல்புகளை ஒத்திருக்கும். இலங்கையில் 400 ஆண்டுகளுக்கு முன்னதாக ஒட்டுதல் பொறிமுறை வழக்கத்திற்கு வந்தது. கறுத்தக்கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், விளாட்டு, சேரன், கிளிச்சொண்டன், பச்சை தின்னி, மேளம் தூக்கி, அம்பலவி, களகட்டி, பாண்டி மற்றும் செம்பாட்டான் போன்ற பல உள்ளூர் வகை மாவினங்கள் உண்டு. இவற்றில் விதையிலிருந்து உருவாக்கப்படும் கன்றுகள் பல்வேறுபட்ட சுவைகளைக் கொண்டிருக்கும். 2005 இல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பயனாக கறுத்தக் கொழும்பானின் மூன்று வகைகளும் விளாட்டில் மூன்று வகைகளும் அம்பலவியில் ஒன்றும் மற்றும் புதிய ஒரு மா வகையும், ருசியுள்ள இனிப்பான மாம்பழங்களைக் கொடுக்கும் இனங்களாக அடையாளங் காணப்பட்டது. 2019 இல் வெளியான தின்னவேலி சிவப்பு எனும் புதிய சுவையான விசேடித்த வாசனையுள்ள மாவினமும் அறிமுகம் செய்யப்பட்டது. இதைவிட TOM E.J.C என்னும் புதிய இன மாவினமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பலாவில் கூழன், செம்பகவரியன் மற்றும் சாதாரண பலாப்பழங்களும் உண்டு. ஒரு மரம் இன்னொரு மரத்தின் குணாம்சங்களோடு சரிவரப் பொருந்தாத தன்மை பலாவினத்தின் தனிப்பட்ட இயல்பாகும். வாழையைப் பொறுத்தளவில் கதலி, கொழும்புக்கதலி, கப்பல், இதரை, சாம்பல்



பனங்கிழங்கு சாகுபடி

Image source - www.tamilmirror.lk

மொந்தன், மொந்தன், செவ்வாழை, ஆணைமாலு (யானை வாழைப்பழம்) போன்ற பலவகைப்பட்ட வாழையினங்கள் எம் பிரதேசத்தில் உண்டு. இவற்றை விட விளா, நெல்லி, விழும்பி, பாலை, சூரை, ஈச்சை, நாவல் போன்ற பல பழவகைகளும் உண்டு. தோடையில் பிபில என்னும் இனிப்புத் தோடை வகை உண்டு.

திராட்சையில் வட பிரதேசத்துக்கே தனித்துவமாக வளரும் இஸ்ரேல் நீலம் (Israel Blue) என்னும் இனம் 1956 அளவில் ஒரு கத்தோலிக்க குருவானவரால் வசாவிளான் பகுதியில் அறிமுகமாக்கப்பட்டது. புதிதாக பல இனங்கள் அறிமுகமாக்கப்பட்டிருந்தாலும் அவை எம் சூழலுக்கு பொருந்தாமையால் திராட்சையில் பல்வகைமையை பேணிப் பாதுகாப்பது சவாலாக அமைகிறது.

பஷன், பப்பாசி, கொய்யா, மாதுளை, யம்பு, நாவல் போன்றவற்றிலும் பரந்து வாழும் பலவகைப் பழங்களை தோற்றுவிக்கும் தான்தோன்றி இனங்கள் உண்டு. அறிமுகமாக்கப்பட்டுள்ள தாய்லாந்து கொய்யாப் பழங்கள் தற்போது கிடைக்கின்றன. மாதுளையில் நிமாலி, தயா என்னும் நடுத்தரப் பருமனுடைய பழங்களைத் தோற்றுவிக்கும் இனங்கள் உண்டு. சந்தையில் கிடைக்கும் பெரிய வகை மாதுளம் பழங்களின் கன்றுகளை உருவாக்குவது சவாலாகவே உள்ளது. மனித உணவில் அடங்க வேண்டிய 200g நிறையுடைய பழங்களின் ஊட்டச்சத்தைப் பெற நாம் பழங்களின் பல்வகைமையை பேணிப் பாதுகாத்தாக வேண்டும்.

புளி, வேம்பு, இலுப்பை, மஞ்சமுன்னா, நொச்சி, கமுகு, தேக்கு, மலைவேம்பு, காட்டு ஆமணக்கு, ஆமணக்கு போன்றன பயன்தரும் மரங்களாகும். விண்ணிலிருந்து பார்க்கையில் பரந்துபட்டுக்காணப்படும் இம் மரங்களுடன் பிரதானமாக வளர்க்கப்படும் தென்னை மரங்களும் அளப்பெரிய பொருளாதார பங்களிப்பைச் செலுத்தக் கூடியன. தற்காலத்தில் குறை வயதுடைய வீரிய இனங்கள் மற்றும் செவ்விளநீர் போன்றவை துரிதகதியில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

### புல், பூண்டு வகைகளின் பல்வகைமை

மிருகங்களுக்கு மட்டுமல்லாது மனிதருக்கும் பயன்தரும் பல்வகையான புல், பூண்டு இனங்கள் எம் பிரதேசத்தில் தாராளமாக கிடைக்கின்றன. மேட்டு நிலத்தில் கிடைக்கும் புல்லினங்களும் தாழ் நிலங்களில் வளரும் புல்லினங்களும் உண்டு. அறுகு, பிரதானமான புல்லாகும். யானைப்புல், காவாய்ப்புல், புறாக்காலி, கோரை, நேப்பியர், மானா போன்ற பெரிய அளவில் பயன்தரக் கூடிய புல்வகைகள் உண்டு. மாடுகளுக்கு பயன்தரக் கூடிய இனிப்புச் சோளப் புல், சீயோ3, சீயோ4 வகைகள் மற்றும் கம்பு நேப்பியர் புல் பயனுள்ள விலங்குணவாகப் பயன்படுத்தப்படுகிறது. அண்மைக்காலத்தில் வலிந்து அறிமுகமாக்கப்பட்டுள்ள பார்த்தீனியம் எனும் களை கட்டுப்படுத்த முடியாத அச்சுறுத்தும் களையாகும். கோழிச்சூடன், குதிரைவாலன், சீதேவியார், செங்கழுநீர், நீர்ப்புல் மற்றும் கோரை என்பன தாழ்நிலங்களில் வளருபவை. இவற்றின் பல்வகைமை நெல் வயல்களுக்கு சவாலாக இருந்தாலும் கையினால் களை கட்டுமிடத்து இவற்றை விலங்குணவாக மாற்றமுடியும்.

குப்பைமேனி, மூக்குத்திப் பூண்டு, தொட்டாச்சுருங்கி, நாயுருவி மற்றும் கடுவநாவல் போன்றன பூண்டு வகைகளில் பிரதானமானவை. இவை மனிதருக்கு சவாலாக அமைந்திருந்தாலும் சுற்றாடல் சமநிலையிலும் உணவுச் சங்கிலியிலும் பங்கெடுக்கும் பிரதான பூண்டு வகைகளாகும்.

### மூலிகைச் செடிகளின் பல்வகைமை

எமது கலாசாரத்தோடு இணைந்த மருத்துவக் குணங்களுடைய பல்வேறு வகைப்பட்ட மூலிகைப் பயிர்கள்



**திராட்சை**

Image source - www.facebook.com/JaffnaOrganic

காணப்படுகின்றன. வீட்டு முற்றத்தில் வளரும் துளசிச்செடி, கற்பூரவள்ளி, வெற்றிலைக்கொடி, தூதுவளை, முடக்கொத்தான் போன்றன பிரபல்யமானவை. ஊமத்தை, சித்தரத்தை, நீலப்பூச்செடி, பூவரசு, வாதனாராணி, நன்னாரி, கொவ்வை, முசுக்கட்டை, பருத்தி போன்ற

இன்னோரன்ன மருத்துவச் செடிகளும் எம் பிரதேசத்தில் காணப்படுகின்றன. இவற்றின் பயன்பாடு தற்போது அதிகரித்து வருகின்றது.

### விலங்கினங்களின் பல்வகைமை

எம்மோடு இணைந்து வீட்டில் வளரும் பிராணிகளான நாய், பூனை, ஆடு, மாடு, கோழி, வாத்து மற்றும் தாரா என்பனவற்றில் பல்வகைமைகள் உண்டு. அறிமுகமாக்கப்பட்ட நாயினங்கள் பலவுண்டு. அத்துடன் வீட்டில் சேதங்களை உருவாக்கும் எலிகள், சுண்டெலிகளும் உண்டு. வயல் நிலங்களில் வளரும் அகளான் போன்ற எலி வகைகளும் உண்டு. ஓணான், பல்லி, உடும்பு, அணில், மர அணில், மரநாய், கீரி, ஆமை, முயல் போன்ற விலங்கினங்களும் நத்தை, அட்டை, தேரை, நட்டுவக்காளி, பூரான், கரப்பான் போன்றனவும் எம் சுற்றாடலில் நடமாடுகின்றன. முற்றத்தில் வளரும் பூக்களில் பயன்தரும் மூன்றுவகைத் தேனீக்கள் உண்டு. சிறிய தேனீ, தேனீ மற்றும் மலைத் தேனீ என்பனவற்றின் தேன் அதிகப் பெறுமதிமிக்கவை.

காங்கேயன், ஊர் மாடு, ஜேர்சி, ஜவகால் மற்றும் Holson & Fresion போன்ற கலப்பினங்கள் மாட்டில் காணப்படுகின்றன. ஏரியுள்ள மாடுகள் உழுதலுக்குப் பயன்படும்; ஏனையவை பால் உற்பத்திக்கு பயனுள்ளவை. ஜமுனாபாரி, சாணன், அரிக்கன் மற்றும் செம்மறியாடு போன்றன ஆடுகளின் பல்வகைமையில் அடங்கும். பறவைகளைப் பொறுத்தளவில், கிளி, காகம், மைனா, வௌவால், கொக்கு, குக்குறுப்பான், மாம்பழக்குருவி, எருத்துவாலன், பருந்து, புழுனி, குயில், செண்பகம், மரங்கொத்தி, கருங்குருவி, மணிப்புறா, நிலக்கிளி என்பன வந்துபோவனவாக இருந்தாலும் கோழி மற்றும் புறா என்பன நிலையாக வீட்டில் வளருபவையாக உள்ளன. வயலையும் குளங்களையும் அண்டிய பிரதேசங்களில் நீர்க்காகம், மணல்வாரி, நத்தைகொத்தி, நாரை, அன்னம், மழைக்கன்னி, காடை, கௌதாரி, கூவை, மீன்கொத்தி, வல்லூறு போன்றனவும் காணப்படும். இவற்றின் பரம்பல் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப வேறுபடும். இவை பயனுள்ள உணவுச் சங்கிலிகளின் கூறுகளாகவும் அமைவன.

### விவசாயம் மற்றும் சுற்றாடல்சார் அபிவிருத்தியும் அச்சுறுத்தலும்

விவசாயம்சார் அபிவிருத்தியில் பிரதான பங்குவகிப்பவை நவீன தொழில்நுட்ப வழிமுறைகளாகும். உதாரணமாக சொட்டு நீர்ப்பாசனம், தூவல் நீர்ப்பாசனம், வானூர்தி தெளிகருவி என்பன அண்மைக்காலத்தில் பெரும் பங்காற்றும் நவீனத் தொழில்நுட்பங்களாகும். அநேக விவசாயப் பொருள்கள் அழிவுறும் தன்மை கொண்டன. இவ் அழிவுறும் தன்மையால் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பதற்காக பெறுமதிசேர் தொழில்நுட்பங்கள் மற்றும் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தும் தேவை எழுந்துள்ளது. ஊறுகாய், ஜாம் உற்பத்தி, வற்றலாக்கும் பொறிமுறைகள், பனாட்டு உற்பத்தி என்பன மெருகூட்டப்பட வேண்டியவை. பழச்சாறுகளின் உற்பத்தி தற்போது



**அறுகு**

Image source - ta.wikipedia.org

அபிவிருத்தியடைந்து வருகிறது. சோஸ் தயாரிப்புகள் மூலம் தக்காளி மற்றும் மிளகாயை பழுதடையாது சேமிக்கலாம். தற்போது நிலக்கடலையிலிருந்து பல்வேறுவகைப்பட்ட உற்பத்திகள் சந்தைப்படுத்தப்படுகின்றன. 'ஜம்போ பீனட்' இதற்கு உதாரணமாகும்.

எள்ளிலிருந்து தருவிக்கப்படும் எள்ளெண்ணெய்யை தெளிவாக பிரித்தெடுக்கும் வழிமுறைகள், நல்லெண்ணையின் பெறுமானத்தை அதிகரித்துள்ளது. மிளகாய் காயவைக்கும் இயந்திரம், மஞ்சள் மா தயாரிப்பு மற்றும் மஞ்சள் பயிர்ச்செய்கை அபிவிருத்தி போன்றன முடுக்கிவிடப்பட்டுள்ளன. வெங்காயத்தில் உருவாகும் பூ மூலம் கிடைக்கப்பெறும் உண்மை விதையின் உற்பத்தி வெங்காயச் செய்கையின் உற்பத்திச் செலவைக் குறைக்க வழிவகுக்கும்.

தென்னையிலிருந்து அன்றாட சமையலுக்கு தேவையான பயன்களை எடுப்பது மட்டுமல்லாது கொப்பறாக்களை காயவைத்து தேங்காய் எண்ணெய் எடுக்கும் பொறிமுறை செக்கிலிருந்து மாறி இயற்திரப் பயன்பாட்டை அடைந்துள்ளமை தரமான கலப்படமற்ற தேங்காய் எண்ணெய்யை கணிசமான அளவு மக்களுக்கு வழங்குகிறது. சுற்றாடலிலிருந்து கிடைக்கும் புளியம்பழம் சமையலுக்குப் பயனுள்ள பொருளாக உள்ளது. அத்துடன் இலுப்பெண்ணெய், வேப்பெண்ணைய் மற்றும் ஆமணக்கு எண்ணெய் போன்றன மருத்துவ குணங்களோடு பிரித்தெடுக்கப்படுகின்றன.

ஒடியல், புழுக்கொடியல், பனாட்டு, பாணிப்பனாட்டு, போத்தலில் அடைக்கப்பட்ட பனங்களி, பதனீர், பனங் கள், பனங்கட்டி போன்றன பனை அபிவிருத்திச் சபையாலும், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனிப்பட்டோராலும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் உற்பத்திப் பொருட்களாகும். புலம்பெயர் முதலீட்டின் மூலம் இவற்றை ஏற்றுமதிக்கான தரத்தில் உற்பத்திசெய்து அதிக இலாபமீட்டப்படுகிறது. பனஞ்சாராய உற்பத்தியில் புதிய பரிமாணத்தில் ஏற்றுமதி செய்யப்படும் 'யப்னா உஷார்' எனும்



**தூதுவளை**

Image source - ta.wikipedia.org

சாராய வகைகளைக் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அன்றாடப் பயன்பாட்டிலிருக்கும் நீத்துப்பெட்டி, பாய், சுளகு, தடுக்கு, பெட்டி மற்றும் கூடைகள் உட்பட கைவினைப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தென்னந்தும்பு உற்பத்தி மற்றும் சிரட்டையின் கொள்வனவு அதிக லாபத்தை ஈட்டி வருகிறது.

போதுமான அளவு நெல் உற்பத்தியை அடையும் நோக்கில் நமது அபிவிருத்திப் பாதை செல்ல வேண்டும். வைக்கோல் மற்றும் உமி என்பவற்றை மூலப்பொருளாக்கி கட்டிடத்திற்குப் பயன்படும் கற்களை உற்பத்தியாக்கும் வழிமுறைகள் தற்போது உருவாகியுள்ளன. இறக்குமதி செய்யப்படும் பருப்பு வகைகளுக்குப் பதிலாக மாற்று வழிமுறையான துவரம் பருப்புச் செய்கையும் பருப்புப் பிரித்தெடுக்கும் வழிமுறைகளும் செயற்படுத்தப்பட வேண்டும். சோயா அவரை உற்பத்தியிலும் கவனஞ் செலுத்த வேண்டும். கம்புப் பயிரின் பயன்பாடு கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்திருப்பினும், இவற்றின் உற்பத்தியும் இதிலிருந்து உருவாகும் உணவு வகைகளும் பிற மாவட்டங்களுக்கும் பரவலடைய வேண்டும்.

பயிர்களிலிருந்தும் உருவாக்கப்படும் உணவுப் பயிர்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்துள்ளது. ஆனால் ஐரோப்பிய சந்தைகளில் இடம்பிடிக்கும் வகையில்

எம்மவரின் உற்பத்தி தரமானவையாகவும் நஞ்சற்றவையாகவும் உருவாக்கப்பட வேண்டும். இதற்காக Good Agricultural Practices (GAP) சேதனப் பயிர்ச் செய்கையுடன் தற்போது போட்டி போடுகின்றன. போதைப் பொருள்களின் பாவனையை குறைக்க நாட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வட - கிழக்கு பிரதேசங்களின் விவசாயப் பொருளாதாரம் கேள்விக் குறியாகியுள்ளது. ஏனெனில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தொன்றுதொட்டு பயிரிடப்படுவதாக புகையிலைச் செய்கை காணப்படுகின்றது. ஸ்திரமான முடிவு அரசாங்கத் தரப்பால் தெரிவிக்கப்படாவிடினும் இதற்கான மாற்று வழிகள் எம் பிரதேசத்தில் ஆங்காங்கே தலை தூக்கியுள்ளது. உதாரணமாக தீவுப் பகுதிகளில் பயிரிடப்பட்டு வருவாயை தோற்றுவிக்கும் கற்றாளைச் செய்கையைக் குறிப்பிடலாம். காலநிலை மாற்றத்தின் கோரத்தால் அதிகரித்து வரும் வெப்பநிலைக்கும் குறைவடைந்து செல்லும் மழை வீழ்ச்சிக்கும் முகம்கொடுக்கும் விதமாக டிராகன் பழ உற்பத்தி மீதும், மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி மீதும் கவனஞ் செலுத்த வேண்டும்.



தேனீ வளர்ப்பு

Image source - tamil.krishijagran.com

தேன் மிக அரிதாகவே இங்கு கிடைக்கின்றது. மன்னாரில் குஞ்சுக்குளத்தை தவிர ஏனைய பகுதியில் கிடைக்கப்பெறும் தேன் பெரும்பாலும் சீனி கலந்து உற்பத்தியாக்கப்படுபவையாகவே காணப்படுகிறது. இதனால் விவசாய நிலங்களிலும் மற்றும் சுற்றாடலிலும் தேனிப்பெட்டிகளை வைத்தோ அல்லது மண் பானைகளை வைத்தோ சுத்தமான தேனை உற்பத்தி செய்தல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாரி காலத்தில் இடி முழக்கங்கள் ஏற்படும்போது குளக்கரை மற்றும் பெரு மரங்களின் அடியில் தோன்றும் காளான்கள் உணவாக உட்கொள்ளச் சிறந்தது. தற்போதைய சந்ததிக்கு இதனை கிடைக்கச் செய்வதன் பொருட்டு குடிசைக் கைத்தொழிலான காளான் உற்பத்தியை மேலும் அதிகரித்தல் வேண்டும்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள குழந்தைகள் மற்றும் சிறார்களின் போசாக்குத் தன்மை மோசமாகி வருவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. அபிவிருத்தியை மட்டுமே இலக்காகக் கொண்ட நாம் இச் சிறார்களின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளோம். உள்ளூரில் உற்பத்தியாக்கப்படும் தானிய வகைகளான சாமை, திணை, வரகு, குரக்கன் மற்றும் கம்பு என்பவற்றின் உற்பத்தி அதிகரித்து இவர்களின் குறை போசாக்கை நிவர்த்தி செய்யலாம். உள்ளூர் நாட்டுப்புறக் கோழிகளின் முட்டை, இறைச்சி என்பனவற்றின் உற்பத்தி பல நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் இவற்றின் தீவனத் தேவையை குறை நிரப்பும் வகையில் பயன்படுத்தப்படும் தீவனங்களின் உற்பத்திக்கு சோளம் மற்றும் இறுங்கு என்பவை போதுமானதாக இல்லை. மானாவாரியில் வெற்றுத் தரைகளில் இவற்றை உற்பத்தி செய்து இத் தேவைகளுக்கு பயன்படுத்தலாம்.

உள்ளூர் உற்பத்திக்கு முனைப்புடன் செயலாற்றும் இளைஞர் யுவதிகளை அடையாளம் கண்டு அவர்களுக்குரிய பயிற்சிகளை வழங்கும் செயற்திட்டம் யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயம்சார் சமுதாய மேம்பாட்டுக் குழுவினரால் முன்வைக்கப்பட்டுள்ளது. தொழில் முயற்சியாளர்களை அடையாளம் கண்டு தகுந்த பயிற்சி அளித்து முதலீட்டு ஏற்பாடுகளை செய்துகொடுத்து வளர்த்தெடுக்கும் நிலையும் உருவாக்கப்படவுள்ளது. குறிப்பாக விவசாயப் பட்டதாரிகள் தமக்கும் நாட்டுக்கும் பயனுள்ள இவ்வகையான சுயதொழில் முயற்சியாண்மையில் நாட்டம் கொள்ள வேண்டும். உள்ளூர் உற்பத்திகளான சத்துணவுகள், காளான், தேன், தீவனங்கள், சிறுவர்சார் பால் உற்பத்தி பொருள்கள், சவ்வரிசி உற்பத்தி, மர முந்திரிகை பதனிடல் போன்றவை மிகவும் பயனுள்ள தொழில் பிரிவுகளாகும். பசுந்தாள் பசளைகளின்

உற்பத்தி குறிப்பாக பூவரசு, சணல், காட்டுச் சூரியகாந்தி, தாவுளை மற்றும் கஞ்சாந்தகரை போன்றனவற்றின் உற்பத்தி அபிவிருத்தியில் பெரும் பங்காற்றுகிறது.

### அபிவிருத்தியில் மண்ணின் பங்கு

அதிகரித்து வரும் உணவுப் போக்குக்கு ஈடுகொடுக்கும் வகையில் மண்ணின் தன்மை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். முன்னோரால் வடிவமைக்கப்பட்டு வடிகாலிற்காக விடப்பட்ட நிலப்பரப்புகள் நெற்செய்கைக்கு உள்வாங்கப்பட்டுள்ளமை அண்மைக்கால ஆராய்ச்சிகளின்படி தெளிவாகியுள்ளது. இப் பகுதிகளிலுள்ள வாய்க்காலுக்கு சரியாக இடங்கொடுப்பது அபிவிருத்தியை தக்கவைக்கும். அத்துடன் நீர் விரயமாகுதலை துல்லியமான விவசாயப் பொறிமுறைகள் மூலம் குறைத்து உற்பத்தியின் அளவை அதிகரிக்க வேண்டும்.

### அச்சுறுத்தல்

பசுமைப் புரட்சியோடு செயற்கைப் பசளைகளின் பாவனையும் கிருமி நாசினிகளின் பாவனைகளும் அதிகரித்துள்ளன. இவற்றின் பாவனையின்றி உணவு உற்பத்தி செய்தல் மிகப்பெரிய சவாலாக அமைந்திருக்கிறது. அதிகரித்த நைதரசனின் பாவனை நிலத்தடி நீரில் கலந்து நீலப் பிள்ளைகளை (Blue Babies) உருவாக்குவது இவற்றின் மோசமான விளைவுகளில் ஒன்று. பொலன்னறுவை மற்றும் அனுராதபுரப் பகுதிகளில் அதிகரித்துக் காணப்படும் சிறுநீரகம் சம்பந்தமான நோய்க்கு முழுக் களைகொல்லியான ரவுண்டப் (Glyphosate) பாவனையே காரணமாக கருதப்படுகிறது. சுற்றாடலில் நிலவும் தேனிக்களின் பரம்பலை இரசாயனப் பாவனைகள் பெரிதும் பாதிக்கிறது. விவசாயிகளின் முறையற்ற தெளித்தல் முறைகளும் மீந்திருக்கும் போத்தல்களை வெளியேற்றும் பொறிமுறைகளும் தெளிகருவிகளை ஆற்றோரத்தில் கவனமின்றிக் கழுவுதலும் சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலே.

பூச்சி மற்றும் பீடைத் தாக்கங்களுக்கு கிடை எதிர்ப்புத் தன்மை மற்றும் மேல்நோக்கிய எதிர்ப்புத்தன்மையைக் (Vertical & Horizontal resistance) காட்டுவது பயிர்களின் குணாம்சம். புதிய இனங்களைக் கண்டுபிடிக்கும் பொழுது மேல்நோக்கிய முனைப்புத் தன்மைக்கு முன்னுரிமை வழங்குவதால் கிடை எதிர்ப்புக்குரிய பரம்பரை அலகுகளைக் கொண்டுள்ள கருவூலங்கள் புறக்கணிக்கப்படுதல் பயிர்களின் பல்வகைமைத் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. மொட்டைக்கறுப்பன், அணில்வரியன், பச்சைப்பெருமாள் போன்ற பழமையான நெல்லினங்கள் கொட்டுதல், சரிதல் போன்ற விரும்பத்தகாத குணாம்சங்களை கொண்டிருப்பதன் காரணமாக, இவ்வியல்புகளைத் தவிர்க்கும் பரம்பரை அலகுகள் பிரமிட்டுகள் ஆக்கப்பட்டதால்,

**பல்வகைமையைக் கொண்டிருக்கும் பற்றைக் காடுகளையும் மரஞ்செடி கொடிகளையும் பாதுகாப்பது எமது கடமையாகும். இப் பகுதிகளை சுத்தமாக்கும் போது வரையறையின்றி எரித்துவிடுதல் அங்கு வாழும் உயிர்ப்பல்வகைமையை அழித்துவிடக் கூடும்.**

நாம் தரமான அரிசி வகைகளை இழந்திருப்பது பெரும் துரதிஷ்டமாகும்.

விவசாயச் செய்கை தற்போது வியாபாரம் ஆகிவிட்டதால் பச்சையாக உண்ணும் காய்கறிகளான கீரை வகைகளுக்கும் நஞ்சான இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு இரசாயனங்களுக்கும் அவற்றின் பாவனைக்குட்பட்ட விவசாய விளை பொருள்களை அறுவடைக்கு தகுதியாக்கும் கால இடைவெளிகள் (Harvest Intervals) உண்டு. அதாவது மருந்து தெளித்த பின்பு குறித்த நாட்களுக்குப் பின்பே அறுவடை செய்யப்பட வேண்டும். வெண்டி மற்றும் கத்தரிகளைத் தாக்கும் துளைப் புழுக்களை கட்டுப்படுத்தும் இரசாயனங்கள் அதிக நஞ்சுள்ளவை. இருப்பினும் கால இடைவெளிகளை பொருட்படுத்தாது அதிக

நஞ்சுள்ள இரசாயனங்களைத் தெளித்து உடனடியாக சந்தைப்படுத்தும் விவசாயிகளும் உள்ளனர். இது தவிர்க்கப்பட வேண்டியதொன்று. இடைத் தரமாகப் பழுத்த வாழைக்குலைகள் கடைகளில் தொங்குவது கனவாகிவிட்டது. எதிலீன் மற்றும் பல்வேறு வகைப்பட்ட காபைற்றின் பாவனை பழங்களை சரியான காலத்திற்கு முன்பாகவே பழுக்கவைப்பதால் தரமான பொருட்களை தக்கவைக்க முடியாதுள்ளது. மாம்பழங்களை இயற்கையான வழிகளில் பழுக்க வைக்கும் பொறிமுறை இருப்பினும் சந்தைகளில் துணிவுடன் வாங்க முடியாதுள்ளது. இவை போன்ற பொருத்தமற்ற பழக்கவழக்கங்கள் திடமான சந்ததிகளை உருவாக்குவதில் பெரும் அச்சுறுத்தல்களையும் ஐயப்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளன. வரையறையின்றிய காடழித்தல், வயல் நிலங்களை வீடுகளாக்குதல், வாய்க்கால்களை வயலாக்குதல் போன்றன பயிர் உற்பத்தியின் எதிர்காலத்தை மோசமாக்கி வருகிறது. மேய்ச்சல் தரவைகளை தம்வசப்படுத்திக் கொள்ளல் விலங்குகளுக்கு உணவளிப்பதைச் சவாலாக்கியுள்ளது.

இரணைமடு போன்ற பெருங்குளங்களின் குளக்கட்டின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புகளில் (பெரும்பாலும் காடுகள்) பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி மரங்களை வெட்டி வயல் நிலங்களாக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது நம் மக்களின் இருப்பை பாதிக்கும் நடவடிக்கையாகும். இதனால் நீர்த்தேக்கத்தின் வரம்புகள் உடையும் சாத்தியம் அதிகம்; பாரிய இழப்புகளைச் சந்திக்க நேரலாம்.

பல்வகைமையைக் கொண்டிருக்கும் பற்றைக் காடுகளையும் மரஞ்செடி கொடிகளையும் பாதுகாப்பது எமது கடமையாகும். இப் பகுதிகளை சுத்தமாக்கும் போது வரையறையின்றி எரித்துவிடுதல் அங்கு வாழும் உயிர்ப்பல்வகைமையை அழித்துவிடக் கூடும்.

பூகோளத்தில் ஏற்படும் காலநிலை மாற்றம் குறிப்பாக வெள்ளப்பெருக்கு, கடல் மேலெழுதல், கடல்நீர் உட்புகுதல், மண்ணரிப்பு போன்றன விவசாய நிலங்களில் நிலவும் பல்வகைமைக்குப் பாதகமான நிலையை ஏற்படுத்துகின்றன.



இரணைமடுக் குளம்

Image source - ta.wikipedia.org/wiki

விவசாயம் என்பது பொழுதுபோக்கிற்காக செய்யப்படும் தொழில் முயற்சியிலிருந்து மாறுபட்டது. இளைஞர்களால் பிரியமுடன் செய்யப்படாத தொழிலில் ஒன்றாகவும் இருக்கின்றது. இதனால் அடுத்துவரும் சந்ததிகளுக்கு இதன் செய்கை வழிகளைக் கற்றுக் கொடுத்தலும், இதனைச் செய்வதன் மூலம் பாதுகாக்கப்படும் பெரும் தொகையான உயிரியல் பல்வகைமை தொடர்பான அறிவைக் கடத்துதலும் இயலாத காரியமாகவே உள்ளது.

இக் கட்டுரைத் தொடரில் பலவகையான பல்வகைமைத் தன்மைகளையும் அவற்றோடு தொடர்புபட்ட அங்கிகள், வாழிடங்கள், அபிவிருத்தி, அச்சுறுத்தல் சம்பந்தமான இன்னோரன்ன விடயங்களையும் வடக்கு கிழக்கு பகுதிகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்துள்ளேன். பல்வகைப்பட்ட மக்களின் கல்விக்கோ வருவாய்க்கோ பாதுகாப்பிற்கோ வாழ்வியலுக்கோ பயன்படும் வகையில் இவற்றைத் தொகுத்துத் தந்துள்ளேன். இவற்றில் குறிக்கப்படவேண்டிய இன்னும் சில விடயங்கள் இருக்கலாம். அவை தவறிப்போனதாக கருதப்படட்டும். இன்னும் பல தகவல்களுடன் இனிவரும் காலங்களிலும் வாசகர்களை சந்திப்பேன் என எண்ணுகின்றேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே.

### ஆதாரங்கள்


1. உயிரியல் பல்வகைமை – உதயன் நாளிதழ்.
2. Northern province biodiversity profile and conserva tion action plan – 2020.
3. Eastern province biodiversity profile and conservation action plan.

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

# பனிக்கன்குளக் காட்டுப் பகுதியில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிப்பு




● பரமு புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.




பனிக்கன்குளக் காட்டுப் பகுதி

கொக்காவிலுக்கும் மாங்குளத்திற்கும் இடைப்பட்ட பிரதான வீதிக்கு தெற்கே ஏறத்தாழ பத்துக் கிலோ மீற்றர் தொலைவில் காடுகள் சூழ்ந்துள்ள பனிக்கன்குளம் ஆற்றின் கரையோரங்களில் இருந்து கற்கால மக்கள் வேட்டையாடப் பயன்படுத்திய கற் கருவிகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பனிக்கன்குளத்தில் வாழ்ந்து வரும் திரு. கஜன், திரு. ஜெயகாந்தன் ஆகியோர் காட்டுபிரதேசத்தில் உள்ள ஆற்றின் கரையோரத்தில் காணப்பட்ட தானியங்கள் அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதெனக் கருதக்கூடிய கருங்கல்லின் புகைப்படம் ஒன்றை எமக்கு அனுப்பியிருந்தனர். இக்கருங்கலின் வடிவமைப்பும் அதன் பயன்பாட்டு நோக்கமும் மிகவும் பழமை வாய்ந்ததாகக்



பனிக்கன்குளக் காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சான்று



பனிக்கன்குளக் காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சான்றுகள்

காணப்பட்டதால் அவ்விடத்திற்குத் தொல்லியல் விரிவுரையாளர் திரு.க. கிரிகரனுடன் சென்றிருந்தோம். அவ்விடத்திற்குச் செல்வதற்கான உதவிகளை திரு. கஜன், திரு. ஜெயகாந்தன் ஆகியோர் செய்திருந்தனர்.

தற்போதைய இக்காட்டுப் பிரதேசத்தில் பிரதான வீதிக்கு ஒரு மையில் சுற்று வட்டத்திலேயே சில குடியிருப்புகள் காணப்படுகின்றன. ஏனைய பிரதேசம் வன்னேரிக்குளம் வரை மக்கள் வாழ முடியாத அடர்ந்த காடாகவே காணப்படுகின்றது. ஆயினும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததை உறுதிப்படுத்தும் நம்பகரமான தொல்லியற் சான்றுகள் ஆற்றின் இரு மருங்கிலும் செறிவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பல அளவுகளில், பல வடிவங்களில் செய்யப்பட்ட மட்பாண்ட ஓடுகள், செங்கற்கள், இரும்புப் படிமங்கள், கருங்கற்களில் வடிவமைக்கப்பட்ட பாவனைப் பொருட்கள் முதலியன ஆற்றையண்டிய மேட்டுப்பகுதியில் இருந்து கண்டுபிடிக்க முடிந்தது. இவ்வாதாரங்கள் இலங்கையில் கந்தரோடை, கட்டுக்கரைக்குளம், அநுராதபுரம், தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், அழகன்குளம், அரிக்கமேடு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதியிரும்புக்கால (பெருங்கற்கால) பண்பாட்டுக்குரிய சான்றாதாரங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன.

ஆயினும் இப்பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நிரந்தரமான குடியிருப்புகள் தோன்றுவதற்கு முன்னர் நாடோடிகளாக உணவுக்காக மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்த கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் கிடைத்திருப்பது முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. அவற்றை உறுதிப்படுத்தும் நம்பகரமான சான்றுகளாக குவாட்ஸ், சேட் கற்களிலிருந்து வடிவமைக்கப்பட்ட சிறு தொழிட்பத்துடன் கூடிய கற்கருவிகளும், கருவிகளை வடிவமைக்கும் போது ஏற்பட்ட கற்களின் பாகங்களும் ஆற்றின் கரையோரங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதரங்கள், இப்பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் பழங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்தனர் எனக் கூறப்பட்டலும் இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாடிலிருந்தே மனித வரலாற்றையும், பண்பாட்டு வரலாற்றையும் தொடர்ச்சியாக அறிய முடிகின்றது. அவற்றுள் நாடோடி வாழ்க்கை முறையைப் பின்பற்றிய நுண்கற்காலப் பண்பாடு (இடைக்கற்காலப் பண்பாடு) இற்றைக்கு 37,000 ஆண்டிலிருந்து 3000 ஆண்டுகள் நிலவியதாகவும், நிலையான குடியிருப்புக்களைக் கொண்ட நாகரிக வரலாற்றுக்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாடு இற்றைக்கு 3000 ஆண்டிலிருந்து 1700 வரை நிலவியதாகவும் காலங்கள் கணிப்பிடப்பட்டுள்ளன. இவ்விரு பண்பாடுகளுக்குரிய மக்கள் தென் தமிழகத்தில் இருந்தே புலம்பெயர்ந்து வந்தனர் என்பது தொல்லியலாளர்களின் கருத்தாகும். தற்போது இவ்விரு பண்பாடுகளுக்கும் உரிய சான்றாதாரங்கள் பனிக்கன்குளக் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை வட இலங்கையின் பூர்விக வரலாற்றுக்கு புதிய செய்தியைச் சொல்வதாக உள்ளது. இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இவ்விடத்தை தொல்லியல் மையமாகப் பிரகடனப்படுத்துமாறு இலங்கைத் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.





# கறவை மாடுகளுக்கு ஏற்படும் வெப்ப அயர்ச்சி குறித்த அறிவூட்டலும் தடுப்பு நடவடிக்கைகளும்


சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.


கோடை காலத்தில் கறவை மாடுகள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்கின்றன. இந்த நாட்களில் ஏற்படும் அதிகரித்த வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக ஏற்படும் நீர் மற்றும் தீவனத்தின் பற்றாக்குறை கால்நடைகளின் வழமையான உடலியல் தொழிற்பாடுகளை கடுமையாகப் பாதிக்கின்றன. இவற்றின் காரணமாக பால் உற்பத்தி குறைதல், இனப்பெருக்க ஆற்றல் குறைதல், உடல் எடை குறைதல் போன்ற துர் விளைவுகள் ஏற்படுகின்றன. இதனால் இவற்றை நம்பி வாழும் பண்ணையாளர்கள் பொருளாதார ரீதியாக பின்னடைவைச் சந்திக்கின்றனர்.



Image source - www.vaticannews.va

கறவை மாடுகள் போன்ற கால்நடைகள் காலநிலைக்கு தம்மை இயல்பாகவே தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கவை. அதிகரித்த வெப்பம் வெளிச் சூழலில் காணப்படும் போது தமது உடல் தொழிற்பாடுகளை குறைத்தும் உணவு உண்பதை குறைத்தும் தமது உடல் வெப்ப உற்பத்தியைக் குறைக்கின்றன. இதே போல் குளிர் நிறைந்த நாட்களில் அதிக தீவனம் உண்டு தமது உடல் வெப்ப செயற்பாடுகளை அதிகரித்து வெப்பத்தை உற்பத்தி செய்கின்றன.




**மாட்டின் உடலில் வெப்பம் உணரப்படும் அளவு**

**Image source - milkplan.com**

காணப்படும் போது கால்நடைகள் தமது உடல் தொழிற்பாடுகளை சீராக வைத்திருக்கும். வெப்பமானது அதிகரித்த இடத்தில் இருந்து குறைந்த இடத்துக்கு கடத்தப்படுகிறது. அதாவது வெளி வெப்பம் அதிகமாயின் அதனை விட வெப்பநிலை குறைந்த கால்நடைகளின் உடலுக்கு அது கடத்தப்படும். மேலும் உடல் தொழிற்பாடுகளால் கால்நடைகள் கணிசமான வெப்பத்தை உற்பத்தி செய்கின்றன. அவை உடலால் உற்பத்தி செய்யப்படும் வெப்பத்தை சுவாசம், வியர்வை மூலம் உடலை தளர்த்தி வெளியேற்றுகின்றன.

இலங்கை, தமிழகம் போன்ற வெப்ப மண்டல பகுதிகளில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையான மாதங்கள் பொதுவாக கோடை காலமாக கருதப்படுகின்றன. இந்தப் பருவத்தில் மழை குறைந்து, வெப்பம் அதிகரிக்கிறது. இந்த நாட்களில் மனிதர்கள் மட்டுமின்றி மாடுகள் போன்ற கால்நடைகளும் வெப்பத்தால் பாதிக்கப்படுகின்றன. இந்தக் கட்டுரை கறவை மாடுகளுக்கு வெப்பக் காலத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும் அவற்றுக்குரிய தீர்வு மேலாண்மை முறைகளையும் ஆராய்கிறது.

சூழல் வெப்பநிலை, சாரீரப்பதன், காற்றின் வேகம், காற்றழுத்தம் போன்ற சூழல் காரணிகள் கால்நடைகளில் வெப்ப அயர்ச்சியை கூட்டாக ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக அவை கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. கறவை மாடுகளின் சராசரி உடல் வெப்பநிலை 38.6 பாகை செல்சியஸ் [101.5 F] ஆகும். இது மாற்றமுறாமல் வைத்து பேணப்பட வேண்டும். சுற்றுச் சூழலில் வெப்பம் அதிகரிக்கும் போது அது உடலையும் பாதிக்கிறது. பொதுவாக சராசரி உடல் வெப்பநிலை அளவிலேயே சூழல் வெப்பநிலை

உடலால் உற்பத்தி செய்யப்படும் வெப்பம் மற்றும் சூழல் வெப்பம் என்பன ஒன்று சேர்ந்து ஒருமித்த அதிகரித்த வெப்பத்தை தோற்றுவிக்கின்றன.

கோடை காலத்தில் ஏற்படும் அதிகரித்த வெப்பம் சுற்றுப் புறத்தில் உள்ள நீர்நிலைகள் செடி - கொடிகள், மரங்கள் ஏனைய உயிரினங்களில் இருந்து நீரை ஆவியாக்குகிறது. இதனால் அந்தப் பகுதியின் சாரீரப்பதன் அதிகரிக்கிறது. இதனால் வியர்வையை வெளியேற்றும் திறனும்

கறவை மாடுகளின் சராசரி உடல் வெப்பநிலை 38.6 பாகை செல்சியஸ் (101.5 F) ஆகும். இது மாற்றமுறாமல் வைத்து பேணப்பட வேண்டும். சுற்றுச் சூழலில் வெப்பம் அதிகரிக்கும் போது அது உடலையும் பாதிக்கிறது.

குறைகிறது. உடல் வெப்பத்தை வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட, அது உடலைப் பாதிக்கிறது.

வறட்சிக் காலத்தில் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைப்பது குறைந்து விடுகிறது. மேய்ச்சல் தரைகளில் புற்களின் அளவு குறைவதால் அவை அதிக தூரம் பயணிக்க வேண்டி ஏற்படுகிறது. இதனால் அதிக சக்தியும் தண்ணீர் செலவும் ஏற்பட்டு அவற்றின் உற்பத்தித் திறன் வீழ்ச்சியடைகிறது.



அதிக வெப்பம் காரணமாக உமிழ்நீர் வடிதல்

Image source - www.canr.msu.edu

மேலும் இக் காலப் பகுதியில் உடல் வெப்ப உற்பத்தியை குறைக்கும் விதமாக மாடுகள் தமது தீவன உட்கொள்ளலைக் குறைப்பதால் புரதம் போன்ற உடல் வளர்ச்சிக்கு தேவையான சத்துக்கள் குறைவடைகின்றன. இதனால் உடல் வளர்ச்சி பாதிப்படைவதோடு இனப்பெருக்க ஆற்றலும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக ஈஸ்ட்ரோஜன் போன்ற இனப்பெருக்க ஓமோன்களின் சுரப்பு, அதிகரித்த வெப்ப நிலையில் குறைகிறது. இதனால் மாடுகள் வேட்கை / சினைப்பருவ அறிகுறிகளைக் காட்டுவது சரியாக தெரியாது. கருவுறும் பசுக்களுக்கு சில வேளைகளில் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்பும் ஏற்படுகிறது. கருவின் வளர்ச்சியும் பாதிக்கப்படும். பொதுவாகவே கால்நடைகள் வெப்ப காலங்களில் சினையாகும் விகிதம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

கோடை காலத்தில் ஏற்படும் உடல் வெப்பத்தை குறைக்க உட்புற உறுப்புகளுக்கு செல்லும் இரத்த ஓட்டம், தோல் போன்ற வெளிப்புற உறுப்புகளுக்கு செல்லும்படி திருப்பப்படுகிறது. இதனால் கருப்பை, சூலகம், கருப்பைக் குழல் போன்ற உறுப்புகளுக்கு சரியான இரத்த ஓட்டம் கிடைக்காது. இதனால் அவற்றுக்கு கிடைக்க வேண்டிய சத்துக்களும் குறைவதோடு வெளியேற வேண்டிய கழிவுகளும் தேங்கி விடுவதால் அவற்றின் வழமையான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு இனப்பெருக்கம் பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாகத்தான் ஒன்றுக்கு மேற்பட்ட சினை ஊசி போட்டும் சில வேளைகளில் பசுக்கள் சினைப்பிடிக்காத நிலை ஏற்படுகிறது. அத்துடன் சினை மாடுகளின் கன்றின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. கிடைக்கும் பசுந்தீவனங்களில் தகுந்த சத்துகள் குறைதல், போதிய நீர் கிடைக்காமையால் வளர்ச்சி பாதிப்படைதல் போன்றன காரணமாக பாலுற்பத்தி குறைவதோடு பாலின் கொழுப்பு மற்றும் கொழுப்பில்லா இதர சத்துகளும் குறைவடைகிறது. அத்துடன் இரப்பையில் காணப்படும் நுண்ணுயிரிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு அமிலத்தன்மை அதிகரிப்பதால் கால்நடைகள் இறக்கவும் நேரிடும்.

மேலும் நீர்நிலைகளில் மீன்கள், பாசிகள் மற்றும் அல்காக்கள் இறப்பதால் மாசுபட்ட அவற்றை அருந்தும் பசுக்கள் நோய்வாய்ப்படுகின்றன. அத்துடன் கால்நடைகளின் நிர்ப்பீடன நோய் எதிர்ப்பு சக்தி குறைவதால் கால்வாய் நோய், கருங்காலி நோய் போன்றனவும் இலகுவாக ஏற்படுகின்றன. புற மற்றும் அக ஒட்டுண்ணிகள் இலகுவில் இவற்றைத் தாக்குவதால் இவை பலவீனமடைகின்றன.

## வெப்ப அயர்ச்சி

அதிக சூடான சூழலுக்கு கால்நடைகள் உட்படுவதால் ஏற்படும் அசௌகரியமான நிலை வெப்ப அயர்ச்சி எனப்படும்.

**வெப்ப அயர்ச்சியின் அறிகுறிகள்**

- மாடுகள் நிழலான பகுதியில் தஞ்சமடையும்.
- அதிக அளவில் தண்ணீர் குடிக்கும்
- அதிக உமிழ் நீர் வடிக்கும்
- வேகமான மூச்சு விடுதல் காணப்படும் அதேவேளை மூச்சுவிடச் சிரமப்பட்டு

வாயாலும் சுவாசிக்கும்.

- உடலின் வெப்பம் அதிகரித்துக் காணப்படும்.
- நடமாடும் திறன் குறையும்.
- கடும் வெப்ப அயர்ச்சியின் போது அவை நடுங்கி கீழே விழுந்து விடும்.

பொதுவாக உள்ளூர் மாடுகளை விட வெளிநாட்டு ரக மற்றும் கலப்பின மாடுகளே வெப்ப அயர்ச்சிக்கு உட்படுகின்றன.

வெப்ப அயர்ச்சியை குறைக்க சிறப்பான மேலாண்மை முறைகளைச் செய்ய வேண்டும்.

### கொட்டகை மேலாண்மை

வெக்கை காலத்தில் கால்நடைகளை பாதுகாக்க சிறந்த கொட்டகை மேலாண்மை அவசியமாகிறது. வெளி வெப்பநிலையை விட கொட்டகையினுள் வெப்பநிலை குறைவாக அமைய வேண்டும். கொட்டகை நல்ல காற்றோட்டம் மிக்கதாகவும் சூரிய ஒளி நேரடியாக விழாதவாறு அகலப் பக்கம் கிழக்கு மேற்கு நோக்கியதாக அமைய வேண்டும். கொட்டகையின் அகலம் அதிகமாக இருந்தால் காற்றோட்டம் தடைப்படும். அகலம் 25 - 30 அடிக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். நீளம் மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாறுபடலாம் எனினும் அதிக பட்சம் 100 அடிக்கு மேல் இருப்பது கவனிப்பில் சிரமத்தை ஏற்படுத்தலாம். உயரத்தை 12 அடிக்கு மேல் வைத்திருப்பது பிரயோசனமற்றது. ஒரு மாட்டுக்கு 50-60 சதுர அடி வரும் வகையில் பார்க்க வேண்டும். ஒரு கொட்டகைக்கும் மற்றைய கொட்டகைக்கும் இடையில் இடைவெளியை குறைந்து இருந்தால் காற்றோட்டம் சிறப்பாக இருக்கும்.

பனை,தென்னை ஓலை மற்றும் வைக்கோல் கொண்டு கூரையை அமைப்பது சிறப்பானது. தகரம் மற்றும் அஸ்பெஸ்டோஸ் கொண்டு கூரையை அமைக்கும் போது அதற்கு மேல் ஓலைகள், வைக்கோலை போட வேண்டும். கீரைக் கொடி, பயறுக் கொடி, அழகு மலர்க் கொடி போன்ற படர் தாவரங்களை வளர விடலாம். தண்ணீர் தெளிப்பான்களை பயன்படுத்தலாம். கொட்டகையைச் சுற்றி நிழல் மரங்களை நட வேண்டும். வெயில் நேரங்களில் ஈரச் சாக்குகளை சுவரின் இரு பக்கமும் தொங்க விடலாம். கொட்டகையின் உள்ளே தெளிப்பான்களையும் மின் விசிறிகளையும் உபயோகிக்கலாம். நவீனப் பண்ணைகளில் நவீன நீர் தெளிப்பான்கள் பாவிக்கப்படுகின்றன. பகல் வேளையில் மர நிழல்களில் மாடுகளைக் கட்டி வைக்கலாம். இரவு வேளையில், வலுக் குறைந்த அதிகம் வெப்பத்தை வெளிவிடாத மின் குமிழ்களைப் பாவிக்கலாம்.



Image source - www.sundaytimes.lk

கொட்டகை இல்லாத மற்றும் மிகக் குறைந்த மாடுகளைக் கொண்டவர்களுக்கு மர நிழல்கள் மிகவும் பயன்மிக்கவை.

மேய்ச்சலுக்கு விடும் நேரத்தை காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரையும் மாலை 4 தொடக்கம் 6 மணி வரையும் ஒழுங்குபடுத்தலாம். அதிக வெப்பமுள்ள மதிய வேளையில் மேய்ச்சலில் விடுவது சாதகமற்றது.

வெப்பம் அதிகமுள்ள நாட்களில் குறைந்தது

இரண்டு முறையாவது மாடுகளைக் குளிப்பாட்ட வேண்டும். எருமை மாடுகளை குறைந்தது ஐந்து முறையாவது குளிப்பாட்ட வேண்டும். எருமை மாட்டுக்கு வியர்வைச் சுரப்பிகள் அதிகம் இல்லாததாலும் அவற்றின் நிறம் கருப்பு நிறமாகையாலும் வெப்பத்தால் கடுமையாகப் பாதிப்படைகின்றன.

## தீவன மேலாண்மை

சூழலின் வெப்பநிலை அதிகரித்தால் மாடுகள் தீவனம் உட்கொள்வது குறைவடைகிறது. கோடையில் வறட்சி காணப்படுவதால் பசும் புல் கிடைப்பது சிரமமாகிறது. போதிய நீர் இல்லாத காரணத்தால் புற்களில் உள்ள ஊட்டச்சத்துகள் குன்றி நார்சத்து அதிகரிக்கும். இதனை மாடுகள் உண்பதால் உடல் எடை குறையும்; பால் உற்பத்தியும் குறையும். எனவே அதற்குத் தகுந்தது போல பசுக்களுக்கு பசுந்தீவனம், உலர் தீவனம், செறிவுத் தீவனம் வழங்கி கனியுப்பு இழப்பை ஈடு செய்ய வேண்டும்.

அதிக மாடுகள் காணப்படும் பண்ணைகளில் வயதான உற்பத்தி குறைந்த, சினைப்பட சிரமப்படும் மாடுகளை கழிக்க வேண்டும். இல்லாது போனால் அவை ஏனைய மாடுகளுடன் உணவு, தண்ணீருக்கு போட்டி போடலாம். இதனால் ஆரோக்கியமான விலங்குகளுக்கு தகுந்த உணவு, தண்ணீர் கிடைக்காது. பண்ணையைச் சுற்றி மா, பலா, பூவரசு, அரசு, ஆலமரம், கிளுவை போன்ற மரங்களை நட்டு வைத்தால் புல் கிடைக்காத வறட்சி நாட்களில் இவற்றின் இலைகளை வழங்கலாம். இவற்றில் கணிசமான அளவு புரதச்சத்து காணப்படுகிறது.

வைக்கோல், கடலை, உளுந்துக் கொடி, கரும்புத் தோகை, சக்கை போன்றன அதிகம் கிடைக்கும் காலப் பகுதிகளில் அவற்றைச் சேமித்து வைத்தால், அவற்றை வறட்சிக் காலத்தில் மாற்றுத் தீவனமாகப் பாவிக்கலாம்.

சொட்டு நீர்ப்பாசனம் மூலம் தீவனப்பயிர் வளர்ப்பில் ஈடுபட்டு நீர் விரயத்தை தவிர்க்கலாம். காணியின் உயரமான இடத்தில் கொட்டகையை அமைத்தால் கொட்டகையைக் கழுவும் நீர் தீவனப்பயிர் வளரும் பகுதிக்கு வடிந்து வரும்; நீர் விரயம் தவிர்க்கப்படும். புற்களை வழங்கும் போது புல் வெட்டும் இயந்திரம் மூலம் சிறிய துண்டுகளாக வெட்டிக் கொடுப்பதால் விரயமாதல் கணிசமாகக் குறைக்கப்படுகிறது.

அசோலா மற்றும் ஹைட்ரோபோனிக்ஸ் [hydroponics] எனும் மண்ணில்லாப் பயிர்ச் செய்கையைச் செய்து மாடுகளுக்கு வழங்க முடியும். அத்துடன் புற்கள் அதிகமாக கிடைக்கும் காலத்தில் அதனை உலர்த்தி உலர் புல்லாகவும் [hay], பதப்படுத்தி ஊறுகாய்ப் புல்லாகவும் [silage] வறட்சிக் காலத்தில் கொடுக்க முடியும். நவீனத் தீவன முறையான TMR உணவூட்டலைச் செய்யலாம்.

அதிகமாக தீவன மூலப்பொருட்கள் கிடைக்கும்போது அவற்றைப் பாதுகாக்கும் அதே வேளை, அவை நஞ்சாகாமலும் பாதுகாக்க வேண்டும்.

கோடையில், மாடுகள் வெப்ப உற்பத்தியைக் குறைக்கும் விதமாக அடர்வு தீவனத்தை குறைத்தே உண்கின்றன. எனவே உட்கொள்ளும் அடர்வு தீவனம் சத்துக்கள் நிறைந்ததாக பார்த்துக்கொள்ளும் அதே வேளை அதனை காலை, மாலை என்று பிரித்து வழங்கலாம்.

புற்களின் சத்து குறைவதாலும் ‘அசையூன்’ வயிற்றில் வாழும் நுண்ணுயிர்களின் வளர்ச்சி பாதிப்படைவதாலும் ஏற்படும் அமில அதிகரிப்பை ஈடுசெய்ய சோடா உப்பு மற்றும் மக்னிசியம் பால் கொடுக்கலாம். தாது உப்புகளையும் கொடுக்க வேண்டும்.

## நோய் மேலாண்மை

கோடை காலத்தில் உணவின்றி, கால்நடைகள் மெலிவதோடு நிர்ப்பீடன நோய் எதிர்ப்பு சக்தியையும் இழப்பதால் இலகுவில் நோய்த்தாக்கத்துக்கு உட்படுகின்றன. இதனால் கால்வாய் நோய் [foot and mouth] கருங்காலி நோய் [black quarter] போன்றவற்றுக்கான தடுப்பூசிகளை தகுந்த நேரத்தில் போட வேண்டும்.

மேலும், சிறந்த அக ஒட்டுண்ணி மருந்துகளை சரியான அளவில் கொடுப்பதோடு புற ஒட்டுண்ணிகளை இல்லாது செய்யவும் வேண்டும். நீர் வற்றிய குளம், குட்டைகளில் ஒட்டுண்ணிப் பெருக்கம் அதிகம் காணப்படுவதால் அவற்றை அங்கு நீர் அருந்த விடக்கூடாது.

மேற்கூறிய சகல மேலாண்மை முறைகளையும் சரியாகக் கையாண்டு கோடைகாலத்தில் கறவை மாடுகளில் ஏற்படும் வெப்ப அயர்ச்சியைக் குறைத்து சிறந்த உற்பத்திகளைப் பெறமுடியும்.

(தொடரும்)

ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக ‘பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை‘ எனும் தொடர் அமைகின்றது.



நாகமுத்து பிரதீபராஜா

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்குப் பிராந்தியத்தின் காலநிலையை பாதிக்கும் காரணிகள்




யாழ். குடாநாட்டின் அமைவிடம்

Image source - www.marciatrekssrilanka.com

வடக்குப் பிராந்தியத்தின் புவியியல் அமைவிடம் அதன் காலநிலையைக் கட்டுப்படுத்துகின்றது. அந்த வகையில் பின்வரும் காரணிகள் வடக்குப் பிராந்தியத்தின் காலநிலையைக் கட்டுப்படுத்துகின்றன.

**1. தீபகற்ப தோற்றப்பாடு** : வடக்குப் பகுதி மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டுள்ளது. மேற்கில் அரபிக் கடல் உள்ளது. வடக்கு எல்லை பாக்கு ஜலசந்தி, கிழக்கு எல்லை வங்காள விரிகுடாவாக உள்ளது. வடக்கு மாகாணத்தின் தீபகற்ப நிலவமைப்பு காரணமாக வடக்கு பிராந்தியத்தின் வளி வெப்பநிலை, கடல் நீரின் அருகாமையால் பாதிக்கப்படுகிறது. இந்த நிலை காற்றின் திசைகள் மற்றும் வேகத்தையும் பாதிக்கிறது. குறிப்பாக நிலம் மற்றும் கடல்


காற்று, அதிகூடியஅதி குறைந்தபட்ச வெப்பநிலை, வெப்பவீச்சு மற்றும் வெப்பநிலையின் இடஞ்சார்ந்த மாறுபாடு, மழையின் பருவகால மற்றும் இடஞ்சார்ந்த முறைகள் கூடுதலாக தாக்கத்தை செலுத்துகின்றன. இரண்டாவது இடைப்பருவ கால மழை மற்றும் வடகிழக்கு பருவமழை ஆகியவற்றின் போது, வங்காள விரிகுடாவின் கடல் மேற்பரப்பில் நிலவும் அதிக வெப்பநிலையினால் ஏற்படும் வளிமண்டல அமுக்க வேறுபாடு காரணமாக நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வடக்கு மாகாணம் கன மழையைப் பெறுகின்றது.

**2. அகலக்கோடு மற்றும் நெடுங்கோடு :**
வடக்கு மாகணம், 5°54′ மற்றும் 9° 52′ இற்கு இடைப்பட்ட அகலக் கோட்டிலும் 79°39′ மற்றும் 81° 53′ கிழக்கு நெட்டாங்குக்கும் இடைப்பட்ட அயனப்பகுதியில் அமைவு பெற்றுள்ளதால் ஆண்டு முழுவதும் உயர்வான வெப்பநிலையையும் பருவ ரீதியான மழைவீழ்ச்சியையும் பெறுகிறது.

**3. உள்ளக நீர்நிலைகள் மற்றும் கடநீரேரிகள் :**
வடக்கு பிராந்தியத்தில் உள்ள 54 பெரிய மற்றும் நடுத்தர நீர்த்தேக்கங்கள் கிட்டத்தட்ட 2,39,176 ஏக்கர் அடி நீர் இருப்பு கொள்ளளவை ஆண்டின் 4 மாதங்களுக்கு மேல் கொண்டுள்ளது. வட மாகாணத்தில் 20 ஆற்றுப் படுகைகள் உள்ளன. இப்பகுதியில் 2,066 சிறு குளங்களும் உள்ளன. வடக்கு பிராந்தியம் ஐந்து கடநீரேரிகளைக் கொண்டுள்ளது. இந்த உள் நீர்நிலைகள் மற்றும் கடநீரேரிகள் மாகாணத்தின் காலநிலையை, குறிப்பாக உள்ளூர் வெப்பநிலைக் கட்டுப்பாட்டை பாதிக்கின்றன. இந்த நீர்நிலைகள், சம்பந்தப்பட்ட பகுதிகளின் ஈரப்பத விகிதத்தையும் பாதிக்கிறது.


**4. சூரியனின் நிலை மற்றும் அதன் கதிர்களின் அளவு மாறுபாடு :** பூமியின் சுற்றுப்பாதைகள் மற்றும் அதன் மாறும் நிலைகளும் வடக்கு பிராந்தியத்தின் காலநிலையைப் பாதிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் வடக்குப் பகுதியில் சூரியன் இரண்டு முறை செங்குத்தாக உச்சம் கொடுக்கின்றது. ஏப்ரல் மாதத்தின் 16-18 இற்கு இடையிலும் மற்றும் ஒக்டோபர் மாதத்தின் 12-14 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியிலும் இது நிகழும். இக்காலப்பகுதிகளில் வடமாகாணத்தில் சூரியனின் 90 பாகை கோண நிலை காரணமாக, அது அதிக வெப்பநிலையை அனுபவிக்கிறது. மன்னார் மாவட்டத்தில் சராசரியாக 34 பாகை செல்சியஸ்க்கு மேலாக வெப்பநிலை பதிவாகுகின்றது.

**5. பருவமழைச் சுழற்சிகளின் தாக்கம் :**
இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் காலநிலையை பருவமழைச் சுழற்சி பாதிக்கிறது. இலங்கையின் வடக்குப் பகுதி வடகிழக்கு பருவக்காற்றுப் பாதையில் அமைந்துள்ளது. வடகிழக்கு பருவமழை வங்காள விரிகுடாவில் இருந்து அதிக ஈரப்பதத்துடன் வீசுகிறது; குளிரான காலநிலையை உருவாக்குகிறது. மேலும் வடகிழக்கு பருவமழை காலங்கள், குறிப்பாக டிசம்பர் - ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில், அதிகபட்ச மழைப்பொழிவிற்கு வழிவகுக்கிறது. மேலும், வடக்குப் பகுதி தென்மேற்குப் பருவக்காற்றுப் பாதைக்கு எதிர்திசையில் அமைந்துள்ளது. இதன் விளைவாக, தென்மேற்கு பருவக்காற்றுக் காலத்தில், இலங்கையின் மத்திய மற்றும் வடமத்திய பகுதிகளின் பரந்த நிலப்பரப்பில் காற்று பயணிப்பதால், வடக்கு மாகாணத்தின் மீது சிறிது வறண்ட காற்று வீசுகிறது. இதன் காரணமாக, தென்மேற்கு




**பருவப் பெயர்ச்சி மழைகள் கிடைக்கும் திசைகளையும், ஈர - வெப்ப வலயங்களையும் காட்டும் படம்**

Image source - magnificentsrilanka.com




**இலங்கையின் சூறாவளிப் பாதை**

**Image source - communitylegal.lk**

*பருவமழைக் காலப்பகுதியில் வடக்கு மாகாணம் மிகக் குறைவான மழையைப் பெறுகின்றது. எவ்வாறாயினும், தென்மேற்கு பருவமழையின் போது, அரபிக்கடலில் பருவமழை கிடைப்பதால் மன்னார் மாவட்டத்தில் 50 மி.மீ. இற்கும் குறைவான மழைவீழ்ச்சி கிடைக்கும்.*

**6. அயனமண்டல குழப்பங்கள் :** *அயனமண்டல குழப்பங்கள் வடக்கு பிராந்தியத்தின் காலநிலையையும் பாதிக்கின்றன. இந்தியப் பெருங்கடலில் உருவாகும் சூறாவளிகளின் பாதையின் குறுக்கே வடக்கு மாகாணம் அமைந்துள்ளது. தம்பையாப்பிள்ளையின் கூற்றுப்படி, 1860 முதல் 1960 வரை, 124 சூறாவளிகள் இலங்கை முழுவதும் கடந்து சென்றன (Alahakoon & Edirisinghe, 2021b). இதனால் இலங்கையின் வடக்குப் பகுதியானது இரண்டாவது இடைப் பருவ மழைக்காலம் மற்றும் வடகிழக்கு பருவக்காற்றுப் பருவங்களில் அதிக மழையைப் பெறுகிறது. இது வடக்கு மாகாணத்தின் காற்றின் திசையையும் காற்றின் வேகத்தையும் பாதிக்கிறது (படம் 4.1).*

**7. இந்தியத் துணைக்கண்டம் :** *இந்தியத் துணைக்கண்டம் இலங்கையின் வடக்குப் பகுதியின் காலநிலையை தீர்மானிக்கப் பங்களிக்கும் மற்றொரு பிரதான காரணியாகும். இந்தியத் துணைக்கண்டத்தின் பெரிய நிலப்பரப்பின் அளவு வடக்குப் பிராந்தியத்தின் வறண்ட காலநிலையை உருவாக்குகின்றது.*

**8. இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண் :**

*இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண் இலங்கையினுடைய காலநிலையை தீர்மானிப்பதில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பங்கினை வழங்குகின்றது. குறிப்பாக இந்த இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண் நேர்ப் பெறுமானமாக இருக்கின்ற பொழுதும் மறைப்பெறுமானமாக இருக்கின்ற பொழுதும் அவற்றினால் உருவாக்கப்படுகின்ற கடல் மற்றும் தரை வெப்ப வேறுபாட்டுச் செல்வாக்குகளின் விளைவாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை கணிசமாக பாதிக்கப்படுகின்றது. சில சமயங்களில் இலங்கையின் வடக்கு மாகாணத்தைச் சூழவுள்ள அரபிக் கடலிலும் வங்காள விரிகுடாவிலும் வேறுபட்ட அளவிலான வெப்பச் சுட்டெண், அதாவது ஒரு பிரதேசத்தில் நேர்ப்பெறுமானமாகவும் இன்னொரு பிரதேசத்தில் மறைப் பெறுமானமாகவும், இருக்கின்ற பொழுது ஒரு கொந்தளிப்பான அல்லது ஒரு குழப்பமான வானிலைத் தோற்றப்பாடு உருவாகின்றது. அதனால் இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை நிலைமைகளை தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது.*

**9. 'எல் நினோ மற்றும் லாநினோ'வின் செல்வாக்கு :**

*இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண் எவ்வாறு வடக்கு மாகாணத்தினுடைய காலநிலையைப் பாதிக்கின்றதோ அது போன்று 'எல் நினோ மற்றும் லாநினோ'வும் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலையைக் கட்டுப்படுத்துவதில் பங்களிக்கின்றன. இத் தோற்றப்பாடுகள் வடக்கு மாகாணத்தினுடைய வெப்பமான மற்றும் குளிரான காலநிலை நிலைமைகளை தோற்றுவிப்பதில் கணிசமான அளவு பங்களிப்புச் செய்கின்றன. எல் நினோ மற்றும் லா நினோவின் தெற்கு ஊசலாட்ட (ElNino Southern Oscillation) நிலைமைகளினால்*




இந்து சமுத்திரத்தில் இந்தியா, இலங்கையின் அமைவிடம்

Image source - www.shortpedia.com

வடக்கு மாகாணத்தினுடைய வெப்ப நிலையில் அதிகரிப்பு ஏற்படுவதுடன் மாகாணத்தை அண்மித்து சமுத்திர மேற்பரப்பின் வெப்பநிலையிலும் அவை கணிசமான அளவு பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இதனால் தொடர்ச்சியாக வளிமண்டல நிலைமைகளில் ஏற்படுகின்ற மாற்றம் காரணமாக கடந்த 30 ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலையைக் கட்டுப்படுத்துவதில் எல்நினோ மற்றும் லாநினோவின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு இருப்பதாக காலநிலையியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**10. ரோஸ்பி அலைகள் மற்றும் மேடன் யூலியன் அலைவுகள் :** இந்து சமுத்திரத்திற்கு வருகின்ற ரோஸ்பி அலைகள் மற்றும் மேடன் யூலியன் அலைவுகள் ஆகியன வடக்கு மாகாணத்தினுடைய வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சிகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற நிலைமைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் பூகோள ரீதியான காலநிலை தோற்றப்பாடுகளில் ஒன்றாக விளங்குகின்ற ரோஸ்பி அலைகளும், மேடன் யூலியன் அலைவுகளும் இந்து சமுத்திரத்திற்கு வருகின்ற போது சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலையில் கடுமையான மாற்றங்களைச் செய்கின்றன. இந்த மாற்றங்கள் வடக்கு மாகாணத்தின் காலநிலையைக் கட்டுப்படுத்துகின்றன.

இவ்வலைவுகளின் வருகை காரணமாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தினுடைய கடல் மேற்பரப்பு வெப்புநிலையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அதனைச் சுற்றியுள்ள நாடுகளின் வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சிகளில் கணிசமான அளவு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அந்த அடிப்படையில் இந்து சமுத்திர வடக்குப் பகுதிக்கு வருகின்ற இந்த அலைவுகள் காரணமாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மாற்றம் பெறுகின்றது.

**11. காட்டுப் பரப்புகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் :**
வடக்கு மாகாணத்தினுடைய காலநிலையைத் தீர்மானிப்பதில் வடக்கு மாகாணத்தில் பரந்துள்ள காட்டுப் பரப்புகள் மற்றும் இயற்கை தாவரங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பினை மேற்கொள்கின்றன. இலங்கையின் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகின்ற பொழுது அதிக அளவிலான காட்டுப் பரப்புகளை கொண்டிருக்கின்ற மாகாணங்களில் முதன்மையானதாக வடக்கு மாகாணம் காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் விதியின்படி ஒதுக்கப்பட்ட 25% என்ற காட்டுப் பரப்பை தாண்டி இலங்கையினுடைய வடக்கு மாகாணத்தில் 32% அளவுக்கு காட்டுப்பரப்புகள் காணப்படுகின்றன. இந்தச் செறிவான காட்டுப்பரப்புகள் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலையை கட்டுப்படுத்துவதில் மிகப்பெரிய பங்களிப்பினை வழங்குகின்றன.

**12. தரைத் தோற்ற மற்றும் தரை உயர வேறுபாடுகள் :**
வடக்கு மாகாணத்தில் மிகப்பெரிய அளவிற்கு தரைத்தோற்ற வேறுபாடுகள் காலநிலையைக் கட்டுப்படுத்தாது விட்டாலும் கூட வடக்கு மாகாணத்தினுடைய வெப்பநிலை மற்றும் ஈரப்பதனில் தரை உயர வேறுபாடுகள் மிகப்பெரிய செல்வாக்கைச் செலுத்துகின்றன. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய மத்திய பகுதி ஒப்பீட்டளவில் உயர்வான தரை உயரத்தையும் கிழக்கு மற்றும் மேற்கு கரையோரப் பகுதிகள் குறைவான தரை உயரத்தையும் கொண்டிருக்கின்றன. இவை வடக்கு மாகாணத்தினுடைய காலநிலையைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கினை வழங்குகின்றன.

(தொடரும்)

திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.

# புதிய வேலை உலகும் ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவும் (Generative AI)



கணபதிப்பிள்ளை ரூபன்

கந்தரூபன் (ரூபன்) கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

**"பிறப்பென்னும் பேதைமை நீங்கச்**
**சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு"**
**திருக்குறள் 358**

**மு.வரதராசனார் விளக்கம் :**
*பிறவித்துன்பத்திற்கு காரணமான அறியாமை நீங்குமாறு முக்தி எனும் சிறந்த நிலைக்குக் காரணமான செம் பொருளைக் காண்பதே மெய்யுணர்வு.*

இன்றைய உலகில் தொழில்நுட்ப மாற்றங்கள் மிகவும் துரிதப்பட்டுக் கொண்டு வருகின்றது. முதலாவது தொழில்துறை புரட்சி (Industrial Revolution) 1800ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 1900ம் ஆண்டுகளின் முற்பகுதிகளிலும் தொடங்கி உலகில் பெரும் மாற்றங்களை உருவாக்கியது. 1900ம் ஆண்டுகளின் பின் பகுதிகளில் ஆரம்பித்த தகவல் தொழில்நுட்ப புரட்சி உலகை இணைத்து இணையத்தளத்தை மையமாகக் கொண்டு பல முக்கியமான புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடிக்க, பயன்படுத்த, அதன் மூலம் வியாபாரம் மற்றும் மக்களின் வாழ்வு நிலையை உயர்த்த மிகவும் உதவியாக அமைந்தது. அதனது அடுத்த கட்டம் தான் செயற்கை நுண்ணறிவும் (Artificial Intelligence), ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவும் (Generative AI).

ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவைப் பற்றி அறியாதவர்கள் இன்று இருப்பது அதிசயம். மனிதர்களது முன்னைய செயல்பாடுகளையும் அவர்களது முடிவுகளையும் வைத்து "மனிதர்களைப் போல சிந்திக்கக்கூடிய இயந்திரங்களை உருவாக்கும் அறிவியல்" என செயற்கை நுண்ணறிவு பற்றி ஒரு எளிய விளக்கத்தைக் கொடுக்கலாம். "ஆக்கமுறை"

செயற்கை நுண்ணறிவு என்பது செயற்கை நுண்ணறிவின் ஓர் பகுதியாகும். ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவு, செயற்கை நுண்ணறி தொகுத்த விடயங்களை அடிப்படையாக வைத்து உரை, படங்கள், ஒலி மற்றும் புதிய உள்ளடக்கங்களை உருவாக்குகிறது. ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவுக்கு பயன்படுத்தப்படும் பயிற்சித் தரவுத்தொகுப்பு (*Training Dataset*), உலகம் முழுவதும் இணைத்தளத்தில் உள்ள சகல தகவல்களையும் பயன்படுத்தி உருவாக்கப்படுகிறது. அது மட்டுமன்றி அப்படியான தகவல்களை மிகவும் வேகமாக சேகரித்து, பகுப்பாய்ந்து, தொகுத்து கேட்பவருக்குக் கொடுக்கிறது.




Image Source - www.fairobserver.com

ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவானது எமது உலகத்தின் எதிர்காலத்தில் பல மாற்றங்களை உருவாக்கப்போகிறது. இப்போதைய இளம் சந்ததி இணையத்தளத்தோடும் சமூக ஊடகத்தோடும் ஒன்றாக இருப்பதுபோல் எமது எதிர்காலத் தலைமுறை ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவுடன் இணைந்து வாழ்வது சாத்தியம். அதைத் தவிர்ப்பதென்பது சாத்தியம் இல்லை. அப்படியான சந்தர்ப்பத்தில் பெற்றோர்களான நாம் எமது பிள்ளைகளை இந்தச் சூழ்நிலையில் வளர்ப்பதைப் பற்றி சில கருத்துக்களை கூறலாம் என்று இருக்கிறேன்.

**உருவாக்குவதெல்லாம் உண்மையென்றல்ல (Every thing Generated are not true)**: ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவானது, உலகில் இதுவரை படைத்த ஆக்கங்கள், பத்திரிகைகள், கட்டுரைகள் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு, இயந்திரங்களை/கணனிகளை பாவிப்பதன் மூலம் அவற்றின் தொடர்புகளை புரிந்து புதிய விடயங்களுக்கு, கேள்விகளுக்கு பதில் உருவாக்குகிறது. இது, இந்த முறையில் அலசப்பட்ட புத்தகங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகளை மட்டுமன்றி இணைத்தளத்தில் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாத விடயங்களையும் சேர்த்தே பதிலை உருவாக்குகிறது. இதனை எமது பிள்ளைகளுக்கு விளக்கமாக எடுத்துக் கூறி, வரும் தகவல்களின் உண்மையறிந்து பாவிக்கச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

**பகுப்பாய்வுத் திறன் (Analytical Skills)**: மேலே கூறியது போல், இணைத்தளத்திலும் ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவிலும் வரும் தகவல்களைக் கொண்டு, கடந்தகாலச் செயல்களை மனிதர்கள் எவ்வாறெல்லாம் தீர்த்து வைத்தார்கள் என்பதை வைத்து இது பதில் கூறுகிறது. இதற்கு பல விதமான கணித மற்றும் சிக்கலான கணக்கீட்டு கோட்பாடுகளை பயன்படுத்தி விடை சொல்லுகிறது. ஆனாலும் இதற்கு உள்ளீடாகப் பயன்படுத்தும் தகவல்கள் சரியானதா அல்லது பிழையானதா என்று இயந்திரங்களால் சுயமாகச் சிந்தித்து கண்டுபிடிக்க முடியாது. இது என்னைப் பொறுத்தவரையில் 'சராசரி நுண்ணறிவு' (*Average Intelligence*) ஆகும்.

ஆனால் இதனால் உருவாக்கப்படும் வெளியீடுகளை பகுத்தறிவைப் பயன்படுத்தி சரியான விடயங்களை மட்டும் தெரிவு செய்து, வாழ்க்கை அனுபவத்தைப் பாவித்து அதனை மேம்படுத்தி, பிழையான தகவல்களை அகற்றுவதன் மூலம் அவ் வெளியீட்டுக்கான மதிப்பைக் கூட்டமுடியும். இதனை சிறிய வயதிலிருந்தே பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதன் மூலம் அவர்களது அறிவைக் கூட்டலாம். அவர்களது சமூக வாழ்க்கையின் மதிப்புகளும் அதிகரிக்கும்.

**மனிதர்களுக்கும் இயந்திரங்களுக்குமான வித்தியாசம் (Difference Between human and ma chines):** மனிதர்களுக்கும் இயந்திரங்களுக்குமான வித்தியாசம் குறைந்துகொண்டு போவதாகச் சிலர் கூறுகிறார்கள். இதை தொழில் புரட்சி (Industrial Revolution) காலங்களில் இருந்தே பலர் சொல்லுகிறார்கள். ஆனால் இயந்திரங்களின் திறமையானது மனிதர் கண்டுபிடித்த வேலைகளை குறைவான பிழைகளுடன் திருப்பத் திருப்ப செய்வது; அதன் திறமைகளால் ஆற்றலைக் (Efficiency) கூட்டுவது.

அடுத்த தலைமுறைகளின் தொழில் வாய்ப்பு, இயந்திரங்களுடன் சேர்ந்து வேலைகள் செய்யாமல் அவற்றை நிரலாக்கம் செய்து இயந்திரங்களை மேலும் திறமையாகச் செயற்பட வைப்பதாகவே இருக்கும். அதன் மூலம் அவர்கள் கூடுதலாகப் பணம் உழைக்க முடியும். அதற்கேற்ப எமது பிள்ளைகளை வளர்ப்பது, படிக்க வைப்பது, வருங்காலத்திற்கான அவர்களது மனப்பான்மையை சிறிய வயதிலிருந்தே தயார்ப்படுத்துவது முக்கியம்.

**பக்கவாட்டுச் சிந்தனை முறை (Lateral Thinking):** எனது இரண்டாவது கட்டுரைத் தொடரில் பக்கவாட்டுச் சிந்தனை பற்றி விளக்கமாக எழுதியிருக்கிறேன். பக்கவாட்டுச் சிந்தனை என்பது, ஓர் சிக்கலான பிரச்சனைக்கு தீர்வு காண, அந்தப் பிரச்சனையை நேரே அணுகாமல், வேறு ஓர் பிரச்சனையை தீர்த்த முறையைக் கொண்டு புதிய சிக்கலான பிரச்சனைக்கு தீர்வு காண்பது ஆகும். ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவு பழைய தகவல்களை வைத்து சில புதிய முடிவுகள் கண்டாலும், மனிதர்கள் போல புதிய வழிகளை கண்டுபிடிப்பது அரிது. ஒவ்வொரு மனிதர்களும் வாழ்க்கையில் வெவ்வேறான அனுபவத்தால் வளர்ந்தவர்கள். அவர்களுடைய தனிப்பட்ட அனுபவங்கள் இணையத்தளத்திலோ புத்தகங்களிலோ இருக்காது. ஆகவே, தனிப்பட்ட அனுபவங்களைப் பெற பிள்ளைகளை அனுமதிப்பதும் அதனை அடிப்படையாகக் கொண்டு அவர்களை சிந்தனை செய்யப் பழக்குவதும் எமது கடமையாகும்.

**அடிப்படை அறிவின் முக்கியத்துவம் (Importance of Foundational Knowledge) :** ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு வழியில் மிகச் சிக்கலான அறிவியல் என்றாலும் அது ஓர் நுணுக்கமான கருவியும் ஆகும். அதைப் பயன்படுத்தி பல விடயங்கள் சுலபமாகச் செய்யலாம். ஆனால் அதன் அடிப்படையை அறிந்து கொள்வது, ஆக்கமுறைச் செயற்கை நுண்ணறிவு எப்படி விடை கொடுக்குமென்றும், அது கொடுக்கும் விடை சரியா அல்லது பிழையா என்றும் கணிக்க உதவியாக இருக்கும். அப்படியென்றால் எவ்வாறு அதன் அடிப்படையை அறிந்து கொள்வது? இதனைப் புரிந்துகொள்ள பள்ளிக் காலத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களை அடிப்படையிலிருந்து படிப்பது முக்கியம். ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவு விஞ்ஞானத்தில் மட்டுமன்றி பல மொழிகளிலும் உள்ள கருத்துக்களைக் கணித்து விடை




Image Source - www.zdnet.com

கொடுக்கக் கூடியது. கணக்கியல், பொருளியல், வைத்தியம், சட்டத்துறை என்று எல்லாத் துறைகளுக்கும் பாவிக்கக் கூடியதாக இருக்கிறது. இவற்றையெல்லாம் ஆராய மனிதர்களுக்கு அடிப்படை அறிவு தேவை. நாங்கள் இயந்திரங்களை மட்டும் நம்பியிருக்க முடியாது. பிள்ளைகள் சுயமாக யோசிக்கவும் தாங்களாகவே முடிவுகளுக்கு வருவதற்கும் பழக வேண்டும்.

மேலே கூறியது கடினமான திறன்கள் (Hard Skills). அதைவிட சில மென்மையான திறன்களும் (Soft Skills) இந்த புதிய உலகத்தில் வாழ அவசியமாகும்.

**புதிய கருவிகளைப் பாவிக்கும் திறமை (Skills for Utiliz ing New Tools):** ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவானது மிகச் சக்தி வாய்ந்த

கருவியாகும். அதைத் திறமையாகப் பாவிப்பதன் மூலம் பல விடயங்களை சுலபமாகவும் வேகமாகவும் செய்யலாம். முன்பு தேடு பொறி மேம்படுத்தப்படல் (SEO - Search Engine Optimization), சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர் (Social Media Influencer) என்று பல துறைகள் உருவாகின. அதேபோல் இப்போது 'Prompt Engineering' என்று ஓர் துறை உருவாகியிருக்கிறது. அதில் வெற்றிகரமாக இருக்க மேலே கூறியது போல் அடிப்படை அறிவைப் பெறுவது மிக்கியம். அதன் மூலம் கருவிகளை நுணுக்கமாகப் பாவிக்கக் கற்றுக்கொள்ளலாம்.

**ஒவ்வொருவரின் தனித்துவமும் தன்மைத்துவமும் (Uniqueness and Individuality):** நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் நாம் எதிர்கொண்ட அனுபவங்களல் வடிவமைக்கப்பட்டவர்கள். ஆனால் ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவானது மனிதர்கள் பலரின் அனுபவங்களை எடுத்து அவற்றினைச் சுருக்கி அதன் சாராம்சமான விடையைக் கொடுக்கும் செயலைச் செய்கிறது. அந்த விடை சரியாகப் பட்டாலும் அதற்கு தனித்துவம் இருக்காது. ஆகவே, இந்த இயந்திரங்களின் அறிவிற்கு மேல், மனிதர்களின் தனித்துவச் சிந்தனையும் அவசியம். இப்படித் தனித்துவ வழியில் அனுபவ அறிவு பெற்ற பிள்ளைகள் மற்றவர்களிடமிருந்து வேறுபடுகிறார்கள்.

**ஆர்வமும் மற்றவர்களுடன் பழகும் திறன்களும் (Curiosity and Social Skills):** மனித குலத்தின் தற்போதைய நிலைக்கு காரணம் அவர்கள் சகல விடயங்களிலும் காட்டிய ஆர்வங்களே. அந்த ஆர்வங்களால் பல புதிய தொழில்நுட்பங்களையும் வாழ்க்கை முறைகளையும் கண்டுபிடித்தார்கள். ஒவ்வோரு தலைமுறையும் அதற்கு முதல் இருந்த தலைமுறையிலும் பார்க்க ஒரு படி மேலே சென்றார்கள். அதற்கு காரணம் அவர்களது ஆர்வங்கள். அந்த ஆர்வங்களை மற்றவர்களுடன் கலந்துரையாடி குழுவாகச் சேர்ந்து புதிய விடயங்களைக் கண்டுபிடித்தார்கள். இப்போது எல்லோரும் சமூக வலைத்தளங்களில் நேரம் செலவிடுவதால் ஏனையோருடன் பழகும் திறன்கள் குறைந்து கொண்டு செல்கிறது. ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவை தொடர்ந்து முன்னேற்ற, மேலும் கோடிக்கணக்கான ஆவணங்கள் தேவை. அப்படியான ஆவணங்களை உருவாக்க எமது குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும்.

**பக்கச்சார்பற்ற நெறிமுறை (Unbiased Decision Making):** பக்கச் சார்பற்ற நெறிமுறை மிக முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது. ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவுக்கு பயன்படுத்தும் பயிற்சித் தரவுத்தொகுப்பு (Training Dataset) இணையத்தளத்திலிருந்தும் பத்திரிகைச் செய்திகளிலுமிருந்து எடுக்கப்பட்டவை. அவை இணையத்தை ஆதிக்கம் செய்யும் மொழிகளான ஆங்கிலம், மண்டறின் போன்ற சில மொழிகளாலும், ஆதிக்க இனங்களாலும் படைக்கப்பட்ட ஆவணங்களாகவே அமைகின்றன. அந்த ஆவணங்களில் இருக்கும் சார்புத்தன்மை ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவு தரும் விடைகளிலும் சேர்ந்திருக்கும். இதனால் சிறுபான்மை மக்களின் பழக்க வழக்கங்களும் மற்றும் அவர்களது குணங்களும் தவறான நோக்கில் பார்க்கப்படக் கூடிய சாத்தியம் அதிகம். அதனைத் தவிர்க்க அடுத்த தலைமுறை முயல்வது அவசியம்; சிறிய வயதிலிருந்தே அவர்களை பகுப்பாய்வுத் திறனுடன் வளர்ப்பது முக்கியம்.

ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவானது இப்போது அதன் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறது. வரும் இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு இது மேலும் மேலும் பெரும் மாற்றத்தை கொண்டுவர இருக்கின்றது. அதற்கு எமது பிள்ளைகளை தயார்ப்படுத்துவது எமது கடமை.
எமது பிள்ளைகள் மட்டுமன்றி நாமும் அதற்கு எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவின் கடினமான திறன்களையும் மென்திறன்களையும் அறிந்து அதற்கேற்ப அடுத்த சந்ததிகளை தயார்ப்படுத்துவதன் மூலம் எமது சமுதாயத்தின் அறிவை மேலும் விருத்தி செய்ய முடியும். அதற்கு நான் மேலே கூறிய குறிப்புகளும் உதாரணங்களும் அதற்கு ஊக்கமாக இருக்குமென்று நம்புகிறேன்.

**குறிப்பு:** எனக்கு திருக்குறளில் இருக்கும் பற்று எல்லோருக்கும் தெரிந்ததே. திருக்குறளையும் ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவையும் இணைத்து இந்த வருடம் ஓர் கருவி வெளிவந்திருக்கிறது. அதை https://thirukural.ai எனும் தளத்தில் பாவித்து எமக்கு தேவையான கேள்விகளைக் கேட்டு அதற்குச் சம்பந்தமான குறளை அறிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

SpotOn Money



SEND MONEY to SRI LANKA

FIRST TRANSFER FEE FREE*

Immediate Payment to Any Account

**Partnership** *with*

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city


get 5% Discount* on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

வணக்கம் London
www.vanakkamlondon.com




யாதும் ஊரே யாவரும் கேளிர்

தமிழால் இணையும்
தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon
/Vanakkam_London /TheVanakkamLondon

# Protection For You & Your Family



## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «

## Are You Getting Million Dollar Advice?



**Life100**
INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

**Sritharan Thurairajah** CLU, CHS

*Simple Solution in a Critical Situation*

**XEBIRO**

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**
CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**
ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**
ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**
OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**
EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**
BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**
FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**
LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**
callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**
LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**
NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com




# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY